வி. ஆர். ஜெயராஜன்

சட்டப்பொருள் விளக்கம்

Interpretation of Statutes

ஸ்ப்னைகளுக்கான தீர்வுகளுடன்

7-ஆம் பதிப்பு

ஸ்ரீ பதி ராஜன் பப்ளிஷர்ஸ்

பி.ஆர்.ஜெ.

அவர்களின் சட்டத்தமிழ் ...

ஏழாம் பதிப்பில்.....

சட்டப்பொருள் விளக்கம்

[பிரச்சனைகளுக்கான தீர்வுகளுடன்]

Interpretation of Statutes

[With Solutions to Problems]

இது ஒரு ஸ்ரீ பதி ராஜன் பப்ளிஷர்ஸ் தயாரிப்பு

சட்டப் பொருள் விளக்கம்

[பிரச்சனைகளுக்கான தீர்வுகளுடன்]

Interpretation of Statutes

[With Solutions to Problems]

தமிழக அரசு

தமிழ் வளர்ச்சித்துறையின் சிறந்த நூலாசிரியருக்கான பரிசை

மும்முறை வென்றெடுத்த சட்டத்தமிழாய்வு அறிஞர்

P.R.ஜெயராஜன்

M.L., M.B.A., P.G. Dip. in A.D.R., D.Lit.,

வழக்குரைஞர் மற்றும் சட்டக்கல்வியாளர்

சட்டப்பொருள் விளக்கம்
பொது வகையங்கள் விளக்கச்சட்டம்
பல்வேறு பிரச்சனைகளும் தீர்வுகளும்
பல்கலைக்கழக வினாத்தாள்கள் – அண்மைக்காலம் வரை
பொதுவகையங்கள் விளக்கச்சட்டம் தொடர்பாக தேர்வில் கேட்கப்பட்ட வினாக்கள் – ஒரு பார்வை
சட்டப்பொருள் விளக்கம் தேர்வை எப்படி எழுத வேண்டும் – சில முக்கிய குறிப்புகள்
சட்டப்பொருள் விளக்கம் பாடத்திற்கான தேர்வில் அடிக்கடி வினா கேட்கப்படும் பகுதிகள் – ஒரு சிறு விளக்கம்
சட்டப்பல்கலைக்கழக பாடத்திட்டம்

ஸ்ரீ பதி ராஜன் பப்ளிஷர்ஸ்®

தமிழக அரசின் பரிசு பெற்ற சட்ட நூல் வெளியீட்டாளர்கள்,

69/42 - சி, மீனாட்சி நகர், அஸ்தம்பட்டி, சேலம் 636007.

மின்வணிக வலைதளம் : www.shripathirajanpublishers.com

முகப்புரை

பேரன்பு கொண்ட நெஞ்சங்களே,

வணக்கம்.

மனிதன் காட்டுமிராண்டியாக வாழ்ந்த நிலை மாறி, தங்களை நெறிப்படுத்திக் கொள்ள சில விதிகளை வகுத்துக் கொண்டான். நாகரிகம் வளர்ச்சியடைய ஆரம்பித்த பின்னர், அரசியலமைப்பின் தேவை எழுந்தது. அரசியலமைப்பானது முறையாக சட்டங்களை இயற்றுவதற்கு சட்டமன்றத்திற்கு (பாராளுமன்றம்) அதிகாரம் வழங்கியது. இதனால் மக்களை நெறிப்படுத்தும் சட்டங்கள் இயற்றப்பட ஆரம்பித்தன. 'திருடுவது பாவம்' என்று இருந்த அறநெறி, 'திருடினால் தண்டனையுண்டு' என்ற சட்ட விதியாக இயற்றப்பட்டது. இன்று இவ்வாறு பல விடயங்களுக்காக சட்டங்கள் அரசியலமைப்பு வளர்ந்துள்ள ஒவ்வொரு நாட்டிலும் இயற்றப்பட்டுக் கொண்டே வருகின்றன. இந்நிலையில்தான் இயற்றப்பட்ட சட்டங்களுக்கு பொருள் விளக்கம் அளிக்கப்பட வேண்டிய அவசியமும், தேவையும் எழுந்தது.

இவ்வாறு சட்டங்கள் இயற்றப்படுவதற்கு ஆரம்பிக்கப்பட்ட பின்னர், அதன் ஆட்சிக்கு உட்பட்ட வழக்குகளில் சில தனிப்பட்ட அம்சங்களுக்குத் தீர்வு காண அச்சட்டத்தில் வழிவகைகள் வெளிப்படையாக இல்லாமல் போனது. ஆகவே, இயற்றப்பட்டிருக்கும் சட்டத்திற்கு பொருள் விளக்கம் கண்டு, அதில் பொதிந்திருக்கும் உண்மை நோக்கத்தினை அறிந்து, சம்பந்தப்பட்ட வழக்கிற்கு தீர்வு காணவேண்டிய அவசியம் ஏற்பட்டது. மேலும் தனிப்பட்ட சில வழக்குகள், அந்தச் சட்டத்தின் ஆளுகைக்கு உட்பட்டு வருபவையா என்ற அய்யங்கள் எழுப்பப்படும் பொழுது நீதிமன்றங்கள் சட்டங்களுக்கு விளக்கம் காண முற்பட வேண்டியிருந்தது.

மக்களாட்சி முறையில் சட்டமன்றங்கள் சட்டங்களை இயற்றும் போது, தாங்கள் அதன் மூலம் கட்டுப்படுத்த இருக்கின்ற தற்போதைய சூழ்நிலைகள் மற்றும் வாய்ப்புகள் (circumstances and instances), எதிர்காலத்தில் ஏற்படக் கூடிய சாத்தியக்கூறான நிகழ்ச்சிகள் மற்றும் அவற்றைத் தீர்ப்பதற்குண்டான வழி வகைகளை திட்டவட்டமாக, தெள்ளத்தெளிவாக கூறிவிட்டால், நீதிமன்றங்களின் பணி மிகவும் எளிதாகி விடும். ஆனால், இது இயலாத ஒன்று.

எல்லாவற்றையும் எதிர்பார்க்கும் வாய்ப்புகள் இருந்துவிட்டாலும், அவற்றை எளிதான மொழி நடையில் எழுதி, சந்தேகமில்லாமல் செய்வது அசாதாரணமான, இயலாத பணியாகும். மேலும் அது மிகப் பரந்தும், பொதுவான கருத்தும் கொண்டதாக (Wide and general meaning and makes it difficult for particular application) அமைந்து விடுவதால், எடுத்தாள்வது எளிதாக இருப்பதில்லை. அதாவது, ஒரு வழக்கு நீதிமன்றத்தின் முன் வரும்போது, முற்றிலும் அந்த வழக்குக்கு உரித்தான முறையில் ஏற்படுத்தப்பட்ட வகைமுறை (Provision) சட்டத்தில் இருப்பதில்லை. அப்படி

இருப்பின், நீதிமன்றத்தின் பணி இயந்திரமயமாகி விடும். கொடுக்கப்படும் தீர்ப்பு சரியான, முறையான ஒன்றாக அமையாது. எனவே, இயற்றப்பட்ட சட்டத்திற்கு இரு பெரும் வகைகளில் பொருள் விளக்கம் காண வேண்டியது அவசியமாகியது. அவை 1. சட்ட வாசகத்திற்கு இணங்கப் பொருள் காணல் **(Litra Legis);** மற்றும் 2. சட்டமன்றத்தின் கருத்திற்கிணங்கப் பொருள் காணல் **(Sententia Legis).**

முதல் வகையில் சட்ட வாசகத்தில் உள்ள சொற்களுக்கு அகராதியிலும், அச்சட்டத்திலும் என்ன பொருள் அல்லது வரையறை கொடுக்கப்பட்டுள்ளது என்பதை அறிந்து அதற்கொப்ப பொருள் விளக்கமளிக்கப்படுகிறது. இரண்டாவது வகை இதற்கு முற்றிலும் மாறுபட்டதாகும். அதாவது, அகராதிப் பொருளைக் கண்டு பொருள் விளக்கமளிக்கும் பொழுது. அது அச்சட்டத்தின் நோக்கத்திற்கே முரணாகவும், குழப்பமான விளக்கத்தைத் தருவதாகவும் இருப்பின் சட்டமன்றத் தின் கருத்தைக் கண்டு பொருள் விளக்கமளிக்கும் மேற்கண்ட இரண்டாவது வகை உதவிக்கு வருகிறது. இங்கு, ஒரு சட்டத்தை இயற்றும் பொழுது சட்டமன்றம் தனது மனதில் எந்தக் கருத்துடன் அச்சட்டத்தை இயற்றியதோ, அதுவே 'சட்டமன்றத் தின் கருத்து அல்லது உள்ளக்கிடக்கை' **(Intention of Legislature)** எனப் படுகிறது. அதாவது எந்நோக்கத்திற்காக சட்டமன்றம் ஒரு குறிப்பிட்ட சட்டத்தை இயற்றியதோ, அதுவே அதன் கருத்தாகும். அந்நோக்கம், அச்சட்டத்தினுள்ளேயே பொதிந்துள்ளது. இதனைக் கண்டறிந்து பொருள் விளக்கமளிப்பதே, சட்டமன்றத் தின் கருத்தைக் காணலாகும்.

இவ்வாறு பொருள் விளக்கமளித்தலின் வாயிலாக, அச்சட்ட வாசகத் திற்கு, சட்டத்தின் நோக்கத்திற்கியைந்த, சட்டமன்றத்தின் கருத்தை ஒட்டிய விளக்கம் பகரப்பட்டு, உண்மையான உயிரோட்டம் கொடுக்கப்படுகிறது. இதனால் சரியான நீதி வழங்கப்படுகிறது. சட்டத்தின் நோக்கம் நிலைநிறுத்தப்படுகிறது. இவ்வாறு, நீதியையும், நேர்மையையும் நிலை நிறுத்துவதில் சட்டப்பொருள் விளக்க முறையே மிக்க பயனைத் தருகிறது எனில், அது மிகையாகா.

சட்டங்களுக்கு விளக்கம் காண முயலும் 'சட்டப் பொருள் விளக்கம்' எனும் இந்த அறிவியல், முற்றிலும் மாறுபட்ட ஓர் அனுபவமாகும். ஏனெனில், நாம் இங்கே, இந்த நூலில் எந்த ஒரு சட்டத்துறையைப் பற்றியோ அல்லது எந்த ஒரு குறிப்பிட்ட சட்டத்தைப் பற்றியோ ஆராய்வதில்லை. மாறாக, சட்டமன்றங்களால் இயற்றப்படும் சட்டங்களை நடைமுறைப்படுத்தும் பணியில் நீதிமன்றங்கள் கையா ளும் நியதிகளையும், விதிகளையும், கோட்பாடுகளையும்தான் காண்கிறோம். இந்நூலைப் படித்து உரிய பயனைப் பெற எனது வாழ்த்துகள்!

என்றும் அன்புடன்,

பி.ஆர்.ஜெ.

பொருளடக்கம்

1. **சட்டப் பொருள் விளக்கம் - ஒரு அறிமுகம்**
[Interpretation of Statutes - An Introduction] **1**

– (அ) இயற்றப்பட்ட சட்டமும் அதன் பகுதிகளும் 1
– இயற்றப்பட்ட சட்டம் (அல்லது) செய் சட்டம் 3
– இயற்றப்பட்ட சட்டமொன்றின் பல்வேறு பகுதிகள் 3

– (ஆ) சட்டங்களின் வகைப்பாடு 7
– கால வரையறையின் அடிப்படையில் 8
– செயல்படும் முறையின் அடிப்படையில் 8
– நோக்கத்தின் அடிப்படையில் 9
– அளாவுகையின் அடிப்படையில் 11

– (இ) சட்டங்களின் தொடக்கம், நீக்கம் மற்றும் புதுப்பிப்பு 12
– [i] சட்டங்களின் தொடக்கம் 12
– [ii] சட்டங்களின் நீக்கம் 15
– [iii] சட்டங்களின் புதுப்பிப்பு 23

– (ஈ) தொகுக்கும் சட்டமும் சேர்க்கும் சட்டமும் 26

2. **சட்டமியற்றல்**
[Legislation] **30**

– சட்டமியற்றலின் வகைகள் 30
– உச்ச முறையிலான சட்டமியற்றல் 31
– கீழமை சட்டமியற்றல் 31

3. **சட்டப் பொருள் விளக்கம்**
[Interpretation of Statutes] **32**

– (அ) சட்டப் பொருள் விளக்கம் –
பொருள், முக்கியத்துவம், அவசியம் மற்றும் நோக்கம் 32

– (ஆ) சட்டமன்றத்தின் கருத்து 38

– (இ) பொருள் விளக்கம் காணலும் பொருளமைதி காணலும் 43

– (ஈ) சட்டப் பொருள் விளக்கத்தில்
நீதிபதிகளின் பணியும் நீதிமன்றங்களின் கடமையும் 46

– (உ) நீதித்துறை சட்டமியற்றல் (அல்லது) நீதிமுறை சட்டமியற்றல் 52

– (ஊ) சட்டப் பொருள் விளக்கத்தின் பொதுக் கோட்பாடுகள் 56

– (எ) சட்டப் பொருள் விளக்க விதிகள் 60

– (ஏ) சட்டப் பொருள் விளக்க துணை விதிகள் 74

- (iii) சட்டம் முழுமையாகவும் சுருக்கமாகவும் கொள்ள வேண்டுமென்னும் விதி 74
- (iv) தவறான பிழை பொருள் விளக்கம் 75
- (v) இலக்கணமற்ற பொருளனாலும் காரணம் (அல்லது) இலக்கணப் பொருள் விளக்கங்களிலிருந்து 77
- (vi) பொதுவான சொற்களை வகையானுஞ்சார்ந்துள்ள சிறப்பு விதிகள் 83
- (vii) இலக்கண வகையான பொருள் கொள்ளும் விதி 88
- (viii) தொடர்பு வகையான பொருள் கொள்ளுதல் விதி 92
- (ix) பொது மற்றும் தனி விதிகளின் பொருள் விளக்கம் 95
- (x) கொள்கைக் குறிப்பு விளக்கும் பிரிவுகளைக் கொண்ட சட்டம் 98
- (xi) ஒரு விஷயத்தைத் இலக்கணரீதியாகக் குறைவாகவும் சொல்லக்கூடாது கொடுப்பதே நன்று 99
- (xii) சட்டதிருத்த சில காலத்தால் அளித்த விளக்கமும், சரியான விளக்கம் 101
- (xiii) பொதுவாக எழுதிக் கொள்ளும் முறையான சொற்களுக்கு பொருள் கொள்ளுதல் விதி 103
- (xiv) ஒன்று மற்றொன்றிற்கு பொருத்தமில் பொருள் வரவில்லை 105
- (xv) சரியான சட்டப்படியான பொருள் கொள்ளுவதும் விதி 107
- (xvi) 'காச்சட்டத்திலும் முன்னாடமாக யாது கூறப்பட்டிருப்பினும்' (அல்லது) 'ஏது வரை இருந்தாலும்' எனும் கூறு 108
- (xvii) சட்டதிருத்தில்லை அறிதற்கு அக்கறை 110
- (xviii) விடுபட்ட விஷயம் 111
- (xix) அவிர்பாவை அதிகாரத்தை மீட்டளிக்க இயலாது 113
- (xx) பின்னோக்கில் செல்லா காலத்தையும் உட்படுத்துமிடம் சட்டம் 114
- (xxi) சட்டங்கொள் பகுதி 116
- (xxii) ஒத்த விஷயத்தைப் பொறுத்த சட்டப் பொருள் விளக்கம் 119

4. சட்டப் பொருள் விளக்கத்திற்கு உதவும் கூறுகள் அல்லது கருவிகள் அல்லது காரணிகள்
[Aspects or Aids to Interpretation of Statutes] 122

- (அ) கொள்வனவு உதவும் கூறுகள் அல்லது புறக்கூறு கருவிகள் அல்லது காரணிகள் 123
  - சட்டம் இயற்றப்படுவதற்குண்டான காரணங்கள் மற்றும் அதன் நோக்கங்கள் குறித்த அறிக்கை 125
  - பாராளுமன்ற விவாதங்கள் மற்றும் உரைகள் 126
  - சமீபத்திய விசாரணை 127

- [i] சட்டம் முழுவதையும் கருத்தில் கொள்ள வேண்டுமெனும் விதி 74
- [ii] தகைமை நெறி பொருள் விளக்கம் 75
- [iii] இசைவமைந்த பொருளமைதி காணல் (அல்லது) இசைவுபட பொருள் விளக்கமளித்தல் 77
- [iv] பொதுவான சொற்களை கையாளுவதற்குண்டான விதிகள் 83
- [v] இனம் கண்டு பொருள் கொளல் விதி 88
- [vi] தொடர்பு கண்டு பொருள் கொள்ளும் விதி 92
- [vii] பொது மற்றும் தனி விதிகளின் பொருள் விளக்கம் 95
- [viii] வெளிப்படைக் குறிப்பு விலக்கும் மற்றவைகளை 98
- [ix] ஒரு விஷயத்தை இல்லாநிலையாக்குவதைவிட செயலாக்கம் கொடுப்பதே நன்று 99
- [x] சட்டத்திற்கு சம காலத்தவர் அளித்த விளக்கமே, சரியான விளக்கம் 101
- [xi] பொதுவாக ஏற்றுக் கொள்ளும் முறைப்படி சொற்களுக்கு பொருள் கொள்ளும் விதி 103
- [xii] ஒன்று மற்றொன்றிற்கு பொருத்திப் பொருள் காண்க 105
- [xiii] சரியாகவும் சட்டப்படியாகவும் பொருள் கொள்க எனும் விதி 107
- [xiv] 'எச்சட்டத்திலும் முரண்பாடாக யாது கூறப்பட்டிருப்பினும்' (அல்லது) 'எது எப்படி இருந்தாலும்' எனும் கூறு 108
- [xv] சட்டத்திற்கில்லை அற்பத்தில் அக்கறை 110
- [xvi] விடுபட்ட விபரம் 111
- [xvii] அளிப்படைவு அதிகாரத்தை மீட்டளிக்க இயலாது 113
- [xviii] பின்னோக்கி சென்ற காலத்தையும் உட்படுத்துகிற சட்டம் 114
- [xix] சட்டங்கொள் புனைவு 116
- [xx] ஒத்த விஷயத்தைப் பொறுத்த சட்டப் பொருள் விளக்கம் 119

4. சட்டப் பொருள் விளக்கத்திற்கு உதவும் கூறுகள் அல்லது கருவிகள் அல்லது காரணிகள் [Aspects or Aids to Interpretation of Statutes] 122

- (அ) வெளிப்பண்பு உதவும் கூறுகள் அல்லது புறக்கூறு கருவிகள் அல்லது காரணிகள் 123
  - சட்டம் இயற்றப்படுவதற்குண்டான காரணங்கள் மற்றும் அதன் நோக்கங்கள் குறித்த அறிக்கை 125
  - பாராளுமன்ற விவாதங்கள் மற்றும் உரைகள் 126
  - சரித்திர பின்னணி 127

- சட்டம் இயற்றப்படும் பொழுது இருந்த நிலை 128
- சட்டமியற்றல் குறித்த பாராளுமன்ற வரலாறு 128
- குழுவின் அறிக்கைகள் (அல்லது) அரசாங்க வெளியீடுகள் 130
- சர்வதேச பொது விதிகள் 132
- வெளிநாட்டுத் தீர்ப்பு 132
- அகராதிகளும் விளக்க நூல்களும் 133
- நீதிமுறை, நிருவாக, வணிகப் பழக்க வழக்கங்கள் 133

– (ஆ) உட்பண்பு உதவும் கூறுகள் அல்லது உள்ளிடைக் கருவிகள் அல்லது காரணிகள் 135

- தலைப்பு 137
- முகப்புரை 137
- ஓரக் குறிப்புகள் 138
- சட்டப் பிரிவின் தலைப்பு 138
- நிறுத்தற் குறிகள் 138
- உதாரணங்கள் 139
- விளக்கங்கள் 139
- வரையறைக் கூறு பகுதி அல்லது சட்டப் பொருள் காணுதல் பகுதி 140
- 'பொருள்படுதல்' மற்றும் 'உட்படுதல்' ஆகிய சொற்களின் பயன் 141
- விதிவிலக்குகள் 141
- நிபந்தனைகள் (அல்லது) வரம்புரை வாசகம் 141
- அட்டவணைகள் 142

5. சட்டத்தின் நோக்கம் மற்றும் பயன்பாடு குறித்து பொருளமைதி காணல்
[Construction with reference to the object and purpose of the Statute] **149**

– (அ) பயன்மிகு பொருள் கொள் முறை (அல்லது) அனுகூலமான பொருள் விளக்கம் 149

– (ஆ) [i] பிடிநழுவல் தவிர் பொருள் கொள் முறை 154

– (ஆ) [ii] அதிகார துஷ்பிரயோகம் தவிர் பொருள் கொள் முறை 156

– (இ) வரையறை பொருள் கொள் முறை 158

6. அதிகாரவரம்பு பற்றிய அனுமானங்கள்
[Presumptions regarding Jurisdiction] **165**

7. பல்வேறு அனுமானங்கள்
[Presumptions] **171**

8. சட்டத்தின் முன்மேவு ஆளுகை
[Retrospective Operation of Law] **177**

9. வரிச் சட்டங்களின் பொருள் விளக்கம்
[Interpretation of Taxing Statutes] 182

- வரிச் சட்டங்கள் கண்டிப்புடன் பொருள் கொள்ளப்பட வேண்டும் 184
- நலன் தரு பொருள் விளக்கம் 189

10. தண்டனைச் சட்டங்களின் பொருள் விளக்கம்
[Construction of Penal Statutes] 192

- (அ) கண்டிப்பான பொருள் விளக்கம் 192
- (ஆ) குற்ற மனம் 202

11. பல வகையான சட்டங்களுக்கு
பல வகையான பொருள் விளக்க அணுகுமுறைகள்
[Different Approaches of Interpretation to Different Kinds of Statutes] 207

12. கட்டளையுறுத்தும் மற்றும் அறிவுறுத்தும் சட்டங்களின் பொருள் விளக்கம்
[Interpretation to Mandatory (Imperative) and Directory Statutes] 211

- கட்டளையுறுத்தும் சட்டங்கள் 213
- அறிவுறுத்தும் சட்டங்கள் 214
- நீதிமன்றங்களின் பொருள் விளக்கம் 214
- சரியான பொருள் விளக்கம் எது? 214

13. அரசியலமைப்புச் சட்டத்தின் பொருள் விளக்கம்
[Interpretation to Constitution] 219

- (அ) அரசியலமைப்பு முறையும் அரசியலமைப்புத் தன்மையும் 219
- (ஆ) ஒரு சட்டத்தின் அரசியலமைப்புக்குட்பட்ட தன்மைக்கு சாதகமான அனுமானங்கள் 224
- (இ) சாதாரண சட்டத்தின் பொருள் விளக்கமும் அரசியலமைப்புச் சட்டத்தின் பொருள் விளக்கமும் 228
- (ஈ) அரசியலமைப்புச் சட்டத்தினை பொருள் கொள்வதற்கான சிறப்பு விதிகள் மற்றும் கோட்பாடுகள் 233
  - முதல் நிலை 235
    - பிற அரசியலமைப்புச் சட்டங்களை ஒப்பு நோக்கி அறிதல் 235
    - அரசியலமைப்புச் சட்டம் முழுவதையும் கருத்தில் கொள்ள வேண்டும் 236
    - அரசியலமைப்புச் சட்டம் தோன்றிய சந்தர்ப்பங்களின் அடிப்படையில் அது பொருள் கொள்ளப்பட வேண்டும் 236
  - இரண்டாவது நிலை 236

- உள்ளதாக கருதப்படுகின்ற அதிகாரங்கள் கோட்பாடு 237
- உப அல்லது துணை அதிகாரங்கள் கோட்பாடு 238
- உட்கிடைத் தடைக் கோட்பாடு 238
- ஆக்கிரமித்துக் கொள்ளல் விதி 239
- பெரும்பான்மை விதி 239
- சட்டத்தின் பொய்மைத் தோற்றக் கோட்பாடு 240
- ஆளுகைத் தொடர்புக் கோட்பாடு 242
- கூட்டுப் பிரித்தல் தத்துவம் அல்லது பிரியக் கூடிய தத்துவம் 242
- வருநிகழ்வு ஒதுக்கித் தள்ளும் கோட்பாடு 243
- மறைதல் கோட்பாடு 244
- வரம்புமீறல் கோட்பாடு 245
- தளர்த்தீடு கோட்பாடு 245

- (உ) சட்டப் பொருள் விளக்கத்திற்கு உதவும் ஒரு கருவியாக அரசியலமைப்பின் முகப்புரை அல்லது முகப்புரைக்கு அளிக்கப்படும் பொருள் விளக்கம் 248

14. அடிப்படை உரிமைகளின் பொருள் விளக்கம் [Interpretation of Fundamental Rights] 256

- (அ) அடிப்படை உரிமைகளின் பொருள் விளக்கமும் முக்கிய வழக்குகளும் 256
- (ஆ) அடிப்படை உரிமைகளும் அரசு நெறிமுறையுறுத்தும் கொள்கைகளும் – இசைவமைந்த பொருள் விளக்கம் 267
- (இ) மனித உரிமைகளும் அடிப்படை உரிமைகளும் 270

15. சட்டமியற்றும் அதிகார ஒப்படைவின் விளைவாக செய்யப்பட்ட விதியாக்கத்தின் மீதான பொருள் விளக்கம் [Interpretation of Delegated Legislation] 275

- சட்டமியற்றும் அதிகார ஒப்படைவு – விளக்கம் 275
- சட்டமியற்றும் அதிகார ஒப்படைவு – வரையறை 276
- விதியாக்கத்தின் பல்வேறு வடிவங்கள் 276
- விதியாக்கத்தின் மீதான பல்வேறு வரம்புகள் (அல்லது) விதியாக்கத்திற்கு நீதிமன்றங்கள் வழங்கியுள்ள பல்வேறு பொருள் விளக்கக் கொள்கைகள் 277
- நிபந்தனைக்குட்பட்டு சட்டமியற்றல் 280
- கீழ்ப்படையான அதிகார ஒப்படைப்பு 281

16. பொதுச் சொல் விளக்கச் சட்டம், 1897 [The General Clauses Act, 1897] 282

-o0o-

சிறு குறிப்புகள்

1.	இயற்சட்டத்தின் பல்வேறு பகுதிகள் [Different parts of a statute]	2
2.	இயலச் செய் மற்றும் தடை செய் சட்டங்கள் [Enabling and Disabiling Statutes]	7
3.	சட்டங்களின் தொடக்கம் [Commencement of Legislation]	12
4.	அனுமான நீக்கம் [Repeal by implication]	15
5.	சட்ட நீக்கம் [Repeal]	15
6.	ரத்தின் விளைவுகள் [Effect of Repeal]	16
7.	இரண்டு சட்டங்களிடையே முரண்பாடு [Repugnancy between two statutes]	20
8.	விதித் தொகுப்பு [Codification]	26
9.	ஒருங்கிணைப்பு [Consolidation]	26
10.	ஒருங்கிணைத்தல் மற்றும் சட்டத்தை தொகுத்தல் [Consolidation and Codification]	26
11.	உச்ச சட்டம் [Supreme Legislation]	30
12.	பொருள் விளக்க விதிகளின் தேவை [Need for rules of interpretation]	33
13.	செய் சட்டத்தின் பொருள் விளக்கம் காணுவதின் பயன்கள் [Value of study of interpretation of statutes]	33
14.	சட்டமன்றத்தின் கருத்து [Legislative intention]	38
15.	தருக்கமுறை பொருள் விளக்கம் [Logical Interpretation]	56
16.	எழுத்தியல்பு விதி [Literal rule]	71
17.	செய் சட்ட பொருள் விளக்கம் காண்பதில் பொன் விதி [The Golden Rule of Interpretation]	72
18.	பொன் விதி [Golden Rule]	72
19.	ஹேடன் வழக்கின் விதி [Rule in Heydon's Case]	73
20.	கேடு அகற்றும் விதி [Mischief Rule]	73
21.	தகைமை நெறி பொருள் விளக்கம் [Equitable Construction]	75
22.	இசைவுபட பொருள் விளக்கமளித்தல் [Harmonious Construction]	77
23.	இனம் கண்டு பொருள் கொள்ளல் விதி [Rule of ejusdem genris]	88
24.	தனி விதிக்கிசைந்தே பொதுவான விதி இயங்கும் [Generalia specialibus non-derogant]	95
25.	வெளிப்படைக் குறிப்பு விலக்கும் மற்றவைகளை [Expressio unius est exclusio alterius]	98
26.	ஒரு விஷயத்தை இல்லாநிலையாக்குவதைவிட செயலாக்கம் கொடுப்பதே நன்று [Ut res magis valet quam pareat]	99

27. இணைகால பொருள் விளக்கங் கொளல்
[Contemporaneous construction] 101
28. பொதுவாக ஏற்றுக் கொள்ளப்படும் முறைப்படி சொற்களுக்கு பொருள் கொள்ளுதல் விதி
[Rule of Loguitur ut vulgus] 103
29. சரியாகவும் சட்டப்படியாகவும் பொருள் கொள்க
[Bonam Partem] 107
30. எது எவ்வாறிருப்பினும் என்ற சரத்துகளை பொருள் விளக்கங் காணுதலின் நோக்கெல்லை
[Scope of non obstante clause interpretation] 108
31. எது எவ்வாறிருப்பினும் என்ற பிரிவு [Non-obstante clause] 108
32. சிறப்புச் செய் சட்டம் [Special Act] 108
33. சட்டத்திற்கில்லை அற்பத்தில் அக்கறை
[De minimis non curat lex] 110
34. விடுபட்ட விபரம் [Causus Omisus] 111
35. அளிப்படைவு அதிகாரத்தை மீட்டளிக்க இயலாது
[Delegatus non potest delegare] 113
36. சட்டங் கொள் புனைவு [Legal Fiction] 116
37. ஒத்த செய் சட்டங்களுக்கு பொருள் விளக்கம் செய்ய வேண்டிய முறை
[The interpretation placed on similar statutes] 119
38. ஒத்த செய் சட்டங்களின் அடிப்படையில் பொருள் கொள்ளுதல்
[Interpretation based on similar statutes] 119
39. ஒத்த விஷயத்தைப் பொறுத்த சட்டப் பொருள் விளக்கம்
[Interpretation of statutes in pari materia] 119
40. சட்டப் பொருள் விளக்கத்திற்கான வெளி மூலங்கள்
[External sources in statutory interpretation] 124
41. புற ஆதாரங்கள் [External Aids] 124
42. பாராளுமன்ற வரலாறு [Parliamentary History] 134
43. செய் சட்ட பொருள் விளக்கம் காண்பதில் அகராதியின் பயன்கள்
[Uses of Dictionaries in interpretation] 134
44. அகராதிகள் [Dictionaries] 134
45. அக உதவி கூறுகள் [Internal Aids] 135
46. நிறுத்தற் குறியீடுகள் [Punctuation Marks] 142
47. விளக்கங்களும் விதிவிலக்குகளும் [Explanation and Exceptions] 143
48. நீண்ட தலைப்பு [Long title] 143
49. ஓரக் குறிப்பு [Marginal notes] 143
50. வரையறை பிரிவு [Definition clause] 143
51. சட்டப் பொருள் காணுதல் பகுதி [Interpretation clause] 143
52. ஒரு செய் சட்டத்திலுள்ள சொற்களை வரையறை செய்தல்
[Drafting definition of terms in a statute] 145

53. செய் சட்டத்திலுள்ள வரையறுக்கும் சொற்களை வரைதல் [Drafting definitions in a statute] 145
54. பயன்மிகு பொருள் கொள் முறை [Beneficial Construction] 150
55. அனுகூலமான பொருள் விளக்கம் [Beneficial Interpretation] 150
56. பிடிநழுவல் தவிர் பொருள் விளக்க முறை [Construction to prevent evasion] 154
57. வரையறு பொருள் கொள் முறை [Restrictive Construction] 159
58. அதிகாரவரம்பு பற்றிய அனுமானங்கள் [Presumptions regarding Jurisdiction] 168
50. அனுமானங்கள் [Presumptions] 171
60. முன்மேவு ஆளுகை [Retrospective operation] 178
61. வரிச் சட்டம் [Taxing statute] 183
62. கண்டிப்பான பொருள் விளக்கம் [Strict construction] 193
63. செய் சட்டக் குற்றங்களில் குற்றவாளிகளின் மனநிலை [Mens Rea in statutory offences] 202
64. செய் சட்டத்தில் வகைதுறை வழங்குகிற பிரிவுகள் [Directory provisions in a statute] 211
65. கட்டளையுறுத்தும் சட்டத்தைப் பொருள் விளக்கங் காணல் [Interpretation of imperative statutes] 211
66. மையக் கருப் பொருள் கோட்பாடு [Doctrine of Pith and Substance] 247
67. இணைப்பகற்றும் கோட்பாடு [Doctrine of Severability] 247
68. முன்மேவு மறுத்தளிக்கும் கோட்பாடு [Doctrine of Prospective overruling] 247
69. முறையது போலமை இயற்றுச் சட்டக் கோட்பாடு [Doctrine of Colourable legislation] 247
70. முரண்பாடு என்ற கோட்பாடு [Doctrine of repugnancy] 247
71. எல்லைத் தொடர்பு [Territorial Nexes] 247
72. நிராகரிப்பு [Waiver] 247
73. முகப்புரை [Preamble] 248
74. சட்டப் பொருள் விளக்கத்தில் முகப்புரையின் பயன்பாடு [Preamble as aid to construction of statute] 248
75. இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் முகப்புரை பற்றிய பொருள் விளக்கம் [Interpretation of Preamble to the Indian Constitution] 248
76. அடிப்படை உரிமைகளுக்கு பொருள் விளக்கம் காணல் [Interpretation of Fundamental Rights] 256
77. மனித உரிமை மற்றும் அடிப்படை உரிமைகள் [Human Right and Fundamental Rights] 270

78. விதியாக்கம் [Delegated legislation] 275
79. கீழ்நிலை சட்டமியற்றல் [Subordinate legislation] 275
80. பொது விதிகள் சட்டம் [General Clauses Act] 283
81. உப விதிகள் [Bye laws] 291
82. ஒழுங்குமுறை விதிகள் [Regulations] 291
83. கால தாமதம் [Laches] 293
84. நல்லொழுக்கம் [Morality] 294

சுட்டிக்காட்டப்பட்டுள்ள வழக்குகள்

'A'

A.C.Sharma v. Delhi Administration 130
A.G. of Bengal v. P.C. Mallick 126
A.K. Gopalan v. State of Madras 129, 226, 232, 243
A.K. Roy v. State of Punjab 114
A.V. Frenandaz v. The State of Kerala 190
Abley v. Dale 62
Adilabad Municipality v. Mahadeo 120
Alavi v. Safia 64
Ameer-un-Nissa Begum v. Mahboob Begum 25
Ananda Nambiar v. Chief Secretary of Government of Kerala 232
Andhra University v. Regional Provident Fund Commissioner of Andhra Pradesh 209
Angoori Devi v. U.P. State 140
Ashbury Railway Co. v. Riche 90
Assam Railways and Trading Co. Ltd. v. Inland Revenue Commissioner 131
Assistant Collector of Customs v. Sitaram 200
Assistant Commissioner, Urban Land Tax v. Buckingham and Carnatic Company Ltd., 232
Aswini Kumar v. Arbinda Bose 130
Attorney General v. Edison Telephone Co. Ltd., 87

'B'

Baidyanath Ayurved Bhavan v. Excise Commissioner, Uttar Pradesh 188
Baldev Sahai v. R.C. Bhasin 152
Banarasidas v. State of M.P. 279
Bangalore Water Supply Sewerage Board v. A. Rajappa & Others 47, 133
Banglore W.C.Mills v. Banglore Corporation 279
Barium Chemicals Ltd. v. Company Law Board 114
Bashesher Nath v. Income Tax Commissioner 246
Bearmans Ltd., v. Metropolitan Police District Receiver 84

Bhikaji v. State of M.P. 245
Bijoy Ranjan v. B.C.Dasgupta 231
Black Town Properties Ltd., v. Ministry of Housing and Local Government 85
Boucher Pierne Andre v. Superintendent, Central Jail 118
Bourne v. Norwhich Crematorium Ltd. 85

'C'

C.I.T., Bombay v. Bombay Corpn. 117
Calder v. Halket 174
Canadian Eagle Oil Co., v. Attorney General 208
Cape Brandy Syndicate v. Commissioner of Inland Revenue 208
Central Bank of India v. P.S. Rajagopalan 128
Chairman, Thiruvalluvar Transport Corporation v. Consumer Protection Council 96
Chief Inspector of Mines v. K.C. Thapar 117
Chiranjitlal v. Union of India 262
Collector of Estate Duty v. Alladi Kuppusamy 190
Colquhoun v. Brooks 99
Commissioner of Wealth Tax v. Kripa Shankar 189

'D'

Day v. Simpson 155
Deep Chand v. State of Uttar Pradesh 21
Delaroy Hall v. Tadma 111
Devidas v. State of Punjab 279
Dilip K. Basu v. State of West Bengal 273
Diwan Brothers v. Central Bank of India 190
Dulton v. Atkins 175

'E'

E.P. Royappa v. State of Tamil Nadu 261

'F'

Felix v. Thomas 64
Francis Coralie v. Union Territory of Delhi 266
Fuzlunbi v. K. Kadher Vali 47

'G'

George Wimply & Co. Ltd., v. B.O.A.C. 164
Glamorsan Country Council v. Carter 107
Golaknath v. State of Punjab 126, 259
Governor of Brixton Press, ex. p. v. Stallmann 162.
Gowri Shankar Sharma v. State of Uttar Pradesh 272
Gujarat University v. Sree Krishna 125

Gwalior Rayon Mills v. Asstt. Commissioner of Sales Tax 278

'H'

Hamdard Dawakhana v. Union of India 226, 232
Harding v. Prince 203
Hari-shankar Bagla v. State of M.P. 278
Harla v. State of Rajasthan 13
Hemdan v. State of Rajasthan 112
Heydon's Case 67
Hoore Mitter & Co. Ltd., v. Assistant Collector of Customs 118

'I'

I.C. Golak Nath v. State of Punjab 255
Ieeford Corporation v. Bettercleam (Seven Kings) Ltd., 163
In Re A Solicitor's clerk 179
In Re Berubari Union and Exchange of Enclaves Case (or)
In Re Berubari Case 252, 255
In Re Delhi Laws Act Case 278, 279
In Re Kerala Education Bill 269
In Re Keshavan Madhav Menon 231
Income Tax Commissioner v. Shahzadanand 187, 208
Inder Sain v. State of Punjab 200
Indian Aluminium Co. v. K.S.E. Board 138

'J'

Jagannath Baksh Singh v. State of U.P. 232
Janaky v. Chellappan 140
Jawala Ram v. State of Pepsu 231
Justice Kishore v. State of Rajasthan 139
Jyoti Prasad Mitter v. The Chief Justice 217

'K'

K. Vidyand v. Evamma and another 96
K.C.G.Narayan Dev v. State of Orissa 241
K.M. Nanawathi v. State of Bombay 80
K.P. Varghese v. I.T. Officer 40, 127, 130
K.T.Moopil Nair v. State of Kerala 241
Kairbeta Estate v. Rajamanickam 90
Kelappan v. State 69
Keshavan v. State of Bombay 227
Keshawanand Bharathi v. State of Kerala (or)
Fundamental Rights Case 75, 129, 254, 260
Kharak Singh v. State of Madhya Pradesh 266
Kodath Mazdoor Setna Sangh v. State of Madhya Pradesh 273
Kouchuni v. State of Madras 232

Krishna Chandra v. Commissioner of Endowments 179
Kv. Vishwanath Singh v. The State 190

'L'

Leach v. R. 164
Lee v. Knapp 66
Letang v. Cooper 131
Lim Chin Aik v. R. 203

'M'

M.L.Bagga v. Murhar Rao 279
M.S.M. Sharma v. State of Madras 80
M.V. Joshi v. M.U. Shimpi 198
M/s. Doypack Systems Private Limited v. Union of India 103
M/s. Goodyear India Ltd. v. State of Haryana 189
Makhan Singh v. State of Punjab 279
Malbon v. Allon 204
Manoharlal v. State of Punjab 209
Mathew v. Dobbins 63
Maxfield v. Llewellyn 174
Menaka Gandhi v. Union of India 262
Miller v. Salomons 63
Minarva Mills v. Union of India 270
Mithilesh Kumari v. Prem Behari 132
Mobarik Ali v. State of Bombay 200
Moli Bhai v. R. Prasad 200
Molipur Zamindar Co. v. State of Bihar 104
Motor General Traders v. State of A.P. 242

'N'

Nagpur Electric Co. Ltd., v. Sreepathi Rao 106
Nandhini Satpathi v. P.L. Dhani 272
Nathulal v. State of Madhya Pradesh 200
New Piece Goods Bazaar Company v. Commissioner of Income Tax, Bombay 186

'O'

Olga Tellis v. Bombay Municipal Corporation 266
Orient Weaving Mills v. Union of India 279

'P'

Pengelly v. Bell Punch Co. Ltd., 94
Poulose v. Asst. Labour Officer 91
Powley v. Whardall 62
Profalla Kumar Mukerjee v. Bank of Khulna 240

Pyre Granite Co. Ltd., v. Minister of Housing and Local Government 166

'R'

R. v. Cugullere 204
R. v. Harris 94
R. v. Paddington and St. Maryleborne Rent Tribunal 158
R. v. Spurse 204
R.C. Cooper v. Union of India (Bank Nationalisation Case) 262
R.D.Joshi v. Ajit Mills 241
R.M.D.C. v. Union of India 127, 243
R.S. Nayak v. A.R. Antuley 132
Ram Narain v. State of Uttar Pradesh 74
Ramakrishna Dalmia v. Justice Tendulkar 262
Ramesh Thapper v. State of Madras 243
Ramji v. State of Bihar 153
Ranjit v. State of Maharashtra 199
Rantansi Hirji v. Emperor 90
Ratan Lal Adukia v. Union of India 19
Re Alma Spinning Co., 162
Re. Rose 161
Re. Turner 161
Rex v. Davis 18
Roberts v. Hopwood 158

'S'

S.P. Gupta v. President of India 130
Sajjan Singh v. State of Punjab 199, 259
Sankari Prasad v. Union of India 259
Sarjoo Prasad v. State of Uttar Pradesh 197
Saushvri v. M.C.G. & K.M.W. Union 128
Sheik Gulfan v. Sant Kumar 152
Sherras v. De Rutzen 204
Smaje v. Balmer 196
Smith v. Hughes 69, 151
Smt. Neelapathi Pohera v. State of Orissa 273
State of Bihar v. Kameshwar Singh 269
State of Bihar v. Sir Kameshwar Singh 241
State of Bombay v. F.N. Balsara 240, 243, 262
State of Bombay v. Pandurang 117
State of Madras v. Champakam Dorairajan 269
State of Madras v. Gannon Dunkerley 231, 232
State of Uttar Pradesh v. Jogendra Singh 216
State of Uttar Pradesh v. Mahbodhan Lal 217

State of West Bengal v. Union of India 125, 126
Sungram Singh v. Election Tribunal 216
Sunil Butra's (First) Case 272
Sunil Butra's (Second) Case 272
Superintendent and Remembrances of Legal Affairs, West Bengal v. Corporation of Calcutta 169

'T'

Toleram v. State of Bombay 197

'U'

Union of India v. Commercial Tax Officer 186
Union of India v. Dhillon 232
Union of India v. Jubili 170
Utkal Contractors and Joinery (Pvt.) Ltd. v. State of Orissa 41

'V'

V.S. Rice and Oil Mills v. State of A.P. 169
Vajrevelu v. Special Deputy Collector 130
Vasudeo v. State of Mysore 292
Veeda Menezes v. Yusuf Khan 110
Venkataramana Devaru v. State of Mysore 78
Vrajlal Manilal v. State of M.P. 225

'W'

Wilson v. Kunbley 87
Workmen of Firestone Tyre and Rubber Co. v. The Management 152

'Y'

Yeandel v. Fisher 205

-o0o-

என்னருகே இல்லாது போனாலும் இறையருகே இருந்து, எனக்கு உற்ற வழிகாட்டியாக விளங்கும் காலஞ்சென்ற எனதருமைத் தகப்பனார் அமரர் திருமிகு. **P. R. ரங்காச்சாரி, B.Sc., B.L., D.P.P.A.,** வழக்குரைஞர், அவர்களின் நினைவிற்கு இந்நூலை சமர்ப்பணம் செய்கிறேன்.

- P. R. ஜெயராஜன், M.L.,
வழக்குரைஞர்.

1

சட்டப் பொருள் விளக்கம் - ஒரு அறிமுகம் [Interpretation of Statutes - An Introduction]

(அ) இயற்றப்பட்ட சட்டமும் அதன் பகுதிகளும் [A Statute and its Parts]

1. What is a Statute? State its different parts. (இயற்றப்பட்ட சட்டம் என்றால் என்ன? அதன் பல்வேறு பகுதிகளைக் குறிப்பிடுக.)

(அல்லது)

Enumerate and explain the significance of the different parts of a statute. (செய் சட்டத்தின் பல்வேறு பாகங்களை வரிசைப்படுத்தி, அவைகளின் முக்கியத்துவத்தை விளக்கவும்.)

(அல்லது)

What are all the important particulars to be contained in a Statute? (செய் சட்டத்தில் இருக்க வேண்டிய முக்கியமான கூறுகள் யாவை?)

(அல்லது)

Dicuss the different elements essentially to be present in a statute. (செய் சட்டத்தில் கட்டாயமாக இருக்க வேண்டிய பல்வேறு கூறுகளை விவாதிக்க.)

(அல்லது)

Explain the different parts of a statute. (ஒரு செய் சட்டத்தின் பல்வேறு பகுதிகளை விளக்குக.)

(அல்லது)

Indicating the different parts of a statute, explain what effect they may have on the operative part of the law. (இயற் சட்டத்தின் பல்வேறு பாகங்களை குறிப்பிட்டு சட்டத்தின் செயல்பட்டு பகுதியின் மேல் அவை கொண்ட தாக்கம் யாது என்பதினை விளக்குக.)

(அல்லது)

Different parts of a statute - Write short notes. (இயற் சட்டத்தின் பல்வேறு பகுதிகள் – சிறு குறிப்பு எழுதுக.)

முன்னுரை :

சமுதாய அமைப்பு ஏற்படாத பண்டைய கால கட்டங்களில், மனிதன் விலங்கியல்புடைய காட்டுமிராண்டியாக (brutish) வாழ்ந்து வந்தான். ஒன்று சரியா–தவறா, நீதியானதா–அநீதியானதா என்று பகுத்தறியும் உணர்வில்லா நிலை அவனிடத்தில் காணப்பட்டது. **"இயன்றால் கொல்; முடிந்த அளவு எடுத்துக் கொள்"** என்பதே அப்போதைய நிலைப்பாடாகத் திகழ்ந்தது. சீரற்ற, அமைதியற்ற, நிலையற்ற வாழ்க்கையே அப்பொழுது நிலவியது. மெதுவாக, மனிதன் மேற்படி விலங்கியல்புடைய இச்சைகளிலிருந்து (Animal instincts) விடுபட்டு, ஒரு சீரான சமுதாய அமைப்பை ஏற்படுத்தி, அமைதியான வாழ்வை நிலைப் படுத்திக் கொள்ள எண்ண ஆரம்பித்தான். அதன் விளைவே, ஒவ்வொருவரும் தங்களால் பரஸ்பரமாக ஒப்புக் கொள்ளப்பட்ட சட்ட திட்டங்களை வகுத்து, தங்களுக்குள் ஒரு **சமூக ஒப்பந்தத்தை (Social Contract)** ஏற்படுத்திக் கொண்டு வாழ ஆரம்பித்தனர். பின்னர் நாகரிகம் வளர்ந்தது. வழக்கங்களும், பழக்க வழக்கங்களும் ஏற்பட்டன. அதற்குப் பிறகு, அவை சட்ட வலிமை பெற்ற விதிகளாக உருமாறின. இயற்றப்படா பொது முறைச் சட்டங்கள் (Common Law), முறையாக இயற்றப்பட வேண்டிய அவசியம் ஏற்பட்டது. சமூக மாற்றங்களுக்கேற்ப உலக நாடுகள், தங்கள் நாட்டிற்குண்டான அரசியலமைப்பை வகுத்துக் கொண்டன. அது, நாட்டில் நிலவும் சூழ்நிலைக்கேற்ப, மக்களின் நலவாழ்விற்கு உற்ற வகையில் சட்டங்களை இயற்றின. இவ்வாறாக, சட்டத்தின் வளர்ச்சி, மக்களின் பொதுவான நன்மைகளைக் கருத்தில் கொண்டு விரைவாக வளர்ச்சியுற்றது. சுருங்கக்கூறின், இயற்றப்படா சட்டங்கள், இயற்றப்பட்ட சட்டங்களாக [Enacted Laws (or) Statute Law] வேண்டியதின் அவசியம் மேலோங்கியது. இனி இயற்றப்பட்ட சட்டம் என்பதின் விளக்கத்தை சற்று நுணுக்கமாக பின்வருமாறு காண்போம்.

இயற்றப்பட்ட சட்டம் (அல்லது) செய் சட்டம் (Statute) - விளக்கம்:

நாம் மேலே கண்டவாறு, மக்களின் நல வாழ்விற்கு ஏற்ற வகையில் அவர்கள் வாழ்க்கை முறை அமைதல் வேண்டும்; அவ்வாறு அமைவதற்கு உற்ற சாதனங்களாக உள்ளவையே சட்டங்களாகும், என்றோம். அதாவது, மக்களின் உரிமை மற்றும் கடமைகளை எடுத்தியம்பிட, அவர்களை நெறிப்படுத்தி அதன் மூலம் அவர்களின் நலத்தை காப்பதே சட்டத்தின் பணியாகிறது.

மக்களின் ஏற்றமிகு வாழ்விற்கு தேவையான இத்தகு சட்டங்கள், அரசியல் முறை வளர்ந்துள்ள ஒவ்வொரு நாட்டிலும் தகுந்த சட்டமன்றத்தால் இயற்றப்படுகிறது.

அறிஞர் சால்மண்ட் அவர்கள், **"தக்க அதிகாரம் பெற்ற ஆள்வையால் சட்ட விதிகள் சாற்றப் பெறுகின்றன; இதுவே சட்டம் இயற்றுதலாகும்"**[1] என்கிறார்.

சட்டத்திற்கான மூலங்களில் வலிமை வாய்ந்ததும், சிறப்புரிமை உடையதும், சட்டமியற்று முறையே ஆகும். பழைய சட்டங்களை நீக்கலும் (Repeal), திருத்தலும் (Amendment) சட்டமியற்று முறையில்தான் சாத்தியமாகும்.

இவ்வாறு சட்டமியற்றலால் எழும் சட்டங்களை, **'இயற்றப்பட்ட சட்டங்கள்' (Enacted Laws)** என்று அழைக்கிறோம். இங்கு சட்டங்கள், தக்க அதிகாரம் படைத்த சட்டமன்றத்தால் செய்யப்படுவதால் இதனை, **'செய் சட்டங்கள்' (Acts)** என்றும் அழைக்கலாம். இயற்றப்படாத சட்டங்கள், **'பொது முறைச் சட்டங்கள்' (Common Laws)** எனப்படுகின்றன. இதிலிருந்து வேறுபடுத்திக் காட்டும் வண்ணம், மேற்கண்ட இயற்றப்பட்ட சட்டங்கள் அல்லது செய் சட்டங்கள், **'இயற்றுமுறைச் சட்டங்கள்' (Statute Laws)** என்று அழைக்கப்படுகின்றன. இயற்று முறைச் சட்டமொன்றில் பல பகுதிகள் உள்ளன. அவற்றை பின்வருமாறு காண்போம்.

இயற்றுமுறைச் சட்டமொன்றின் பல்வேறு பகுதிகள் (Different parts of a Statute) :

ஒரு இயற்றுமுறைச் சட்டமானது பின்வரும் பல பகுதிகளாகப் பிரிக்கப் பட்டுள்ளது. அவை,

1. நீள் தலைப்பு (Long Title) :

ஒவ்வொரு சட்டமும் ஒரு நீள் தலைப்பை கொண்டிருக்கும். அந்நீள்

1. Legislation is that source of law which consists in the declaration of legal rules by a competant authority - **Solmond.**

தலைப்பு அச்சட்டத்தின் பொதுவான நோக்கத்தை அறிவிப்பதாக இருக்கும். மேலும் இது, அச்சட்டத்தின் முக்கிய சட்ட வகைமுறைகளை தெளிவாகவும், சுருக்கமாகவும் எடுத்தியம்பும். இது சட்டத்தின் ஆரம்பத்தில் கொடுக்கப் பட்டிருக்கும். சட்டப் பிரிவுகளின் வரிசையில் கொடுக்கப்பட்டிருக்காது.

உதாரணமாக, 1993 ஆம் ஆண்டின் மனித உரிமைகள் பாதுகாப்புச் சட்டத்தின் (The Human Rights Protection Act, 1993) நீள் தலைப்பு வருமாறு. அதாவது, "மனித உரிமைகளுக்கும் அவை தொடர்பான மற்றும் அவற்றிற்கு உடனிணைவான விஷயங்களுக்கும் சிறந்த பாதுகாப்பு அளிப்பதற்காக தேசிய மனித உரிமைகள் ஆணையம், மாநிலங்களில் மாநில மனித உரிமைகள் ஆணையங்கள் மற்றும் மனித உரிமை நீதிமன்றங்கள் அமைப்பதற்குண்டானதொரு சட்டம்"

2. சட்டம் இயற்றப்படுதல் குறித்தான செயற்கூறு (Enacting Clause) :

நீள் தலைப்பிற்கு அடுத்தபடியாக இது வரக்கூடியது. ஒரு குறிப்பிட்ட சட்டம், அந்நாடு சுதந்திரம் பெற்று தனி நாடாகிய காலத்திலிருந்து எந்த ஆண்டில் இயற்றப்பட்டது என்பது மேற்படி பகுதியில் கூறப்பட்டிருக்கும்.

உதாரணமாக, மேற்கண்ட மனித உரிமைகள் பாதுகாப்புச் சட்டமானது, இந்தியக் குடியரசின் 44–ஆம் ஆண்டில் இயற்றப்பட்டதாகும். இது பின்வருமாறு பொதுவாகக் குறிப்பிடப்படும். "இந்தியக் குடியரசின் நாற்பத்து நான்காம் ஆண்டில் இச்சட்டமானது பாராளுமன்றத்தில் பின்வருமாறு இயற்றப்பட்டது".

3. முகப்புரை (Preamble) :

முகப்புரையானது, ஒரு சட்டத்தினை அறிமுகப்படுத்தும் முன்னுரையாக உள்ளது. அக்குறிப்பிட்ட சட்டம் 'ஏன்' (Why) இயற்றப்பட்டுள்ளது என்பது குறித்த விளக்கத்தை அது தருகிறது.

இதற்கு உதாரணமாக இந்திய அரசியலமைப்பின் முகப்புரையைக் குறிப்பிடலாம். (அது பின்னர் வரும் அத்தியாயத்தில் கொடுக்கப்பட்டுள்ளது.)

4. குறுந்தலைப்பு (Short Title) :

குறுந்தலைப்பு, ஒரு சட்டம் இன்னதென்று தெரிவிக்கிறது.

உதாரணமாக, "இச்சட்டம், 1993–ஆம் ஆண்டின் மனித உரிமைகள் பாதுகாப்புச் சட்டம் என்றழைக்கப்படலாம்" என்ற வாக்கியம் குறுந்தலைப்பு ஆகும். (This Act may be called the Protection of Human Rights Act, 1993).

5. தொடங்குதல் குறித்த சட்டக்கூறு (Commencement Clause) :

இயற்றப்பட்ட சட்டம் எப்பொழுதிலிருந்து தொடங்குகிறது என்பதை இச்சட்டக்கூறு விளக்குகிறது. சில சமயங்களில் ஒரு நிலப்பகுதியில் ஒரு கால கட்டத்திற்கும் மற்றொரு கால கட்டத்திற்கும் ஒரு சட்டம் தொடங்குவதாகக் கூட இருக்கலாம்.

தொடங்குதல் குறித்த சட்டக் கூறிற்கு உதாரணமாக, "இச்சட்டம் 1993 ஆம் ஆண்டு, செப்டம்பர் திங்கள், 28–ஆம் நாளில் தொடங்கியுள்ளதாக கருதப்பட வேண்டும்." (It shall be deemed to have come into force on the 28th day of September, 1993).

6. வரையறை தரும் சட்டக்கூறு (Definition Clause) :

இப்பகுதியில், அச்சட்டத்தில் கூறப்பட்டுள்ள பதங்களுக்கு உண்டான வரையறை தரப்பட்டிருக்கும். இந்த வரையறைக்கு உட்பட்டே, அப்பதமானது அச்சட்டம் முழுமைக்கும் பொருள் கொள்ளப்பட வேண்டும். [சட்டப் பொருள் விளக்கத்திற்கு உதவும் உள்ளிடைக் கருவிகள் (Internal aids) எனும் தலைப்பில் விரிவாகக் காண உள்ளோம்.]

உதாரணமாக, 1993 ஆம் ஆண்டின் மனித உரிமைகள் பாதுகாப்புச் சட்டத்தின் 2(1)(d) பிரிவானது **'மனித உரிமைகள்'** என்ற பதத்திற்கு பின்வருமாறு வரையறை தருகிறது. அஃதாவது, "அரசியலமைப்பு சட்டத்தால் உத்திரவாத மளிக்கப்பட்ட அல்லது சர்வதேச உடன்படிக்கைகளில் சேர்க்கப்பட்ட இந்திய நீதிமன்றங்களால் செயல்படுத்தத்தக்க வகையில் உள்ள, தனியொரு மனிதனின் வாழ்க்கை, சுதந்திரம், சமத்துவம் மற்றும் மாண்பு ஆகியவை தொடர்பானவையே, மனித உரிமையாகும்" என்று வரையறுக்கிறது.

எனவே, இவ்வரையறைக்கு உட்பட்டே, அச்சட்டத்தில் எங்கெல்லாம் **'மனித உரிமை'** என்று பதம் வருகிறதோ, அங்கெல்லாம் அவ்வாறே பொருள் கொள்ள வேண்டும்.

7. பிரிவுகளும் உட்பிரிவுகளும் (Sections and Sub-sections) :

அடுத்து, இயற்றப்பட்ட சட்டத்தின் வகைமுறைகளானது பல பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு, அதில் விளக்கங்கள் கொடுக்கப்பட்டிருக்கும். ஒரு சட்டப் பிரிவிலேயே, அதற்கு இணையான மற்றொரு விஷயத்தை குறிப்பிடும் பொழுது, அது ஒரு உட்பிரிவின் வழியாகக் கொடுக்கப்பட்டிருக்கும்.

8. அத்தியாயத் தலைப்புகள் (Chapter Headings) :

சில குறிப்பிட்ட சட்டப் பிரிவுகள், ஒரு இனத்தைப் பற்றிக் குறிப்பிடுங்கால், அந்த இனமானது ஒரு தனி அத்தியாயமாகப் பிரிக்கப்பட்டு, அதற்கு தனித் தலைப்பு கொடுக்கப்பட்டிருக்கும்.

9. ஓரக் குறிப்புகள் (Marginal Notes) :

ஒரு சட்டப்பிரிவின் உள்ளடக்கம் என்னவென்பதை அச்சட்டப் பிரிவின் இடது ஓரத்தில் ஒரு சிறு குறிப்பாக கொடுக்கப்பட்டிருப்பதே, ஓரக் குறிப்புகளாகும். இது இருப்பது அல்லது இருக்காதது, அச்சட்டத்தின் தன்மைக்கொப்ப மாறுபடும்.

10. விதிவிலக்குகள், நிபந்தனைகள் மற்றும் விலக்களிப்புகள் குறித்த கூறுகள் (Exceptions, Provisions and Exemptions) :

சட்டப்பிரிவு ஒன்றைக் குறிப்பிடும்பொழுது, அதற்கு விலக்காக வேறொன்று இருக்குமேயானால், அது **"விதிவிலக்கு" (Exception)** எனப்படுகிறது.

சில சமயங்களில் ஒரு சட்டப் பிரிவானது சில நிபந்தனைகளுக்கு உட்பட்டே செயல்படும். இது **"நிபந்தனைக் கூறு"** அல்லது **"வரம்புரைக் கூறு" (Provision)** எனப்படுகிறது.

சட்டத்தின் முழு ஆளுகையிலிருந்து, ஒரு குறிப்பிட்ட விஷயம் முற்றிலும் விலக்கப்பட்டிருப்பின், அது **"விலக்களிப்பு" (Exemption)** எனப்படுகிறது.

11. எடுத்துக்காட்டுகள் (Illustrations) :

ஒரு சட்டப்பிரிவின் மொழியாக்கத்தை எளிதில் புரிந்து கொள்வதற் காக, அச்சட்டப்பிரிவின் கீழாகவே உதாரணங்கள் கொடுக்கப்பட்டிருக்கும். இப்பகுதி **"எடுத்துக்காட்டுகள்"** என்ற தலைப்பின் கீழ் கூறப்பட்டிருக்கும்.

12. அட்டவணைகள் (Schedules) :

இது சட்டத்தின் இறுதியில் வரும் பகுதியாகும். மிகவும் விளக்கமாக ஒரு விபரம் இருந்து, அது அச்சட்டத்தின் பல பிரிவுகளிலும் வருவதாக இருப்பின், அதைத் தனியாக பட்டியலிட்டோ அல்லது அட்டவணையிட்டோ (விளக்கத்தின் தன்மைக்கொப்ப), அச்சட்டத்தின் இறுதிப் பகுதியில் கொடுப்பதுண்டு. இது அனைத்து சட்டங்களிலும் காணப்படுவதில்லை. அவசியமிருப்பின் மட்டுமே, இப்பகுதி சேர்க்கப்படுகிறது. இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் இறுதியில் இத்தகு அட்டவணைகள் பல கொடுக்கப்பட்டுள்ளன.

முடிவுரை :

இயற்றப்பட்ட சட்டமொன்றிற்கு பொருள் விளக்கம் கொடுப்பதற்கு முன்னர், அச்சட்டத்தில் உள்ள மேற்கண்ட பகுதிகளை தெளிவாக ஆய்ந்தறிதல் இன்றியமையாதது. ஒரு மனிதனுக்கு எவ்வாறு அவனது எலும்புகள் உருவ அமைப்பைக் கொடுக்கிறதோ, அது போன்றே ஒரு சட்டத்திற்கு அதன் பகுதிகளே ஒரு வடிவமைப்பைக் கொடுக்கிறது எனில் அது மிகையன்று.

(ஆ) சட்டங்களின் வகைப்பாடு [Classification of Statutes]

2. Explain briefly the various classes of Statutes ? (சட்டங்களின் பலவாறான இனங்களைச் சுருக்கமாக விளக்குக.)

(அல்லது)

What are the different kinds of statutes with respect to object of the statute? (நோக்கத்தை அடிப்படையாக கொண்டு செய் சட்டங்களின் வகையை விவரி.)

(அல்லது)

What do you understand by the term "Statute"? Enumerate and explain the different types of statutes classified with reference to its object. ("செய் சட்டம்" என்ற வார்த்தையில் இருந்து நீ அறிவது என்ன? நோக்கத்தின் அடிப்படையில் இனவாரியாக பிரிக்கப்பட்ட பல்வேறு வகையான செய் சட்டங்களை வரிசைப்படுத்தி விளக்கவும்.)

(அல்லது)

Explain the kinds of Statutes with reference to the object of its enactment. (பல்வேறு விதமான செய் சட்டங்களை, அவை இயற்றப்பட்டதன் நோக்கம் கொண்டு விளக்குக.)

(அல்லது)

What are the objects for which statutes are enacted? Classify the statutes based on their objects. (எந்த நோக்கங்களுக்காக செய் சட்டங்கள் இயற்றப்படுகின்றன? செய் சட்டங்களின் நோக்கத்தின் அடிப்படையில் அவைகளை வகைப்படுத்தவும்.)

(அல்லது)

Enabling and Disabiling Statutes - Write short notes. (இயலச் செய் மற்றும் தடை செய் சட்டங்கள் – சிறு குறிப்பு எழுதுக.)

முன்னுரை :

இயற்றப்பட்ட சட்டங்களானது அவற்றின் கால வரையறை (duration), செயல்முறை (method), நோக்கம் (object), அளாவுகையின் (extent of application) அடிப்படையில் பின்வருமாறு வகைப்படுத்தப்படுகின்றன.

சட்டங்களின் வகைப்பாடு (Classification of Statutes):

I. கால வரையறையின் அடிப்படையில் (Classification with reference to duration):

(1) தற்காலிக மற்றும் நிரந்தர சட்டங்கள் (Temporary and Perpetual Statutes) :

ஒரு சட்டம் அமலில் இருக்கும் காலமானது, சட்டமன்றத்தால் அச்சட்டம் இயற்றப்படும்பொழுதே நிருணயிக்கப்பட்டிருந்தால், அது **'தற்காலிக சட்டம்' எனப் படுகிறது.** அக்காலவரையறை முடிந்தவுடன் அச்சட்டம் செல்லாததாகிவிடும். உதாரணமாக, நிதிச் சட்டத்தைக் (Finance Act) குறிப்பிடலாம். இது ஒவ்வொரு ஆண்டும் இயற்றப்பட வேண்டியதாக உள்ளது. சம்பந்தப்பட்ட ஆண்டு முடிவுற்றவுடன், அச்சட்டமும் முடிவுக்கு வந்துவிடும்; தனது செயல்படு வலிமையை இழந்துவிடும். ஆனால் அதே சமயத்தில் ஒரு சட்டம் மேற்கண்டவாறு கால வரையறை ஏதும் நிருணயிக்கப்படாமல் ஒரு சட்டம் இயற்றப்பட்டிருப்பின், அது **'நிரந்தர சட்டம்' ஆகும்.** அது மற்றொரு சட்டத்தால் நீக்கப்படும் வரை தொடர்ந்து அமலில் இருக்கும்.

(2) வருமேவு மற்றும் முன்மேவு ஆளுகையுடைய சட்டங்கள் (Prospective and Retrospective Statutes) :

வருமேவு ஆளுகை (Prospective) என்பது ஒரு சட்டம் இயற்றப்பட்ட பிறகு எழும் வழக்குகளுக்கும் மற்றும் ஏற்படும் சம்பவங்களுக்கும் அச்சட்டம் பொருந்துவதாகும். **முன்மேவு ஆளுகை (Retrospective)** என்பது, ஒரு சட்டம் இயற்றப்படுவதற்கு முன் தோன்றிய வழக்குகளுக்கும் மற்றும் நடந்த சம்பவங்களுக்கும், அச்சட்டம் பொருந்துவதாகும். இதில் வருமேவு ஆளுகை பெரும்பாலும், அனைத்து சட்டங்களுக்கும் உள்ளது. ஆனால் முன்மேவு ஆளுகை அச்சட்டத்தில் குறிப்பாக கூறப்பட்டிருந்தால்தான் உண்டு. அப்படிக் குறிப்பிடாவிட்டால் முன்மேவு ஆளுகை இருப்பதாக அனுமானிக்கக் கூடாது.

II. செயல்படும் முறையின் அடிப்படையில் (Classification with reference to method):

அறிவுறுத்தும் மற்றும் செயலுறுத்தும் சட்டங்கள் (Directory and Mandatory Statutes) :

'அறிவுறுத்தும் சட்டங்கள்' என்பன, ஒன்றை பரிந்துரைக்கும் (recommendatory) தொனியில் அமைந்தவை. அதாவது இவ்வகைச் சட்டங்கள் ஒரு செயலை செய்யச் சொல்லியோ அல்லது செய்யாமல் இருக்குமாறோ அறிவுறுத்துகிறது. அதை மீறுவது, சம்மந்தப்பட்ட நடவடிக்கைகளை இல்லா நிலையதாக்காது அல்லது அதைக் கடைப்பிடிக்காததால் தண்டனை ஏதும்

வழங்கப்படாது. உதாரணமாக சிகரெட் அட்டைப் பெட்டிகளில் **"புகை பிடிப்பது உடல் நலத்திற்கு தீங்கானது"** என்ற எச்சரிக்கை உள்ளது. இது சட்டப் பூர்வமானது. ஆனால் இது மக்களை அறிவுறுத்தும் விதத்தில்தான் அமைந்துள்ளது. இந்த எச்சரிக்கையை மீறி, புகை பிடிப்பவர்களை தண்டனைக்குள்ளாக்க முடியாது. ஆனால் **'செயலுறுத்தும் சட்டங்கள்' (Mandatory)** அப்படிப்பட்டவை அல்ல. அது கட்டளையிடும் விதத்தில் அமைந்தவை. அவை கூறுவதை கண்டிப்பாக கடைப்பிடித்தே ஆக வேண்டும். தவறினால் தண்டனை உண்டு அல்லது சம்மந்தப் பட்ட நடவடிக்கைகள் செல்லாதவையாகிவிடும். உதாரணமாக, **"பொது இடங்களில் புகை பிடித்தல் கூடாது. அவ்வாறு புகைத்தால் அது தண்டனைக்குரியது"**, என்று சட்டம் விதிக்கிறது. இது ஒரு செயலுறுத்தும் சட்டமாகும்.

III. நோக்கத்தின் அடிப்படையில் (Classification with reference to object):

(1) தொகுக்கும் மற்றும் சேர்க்கும் சட்டங்கள் (Codifying and Consolidating Statutes) :

சட்ட வகைமுறைகளை முறையான வடிவில் தொகுத்து வழங்கும் சட்டங்கள் **'தொகுக்கும் சட்டங்கள்'** எனப்படுகின்றன. உதாரணமாக, உரிமையியல் நடைமுறைச் சட்டம் (Civil Procedure Code), இந்திய தண்டனைச் சட்டம் (Indian Penal Code) ஆகியவற்றைக் குறிப்பிடலாம். ஒரே சட்டத்தில் பல சட்டங்களில் உள்ள வகைமுறைகளை (Provisions) சேர்த்துக் கூறும் சட்டங்கள் **'சேர்க்கும் சட்டங்கள்'** எனப்படும். **உதாரணமாக,** நுகர்வோர் பாதுகாப்புச் சட்டத்தில், முற்றுரிமை வாணிப தடுப்புச் சட்டத்தின் (Monopolies Restrictive Trade Practices Act) வகைமுறைகள் சேர்க்கப்பட்டுள்ளன.

(2) விளம்புகை சட்டங்கள் (Declaratory Statutes) :

பொதுச் சட்டத்தில் (Common Law) அல்லது வேறு ஏதேனும் சட்டத்தில் உள்ள அய்யங்களை நீக்கவும் அல்லது சட்டமன்றத்தின் கருத்துப்படி தவறாக உள்ள பொருள் விளக்கத்தை திருத்தவும் இயற்றப்படும் சட்டங்கள், **'விளம்புகை சட்டங்கள்'** எனப்படுகின்றன. சுருங்கக்கூறின், இவை சட்டத்தை விளம்புகிறது. அல்லது சட்டமாக உள்ளதை விளம்புகிறது.

(3) தீர்வழி தரும் சட்டங்கள் (Remedial Statutes) :

சட்டங்களின் ஏதேனும் ஒரு பகுதி பாதிக்கப்பட்டவர்களுக்கு தீர்வழி தரும் வகைமுறைகளை (Provisions) கொண்டதாகவே இயற்றப்படுகிறது. முந்தய சட்டத்தில் விடுபட்டுப்போன அல்லது குறைபாடுடைய விஷயங்களை களைந்து, மேலும் நல்ல தீர்வழிகளை தரும் பொருட்டு இயற்றப்படும் சட்டங்கள் **'தீர்வழிதரும் சட்டங்கள்'** எனப்படுகின்றன. **உதாரணமாக, 1986–ல்** இயற்றப்

பட்ட நுகர்வோர் பாதுகாப்புச் சட்டத்தைக் (The Consumer Protection Act, 1986) குறிப்பிடலாம். இது முழுக்க முழுக்க நுகர்வோர்களுக்கு பல்வேறு வகையான தீர்வழிகளை வழங்குகிறது. இதற்கு முந்தய சட்டங்கள் தக்க தீர்வழிகளை வழங்கத் தவறிவிட்டது. அவை தனித்தனியான சட்டங்களாக இருந்தன. இச்சட்டம் 'நுகர்வோர்கள்' என்பதின் கீழ் பொருள் மற்றும் சேவைகளை நுகரும் அனைத்து பொது மக்களும் சிறப்பாக தீர்வழி வழங்கி வருகிறது.

(4) இயல்விக்கும் மற்றும் இயலாமையாக்கும் சட்டங்கள் (Enabliing and Disabling Statutes) :

மக்கள் நலச் சட்டம் (common law) ஒன்றின் எல்லை குறுகியதாக இருக்குமிடத்து, அதனை விரிவாக்கும் பொருட்டு இயற்றப்படும் சட்டமே, **'இயல்விக்கும் சட்டம்'** ஆகும். வேறு விதத்தில் சட்டப்படியாகாத செயல் ஒன்றை, சட்டப்படியாகச் செய்வதற்கு இச்சட்டம் இயல்விக்கிறது. உதாரணமாக, ஒருவரின் சொத்தை கட்டாயமாக கையகப்படுத்துவது (Compulsory acquisition) சட்ட முரணானதாகும். ஆனால் பொது நலன் முன்னிட்டு அவ்வாறு கையகப்படுத்த அரசுக்கு அதிகாரமளிக்கும் வண்ணம் ஒரு சட்டம் இயற்றப் பட்டால், அது இயல்விக்கும் சட்டமாகும். அதே நேரத்தில், பொதுச் சட்டத்தால் அளிக்கப்பட்ட உரிமை ஒன்றை தடை செய்யும் வண்ணம் அல்லது அதனை கட்டுப்படுத்தும் வண்ணம் இயற்றப்படும் சட்டம், **'இயலாமையாக்கும் சட்டம்'** எனப்படுகிறது.

(5) தண்டனை வழங்கும் சட்டங்கள் (Penal Statutes) :

ஒரு சட்டம், சில செயல்களை அல்லது தீங்குகளை தண்டித்தால், அது **'தண்டனை வழங்கும் சட்டம்'** எனப்படுகிறது. உதாரணமாக இந்தியத் தண்டனைச் சட்டத்தைக் குறிப்பிடலாம்.

(6) வரிச் சட்டங்கள் (Taxing Statutes) :

வருமானம் அல்லது பிற செயல்பாடுகளின் மீது வரி விதிக்கும் சட்டங்கள் **'வரிச் சட்டங்கள்'** எனப்படுகின்றன. உதாரணமாக வருமான வரிச் சட்டம், சொத்து வரிச் சட்டம், விற்பனை வரிச் சட்டம் ஆகியவற்றைக் குறிப்பிடலாம். இச்சட்டங்களின் முக்கிய நோக்கம், அத்தகு வரிகளின் மூலம் அரசுக்கு வருவாயை திரட்டிக் கொடுப்பதாகும்.

(7) விளக்கமளிக்கும் சட்டங்கள் (Explanatory Statutes) :

சட்டமொன்றை விளக்கும் பொருட்டு இயற்றப்படும் சட்டம், **'விளக்கமளிக்கும் சட்டம்'** எனப்படுகிறது. இவ்வகையான சட்டம் பொதுவாக ஏற்கனவே இயற்றப்பட்டுள்ள சட்டமொன்றில் உள்ள வெளிப்படையான அய்யப்

பாட்டை நீக்குவதற்காக அல்லது அதில் விடுபட்டுப் போன விபரத்தைக் கொடுப்பதற்காக இயற்றப்படுகிறது.

(8) நீக்கும் மற்றும் திருத்தும் சட்டங்கள் (Repealing and Amending Acts) :

ஒரு சட்டம் மற்றொரு சட்டத்தை நீக்குமாறு (செயலிழக்குமாறு) இயற்றப் பட்டால் அது **'நீக்கும் சட்டம்'** எனப்படுகிறது. ஒரு சட்டத்தில் எதையாவது சேர்க்கவோ அல்லது திருத்தவோ அல்லது மேம்பாடுடைய விளைவுகளை கொடுப்பதற்கோ ஏதேனும் சட்டங்கள் இயற்றப்பட்டால், அது **'திருத்தும் சட்டங்கள்'** எனப்படுகின்றன.

(9) செல்லுநிலையாக்கும் சட்டங்கள் (Validating Statutes) :

உச்ச நீதிமன்றத்தால் செல்லாது என அறிவிக்கப்பட்ட சட்டங்களுக்கோ அல்லது வேறு ஏதேனும் விதத்தில் செல்லாததாகிப் போன சட்டங்களுக்கோ மீண்டும் உயிர் வழங்கும் சட்டங்கள் **'செல்லுநிலையாக்கும் சட்டங்கள்'** எனப்படுகின்றன. அதாவது செல்லாதாகிப் போன சட்டங்கள் மற்றொரு சட்டத்தால் மீண்டும் செல்லுநிலைக்கு கொண்டு வரப்படுகின்றன. இவற்றை **'குறை தீர்க்கும் சட்டங்கள்'** (Curative Statutes) என்றும் அழைப்பர்.

IV. அளாவுகையின் அடிப்படையில் (Classification with reference to the extent of application):

(1) பொதுச் சட்டங்கள் (Public Statutes) :

பொதுக் கொள்கை குறித்த ஒரு விஷயம் தொடர்பான சட்டம், **'பொதுச் சட்டம்'** எனப்படுகிறது. இத்தகு சட்டம் அனைவருக்கும் பொதுவானதாக இருக்கலாம் அல்லது ஒரு வட்டாரத்திற்கு அல்லது தனிப்பட்ட பிரிவினருக்குப் பொருந்தக் கூடியதாக இருக்கலாம்.

(2) தனிச் சட்டங்கள் (Private Statutes) :

பொது மக்களின் தாக்கம் ஏதுமில்லாத, தனிநபர் தன்மையுடைய அல்லது ஒரு குழுவிற்குத் தொடர்புடைய விஷயம் குறித்து இயற்றப்படும் சட்டம், **'தனிச் சட்டம்'** எனப்படுகிறது.

முடிவுரை :

அந்தந்த சட்டங்களின் தன்மைக்கேற்ப, அவற்றிற்கு அளிக்கப்படும் பொருள் விளக்கத்தின் தன்மையும் மாறுபடுகிறது. முக்கியமான சில வகைப்பாடுகளின் பொருள் விளக்க விதிகளை இந்நூலில் பின்னர் வரக்கூடிய அத்தியாயங்களில் காண்போம்.

(இ) சட்டங்களின் தொடக்கம், நீக்கம் மற்றும் புதுப்பிப்பு [Commencement, Repeal and Revival of Legislation]

[i] சட்டங்களின் தொடக்கம் [Commencement of Legislation]

3. Give an explanatory note to commencement of statutes. What are the modes of commencement ? (சட்டங்களின் தொடக்கம் என்பதற்கு விளக்கக் குறிப்பு தருக. எந்தெந்த முறைகளில் ஒரு சட்டம் தொடங்கலாம் ?)

(அல்லது)

Commencement of statutes - Write Short notes. (சட்டங்களின் தொடக்கம் – சிறு குறிப்பு எழுதுக.)

சட்டங்களின் தொடக்கம் - விளக்கம் :

ஒரு சட்டம் எந்த தேதியிலிருந்து அமலுக்கு வருகிறதோ, அதுவே அச்சட்டத்தின் தொடக்கமாகும். இது ஒரு மேலோட்டமான விளக்கமே. ஆனால் ஒரு சட்டம் எப்பொழுது தொடங்குகிறது, எப்பொழுது செயல்பாட்டுக்கு வருகிறது என்பவை குறித்து, 1897–ஆம் ஆண்டின் பொதுச் சொல் விளக்கச் சட்டம் (The General Clause Act, 1897) தனது சட்டப் பிரிவுகளின் வாயிலாக சற்று நுணுக்கமாக பின்வருமாறு கூறுகிறது.

1897-ஆம் ஆண்டின் பொதுச் சொல் விளக்கச் சட்டம் கூறுவதாவது :

பொதுச் சொல் விளக்கச் சட்டத்தின் பிரிவு 3(13) ஆனது, 'தொடக்கம்' (Commencement) என்பதற்கு வரையறை தருகிறது. அதன்படி, ஒரு சட்டம் அல்லது ஒழுங்குமுறை விதி குறித்த 'தொடக்கம்' என்பது, அச்சட்டம் அல்லது ஒழுங்குமுறை விதி அமலுக்கு வந்த தேதியாகும்[1].

அதே சமயத்தில் மேற்படி சட்டத்தின் 5(1)–வது பிரிவானது, ஒரு சட்டம் எப்பொழுது செயல்பாட்டிற்கு (Operation) வருகிறது என்பது குறித்து விளக்கம்

1. "Commencement", used with reference to an Act or Regulation, shall mean the day on which the Act or Regulation comes into force. - **Sec. 3(13) of the General Clauses Act, 1897.**

தருகிறது. அதன்படி, ஒரு மத்தியச் சட்டம் எந்நாளில் இருந்து செயல்பாட்டிற்கு வருகிறது என்பது பற்றி மௌனம் சாதிக்குமானால், அச்சட்டம் எந்நாளில் குடியரசுத் தலைவரின் ஒப்புதலை பெற்றதோ, அந்நாளில் இருந்து செயல்பாட்டிற்கு வந்ததாகக் கொள்ள வேண்டும்[1]. ஆனால் அதே சமயத்தில், **பிரிவு 5(3) ஆனது** பின்வருமாறு கூறுகிறது. அதன்படி, அம்மத்தியச் சட்டம் அதில் குறிப்பிட்ட தினத்திலிருந்து செயல்பாட்டிற்கு வருகிறது என்பதற்கு முரண்பாடான கருத்து ஏதும் இல்லாத பட்சத்தில், அம்மத்தியச் சட்டம் அல்லது ஒழுங்குமுறை விதியானது, அதற்கு முந்தின நாள் முடிந்தவுடன் செயல்பாட்டுக்கு வருவதாகப் பொருள் கொள்ள வேண்டும்[2].

எடுத்துக்காட்டு :

ஒரு மத்தியச் சட்டத்திற்கு குடியரசுத் தலைவர் ஜனவரி 26–ஆம் தேதி காலை 11 மணிக்கு ஒப்புதல் அளிப்பதாகக் கொள்வோம். மேற்படி **பிரிவு 5(1)ன் படி,** ஒரு மத்தியச் சட்டம் எந்நாளில் இருந்து அது செயல்பாட்டிற்கு வருகிறது என்பதைக் கூறவில்லையானால், அதற்கு குடியரசுத் தலைவர் ஒப்புதல் அளித்த தேதியான ஜனவரி 26–ஆம் தேதியிலிருந்து செயல்பாட்டிற்கு வருவதாகக் கொள்ள வேண்டும். அதாவது காலை 11 மணியிலிருந்து செயல்பாட்டிற்கு வருகிறது. அதே சமயத்தில் பிரிவு 5(3)ன் படி, ஒரு சட்டம் அதன் குறிப்பிட்ட தினத்திலிருந்து செயல்பாட்டிற்கு வருகிறது என்பதற்கு முரண்பாடான கருத்து ஏதும் கூறப்படாதபொழுது, அச்சட்டம் தொடங்கியதற்கு முந்தின நாள் முடிந்தவுடன் செயல்பாட்டிற்கு வருவதாகப் பொருள் கொள்ள வேண்டும். அதாவது ஜனவரி 25–க்கும், 26–க்கும் இடையிலான நள்ளிரவிலிருந்து அதாவது பூஜ்யம் நேரத்திலிருந்து (00.00 hrs.) செயல்பாட்டிற்கு வருகிறது.

பிரிவு 3(13)ன் படி, குடியரசுத் தலைவர் எப்பொழுது ஒரு சட்டத்திற்கு ஒப்புதல் அளித்து கையொப்பம் இடுகிறாரோ, மாறுபாடான கருத்து ஏதும் இல்லாத வரை, அப்பொழுதே அச்சட்டம் அமலுக்கு வந்து விடுகிறது. இவ்வாறு அமலுக்கு வருவதால், அச்சட்டம் தொடங்கி விட்டதாகப் பொருளாகும். மேற்படி எடுத்துக்காட்டில், ஜனவரி 26–ம் தேதியே, அச்சட்டத்தின் தொடக்கமாகும்.

Harla v. State of Rajasthan[3]

மேற்கண்ட பொதுச் சொல் விளக்கச் சட்டமானது, ஒரு சட்டம் அரசிதழில் (Official Gazette) பதிப்பு செய்யப்பட்டு வெளியிடப்பட்ட பின்னரே

1. Where any Central Act is not expressed to come into operation on a particular day, then it shall come into operation on the day on which it receives the assent,... of the President - **Sec. 5(1) of the General Clauses Act, 1897.**
2. Unless the contrary is expressed, Central Act or Regulation shall be construed as coming into operation immediately on the expiration of the day preceeding its commencement. - **Sec. 5(3) of the General Clauses Act, 1897.**
3. A.I.R. 1951 S.C. 467

தொடங்கப்பட வேண்டும் என்றோ, செயல்பாட்டுக்கு வரவேண்டுமென்றோ கட்டாயப்படுத்திக் கூறவில்லை. ஆனால் அவ்வாறு செய்தால் அது மக்களுக்கு மிக்க நலன் பயக்கும், என மேற்படி வழக்கில் உச்ச நீதிமன்றம் கருத்து தெரிவித்தது.

மேற்படி வழக்கில், ஒரு சட்டம் எந்நாளில் தொடங்குகிறது என்பதற்கான தேதி, அதில் குறிக்கப்படாது விடப்பட்டிருப்பின், அது குடியரசுத் தலைவரின் அல்லது மாநில ஆளுநரின் ஒப்புதலை எந்நாளில் பெற்றதோ, அந்நாளே அதன் தொடக்கமாகும் என்ற விதி பொது மக்களுக்கு குழப்பத்தையும் கஷ்டத்தையும் ஏற்படுத்தலாம். பொதுவாக, ஒப்புதல் பெறப்பட்ட சட்டங்களை அரசிதழில் வெளிட அரசு அதிக காலம் எடுத்துக் கொள்வதில்லை. இந்நிலையில் ஒப்புதல் பெறப்பட்ட நாளிலிருந்து தொடங்குகிறது எனும் மேற்படி விதியினால் ஏற்படும் குழப்பத்தை, அரசிதழில் வெளியிடப்படும் நாளிலிருந்து தொடங்குகிறது என்று அனுமானம் செய்து கொள்வதின் வாயிலாகக் குறைக்கலாம் என உச்ச நீதிமன்றம் கூறியது.

சட்டம் தொடங்குதல் குறித்த முறைகள் (Modes) :

ஒரு சட்டம் பின்வரும் முறைகளில் தொடங்குகிறது :

1. சட்டம் உடனே அமலுக்கு வருதல் (This Act shall come into force at once).

2. அரசிதழில் வெளிடப்பட்ட பின்னர் அமலுக்கு வருதல். (This Act shall come into force, when it is published in the Official Gazette).

3. பின்னர் அறிவிக்கப்படவுள்ள ஒரு குறிப்பிட்ட தேதியிலிருந்து அமலுக்கு வருதல் (This Act shall come into force from a date, will be given).

4. சட்டத்தின் தொடக்கம் அரசிதழில் அறிக்கை செய்யப்படும் நாளில் ஏற்படுதல் (The commencement shall be notified in the Official Gazette).

5. சட்டத்தின் பல்வேறு பிரிவுகள் அரசிதழில் அறிக்கை செய்யப் படவுள்ளவாறு பல்வேறு தேதிகளில் அமலுக்கு வருதல் (Different sections of this Act shall come into force on different dates as shall be notified in the Official Gazette).

முடிவுரை :

சட்டப் பொருள் விளக்கமளித்தலுக்கு அச்சட்டம் எப்பொழுது பிறந்தது, அமலுக்கு வந்தது, செயல்படத் துவங்கியது என்ற விவரங்கள் யாவும் மிகவும் இன்றியமையாததாகும். ஏனென்றால் ஒரு சொல், அது குறித்த சட்டம் தொடங்கப்படுவதற்கு முன்பு வரை ஒரு நிலைப்பாடுடனும், சட்டம் தொடங்கிய

பிறகு பிறிதொரு நிலைப்பாடுடனும் இருக்க வாய்ப்புண்டு. எனவே அவற்றிற்கேற்ப பொருள் விளக்கமளிக்க, சட்டம் எந்த நாளில் தொடங்கியது என்பதை தெளிவாக அறிதல் அவசியம். ஒரு சட்டத்தை, பொது மக்கள் அனைவரும் அறிந்து கொள்ளும் வண்ணம் அரசிதழில் வெளிடப்பட்ட தேதியிலிருந்து தொடங்குகிறது என அறிவிப்பதே, சட்டங்களின் தொடக்கம் குறித்த சிறந்த முறையாகும்.

[ii] சட்டங்களின் நீக்கம் [Repeal of Statutes]

4. "The common law rule was that if an Act expired or was replaced, it was regarded as having never existed"- Discuss. ("காலாவதியான அல்லது ரத்து செய்யப்பட்ட சட்டம் பொதுச் சட்ட விதிப்படி ஒரு போதும் இருந்ததாக கருதப்படுவது இல்லை" – விவாதி.)

(அல்லது)

What are different modes of repealing a Statute ? Distinguish between repeal and amendment. [ஒரு செய் சட்டத்தை ரத்து செய்வதற்கான (நீக்குவதற்கான) பல்வேறு முறைகள் யாவை ? ரத்து செய்வதையும் திருத்தத்தையும் வேறுபடுத்துக.]

(அல்லது)

What is (a) Express Repeal and (b) Repeal by implicaiton? What are the consequences of Repeal? [(a) நேரடி இரத்து மற்றும் (b) மறைமுக இரத்து என்றால் என்ன? ரத்து செய்வதின் விளைவுகள் யாவை?]

(அல்லது)

What is repeal? What are the modes of repeal? What are the effects of repeal? (ரத்து என்றால் என்ன? சட்டத்தை ரத்து செய்வதற்கான பல்வேறு வழிகள் யாவை? அதன் விளைவுகள் யாவை?)

(அல்லது)

Repeal by implication - Write short notes. (அனுமான நீக்கம் – சிறு குறிப்பு எழுதுக.)

(அல்லது)

Repeal - Write short notes. (சட்ட நீக்கம் – சிறு குறிப்பு எழுதுக.)

(அல்லது)

Effect of Repeal - Write short notes. (ரத்தின் விளைவுகள் – சிறு குறிப்பு எழுதுக.)

சட்டத்தை இரத்து செய்தல் – விளக்கம் (Repeal of Statutes) :

'சட்டத்தை இரத்து செய்தல்' என்றால், அச்சட்டத்தை நீக்குதல், பிரித்து விடல், தள்ளுபடி செய்தல் என்று பொருள்படும். அதாவது, அக்குறிப்பிட்ட சட்டமானது அமலில் இல்லாத, இறந்துபட்ட ஒன்றாகிவிடுகிறது.

நீக்குதல் சட்டத்தின் நோக்கம் (Object of Repeal) :

நீக்குதல் சட்டத்தின் முக்கிய நோக்கம், முரண்பாடகவும், தெளிவற்றும் உள்ள சட்டப் பிரிவுகளை நீக்குதலாகும்.

நீக்குதலின் விளைவு (Effect of Repeal) :

ஒரு சட்டம் நீக்கப்பட்டுவிட்டால், அச்சட்டமானது, கடந்த கால மற்றும் முடிவாகிப்போன விஷயங்கள் மற்றும் செயல்பாடுகள் தவிர, பிறவற்றைப் பொறுத்து எப்பொழுதுமே இல்லாததாகவே கருதப்படும். ஒரு சட்டம் நீக்கப்பட்டுவிட்டது என்றால், அது பின்வரும் விளைவை ஏற்படுத்துவதாகும். அதாவது, பாராளுமன்றம் அச்சட்டத்தை எப்பொழுதுமே இயற்றவில்லை என்ற அளவிற்கு, பாராளு மன்றத்தின் சட்டப் பதிவேடுகளிலிருந்து அதனை முற்றிலுமாக நீக்கிவிட்டதாகக் கருதப்படும். சுருங்கக்கூறின், அமலில் இருந்த பொழுது, அதன் தொடக்கம், அதன் அடிப்படையில் எழுந்த வழக்கு நடவடிக்கைகள் மற்றும் முடிவு பெறல் ஆகிய குறிப்பிட்ட வரம்பிற்குட்பட்ட விஷயங்களைத் தவிர, பிறவற்றைப் பொறுத்து அது எப்பொழுதுமே இயற்றப்படவில்லை என்றே நீக்கப்பட்ட சட்டத்தைக் கருத வேண்டும். வேறு விதத்தில் கூறுவதானால், நீக்கப்பட்ட சட்டங்களானது நீதிமன்றங்களால் எடுத்துக் கொள்ளப் படாது. ஆனால் நீக்கப்படுவதற்கு முன்னர் நிகழ்ந்த அனைத்து விஷயங்களைப் பொறுத்தும் அது செல்லத்தக்கதாவே இருக்கும்.

நீக்குதல் சட்டம் குறித்து 1897ம் ஆண்டின் பொதுச் சொல் விளக்கச் சட்டம் (The General Clauses Act, 1897) கூறுவதாவது:

மேற்படி சட்டத்தின் ஆறாவது பிரிவானது, சட்டத்தை நீக்கி விடுதலால் (Repeal) ஏற்படும் விளைவுகளைப் பற்றி கூறுகிறது. ஒரு சட்டத்தை நீக்கி விடுதல் எனும் பொழுது அச்சட்டம் ஒரு போதும் இயற்றப்பட்டுச் சட்டத் தொகுப்பில் இடம் பெறவில்லை என்பதற்குச் சமமாகும். அப்படிப்பட்ட ஒரு சட்டம் எப்போதும் இருந்ததில்லை என்றே பொருள் கொள்ள வேண்டும். ஆனால் இந்த ஆறாம் பிரிவு, விதிவிலக்கு ஒன்றை, வரையறுத்து அதன்கீழ் பின்வரும் 5 கோட்பாடுகளை விதிக்கிறது.

(அ) ஒரு சட்ட நீக்கம், சட்ட நீக்கத்தைச் செய்யும்போது இல்லாத

ஒன்றைப் புதுப்பித்ததாகவோ (Revive), இருக்கின்ற ஒன்றை உயிர்ப்பித்ததாகவோ கொள்ளக்கூடாது.

(ஆ) நடைமுறையில் இருக்கின்ற உரிமைகளைப் பாதிக்கின்ற சட்ட நீக்கம் நிகழ்காலம் பற்றிய ஒன்றே. தெளிவாக எதுவும் சொல்லப்படாதவரை இறந்த காலத்திற்கு அதனைப் பயன்படுத்தக் கூடாது.

(இ) பெற்ற ஒரு உரிமை அல்லது ஒரு பொறுப்பினை ஒரு சட்ட நீக்கம் எந்த விதத்திலும் பாதிக்காது.

(ஈ) சட்டத்திற்கு எதிராக செய்யப்பட்ட குற்றத்திற்காக விதிக்கப்பட்ட அபராதத்தையோ அல்லது தண்டனையையோ சட்ட நீக்கம் பாதிக்காது.

(உ) உரிமை, பொறுப்பு, தண்டனை போன்றவை தொடர்பாக எழும் புலன் விசாரணை மற்றும் சட்ட நடவடிக்கைகளை சட்ட நீக்கம் பாதிக்காது.

சட்டத்தை நீக்குவதற்கான முறைகள் :

ஒரு சட்டத்தை இரண்டு விதங்களில் நீக்கலாம். அவை,

(1) வெளிப்படையாக நீக்கல்

(2) அனுமான (அல்லது) உட்கிடையாக நீக்கல்

(1) வெளிப்படையாக நீக்கல் (Repeal by Expression) :

இந்த விதத்தில் பின்னர் இயற்றப்பட்ட ஒரு சட்டமானது, முன்னர் இயற்றப்பட்ட சட்டமொன்றை நீக்குகிறது. உதாரணமாக, பின்னர் இயற்றப்பட்ட சட்டத்தில், **'இந்தச் சட்டத்திற்கு முரண்பாடாக உள்ள பிற சட்டத்தின் வகைமுறைகள் நீக்கப்படுகிறது'** என்று இருந்தால், அச்சட்டத்திற்கு முன்பிருந்த சட்டங்களில் அதற்கு முரணாக உள்ள வகைமுறைகள் நீக்கப்பட்டு விட்டதாக கருத வேண்டும். முந்தய சட்டங்களில் எச்சட்ட வகைமுறைகள், பிந்தய சட்ட வகை முறைகளுக்கு முரணாக உள்ளது, என்பதை ஆய்ந்தறிய வேண்டியது நீதிமன்றத்தின் பணியாகும்.

(2) அனுமான நீக்கல் (Repeal by Implication) :

சில சமயங்களில் பின்னர் இயற்றப்பட்ட ஒரு சட்டம் முன்னர் இயற்றப்பட்ட ஒன்றை மறைமுகமாக அதாவது உட்கிடையாக நீக்குவதாக இருக்கலாம். இவ்வாறு நீக்கப்பட்டிருத்தல் குறித்து நீதிமன்றங்கள் அனுமானம் செய்வதின் வாயிலாகவே அறிய முடியுமென்பதால், இதனை **'அனுமான நீக்கல்'** என்று குறிப்பிடுவதே உகந்ததாகும்.

இதன்படி பின்னர் இயற்றப்பட்ட ஒரு சட்டம் முன்னர் இயற்றப்பட்ட சட்டத்துடன் முரண்பட்டு இருந்தால், இது குறித்து தக்க முடிவெடுப்பதற்கு முன்,

இரண்டு சட்டங்களும் ஒத்துப் போகின்ற ஒரு சுமுகமான பொருள் விளக்கத்தையே நீதிமன்றம் கையாளும்.

ஆனால், இரண்டும் முரண்பட்டு இணைந்து செயல்பட இயலாமல் போய்விட்டால், பின்னர் இயற்றப்பட்ட சட்டம் முன்னர் இயற்றப்பட்ட சட்டத்தை நீக்கிவிட்டதாகவே கொள்ள வேண்டும்.

உதாரணமாக, ஒரு சட்டம் சிலவகையான மதுபானங்களுக்கு அனுமதி சான்றிதழ் பெறுவதிலிருந்து விதிவிலக்கு அளித்திருந்தது. ஆனால், அதைத் தொடந்து பின்னர் வந்த சட்டம் அனுமதிச் சான்றிதழ் இல்லாமல் எந்தவிதமான மதுவகைகளும் விற்கக் கூடாது என்ற தடை விதித்தது. இந்த உதாரணத்தில் இரண்டு சட்டங்களும் ஒன்றிற்கொன்று முரண்பாடானவை என்பதோடு ஒன்றாக இணைந்து செயல்பட இயலாத நிலையில் உள்ளன. எனவே, பின்னர் வந்த சட்டம், முன்னர் வந்த சட்டத்தை நீக்கி விட்டதாகக் கொள்ள வேண்டும். குறிப்பிட்ட பல தனிப்பட்ட சூழல்களைக் குறிக்கும் சட்டம் பொதுவாக கொண்டு வரப்பட்ட ஒரு சட்ட நீக்கத்தால் நீக்கப்பட்டதாகக் கொள்ளக் கூடாது.

Rex v. Davis[1]

மேற்படி வழக்கில், மான்களைக் கொல்வது குற்றம் என இரண்டு சட்டங்கள் கூறுகின்றன. அவற்றில், முதலில் இயற்றப்பட்ட சட்டம், மான்களைக் கொல்வது பெருங்குற்றம் (Felony) என்றும், அதற்கு மரண தண்டனை விதிக்கப் பட வேண்டும் என்றும் கூறுகிறது. ஆனால் இதற்குப் பின்னர் இயற்றப்பட்ட இரண்டாவது சட்டமோ, முதன்முதலாக யாரேனும் மான்களைக் கொன்றால் அவருக்கு அபராதம் மட்டுமே விதிக்கப்பட வேண்டும். ஆனால் அவரே இரண்டாவது முறையும் மான்களைக் கொன்றால், அதனைப் பெருங்குற்றமாக கருத வேண்டும் என்று கூறியது. இங்கு இரண்டு சட்டங்களுக்கும் இடையே முரண்பாடு உள்ளது. ஆகவே இரண்டாவதாக இயற்றப்பட்ட சட்டம், முதலாவதாக இயற்றப்பட்ட சட்டத்தை நீக்கம் செய்வதாக நீதிபதிகள் ஒருமுகமாக அனுமானித்தனர்.

பழைய ஒரு சட்டம் குறித்து புதிதாக ஒரு சட்டம் இயற்றப்பட்டு, அது பழைய சட்டத்தில் கூறப்பட்டுள்ள குற்றங்குறைகளையும், தண்டனைகளையும் மாற்றி அமைத்தால் அப்புதிய சட்டம், பழைய சட்டத்தை மறைமுகமாக நீக்கம் செய்து அமைத்திருப்பதாக பொருள் கொள்ள வேண்டும். ஒரு விஷயம் குறித்து முரண்பட்டுள்ள இரண்டு சட்டங்களையும் ஒன்றாக வழக்கு நடக்கையில் நீதிமன்றம் கருத்தில் கொள்ளாது.

அனுமான நீக்கத்தின் அடிப்படைக் கோட்பாடு :

பின்னர் இயற்றப்பட்ட சட்டத்தில், முன்னர் இயற்றப்பட்ட சட்டம் 'நீக்கப்

1. Leach C.C. 271

பட்டுவிட்டது' (repeal) என குறிப்பான வார்த்தைகளால் உணர்த்த வேண்டிய அவசியமில்லை. ஆனால் முன்னர் இயற்றப்பட்ட சட்டத்தை நீக்க வேண்டும் என்பது சட்டமன்றத்தின் உள்ளக்கிடக்கையாக இருக்கும்பட்சத்தில், அது பின்னர் இயற்றப்பட்ட சட்டத்தில் "பழைய (முன்னர்) சட்டம் இதனால் நீக்கப்படுகிறது" எனக் குறிப்பிட வேண்டும். இவ்வாறு இல்லாத சமயத்தில் முன் கூறியபடி அனுமானித்துக் கொள்ள வேண்டும். சுருங்கக் கூறின், சட்டமன்றமானது, தான் இயற்றிய ஒரு புதிய சட்டத்தினால், எவ்வித குழப்பங்களையோ அல்லது முரண்பாட்டையோ தோற்றுவிக்க விரும்பவில்லை என்று அனுமானித்துக் கொள்ள வேண்டும்.

அனுமான நீக்கத்திற்கு எதிரான அனுமானம் (Presumption against Repeal by Implication) :

இவ்வளவு இருந்தும், இந்த அனுமான நீக்கத்தை சட்டம் ஆதரிப்பதில்லை. எவ்வித வழிகளும் தென்படவில்லையென்றால்தான், இதனை ஒரு கடைசி முயற்சியாக எடுத்துக்கொள்ள வேண்டும். ஏனென்றால் சட்டமன்றமானது முழு அறிவுடனே சட்டத்தை இயற்றுகின்றது. ஆகவே, அது ஒரு சட்டத்தில், அதற்கு முன்னர் இயற்றப்பட்ட சட்டம், 'நீக்கம் செய்யப்பட்டுள்ளது' என தெளிவாக குறிப்பிடாவிட்டால், பழைய சட்டம் நீக்கப்பட்டுவிட்டதாக அனுமானிக்கக் கூடாது. அசாதாரண தருணங்களிலேயே அனுமான சட்ட நீக்கத்தை அனுமானிக்க வேண்டும்.

Ratan Lal Adukia v. Union of India[1]

மேற்படி வழக்கில், 'பழையன கழிதலும், புதியன புகுதலும்' என்பது, **"புதியன புகுவதே பழையன கழிவதற்காகத்தான்"** எனப்பட்டது. அதாவது, பழைய சட்டம் முரண்பாடான விஷயங்களைக் கொண்டிருக்கிறது. அதற்காக புதிய சட்டம் கொண்டு வரப்படுகிறது. பழைய காலத்தில் என்ன இருந்தது என்பதையும், புதிய சட்டத்தின் விளைவுகள் என்ன என்பதையும் அறிந்து கொண்டுதான் சட்டமன்றம் புதிய சட்டத்தை இயற்றுகிறது. எனவே புதிய சட்டமானது பழைய சட்டத்தை உட்கிடையாக நீக்கி விடுகிறது எனப் பொருள் கொள்ள வேண்டுமென உச்ச நீதிமன்றம் மேற்படி வழக்கில் கூறியது.

சட்டத் திருத்தம் (Amendment of Statute) :

சட்டத் திருத்தம் என்பது ஒரு சட்டத்தில் அதன் நோக்கத்தை மேம்படுத்தும் பொருட்டு, எப்பிரிவையாவது சேர்க்கவோ அல்லது எப்பிரிவையாவது மாற்றவோ சட்டமன்றத்தால் செய்யப்படுவ தாகும். சட்டத் திருத்தமானது புதிதாக சட்டம் இயற்றப்படுவதைப் போலவே செய்யப்படுகிறது. இது **"திருத்தச் சட்டம்" (Amending Act)** எனப்படுகிறது. இத்திருத்தச் சட்டத்தில், மூல சட்டத்தில்

1. A.I.R. 1990 S.C. 104

திருத்தப்பட்ட சட்டப் பிரிவுகள் எப்பொழுதிலிருந்து அமலுக்கு வரும் என்பதும், அதிலேயே கொடுக்கப்பட்டிருக்கும். இத்திருத்தச் சட்டம், எச்சட்டத்தின் திருத்தத்தை கொண்டு வர விழைகிறதோ அம்மூலச் சட்டத்தின் நோக்கத்திற்குட் பட்டே செயல்படும்.

சட்ட நீக்கம், சட்டத் திருத்தம் - வேறுபாடுகள் :

1. மேற்கண்ட இரண்டும் சட்டச் செயற்பாட்டின் இரு வேறுபட்ட துறைகளைப் பற்றி குறிப்பிடுகின்றன.

2. சட்ட நீக்கத்தில், முந்தய சட்டமோ அல்லது அதன் பிரிவோ நீக்கப் படுகிறது. சட்டத் திருத்தத்தில், மூல சட்டத்தில் சில விஷயங்கள் சேர்க்கப் படுதலோ அல்லது மாற்றப்படுதலோ நடக்கிறது.

3. சட்ட நீக்கத்தில் இரண்டு சட்டங்களிடையே முரண்பாடு என்ற சிக்கல் எழுகிறது; அதனைக் களைவது நீதிமன்றத்தின் பணியாகிறது. ஆனால், சட்டத் திருத்தத்திலோ, மூலச் சட்டத்தில் இருக்கும் சிக்கல்களைக் களைந்து, அதனை மேம்படுத்தும் பொருட்டே திருத்தங்கள் கொண்டு வரப்படுகின்றன. எனவே இரண்டு சட்டங்களுக்குள் முரண்பாடு என்ற நிலை இங்கு கிடையாது.

4. சட்ட நீக்கமானது வெளிப்படையாகவோ அல்லது அனுமானத்தின் (உட்கிடையாகவோ) அடிப்படையிலோ நடக்கலாம். சட்டத் திருத்தத்தில் அனுமானம் அல்லது உட்கிடையான அனுமானம் என்ற பதங்களுக்கே இடமில்லை. ஒரு சட்டத் திருத்தம் சட்டமன்றத்தால் வெளிப்படையாக கொண்டு வரப்படுகிறது.

5. Repugnancy between two statutes - Write Short Notes.
(இரண்டு சட்டங்களிடையே முரண்பாடு – சிறு குறிப்பு எழுதுக.)

(அல்லது)

"If two section of the same statutes are repugnant, the known rule is that the last must prevail" - Explain. ("ஒரே சட்டத்தின் இரண்டு பிரிவுகள் ஒன்றுக்கொன்று முரண்பட்டிருந்தால் இரண்டாவதாக வருகின்ற பிரிவே மிஞ்சும் என்பது பொது விதி" – விளக்குக.)

முன்னுரை :

நாம் சென்ற வினாவில் அனுமான நீக்கம் (Repeal by Implication) என்ற தலைப்பின் கீழ் சில விபரங்களைக் கண்டோம். அந்த விபரங்களே மேற்படி வினாவிற்கும் விடையாகிறது என்றால் அது மிகையாகா.

விளக்கம் :

சில சமயங்களில் பின்னர் இயற்றப்பட்ட ஒரு சட்டம் முன்னர் இயற்றப்பட்ட

ஒன்றை மறைமுகமாக அதாவது உட்கிடையாக நீக்குவதாக இருக்கலாம். இவ்வாறு நீக்கப்பட்டிருத்தல் குறித்து நீதிமன்றங்கள் அனுமானம் செய்வதின் வாயிலாகவே அறிய முடியுமென்பதால், இதனை 'அனுமான நீக்கம்' என்று குறிப்பிடுகிறோம்.

சட்டங்கள் அல்லது சட்டப் பிரிவுகள் ஒன்றுக் கொன்று முரண்பட்டு இருந்தால் என்ன செய்வது ?

பின்னர் இயற்றப்பட்ட ஒரு சட்டம் முன்னர் இயற்றப்பட்ட சட்டத்துடன் முரண்பட்டு இருந்தால், இது குறித்து தக்க முடிவெடுப்பதற்கு முன், இரண்டு சட்டங்களும் ஒத்துப் போகின்ற ஒரு சுமூகமான பொருள் விளக்கத்தை நீதிமன்றம் கையாளுதல் வேண்டும்.

அப்படி சுமூகமான பொருள் விளக்கம் தர நீதிமன்றத்திற்கு முடியாவிட்டால் ?

முரண்பட்ட இரு சட்டங்களுக்கிடையே சுமூகமான ஒரு பொருள் விளக்கத்தை தருவதற்கு நீதிமன்றத்திற்கு முடியாது போனால், அங்கு உதவிக்கு வருகிறது, 'இரண்டாவதாக வருகின்ற பிரிவே மிஞ்சும்', (last must prevail) என்ற பொது விதி.

அவ்விதி கூறுவதென்ன ?

மேற்படி விதியின்படி, இரண்டு சட்டங்களுக்கிடையே முரண்பாடு இருந்து, அவற்றிற்கிடையே ஒரு சுமூகமான பொருள் விளக்கத்திற்கு வர முடியவில்லை என்றால், பின்னர் இயற்றப்பட்ட சட்டம், முன்னர் இயற்றப்பட்ட சட்டத்தை நீக்கி விட்டதாகவே பொருள் கொள்ள வேண்டும். இது சட்டப் பிரிவுகளுக்கும் (Section) பொருந்தும். அதன்படி, ஒரே சட்டத்தில் இரண்டு சட்டப் பிரிவுகளுக்கிடையே முரண்பாடு எழுமானால், பின்னர் கொண்டு வரப்பட்ட இரண்டாவது சட்டப் பிரிவுதான் மேலோங்கி நிற்கும். அதாவது செல்லுபடியாகும்.

முரண்பாட்டை எப்படி கண்டறிவது ?

இரண்டு சட்டங்களோ அல்லது ஒரு சட்டத்தின் இரண்டு பிரிவுகளோ முரண்பட்டு உள்ளது என்பதைக் கண்டறிய **Deep Chand v. State of Uttar Pradesh**[1] என்ற வழக்கில் உச்ச நீதிமன்றம் பின்வரும் மூன்று கொள்கைகளை வகுத்துக் கொடுத்தது. அதன்படி,

1. சட்டப் பிரிவுகளுக்கிடையே நேரடியான முரண்பாடு உள்ளதா?

2. சம்பந்தப்பட்ட விஷயம் குறித்து பாராளுமன்றமானது, மாநில சட்டமன்றத்தின் சட்டத்தை நீக்கி, ஒரு முழுமையான சட்டத் தொகுப்பைக் கொண்டு வரும் எண்ணம் கொண்டிருந்ததா ? மற்றும்,

1. A.I.R. 1959 S.C. 648

3. பாராளுமன்றத்தால் இயற்றப்பட்ட சட்டமும், மாநில சட்டமன்றத்தால் இயற்றப்பட்ட சட்டமும் ஒரே துறையின் மீது ஆதிக்கம் செலுத்துகின்றதா ?

மேற்கண்ட கேள்விகளுக்கெல்லாம் விடை 'ஆம்' என்றால், சட்டங்கள் அல்லது சட்டப் பிரிவுகள் ஒன்றுக்கொன்று முரண்பட்டு விளங்குகின்றன என்று பொருள்.

மேற்கண்ட சூழலில் நீதிமன்றங்களின் நிலைப்பாடு :

முன்னர் இயற்றப்பட்ட சட்டமானது, பின்னர் இயற்றப்பட்ட சட்டத்தால் உட் கிடையாக நீக்கப்பட்டு விட்டது என்று கருத வேண்டுமென்றால், புதிய சட்டமானது, பழைய சட்டத்திற்கு பதிலாக இயற்றப்பட்டுள்ளது என்றும், அவை இரண்டிற்கு மிடையே உள்ள முரண்பாடானது எள்ளளவும் சுமூகமாக அல்லது இணக்கமாகத் தீர்க்கப்பட முடியாதென்றும், நீதிமன்றங்கள் மனநிறைவடைதல் வேண்டும்.[1]

முடிவுரை :

முரண்பட்டவைகளை முடிந்தால் சேர்த்து வைக்கலாம்; முடியாது போனால் பிந்திய சட்டமே (இரண்டாவது சட்டமே) முந்திய சட்டத்திற்கு (முதல் சட்டம்) முந்தி நிற்கும்.

6. The provisions of a Statute are by references incorporated in another Statute. The earlier statute is afterwards replaced. Do the provisions as incorporated in the second Statute continue in force ? (ஒரு செய் சட்டத்தின் பிரிவுகள் மற்றொரு செய் சட்டத்தில் குறிப்பு வாயிலாக கூட்டிணைவாக்கப்பட்டது. முன்னர் கூறப்பட்ட செய்சட்டம் பிறகு தள்ளுபடி செய்யப்படுகிறது. இரண்டாவது செய்சட்டத்தில் கூட்டிணைவாக்கப் பட்ட பிரிவுகளின் நடப்புநிலை தொடர்ந்து இருக்கிறதா ?)

சட்டத்தை இரத்து அல்லது தள்ளுபடி அல்லது நீக்கம் செய்தல் :

'சட்டத்தை இரத்து செய்தல்'.என்றால், அச்சட்டத்தை நீக்குதல், பிரித்து விடல், தள்ளுபடி செய்தல் என்று சென்ற விடையில் கண்டோம்.

அதாவது, அக்குறிப்பிட்ட சட்டமானது, அமலில் இல்லாத இறந்துவிட்ட ஒன்றாகி விடுகிறது. இந்நிலை, அக்குறிப்பிட்ட சட்டம் நீக்கப்படுவதால் மட்டும் ஏற்படும் விளைவாகும். மேற்படி வினாவின் தன்மையும், இதையொட்டித்தான் அமைந்துள்ளது; ஆனால், சற்று மாறுபட்ட விதத்தில் விரிவாக வருமாறு.

விளக்கம் :

சட்டப் பொருள் விளக்கக் கோட்பாடுகளின்படி, ஒரு (செய்) சட்டத்தின் பிரிவுகள் மற்றொரு சட்டத்தில் கூட்டிணைக்கப்பட்டால், அவ்வாறு கூட்டிணைவாக்

1. முந்தைய வினாவின் விடையில் காணப்படும் Rex v. Davis வழக்கையும் குறிப்பிடலாம்.

கப்பட்ட பிரிவுகள், கூட்டிணைக்கப்படும் சட்டத்தின் பகுதியாக ஆகி விடுகின்றன. (An incorporated statute becomes part of the incorporating statute).

இந்நிலையில், கூட்டிணைவாக்கப்பட்ட பிரிவுகளின் சட்டமே நீக்கப்பட்டு விட்டால், அதாவது தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டால் அதன் நிலைப்பாடு யாது, என்பதுதான் இங்கு எழும் கேள்வி. இதற்கு வெகு சுலபமாக பதிலளித்துவிடலாம்.

அதாவது, மேற்கண்டவாறு கூட்டிணைக்கப்பட்ட பிரிவுகள் அடங்கிய சட்டமானது நீக்கப்பட்டுவிட்டாலும் கூட, அச்சட்டத்தின் பிரிவுகள், தாம் கூட்டிணைவாகச் சேர்ந்த சட்டத்தின் கீழ் அமலிலேயே இருக்கும். வேறு விதத்தில் கூறுவதானால் அதன் நடப்பு நிலை தொடர்ந்து இருக்கும்.

எடுத்துக்காட்டு :

A என்பது ஒரு சட்டம்; XYZ என்பது அதன் பல சட்டப் பிரிவுகளில் சில என வைத்துக் கொள்வோம். B என்பது மற்றொரு சட்டம். மேற்படி A-யின் XYZ எனும் சட்டப் பிரிவுகள் B என்ற சட்டத்துடன் கூட்டிணைக்கப்படுகின்றன. பின்னர் A என்ற சட்டமே நீக்கப்பட்டு விடுகிறது. இருப்பினும், XYZ என்ற A-யின் சட்டப் பிரிவுகள், B என்ற சட்டத்தின் கீழ் தொடர்ந்து அமலிலேயே இருக்கும். அதாவது XYZ, B-யுடன் சேர்ந்த பிறகு A-யின் நீக்கம், XYZ-ன் செயல்பாட்டை துளியும் பாதிப்பதில்லை.

[iii] சட்டங்களின் புதுப்பிப்பு [Revival of Statutes]

7. "An Act is repealed by another Act and subsequently the latter Act is repealed.Does the Original Act revive? (ஒரு செய் சட்டம் மற்றொரு செய் சட்டத்தினால் தள்ளுபடி செய்யப்பட்டது. பின்னர் ஏற்படுத்தப்பட்ட **செய்சட்டம்** அதன் பிறகு தள்ளுபடி செய்யப்பட்டது. தொடக்கத்தில் இருந்த **செய்சட்டம்** திரும்பவும் மீட்டுயிர் பெறுகிறதா ?)

(அல்லது)

What is repeal? What are the effects of repeal? Is it true that when a repealing statute is repealed by a new statute the original statute stands revived abinitio? ('ரத்து' என்றால் என்ன? அதன் விளைவுகள் யாவை? ரத்து சட்டத்தினை புதியதொரு சட்டத்தின் மூலம் ரத்து செய்தால் முந்தைய சட்டம் தொடக்கத்திலிருந்தே புதுப்பிக்கப்படுகிறது என்பது உண்மையா?)

சட்டங்களின் புதுப்பிப்பு (Revival) :

'புதுப்பிப்பு' என்றாலே முடிந்து போன விஷயத்திற்கு மீண்டும் உயிர் கொடுத்தலாகும். அதாவது, 'மீட்டுயிர்', 'புத்துயிர்' தருதலாகும். அதுபோல், சட்டத்தில், நீக்கப்பட்ட ஒரு சட்டத்திற்கு மீண்டும் செயல்பட அதிகாரம் அளித்தால், அது **'சட்டத்தின் புதுப்பிப்பு'** எனப்படுகிறது. அதாவது இறந்து போன ஒரு சட்டம், மீண்டும் உயிர்ப்பிக்கப்படுகிறது.

எவ்வாறு புதுப்பித்தல் நடக்கிறது ?

ஒரு சட்டம், மற்றொரு சட்டத்தால் நீக்கப்பட்டு விடுகிறது (Repealed). பிறகு அம்மற்றொரு சட்டமும் பிறிதொரு சட்டத்தால் நீக்கப்பட்டு விடுகிறது. இந்த இரண்டாவது நீக்கல், முதலாவதாக நீக்கப்பட்ட சட்டத்திற்கு மீண்டும் உயிர் தந்து புதுப்பிக்கிறது. ஆனால், அவ்வாறு புதுப்பிக்கப்படுவதற்கு முரணான கருத்து ஏதும் இரண்டாவது சட்டத்தை நீக்கும் சட்டத்தால் கூறப்பட்டிருக்கக் கூடாது.

இங்கிலாந்து நாட்டுச் சட்டம் என்ன கூறுகிறது ?

இங்கிலாந்து நாட்டின் 1889–ஆம் ஆண்டின் பொருள் விளக்கச் சட்டத்தின் (Interpretation Act, 1889) 11(1)–வது பிரிவானது, 1850–ஆம் ஆண்டிற்குப் பிறகு இயற்றப்பட்ட ஒரு சட்டமானது, ஏற்கனவே ஒரு சட்டத்தை நீக்குதல் செய்து விட்ட மற்றொரு சட்டத்தை நீக்கி விட்டால், அது முதலில் நீக்கம் செய்யப்பட்ட சட்டம் எதனையும் மீண்டும் புதுப்பித்து விட்டதாகப் பொருள் கொள்ளலாகாது, எனக் கூறுகிறது; ஆனால், அதே சமயத்தில் அச்சட்டத்தில் அவ்வாறு புதுப்பித்தலாக பொருள் கொள்ளலாம் எனச் சொற்கள் இருப்பின், முதன்முதலில் நீக்கப்பட்ட சட்டத்திற்கு மீண்டும் உயிர் வந்துவிடும், என மேலும் கூறுகிறது.

இந்தியச் சட்டம் என்ன கூறுகிறது ?

நமது நாட்டைப் பொறுத்தவரை, 'சட்டங்கள் புதுப்பித்தல்' குறித்து 1897–ஆம் ஆண்டின் பொதுச் சொல் விளக்கச் சட்டத்தின் (The General Clauses Act, 1897) **7–வது பிரிவு** பின்வருமாறு கூறுகிறது. அதன்படி, மேற்படி 7–வது பிரிவின் முதல் உட்பிரிவானது, மேற்படி பொதுச் சொல் விளக்கச் சட்டம் தொடங்கிய பிறகு இயற்றப்பட்ட மத்தியச் சட்டமோ அல்லது ஒழுங்கு முறை விதியோ, புதுப்பிப்பு தொடர்பாக, அது முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ இருப்பினும் கூட, அச்சட்டம் முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ புதுப்பிக்கப் பட்டுள்ளது என்பதை வெளிப்படையாகக் குறிப்பிட வேண்டியது அவசியம், என்று கூறுகிறது.

அதற்கடுத்த இரண்டாவது உட்பிரிவானது, மேற்படி 7–வது பிரிவு, 1868–ஆம் ஆண்டு ஜனவரி மாதம், 3–ஆம் தேதிக்குப் பின்னர் இயற்றப்பட்ட அனைத்து மத்தியச் சட்டங்களுக்கும் பொருந்தும் என்றும், 1887–ஆம் ஆண்டு ஜனவரி மாதம், 14–ஆம் தேதியிலோ அல்லது அதற்குப் பின்னிட்டோ இயற்றப்பட்ட அனைத்து

ஒழுங்குமுறை விதிகளுக்கும் பொருந்தும் என்றும் கூறுகிறது.[1] அதாவது, **மேற்படி 7–வது பிரிவின் சாரம்சம் என்னவென்றால், ஒரு சட்டம் புதுப்பிக்கப்பட்டது என்றால், அது குறித்து தெளிவாகக் குறிப்பிடப்பட வேண்டும், என்பதுதான்.**

அதே சமயத்தில், மேற்படி 1897ஆம் ஆண்டின் பொதுச் சொல் விளக்கச் சட்டத்தின் 6(ய) பிரிவானது, மேற்கண்ட சட்டம் தொடங்கியதற்குப் பின்னர் இயற்றப்பட்ட மத்தியச் சட்டமோ அல்லது ஒழுங்குமுறை விதியோ அல்லது அச்சட்டமோ அமலில் இருக்கும் எச்சட்டத்தையாவது நீக்கினாலோ அல்லது இயற்றப்படவுள்ள எச்சட்டத்தையாவது நீக்கினாலோ, முரண்பாடான கருத்து ஒன்றும் காணப்படாத வரையில், அந்நீக்கமானது செயல்பாட்டிற்குள் வரும் காலத்தில், அமலில் இல்லாத எதையும் அல்லது நடப்பில் இருக்கின்ற எதையும், அந்நீக்கம் புதுப்பித்ததாகக் கொள்ளக் கூடாது, என்று கூறுகிறது.

அதாவது ஒரு விஷயம் ஏற்கனவே இருந்து, அது இறந்து விட்டிருந்தால் தான், 'புதுப்பிப்பு' என்ற பேச்சுக்கே இடம் ஏற்படுகிறது. இதை விடுத்து **ஆரம்பம் முதலே இல்லாத ஒன்றிற்கு புத்துயிர் கொடுக்க வேண்டியதில்லை. அத்துடன் உயிருடன் உள்ள விஷயத்திற்கு மீண்டும் உயிர் கொடுக்க வேண்டுமென்பதும் இல்லை.** இதைத்தான் சட்டத்தைப் பொறுத்தவரை, மேற்படி பிரிவு 6(a) மேற்கண்ட வாறு வலியுறுத்துகிறது.

Ameer-un-Nissa Begum v. Mahboob Begum[2]

மேற்படி வழக்கில், 1897ஆம் ஆண்டின் பொதுச் சொல் விளக்கச் சட்டத்தின் 7–வது பிரிவை பின்பற்றி உச்ச நீதிமன்றம் தீர்ப்பு வழங்குகையில், அது பின்வருமாறு கூறியது. அதன்படி, எப்பொழுது ஒரு சட்டத்தை நீக்கி இயற்றப்பட்ட மற்றொரு சட்டமே, பிறிதொரு சட்டத்தால் நீக்கப்பட்டுவிடும் பொழுது, அவ்வாறு நீக்கம் செய்கின்ற சட்டத்தின் மொழி நடையில் வெளிப்படையாக கூறப்பட்டிருந்தாலொழிய, முதன்முதலாக நீக்கம் செய்யப்பட்ட சட்டம் மீண்டும் புதுப்பிக்கப்பட்டு விடுகிறது என்று பொருளல்ல, என உச்ச நீதிமன்றம் கூறியது.

அதாவது புதுப்பித்தல் தானாக ஏற்பட்டுவிடுவதில்லை; அது குறித்து நீக்கம் செய்யும் சட்டத்தில் வெளிப்படையாகக் கூறப்பட்டிருந்தால்தான், புதுப்பித்தலே ஏற்படுகிறது, என்று உச்ச நீதிமன்றம் மேற்படி வழக்கில் வலியுறுத்தியது.

---

1. அதாவது பொதுச் சொல் விளக்கச் சட்டம் 1897–ல் இயற்றப்பட்டது. பிரிவு7(1)ன்படி இதற்குப் பின்னிட்ட மத்தியச் சட்டங்களுக்கும் ஒழுங்கு முறை விதிகளுக்கும் பிரிவு 7(2)ன் படி 3–1–1868 பின்னிட்ட மத்தியச் சட்டங்களுக்கும், 14–1–1887ம் தேதியிலோ அல்லது அதற்குப் பின்னிட்டோ இயற்றப்பட்ட ஒழுங்கு முறை விதிகளுக்கும் பிரிவு 7 கூறும் கட்டுப்பாடு பொருந்தும்.

2. A.I.R. 1955 S.C. 352

(ஈ) தொகுக்கும் சட்டமும் சேர்க்கும் சட்டமும் [Codifying and Consolidating Statute]

8. Explain Consolidating Statute.Distinguish it from Codifying Statute. (சேர்க்கும் செய்சட்டத்தை விளக்கி தொகுப்பு செய்சட்டத்தினின்று வேறுபடுத்திக் காட்டுக.)

(அல்லது)

What is meant by a Consolidating Statute? How does it differs from a Codifying Statute ? (சேர்க்கும் செய்சட்டம் என்பது யாது? அது தொகுப்பு செய் சட்டத்தினின்று எங்ஙனம் வேறுபடும் ?)

(அல்லது)

Bring out clearly the difference between Consolidating Statute and Codifying Statute. (சேர்க்கும் செய் சட்டத்திற்கும், தொகுப்பு செய் சட்டத்திற்கும் உள்ள வேறுபாட்டைத் தெளிவாக எடுத்துக் கூறவும்.)

(அல்லது)

Codification - Write short notes. (விதித் தொகுப்பு – சிறு குறிப்பு எழுதுக.)

(அல்லது)

Consolidation - Write short notes. (ஒருங்கிணைப்பு – சிறு குறிப்பு எழுதுக.)

(அல்லது)

Consolidation and codification - Write short notes. (ஒருங்கிணைத்தல் மற்றும் சட்டத்தை தொகுத்தல் – சிறு குறிப்பு எழுதுக.)

சேர்க்கும் சட்டங்கள் அல்லது சேர்க்கும் செய் சட்டங்கள் (Consolidating Statutes) - விளக்கம் :

ஒரே சட்டத்தில், அச்சட்டத்தின் உள்ளடக்கம் தொடர்பான பல சட்டங்களையோ அல்லது பல சட்டங்களில் உள்ள சட்டப் பிரிவுகளையோ சேர்த்துக் கூறும் சட்டங்கள், 'சேர்க்கும் சட்டங்கள்' (Consolidating Statutes) எனப்படும்.

அறிஞர் மேக்ஸ்வெல் (Maxwell) தரும் வரையறை :

அறிஞர் மேக்ஸ்வெல் அவர்களின் வரையறைபடி, "ஒரு குறிப்பிட்ட தலைப்பு குறித்து பல சட்டங்களில் கூறப்பட்டுள்ள வகைமுறைகளை சேகரித்து, அவற்றில் சிறிய அளவிலான மாற்றங்களையும் மற்றும் மேம்பாடுகளையும் மட்டும் செய்து பாராளுமன்றத்தின் ஒரே சட்டத்தில் சேர்த்துக் கூறும் சட்டமே, சேர்க்கும் சட்டமாகும்"[1] என்கிறார்.

உதாரணம் :

நுகர்வோர் பாதுகாப்புச் சட்டத்தில் (Consumer Protection Act) முற்றுரிமை வாணிப தடுப்புச் சட்டத்தின் (Monopolies Restrictive Trade Practices Act) வகைமுறைகள் சேர்க்கப்பட்டுள்ளன.

தொகுக்கும் சட்டங்கள் அல்லது தொகுப்புச் சட்டங்கள் (Codifying Statutes) - விளக்கம் :

சட்ட வகைமுறைகளை முறையான வடிவில் தொகுத்து வழங்கும் சட்டங்கள், "தொகுக்கும் சட்டங்கள்" **(Codifying Statutes)** எனப்படுகின்றன.

அறிஞர் மேக்ஸ்வெல் (Maxwell) தரும் வரையறை :

அறிஞர் மேக்ஸ்வெல் அவர்களின் வரையறைபடி, "ஒரு குறிப்பிட்ட விஷயம் குறித்த சட்டம் முழுவதையும் உள்ளடக்கி கூற முனையும் சட்டமே தொகுக்கும் சட்டமாகும்; அதில் சட்டம் வரைபவர், சம்பந்தப்பட்ட சட்டத்திற்கு முன்பிருந்த சட்ட வகைமுறைகள் மற்றும் அவ்விஷயத்திற்கு தொடர்பான பொதுச் சட்ட விதிகள் ஆகிய இரண்டையும் உள்ளடக்கி கூற விழைகிறார்"[2] என்று குறிப்பிடுகிறார்.

உதாரணம் :

உரிமையியல் நடைமுறைச் சட்டம் (Civil Procedure Code), குற்றவியல் நடைமுறைச் சட்டம் (Criminal Procedure Code), இந்திய தண்டனைச் சட்டம் (Indian Penal Code), சொத்துரிமை மாற்றுச் சட்டம் (Transfer of Property Act) ஆகியன.

---

1. A consolidating statue is one which collects the statutory provisions relating to a particular topic, and embodies them in a single Act of Parliament making only minor amendments and improvements - **Maxwell.**

2. A codifying statute is one which purports to state exhaustively the whole of law upon a particular subject, the drafts man attempting to subsume in his code both pre-existing statutory provisions (as in Consolidation Act) and also the common law rules relating to the matter - **Maxwell.**

தொகுக்கும் சட்டத்தின் முக்கிய அம்சங்கள் :

ஒரு சாதாரண சட்டத்திலிருந்து வேறுபடும் விதமாக, தொகுக்கும் சட்டமானது பின்வரும் சில முக்கிய அம்சங்களைக் கொண்டுள்ளன. அவை,

1. எதற்காக இயற்றப்பட்டதோ அவ்விஷயம் குறித்து அமலில் உள்ள அனைத்துச் சட்ட வகைமுறைகளையும் ஒருங்கே முழுமையாகக் கொண்டது.

2. தருக்கரீதியாகவும், விஞ்ஞானப்பூர்வமாகவும் மற்றும் எளிதான வடிவிலும் அமைக்கப்பட்டது.

3. தெளிவானது மற்றும் நீண்ட சொற்றொடர்களையும் குழப்பத்தையும் தவிர்க்கக்கூடிய சுருக்கமான வாக்கிய அமைப்பு.

ஒரு தொகுக்கும் சட்டம் முழுமையானதா ?

அனைத்து சட்டப் பிரச்சனைகளையும் தீர்க்கக்கூடிய விதத்தில் ஒரு சட்டத் தொகுப்பு கொண்டுவரப்பட வேண்டும், என்பது சட்ட அறிஞர்களின் நீண்ட நாளைய கனா. ஆனால் இது நனவாக வாய்ப்பில்லை. இனிமேல் அப்படிப்பட்ட ஒரு முழுமையான சட்டத் தொகுப்பை செய்ய இயலாது. ஏனென்றால், தொகுக்கப்பட்ட சட்டங்களிலும் சில இடங்களில் தெளிவின்மை இருப்பதுண்டு. முரண்பாடுகள் தெரிவதுண்டு. எவ்வளவு திறமையுடன் சட்டங்களின் வாசகம் வரையப்பட்டாலும், எதிர்காலத்தில் எழக்கூடிய எல்லா வழக்குகளுக்கும் பொருந்தும் விதிக் கொள்கைகளை அது கொண்டிருத்தல் இயலாது. இந்நிலையில் சட்டத் தொகுப்பில் உள்ள வாசகங்களின் பொருளை விளக்கும் வகையிலும், முரண்பாடுகளை நீக்கும் முறையிலும், வழக்குகளில் வழங்கப்படும் தீர்ப்புகளின் காரணமாக தீர்ப்பு நெறிச் சட்ட விதிகள் (Case Laws) பல எழலாம். இவ்வாறு, தொகுக்கும் சட்டத்தை ஒட்டி தீர்ப்பு நெறிச் சட்ட விதிகள் பெருகலாம். மீண்டும் இவ்விதிகளையும் உள்ளடக்கும் வகையில் சட்டத் தொகுப்பை சீரமைக்கும் தேவை ஏற்படும். சட்ட வளர்ச்சியில் இது தொடர்ந்து நடக்க வேண்டிய முயற்சியாகும். சொல்லப்போனால், நமது உரிமையியல் நடைமுறைச் சட்டமோ, சொத்துரிமை மாற்றுச் சட்டமோ ஒரு முழுமையான சட்டத் தொகுப்பன்று. அச்சட்டத் தொகுப்பில் வராத விஷயங்கள் குறித்து நீதிமன்றங்கள் தீர்மானிக்க வேண்டியிருந்தால், நீதி, நேர்மை மற்றும் நன்மனச்சாட்சியின்படி செயலாற்றுகின்றன.

சேர்க்கும் சட்டம், தொகுக்கும் சட்டம் - வேறுபாடுகள் :

சேர்க்கும் சட்டம் மற்றும் தொகுக்கும் சட்டம் ஆகிய இரண்டும் சில சமயங்களில் ஒரு பொருளில் பயன்படுத்தப்பட்டாலும், இவை இரண்டிற்கும் பின்வரும் சில வேறுபாடுகள் உள்ளன. அவை,

சேர்க்கும் சட்டம் (Consolidating Statute)	தொகுக்கும் சட்டம் (Codifying Statute)
1. ஒரே சட்டத்தில், அதன் உள்ளடக்கம் தொடர்பாக பிற சட்டங்களில் கூறப் பட்டிருக்கும் வகைமுறைகள் இங்கு சேர்க்கப்படுகின்றன.	ஒரு விஷயம் தொடர்பாக கூறப் பட்டிருக்கும் சட்ட விதிகள் முழுவதும் ஒரே சட்டத்தின் கீழ் இங்கு தொகுக்கப் படுகிறது.
2. இங்கு பல சட்டங்களில் கூறப் பட்டிருக்கும் சட்ட வகைமுறைகள், ஒரு சட்டத்தில் சேர்க்கப்படுகின்றன.	இங்கு சட்டமானது முறையான வடிவில் தொகுக்கப்படுகிறது.
3. இங்கு சட்டத்தின் ஒரு விஷயத்திற்கு, அவையொத்தவாறு பிற சட்டங்களில் உள்ள விஷயங்கள் சேர்க்கப் படுகின்றன.	இங்கு ஒரு விஷயம் குறித்த அனைத்து சட்ட வகைமுறைகளும் ஒன்றாக தொகுக்கப்படுகின்றன.
4. இது இயற்றுமுறைச் சட்டங்களைக் குறித்து மட்டுமே செய்யப்படுகிறது.	இது ஒரு விஷயம் குறித்த சட்டம் முழுவதையும், இயற்று முறைச் சட்டம் அல்லது இயற்றா பொது முறைச் சட்டம் ஆகிய அனைத்தும் ஒரு முறையான வடிவில் தகுந்த திட்டத்துடன் உள்ளடக்கி செய்யப்படுவதாகும்.
5. இதன் எல்லை குறுகியது (Narrower).	இதன் எல்லை பரந்தது (Wider).
6. இது, தொகுத்தலை உள்ளடக்காது.	இது, சேர்த்தலையும் உள்ளடக்கும்.

2

சட்டமியற்றல்
[Legislation]

9. What is meant by Legislation? Explain its kinds (சட்டமியற்றல் என்றால் என்ன? அதன் வகைகளை விளக்குக.)

(அல்லது)

Supreme Legislation - Write short notes. (உச்ச சட்டம் – சிறு குறிப்பு எழுதுக.)

சட்டமியற்றல் (Legislation) - விளக்கம்:

மக்களின் நல வாழ்விற்கு ஏற்ற வகையில் அவர்கள் வாழ்க்கை முறை அமைதல் வேண்டும்; அவ்வாறு அமைவதற்கு உற்ற சாதனங்களாக உள்ளவையே சட்டங்களாகும். அதாவது, மக்களின் உரிமை மற்றும் கடமைகளை எடுத்தியம்பிட, அவர்களை நெறிப்படுத்தி அதன் மூலம் அவர்களின் நலத்தை காப்பதே சட்டத்தின் பணியாகிறது. இத்தகு சட்டங்கள், அரசியல் முறை வளர்ந்துள்ள ஒவ்வொரு நாட்டிலும் தகுந்த சட்டமன்றத்தால் இயற்றப்படுகிறது. அறிஞர் சால்மண்ட் அவர்கள், **"தக்க அதிகாரம் பெற்ற ஆள்வையால் சட்ட விதிகள் சாற்றப் பெறுகின்றன; இதுவே சட்டம் இயற்றுதலாகும்"** என்கிறார்.

இவ்வாறு இயற்றப்படும் சட்டங்கள், 'செய் சட்டங்கள்' (Statute Laws), 'இயற்றுமுறைச் சட்டங்கள்' (Enacted Laws), 'எழுதப்பெற்ற சட்டங்கள்' (Written Laws) போன்ற பலவிதமான பெயர்களால் வழங்கப் பெறுகின்றன; ஆனால் அவை குறிப்பிடும் பொருள் மேற்கண்டதே. இவற்றையெல்லாம் நாம் சென்ற அத்தியாயத்தின் தொடக்கத்திலேயே விரிவாகக் கண்டோம்.

சட்டமியற்றலின் வகைகள் (Kinds of Legislation):

சட்டமியற்றலை இரு பெரும் பிரிவாகப் பிரிக்கலாம். அவை வருமாறு.

(1) உச்ச முறையிலான சட்டமியற்றல் (Supreme Legislation):

ஒரு நாட்டின் உயர் அதிகார அதிகாரம் பெற்ற அல்லது இறைமையதிகாரம் (Sovereign Power) பெற்ற அமைப்பால் நேரடியாக இயற்றப்படும் சட்டங்கள், 'உச்ச முறையிலான சட்டமியற்றலின்' விளைவே ஆகும். இந்தியா நாட்டின் உச்ச அதிகாரம் பெற்ற சட்டமியற்றும் அமைப்பு பாராளுமன்றம் ஆகும். இது பின்பற்றும் சட்டமியற்றல் முறையே, உச்ச முறையிலான சட்டமியற்றல் ஆகும். இதன் சட்டத்தை இதன் கீழான அமைப்பு எதுவும் இரத்து செய்ய முடியாது. அதுபோல் மாற்ற அல்லது கட்டுப்படுத்த முடியாது (நீதித்துறை தவிர).

(2) கீழமை சட்டமியற்றல் (Subordinate Legislation):

மேற்படி உயர் அதிகாரம் படைத்த அமைப்பைத் தவிர, மற்ற அமைப்புகளால் செய்யப்படும் சட்டமியற்று முறைக்கு 'கீழமை சட்டமியற்றல்' என்று பெயர். இது, மேற்கண்ட உச்ச முறையிலான சட்டமியற்றலின் கட்டுப்பாட்டிற்குட்பட்டது. அந்த கீழமை அமைப்புகள், தங்களுக்குரிய சட்டமியற்றும் அதிகாரத்தை நாட்டின் உயர் அதிகாரம் பெற்ற அமைப்பிடமிருந்து உட்கிடையாகவோ அல்லது வெளிப் படையாகவோ ஒப்படைக்கப் பெறுகிறது (delegation). எடுத்துக்காட்டாக, பல்கலைக் கழகங்கள், மாநகராட்சி அமைப்புகள் ஆகியவை தாங்களாகவே தங்களையும், தங்கள் உறுப்பினர்களையும் வழிநடத்திக் கொள்ளும் பொருட்டு விதிகள், துணை விதிகள், கட்டளைகள் ஆகியவற்றை செய்து கொள்கின்றன. இம்முறையிலான சட்டமியற்றலை, அறிஞர் சால்மண்ட் பின்வருமாறு அய்ந்து முக்கிய வகைகளாகப் பிரிக்கிறார். அவை,

(1) காலனி சட்டஆக்கம் (Colonial Legislation): அரசின் ஆதிக்கத்திற் குட்பட்டு, சுயாட்சி நடத்திக் கொள்ளும் அதிகாரம் பெற்ற நிலப்பரப்புகள் 'காலனிகள்' எனப்படுகின்றன. இவை தங்களுக்குரிய சட்டங்களை, அரசின் இயற்றும் சட்டங் களுக்குட்பட்டு இயற்றிக் கொள்ளலாம்.

(2) நிருவாகத்துறை சட்டமியற்றல் (Executive Legislation): நாட்டின் உச்ச அதிகாரம் பெற்ற சட்டமியற்று அமைப்பு ஒப்படைத்த அதிகாரங்களின் கீழ், நிருவாகத்துறையினர் தங்களுக்குரிய சட்டங்களைச் செய்வது, இவ்வகையாகும்.

(3) நீதிமுறை சட்டமியற்றல் (Judicial Legislation): உயரதிகாரம் பெற்ற நீதிமன்றங்கள், தங்கள் நடைமுறைகளை ஒழுங்குபடுத்திக் கொள்வதற்காக தாங்களே விதிகளை இயற்றிக் கொள்வது, நீதிமுறை சட்டமியற்றல் எனப்படுகிறது.

(4) நகராட்சி சட்டஆக்கம் (Municipal Legislation): மாவட்டங்களின் நிருவாகத்திற்கு ஏற்ற துணை விதிகளை இயற்ற நகராட்சிகள் அதிகாரம் பெற்றவை.

(5) தன்னாட்சியமைப்பு சட்டமியற்றல் (Autonomus Legislation): பல்கலைக்கழகங்கள், இரயில் நிறுவனங்கள் போன்ற தன்னாட்சி பெற்ற அமைப்புகள், தங்களுக்குரிய விதிகளை இந்த வகையின் கீழ் இயற்றிக் கொள்கின்றன.

சட்டப் பொருள் விளக்கம் [Interpretation of Statutes]

(அ) சட்டப் பொருள் விளக்கம் – பொருள், முக்கியத்துவம், அவசியம் மற்றும் நோக்கம் [Interpretation of Statute - Meaning, Significance, Need and Object]

10. State the value of the study of interpretation of statute in the context of its nature and scope. (செய் சட்டத்தின் பொருள் விளக்கம் காணுவதின் இயல்பு மற்றும் அளாவுகை கொண்டு அதனை சூழ்நிலை ஆய்வு செய்வதின் பயன்களைக் கூறுக.)

(அல்லது)

Explain the object and scope of Interpretation of Statutes. (இயற்று முறைச் சட்ட பொருள் காண்தலின் நோக்கம் மற்றும் அளாவுகையினை விளக்குக.)

(அல்லது)

What do you meant by interpretation of statute ? State its significance and need. (சட்டப் பொருள் விளக்கம் என்பதால் நீவிர் அறிவது யாது ? அதன் முக்கியத்துவத்தையும் அவசியத்தையும் குறிப்பிடுக.)

(அல்லது)

What is the meaning of the term Interpretation? Explain the importance and need for interpretation of statute ? ('சட்டப்

பொருள் விளக்கம்' என்ற சொல்லின் அர்த்தம் என்ன? சட்டப் பொருள் விளக்கத்தின் முக்கியத்துவம் மற்றும் அவசியத்தை விளக்குக.)

(அல்லது)

Need for rules of interpretation - Write short notes. (பொருள் விளக்க விதிகளின் தேவை – சிறு குறிப்பு எழுதுக.)

(அல்லது)

Value of the study of interpretation of Statutes- Write short notes. (செய் சட்டத்தின் பொருள் விளக்கம் காணுவதின் பயன்களைக் கூறுக.)

முன்னுரை :

மனிதன் காட்டுமிராண்டியாக வாழ்ந்த நிலை மாறி, தங்களை நெறிப் படுத்திக் கொள்ள சில விதிகளை வகுத்துக் கொண்டான். நாகரிகம் வளர்ச்சியடைய ஆரம்பித்த பின்னர், அரசியலமைப்பின் தேவை எழுந்தது. அரசியலமைப்பானது முறையாக சட்டங்களை இயற்றுவதற்கு சட்டமன்றத்திற்கு அதிகாரம் வழங்கியது. இதனால் மக்களை நெறிப்படுத்தும் சட்டங்கள் இயற்றப்பட ஆரம்பித்தன. 'திருடுவது பாவம்' என்று இருந்த அறநெறி, 'திருடினால் தண்டனையுண்டு' என்ற சட்ட விதியாக இயற்றப்பட்டது. இன்று இவ்வாறு பல விஷயங்களுக்காக சட்டங்கள் அரசியலமைப்பு வளர்ந்துள்ள ஒவ்வொரு நாட்டிலும் இயற்றப்பட்டுக் கொண்டே வருகின்றன. இந்நிலையில் தான் இயற்றப்பட்ட சட்டங்களுக்கு பொருள் விளக்கம் அளிக்கப்பட வேண்டிய அவசியமும், தேவையும் எழுந்தது. சற்று விரிவாக வருமாறு.

ஏன் சட்டப் பொருள் விளக்கம் காண வேண்டும்? (அல்லது) இயற்றப்பட்ட சட்டத்தின் பொருள் விளக்கம் காணுவதின் இயல்பு மற்றும் அளாவுகை (அல்லது) அவசியம் (Nature, Scope and Need of Interpretation) :

மேற்கண்டவாறு சட்டங்கள் இயற்றப்படுவதற்கு ஆரம்பிக்கப்பட்ட பின்னர், அதன் ஆட்சிக்கு உட்பட்ட வழக்குகளில் சில தனிப்பட்ட அம்சங்களுக்குத் தீர்வு காண அந்தச் சட்டத்தில் வழிவகைகள் வெளிப்படையாக இல்லாமல் போனது.

ஆகவே, இயற்றப்பட்டிருக்கும் சட்டத்திற்கு பொருள் விளக்கம் கண்டு, அதில் பொதிந்திருக்கும் உண்மை நோக்கத்தினை அறிந்து, சம்பந்தப்பட்ட வழக்கிற்கு தீர்வு காணவேண்டிய அவசியம் ஏற்பட்டது. மேலும் தனிப்பட்ட சில வழக்குகள், அந்தச் சட்டத்தின் ஆளுகைக்கு உட்பட்டு வருபவையா என்ற அய்யங்கள் எழுப்படும் பொழுது நீதிமன்றங்கள் சட்டங்களுக்கு விளக்கம் காண முற்பட வேண்டியுள்ளது.

மக்களாட்சி முறையில் சட்டமன்றங்கள் சட்டங்களை இயற்றும்போது, தாங்கள் அதன் மூலம் கட்டுப்படுத்த இருக்கின்ற தற்போதைய சூழ்நிலைகள் மற்றும் வாய்ப்புகள் (circumstances and instances), எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய சாத்தியக்கூறான நிகழ்ச்சிகள் மற்றும் அவற்றைத் தீர்ப்பதற்குண்டான வழிவகைகளை திட்டவட்டமாக, தெள்ளத் தெளிவாக கூறிவிட்டால், நீதிமன்றங்களின் பணி மிகவும் எளிதாகிவிடும்.

ஆனால், இது இயலாத ஒன்று. எல்லாவற்றையும் எதிர்பார்க்கும் வாய்ப்புகள் இருந்துவிட்டாலும், அவற்றை எளிதான மொழி நடையில் எழுதி, சந்தேகமில்லாமல் செய்வது அசாதாரணமான, இயலாத பணியாகும். மேலும் அது மிகப் பரந்தும், பொதுவான கருத்தும் கொண்டதாக (Wide and general meaning and makes it difficult for particular application) அமைந்து விடுவதால், எடுத்தாள்வது எளிதாக இருப்பதில்லை. அதாவது, ஒரு வழக்கு நீதிமன்றத்தின் முன் வரும்போது, முற்றிலும் அந்த வழக்குக்கு உரித்தான முறையில் ஏற்படுத்தப் பட்ட வகைமுறை (Provision) சட்டத்தில் இருப்பதில்லை. அப்படி இருப்பின், நீதிமன்றத்தின் பணி இயந்திரமயமாகிவிடும். கொடுக்கப்படும் தீர்ப்பு சரியான, முறையான ஒன்றாக அமையாது.

எனவே, இயற்றப்பட்ட சட்டத்திற்கு பொருள் விளக்கம் காண வேண்டியது அவசியமாகிறது. சற்று விரிவாகச் செல்லும் முன்னர், சட்டப் பொருள் விளக்கத்தின் பொருளை நாம் இங்கே காண வேண்டியுள்ளது.

சட்டப் பொருள் விளக்கம் - பொருள் (Meaning) (அல்லது) சட்டப் பொருள் விளக்கத்தின் இரு வகைகள் (Kinds) :

சட்டப் பொருள் விளக்கத்தின் பொருளை, அதன் இரு வகைகளை காண்பதின் வாயிலாக எளிதாக அறிந்து கொள்ளலாம். அவை,

1. சட்ட வாசகத்திற்கு இணங்கப் பொருள் காணல் (Litra Legis) :

இவ்வகையின்படி, ஒரு சட்ட வாசகத்திற்கு, அதன் சாதாரண மொழி இலக்கணத்தின் அடிப்படையில்தான் சொற்களின் பொருளைக் காண வேண்டும். சாதாரணச் சொற்களுக்கு அகராதியையும், தொழில் நுட்ப கலைச் சொற்களுக்கு (Technical Terms) அவற்றுக்கான அகராதிகளையும் பார்த்து சட்டத்தில் வரும் சொற்களின் பொருள் காணப்பட வேண்டும்.

மேலும், இவ்வகையில் சில சொற்கள் சிறப்புப் பொருளில் பயன்படுத்தப் பட்டிருந்தால், சம்பந்தப்பட்ட சட்டத்தில், 'வரையறைகள் பகுதியில்' (Definitions Clause) அச்சிறப்புப் பொருளின் விளக்கம் கூறப்பட்டிருக்கும். அதன்படி, அச் சொற்களுக்கு பொருள் காண வேண்டும். இதுவே சட்ட வாசகத்திற்கு இணங்கப் பொருள் கூறும் முறை எனப்படுகிறது.

ஆனால், இவ்வகையின் கீழ் ஒரு சட்ட வாசகத்திற்கு பொருள் விளக்கம் தர வேண்டுமென்றால், அச்சட்ட வாசகத்தில் உள்ள சொற்கள் எளிமையாகவும், தெளிவாகவும், சுற்றி வளைக்காமலும் ஒரே ஒரு கருத்தை குழப்பமில்லாமலும் வெளிப்படுத்துவதாக இருத்தல் வேண்டும்.

இதையே, ஜெர்விஸ் என்ற நீதிபதி[1], 'சட்டத்தின் சொற்கள் எளிமையாகவும், தெளிவாகவும் இருந்தால், அவற்றின் சாதாரணமான பொருளையே சட்டத்தின் பொருளாகக் கொள்ள வேண்டும்'[1] என்று வேறுவிதத்தில் குறிப்பிடுகிறார்.

இதனை 'தெளிவான பொருள் காணும் விதி' (Plain meaning rule) என்று அறிஞர் டயஸ் குறிப்பிடுகிறார்.

மேலும் இந்த வகையே 'இலக்கண மரபு குன்றாப் பொருள் விளக்க விதி' (Literal and Grammatical Rule of Interpretation) என்றும் ஆகிறது.[2]

2. சட்டமன்றத்தின் கருத்திற்கிணங்கப் பொருள் காணல் (Sententia Legis) :

இவ்வகையான பொருள் விளக்கம், நாம் மேலே கண்ட வகைக்கு, நேர் எதிர்மறையாக விளங்குவதாகும்.

சட்டப் பொருள் விளக்கமளித்தலின் முதல் வகையில், சட்ட வாசகத்திற்கு அதன் மொழி இலக்கணத்தின் அடிப்படையில் அகராதியில் பொருளைக் காண்கிறோம்.

ஆனால், இந்த இரண்டாவது வகையில் நிலையே வேறு. அதாவது, ஒரு சட்ட வாசகத்திற்கு அதன் மொழி இலக்கணரீதிப்படி அகராதிப் பொருளைக் கண்டு பொருள் விளக்கமளிக்கும் பொழுது, அது அச்சட்டத்தின் நோக்கத்திற்கே முரணாகவும், குழப்பமான விளக்கத்தைத் தருவதாகவும் இருப்பின் என்ன செய்வது?

இங்குதான், சட்டமன்றத்தின் கருத்தைக் கண்டு பொருள் விளக்கமளிக்கும் இவ்வகை உதவிக்கு வருகிறது. இங்கு, ஒரு சட்டத்தை இயற்றும் பொழுது சட்ட மன்றம் தனது மனதில் எந்தக் கருத்துடன் அச்சட்டத்தை இயற்றியதோ, அதுவே **'சட்டமன்றத்தின் கருத்து அல்லது உள்ளக்கிடக்கை'** (Intention of Legislature)[3] எனப்படுகிறது.

---

1. If the precise words used are plain and unambiguous, in our judgment we are bound to construe them in their ordinary sense - **Jervis C.J.**
2. சற்று விரிவாக இதே அத்தியாயத்தின் பிரிவு (எ)-யில், பக்கம் எண். 61-ல் காணலாம்.
3. சற்று விரிவாக இதே அத்தியாயத்தின் பிரிவு (ஆ)-யில், பக்கம் 38-ல் காணலாம்.

அதாவது எந்நோக்கத்திற்காக சட்டமன்றம் ஒரு குறிப்பிட்ட சட்டத்தை இயற்றியதோ, அதுவே அதன் கருத்தாகும். அந்நோக்கம், அச்சட்டத்தினுள்ளேயே பொதிந்துள்ளது. இதனைக் கண்டறிந்து பொருள் விளக்கமளிப்பதே, சட்ட மன்றத்தின் கருத்தைக் காணலாகும்.

இவ்வகையின்படி, ஒரு சட்ட வாசகத்திற்கு, அதன் அகராதிப் பொருளின்படி மேலெழுந்தவாரியாக அளிக்கப்படும் பொருள் விளக்கமானது, முரண்பட்டதாகவோ அல்லது தெளிவற்றோ இருப்பின், அச்சட்ட வாசகத்தை இயற்றும் பொழுது சட்டமன்றம் எதை மனதில் கருதிக் கொண்டு, அதனை இயற்றியது என்பதை அச்சட்டத்தினுள் பொதிந்துள்ள பொருளைக் காண்பதின் வாயிலாக அறிந்து, அதற்கொப்ப பொருள் விளக்கமளித்தலாகும்.

இதனை **'பொருள் விளக்கமளித்தலின் பொன் விதி' (Golden Rule of Interpretation)**[1] என்பார்கள்.

பொருள் விளக்கம் காணலும், பொருளமைதி காணலும் (Interpretation and Construction) :

பொருள் விளக்கம் காணலும் பொருளமைதி காணலும் பொதுவாக ஒரே கருத்தில் பயன்படுத்தப்படுகின்றன. மேலெழுந்த வாரியாக இரண்டும் ஒன்றே என்றும் கூறிவிடலாம். ஆனால், நுணுகிப் பார்க்கும் பொழுது, இரண்டிற்குமிடையே வேறுபாடுகள் இருக்கத்தான் செய்கின்றன.

பொருள் விளக்கமென்பது, ஒரு சட்டத்தில் (Statute), உயிலில் (Will), ஒப்பந்தத்தில் (Contract) அல்லது பிற எழுதப்பட்ட ஆவணங்களில் உள்ள வாசகங்களுக்கு, அவற்றிற்குண்டான சாதாரணமான மற்றும் இயற்கையான பொருளைக் கண்டறிந்து, விளக்கமளித்தலாகும். ஆனால் **பொருளமைதி காணலில்,** மேற்கண்டவை என்ன கருத்துடன் செய்யப்பட்டுள்ளது, அவற்றினுள் பொதிந்துள்ளது யாது என்பனவற்றை அறிந்து விளக்கமளித்தலாகும்.[2]

சட்டப் பொருள் விளக்கத்தின் பயன் அல்லது நோக்கம் (Value or Object of the study of interpretation of statutes) :

ஒரு சட்டத்தில் காணப்படும் வாசகங்கள் அந்த சட்டத்தை இயற்றிய சட்ட மன்றத்திற்கும், அந்த சட்டத்தை வழக்குகளில் பொருத்துப் பணியில் ஈடுபடும் நீதிமன்றங்களுக்கும் இடையிலான தகவல் தொடர்பு (medium of communication) ஆகும்.

---

1. சற்று விரிவாக இதே இரண்டாவது அத்தியாயத்தின் பிரிவு (எ) – யில், பக்கம் 65–ல் காணலாம்.
2. இந்த வினாவிற்கு 'பொருள் விளக்கம் காணலும் பொருளமைதி காணலும்' குறித்த மேற்படி பகுதியே போதுமானது. விரிவாக இதே அத்தியாயத்தின் பிரிவு (இ)–யில் காணலாம்.

ஒரு பிரச்சனை குறித்து சட்டமன்றத்தில் சட்டம் இயற்றப்பட வேண்டுமெனில், அது குறித்து சிந்திக்கப்படுகிறது. அதன் நன்மை – தீமைகள் விவாதிக்கப்படுகின்றன. இறுதியில் சாதாரண மொழியிலான இச்சிந்தனைகளும், விவாதங்களும் சட்ட மொழியில் வடிக்கப்படுகின்றன.

எவ்வளவு கவனத்துடன் சட்டங்கள் வரையப்பெற்றாலும், சில சமயங்களில் அதில் தவறுதல்கள் ஏற்படுவதுண்டு. எழுத்துப் பிழைகள் அல்லது வாசகப் பிழைகள் காரணமாக சட்ட வாசகத்தின் பொருள் விசித்திரமானதாக மாறி விடலாம். சட்டமன்றம் கருதிய பொருள் இதுவாக இருக்காது என்பது தெளிவாகவே தெரியும் சூழ்நிலை எழலாம். இந்நிலையில் அந்தப் பொருள் எவ்வாறு இருந்திருக்க வேண்டும் என்பதற்கு அச்சட்டத்தில் உள்ள வரையறைகளை (definitions) அல்லது பிற வகைமுறைகளைக் (provisions) கொண்டோ அல்லது சட்டமன்றத்தின் கருத்தைக் (intention of legislature) கொண்டோ பொருள் விளக்கமளிக்க வேண்டியுள்ளது.

இவ்வாறு பொருள் விளக்கமளித்தலின் வாயிலாக, அச்சட்ட வாசகத்திற்கு, சட்டத்தின் நோக்கத்திற்கியைந்த, சட்டமன்றத்தின் கருத்தை ஒட்டிய விளக்கம் பகரப்பட்டு, உண்மையான உயிரோட்டம் கொடுக்கப் படுகிறது. இதனால் சரியான நீதி வழங்கப்படுகிறது. சட்டத்தின் நோக்கம் நிலை நிறுத்தப்படுகிறது. இவ்வாறு, நீதியையும், நேர்மையையும் நிலை நிறுத்துவதில் சட்டப் பொருள் விளக்க முறையே மிக்க பயனைத் தருகிறது எனில், அது மிகையாகா.

முடிவுரை :

சட்டங்களுக்கு விளக்கம் காண முயலும் 'சட்டப் பொருள் விளக்கம்' எனும் இந்த அறிவியல், முற்றிலும் மாறுபட்ட ஓர் அனுபவமாகும். ஏனெனில், நாம் இங்கே எந்த ஒரு சட்டத் துறையைப் பற்றியோ அல்லது எந்த ஒரு குறிப்பிட்ட சட்டத்தைப் பற்றியோ ஆராய்வதில்லை. மாறாக, சட்டமன்றங்களால் இயற்றப்படும் சட்டங்களை நடைமுறைப்படுத்தும் பணியில் நீதிமன்றங்கள் கையாளும் நியதிகளையும், விதிகளையும்தான் காண்கிறோம்.

இவ்வாறு சட்டத்தினுள் பொதிந்துள்ள பொருளைக் காண்பதால், 'சட்டப் பொருள் விளக்கம்' என்பதை 'சட்டப் பொதிவு காண்பியல்'என்றும் அழைக்கலாம்.

-o0o-

(ஆ) சட்டமன்றத்தின் கருத்து [Intention of Legislature]

11. Legislative intention - Write short notes. (சட்டமன்றத்தின் கருத்து – சிறு குறிப்பு எழுதுக.)

(அல்லது)

What do you meant by Legislative intention ? Explain. (சட்ட மன்றத்தின் கருத்து என்பதால் நீவிர் அறிவது என்ன ? விளக்குக.)

(அல்லது)

"When the words of a Statute is clear and unambiguous, there is no need for any aid for interpretation". Discuss. ("செய் சட்ட வார்த்தைகள் தெளிவாகவும் ஒரு பொருளுடனும் இருக்கையில், பொருளைக் காண உதவும் காரணிகள் தேவையில்லை." விவாதிக்க.)

முன்னுரை :

சட்டப் பொருள் விளக்கம் இரு வகைப்படும். முதலாவதாக, சட்ட வாசகத்திற்கு இணங்கப் பொருள் காணல் (Litera Legis). இரண்டாவதாக, ஒரு சட்ட வாசகத்தைக் கடந்து வாசகத்திற்கு அப்பால் உள்ள சட்டக் கருத்தை – அதாவது, சட்டத்தை இயற்றிய சட்ட மன்றத்தின் கருத்தைக் காணல் (Sententia Legis). இவை இரண்டையும் நாம் சென்ற அத்தியாயத்தில் கண்டோம்.

ஒரு சட்ட வாசகமானது குழப்பமில்லாமல், தெளிவாக ஒரே ஒரு பொருளைத் தருவதாக இருப்பின், அதனை மொழி இலக்கணத்தின்படியும், அகராதிப் பொருளின்படியும், பொருள் கண்டு விளக்கமளிக்கலாம். ஆனால், அவ்வாசகமே தெளிவற்றும், சட்டத்தின் நோக்கத்திற்கு முரண்பட்டதாகவும், குழப்பமாகவும் இருப்பின், இங்கு அச்சட்ட வாசகத்திற்கு இணங்க அகராதிப் பொருளைக் கண்டு விளக்கமளிப்பது உரிய பயனைத் தருவதில்லை. மாறாக, அச்சட்டத்தை இயற்றும்பொழுது, சட்டமன்றம் எதைக் கருத்தில் கொண்டிருந்தது என்பதை அறிந்து அதற்கொப்ப பொருள் விளக்கமளிப்பதே தக்க தீர்வழிகளைத் தருவதாக உள்ளது. இதை, சற்று விரிவாகப் பின்வருமாறு காண்போம்.

சட்டமன்றத்தின் கருத்து - விளக்கம் :

ஒரு சட்டத்தை இயற்றும்பொழுது, சட்டமன்றம், தான் கருதியதையே சட்டமாக விளம்புகிறது. அதாவது, சட்டமன்றம் எந்த நோக்கத்துடன் அச்சட்டத்தை இயற்றியுள்ளதாக விளம்புகிறதோ, அதுவே அதன் கருத்தாக

உள்ளது. அதாவது சட்டமன்றத்தின் உள்ளத்தில் கிடந்துள்ள கருத்து எனப் படுகிறது. எனவே, இதனை **'சட்டமன்றத்தின் உள்ளக் கிடக்கை'** என்றும் கூறலாம்.

இங்கிலாந்து நாட்டில், சட்டப் பொருள் விளக்கமளித்தல் என்பது, சம்பந்தப்பட்ட சட்டத்தை இயற்றிய சட்டமன்றத்தின் உண்மையான கருத்து (true intention) என்ன என்பதைக் காண்பதே, அங்கு நிலவும் நியதியாக உள்ளது.

சட்டமன்றத்தின் கருத்தைக் காண்பதின் சிறப்பை **நீதிப்பெருமகனார் டென்னிஸ்** அவர்கள் பின்வருமாறு குறிப்பிடுகிறார். அஃதாவது, "வாசகப் பொருளை வைத்து நாங்கள் சட்டங்களின் பொருளமைதியைக் காண்பதில்லை. சட்டங்களின் நோக்கத்தையும் கருத்தையும் வைத்தே அதன் பொருளமைதியைக் காண்கிறோம்"[1].

'சட்டமன்றத்தின் கருத்தைக் காணல்' என்பதை 'அச்சட்டத்தினுள் பொதிந்துள்ள பொருளை வெளிக் கொண்டு வரல்' என்றும் கூறலாம். அதாவது, சட்ட வாசகத்தின் அகராதிப் பொருளைக் காண்பதைவிட, அதில் பொதிந்துள்ள பொருளைக் காண்பதாகும். (சட்டமன்றத்தின் கருத்தைக் காண்பதாகும்).

இதுவே அச்சட்டத்தை சரியாகப் புரிந்து கொள்ளும் முறையாகும். வேறு விதத்தில் கூறுவதானதால் **சட்ட உரையின் பொருளை விட, அதில் உறையும் பொருளைக் காண்பதே,** சட்டமன்றத்தின் கருத்தைக் காணலாகும்.

சட்டமன்றத்தின் கருத்தை அறியும் விதம் :

சட்ட வாசகத்திற்கு அதன் மொழி இலக்கணரீதிப்படி, அகராதிப் பொருளைக் காணும்பொழுது, அது குழப்பமானதாகவோ அல்லது தெளிவற்றோ இருப்பின், சட்டமன்றத்தின் கருத்தைக் காண வேண்டும், என்பதை நாம் மேற்சென்ற பத்தியில் கண்டோம். ஆனால், சட்டமன்றத்தின் கருத்தை எவ்வாறு அறிவது என்ற வினா இங்கு எழுந்தால் அதில் வியப்பொன்றுமில்லை.

சட்டமன்றத்தின் கருத்தை அறிய வேண்டுமெனில், அச்சட்டத்தின் குறிக்கோள் (aim), அளாவுகை (scope) மற்றும் அச்சட்டம் முழுவதிலும் வலியுறுத்தப்பட்டிருக்கும் மொத்த நோக்கம் (object of the whole Act) ஆகியவற்றை ஆராய வேண்டும். சுருங்கக்கூறின், அக்குறிப்பிட்ட சட்டம் இயற்றப் படுவதற்கு முன்பிருந்த நிலை மற்றும் எத்தீமையை அல்லது கேட்டை தடுப்பதற் கென்று அச்சட்டம் இயற்றப்பட்டது என்பதை கவனித்தறிய வேண்டும். இவை மட்டுமல்லாது, சட்டமன்றத்தின் கருத்தை அறிய உதவும், அச்சட்டத்தின் தலைப்பு, முகப்புரை, வரையறைகள் பகுதி, விளக்கப்பகுதி ஆகிய உட்பண்புக் கூறுகளையும் (Internal aspects or Internal aids)[2] மற்றும் அச்சட்டம் இயற்றப்படுவதற்கு உண்டான காரணங்கள் மற்றும் அதன் நோக்கம் குறித்த அறிக்கை, பாராளுமன்ற

1. We no longer construe Acts of Parliament according to their literal meaning: we construe them according to their object and intent - **Lord Denning.**

2. விரிவாக அத்தியாயம் 4-ல் காணலாம்.

விவாதங்கள் மற்றும் உரைகள், சரித்திரப் பின்னணி ஆகிய வெளிப்பண்புக் கூறுகளையும் (External aspects or External aids)[1] ஆராய்தல் வேண்டும். இறுதியாக, சட்டமன்றத்தின் கருத்திற்கு வலிமை கொடுக்கும் வகையில்தான் பொருள்விளக்கம் கொடுக்க வேண்டுமே தவிர, அதன் வலிமையைக் குறைத்து விடக் கூடாது. ஆனால், அச்சட்டத்தின் வாசகங்கள் (வார்த்தைகள்) தெளிவாகவும், ஒரு பொருளுடனும் இருக்கையில், பொருளை அறிய உதவும். மேற்படி கூறுகள் (காரணிகள்) ஏதும் தேவையில்லை. (When the words of a statute is clear and unambiguous, there is no need for any aid for interpretation). எனவே இங்கு சட்டமன்றத்தின் கருத்தைக் காண வேண்டியதில்லை. இலக்கண நீதிப்படி பொருள் அளித்துவிடலாம்.

சட்டமன்றத்தின் கருத்து தொடர்பாக உச்ச நீதிமன்றம் வழங்கிய சில முக்கியத் தீர்ப்புகள் :

K.P. Varghese v. I.T.C.[2]

சட்டமன்றத்தின் கருத்தை கண்டறிவதின் முக்கியத்துவத்தை உச்ச நீதிமன்றம் மேற்படி வழக்கில் கூறியது. அதன்படி,

"இயற்றப்பட்ட சட்டம் ஒன்றிற்கு பொருள் விளக்கமளிக்கும் பணியானது இயந்திரத்தனமானதல்ல. ஒரு சட்ட வாசகத்தின் சொற்கள், கணிதக் குறிகளின் துல்லியமான இயல்பைப் பெற்றுள்ளன. ஆனால் ஒரு கணித சூத்திரத்தை படிப்பதைக் காட்டிலும், சட்டத்திற்கு பொருள் விளக்கமளிக்கும் பணி அதி துல்லியமானது. சட்டமன்றம் உபயோகப்படுத்தியுள்ள மொழி நடையிலிருந்து, அதன் நோக்கத்தை கண்டறியும் ஒரு முயற்சியே, பொருள் விளக்கமளித்தலாகும். ஆனால், மனித சிந்தனைகள் அனைத்தும் அம்மொழி நடையில் தெளிவாக இருக்கும் என்பதையோ அல்லது அச்சட்டத்தின் ஒவ்வொரு பிரிவும் அதி துல்லியமாகவும் மிகத் தெளிவாகவும் வரையப்பட்டிருக்கும் என்பதையோ எதிர்ப்பார்ப்பது வீணானதாகும். எனவே, நீதிமன்றங்கள் மொழி நடையின் இலக்கணத்திற்கொப்ப பொருள் விளக்கமளிப்பதை விடுத்து, சட்டமன்றம் அச்சட்டத்தை இயற்றும் பொழுது எந்நோக்கத்தை கருத்தில்கொண்டு மற்றும் எதற்காக இயற்றியது என்பதை அறிந்தும், அச்சட்டத்தின் இடம், பொருள், ஏவல் ஆகியவற்றை உணர்ந்தும் பொருள் விளக்கமளிக்க வேண்டும். ஒரு சட்டப் பிரிவிற்கு மொழி இலக்கணநீதிப்படி சாதாரணமாக அளிக்கப்படும் பொருள் விளக்கமானது, வெளிப்படையான ஒரு அடிமுட்டாள்தனத்திற்கோ (a manifestly absurd) அல்லது அநீதியான விளைவிற்கோ (unjust result) அழைத்துச் சென்றால், நீதிமன்றமானது சட்ட மன்றம், அச்சட்டத்தில் பயன்படுத்தியுள்ள மொழி நடையைக் கூட மாற்றியமைத்து பொருள் விளக்கமளிக்கலாம்....."

1. விரிவாக அத்தியாயம் 4-ல் காணலாம்.
2. 1982 (1) S.C.R 629

Utkal Contractors and Joinery (Pvt.) Ltd. v. State of Orissa[1]

இவ்வழக்கில் சட்டத்திற்கு பொருள் விளக்கமளிப்பதற்குண்டான அடிப்படை அணுகுமுறை குறித்து உச்ச நீதிமன்றத்தால் பின்வருமாறு கூறப்பட்டுள்ளது. அதன்படி,

".... ஒரு சட்டம் எந்தச் செயல் நோக்கத்திற்காக (reason) இயற்றப் பட்டது என்பதை நாம் அறிந்துவிட்டால், அச்சட்டத்தை தெளிவாக அறிந்து கொண்டதாகப் பொருளாகும். ஒரு சட்டத்திற்கான நோக்கமே, அதற்குண்டான பொருள் விளக்கத்தை அளிப்பதற்குகந்த பாதுகாப்பான வழிகாட்டியாகும். ஒரு சட்டத்தின் சொற்கள், அதன் நோக்கத்தை ஒட்டியே அமைக்கப் பெற்றுள்ளன. எப்படி அச்சட்டத்தின் நோக்கத்தை நாம் கண்டறிவது ? நமக்கு, வெளியிலிருந்து உதவும் கூறுகளும் (காரணிகளும்), உள்ளிருந்து உதவும் கூறுகளும் (காரணிகளும்) (external and internal aids), இதற்கு உதவிக்கு வருகின்றன. ஒரு சட்ட மசோதா பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் பொழுது, அச்சட்டம் இயற்றப்படுவதற்கான காரணங்கள் மற்றும் நோக்கங்கள் குறித்த அறிக்கை, பாராளுமன்றக் குழுவின் அறிக்கைகள், பாராளுமன்ற விவாதங்கள் ஆகியவை வெளியிலிருந்து உதவும் கூறுகள். ஒரு சட்டத்தின் முகப்புரை, அச்சட்டப் பிரிவுகளின் அமைப்பு ஆகியவை உள்ளிருந்து உதவும் கூறுகள். சட்டத்தின் நோக்கத்தைக் கண்டறிந்து பின்னர், பொருள் விளக்கமளிப்பவர் மேற்கொண்டு தொடரலாம். ஒரு சட்டத்தின் எந்த ஒரு சட்டப் பிரிவையும் அல்லது எந்த ஒரு சொல்லையும் தனித்துப் பொருள் கொள்ளக்கூடாது. அவை ஒவ்வொன்றிற்கும் பொருள் விளக்கம் கொடுப்பதற்கு முன்னர், அவற்றை பொதுவாக ஆராய வேண்டும். சட்டத்தின் அமைப்பு (setting) மற்றும் பாங்கு (pattern) ஆகியவை முக்கியமாகும். பாராளுமன்றம் எதையும் வீணான விதத்தில் குறிப்பிடப்படவில்லை என்பதை நினைவிற்கொள்ள வேண்டும். சட்டமியற்றுதல் தேவையில்லை எனும் பொழுது பாராளுமன்றம் சட்டமேதும் இயற்றவில்லை என்றே கொள்ள வேண்டும். சட்டமியற்ற வேண்டும் என்பதற்காக பாராளுமன்றம் சட்டமியற்றி உள்ளது என்றோ அல்லது எவ்விதக் குறிக்கோளும் இல்லாமல் பாராளுமன்றம் சட்டமியற்றியுள்ளது என்றோ அனுமானித்தல் கூடாது."

சட்டமன்றத்தின் கருத்து குறித்து அறிஞர்கள் கூறும் விமர்சனங்கள் (அல்லது) குறைகள் (Criticisms) :

டீன் பவுண்டு (Dean Pound), பேரா. ஜூலியஸ் ஸ்டோன் (Prof. Julias Stone), பேரா. கிரே (Prof. Gray) ஆகிய சட்டவியல் அறிஞர்களும், நீதிபதி ஆலிவர் வின்டெல் ஹோம்ஸ் (Justice Oliver Windell Holms), நீதிபதி கார்டோஜோ (Justice Cardojo), நீதிபதி ஃபிரான்க் ஃபர்டர் (Justice Frankfurter) ஆகிய புகழ்பெற்ற நீதிபதிகளும், சட்டமன்றத்தின் கருத்திற்கு பின்வரும் விமர்சனங்களை அல்லது குறைகளைக் கூறுகின்றனர்.

1. A.I.R. 1987 S.C. 1454

முதலாவதாக, 'கருத்து' என்னும் சொல் மனநிலை சம்பந்தப்பட்ட ஒன்றையே குறிக்கிறது. மனநிலை தொடர்பு இன்றி எழுதப்படும் எந்த ஒரு சொல்லும் வாக்கியமும் அல்லது சட்டமும் எவ்விதக் கருத்தையும் வெளிப் படுத்துவதாக இருக்க முடியாது. எனவே, கருத்து எனும் போது, உட்கருத்து, மனநிலை சார்ந்த கருத்து என்பதே பொருள்படும். ஆகையால், மனநிலை சார்ந்த கருத்தை அறிய மனோதத்துவம் பயின்றிருக்க வேண்டும். ஆனால் பொருள் விளக்கமளிக்க வேண்டிய பணியை மேற்கொள்ளும் நீதிபதிகளோ சட்டத்தில் தேர்ந்தவர்களேயன்றி, மனோ தத்துவத்தில் தேர்ந்தவர்களாக கருத முடியாது. எனவே, சட்டத்தின் உட்கருத்தை ஆராயும் பணியில் நீதிபதிகளின் திறமை அல்லது தகுதி போதுமானதா என்பது அய்யப்பாட்டிற்கு இடமளிக்கிறது.

இரண்டாவதாக, ஒரு தனிநபர், ஒரு கருத்தைக் கூறும் பொழுதோ, எழுதும் பொழுதோ, ஓர் உட்கருத்துடன் அதைச் சொன்னார் அல்லது எழுதினார் என்று கூறினால், அதை மறுக்கவியலாது. ஆனால், எப்படி பல்வேறுபட்ட தனி மனிதர்கள் அங்கம் வகிக்கும் ஒரு சட்டமன்றம் இயற்றும் ஒரு சட்டம், ஒரே கருத்தைக் கொண்டிருக்க முடியும் ? எனவே, சட்டமன்றத்தின் கருத்து என்பது ஒரு மாயை. இல்லாத ஒன்றை இருப்பதாகக் கருதித் தேடிச் செல்லும் நீதிபதிகள் மாயமானை பின் தொடர்ந்து செல்பவர்களே !

மூன்றாவதாக, இலக்கணரீதியாக ஒரு கருத்தை வெளியிடும் வாக்கியத்திற்கு அதனை உருவாக்கியவரின் கருத்திற்கு வடிவம் கொடுக்கும் முயற்சி, எப்போதுமே தனித் தன்மை கொண்டே விளங்கும்.

நான்காவதாக, சட்டம் மேலெழுந்தவாரியாக, ஆனால் நிச்சயமான ஒரு விஷயத்தைக் கூறும் பொழுது, அதனுடைய கருத்தை விளக்கிக் காண்பது எளிதான செயல்தான். சட்டப் பொருள் விளக்கம் காண்போர் இத்துடன் நின்று விடுவதில்லை. சட்டமன்றம் நினைத்தே இராத, இயற்றப்பட்ட சட்டத்தில் இலேசாகக் கோடிட்டுக் கூடக் கூறப்படாத ஒரு விஷயத்தை, அது சட்டமன்றத்தின் கவனத்தில் இருந்திருந்தால் எவ்வாறு தீர்வு காணப்பட்டிருக்கும் என்று ஆராயும் அளவிற்குச் செல்கின்றனர். முற்றிலும், நடைபெறாத அனுமானத் தன்மை சார்ந்த இந்த முயற்சி அபத்தம் என்பதோடு ஆபத்தாகவும் முடியும்.

முடிவுரை :

'சட்டமன்றத்தின் கருத்திற்கு' மேற்கண்டவாறு பல குறைகள் கூறப் பட்டாலும், அக்குறைகளைக் களைந்து நிறைகளைச் சேர்க்கும் வண்ணம், இயற்றப் பட்ட சட்டங்களின் பொருள் விளக்கம் காணும் பணி செவ்வனே தொடர்ந்து செல்கிறது. இதனால் வழக்காடிகளுக்கு நியாயமான தீர்ப்பும் கிட்டுகிறது.

-oOo-

(இ) பொருள் விளக்கம் காணலும் பொருளமைதி காணலும் [Interpretation and Construction]

12. What is meant by Construction? Is there any difference between Interpretation and Construction. (பொருளமைதி காணல் என்றால் என்ன ? சட்டப் பொருள் விளக்கம் காணலுக்கும் பொருளமைதி காணலுக்கும் இடையே ஏதேனும் வேறுபாடுகள் உள்ளனவா ?)

முன்னுரை :

'Introprotation' எனும் ஆங்கிலச் சொல்லுக்கு நிகரான தமிழ் மொழி பெயர்ப்பு **'பொருள் விளக்கம் காணல்'** என்பதாகும். **'Construction'** என்பதற்கு **'பொருளமைதி காணல்'** என்பதாகும்.[1] மேற்கண்ட இரண்டுமே ஒரே பொருளையேத் தருகின்றன. ஒரே நோக்கிலேயே பயன்படுத்தப்படுகின்றன. எனினும், மேற்கண்ட இரண்டிற்குமிடையே சில நுண்ணிய வேறுபாடுகள் இருக்கவே செய்கின்றன.

பொருள் விளக்கம் காணல் (Interpretation) - விளக்கம் :

'பொருள் விளக்கம் காணல்' என்பது, ஒரு சட்டத்தில் (Statute), உயிலில் (Will), ஒப்பந்தத்தில் (Contract) அல்லது பிற எழுதப்பட்ட ஆவணங்களில் உள்ள வாசகங்களுக்கு, அவற்றிற்குண்டான சாதாரணமான மற்றும் இயற்கையான பொருளைக் கண்டறிந்து, விளக்கமளித்தலாகும்.

பொருளமைதி காணல் (Construction) - விளக்கம் :

'பொருளமைதி காணல்' என்பது, ஒரு சட்டத்தில் உள்ள சட்டப் பிரிவுகளுக்கு அல்லது எழுதப்பட்ட ஆவணங்களுக்கு அல்லது குழப்பமான மற்றும் இருபொருள் தரக்கூடிய வாசகங்களுக்கு, அது தொடர்பாக உள்ள வேறு சட்டங்களிலிருந்து அல்லது எழுதப்பட்ட வேறு ஆவணங்களிலிருந்து அல்லது அதை ஒத்த சூழ்நிலைகளுக்குத் தொடர்பான வேறு வாசகங்களிலிருந்து பகுத்தறிவின் மூலம், முன்கண்டவற்றிற்குண்டான சரியான பொருளை அல்லது தகுந்த விளக்கத்தை

---

1. பல்கலைக் கழக வினாக்களில் ஆங்கில வினாக்கள் பலவற்றிலும் 'Construction' என்ற பதம் பயன்படுத்தப்பட்டுள்ளது. ஆனால் அதன் தமிழ் மொழி பெயர்ப்பில் 'சட்டப் பொருள் விளக்கம்' என்று குறிப்பிடப்பட்டுள்ளது. மாணவர்கள் இதனால் குழப்பமடையத் தேவையில்லை. மேற்கண்ட விடையில் உள்ளது போல், இரண்டிற்கும் இடையே சில நுண்ணிய வேறுபாடுகளைத் தவிர, வேறு வேறுபாடுகள் இல்லை. இரண்டும் ஒரே பொருளையோ தரவல்லன. எனவே, 'பொருள் விளக்கம்' என்ற சொல்லையே பொதுவாகவும், பரவலாகவும் பயன்படுத்தலாம்.

அறிந்து, கூறுதலாகும். சுருங்கக்கூறின், ஒரு வாசத்திற்கு வெளியே, அது தொடர்பாக உள்ளவற்றை ஆராய்ந்து, அவ்வாசகத்தின் பொருளை வெளிப்படுத்துதலாகும்.

வேறுபாடுகள் :

'பொருள் விளக்கம் காணலும்', 'பொருளமைதி காணலும்' ஒன்றிற்குண்டான பொருளைக் கண்டறிந்து சொல்கின்றன. இரண்டிற்கும் நோக்கம் ஒன்றே; ஆனால் அதனை வெவ்வேறு வழிகளில் அடைகின்றன. **சாதாரண மொழியில்** குறிப்பிடுவதென்றால், 'பொருள் விளக்கமளித்தல்' என்பது ஏற்கனவே உள்ள கட்டிடத்தில் உள்ள பழுதை நீக்குவதற்காக மராமத்து வேலை செய்து புதுப்பிப்பதைப் போன்றதாகும். 'பொருளமைதி காணல்' என்பது ஏற்கனவே உள்ள அஸ்திவாரத்தில் புதிய கட்டிடமொன்றைக் கட்டுவது போலாகும். இரண்டின் நோக்கமும் கட்டிடம் புதிதாக இருக்கவேண்டுமென்பதாகும். **சட்ட மொழியில்,** இவை இரண்டிற்குமிடையிலான வேறுபாடுகள் பின்வருமாறு :

பொருள் விளக்கம் காணல் (Interpretation)	பொருளமைதி காணல் (Construction)
1. இங்கு, ஒரு வாசகத்தின் மேலோட்டமான அகராதிப் பொருள் காண முயற்சிக்கப்படுகிறது.	இங்கு, அதையும் தாண்டி அவ்வாசகத்தை உருவாக்கியவர்களின் மனக்கருத்து அறிய முயற்சிக்கப்படுகிறது.
2. இதன் அளாவுகை (Scope), குறுகியது.	இதன் அளாவுகை, பரந்தது.
3. இது பொருளமைதி காணல் என்ற நிலைக்கும் முந்தியது. வாசகத்தின் உரைநடைப் பொருளோடு நின்று விடுகிறது.	இது பொருள் விளக்கம் காணலுக்கு அடுத்து வருவது. வாசகத்தின் உரை நடைப் பொருளோடு நில்லாமல், அதனுள் உறைந்துள்ள பொருளும் கண்டறியப்படுகிறது.
4. இது வாசகத்தை உருவாக்கியவரின் கருத்தை நிச்சயிப்பதற்கான விதி ஆகும்.	இது வாசகத்தை உருவாக்கியவரின் கருத்து உட்கிடையாகவோ அல்லது வெளிப்படையாகவோ இல்லாதிருக்கும் பொழுது, நீதிமன்றம் என்ன செய்ய வேண்டும் என்பதற்கான விதியாகும்.
5. இங்கு ஒரு வாசகத்தில் என்ன கூறப்பட்டுள்ளதோ அதை வைத்துக் கொண்டு மட்டும் பொருள் விளக்கம் அளிக்கும் பணி நடைபெறுகிறது.	இங்கு ஒரு வாசகத்தின் பொருளைக் கண்டறிய, அவ்வாசகத்திற்கும் அப்பாற்பட்டு வெளியிலிருந்து உதவும் வேறு மூலங்களின் வாயிலாக பொருள் காணப்படுகிறது.

முடிவுரை :

நீதிபதி கிராஃபோர்டு அவர்களின் கூற்றுப்படி, "மேற்படி இரண்டுமே சட்டமொன்றில் அதன் சட்டமன்றக் கருத்தை அறிய பயனாகும் வழிமுறையாகும். ஒரு சட்டத்திற்கு பொருள் விளக்கம் அளிக்கும் பணி முடிவுற்ற பிறகு பெறப்பட்ட சட்டமன்றத்தின் கருத்து தெளிவாக இல்லையென்றால், அச்சட்டத்தை பொருளமைதி காண்பதற்காக உட்படுத்தலாம்" என்கிறார்[1]. எந்த முறையில் விளக்கத்தை காண்பது என்பது ஒவ்வொரு வழக்கின் தன்மைக்கேற்ப மாறுபடும். பொருள் விளக்கம் காணலை விட பொருளமைதி காண்பதே, சிறந்ததும் பாதுகாப்பானதும் ஆகும்.

-o0o-

1. ". . . both the processes may be used in seeking the legilative intent in a given statue. If the legislative intention is not clear after the completion of the interpretation, then the court will proceed to subject the statute to construction" - **Construction of Statutes, (Crawford) p. 240.**

(ஈ) சட்டப் பொருள் விளக்கத்தில் நீதிபதிகளின் பணியும் நீதிமன்றங்களின் கடமையும் [Function of Judges and Duty of Courts in Interpretation]

13. "Judges are discovers, not the creators of law" - Comment. ("நீதிபதிகள் சட்டத்தைக் கண்டறிபவர்களே தவிர உருவாக்குபவர்கள் அல்லர்" – விமர்சிக்க.)

(அல்லது)

"The function of the Judge is not to make law but to declare the law" - Comment. ("நீதிபதியின் பணி சட்டத்தை உருவாக்குவதல்ல; ஆனால் சட்டத்தை விளம்புவதாகும்" – விமர்சிக்க.)

(அல்லது)

"The object of all interpretations is to discover the intention of the parliament and it must be deduced from the language used"-(Lord Parker) - Discuss. ("எல்லா சட்டப் பொருள் விளக்கங்களின் நோக்கமும் பாராளுமன்றத்தின் எண்ணத்தினை கண்டறிவதேயாகும். அதன் சட்டத்தில் பயன்படுத்தப்பட்ட மொழியிலிருந்தே தேர்ந்தறிதல் வேண்டும்" (லார்டு பார்க்கர்) – விவாதிக்கவும்.)

முன்னுரை :

இயற்றுமுறைச் சட்டங்களின் பொருள் விளக்கம் காண்போர், ஒரு சட்ட வாசகத்தின் பொருள் யாது என்பது முதல் அச்சட்டத்தை இயற்றும்பொழுது சட்டமன்றம் என்ன கருத்தை அடிப்படையாகக் கொண்டிருந்தது அல்லது அச்சமயத்தில் எந்த மனநிலையில் சட்டமன்றம் செயல்பட்டது என்பது வரை உள்ள வினாக்களுக்கு விடை காண முற்படுவர். இந்த விடையில்தான் இயற்றுமுறைச் சட்டங்களின் பொருள் விளக்கம் அமைந்துள்ளது.

சட்டப் பொருள் விளக்கம் காணும் பணி யாருடையது ?

மேற்கண்டவாறு சட்டப் பொருள் விளக்கம் காணும் பணி, சட்டத்தைச் செல்லுறுத்தி நீதி வழங்கும் நீதிபதிகளைத்தாம் சார்ந்தது. இதுவே பொருத்தமும் ஆகும். ஆனால் நீதிபதிகளுக்கு சட்டப் பொருள் விளக்கம் அளிக்கும் அதிகாரம் உள்ளதே தவிர, சட்டத்தை மாற்றியோ, கூட்டியோ அல்லது குறைத்தே புதிதாக சட்டம் உருவாக்கும் அதிகாரம் கிடையாது. விரிவாக வருமாறு :

"நீதிபதிகள் சட்டத்தை கண்டறிபவர்களே தவிர, உருவாக்குபவர்கள் அல்லர்" - விளக்கம் :

ஒரு சட்டத்தை இயற்றும் பொழுது, சட்டமன்றத்தின் கருத்து என்னவாக இருந்தது என்று கண்டறிந்து, அதை விளம்புவதே, நீதிபதிகளின் பணியாகும். இதை விடுத்து அவர்களே ஒரு சட்டத்தை உருவாக்க முடியாது. வேறுவிதத்தில் கூறுவதென்றால், சட்டமன்றத்தின் கருத்தை வெளிப்படுத்துவதற்கான வாசகம் இப்படித்தான் இருக்க வேண்டும் என்ற காரணம் காட்டி, நீதிபதிகள் சட்ட வாசகத்தை கூட்டுவதோ, குறைப்பதோ, மாற்றுவதோ கூடாது; அது முறையும் அன்று. அதாவது, புதிய சட்ட வாசகத்தை உருவாக்க முடியாது. சட்டத்தை உருவாக்குவது சட்ட மன்றத்தின் பணி. நீதிபதிகளின் பணி அன்று.

எனவே, சட்டமன்றத்தின் கருத்திலிருந்து விலகி, அதற்கு முரணான பொருளை நீதிபதிகள் கூற முடியாது. சட்டமன்றக் கருத்தில் ஏதேனும் விடுபட்டுப் போயிருந்தால், பொருள் விளக்கம் தருவதாக எண்ணி, விடுபட்டு போன கருத்தை நீதிபதிகள் நிரப்ப முயலக்கூடாது. சட்டமன்றம் பயன்படுத்தியுள்ள சொற்களிலிருந்து, அதன் பொருள் விளக்கத்தை கூறுவதே நீதிபதியின் பணியாகும். அத்தகு சொற்கள் இரண்டு பொருள்களைத் தருவதாக இருப்பினும், சட்டமன்றத்தின் கருத்திற்கு வெளியே சென்று பொருள் விளக்கம் தரக்கூடிய நீதிபதிகளின் அதிகாரமானது மிகக் கடுமையாக வரம்பிடப்பட்டுள்ளது.

ஆனால், அதே சமயத்தில் நீதியரசர் **V.R. கிருஷ்ண அய்யர்** அவர்கள் **Bangalore Water Supply Sewerage Board v. A. Rajappa & Others**[1] என்ற வழக்கில் கூறியதையும் நினைவிற் கொள்ள வேண்டும். அதன்படி, **"சட்டப் பொருள் விளக்கமளிக்கும் பணியானது, எவ்வித உணர்ச்சியுமற்ற, ஜடமான ஒரு செயல்முறை ஆகாது. சட்டம் எனும் பழைய குடுவையில், மொழி நடையும் மெய்யறிவும் எந்த அளவிற்கு அனுமதிக்கிறதோ, அந்த அளவிற்கு பொருள் விளக்கம் எனும் புதிய கொடி முந்திரிச் சாற்று மதுவை ஊற்றுவதாகும். ஆனால், அக்குடுவை உடைந்து போகவோ அல்லது அதன் வடிவத்தை இழக்கவோ கூடாது"**[2].

நீதிபதியின் பணி குறித்த கருத்தை குறிப்பிடும் உச்ச நீதிமன்ற வழக்கு :

Fuzlunbi v. K. Kadher Vali[3]

மேற்படி வழக்கில் ஒரு இசுலாமியக் கணவன் தனது மனைவியை தலாக்

1. 1978 Lab. I.C. 467
2. Statutory Construction is not a petrified process and the old bottle may, to the extent of language and realism permits, be filled with new wine. Of course, the bottle should not break or lose shape - **Justice V.R. Krishna Iyer.**
3. A.I.R. 1980 S.C. 1730

சொல்லி விவாகரத்து செய்து விட்டார். இங்கு இசுலாமியச் சட்டப்படி, கணவன், தான் விவாகரத்து செய்த மனைவிக்கு ஜீவனாம்சமாக 'மஹர்த் தொகை' (Payment of Mahr) அளிக்க வேண்டும். அதே சமயத்தில், குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் 125–வது பிரிவானது, மனைவிக்கும், பெற்றோர்களுக்கும் குழந்தைகளுக்கும் ஜீவனாம்சமாக பராமரிப்புத் தொகை (maintenance) அளிக்க வேண்டும் என்று கூறுகிறது.

இங்கு உச்ச நீதிமன்றத்தின் முன்பு எழுந்த பிரச்சனை என்னவென்றால், இசுலாமியர் சட்டப்படி விவாகரத்து ஆன மனைவிக்கு கணவன் மஹர்த் தொகை அளித்துவிட்டால், அவர் குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் 125–வது பிரிவின் கீழ், பராமரிப்புத் தொகை அளிப்பதிலிருந்து விடுவிக்கப்படுவாரா என்பதேயாகும். இக்கேள்விக்கு பதிலளிக்கையில், **நீதியரசர் V.R. கிருஷ்ண அய்யர்** அவர்கள் தனது தீர்ப்பில் பின்வருமாறு குறிப்பிடுகிறார். அதன்படி,

"ஒரு நீதிபதியின் பணிக்கு **நீதிப் பெருமகனார் டென்னிங் (Lord Denning)** அவர்களின் சிறந்த பங்களிப்பானது, கால வரையறைச் சட்டத்தால் எப்பொழுதும் தடுக்கப்பட்டதில்லை ..... இங்கிலாந்தில் நீதிபதிகள் பலரும், தாங்கள் சட்டத்தை உருவாக்குவதில்லை என்று கூறுகின்றனர். அவர்கள் பொருள் விளக்கமளித்தல் மட்டுமே செய்கின்றனர். இது ஒரு மாயையே. இந்த மாயையில் நீதிபதிகள் மூழ்கியிருக்கின்றனர். ஆனால் இந்தக் கோட்பாடு தற்பொழுது எங்கும் கைவிடப்பட்டுள்ளது. ஒவ்வொரு புதிய சூழ்நிலைக்கும் உகந்த ஒவ்வொரு புதிய தீர்ப்பும், சட்டத்தின் வளர்ச்சியே. சட்டம் அப்படியே நிலைத்து நிற்பதில்லை. அது தொடர்ந்து மாறிக் கொண்டே உள்ளது. இது உணரப்பட்ட பிறகு, நீதிபதியின் பணி மேலும் உயரமானதொரு இடத்தில் வைக்கப்பட வேண்டியதாக உள்ளது. அவர் சட்டத்தை, காலத்தின் தேவைக்கேற்ப வடிவமைக்க வேண்டும். அவர் ஒரு கட்டிடத்தின் முழு வடிவத்தையும் பற்றிய சிந்தனை இல்லாத, ஒரு செங்கல் மீது மற்றொரு செங்கல் வைத்து கட்டும் வெறும் கொத்தனாராகவோ அல்லது இயந்திரம் பழுது பார்ப்பவராகவோ, இருத்தல் கூடாது. அவர், கட்டிடத்தின் அமைப்பு முழுவதும் அறிந்த கட்டிடக்கலை நிபுணரைப் போல், சமுதாயத்திற்கான கட்டிடத்தை வலிமையான, நீடித்திருக்கக்கூடிய மற்றும் சரியான சட்ட முறைமையைக் கொண்டு வடிவமைக்க வேண்டும்....."

மேற்படி கருத்து, நீதிபதியின் பணி சட்டத்தை விளம்புவது மட்டுமல்ல; அதன் நோக்கத்திற்குட்பட்டு, சட்டமன்றக் கருத்தையொட்டி, சட்டத்தை உருவாக்கவும் செய்யலாம் என்று சற்று மாறுபட்ட நிலையை குறிப்பிடுகிறது.

எனவே, நீதிபதியின் பணி சட்டத்தை உருவாக்குவதா என்ற வினா மனதில் எழுந்தால் அதில் வியப்பொன்றுமில்லை. இவ்வினாவிற்குண்டான விடையை சற்று விரிவாக பின்வருமாறு காண்போம்.

நீதிபதியின் உண்மையான பணி (அல்லது) மாறுபட்ட நிலை :

நாம் இந்த அத்தியாயத்தின் முந்தய பகுதிகளில், சட்டமன்றமானது ஒரு சட்டத்தை இயற்றும் பொழுது, எதிர்காலத்தில் என்னென்ன நடக்கவுள்ளது என்பதையெல்லாம் அறிந்து, அதற்கொப்ப சட்டத்தை இயற்ற முடியாது, எனக் கண்டோம். ஒரு குறிப்பிட்ட சட்டத்தில் விடுபாடுகள் ஏதேனும் இருப்பின், அதை நீதிபதிகள் நிரப்பி பொருள் கொள்ளக் கூடாது என்ற கோட்பாடு இருப்பினும், பல சமயங்களில் தங்கள் முன்னர் இருக்கும் வழக்குகளைத் தீர்ப்பதற்கென்று நீதிபதிகள் அவ்வாறே பொருள் கொள்கின்றனர். வளர்ந்து வரும் நவீன நீதிமுறைச் செயல்பாட்டில், இது அனுமதிக்கப்பட்டு வருகிறது.

சட்டவியல் அறிஞர் சால்மண்ட் அவர்கள், "எதிர்காலத்தில் எழவிருக்கும் வழக்குகளைக் குறித்து எதுவும் குறிப்பிட்டு கூறாமல், சட்டமன்றமானது எதிர் காலத்திற்குரிய சட்ட விதிகளை மட்டும் குறிப்பிட்டு சட்டம் இயற்றலாம். ஆனால் நீதிபதிகள் தங்கள் முன்னர் உள்ள வழக்குகளில், தாங்கள் ஒரு சரியான தீர்விற்கு வருமளவிற்கு, அவ்வழக்கிற்கு பொருந்துமளவு மட்டும் சட்டத்தை உருவாக்கிக் கொள்ளலாம். நீதிபதிகளின் பணி நீதி வழங்குவதாகும். அப்படி வழங்கும் பொழுது அளிக்கப்படும் பொருள் விளக்கத்தினால், சட்டம் உருவானால், அது வழக்குகளைத் தீர்ப்பதன் விளைவாக எழுவதாகும். (Judicial Law making). ஆனால் சட்டங்களை இயற்றுவதை மட்டுமே மையப் பணியாகக் கொண்டு, சட்டமன்றம் உள்ளது (Legislative Law making) என்று கூறுகிறார்.

மேற்படி கருத்தை ஆதரித்து, நீதிபதிகள் சட்டத்தை விளம்புவதோடு மட்டுமல்லாமல் சட்டங்களை உருவாக்கவும் செய்கின்றனர் என பல்வேறு அறிஞர்கள் பின்வருமாறு கருத்துரை கூறியுள்ளார்கள்.

பேரா. ஜெஃப் அவர்கள், "நீதிமுறையில் சட்டம் உருவாக்குதல் என்பது குறிப்பிட்ட ஒரு வழக்கின் தீர்ப்பில் அல்லது அதற்கான செயல்பாட்டில் விளையும் ஒரு துணைப் பொருளாகும்"[1] என்று குறிப்பிடுகிறார். அதாவது, வழக்குகளைத் தீர்ப்பது நீதிமன்றத்தின் பணி. நீதி முறையில் சட்டம் உருவாதல் அதன் விளைவாகும்.

அறிஞர் கார்டஜோ கூற்றுப்படி, "நீதிபதிகள் சட்டம் உருவாக்குவது புரட்சியின் காரணமாக அல்ல; சட்டத்தை மதிப்பீடு செய்வதினால் மனதில் உருவாகும் சட்ட உணர்வு எழுச்சியினால்".[2]

நீதிபதி ஹோம்ஸ் அவர்கள், "நீதிபதிகள் சட்டம் இயற்ற வேண்டும் என்பதை நான் எவ்வித தயக்கமுமில்லாமல் ஆமோதிக்கிறேன்; ஆனால் சில இடைவெளி களுக்குட்பட்டு மட்டுமே அவ்வாறு செய்ய வேண்டும். அதுவும் அவர்கள்

1. Judicial Law making is a by product of an ad hoc decision or process - **Prof. Jaffe.**
2. Judges make law by evolution rather than by revolution - **Cardozo.**

பெருந்திரள் முதல் அணு அசைவு வரை கட்டுப்படுத்தப்பட்டுள்ளனர்"[1] என்று கூறுகிறார்.

"நீதிபதிகள் உண்மையில் சட்டம் உருவாக்குகிறார்கள். ஏனெனில் சட்டமியற்றுபவர்களின் அதே எண்ணத்தினாலேயே அவர்கள் உந்தப்படுகிறார்கள்"[2] என்று நீதிபதி ஹோம்ஸ் அவர்கள் மேலும் குறிப்பிடுகிறார்.

இறுதியாக, வேகமாக வளர்ந்து வரும் சமுதாயத்திற்கு, அதற்கு ஈடு கொடுக்கும் வகையில் ஆற்றல் மிகுந்த சட்ட முறை வேண்டும். ஒரு நீதிபதி, சட்டத்தில் இடைவெளியாக இருப்பவை குறித்து சட்டமியற்றுகிறார். வெற்றிடங்களை நிரப்புகிறார்.

எனவே, "நீதிபதிகள் சட்டத்தை கண்டறிபவர்களே தவிர; உருவாக்கு பவர்கள் அல்லர்" என்ற கருத்து ஓரளவிற்கு உண்மையென்றாலும், சட்டமன்றம், கருத்தில் நினைத்தும் அதனை சட்ட வடிவில் கொண்டு வர இயலாத அல்லது தவறுதலாக விடுபட்டுப் போன சூழ்நிலையில், அது குறித்து சட்டம் உருவாக்கு பவர்களாகவே உள்ளனர், (Judges are intention seekers and legislators as well) என்பதே முடிவானதாகும்.

பொருள் விளக்கமளிப்பதில் நீதிமன்றத்தின் கடமை (Duty of Courts in Interpretation) :

ஒரு சட்டத்திற்கு பொருள் விளக்கம் கொடுக்கும் பொழுது, ஒரு நீதிமன்றம் எவ்வாறு செயல்பட வேண்டும், அதன் கடமை யாது என்பதை சுருக்கமாக பின்வருமாறு காண்போம்.

1. பொதுவாக, ஒரு சட்டத்தின் நோக்கத்திற்கும், அதன் குறிக் கோளுக்கும் உற்ற வகையில் பொருள் காண வேண்டும், என்பது அடிப்படை நியதி. ஒவ்வொரு சட்டத்திலும் 'முகப்புரை' (Preamble) என்ற தொடக்கப் பகுதியில், அச்சட்டம் எந்தக் குறிக்கோளுடன் இயற்றப்படுகின்றது என்பது குறிப்பிடப் பட்டுள்ளது. எனவே, சட்ட வாசகங்களுக்கு பொருள் காண்போர், சம்பந்தப்பட்ட சட்டத்தின் முகப்புரையையும் கருத்திற் கொள்ள வேண்டும். உதாரணமாக, இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் வாசகத்திற்கு பொருள் விளக்கம் அளிக்கும் பொழுது, அதன் 'முகப்புரையையும்' கருத்தில் கொள்ள வேண்டும்.

2. சட்டத்தில் உள்ள பிரிவுகளின் (Sections) பொருளைத் தெளிவாக்கும் வகையில் வரையறைகளும் (Definitions), எடுத்துக்காட்டுகளும் (Illustrations), விளக்கங்களும் (Explanations) கொடுக்கப்படுவதுண்டு. பொருள் விளக்கம்

1. I recognise without hesitation that judges do and must legislate, but they do so only, interstitially, they are confined from molar to molecular motions. - **Holmes J.**
2. Judges really make the law, because they are motivated by the same considerations as is the legislature - **Holmes J.**

அளிக்கும் பொழுது, நீதிமன்றங்கள் இவற்றை கருத்தில் கொள்ள வேண்டியது, மிக்க இன்றியமையாததாகும்.

3. 'தண்டனை முறைச் சட்டங்கள்' (Penal Laws), 'மக்கள் நல்வாழ்வுச் சட்டங்கள்' (Welfare Laws), 'நிதியச் சட்டங்கள்' (Fiscal Laws) என்று சட்டங்கள், அவற்றின் நோக்கங்களின் அடிப்படையில் பிரிக்கப்படுவதுண்டு.

தண்டனை முறைச் சட்டம் என்பது, அதில் விதிக்கப்பட்ட கடமைகளில் தவறுபவர்களைத் தண்டனைக்கு உள்ளாக்குகிறது. அச்சட்டம் எவர்களைக் கருதி இயற்றப்பட்டதோ அவர்களைத் தவிர பிறர் மீது தண்டனைப் பொறுப்பை ஏற்படுத்தி விடக்கூடாது. எனவே, அச்சட்டத்திற்கு பொருள் காண்பது, வரையுறுதியுடன் (Strict interpretation) இருத்தல் வேண்டும். அதாவது, வாசகத்தை வளைத்தோ, நெகிழ்ந்தோ பொருள் காண முயலாமல் நேரடியாகச் சட்ட வாசகம் எவர்களைக் குறிக்கிறதோ அவர்களுக்கே அச்சட்டம் பொருந்தும் வகையில் பொருள் விளக்கம் காண வேண்டும் என்பது விதியாகும்.

மக்கள் நலவாழ்விற்கென பல்வகைச் சட்டங்கள் இயற்றப் பெறுகின்றன. அவற்றுக்குப் பொருள் காணும் பொழுது நெகிழ்வான முறையில் (liberal construction) அணுக வேண்டும்.

வரி விதிக்கக் கூடிய நிதியச் சட்டங்களைப் பொறுத்து, அச்சட்ட வாசகங்கள் என்ன பொருளில் உள்ளனவோ அப்பொருளைத் தவிர வேறு பொருள் எதையும் ஊகிப்பதோ, சட்டமன்றக் கருத்து இது என்று கொள்வதோ கூடாது என்பது விதியாகும்.

முடிவுரை :

சட்டங்களின் வகைகளுக்கேற்பவும், சட்ட வாசகங்களின் தன்மையை ஒட்டியும், சட்டமன்றத்தின் கருத்திற்கு இயைந்தும் நீதிபதிகளின் பணியும், நீதிமன்றங்களின் கடமையும் பொருள் விளக்க விதிகளுக்குட்பட்டு (Rules of Interpretation) செயலாற்றப்படுகின்றன.

-o0o-

(உ) நீதித்துறை சட்டமியற்றல் (அல்லது) நீதிமுறை சட்டமியற்றல் [Judicial Legislation]

14. What is meant by Judicial Legislation ? Explain the characteristics of judicial legislation. (நீதித்துறை முறைச் சட்டமியற்றல் என்பதை வரையறை செய்து, அதன் முக்கிய அம்சங்களை விளக்குக).

(அல்லது)

Explain and illustrate the main characteristics of judicial legislation. Refer to English and Indian Cases. (நீதித்துறை முறை சட்டமியற்றல் தொடர்பான முக்கிய நடைமுறைகளை எடுத்துக்காட்டுகளுடன் விவரிக்க. ஆங்கில மற்றும் இந்திய வழக்குகளைக் குறிப்பிடவும்).

முன்னுரை :

சென்ற வினாவில், நீதிபதிகள் சட்டத்தை விளம்புவதோடு மட்டுமில்லாமல் சட்ட மன்றக் கருத்திற்கு குந்தகமில்லாத அளவிற்கு சட்டத்தை உருவாக்கவும் செய்கின்றனர் என்று கண்டோம். அப்படி சட்டம் உருவாக்குவதே, 'நீதித்துறை அல்லது நீதிமுறைச் சட்டமியற்றல்' (Judicial Legislation or Judicial Law Making) எனப்படுகிறது. சற்று விரிவாக வருமாறு.

சட்டமியற்றல் - இருவகை :

பொதுவாக, சட்டமியற்றல் இருவகைகளில் நடைபெறுகிறது. அவை,



சட்டமன்றத்தால் சட்டமியற்றப்படல் குறித்து அறிஞர் சால்மண்ட் அவர்கள் குறிப்பிடுகையில், "தக்க அதிகாரம் பெற்ற ஆள்வையால் சட்ட விதிகள் சாற்றப் பெறுகின்றன; இதுவே சட்டம் இயற்றுதலாகும்[1]" என்கிறார். அதாவது, சட்டம் இயற்றுவதற்கு அதிகாரம் பெற்ற சட்டமன்றத்தால், பாராளுமன்றத்தால் இயற்றப் படுவதே, 'சட்டமன்றத்தால் சட்டமியற்றப்படலாகும்.'

1. Legislation is that source of law which consists in the declaration of legal rules by a competant authority - **Salmond.**

ஆனால் சட்டமன்றங்கள் சட்டங்களை இயற்றும்போது, தாங்கள் அதன் மூலம் கட்டுப்படுத்த இருக்கின்ற தற்போதைய சூழ்நிலைகள், வாய்ப்புகள், எதிர்காலத்தில் நிகழும் என எதிர்ப்பார்க்கக்கூடிய நிகழ்ச்சிகள், அவற்றை தீர்ப்பதற்கான வழிவகைகள் ஆகிய இவையனைத்தையும் முற்றிலும் தெள்ளத் தெளிவாக கூறி சட்டமியற்ற முடிவதில்லை. ஏனெனில், சமுதாயமானது, தினம் தினம் புதுப்புது மாற்றங்களை அடைந்து கொண்டே இருக்கிறது. அவற்றிற்கு ஈடு கொடுக்கும் வகையில், வருவது அறிந்து, முன்பே சட்டமியற்றுதல் என்பது இயலாத செயல்.

இங்குதான், 'நீதிமுறையில் சட்டமியற்றுதலின்' முக்கியத்துவம் வெளியாகிறது. அதாவது சட்டமன்றங்களால் சட்டமியற்றப்படல் ஒருபுறமிருக்க, நீதிமன்றங்களாலும் சட்டங்கள் உருவாகின்றன. இதைத் தவிர்க்க முடிவதில்லை.

நீதிமன்றங்கள் முன் எத்தனையோ வகைப்பட்ட வழக்குகள் தீர்வுக்கு வருகின்றன. சட்டமன்றத்தால் இயற்றப்பட்ட சட்டங்களைச் செல்லுறுத்தும் வகையில்தான், அந்த வழக்குகள் தீர்க்கப் பெறுகின்றன. ஆனால், அச்சட்டங்களில் வழக்குகள் சிலவற்றைத் தீர்ப்பதற்குத் தக்க வழிமுறைகள் இல்லாமல் இருப்பதுண்டு. இந்நிலையில் தகுந்த சட்டக் கொள்கைகளை (legal principles) நீதிமன்றங்களே வகுத்து அவற்றின்படி அவ்வழக்குகளில் தீர்ப்புகளைக் கூறுகின்றன. இவ்வாறு தீர்ப்புகளின் விளைவாக சட்ட நெறிகள் ஏற்படுகின்றன. அதாவது, சட்டங்கள் பிறக்கின்றன. இதுவே 'நீதிதுறை முறைச் சட்டமியற்றல்' (Judicial Law Making) எனப்படுகிறது. இதனை **'தீர்ப்பு நெறி'** என்றும் அழைக்கலாம். பின்னர் எழும் வழக்குகளில், முன்னர் எழுந்த வழக்குகளில் காணப்படும் 'தீர்ப்பு நெறிகள்' பின்பற்றப்படுகின்றன. இதனை **'முன் தீர்ப்பு நெறி' (Precedent)** என்பார்கள். இவ்வாறு பின்பற்றப்படுவதால், இந்நெறி, சட்டமன்றத் தால் இயற்றப்பட்ட சட்டங்களைப் போலவே நீதிமன்றங்களால் செல்லுறுத்தப் படுகின்றன. இம்முறை யில் நீதிமன்றங்களால் வகுக்கப் பெறும் சட்ட நெறியினை **'தீர்ப்பு நெறிச் சட்டங்கள்' (Judge made Law)** என்றும் கூறுவார்கள்.

பொதுவாக, சட்டமன்றத்தால் இயற்றப்பட்ட சட்டங்களில் சரியான விளக்கங்கள் கூறப்படாமல் ஏதேனும் விடப்பட்டிருந்தாலோ அல்லது பொருள் இடைவெளிகள் ஏதேனும் இருந்தாலோ, அவற்றை நிரப்பி பொருள் விளக்கம் காண நீதிமன்றங்கள் முயற்சிக்கக் கூடாது என்ற நிலைப்பாடு இருந்தாலும், நீதிமன்றங்கள் தங்கள் முன் உள்ள வழக்குகளை தீர்க்கும்பொழுது பெரும்பாலும் மேற்கண்டவாறு செயல்படுகின்றன. இது வளர்ந்து வரும் தற்காலத்தில் நீதி முறை செயல்பாட்டில் வெகுவாக அனுமதிக்கப்பட்டும் வருகிறது.

எனவே, 'நீதித்துறை முறை சட்டமியற்றல்' தவிர்க்க இயலாத ஒன்று. [மேலும் சென்ற வினாவின் விடையில் "நீதிபதியின் உண்மையான பணி (அல்லது) மாறுபட்ட நிலை" என்ற தலைப்பின் உள்ளவற்றையும் படித்துக் கொள்க.]

நீதித்துறை முறைச் சட்டமியற்றுதலின் முக்கிய அம்சங்கள் :

1. சட்டமன்றங்கள் எதிர்காலத்தில் எழக்கூடிய பிரச்சனைகளையெல்லாம் முன்னரே அறிந்து சட்டமியற்ற முடிவதில்லை. ஆனால், நீதிமன்றங்கள் தங்கள் முன் வழக்குகளில் என்ன பிரச்சனை உள்ளது, அதற்கு சட்டம் எந்த அளவிற்கு விளக்கம் தருகிறது அல்லது விளக்கம் தரவில்லை என்பதை அறிந்து, அதைச் சரிக்கட்டும் வகையில் சட்டமன்றத்தின் கருத்திற்கு குந்தகம் ஏற்படாத அளவிற்கு, சட்ட நெறிகளின் அடிப்படையில், தீர்ப்பு வழங்குகின்றன. அதாவது இங்கு சட்டங்கள், நீதிமன்றத்தால் உருவாக்கப்படுகின்றன.

2. ஒரு வழக்கில் நீதிமன்றத்தால் உருவாக்கப்படும் சட்ட நெறிகள், அதனை ஒத்த பிற வழக்குகளிலும் பின்பற்றப்படுகின்றன. ஆனால் உச்ச அல்லது உயர் நீதிமன்றங்கள் கூறும் சட்டநெறிகள்தாம், அதன் கீழ் அமைந்துள்ள பிற நீதிமன்றங்களால், வழக்குகளில் பின்பற்றப்படுகின்றன. அதாவது உயர்ந்த அதிகாரம் பெற்ற நீதிமன்றங்கள் கூறுவதுதான் சட்ட நெறியாக, அங்கீகரிக்கப் படுகின்றன. எனவே வழக்குகளை தீர்ப்பதில் கீழமை நீதிமன்றங்களுக்கு (Lower Courts), உடனடியாக வழிகாட்டும் கருவியாக தீர்ப்பு நெறிச் சட்டங்கள் விளங்குகின்றன.

3. நியாயமான தீர்ப்புக்குத் தேவையான முறையில் நீதிமன்றங்கள் உருவாக்கும் தீர்ப்பு நெறிச் சட்டங்கள் அமைவதால், அவை நீதிக்கு உகந்ததாகவும் (just), உடன் செயற்படுத்துவதற்கு ஏற்றதாகவும் (practical) அமைகின்றது. சட்டப் புலமையும், சான்றாண்மையும் பெற்ற நீதிபதிகள் இருதரப்பினர்களின் வாதத்தையும் கேட்டு வகுக்கும் சட்ட விதிகள் இழைவும் குழைவும் ஏற்றமைவும் (flexibility and adaptability) கொண்டனவாய் விளங்குகின்றன. இம்முக்கிய அம்சம், சட்டமன்றங்களால் இயற்றப்படும் சட்டங்களில் இருப்பதில்லை.

4. பல அளவுகளில் ஏற்கனவே தைத்து விற்கப்படும் (Readymade) சட்டைக்கும், அளவெடுத்துத் தைக்கப்படும் சட்டைக்கும் நிச்சயம் வேறுபாடுகள் இருப்பதை நாமனைவரும் அறிவோம். அதுபோல், நீதிமன்ற தீர்ப்பு நெறிச் சட்டத்தில், குறிப்பிட்ட வழக்கில் எழும் சிக்கல்களை ஆய்ந்து அவற்றைத் தீர்க்கும் வகையில் கொள்கைகள் உருவாகின்றன. எனவே, அவை நீதியோடு இணைந்து உருவாகும் சிறப்புடையனவாகின்றன. அத்தகு தீர்ப்பு நெறிச் சட்டங்கள் படிப்படியாக இயல்பாக வளர்கின்றன. அவற்றின் வளர்ச்சியிலே ஒரு தொடர்ச்சி உண்டு. ஏதோ திடீரென்று புதுக் கொள்கையினைக் கொண்டு உருவாகும் சட்டமன்றத்தால் இயற்றப்படும் சட்டத்தைப் போல எழுவதில்லை, நீதிமுறைச் சட்டம்.

5. தீர்ப்பு நெறிகளின் அடிப்படையிலான நீதித்துறை முறை சட்டமியற்றல் இல்லாது போனால் ? எண்ணிப்பார்க்கவே மனம் அச்சப்படுகின்றது. ஏனெனில், தீர்ப்பு நெறிகள், தற்பொழுது பெருமளவில் பின்பற்றப்பட்டு வழக்குகள்

தீர்க்கப்பட்டுக் கொண்டு வரும் இந்தச் சூழ்நிலையிலேயே, தேங்கிக் கிடக்கும் வழக்குகள் எண்ணிலடங்கா. தீர்ப்பு நெறிச் சட்டங்களும் இல்லாது, சட்டமன்றத்தால் இயற்றப்படும் சட்டங்கள் மட்டுமே வழக்குகளைத் தீர்ப்பதில் எடுத்தாளப்பட வேண்டுமென்ற நிலை இருப்பின், வழக்குகளின் தேக்கம் மேலும் சொல்லொணா முடியா அளவிற்கு அதிகமாகி விடும். சட்டமன்றங்கள், அனுதினமும் புது புதுச் சட்டங்களை இயற்றிக் கொண்டே இருக்க வேண்டும். முடிவில், குழப்பம்தான் எஞ்சும்.

எனவே இந்நிலையைத் தவிர்த்து, கீழமை நீதிமன்றங்களுக்கு, தங்கள் முன்வரும் வழக்குகளில் தீர்ப்பு கூறுவதற்கு ஏதுவாக, வழிகாட்டும் நெறிகளாக நிற்பவை, உயர் அதிகாரம் பெற்ற நீதிமன்றங்கள் வழங்கும் தீர்ப்பு நெறிச் சட்டங்கள்தாம்.

எனவே நீதித்துறை முறை சட்டமியற்றலின் முக்கியத்துவத்தை எவரும் மறுக்கவியலாது.

முடிவுரை :

மேற்கண்டவாறு முக்கியத்துவங்கள் இருந்தாலும், சட்டநெறி வளர்ந்துள்ள நாடுகளில் எல்லாம், 'சட்டமன்றத்தால் சட்டமியற்றப் படலும்' (Law making by legislation), 'நீதித்துறை முறை சட்டமியற்றலும்' (Judicial Law making) ஆகிய இரண்டும் நீதி வழங்குவதற்கு உற்ற சட்டங்களைத் தரும் சாதனங்களாக உள்ளன என்பதை எவரும் மறுக்கவியலாது. மேற்கண்ட இரண்டும் ஒன்றுக்கொன்று இணைந்தும் இயைந்தும் செல்கின்றன.

-o0o-

(ஹ) சட்டப் பொருள் விளக்கத்தின் பொதுக் கோட்பாடுகள் [General Principles of Interpretation of Statutes]

15. What are the general principles of interpretation of statutes? (சட்டப் பொருள் விளக்கத்தின் பொதுக் கோட்பாடுகள் என்றால் என்ன? விளக்குக.)

(அல்லது)

Logical Interpretation - Write short notes. (தருக்கமுறை பொருள் விளக்கம் – சிறு குறிப்பு எழுதுக.)

முன்னுரை :

நாம் சென்ற பகுதிகளில் 'சட்டப் பொருள் விளக்கம்' தொடர்பான பல அடிப்படையான விஷயங்களை விரிவாகக் கண்டோம். தற்பொழுது இப்பகுதியில், சட்டப் பொருள் விளக்கத்தின் பொதுக் கோட்பாடுகளைக் குறித்து காண உள்ளோம். உடனே, சென்ற பகுதிகளில் கூறப்பட்ட விபரத்திற்கு, முற்றிலும் மாறுபட்ட புதிய ஒரு பகுதியை 'பொதுக் கோட்பாடுகள்' என்ற தலைப்பின் கீழ் காண உள்ளதாக எண்ணி விடுதல் கூடாது. ஏனெனில் சென்ற பகுதிகளில் கூறப்பட்ட சில விஷயங்களையே நாம் இங்கு சற்று விரிவாக பின்வருமாறு காண உள்ளோம்.

அறிஞர் மேக்ஸ்வெல் கூறுவதாவது :

"ஒரு சட்டத்தில் என்ன கருத்து தெரிவிக்கப்பட்டுள்ளது என்பதை, அது வெளிப்படையாகவோ அல்லது உட்கிடையாகவோ எப்படி இருப்பினும், அச்சட்டத்தின் மொழி நடையைக் கொண்டு தீர்மானித்து அதன் மூலம் பொருள் விளக்கமளிப்பவர் (நீதிபதி) தம் முன்பு கொண்டு வரப்பட்ட ஒரு வழக்கோ அல்லது அதன் பொருண்மைகளோ, அக்கருத்திற்குள் வருகிறதா இல்லையா என்பதை தீர்மானிப்பதையே நோக்கமாகக் கொண்டு அனைத்து சட்டப் பொருள் விளக்கக் கோட்பாடுகளும் அமைந்துள்ளன[1]" என்று அறிஞர் மேக்ஸ்வெல் குறிப்பிடுகிறார்.

பொதுவான கோட்பாடுகள் – இரண்டு விதம் :

சட்டப் பொருள் விளக்கமளித்தலுக்கு இரண்டு கோட்பாடுகள் மிகவும்

1. The object of all interpretation of a statute is to determine what intention is conveyed, either expressly or impliedly, by the language used, so far as is necessary for determining whether the particular case or state of facts presented to the Interpretater, falls within it - **Maxwell.**

அடிப்படையானதும் பொதுவானதும் ஆகும். இந்த இரண்டு கோட்பாடுகளை ஒட்டியே, சட்டப் பொருள் விளக்கமளித்தலுக்குண்டான பிற விதிகள் செயல் படுகின்றன என்று சொன்னால் அது மிகையாகா. அவை வருமாறு :

1. இலக்கண மரபு குன்றாப் பொருள் விளக்கம் (Literal or Grammatical Interpretation) :

மேற்கண்ட பொருள் விளக்கக் கோட்பாடு, முதன்மையானதும் முக்கிய மானதும் ஆகும். இதனை சென்ற பகுதிகளில் **'சட்ட வாசகத்திற்கு இணங்கப் பொருள் காணல்' (Litra Legis)**[1] என்ற தலைப்பின் கீழ் நாம் ஏற்கனவே கண்டுள்ளோம்.

அதாவது ஒரு சட்டத்தின் சொற்களும் வாக்கியங்களும் அதன் இலக்கண மரபு குன்றாமல் அப்படியே அகராதியின் விளக்கத்தின்படி பொருள் கொள்ளப்பட வேண்டும். சற்று நுணுகிக் கூறின், அவற்றின் சாதாரண மற்றும் இயற்கையான அர்த்தத்தையே (ordinary and natural meaning) பொருள் விளக்கமாகக் கொள்ள வேண்டும். பயன்படுத்தப் பட்டிருக்கும் வாக்கியமைப்பில் வேறு விதமாகப் பொருள் கொள்ளக் கூடிய சந்தர்ப்பங்கள் இல்லாதபட்சத்தில், அதை அப்படியே, அதாவது மொழி இலக்கணப்படி பொருள் கொள்ள வேண்டும். நீதிமன்றங்களானது, சொற்களின் அல்லது வாக்கியங்களின் இலக்கணரீதியான பொருளுக்கு முரணாக, அவற்றிற்கு பொருள் விளக்கம் கொடுத்தல் கூடாது. மேலும், சொற்களை அவற்றின் பொருளுக்குப் புறம்பாகவோ, சிலவற்றை விட்டுவிட்டோ அல்லது சிலவற்றை சேர்த்துக் கொள்ளும் ரீதியிலோ பொருள் கொள்ளக் கூடாது.

2. தருக்க முறைச் சார்ந்த பொருள் விளக்கம் (Logical Interpretation) :

எவ்வாறு சட்டப் பொருள் விளக்கமளித்தலுக்கு, இலக்கண மரபு குன்றாப் பொருள் விளக்கக் கோட்பாடு முக்கியமானதாக உள்ளதோ, அதே அளவிற்கு மேற்கண்ட தருக்க முறைச் சார்ந்த பொருள் விளக்கக் கோட்பாடும் முக்கியமான தாக உள்ளது. இதனை சென்ற பகுதிகளில் **'சட்டமன்றத்தின் கருத்திற்கிணங்கப் பொருள் காணல்' (Sententia Legis)**[2] என்ற தலைப்பின் கீழ் நாம் ஏற்கனவே கண்டுள்ளோம். இது உண்மையில், இலக்கண மரபு குன்றாப் பொருள் விளக்கக் கோட்பாட்டிற்கு, எதிர்மாறான கோட்பாடாகும்.

அதாவது, ஒரு சட்ட வாசகத்திற்கு அதன் மொழி இலக்கண ரீதிப்படி அகராதிப் பொருளைக் கண்டு பொருள் விளக்கமளிக்கும் பொழுது, அது அச்சட்டத்தின் நோக்கத்திற்கே முரணாகவும், குழப்பமான விளக்கத்தை தருவதாகவும் இருப்பின் என்ன செய்வது ? இங்கு தான் தருக்கவியலின் (Logic)

1. இந்நூலின் அத்தியாயம் 3(அ) பகுதியில் கண்டுள்ளோம்.
2. மேற்கண்ட அடிக்குறிப்பு 1–ல் கண்டதே.

அடிப்படையில் சட்டமன்றத்தின் கருத்தைக் கண்டு பொருள் விளக்கமளிக்கும் இக்கோட்பாடு உதவிக்கு வருகிறது. இங்கு, ஒரு சட்டத்தை இயற்றும் பொழுது சட்டமன்றம் தனது மனதில் எந்தக் கருத்துடன் அச்சட்டத்தை இயற்றியதோ, அதுவே **'சட்டமன்றத்தின் கருத்து அல்லது உள்ளக் கிடக்கை' (Intention of Legislature)** எனப்படுகிறது. எனவே, முரண்பாடான மற்றும் குழப்பமான பொருள் விளக்கம் ஒரு சட்ட வாசகத்திற்கு வருவதாக இருப்பின், அச்சட்ட வாசகத்தை இயற்றும் பொழுது சட்டமன்றம் எதை மனதில் கருதிக் கொண்டு, அதனை இயற்றியது என்பதை அச்சட்டத்தினுள் பொதிந்துள்ள பொருளைக் காண்பதின் வாயிலாக அறிந்து, அதற்கொப்ப பொருள் விளக்கமளித்தலே, மேற்படி கோட்பாடாகும்.

தருக்கவியல் (Logic) என்பது சீரிய சிந்தனையின் மூலம் உண்மையைக் கண்டறியும் ஒரு விஞ்ஞானம் ஆகும். எனவே, ஒரு சட்ட வாசகத்தில் உள்ளதை, உள்ளவாறு அப்படியே பொருள் கொள்ளும் பொழுது முரண்பாடான மற்றும் குழப்பமான அர்த்தங்கள் எழுந்தால், பொருள் விளக்கமளிக்கும் நீதிபதி தமது சீரிய சிந்தனையின் வாயிலாக, அச்சட்டத்தை இயற்றும் பொழுது சட்டமன்றத்தின் கருத்து என்னவாக இருந்தது என்பதைக் கண்டறிந்து, பொருள் விளக்கமளித்து, அச்சட்ட வாசகத்திற்கு உயிரோட்டத்தைக் கொடுப்பதால், இது தருக்கமுறை சார்ந்த பொருள் விளக்கக் கோட்பாடாகிறது (Logical Interpretation).

இதனை **'பொருள் விளக்கமளித்தலின் பொன் விதி' (Golden Rule of Interpretation)** என்றும் கூறுவார்கள். (விரிவாக பின்னர் காண உள்ளோம்).

முடிவுரை :

மேற்கண்ட இரண்டு பொதுக் கோட்பாடுகளின் அடிப்படையில், சட்டப் பொருள் விளக்கமளித்தலுக்கு மூன்று **முக்கிய விதிகள் (Rules)** தோன்றின. பல **துணை விதிகளும் (Subsidiary Rules)** அமைந்தன. அவற்றையெல்லாம் விரிவாக அடுத்து வரும் பகுதிகளில் காண்போம்.

-o0o-

(எ) சட்டப் பொருள் விளக்க விதிகள் [Rules of Interpretation of Statutes]

16. 'Critically examine the rules of Interpretation of Statutes? (செய் சட்டங்களின் பொருள் விளக்கத்தைச் சார்ந்த விதிகளைத் திறனாய்வு செய்க.)

(அல்லது)

Outline the general rules regarding the interpretation of a provision in a statute. (இயற்றப்பட்ட சட்டமொன்றில் உள்ள வகைமுறை ஒன்றிற்கு பொருள் விளக்கமளித்தல் தொடர்பான பொது விதிகளை சுட்டிக் காட்டுக.)

(அல்லது)

State the rules of interpretation of statutes critically. (செய் சட்டங்களின் பொருள் விளக்கத்தைச் சார்ந்த விதிகளை திறனாய்வு செய்து எடுத்துக் கூறுக.)

(அல்லது)

Briefly narrate about the general rules of interpretation of statutes. (சட்ட விளக்க பொது விதி முறைகளைக் குறித்து சுருக்கமாக விவரி.)

(அல்லது)

State the guiding rules of interpretation of a provision in a statute. (செய் சட்டத்தின் பொருள் விளக்கம் காண்பதற்கு வழி காட்டும் விதிகள் யாவை ?)

முன்னுரை :

நாம் சென்ற பகுதிகளில் கண்ட பொருள் விளக்கத்தின் அடிப்படையான விஷயங்கள் குறித்து இதுகாறும் கண்டவற்றை மீண்டும் ஒருமுறை சுருக்கமாக இங்கே நினைவிற்கொண்டு வருதல் நலம். அஃதாவது,

மக்களின் நல வாழ்விற்கு ஏற்ற வகையில் அவர்கள் வாழ்க்கை முறை அமைதல் வேண்டும். அவ்வாறு அமைவதற்கு உற்ற சாதனங்களாக உள்ளவையே சட்டங்களாகும். மக்களின் உரிமை மற்றும் கடமைகளை எடுத்தியம்பி, அவர்களை நெறிப்படுத்தி அதன் மூலம் அவர்கள் நலத்தை காப்பதே சட்டத்தின் பணியாகிறது.

மக்களின் ஏற்றமிகு வாழ்விற்கு தேவையான இத்தகு சட்டங்கள், அரசியல் முறை வளர்ந்துள்ள ஒவ்வொரு நாட்டிலும் தகுந்த சட்டமன்றத்தால் இயற்றப்

படுகின்றன. 'தக்க அதிகாரம் பெற்ற ஆள்வையால் சட்ட விதிகள் சாற்றப் பெறுகின்றன; இதுவே சட்டம் இயற்றலாகும்' என்கிறார் சால்மண்ட்.

சட்டத்திற்கான மூலங்களில் வலிமை வாய்ந்ததும், சிறப்புரிமை உடையதும், சட்டமியற்று முறையே ஆகும். பழைய சட்டங்களை நீக்குதலும், திருத்துதலும் சட்டமியற்று முறையில் சாத்தியமாகும்.

சட்டமியற்றலால் எழும் சட்டங்களை **'இயற்றப்பட்ட சட்டங்கள்' (Enacted Laws)** என்று பொதுவாக பகருகிறோம். பொதுமுறைச் சட்டத்திலிருந்து (Common Law) வேறுபடுத்திக் காட்டும் பொருட்டு இதனை **'இயற்றுமுறைச் சட்டம்' (Statute Law)** என்றும் அழைப்பார்கள்.

சட்டமியற்றலும், பொருள் விளக்கமும் :

சட்டமன்றங்கள் சட்டங்களை இயற்றும்போது, தாங்கள் அதன் மூலம் கட்டுப்படுத்த இருக்கின்ற தற்போதைய சூழ்நிலைகள், வாய்ப்புகள், எதிர்காலத்தில் நிகழும் என எதிர்ப்பார்க்கக்கூடிய நிகழ்ச்சிகள், அவற்றை தீர்ப்பதற்கான வழிவகைகள் இவற்றினை முற்றிலும், தெள்ளத் தெளிவாக கூறிவிட்டால் நீதிமன்றங்களின் பணி மிகவும் எளிதாகிவிடும். ஆனால், இது முடியாத ஒன்று. சமுதாயமானது, தினம் தினம் புதுப்புது மாற்றங்களை அடைந்து கொண்டே இருக்கிறது. அவற்றிற்கு ஈடு கொடுக்கும் வகையில், வருவது அறிந்து, முன்பே சட்டம் இயற்றல் என்பது இயலாத செயல்.

இம்மாதிரியான தருணங்களில், இயற்றப்பட்டிருக்கும் சட்டத்திற்கு பொருள் விளக்கம் கண்டு, அதில் பொதிந்திருக்கும் உண்மைக் கருத்தின் மூலம் தீர்வு காண வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. அதாவது, இயற்றுமுறைச் சட்ட வாசகத்தின் அகராதிப் பொருளைக் காண்பதைவிட அதில் பொதிந்துள்ள பொருளைக் காண்பதே அதனைச் சரியாக புரிந்து கொள்ளும் முறை ஆகும்.

"ஒரு குறிப்பிட்ட சட்டத்தினை சட்டமன்றம் இயற்றும்பொழுது, அதன் உண்மையான கருத்தை (உள்ளக்கிடக்கை)" (True intention of Legislature) கண்டறிவதோ இயற்றமுறைச் சட்டங்களின் பொருள் விளக்கம் (Interpretation of Statute) காணல் என்பதாகும். இதனை "பொருள் அமைதி காணல்" (Construction) என்றும் கூறுவார்கள்.

இயற்றுமுறைச் சட்டங்களின் பொருள் விளக்கம் காண்போர், ஒரு சட்டம் இயற்றப்படும் பொழுது, சட்டமன்றம் என்ன கருத்தை அடிப்படையாக கொண்டிருந்தது, அல்லது அச்சமயத்தில் எந்த மனநிலையில் சட்டமன்றம் செயல் பட்டது என்ற வினாவிற்கு விடை காண முற்படுவர். இந்த விடையில்தான் இயற்று முறைச் சட்டங்களின் பொருள் விளக்கம் அமைந்துள்ளது. பொருள் விளக்கம் காணும் பொறுப்பு சட்டத்தைச் செல்லுறுத்தி நீதி வழங்கும் நீதிபதிகளைத்தாம் சார்ந்துள்ளது. இதுவே பொருத்தமும் ஆகும்.

"சட்டமன்றத்தின் கருத்து", எனப்படுவது Dean Pound, Prof. Gray, Justice Cardojo போன்ற சட்ட அறிஞர்கள் பலராலும் விமர்சிக்கப்பட்டது. இதில் பல குறைகள் இருப்பினும், அவற்றுடனே ஏற்றுக் கொள்ளப்பட்டு, இயற்றுமுறைச் சட்டப் பொருள் விளக்கம் காணும் பணி தொடர்கிறது. அப்பணிக்கு ஏதுவாக சில விதி முறைகள் கையாளப்படுகின்றன. அவற்றினைப் பின்வருமாறு காணலாம்.

சட்டப் பொருள் விளக்க விதிகள் - மூவகை :

இயற்றப்பட்ட சட்டமொன்றிற்கு பொருள் விளக்கமளிக்க மூன்று விதிகள் பயனுறுகின்றன. இவற்றினை **மூலாதார விதிகள்** என்றே கூறலாம். ஏனெனில், சட்டப் பொருள் விளக்கத்திற்கு, இவை அடிப்படையானதாகவும், முதற்கண் பயன்படுவதாகவும் உள்ளன. அவை,



(1) இலக்கண மரபு குன்றாப் பொருள் விளக்க விதி (Literal or Grammatical Rule of Interpretation) :

இவ்விதி இயற்றப்பட்ட சட்டங்களுக்கு பொருள் விளக்கம் கூறுவதில் **முதன்மையான விதி** ஆகும். இவ்விதியின் பொருள் யாதெனில், சொற்களும் வாக்கியங்களும் இலக்கண மரபு குன்றாமல் பொருள் கொள்ளப்பட வேண்டும் என்பதாகும். அதாவது, அவைகளுடைய சாதாரண அர்த்தத்தையே (Ordinary Meaning) பொருள் விளக்கமாக எடுத்துக் கொள்ள வேண்டும். பயன்படுத்தப் பட்டிருக்கும் வாக்கியமைப்பில் வேறுவிதமாகப் பொருள் கொள்ளக்கூடிய சந்தர்ப்பங்கள் இல்லாதபட்சத்தில், அதை அப்படியே (இலக்கண முறைப்படி) பொருள் கொள்ள வேண்டும்.

இவ்விதியைப் பற்றி சற்று நுணுக்கமாக கூற விரும்பினால், **Abley v.**

Dale[1] என்ற வழக்கில் தலைமை நீதிபதி ஜெர்விஸ் (Jervis C.J) கூறிய கூற்றை நோக்க வேண்டும். அதன்படி, இயற்றப்பட்ட ஒரு சட்டத்தில், சட்டமன்றம் பயன் படுத்தியுள்ள மொழி நடையானது சுற்றி வளைக்காமல், சிக்கலில்லாமல், மிகவும் தெள்ளத் தெளிவாக, ஒவ்வொரு வாக்கியமும் ஒரே ஒரு கருத்தைத் தவிர வேறு கருத்துகளுக்கு இடம் கொடுக்காமல் இருப்பின், அச்சட்டத்தை அமலாக்கும் போது விளைவுகள் எவ்வளவு கடுமையானதாகவும், அடிமுட்டாள்தனமாகவும், சாதாரண பொது நியதிக்கு புறம்பாகவும் இருந்தாலும், அது ஏற்றுக் கொள்ளப்பட்டு அமலாக் கப்பட்டே தீர வேண்டும்.[2]

மேலும் **Barrell v. Fordree** என்ற வழக்கில் **நீதிப்பெருமகனார் வாரிங்டன் (Lord Warrington)** அவர்கள், "இவ்விதியைக் கையாளும் பொழுது, கையிலிருக்கும் வழக்கின் தன்மையைப் பார்க்காமல், சொற்களின் இயற்கையான அர்த்தத்தைக் கொள்வதுதான் மிகவும் சரியானதும் பாதுகாப்பானதுமான முறையாகும்" என்று கூறுகிறார்.

ஆனால் மேற்கண்ட மாதிரியான சந்தர்ப்பத்தில், ஒரு சட்ட வாசகத்திற்கு இரண்டு பொருள் விளக்கங்கள் சாத்தியமாக இருப்பின், அதில் எது நியாயமான தாகவும், சரியானதுமாகவும் மற்றும் அறிவுபூர்வமாகவும் (just, reasonable and sensible) உள்ளதோ, அதையே நீதிமன்றம் மேற்கொள்ள வேண்டும்.

நீதிமன்றங்களானது, சொற்களின் அல்லது வாக்கியங்களின் இலக்கண ரீதியான பொருளுக்கு முரணாக அவற்றிற்கு பொருள் விளக்கம் கொடுத்தல் கூடாது. மேலும் சொற்களை அவற்றின் பொருளுக்குப் புறம்பாகவோ, சிலவற்றை விட்டுவிட்டோ அல்லது சிலவற்றை சேர்த்துக் கொள்ளும்ரீதியிலோ பொருள் கொள்ளக் கூடாது. இவ்விதிக்கு உதாரணமாக பின்வரும் வழக்குகளைக் காண்போம்.

Powley v. Whardall[3]

ஒரு வாகனத்தை பாதையை கவனிக்காமல் பயன்படுத்தும் மற்ற நபர்களுக்கு ஊறு ஏற்படுமாறு செலுத்துதல், மோட்டார் வாகனச் சட்டப்படி குற்றமாகும். இதில் உள்ள **'மற்ற நபர்கள்'** என்ற சொல், தான் ஓட்டிச் சென்ற வாகனத்திற்குள் இருக்கும் நபர்களை உள்ளடக்கியதாகாது என்றும், மோட்டார் வாகனச் சட்டத்தின் முக்கிய நோக்கமே வாகனத்திற்கு வெளியே நெடுஞ் சாலையை பயன் படுத்துவோர்களைப் பாதுகாப்பதுதான் என்றும் ஒட்டுநரின் சார்பில் இவ்வழக்கில் வாதிடப்பட்டது. ஆனால், நீதிமன்றம் 'மற்ற நபர்கள்' என்ற

1. 1883 (8 App. cases) 354, 384
2. The precise words used are plain and unambiguous, we are bound to construe them in their ordinary sense eventhough it does lead to an absurdity or manifest injustice. - **Jervis C.J.**
3. 1966

சொல்லை அதனுடைய இலக்கண ரீதியில் ஒட்டுநரைத் தவிர மற்ற அனைவரும் என்று பொருள் கொண்டு, **வாகனத்திற்குள் இருக்கும் நபர்களை அச்சுறுத்தும் வகையில் வாகனத்தை ஓட்டியதும் குற்றம்,** எனத் தீர்ப்பளித்தது.

Miller v. Salomons[1]

மேற்படி வழக்கில், வாதி யூத மதத்தைச் சார்ந்தவர். யூத மதம் என்பது, கிறிஸ்து பிறப்பதற்கு முன்னால் 3761–ஆம் ஆண்டில் வாழ்ந்த ஜேகப் என்பவரது வழித் தோன்றல்களாக உள்ளவர்கள் பின்பற்றும் மதமாகும். இவர்களது சகாப்தம் கி.மு. 3761–ஆம் ஆண்டிலிருந்து தொடங்குகிறது. இந்த மதப்பிரிவை சார்ந்த மேற்படி வாதி தேர்தலில் வெற்றி பெற்று பாராளுமன்ற உறுப்பினர் ஆனார். ஆனால் அவர் பதவி ஏற்றுக் கொள்ளும் முன் உறுதிமொழி எடுத்துக் கொள்ள வேண்டிய நிகழ்ச்சி தடை செய்யப்பட்டது. ஏனெனில், பாராளுமன்ற விதிகளானது, **"ஒவ்வொரு பாராளுமன்ற உறுப்பினரும், உண்மையான ஒரு கிறிஸ்தவருக்கு உண்டான நம்பிக்கையுடன் உறுதிமொழி எடுத்துக் கொள்ள வேண்டும்; அதற்குப் பிறகுதான் ஓட்டளிக்கும் உரிமை அளிக்கப்படும்"** என்று கூறுகிறது. ஆனால் மேற்படி வாதியோ ஒரு யூதர்; உண்மையான கிறிஸ்தவர் கிடையாது. எனவே அவர் உறுதிமொழி எடுக்க முடியாது, என மேற்படி விதிகளின்படி தடை செய்யப்பட்டார்.

அதற்கு நீதிமன்றம் பாராளுமன்ற விதிகளின்படியான **"உண்மையான கிறிஸ்தவர்களுக்கு உண்டான நம்பிக்கை"** என்ற வாக்கியம் இலக்கண ரீதியில் பார்க்கும் பொழுது ஒரு உண்மையான கிறிஸ்தவனையே குறிக்கிறது; ஆனால் விதிகளை இயற்றியவர்களின் நோக்கத்தை என்னவென்று ஆராய்ந்தால், அந்த வாக்கியத்தின் மூலம் உறுப்பினர்களிடையே உள்ள விசுவாசத்தை சோதிப்பதற்கு என்ற அடிப்படையில் அவ்விதிகள் இயற்றப்பட்டதேயன்றி, ஒரு குறிப்பிட்ட மதத்தினர் மட்டுமே பாராளுமன்ற உறுப்பினராக முடியும் என்ற நோக்கத்துடன் இயற்றப்பட்டதன்று. எனவே, வாதியும் விசுவாசம் உள்ளவராக உறுதிமொழி எடுக்க அனுமதிக்கப்படலாம் என மேற்படி வழக்கில் தீர்ப்பு வழங்கப்பட்டது.

Mathew v. Dobbins[2]

இவ்வழக்கில், 'குத்தகைப் பணம் செலுத்தாதற்காக, குத்தகை விட்டவர் (Lessor) உடைமை மீட்புரிமைக்காக (Right of Re-entry) வழக்கு தொடரும் பட்சத்தில் குத்தகை எடுத்தவர் (Lessee) அய்ந்து தினங்களுக்குள் குத்தகை பாக்கியையும், செலவுத் தொகைகளையும் நீதி மன்றத்தில் செலுத்தி விட்டால், வழக்கு நிறுத்தப்பட வேண்டும்' என்ற சட்டப்பிரிவு நீதிமன்றத்தால் இலக்கண ரீதியாக பொருள் கொள்ளப்பட்டு, ஓர் அன்னியர் (Stranger) அந்த பாக்கியை நீதிமன்றத்தில் செலுத்தியிருப்பதன் பேரில் வழக்கு முடிந்ததாக ஆகாது, எனப்பட்டது.

1. 1853
2. 1963

Kenyon v. Eastwood

குற்றவியல் சட்ட விதியின்படி குற்றவாளி ஒருவரை தண்டித்து வழங்கப்படும் தீர்ப்பானது, **'திறந்த நீதிமன்றத்தில்' (in open court)** பகரப்பட வேண்டும். அதாவது சம்பந்தப்பட்ட தீர்ப்பு, தண்டனைத் தீர்ப்பாக இருக்கும் பட்சத்தில், அது குற்றவாளியின் முன்னர்தான் பகரப்பட வேண்டும் என்பதே மேற்படி விதி வலியுறுத்தும் கருத்தாகும். ஆனால், மேற்படி வழக்கில் அத்தண்டனைத் தீர்ப்பானது, அவ்வழக்கு சம்பந்தப்பட்ட நீதிமன்றத்தில் பகரப்படாமல், அந்த நீதிமன்ற அறைக்கு அடுத்து இருக்கும் நீதிமன்ற அறையில் பகரப்பட்டது. அந்த நீதிமன்ற அறையும் பொதுமக்கள் பார்க்கும் வண்ணம் உள்ள திறந்த நீதிமன்றம்தான். ஆனால் மேற்படி குற்றவியல் சட்ட விதியின் இலக்கணரீதியான பொருள்படி, அவ்வழக்கு நடைபெறும் திறந்த நீதிமன்றத்தில் அத்தண்டனைத் தீர்ப்பு பகரப்படாததால், அத்தீர்ப்பு செல்லாதது என அறிவிக்கப்பட்டது.

1. (i) இல்லாமையை அனுமானித்தல் கூடாது (Omission not to be inferred) :

இலக்கண மரபு குன்றாப் பொருள் விளக்க விதிக்கு துணை விதியாக இவ்விதி கருதப்படுகிறது. சட்டமன்றம் ஒரு குறிப்பிட்ட விஷயத்தை மனத்தில் கொண்டிருந்தது. ஆனால், சொல்வடிவம் கொடுக்காமல் விட்டுவிட்டது என்பதை நிரூபிப்பதற்குத் தக்க முகாந்திரங்கள் இல்லாத பட்சத்தில் சட்டத்தில் எதையும் சேர்க்கவோ அல்லது எடுக்கவோ கூடாது என்பது இந்த துணை விதியின் முக்கியப் பொருளாகும். இதையே Lord Loreburn, L.C., 'சட்டத்தின் நான்கு மூலைகளுக்குள்ளேயே தகுந்த காரணங்கள் காணப்பட்டாலன்றி, சட்டத்தில் புதிதாக சொற்களைப் புகுத்திச் சேர்த்து வாசிப்பதற்கு நமக்கு எந்தவித உரிமையும் கிடையாது' என்று கூறுகிறார்.

Felix v. Thomas[1]

இவ்வழக்கில், 'எந்தவிதமாகவும் அல்லது எந்த இடத்திலும் தன்னுடைய ஆட்சிக்குள் ஒரு நபர் வைத்திருக்கும் பொருள் திருடப்பட்டது என்று அரசு காவலர் சந்தேகிக்கும் பட்சத்தில், அந்த நபரைப் பிடியாணையில்லாமல் கைது செய்யலாம்' என்ற சட்டப் பிரிவை ஆராய்ந்த Trinidad உயர் நீதிமன்றம் **'எந்த இடத்திலும்'** என்ற சொல்லை **'எந்தப் பொது'** என்ற சொல்லை புகுத்தி வாசித்தது, தவறு என்று 'Privy Council' தீர்ப்பளித்தது. அவ்வாறு செய்ததற்கான அவசியம் ஏதும் இல்லை. ஏனெனில், அந்தச் சட்டப் பிரிவு மிகவும் தெளிவாக இருக்கிறது என்று கூறியது.

Alavi v. Safia[2]

மேற்படி வழக்கில் **கேரளா உயர்நீதிமன்ற நீதியரசர் பாலகிருஷ்ணன்**

1. 1967
2. A.I.R. 1993 Kerala 21

அவர்கள் இலக்கணரீதியான பொருள் விளக்க விதியைப் பயன்படுத்தி 1986–ஆம் ஆண்டின் விவாகரத்தின் மீதான இசுலாமிய பெண்களின் (உரிமைகள் பாதுகாப்புச்) சட்டத்திற்கு பொருள் விளக்கம் அளிக்கும் பொழுது, விவாகரத்தான ஒரு இசுலாமிய பெண்மணி, பிறன்மனை புணர்ந்து வாழ்ந்து வந்தால், அவர் ஜீவனாம்சம் கோர உரிமையில்லை என மேற்படி சட்டம் குறிப்பிடவில்லை என்று கூறினார். அதாவது விவாகரத்தான பிறகு ஒரு இசுலாமிய பெண்மணி பிறன்மனை புணர்ந்து வாழ்ந்து வந்தால், அவருக்கு விவாகரத்து செய்த கணவரிடமிருந்து ஜீவனாம்சம் பெற்றுத்தர நீதிமன்றம் மறுப்பது முறையற்றதாகும், என்று கூறப் பட்டது. பிறன்மனை புணர்தல் என்றால், திருமணத்தால் பந்தம் கொண்டவருடன் படுக்கையை பகிர்ந்து கொள்ளாமல், பிறருடன் உடலுறவு கொண்டு வாழ்ந்தால் என்பதாகும். விவாகரத்திற்கு பிறகு திருமண பந்தம் அற்றுப் போய் விடுகிறது. ஒருவருக்கு மனைவியாக இருந்தவள், மீண்டும் தனியொரு பெண்ணாகி விடுகிறாள். எனவே விவாகரத்தான மனைவியின் பிறன்மனை புணர்ச்சி வாழ்க்கையானது, அவர் ஜீவனாம்சம் பெறுவதற்கு அவருக்கு உள்ள உரிமையை மேற்படி சட்டம் இழக்குமாறு செய்யவில்லை. மேற்படி தீர்ப்பு சட்டப்படி சரியென்றாலும், பிறன் மனை புணர்ந்து வாழ்தலை சட்டப்படியாக்குவது போன்றும் உள்ளது.

எனினும், இலக்கணரீதியாகப் பொருள் கொள்ளும் பொழுது, சட்டத்தில தெளிவாகச் சொல்லப்பட்டுள்ளவற்றை அப்படியேதான் பொருள் கொள்ள வேண்டுமே தவிர 'இல்லாததை' இருப்பதாகக் கொண்டு பொருள் விளக்கமளித்தல் கூடாது.

மேற்படி சட்டத்தில், 'இல்லாதது' என்னவென்றால், ஒரு இசுலாமிய பெண்மணி, விவாகரத்தான பிறகு பிறன்மனை புகுந்து வாழ்ந்து வந்தால், அவர் தனது முந்தய கணவரிடமிருந்து ஜீவனாம்சம் பெற உரிமையில்லை, என்பதேயாகும்.

மேற்கண்ட கருத்துக்களையும், வழக்குகளையும் பார்க்கும் பொழுது, இலக்கணரீதியாகப் பொருள் கொள்வது என்பது மிகவும் கருத்துடனும், கவனத்துடனும் பின்பற்ற வேண்டிய ஒன்று, என்பது தெளிவாகப் புலனாகும் என்பதில் அய்யமில்லை. இனி அடுத்த விதியைக் காண்போம்.

2. பொன் விதி அல்லது நலமிக்க விதி அல்லது தருக்கமுறை சட்டப் பொருள் விளக்கம் (Golden Rule of Interpretation or Logical Interpretation) :

இவ்விதி உண்மையில், 'இலக்கண மரபு குன்றாப் பொருள் விளக்க விதியின் (Literal Interpretaion)' ஒரு மாறுபட்ட நிலையே ஆகும்.

சில தருணங்களில் சட்ட வாசகம் தெளிவு இன்றி, முன்னுக்குப் பின் முரணாக இருக்கலாம். இந்நிலையில் சட்டமன்றத்தின் உள்ளக் கிடக்கையை அல்லது கருத்தைக் (Intention) காண்பதற்கு, இவ்விதியின்படி சட்ட வாசகத்தையும்

தாண்டிச் செல்ல, வேறு மூலங்களின் வழியாக சட்டமன்றத்தின் கருத்தை காண முயலுதல் வேண்டும். இது நீதிமன்றத்தின் உரிமையும் கடமையும் ஆகும்.

சட்ட வாசகத்தில் தவறுதல்கள் ஏற்பட வாய்ப்புண்டு. சில சமயங்களில் அதில் ஏற்படும் எழுத்துப் பிழைகள் அல்லது வாசகப் பிழைகள் காரணமாக, அதன் பொருளே விசித்திரமானதாக கூட மாறிவிடலாம். சட்டமன்றம் கருதிய பொருள் இதுவாக இருக்காது என்பது தெளிவாகத் தெரியும். இந்நிலையில் அந்தப் பொருள் இவ்வாறு இருந்திருக்க வேண்டும் என்பதை ஊகித்து அப்பொருளைக் குறிக்கும் வாசகம் சட்டத்தில் இருப்பதாகக் கொண்டு அதற்குப் பொருள் விளக்கம் காணப் படுகிறது.

இவ்விதியைப் பற்றி சுருக்கமாக கூறப்போனால், இலக்கண மரபு குன்றாமல் சட்டத்திற்கு பொருள் விளக்கம் கண்டு, ஒரு வழக்கிற்குத் தீர்வு காண எத்தனிக்கும்போது, அத்தீர்ப்பு சட்டமன்றத்தின் கருத்திற்கு முரண்பாடு விளைவிக்குமேயானால் அல்லது ஓர் அடிமுட்டாள்தனத்திற்கு அழைத்துச் செல்லுமேயானால், அதனைத் தவிர்ப்பதற்காக அச்சட்ட வாசகத்தின் மொழி நடையினை மாற்றி பொருள் கொள்ளலாம். ஆனால் அதற்கு மேலே செல்லக்கூடாது.

Lee v. Knapp[1]

1960–ஆம் ஆண்டின் சாலைப் போக்குவரத்து சட்டத்தின் 77(1)–வது பிரிவானது, **"விபத்துக்குள்ளான வாகன ஓட்டுநர், விபத்து நிகழ்ந்த பின் வாகனத்தை நிறுத்திச் செல்ல வேண்டும்"** என்று கூறுகிறது. இவ்வழக்கில், விபத்துக்குள்ளான வாகனத்தை ஓட்டிய ஓட்டுநர், சட்டம் கூறியது போலவே விபத்து நிகழ்ந்த பின் வாகனத்தை, தாம் **சற்று நிறுத்திவிட்டு,** பிறகு சென்ற தாகவும், ஆகவே தாம் சட்டத்தை மீறியதாக கருத முடியாது என்றும் வாதிட்டார். மேற்கண்ட சட்டப்பிரிவினை அதன் இலக்கண அர்த்தத்தில் பொருள் கொண்டால், ஓட்டுநர் அச்சட்ட பிரிவினை மீறியதாக கருதமுடியாததுதான், ஆனால், இது சட்டமன்றம் எண்ணிய நோக்கத்திற்கு முரணாகவும், அபத்தமாகவும் உள்ளது. ஆகவே இதனைத் தவிர்ப்பதற்காக, நீதிமன்றம் பொருள் விளக்கத்தின் இப்பொன் விதியைக் கொண்டு, **'நிறுத்திச் செல்ல வேண்டும்'** என்றால் சம்மந்தப்பட்ட அதிகாரிகள் வந்து, விபத்துக்கான காரணங்களை ஆராய்ந்து, அவர்களுக்குத் தேவையான விவரங்கள் பெறப்படும் வரை 'நிறுத்த வேண்டும்' என்ற பொருளே தவிர **"நிறுத்தி விட்டுச் சென்று விடலாம் என்பதன்று"** என்று தீர்ப்பளித்தது.

Day v. Simpson

1843–ஆம் ஆண்டின் நாடக அரங்குகள் சட்டமானது, உரிமம் பெறாமல் நாடகம் நடத்துவதற்கு, அபராதம் விதிக்கிறது. சில புத்திசாலிகள் என்ன செய்தார்கள் என்றால், நாடக மேடையில் முகம் பார்க்கும் கண்ணாடிகளை பெரிய

1. 1967

அளவில் வைத்து விட்டு, மேடைக்கு கீழே நின்று கொண்டு தங்களது பிம்பங்கள் மேடையில் உள்ள கண்ணாடியில் தெரியும்படிக்கு, நாடகங்களை நடத்தினர். இவ்வாறு செய்தாலும், அது மேடையில் நாடகத்தை நடத்துவதற்கு சமமானதாகும் என்றும், எனவே மேற்படி சட்டம் அம்மாதிரியான நாடக நிகழ்ச்சிக்கும் பொருந்தும் என்றும், நீதிமன்றம் மேற்படி பொன் விதியைப் பயன்படுத்தி தீர்ப்பு வழங்கியது. சுருங்கக்கூறின், **'சோறு ஆக்கினேன்'** என்பதிலும், **'சாதம் வடித்தேன்'** என்பதிலும் முடிவாகக் கிடைப்பது **'சாதம்'தான்.** இந்த அடிப்படை யில்தான் மேற்படி வழக்கிலும் பொருள் காணப்பட்டது என்றால், அது மிகையாகா.

(3) சட்டத்தின் நோக்கத்திற்கு ஊறு விளைவிக்காத தாராளமான பொருள் விளக்க விதி (Liberal Rule of Interpretation) அல்லது கேடு அகற்றும் விதி (Mischief Rule of Interpretation) அல்லது ஹேடன் வழக்கின் விதி (Rule in Heydon's Case):

இத்தாராளமான பொருள் விளக்க விதியின்படி, சட்டத்தின் அடிப்படை நோக்கத்திற்கும், அதனுடைய காரண காரியங்களுக்கும் ஊறு ஏற்படாதவாறும் மேலும் எந்தத் தீமைகளை அழிக்கவும் அல்லது திருத்தவும் சட்டம் முயலுகிறதோ அந்த முயற்சிக்குத் தடங்கல் ஏற்படாமலும் சட்டத்திற்கு பொருள் விளக்கம் கொடுக்கலாம். ஆனால் எந்த ஒரு சூழ்நிலையிலும், சட்டமன்றம் பயன்படுத்தியுள்ள மொழி நடைக்கு பொருத்தமில்லாமலும் மற்றும் முரணாகவும் இருத்தல் கூடாது.

பொதுமுறைச் சட்டவிதிகள் (Common Law) சில குறைகளைக் கொண்டிருக்கலாம். அதனால், கேடு விளைவதைத் தடுப்பதற்கென்று ஒரு சட்டம் இயற்றப்படலாம். இவ்வாறு இயற்றப்படும் சட்டத்திற்குப் பொருள் விளக்கம் காணும் பொழுது, அதற்கு முன்பிருந்த பொதுமுறைச் சட்டங்கள் என்ன, அதனால் விளையும் எந்தக் கேட்டைப் போக்குவதற்கென்று சட்டம் இயற்றப்பட்டுள்ளது என்பதை நினைவிற் கொள்ள வேண்டும். அந்தக் கேடு போக்கப்படும் வகையில் சட்டத்தின் பொருளைக் காண வேண்டும் என்பது விதி. இதை, **'கேடு அகற்றும் விதி'** என்பார்கள். ஹேடன் வழக்கில் ஏற்பட்ட தீர்ப்பே இவ்விதிக்கு மூலமாகும்.

Heydon's Case[1]

மேற்படி வழக்கில் ஏற்படுத்தப்பட்ட விதிகள்தாம், சட்டத்தின் நோக்கத்திற்கு ஊறு விளைவிக்காத தாராளமான பொருள் விளக்க விதியின் பிறப்பிடமாகும், என்று கூறினால் அது மிகையாகா.

இவ்வழக்கின் பொருண்மைகளின்படி, ஒரு கல்லூரி தனக்குச் சொந்தமாக நிலம் ஒன்றை கொண்டிருந்தது. அக்கல்லூரியின் வார்டன் (Warden), அந்நிலத்தின் ஒரு பகுதியை தனது மனைவிக்கும் மகன்களுக்கும் அவர்கள் ஆயுள் வரை அதில் வாழலாம் என எழுதிக் கொடுத்து விட்டார். பின்னர் மீதமிருக்கும்

1. (1584) 3 Co. REP. 7 a, English Reports. Vol. LXX VI, King's Bench, V. p. 637

கல்லூரி நிலம் முழுவதையும் ஹைடனுக்கு (Hydon) 80 ஆண்டு காலத்திற்கு குத்தகைக்கு விட்டுவிட்டார். இவ்வாறு தனக்கு வேண்டியவர்களுக்கெல்லாம், கல்லூரி நிலத்தை பங்கிட்டுக் கொடுத்து விட்டு மேற்படி வார்டன் என்ன செய்தார் என்றால், அக்கல்லூரியையும், அதன் எல்லா நிலத்தையும் அரசருக்கும் கொடுத்து விட்டார். அரசாங்கம் அக்கல்லூரியையும், நிலத்தையும் கையகப்படுத்திய பிறகு, முதற் கட்டமாக, 80 ஆண்டு கால குத்தகை அனுபவத்தில் இருக்கும் மேற்படி ஹைடன், அந்நிலத்தில் அத்து மீறி நுழைந்து விட்டார் எனக்கூறி அவர் மீது வழக்கிட்டது.

இங்குதான் பிரச்சனை எழுந்தது. அதாவது ஒரே நிலம் ஒரே சமயத்தில் இருவருக்கு எப்படி தனித்தனியாக பாத்தியதை உடையதாக இருக்க முடியும்? நிலத்தின் ஒரு பகுதி மனைவிக்கும் மகள்களுக்கும் அவர்களது ஆயுள் முடிய; மீதமிருக்கும் பகுதி ஹைடனின் 80 ஆண்டு கால கட்டத்திற்கான குத்தகை அனுபவத்தில்; ஆனால் அந்நிலம் முழுவதும் அரசுக்கு கொடுக்கப்பட்டு விடுகிறது. எனவே இது குறித்து சட்டம் என்ன கூறுகிறது என ஆராயப்பட்டது.

பிரிட்டன் கருவூல மன்றத்தின் (கோமகன்கள் சபை) தலைமைக் கோமகன் மற்றும் பிற கோமகன்களால் (Chief Baron and the other Barons of the Exchequer) மேற்படி பிரச்சனை குறித்த சட்டமான, அரசர் ஹென்றி காலத்தின் 31–வது சட்டம் பரிசீலனை செய்யப்பட்டது. அச்சட்டத்தை இயற்றும் பொழுது பிரிட்டன் பாராளுமன்றத்தின் கருத்து என்னவாக இருந்தது, எக்கேட்டைத் தவிர்ப்பதற்காக அச்சட்டம் கொண்டு வரப்பட்டது என்றெல்லாம் ஆராயப்பட்டது. முடிவாக, **ஒரு நிலத்தினை ஒரே சமயத்தில் இருவருக்கு உரிமையாக்குதல் எனும் கேடு தவிர்க்கப் படல் வேண்டும் (To avoid doubling of estates in the same land) என்பதே பாராளுமன்றத்தின் கருத்தெனக் கண்டறியப்பட்டது. இதனடிப்படையில் ஹைடனின் குத்தகை தொடர்ந்து 80 ஆண்டு காலத்திற்கு அமலில் இருக்கும்; அவர் அத்துமீறி நுழைந்தவரல்ல என மேற்படி வழக்கில் தீர்ப்புக் கூறப்பட்டது.**

மேற்படி கோமகன்கள் அனைவரும் சேர்ந்து, இப்படிப்பட்ட சூழ்நிலையில் எவ்வாறு சட்டத்தை பொருள் கொள்வது என்பதற்குண்டான ஒரு பொதுக் கொள்கையை (General Formula) நான்கு விபரங்களின் அடிப்படையில் வகுத்தனர். அவற்றை **கோக் பெருமகனார் (Lord Coke)** வெளியிட்டார்.

"பொதுவாக எல்லா இயற்றப்பட்ட சட்டங்களின் நியாயமான மற்றும் உண்மையான பொருள் விளக்கத்திற்கு, அந்நான்கு விவரங்களை கருத்தில் கொள்ள வேண்டும்", என்று **கோக் பெருமகனார் (Lord Coke)** கூறினார். அவை வருமாறு

கேடு அகற்றும் விதிகள் அல்லது ஹைடன் வழக்கின் விதிகள் (Mischief Rules or Rule in Heydon's Case) :

I. செய் சட்டம் (Act) இயற்றப்படுவதற்கு முன்னால் பொதுமுறைச் சட்டம் (Common Law) என்னவாக இருந்தது ?

2. பொதுமுறைச் சட்டம் நிவர்த்தி செய்யாத குற்றங்குறைகள் யாவை ?

3. அக்குறைகளை நிவர்த்தி செய்ய பாராளுமன்றம் எத்தீர்வழியினைக் கொடுக்க முடிவெடுத்துள்ளது ?

4. அந்தத் தீர்வழியின் நோக்கம் என்ன ?

மேற்கண்ட இந்த நான்கு விவரங்களும் **'கேடு அகற்றும் விதிகள்' (Mischief Rule)** என்றும் **'ஹேடன் வழக்கின் விதி' (Rules in Heydon's case)** என்றும் அழைக்கப்படுகிறது.

Smith v. Hughes[1]

1959–ஆம் ஆண்டின் தெருக் குற்றச் சட்டத்தின் 1(1) பிரிவானது, **பரத்தையர்கள் (Prostitutes), தெருவில் இருந்து கொண்டு ஆடவரைக் கவர முனைவது குற்றம்,** என்று கூறுகிறது. மேற்படி வழக்கில் பரத்தை ஒருத்தி (விலைமகள்) தன் வீட்டின் **மேல்மாடத்திலிருந்தும்** பலகணி வழியாகவும் ஆடவரை அழைத்தது குற்றமாகாது என்றும், ஏனெனில், **'தெருவிலிருந்து'** என்ற சொல் இதற்குப் பொருந்தாது என்றும் வாதிடப்பட்டது. ஆயினும், அதைக் குற்றம் எனத் தீர்ப்பளித்த **Lord Parker, C.J.** அவர்களின் வாக்கியங்களை கவனிக்கையில், – "சட்டம் எந்த கேட்டை களைவதற்கு விரும்பியது என்ற நிலையிலிருந்து நான் இந்தப் பிரச்சனையை அணுகுகிறேன். பரத்தையர்களின் தொந்தரவுகள் இல்லாமல் கண்ணியமாக நடந்து செல்வதற்கு வழி செய்வதே இதன் நோக்கம். எனவே, அந்த நிலையில் இருந்து பார்க்கும் பொழுது, ஒரு பரத்தை, தெருவில் நடந்து செல்லும் ஆடவரைக் குறிப்பாக, எந்த இடத்தில் இருந்து கூப்பிட்டாள் என்று கவனிப்பது அனாவசியமானதும், பொருத்தமில்லாததுமாகும்" என்று கூறினார்.

Kelappan v. State[2]

இன்னமும் பொழுது புலராத அதிகாலை வேளை. அப்பொழுது இரண்டு ஆண்கள் மற்றும் இரண்டு பெண்கள் ஆக மொத்தம் நான்கு பேர்கள், ஒரு அரசு உயர்நிலைப்பள்ளி வராண்டாவில் படுத்துத் தூங்கிக் கொண்டிருந்தனர். அச் சமயத்தில் அப்பள்ளி அருகே ரோந்து வந்து கொண்டிருந்த அப்பகுதி காவல்துறை உதவி ஆய்வாளரின் கழுகுக் கண்களில் அவர்கள் அவ்வாறு படுத்துக் கொண்டிருந்தது தென்பட்டு விட்டது. உடனே அவர்களைத் தட்டி எழுப்பி, காவலருக்கே உரிய கடுமையுடன் **"ஏன் இந்த அரசுக் கட்டிடத்தில், அதுவும் இந்த நேரங்கெட்ட வேளையில் (untimly hour) படுத்துத் தூங்கிக் கொண்டிருக்கிறீர்கள் ?"** என வினவினார். அதற்கு அவர்கள் திருப்திகரமான பதிலைத் தரவில்லை. எனவே அவர்கள் மீது கேரளா காவல் கட்டம், பிரிவு 47–ன் படியிலான குற்றத்திற்காக குற்ற வழக்கிடப்பட்டது. மேற்படி பிரிவு 47–ஆனது, **தகுந்த முகாந்திரமில்லாமல் அரசுக் கட்டிடங்களால் வலிய நுழைந்திருத்தல், தண்டிக்கத் தக்கது** என்று கூறுகிறது.

1. 1960 (2) W.L.R. 830
2. 1989 (2) K.L.T. 651

இச்சமயத்தில்தான் மேற்கண்டவாறு குற்றஞ்சாட்டப்பட்ட நால்வரும் சட்டப் பிரச்சனை ஒன்றை நீதிமன்றத்தின் முன் வைத்தனர். என்ன செய்வது ? குற்றச்சாட்டிலிருந்து விடுதலை பெற்றதாக வேண்டுமென்ற அவா, அவர்களுக்கு. அந்நால்வரும் எழுப்பிய சட்டப் பிரச்சனை இதுதான். அதாவது, மேற்படி பிரிவு 47–ன் கீழ் குற்றமொன்று புரியப்பட்டுள்ளது என்று கூற வேண்டுமென்றால், இந்திய தண்டனைச் சட்டம் பிரிவு 441–ன்படி **'குற்றமுறு அத்து மீறல்' (Criminal Tresspass)** நிகழ்ந்திருக்க வேண்டும் என்றும், மேற்படி பிரிவு 441–ன்படி 'குற்றமுறு அத்து மீறல்' என்பது, மற்றொருவரின் சொத்திற்குள் குற்றமொன்றைச் செய்வதற்காகவோ, குற்றங்கருதி மிரட்டுவதற்காகவே அல்லது அச்சொத்தின் உடைமையில் உள்ளவரின் மானத்திற்கு பங்கம் விளைவிக்கவோ அல்லது அவருக்கு தொந்தரவு தரவோ எண்ணங்கொண்டு நுழைதல் அல்லது சட்ட விரோதமாக தங்கியிருத்தல் என்றும், தாங்கள் நால்வரும் மேற்படி பிரிவு 441–ல் கண்டவாறான எண்ணங்கொண்டு அவ்வரசு பள்ளியில் நுழையவோ அல்லது தங்கவோ இல்லை என்றும், அதனால் தங்களை விடுதலை செய்ய வேண்டுமென்றும் குற்றஞ்சாட்டப்பட்ட நால்வரும் வாதிட்டனர்.

இவர்களது வாதத்தை கூர்ந்து ஆராய்ந்த கேரளா உயர் நீதிமன்றத்தின் 'டிவிஷன் பெஞ்ச்' (Division Bench), பின்வரும் பொருள் விளக்கத்தின் அடிப்படையில் மேற்படியார்களின் வாதத்தை நிராகரித்து தீர்ப்பு வழங்கியது. அதாவது, கேரளா காவல் சட்டமானது, அதன் 47–வது பிரிவில், இந்திய தண்டனைச் சட்டத்தின் 441–வது பிரிவின்படியிலான 'குற்றமுறு அத்துமீறலுக்கான' உள்ளடக்கங்களை (ingredients) சேர்க்கவில்லை என்றும், மேற்படி 47–வது பிரிவின் நோக்கமே, பொதுக் கட்டிடங்களை அல்லது பொது இடங்களை, இன்னா செய்யும் எண்ணங்கொண்ட விரோதிகள் இருட்டு வேளையில் புரட்டு வேலை செய்வதற்காகப் பயன்படுத்துவதை தடுப்பதேயாகும் என்றும், குற்றஞ்சாட்டப் பட்டவர்கள் மேற்படி அரசுப் பள்ளியில் இருட்டு வேளையில் தங்கியிருந்ததற்கு தகுந்த முகாந்திரம் அளிக்காத நிலையில் அவர்கள் மீது குற்ற வழக்கிடப்பட்டது சரிதான் என்றும், மேற்படி டிவிஷன் பெஞ்ச் தீர்ப்பளித்தது.

அத்தீர்ப்பின் பொழுது, ஒரு குறிப்பிட்ட சட்டப் பிரிவின் பொருளானது, அச்சட்டத்தை இயற்றும் பொழுது சட்டமியற்றுபவரின் மனதில் இருந்த கருத்துடனும் மற்றும் அச்சட்டத்தின் மொத்த நோக்கத்துடனும் இணைந்தும் இயைந்துமே (Harmonizes) பொருள் விளக்கம் காணப்பட வேண்டுமென்பது, சட்ட உலகம் ஏற்றுக் கொண்டதொரு பொருள் விளக்க விதி என்றும், அதன்படி (முன்சென்ற பத்திகளில் சொன்னவாறு) ஆராயப்பட்டுத்தான் குற்றஞ்சாட்டப் பட்டவர்களின் வாதமும் நிராகரிக்கப்பட்டது என்றும், கூறியது. சுருங்கக்கூறின், சட்டத்தின் நோக்கத்திற்கு கேடு விளைவிக்காத அளவிற்கும், எத்தீமையை அடக்குவதற்காக சட்டம் இயற்றப்பட்டதோ அம்முயற்சிக்கு பாதகம் ஏற்படாத வண்ணமும், மேற்படி வழக்கில் பிரிவு 47–க்கு, பொருள் விளக்கமளிக்கப்பட்டு,

தீர்ப்பளிக்கப்பட்டது. இது, மேற்படி 'கேடு அகற்றும் விதிக்கு' ஒரு சிறந்த எடுத்துக்காட்டாக விளங்கும் ஒரு இந்திய வழக்காகும்.

முடிவுரை :

சட்டப் பொருள் விளக்கமளித்தலுக்கு மேற்கண்ட 3 விதிகளே முக்கியமானதும் முதன்மையானதுமாகும். எனினும் இவையல்லாது இதற்குத் துணையாக சில விதிகளும் (Subsidiary Rules) உள்ளன. அவை குறித்து அடுத்து வரும் பிரிவில் காண உள்ளோம்.

17. Critically examine the literal rule of interpretation of statutes. (செய் சட்டங்களின் பொருள் விளக்கம் காண்பதில் சொல்லுக்குச் சொல் பொருள் கொள்ளும் விதியினை திறனாய்வு செய்க.)

(அல்லது)

Literal rule - Write Short Notes. (எழுத்தியல்பு விதி – சிறு குறிப்பு எழுதுக.)

(இலக்கண மரபு குன்றாப் பொருள் விளக்க விதியை விரிவாகக் குறிப்பிடுக.)

18. Lord Parker observed that "the object of all interpretations is to discover the intention of the Parliament, must be deduced from the language used". Discuss. (லார்டு பார்க்கரின் கூற்றுப்படி, "அனைத்து பொருள் விளக்கமளித்தலின் நோக்கமும் பாராளுமன்றத்தின் கருத்தைக் கண்டறிதலே ஆகும்; அதை அதன் மொழிநடையிலிருந்து பகுத்தறிய வேண்டும்" – விவாதிக்க.)

(அல்லது)

"Granted that a document which is presented to it as a statute is an authentic expression of the legislative will, the functions of a Court, is to interpret that document according to the intent of them that made it" - Comment. ("செய் சட்டம் என்று குறிப்பிட்டு தன்னிடம் முன்னிலைப் படுத்தப்பட்ட ஒரு சொத்தை அது சட்டமியற்றும் கருத்தை உண்மையாக வெளிப்படுத்துகிறது என்று எடுத்துக் கொண்டு, அதை இயற்றியவர்களின் உள்நோக்கத் திற்கிணங்க அதனைப் பொருள்கோள் செய்வது நீதிமன்றத்தின் கடமையாகும்" – விளக்கக் குறிப்பு தருக.)

(அல்லது)

"The so called, 'Golden Rule' of construction is really a modification of the literal rule" - Discuss the statement with illustrations in support of your answer. ("பொருள் விளக்கத்தின்

'பொன் விதி' என்றழைக்கப்படுவது, உண்மையில் இலக்கண மரபு குன்றாப் பொருள் விளக்க விதியின் ஒரு மாறுபாடே ஆகும்" – இக்கூற்றை, உமது விடைக்கு ஆதரவாக எடுத்துக்காட்டுகளுடன் விவாதிக்க.)

(அல்லது)

What is the Golden Rule of interpretation? Refer to decided cases (பொருள் விளக்கம் கொள்வதில் 'பொன் விதி' என்றால் என்ன? தொடர்பான வழக்குத் தீர்வுகளுடன் விளக்குக.)

(அல்லது)

Examine the golden rule of Interpretation. (பொன்னான விளக்க வுரை விதியை ஆய்க.)

(அல்லது)

The Golden Rule of Interpretation - Write short notes. (செய் சட்ட பொருள் விளக்கம் காண்பதில் பொன் விதி – சிறு குறிப்பு எழுதுக.)

(அல்லது)

Golden Rule - Write short notes. (பொன் விதி – சிறு குறிப்பு எழுதுக.)

(முதலில் இலக்கண மரபு குன்றாப் பொருள் விளக்க விதியை விரிவாகக் குறிப்பிட்டு, பிறகு பொன் விதியைக் குறிப்பிடுக.)

19. "The Court has nothing to do with the question whether the legislature has committed an absurbity" - Discuss. ("அறிவுக்கு ஒவ்வாத ஒன்றை சட்டமன்றம் செய்துள்ளதா என்னும் ஐயப்பாட்டுடன் நீதிமன்றத்திற்கு உறவு யாதொன்றும் இல்லை" – ஆராய்க).

(முந்தய வினாவின் விடையில் முதல் விதியைப் பற்றிக் குறிப்பிட்டு, அதில், தலைமை நீதிபதி ஜெர்விஸ் கூறிய கருத்தை வலியுறுத்திக் குறிப்பிடவும்).

20. "The construction of an Act must be taken from the bare words of the Act". Examine the circumstances in which it would be permissible for courts to depart from the rule. ("ஒரு சட்டத் திற்கு பொருள் விளக்கம் தருவதற்கு அந்த சட்டத்தில் உள்ள வெறும் சொற்களிலேயே எடுத்துக் கொள்ள வேண்டும்". நீதிமன்றங்கள் எந்தச் சூழ்நிலைகளில் இந்த விதியிலிருந்து விலகிச் செல்ல அனுமதியளிக்கப்படுகிறது என்பதை ஆராய்க.)

(முதலில் இலக்கணமரபு குன்றாப் பொருள் விளக்கத்தை விவரித்து விட்டு பிறகு அடுத்ததாக வரும் இரண்டு பொருள் விளக்க விதியையும் எழுதுக.)

21. Rule in Hydon's Case - Write Short Notes. (ஹேடன் வழக்கின் விதி – சிறு குறிப்பு எழுதுக.)

(அல்லது)

Discuss the rule laid down in Hydon's case by Lord Coke. (லார்ட் கோக் ஹய்டன் வழக்கில் குறிப்பிட்டுள்ள விதியை விளக்குக.)

(அல்லது)

Mischief rule - Write Short Notes. (கேடு அகற்றல் விதி – சிறு குறிப்பு எழுதுக.)

(அல்லது)

Explain with reference to decided cases the "mischief rule of construction". ("குறை தவிர் விதி" மூலம் பொருள் விளக்கம் காண்பதை வழக்குகளைச் சுட்டிக் காட்டி விளக்குக.)

(அல்லது)

Explain the mischief rule of interpretation. When and to what extent it can be applied to construction of a statute. (சட்டப் பொருள் விளக்கத்தில் கேடு அகற்றல் விதி என்பதனை விளக்குக. சட்டப் பொருள் விளக்கத்தில் அதனை எப்பொழுது, எந்த அளவிற்கு பயன்படுத்தலாம்?)

(அல்லது)

"One of the significant tools of statutory constructions is the approach to statutory meaning by the process of liberal or distinct construction" - Sutherland. Discuss. ("செய் சட்ட பிரிவுகளின் பொருள் விளக்கத்தின் முக்கியமான கருவிகளில் செய் சட்டப் பொருளை கண்டிப்பற்ற, குறுகிய நோக்கமற்ற நடைமுறை களில் அணுகுவது ஒன்றாகும்" – சதர்லேண்ட். விவாதிக்க.)

(முந்தய வினாவின் விடையில் 3–வது விதியைக் குறிப்பிடுக.)

-o0o-

(ஏ) சட்டப் பொருள் விளக்க துணை விதிகள் [Subsidiary Rules in Interpretation of Statutes]

[i] சட்டம் முழுவதையும் கருத்தில் கொள்ள வேண்டுமெனும் விதி [A Statute is to be read as a whole]

22. "A Statute is to be read as a whole". Explain this theory of interpretation of Statutes. ("ஒரு சட்டம் முழுமையாகக் கருதப்படல் வேண்டும்" – சட்டங்களின் பொருள் விளக்க விதியின் இத்தத்துவத்தை விளக்குக.)

முன்னுரை :

சட்டத்தில் இரு பொருள் தரும்படியான சூழ்நிலைகள் எழும்பொழுதோ அல்லது இரண்டு சட்டப்பிரிவுகளுக்கு இடையே முரண்பாடான நிலை ஏற்படும் பொழுதோ, சட்டமன்றம் எதைக் கருத்தில் (நோக்கமாகக்) கொண்டு அச்சட்டத்தை இயற்றியது என்பதை அடிப்படையாகக் கொண்டு தரும் விளக்கமே சட்டப் பொருள் விளக்கம் எனப்படுகிறது.

விதியின் விளக்கம் :

இவ்வாறு சட்டப் பொருள் விளக்கம் தரும்பொழுது, அச்சட்டம் முழுவதையும் கருத்தில் கொள்ள வேண்டும் என்பது அடிப்படையான ஒரு விதி யாகும். எந்த ஒரு சட்டப்பிரிவையும் தனிமைப்படுத்தக் கூடாது. அப்பொழுதுதான் அச்சட்டத்தின் முழுமையான நோக்கம் புலனாகும். மேலும் அதன் உண்மையான பணியும் செவ்வனே நிறைவேறும்.

பொருள் விளக்கம் அளிக்கும்பொழுது, அச்சட்டத்தின் ஒவ்வொரு பகுதிக்கும், பிரிவுக்கும், சொற்றொடருக்கும் உள்ள உயிரோட்டத்திற்கு முரண்பாடாக எந்த விளக்கமும் அமையக்கூடாது. இதற்கு அச்சட்டம் முழுவதையும் கருத்தில் கொண்டால்தான், உண்மை நிலை புரியும். கொடுக்கப்படும் பொருள் விளக்கம் ஆட்சேபணைக்குரியதல்லாததாக இருக்கும்.

வழக்குகள் :

Ram Narain v. State of Uttar Pradesh[1]

மேற்படி வழக்கில் மேல் முறையீட்டாளருக்கு அவரது 'சூழ்நிலைக்கும்

1. A.I.R. 1957 S.C. 18

மற்றும் சொத்தின்' (Circumstances and Property) அடிப்படையில் உத்திர பிரதேச நகரப் பகுதிகள் சட்டம், பிரிவு 14(1)(f)-ன் கீழ் வரி விதிக்கப்பட்டது. இவ்வாறு வரி விதிக்கப்பட்டதை எதிர்த்து, பின்வரும் வாதத்தின் அடிப்படையில் அவர் மேல் முறையீடு செய்தார். அஃதாவது, தாம் நகரப் பகுதியில் இருந்தாலும் வியாபாரம்தான் செய்கிறேனேயொழிய, வசிக்கவில்லை; எனவே, அதற்கு வரி விதிக்கப்பட முடியாது, என்றார்.

ஆனால், அவரது மேற்படி வாதத்தை உச்ச நீதிமன்றம் நிராகரித்து, பின்வருமாறு தீர்ப்பு கூறியது. அதன்படி, ஒரு குறிப்பிட்ட சட்டப் பிரிவிற்கு பொருள் விளக்கம் அளிக்கும் பொழுது, அச்சட்டம் முழுவதையுமே கருத்தில் கொள்ள வேண்டுமே தவிர, அச்சட்டப் பிரிவை மட்டுமன்று. எனவே, சூழ்நிலை மற்றும் சொத்தின் அடிப்படையில் நகரப் பகுதியில், 'வசிப்பவருக்கு' மட்டுமே வரி விதிக்கப் பட வேண்டுமென்ற நிபந்தனை மேற்படி சட்டத்தில் கிடையாது என்றும், 'சூழ்நிலைகள்' என்பதில் ஒருவரின் அந்தஸ்து மற்றும் பொருளாதார நிலை உள்ளடங்கியது என்றும், வியாபாரத்தில் இருந்தும் வரும் வருமானம் சம்பந்தப்பட்டவரின் பொருளாதார நிலையை சுட்டிக் காட்டுகிறது என்றும், எனவே மேல்முறையீட்டாளருக்கு மேற் கண்டவாறு வரி விதிக்கப்பட்டது செல்லத் தக்கதே என்றும், நீதிமன்றம் கூறியது.

Kesavananda Bharathi v. State of Kerala[1]

அரசியலமைப்பு சட்டத்தின் முகப்புரை (Preamble) அதன் ஒரு பகுதி என்றும், அரசியலமைப்பின் ஏதாவது ஒரு சரத்து தெளிவற்றிருந்தால், அல்லது பொருள் விளங்காமலிருந்தால், அதனை புரிந்து கொள்ளுவதற்குப் பேருதவியாய் இருப்பது அம்முகப்புரையே என்றும் தீர்ப்பளிக்கப்பட்டது.

முடிவுரை :

எனவே, சட்டத்தின் ஒவ்வொரு பகுதிக்கும் மற்றும் பிரிவிற்கும் உயிரோட்டம் வழங்கும் வகையில் பொருள் விளக்கம் அமைய வேண்டும். அதற்கு அச்சட்டம் முழுவதையும் கருத்தில் கொள்ள வேண்டும் என்பது இன்றியமையாததாகும்.

[ii] தமைமை நெறி பொருள் விளக்கம் [Equitable Construction]

23. Equitable Construction - Write Short Notes. (தகைமை நெறி பொருள் விளக்கம் – சிறு குறிப்பு எழுதுக.)

முன்னுரை :

'தகைமை நெறி' என்பது 'நேர்மை நெறி' என்ற பொருளுடையதாகும்.

1. A.I.R. 1973 S.C. 1461

இது சட்டமல்லாத நீதி, நேர்மை, நியாயம், என்பதின் அடிப்படையில் எழுவதாகும். வேறு விதத்தில் கூறுவதானால், இதனை **'இயற்கை நீதி' (Natural Justice)** என்றும் குறிப்பிடலாம். இது எவ்வாறு சட்டப் பொருள் விளக்கத்தில் பங்கு கொள்கிறது என்பதை பின்வருமாறு கவனிப்போம்.

விளக்கம் :

பொதுவாக, நீதிமன்றங்கள் சட்டப்படி வழக்கைத் தீர்மானிக்கின்றன. சில சமயங்களில், வழக்குத் தரப்பினருக்கு நிவாரணமளிப்பதில், சட்ட விதிகள் மிகக் கடுமையாக அல்லது குழப்பக்கூடியதாக இருப்பின், அவற்றை வழக்கில் நிலவும் சூழ்நிலை களுக்கொப்ப நெகிழ்வித்துப் பொருள் விளக்கம் கூறி நியாயப்படி தீர்ப்பு வழங்குதல், **தகைமை நெறிப்படி வழங்கப்படும் தீர்ப்பு** என்று கொள்ளப்படும்.

சுருங்கக் கூறின், சட்ட வாசகத்தின் சொற்பொருளை மட்டுமே கொள்ளாமல், அதன் அடிப்படையிலான தகைமை நலத்தைப் பேணிப் பொருள் காணும் நெறிமுறை, தகைமை நெறி பொருள் விளக்கமாகும்.

இங்கிலாந்தில் **தகைமை நெறி நீதிமன்றங்கள் (Courts of Chancery)** என்று தனியாகவே முந்திய காலக்கட்டங்களில் செயல்பட்டன. இங்கு **நீதி, நேர்மை, நியாயம், நன்மனச் சான்று (Justice, Equity and Good Conscience)** ஆகியவற்றின் அடிப்படையில் வழக்குகள் தீர்க்கப்பட்டன. அதுபோல் சட்ட விதிகளை மட்டுமே பின்பற்றியும் நீதிமன்றங்கள் செயல்பட்டன. அவை, **'பொதுச் சட்ட நீதிமன்றங்கள்' (Common Law Courts)** என்று அழைக்கப்பட்டன. இந்தியாவில், ஒவ்வொரு நீதிமன்றமும் வழக்குகளை, அதன் சூழ்நிலைக்கொப்ப சட்டத்தின் அடிப்படை யிலும் தகைமை நெறியின் அடிப்படையிலும் தீர்க்கின்றன. சட்டமொன்றிற்கு பொருள் விளக்கமளிக்கும் பொழுது, அதனை இயற்றிய சட்ட மன்றத்தின் கருத்தைக் கண்டறிவதே நீதிமன்றங்களின் பணியாகும். ஒருவேளை சட்டமன்றத்தின் கருத்தே, குழப்பமானதாகவோ அல்லது இரு பொருள் தரக் கூடியதாகவோ இருப்பின் என்ன செய்வது ? இங்குதான் 'தகைமை நெறி' கை கொடுக்க வருகிறது. அதன்படி அச்சட்டம் கொண்டு வரப்படுவதற்கு காரணமாக இருந்தவற்றையும் மற்றும் அச்சட்டத்தினுள் அடங்கியிருக்கும் உயிரோட்டத்தையும் கொண்டு, அது சொல்லியிருக்கும் நியாயம் என்ன மற்றும் அது வலியுறுத்தும் நேர்மை என்னவென்பதை அறிந்து, பொருள் விளக்கமளிப்பதே, தகைமை நெறி பொருள் விளக்கமாகும். ஆனால் சட்டத்தில் கூறப்பட்டுள்ள வார்த்தைகள் தெளிவாகவும், ஒரே ஒரு பொருளைக் குறிப்பிடுவதாகவும் இருப்பின், அங்கே தகைமை நெறியின் அடிப்படையிலான பொருள் விளக்கத்திற்கு வேலை இல்லை. அதே சமயத்தில் ஒரு சட்டப் பிரிவிற்கு இரண்டு பொருள் விளக்கங்கள் கொடுக்கப்பட வாய்ப்பிருந்து அவற்றில் எதைக் கொள்வது – எதைத் தள்ளுவது என்ற நிலை ஏற்பட்டால், எச்சட்டப் பொருள் விளக்கம் நேர்மைக்கும் தகைமை நெறிக்கும் வழி காட்டுகிறதோ அதையே நீதிமன்றங்கள் கொள்ள வேண்டும்.

ஆனால் ஒரு பொருள் விளக்கம் சட்டமன்றத்தின் கருத்தை வலியுறுத்தும் வண்ணம் சட்டப்படியாகவும், மற்றொரு பொருள் விளக்கம் தகைமை நெறிப்படியும் இருந்தால், சட்டப்படியான பொருள் விளக்கத்தையே நீதிமன்றங்கள் பின்பற்றுதல் வேண்டும். அதாவது சட்டமே சரியாக சொல்லப்பட்டிருக்கும் பொழுது, தகைமை நெறி அங்கு தங்கியிருக்க இடமில்லை.

முடிவுரை :

சட்டங்கள் சரிவர இயற்றப்படாத, இல்லாத காலகட்டங்களில் வழக்குகளில் தகைமை நெறிப் பொருள் விளக்கத்தின் கை ஓங்கியிருந்தது. ஆனால் இப்பொழுது தான் "அதுக்கொரு சட்டம்; இதுக்கொரு சட்டம்" எனப் பலப்பல சட்டங்கள் இயற்றப்பட்ட வண்ணம் உள்ளனவே. சட்டங்களே வந்துவிட்டதால், தகைமை நெறி, தணிந்து உள்ளது. எனினும், அச்சட்ட விதிகள் மக்களின் நலவாழ்விற்கு அற்றதாகவோ அல்லது குழப்பமானதாகவோ இருப்பின், அங்கே 'தகைமை நெறி பொருள் விளக்கம்தான்' கை கொடுக்க வரும் என்பதையும் நாம் இங்கு மறந்துவிடக் கூடாது.

[iii] இசைவமைந்த பொருளமைதி காணல் (அல்லது) இசைவுபட பொருள் விளக்கமளித்தல் [Harmonious Construction]

24. Harmonious Construction - Write Short Notes. (இசைவுபட பொருள் விளக்கமளித்தல் – சிறு குறிப்பு எழுதுக.)

(அல்லது)

What are canons of harmonious construction? (சட்டங்களை சமரசமாக பொருள் விளக்கங் கொள்ளும் முறைக்குரிய ஆழ்நெறிகள் யாவை?)

முன்னுரை :

'Harmony' என்றால் அகராதிப் பொருள்படி 'இணக்கு, ஒத்திசைவு, இசைவு, பொருத்தம், நேர்படுதல்'[1] எனப்படுகிறது. எனவே, 'Harmonious Construction' என்பது முரண்பட்ட இரண்டு சட்டப் பிரிவுகளுக்கு இசைவுபட பொருள் விளக்கமளித்தல் என்றால் எளிதாகப் புலனாகும். சற்று விரிவாக வருமாறு.

விளக்கம் :

சட்டமொன்றில், இரண்டு முரண்பட்ட சட்டப் பிரிவுகள் இருப்பின், அவை

1. ஆங்கில – தமிழ் அகராதி. முனைவர் ஏ. சிதம்பரநாத செட்டியார், சென்னைப் பல்கலைக் கழகம், பக்கம் 475.

இரண்டும் ஒன்றிணைக்கப்பட்டு, அவற்றிற்கு இசைவான பொருள் விளக்கம் காணலே, இசைவுபட பொருள் விளக்கமளித்தல் எனப்படுகிறது. இதனை பொருள் விளக்கமளித்தல் என்பதைவிட, 'பொருளமைதி காணல்' (Construction) என்று நுணுக்கமாக அழைப்பதே சாலச் சிறந்தது. ஏனென்றால், முரண்பட்ட இரண்டு சட்டப் பிரிவுகளும் எங்கு 'அமைதி' கொள்கிறது என்பதை கண்டுபிடித்து, அதற்கு உட்பட்டவாறு அவ்விரண்டு சட்டப் பிரிவுகளுக்கும் பொருள் விளக்கம் அளிக்கப் படுகிறது. அதாவது, ஒன்றை மற்றொன்று கொன்று விடுவதைக் காட்டிலும், இருவரும் சில வரம்புகளுக்குட்பட்டு வாழலாமே என்ற அடிப்படையில் இசைவமைந்த பொருள் விளக்கம் அமைகிறது.

சாதாரண பொருள் விளக்கமும் இசைவமைந்த பொருள் விளக்கமும் :

சாதாரணமாக ஒரு சட்டத்திற்குப் பொருள் விளக்கம் காண்பது என்றால், அச்சட்டத்தை முழுவதுமாகப் படித்து, அதன் நோக்கம், குறிக்கோள் இவற்றை ஓர்ந்து கண்டு, அச்சட்டத்தின் பொதுவான கருத்தை அறிந்து கொண்டு, அந்தப் பின்னணியில்தான், சட்டத்தின் ஒவ்வொரு பிரிவுகளின் பொருளையும் காண வேண்டும். இது சாதாரணமாக அளிக்கப்படும் பொருள் விளக்கத்தில் பின்பற்றப் படும் நியதி. ஆனால் இசைவமைந்த பொருளமைதிக்கு, மேற்கண்டதைவிட சற்று கூடுதலான பணி உள்ளது. அதாவது சட்டத்தின் ஒரு பிரிவிற்கும் மற்றொரு பிரிவுக்கும் முரண்பாடு இருப்பதாகக் காணப்பட்டால், அந்த முரண்பாட்டைப் போக்கும் வகையில் பொருள் காணுதலே முறையாகும். சட்டத்தின் பிரிவுகள் ஒன்றுக்கொன்று இசைந்து இயங்கும் வகையில் பொருளமைதி காணப்படுகிறது.

நீதிமன்றங்களின் பொறுப்பு :

இயற்றப்படும் சட்டங்களின் பொருளமைதியை விளக்கி அவற்றைச் செல்லுறுத்தும் தனியுரிமை நீதிமன்றங்களுக்கே இருப்பதால், இதைக் குறித்த நீதிமன்றத்தின் பொறுப்பு மிகவும் முக்கியமானதாகிறது. சமுதாயம், பொருளாதாரம் ஆகிய துறைகளில் சீர்திருத்தம் வேண்டி நிற்கும் நம்நாட்டில் இயற்றப்படும் பல சட்டங்கள் வெற்றி பெற வேண்டுமெனில், அவற்றைச் செல்லுறுத்தும் நீதிமன்றங்கள் அச்சட்டங்களின் கொள்கைகளைக் குறைவற உணர்ந்து பொருளமைதி காண வேண்டும்.

மிக முக்கிய வழக்குகள் :

Venkataramana Devaru v. State of Mysore[1]

இவ்வழக்கு, இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் இரு சரத்துக்களுக்குள் (Article) "நீ பெரியவனா? அல்லது நான் பெரியவனா?" என்று நடந்த சண்டையை

1. A.I.R. 1958 S.C. 255

விளக்கக்கூடியதும் மற்றும் அச்சண்டையை விலக்கி, விளக்கமளித்த உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பையும் கூறும் விறுவிறுப்பான ஒரு வழக்காகும்.

கன்னட மொழியில் 'வெங்கட்ரமண தேவரு' (Venkatramana Devaru) என்றால் 'வெங்கட்ரமண சுவாமி' என்று பொருளாகும். மேற்படி வழக்கில் வெங்கட்ரமண சுவாமி திருக்கோயில் நிர்வாகம், மேல்முறையீட்டாளர்கள் (Appellant) ஆவர். அவர்கள், வெங்கட்ரமண சுவாமி திருக்கோயிலை கன்னடத்தவரின் சமயக் கிளை சார்ந்த கோயிலாக (denominated temple) அறிவிக்க வேண்டும் என்று கோரினார்கள். இவ்வாறு கோருவதின் மூலம், அரசியலமைப்புச் சட்டம் சரத்து 26(b)–யினால் உத்திரவாதமளிக்கப்பட்டபடி, தங்களது மேற்படி திருக்கோயிலைச் சார்ந்த சமய விஷயங்களை தாங்களே நிருவாகம் செய்து கொள்ளக்கூடிய அடிப்படை உரிமைகளைக் கோரினார்கள். அதாவது தங்கள் இனத்தவர் மட்டுமே மேற்படி திருக்கோயிலுக்குள் நுழைவதற்கும், பூஜை புனஸ்காரங்களில் பங்கு கொள்வதற்கும் உரிமை படைத்தவர்கள் எனக் கோரினார்கள். அதே சமயத்தில் இதற்கு விரோதமாக இருக்கும் 1949–ஆம் ஆண்டின் மதராஸ் கோயில் நுழைவு அனுமதியளித்தல் (திருத்தச்) சட்டத்தின் [Madras Temple Entry Authorisation (Amendment) Act, 1949] 3–வது பிரிவானது அரிசன மக்கள் கோயிலுக்குள் நுழைய உரிமையளிக்கிறது; இது மேற்படி சரத்து 26(b)–அய் மீறுவதாக உள்ளது என்ற அடிப்படையிலும், அதை அரசியலமைப்பற்றது என அறிவிக்கவும் கோரினார்கள்.

மேல் முறையீட்டாளர்களின் மேற்படி கோரிக்கைகளையெல்லாம் கண்டு எதிர் தரப்பினரான அப்பொழுதைய மைசூர் மாநில அரசானது அசந்துவிடவில்லை. இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் சமய உரிமை தொடர்பான மற்றொரு சட்டப் பிரிவு, அதாவது சரத்து 25(2)(b)–ஆனது, கடவுளைத் தொழுவதற்காக கோயிலுக்குள் நுழைய எவருக்கும் உரிமையுண்டு; அதனால் மேற்படி சரத்து 26(b)–அய், மேற்கண்ட சரத்து 25(2)(b)-யுடன் சேர்த்துப் படித்தல் வேண்டும், என மைசூர் மாநில அரசு வாதிட்டது.

அதாவது, சரத்து 26(b)-ஆனது, "சமய சம்பந்தமான **எல்லா விவகாரங்களையும்** நிருவாகம் செய்து கொள்ளும் உரிமையை, ஒவ்வொரு சமயமும் பெற்றிருக்கிறது" என்று கூறுகிறது. இங்கு 'எல்லா விவகாரங்கள்' என்பதில் கோயில் சடங்குகளை யார் செய்வது; கர்பக்கிருகத்தில் நுழைந்து யார் பூஜை செய்வது, எப்படி செய்வது, எப்பொழுது செய்வது என்பவை உள்ளடங்கியதாகும். எனவே, சமயமும், சமயக் கிளைக் கோயிலின் நிருவாகத்தினரும் (பொறுப்பாளர்களும் – Trustees) சமய நெறியின்படி மேற்படி நடவடிக்கைகளிலிருந்து யார் யாரை விலக்குவது என்பதைத் தீர்மானிக்கும் உரிமையை மேற்படி சரத்து 26(b)-யின் வாயிலாகப் பெற்றுள்ளார்கள்.

ஆனால் அதே சமயத்தில், சரத்து 26(b)–யின் கூற்றுக்கு முரணாக, சரத்து

25(2)(b)-ஆனது, பொதுக் கோவில்களும், சமயக் கிளைக் கோவில்களும் சமூக சீர்திருத்தம் காரணமாக எல்லோருக்கும் திறந்து வைக்கப்பட வேண்டுமென்றும், எல்லோரும் கோயிருக்குள் நுழைந்து, சுவாமியை வணங்கும் உரிமையைப் பெற்றுள்ளார்கள் என்றும் கூறுகிறது.

இங்குதான் உச்ச நீதிமன்றமானது, மேற்படி இரண்டு சரத்துக்களுக்கும் இடையிலான முரண்பாட்டை நீக்கும் வகையில், **"இசைவமைந்த பொருளமைதி"** விதியைப் பின்பற்றி பொருள் விளக்கமளித்தது. அதன்படி, சரத்து 26(b)-யின் செயல்பாடானது, சரத்து 25(2)(b)-க்கு உட்பட்டு செயல்பட வேண்டும் என்றும், அப்பொழுது மேற்படி இரண்டு சரத்துக்களுக்கும் இடையில் உள்ள முரண்பாடு நீங்கி விடும் என்றும், கூறியது. அது மேலும் கூறுகையில், சரத்து 25(2)(b) அளிக்கும் உரிமை உறுதியானது மட்டுமின்றி தெளிவானதும் கூட என்றும், சமயக் கிளைக் கோயில்களின் சிறப்புப் பூஜை வழிபாடுகளின் போதும், விசேடப் பூஜை நேரங்களின் போதும் மட்டுமே அந்நியர்களைத் தடுக்கலாம் என்றும், மற்ற நேரங்களில் அவர்களைத் தடுக்கக்கூடாது என்றும், தீர்ப்பு கூறியது. சுருங்கக்கூறின், சமூக நெறியின் உயர் நோக்கத்திற்கும், சமய நெறியின் போக்கிற்கும் இடையில் இசைவு காணும் ஒரு நல்ல தீர்ப்பை உச்ச நீதிமன்றம் மேற்படி இசைவமைந்த பொருள் விளக்க விதியைப் பயன்படுத்தி வழங்கியது என்றால், அது மிகையாகா.

M.S.M. Sharma v. State of Madras[1]

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் சரத்து 19(1)(a)-ஆனது, பேச்சு மற்றும் கருத்து வெளியீட்டு சுதந்திர உரிமையைப் பற்றிக் கூறுகிறது; சரத்து 194(3), சட்டமன்ற மற்றும் பாராளுமன்ற அதிகாரங்கள் மற்றும் சிறப்புரிமைகளைக் குறிப்பிடுகிறது. மேற்படி வழக்கில் மேற்கண்ட இரண்டு சரத்துகளுக்கும் மோதல் ஏற்பட்டது. அப்பொழுது உச்ச நீதிமன்றம் மேற்கண்ட இரண்டு சரத்துக்களுக்கும் இடையில் ஒரு இசைவான பொருள் விளக்கத்தைக் கூறியது. அதன்படி, சரத்து 19(1)(a)-ன் பேச்சு மற்றும் கருத்து வெளியீட்டு சுதந்திர உரிமை, தனி நபருக்குள்ள பொது உரிமையாகும். ஆனால் சரத்து 194(3)–ன் கீழானது, சட்டமன்றம் மற்றும் பாராளுமன்றத்திற்கு அளிக்கப்பட்டுள்ள சிறப்புரிமையாகும். எனவே, சரத்து 19(1)(a)–ஆனது, சரத்து 194(3)–க்கு உட்பட்டுதான் செயல்பட வேண்டும் என்று கூறியது.

K.M. Nanawathi v. State of Bombay[2]

இவ்வழக்கில் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் சரத்து 161–க்கும், சாத்து 142–க்கும் இடையில் மோதல் ஏற்பட்டது.

சரத்து 161–ஆனது, மாநில ஆளுநரின் (Governor) மன்னிப்பளிக்கும் அதிகாரத்தைப் பற்றிக் கூறுகிறது. மாநில ஆளுநரானவர், மாநில நிருவாக

1. A.I.R. 1959 S.C. 395
2. A.I.R. 1961 S.C. 112

அதிகாரம் பரவி நிற்கின்ற இடங்களில் நிலவி வரும் சட்டங்களுக்கு எதிராக குற்றம் புரிந்தவர்களின் குற்றங்களை மன்னிக்கவும், தண்டனைகளைத் தள்ளிப் போடவும், குறைக்கவும், மாற்றவும் அரசியலமைப்புச் சட்டப்படி அதிகாரம் பெற்றவராவார்.

சரத்து 142(1)–ஆனது, உச்ச நீதிமன்றமானது தன் முன்னால் நிலுவையில் உள்ள வழக்குகளில், அவ்வழக்கை முடித்து, முழுமையான நீதி வழங்குதற்குத் தேவையான உத்திரவுகளையும் தீர்ப்பாணைகளையும் பிறப்பிக்க, அதற்கு அதிகாரம் வழங்கியுள்ளது. மேலும் சரத்து 142(2)–ன் கீழ், வழக்கில் ஒரு நபரின் வருகையை உறுதியாகக் கிடைக்கச் செய்வதற்கோ, ஆவணங்கள் எதையும் வெளிக் கொணரவோ அல்லது முன்னிலைப்படுத்தவோ, புலனாய்வு செய்யவோ அல்லது அதன் உத்தரவுகளை மீறுவதற்கு தண்டனை வழங்கவோ உத்திர விடுவதற்கும், உச்ச நீதிமன்றம் அதிகாரம் பெற்றுள்ளது. மேலும் சரத்து 145–ன் கீழ், நீதிமன்ற நடைமுறை விதிகளை உருவாக்கும் அதிகாரத்தையும் உச்ச நீதிமன்றம் பெற்றுள்ளது. அப்படி உருவாக்கப்பட்ட உச்ச நீதிமன்ற விதிகளின் கட்டளை 21 விதி 5–ஆனது (Order 21 Rule 5 of the Rules of Supreme Court), குற்றவாளி ஒருவர் தன்னிடம் மேல்முறையீடு செய்ய சிறப்பு அனுமதி கேட்டு மனு (Special Leave Petition for Appeal) செய்யும் பொழுது, அவர் அம்மனு விசாரணை செய்யப்படும் முன்னர் சிறையில் அடைக்கப்பட்டு இருக்க வேண்டும் என்று கூறுகிறது.

இனி மேற்படி வழக்கின் பொருண்மைகளை கவனமுடன் பின்வருமாறு கவனிப்போம். மேற்படி வழக்கின் மனுதாரராகிய K.M. நானாவதி என்பவர், கடற்படையின் ஒரு அலுவலர் ஆவார். இவர், தனது மனைவியின் கள்ளக்காதலை அறிந்து, அவளது கள்ளக் காதலனை சுட்டுக் கொலை செய்த குற்றத்திற்காக, அமர்வு நீதிமன்றத்தால் விசாரிக்கப்பட்டு, இறுதியில் ஆயுள் தண்டனை விதிக்கப் பட்டார். மேல்முறையீட்டில் பம்பாய் உயர் நீதிமன்றமும் ஆயுள் தண்டனையை ஊர்ஜிதம் செய்தது. நானாவதி இவ்வுயர் நீதிமன்ற உத்திரவை எதிர்த்து, உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீட்டிற்காக சிறப்பு அனுமதி மனு தாக்கல் செய்தார். அதே நாளில், அந்த மேல்முறையீடு முடியும்வரை தனது தண்டனையை தள்ளிப் போட வேண்டுமென்று, பம்பாய் மாநில ஆளுநரிடம், நானாவதி மனுச் செய்தார். ஆளுநரும், இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் சரத்து 161–ன் கீழ் தனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி, நானாவதியின் தண்டனையை, அவரது உச்ச நீதிமன்ற மேல்முறையீடு முடியும் வரையில் தள்ளிப் போடுவதாக உத்திரவிட்டார்.

இவ்வுத்திரவிற்கு முன்பே நானாவதி உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மேல்முறையீட்டிற்கான சிறப்பு அனுமதி மனுவில், நாம் ஏற்கனவே மேலே கண்ட, உச்ச நீதிமன்ற விதிகளின் கட்டளை 21 விதி 5–ன்படி குற்றவாளி எவரும் உச்ச நீதிமன்றத்திடம் மேல் முறையீடு செய்யும் பொழுது, அவர் சிறையிலடைக்கப்பட்டு

இருத்தல் வேண்டும்; மேலும் சரத்து 142–ன்படி, தன் முன் நிலுவையிலுள்ள வழக்கை முடிப்பதற்கு, உத்திரவுகள் மற்றும் தீர்ப்பாணைகளைப் பிறப்பிக்க உச்ச நீதிமன்றத்திற்கு அதிகாரம் உள்ளது, என்பதின்படி உச்ச நீதிமன்றம் மேற்படி கட்டளை 21 விதி 5–அய்ப் பயன்படுத்தி, சரத்து 142–ன் வாயிலாக, தன் முன் நிலுவையிலுள்ள நானாவதியின் மேல் முறையீட்டை விசாரிக்க வேண்டுமெனில், அவரை சிறையில் அடைக்க வேண்டும், என உத்திரவிட்டது. அதற்குண்டான பிடியாணையையும் (Warrant) பிறப்பித்தது. ஆனால் பிடியாணைக்கு நானாவதி பிடி கொடுக்கவில்லை. மாறாக, அவ்வுத்தரவை எதிர்த்து நானாவதி மேற்படி வழக்கைத் தொடர்ந்தார். அதில், பம்பாய் மாநில ஆளுநர், விதி 161–ன் கீழ் அவருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி, தனது தண்டனையை தள்ளி வைத்து உத்திரவிட்டுள்ளார் என்றும், அதனால் உச்ச நீதிமன்ற உத்திரவுபடி, தான் சிறையில் அடைக்கப்பட வேண்டியதில்லை என்றும் வாதம் புரிந்தார்.

தற்பொழுது மேற்படி வழக்கில் எழும் பிரச்சனை யாதெனில், நானாவதி, சரத்து 142–ன் கீழான உச்ச நீதிமன்ற உத்திரவுபடி சிறைக்குச் செல்வதா அல்லது சரத்து 161–ன் கீழ் ஆளுநர் வழங்கிய உத்திரவின்படி, தண்டனை தள்ளி வைக்கப் பட்டதின் பலனை அனுபவிப்பதா என்பதுதான்.

உச்ச நீதிமன்றம் இசைவமைந்த பொருள் விளக்க விதியைப் பயன்படுத்தி மேற்கண்ட இரண்டு சரத்துகளுக்கும் இடையிலான பிணக்கை பின்வருமாறு தீர்த்து வைத்தது. அதன்படி, சரத்து 161–ன் கீழ் தண்டனையை தள்ளி வைக்கும் ஆளுநரின் அதிகாரம், சரத்து 142–ன் கீழ் தன் முன் நிலுவையில் உள்ள வழக்கைத் தீர்ப்பதற்கு உச்ச நீதிமன்றம் இடும் உத்திரவுகளுக்கு உட்பட்டதாகும் என்றும், அவ்வுத்திரவை முரண்படுத்தும் வகையில், தண்டனையை நிறுத்தி வைத்து ஆளுநர் வழங்கியுள்ள உத்திரவு சரியல்லயென்றும், உச்ச நீதிமன்றம் கூறியது. மேலும், உச்ச நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் உள்ள பொழுது, ஆளுநர் தனக்கு வழங்கப்பட்டுள்ள 'கருணை அதிகாரவரம்பின்'படி (mercy jurisdiction), நானாவதிக்கு முழு மன்னிப்பு அளித்து, அவரை தண்டனையிலிருந்து முற்றிலுமாக விடுவித்திருக்கலாம்.

ஆனால் அவ்வாறு செய்யாமல், குறிப்பாக, வழக்கு உச்ச நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள பொழுது, அவ்வழக்குத் தொடர்பான குற்றவாளியின் தண்டனையை ஆளுநர் தள்ளி வைப்பது முறையல்ல என்றும், அதற்கு ஆளுநருக்கு அதிகாரம் கிடையாது என்றும் கூறியது. உச்ச நீதிமன்றம் மேலும் கூறுகையில், ஆளுநரின் மேற்படி உத்திரவு எதுவரையில் செயலாக்கம் பெறும் என்றால், சிறப்பு அனுமதி மனுவை உச்ச நீதிமன்றம் கோப்புக்கு எடுத்துக் கொள்ளும் வரைதான். அதுவரையில் அவர் ஆளுநர் உத்திரவுபடி வெளியில் இருக்கலாம்; ஆனால், உச்ச நீதிமன்றம் நானாவதியின் மேற்படி மனுவை விசாரணைக்கு எடுத்துக் கொண்டவுடன், அவர் சிறைக்கு சென்று அடைபட வேண்டியதுதான். அப்பொழுதுதான், அம்மனுவின்

மீதான விசாரணையே நடைபெறும். மேற்படி வழக்கில் உச்ச நீதிமன்றம் ஏற்படுத்திய பொருளமைதி என்னவென்றால், சரத்து 161–ன் கீழான ஆளுநரின் அதிகாரம், உச்ச நீதிமன்றத்தில் மேற்கண்டவாறான சிறப்பு அனுமதி மனு கோப்புக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு, அம்மனு குறித்த அனைத்து விசாரணைகளும் முடியும் வரை, செயலாக்கம் பெறாது. சுருங்கக்கூறின், சரத்து 161–ன் கீழான ஆளுநரின் செயல்பாடு சரத்து 142–ன் கீழான உச்ச நீதிமன்றத்தின் செயல்பாட்டிற்குட்பட்டதாகும். இது ஒரு விரிவான வழக்கு என்றாலும், மிக்க 'விபரமான' வழக்கு என்றால் அது மிகையாகா.

முடிவுரை :

விரைவாக பல சட்டங்களை இயற்ற வேண்டும் என்ற வேகத்தில் மாநிலச் சட்டமன்றங்களிலும், மத்திய பாராளுமன்றத்திலும் இயற்றப்படும் சட்டங்களில் வரைவுமுறைக் குறைபாடுகள் (defects in drafting) மிகுதியாக இருக்கின்றன என நீதிமன்றங்கள் எடுத்துக்காட்டுகின்றன. இந்நிலையில் 'இசைவமைந்த பொருளமைதிப்படி' சட்டங்களுக்குப் பொருள் காணல் மிகுந்த பயனைத் தரக் கூடிய, சட்டத்தின் உயிரோட்டத்தை சீர்படுத்தக் கூடிய, ஒரு கருவியாகத் திகழ்கிறது என்று சொன்னால், அதில் வியப்பேதுமில்லை.

[iv] பொதுவான சொற்களை கையாளுவதற்குண்டான விதிகள் [Rules for the treatment of General Words]

25. Explain as to how the general words should be treated when interpreting the statutes. (சட்டப் பொருள் விளக்கம் கொடுக்கும் பொழுது பொதுவான சொற்களை எங்ஙனம் கையாள வேண்டும் என்பதை விளக்குக.)

முன்னுரை :

சட்டமன்றத்தின் கருத்தை நிலை நிறுத்துவதற்காக, சட்டப் பிரிவுகளுக்கு பொருள் விளக்கம் அளிக்கப்படுகிறது என்பதையும், அதற்கு மூன்று விதிகள் உதவி செய்கின்றன என்பதையும் நாம் சென்ற அத்தியாயங்களில் கண்டோம்.

அதே சமயத்தில், சட்டங்களில், சட்டச் சொல் அல்லாமல் வேறு சில பொதுவான சொற்களும் பரவலாக இருப்பதுண்டு. அவற்றிற்கு பொதுவாக பொருள் கொள்ளும் பொழுது, அதாவது இலக்கணரீதியாக பொருள் கொள்ளும் பொழுது, அவை உணர்த்தும் பொருள் ஒன்றாகவும், சட்டரீதியாக பொருள் கொள்ளும் பொழுது, வேறொன்றாகவும் இருக்கும்.

எனவே, சட்டத்திலுள்ள பொதுவான சொற்களை எங்ஙனம் கையாள்வது, அவற்றிற்கு எங்ஙனம் பொருள் விளக்கம் அளிப்பது என்பதற்குண்டான விதிகளை நாம் பின்வருமாறு காணலாம்.

1. இடம், பொருள், ஏவலுக்கு ஏற்பச் சொற்கள் பொருள் கொள்ளப் படல் வேண்டும் (Words understood according to the subject matter) :

சட்டத்தில் உள்ள சொற்களுக்கு பொருள் விளக்கம் தரும் பொழுது இடம் பொருள் ஏவலைக் கணக்கில் கொள்ள வேண்டும். அதாவது இடம் பொருள் ஏவலுக்கேற்ப சொற்கள் பொருள் கொள்ளப்படல் வேண்டும். சாதாரணமாக ஒரு பேச்சின் பொருளைக் கொள்வதற்கே அதன் இடம், பொருள், ஏவலை வினவுவது போலவே பாராளுமன்றத்தின் சட்டத்தில் இருக்கும் ஒரு சொல்லின் பொருளைக் காண்பதற்கு அதனுடைய எல்லைகளையும் நோக்கங்களையும் அறிய வேண்டியது அவசியமாகிறது. மேலும் அப்பொருள் பற்றி சந்தேகங்கள் வரும்பொழுது, அவை சட்டத்தின் சாரம்சத்திற்கு இசைந்து போகக் கூடிய வகையிலேயே பொருள் கொள்ள வேண்டும். சொற்களை இலக்கணரீதியாக பொருள் கொள்ளுதலைவிட இடம், பொருள், ஏவல் ஆகியவற்றைக் கொண்டு புரிந்து கொள்ளுதல் சாலச் சிறந்தது.

இலக்கணரீதியாகச் சொற்கள் தம் எல்லைக்குள் சில பொருள்களை வைத்திருக்கலாம். ஆனால் ஒரு சட்டத்தையோ அல்லது ஆவணத்தையோ எப்போது பொருள் கொள்ள நேர்ந்தாலும், சொற்களுக்கு அவைகளின் சாதாரணப் பொருளைக் கொடுப்பதோடு நின்றுவிடக் கூடாது. அந்த சாதாரண பொருளுடன் அது உபயோகப்படுத்தப்பட்டிருக்கும் இடம், பொருள், ஏவல் ஆகியவற்றைச் சேர்த்துத்தான் பொருள் காண வேண்டும்.

உதாரணமாக 'பிச்சைக்காரர்' என்ற சொல்லுக்கு இலக்கணரீதியாக பொருள் விளக்கம் கூற முயன்றால், 'பணம் சேகரிக்கும் நபர்' எனலாம். ஆனால், ஒரு நற்பணிக்காக பணம் சேகரிக்கும் நபரைப் 'பிச்சைக்காரர்' என்று கூறிவிட முடியாது. இதிலிருந்து இடம், பொருள், ஏவலின் அடிப்படையில் சொற்களுக்கு பொருள் விளக்கம் அளித்தல் சிறந்தது என்பது புலனாகும். மேலும் இது எளிதான முறையும் ஆகும். சில வழக்குகள் வருமாறு :

Bearmans Ltd., v. Metropolitan Police District Receiver[1]

மேற்படி வழக்கில் Devilin L.J., கூறியதாவது,

"பொருள் கொள்ளப்பட வேண்டிய சட்டத்தின் உப–பிரிவு, 'interested' என்ற சொல்லின் பொருள் என்ன என்பதைச் சார்ந்து இருக்கிறது. ஒரு சொல்லின் இயற்கையானதும் பிரசித்தமானதுமான பொருளைக் கண்டுபிடித்தவுடன் அதற்கு மேல் சிரமப்படாமல் விட்டுவிடக் கூடிய ஒரு விஷயமன்று இது. 'interested' என்ற

1. 1961

சொல்லுக்கு வரையறுக்கப்பட்ட பொருள் எதும் கிடையாது. இதற்குப் பொருள் என்ன என்று யாரைக் கேட்டாலும், அவர் உடனே, அது எந்த இடத்தில் எவ்வாறு உபயோகப்படுத்தப்பட்டுள்ளது என்றுதான் கேட்பார். அது 'financial interest' ஆக இருக்கலாம் அல்லது ஒரு நிகழ்வில் ஒருவனுக்கு உள்ள 'interest'-க் (அக்கறை) குறிக்கலாம். சாதாரண ஒரு பேச்சின் பொருளைக் கொள்வதற்கு அதன் இடம், பொருள், ஏவலை வினவுவது போலவே பாராளுமன்றத்தின் சட்டத்தில் இருக்கும் ஒரு சொல்லின் பொருளைக் காண்பதற்கு அதனுடைய எல்லைகளையும் நோக்கங்களையும் அறிய வேண்டியது அவசியமாகிறது" என்றார்.

Black Town Properties Ltd., v. Ministry of Housing and Local Government[1]

'சாக்கடை வடிகுழாய்' (Sewer) எனும் சொல் 'கட்டடங்களில் அசுத்த நீரை வெளியேற்ற **உபயோகப்படுத்தப்படும்** குழாய்' என்று வரையறைப்படுத்தப் பட்டிருந்தது (defined). இங்கு 'உபயோகப்படுத்தப்படும்' என்ற சொல் தற்சமயம் உபயோகத்தில் இருப்பதை மட்டுமில்லாமல், அசுத்த நீரை வெளியேற்றும் நோக்கம் கொண்டு நிர்மாணிக்கப்பட்டுப் பின் உபயோகத்தில் இல்லாமலிருக்கும் பகுதியையும் சேர்த்தே குறிப்பிடுவதாகும்.

2. சொற்களின் பிரசித்தமான உபயோகம் (Words used in popular sense) :

'பிரசித்தம்' என்றால் **'பிரபலம்'** என்று பொருள். சமுதாயத்தில் சில சொற்கள் மிகவும் பிரபலமாக குறிப்பிட்ட ஒரு செயலைக் குறித்து உபயோகப்படுத்தப்படும். அப்படி பிரபலமாக உபயோகப்படுத்தப்படும் சொற்களை, வேறுவிதமாக உபயோகப் படுத்தக் கூடாது. அப்படி உபயோகப்படுத்தினால், அது அந்தச் சொல்லின் பொருளை சிதைப்பதாகும்; மொழியை அவமதிப்பதாகும். மிகப் பிரபலமாகப் பயன் படுத்தப்படும் சொற்களுக்கு விஞ்ஞானரீதியான பொருள் கொள்ளுதல் (Technical sense), சட்டரீதியான பொருள் கொள்ளுதல் (Legal sense) ஆகியவற்றை கைவிடல் வேண்டும். இல்லாது போனால், அது அபத்தத்தில் சென்று முடியும். சுருங்கக்கூறின், சமுதாயத்தில் மக்கள் மிகவும் பிரபலமான உபயோகத்திற்காக பயன்படுத்தப்படும் ஒரு சொல்லை, அந்த உபயோகத்திற்காக மட்டுமே பொருள் வேண்டுமே தவிர, வேறு விதத்தில் அல்ல. இதை பின்வரும் வழக்கு தெளிவாக விளக்குகிறது.

Bourne v. Norwhich Crematorium Ltd.[2]

மேற்படி வழக்கின் பொருண்மைகளின்படி, பிரதிவாதிகள் சடலத்தை எரியூட்டும் மயானம் ஒன்றை Norwhich Crematorium Ltd., என்ற பெயரில்

1. 1967
2. 1967

நடத்தி வந்தனர். அதற்குண்டான கட்டணத்தை வசூலிப்பதன் மூலம் வருவாய் ஈட்டி வந்தனர். எனவே பிரதிவாதிகள் வருமான வரி செலுத்த வேண்டுமென, வாதியானவர் அவர்கள் மீது வழக்குத் தொடர்ந்தார். வாதியின் வாதப்படி, **"பொருள்களையும் மூலப் பொருள்களையும் எந்த ஒரு மாற்றத்திற்கும் உட்படுத்தும்" (subjection of goods or materials to any process)** தொழிலைப் புரிபவர்கள் எவரும் வருமான வரி செலுத்த வேண்டுமென்றும், பிரதிவாதிகள் செய்யும் தொழிலான **'சடலத்தை எரியூட்டல்' (Cremation)** என்பதிலும் ஒரு பொருள், மாற்றத்திற்கு உட்படுத்தப்பட்டு அதன் மூலம் வருவாய் ஈட்டப்படுகிறது என்றும், எனவே அதற்கு பிரதிவாதிகள் வருமான வரி செலுத்த வேண்டுமென்றும், கூறப்பட்டது.

இதைக்கேட்ட **நீதிபதி Stamp J.,** அவர்கள் தமது தீர்ப்பில் மேற்படி வாதம் தம்மை எந்த அளவிற்கு எரிச்சலூட்டியிருக்கிறது என்பதை பின்வருமாறு கூறியுள்ளார். அஃதாவது, "இது ஆங்கில மொழியை சிதைப்பது . . . ஆங்கில மொழியை குறிப்பாகச் சாதாரணமான ஓர் ஆங்கிலச் சொற்றொடரை குளறுபடியாக்கிப் பொருளைத் திணிக்கும் இம்மாதிரியான செயல்களை நான் கடுமையாக எதிர்க்கிறேன்" என்று அவர் கூறியுள்ளார்.

ஆங்கில மொழியில் 'Cremation' என்பது இறந்தவர்களுக்குச் செய்யப்படும் கடமை மற்றும் சடங்கு என்பதை குறிக்கும் வகையில், சமுதாயத்தில் பொதுவாக மக்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டு, உபயோகப்படுத்தப்படும் ஒரு பிரசித்தமான சொல்; அதை மேற்கண்ட விதத்தில் பொருள் கொள்ளாமல் விஞ்ஞானரீதியாகவும், சட்டரீதியாகவும் பொருள் கொள்ள வாதிடுவது தவறு, என்று மேலும் அந்நீதிபதி கூறினார்.

3. சட்டமியற்றப்படுங்கால் சொற்களுக்கிருந்த பொருள் (Meaning at the time of the statute was passed) :

சட்டம் இயற்றப்படும் போது வழக்கத்தில் இருந்த சொற்கள் என்ன பொருளுடன் பின்பற்றப்பட்டனவோ, அதே பொருளுடன் தான் பிற்காலங்களிலும் பயன்படுத்தப்பட வேண்டும். நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து கொண்டு வருவது மனித சமுதாயமாகும். சமுதாயம் வளர்கிறது என்றால் மனிதன் வளர்ந்து கொண்டிருக்கிறான் என்று பொருள். மனிதன் வளர, வளர அவனது வளர்ச்சிக்கு ஏற்ப அவன் பயன்படுத்தும் சொற்களும், அவற்றிற்கான பொருள்களும் மாறுபடுகின்றன. அவனது வளர்ச்சிக்கு ஏற்றாற்போல் அவ்வப்போது சட்டத்தில் பயன்படுத்தப்பட்டிருக்கும் சொற்களுக்கும் பொருளை மாற்றிக் கொண்டிருக்க இயலாது. எனவே சட்டம் இயற்றப்படுங்கால், ஒரு சொல்லுக்கு என்ன பொருள் கொள்ளப்பட்டதோ அதே பொருள்தான் எப்போதும் கொள்ளப்பட வேண்டும். இதைப் பின்வரும் ஒரு உதாரண வழக்கு மேலும் தெளிவாக்குகிறது.

Wilson v. Kunbley[1]

பதினான்காம் நூற்றாண்டில், அனைத்து வகையான குற்றங்களைப் புரிவோரும் **'Trespassers' (அத்துமீறுபவர்கள்)** எனப்பட்டனர். ஆனால் தற்போதுள்ள சட்டங்களில் 'Trespassers' எனும் சொல், பிறரது சொத்தில் குற்றங் கருதி, முரணாக நுழைபவர்களையே குறிக்கிறது. அதாவது, 'அத்துமீறி நுழைபவர்களே', 'Trespassers' எனப்படுகின்றனர்; பிற வகையான குற்றங்கள், பிற சொற்களால் அழைக்கப்படுகின்றன. எனவே, மேற்கண்ட பொருள் விளக்க விதிப்படி, பதினான்காம் நூற்றாண்டில் இயற்றப்பட்ட சட்டத்தில் இருக்கும் இந்தச் சொல், அப்போதிருந்த பொருளைக் குறிக்கும் வகையிலேயே கையாளப்பட வேண்டும், என மேற்படி வழக்கில் கூறப்பட்டது. சுருங்கக்கூறின், எந்தக் கால கட்டத்தில் சட்டங்கள் இயற்றப்படுகின்றனவோ, அந்த கால கட்டத்தில் நடைமுறையில் உள்ள சொற்களுக்கு என்ன பொருள் கொள்ளப்பட்டதோ, அதே பொருளில்தான், அந்த சட்ட சொற்களுக்கும் பொருள் கொள்ளப்பட வேண்டும்.

ஆனால் அதே சமயத்தில், சட்டமியற்றப்பட்ட காலத்தில் தெரியாதிருந்த, கண்டுபிடிக்கப்படாமலிருந்த பொருள்களை, சட்டத்திலிருக்கும் ஒரு சொல்லின் எல்லைக்குள் வகைப்படுத்தலாம். உதாரணமாக, பின்வரும் ஒரு வழக்கை காண்போம்.

Attorney General v. Edison Telephone Co. Ltd.,[2]

'Telephone Act' எனும் சட்டம் 1869–ஆம் ஆண்டு இயற்றப்பட்டது. அந்தச் சட்டம் அப்போது நடைமுறையில் இருந்த தந்தி அனுப்புதலையும், தந்தி தொடர்பான நடவடிக்கைகளையும் மட்டுமே, தனது எல்லையாகக் கொண்டிருந்தது. ஆனால் **'தொலைபேசி' (Telephone)** கண்டுபிடிக்கப்பட்ட பிறகு, தொலைபேசியும் மேற்படி 'Telegraph Act'–ன் கீழ் கொண்டு வரப்பட்டது. பழைய சட்டத்தில் 'Telegraph' என்று உள்ள சொல்லுடன் 'Telephone' என்ற சொல்லையும் உள்ளடக்கலாம், என மேற்படி வழக்கில் கூறப்பட்டது. அதுபோல், பின்னர் கண்டு பிடிக்கப்பட்ட 'Bicycle' எனும் சொல் 'Carriage' என்ற சொல்லிலும், நீராவியினால் ஓடும் மூன்று சக்கர சைக்கிள் 'Locomotives' என்ற சொல்லிலும் அடங்கும், எனப்பட்டது.

முடிவுரை :

மேற்கண்டதைப் பார்க்கும் பொழுது, ஒரு சிறிய சொல்லுக்கு பொருள் கொள்வதில் இவ்வளவு விஷயங்களா என்று வியப்பு ஏற்பட்டால், அதில் அதிசயம் ஏதுமில்லை. மேற்படி விதிகள் இல்லாது போனால், சொல்லுக்கு எப்படி வேண்டுமானாலும் பொருள் கொள்ளலாம் என்ற நிலை உருவாகிவிடும். இது மிகவும் ஆபத்தாகும். **'மொட்டை தாசனுக்கும் முழங்காலுக்கும் முடிச்சு போட்டு**

1. 1806
2. 1880

பேசும்' உலகம் இது. மூதாதையர் விட்டுச் சென்ற இரும்புப் பெட்டி ஒன்றை அடைவதில் அண்ணன்–தம்பி ஆகிய இருவருக்கிடையே ஏற்பட்ட ஒரு தகராறின் பொழுது அண்ணன் கேட்டானாம், **"நீ என்ன அர்த்தத்தோடு பேசுகிறாய் ?"** என்று. அதற்கு தம்பி பதிலளித்தானாம், **"நீ நினைக்கும் அர்த்தத்தில் நான் பேசவில்லை"** என்று. இதை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த பிறிதொருவன் சொன்னானாம், **"எனக்குத் தெரியும் . . . இவர்கள் இருவரும் என்ன அர்த்தத்துடன் பேசிக் கொண்டிருக்கிறார்கள் என்று"**. எனவே, ஒவ்வொரு சொல்லுக்கும் பல நூறு பொருள் உண்டு. அவற்றை எப்படி பொருள் கொள்ள வேண்டும் என்பதற்கு, மேலே விதிகள் உண்டு. அவற்றைப் பயன்படுத்தினால், என்றும் நலமுண்டு.

[v] இனம் கண்டு பொருள் கொளல் விதி [Rule of Ejusdem Genris]

26. Rule of ejusdem genris - Write short notes. (இனம் கண்டு பொருள் கொள்ளல் விதி – சிறு குறிப்பு எழுதுக.)

(அல்லது)

Explain with reference to decided cases 'the rule of Ejusdem genris. (இனம் கொளல் விதி மூலம் பொருள் விளக்கம் காண்பதை வழக்குகளின் துணையோடு விளக்குக.)

முன்னுரை :

பொதுவாக, ஒரு சொல்லின் பொருள், அது எந்தச் சொற்களோடு இணைந்து வருகின்றதோ, அவற்றிற்கேற்பவே பொருள் காண வேண்டும் என்பதை வலியுறுத்தும் விதியே, **"இனம் கண்டு பொருள் கொள்ளும் விதியாகும்"**. சற்று விளக்கமாக வருமாறு.

விதியின் விளக்கம் :

"ejusdem genris" என்பது இலத்தீன் சட்ட சொல்லாகும். இதன் பொருள், **"அதே வகையானது, அல்லது அதே இனத்தினது" (of the same kind or species)** என்பதாகும். பொதுவாக சட்டத்தில் காணப்படும் தனிச் சொல்லிற்கும் (Specific Word) மற்றும் பொதுச் சொல்லிற்கும் (General Word) இடையே ஒரு இணக்கமான பொருள் விளக்கத்தை அளிப்பதற்கே நீதிமன்றங்கள் முயலுகின்றன. வேறு விதத்தில் சொல்வதென்றால், ஒரு சட்டத்தில் தனிச் சொற்களைத் தொடர்ந்து பொதுச் சொற்கள் வருமேயானால், அப்பொதுச் சொற்கள், அத்தனிச் சொற்களுக்குண்டான பொருளின் அடிப்படையிலேயே, பொருள் கொள்ளப்படுகின்றன. வேறு விதத்தில் முரண்பாடான பொருள்

கொள்வதற்கு வாய்ப்பு ஏதும் இல்லாத பொழுது, தனிச் சொற்களைப் பின்பற்றி வரும் பொதுச் சொற்களுக்கு, அத்தனிச் சொல்லிற்குண்டான அதே பொருளையோ, அதே நபரையோ அல்லது அதே விஷயத்தையோ பொறுத்து மட்டுமே அப்பொதுச் சொல்லுக்கும் பொருள் அளிக்கப்பட வேண்டும். இதற்கு அப்பொதுச் சொல்லை மட்டும் தனியாக அதன் பரந்த நோக்கில் பொருள் கொண்டு விளக்கமளித்தல் கூடாது. சுருங்கக்கூறின், தனிச் சொல்லை பின் தொடர்ந்து வரும் பொதுச் சொல்லை, தனிச் சொல்லின் பொருள் கட்டுப்படுத்துகிறது. இவ்வாறு தனிச் சொல்லின் பொருளை இனம் கண்டு பொதுச் சொல்லிற்கும் அதே பொருளைக் கூறும் முறைக்குத்தான் **'இனம் கண்டு பொருள் கொள்ளும் முறை'** என்று பெயர். சட்டப் பொருள் விளக்கமளித்தலில் இது ஒரு துணை விதியாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

எடுத்துக்காட்டுகள் :

மேற்படி விதியைப் பின்வரும் எடுத்துக்காட்டுகள் மேலும் தெளிவாக்கும்.

நாம், நமது வேலையாளைக் காய்கறிகள் வாங்குவதற்கெனக் கடைக்கு அனுப்பும் பொழுது, **'வாழைக்காய், தேங்காய், வெண்டைக் காய் இன்னும் வேறு நல்லதாக ஏதாவது வாங்கிக் கொண்டு வா'**, என்று கூறுகிறோம். இப்பொழுது, **'வேறு நல்லதாக ஏதாவது'** என்பதில் வேறு வகைக் காய்கறிகள்தான் அடங்குமே தவிர சமையல் பாத்திரமோ, நாற்காலியோ அடங்குவதில்லை.

இங்கு "வாழைக்காய், தேங்காய், வெண்டைக்காய்" என்ற சொற்கள் தனிச் சொற்களாகும். அவற்றைப் பின் தொடர்ந்து வரும் "வேறு நல்லதாக ஏதாவது" என்பது பொதுச் சொல்லாகும். இந்த பொதுச் சொல்லிற்குண்டான பொருளை, மேற்கண்ட காய் வகைகளான தனிச் சொற்களின் இனத்தோடு சேர்த்து அறிந்துதான் பொருள் கொள்ள வேண்டும். அதை விடுத்து அப்பொதுச் சொல்லிற்கு தனியாக வேறு ஏதேனும் பொருள் பகரக் கூடாது.

மற்றொரு எடுத்துக்காட்டில், இரும்பாலைத் தொழிலாளர் களுக்கு என்று இயற்றப்பட்ட சட்டத்தின் பிரிவு ஒன்றில் **'எக்குப் பிரிவில் வேலை செய்வோர், இயந்திரப் பிரிவில் பணியாற்றுவோர் அல்லது வேறு எவரும்'**, என்ற தொடர் இரும்பாலையில் வேறு வகையில் வேலை பார்ப்பவர்களை மட்டும் குறிக்குமே அல்லாமல், பொதுவாக வேறு எந்த மனிதரையும் குறிப்பதில்லை. சாதாரணமாக, **'வேறு எவரும்'** என்ற தொடருக்கு **'வேறு எந்த மனிதரும்'** என்றுதான் பொருள் கொள்வோம். ஆனால், அந்த வாசகத்திற்கு முன்னால் உள்ள தனிச்சொற்கள், அந்த பொது வாசகத்தின் பொருளைக் கட்டுப்படுத்தி அச்சொற்கள், குறிப்பிட்ட பகுதியினருக்கே பொருந்துமாறு செய்கின்றன. இதுவே அறிவுக்கு உகந்த முறையும் ஆகும்.

இனி மேற்படி விதி குறித்து பின்வரும் சில முக்கியமான வழக்குகளை கவனிப்போம்.

முக்கியமான வழக்குகள் :

Ashbury Railway Co. v. Riche[1]

இவ்வழக்கில் ஒரு நிறுவனத்தின் அமைப்புக் முறையேட்டில், அந்நிறுவனத்தின் நோக்கங்களில் ஒன்று, **"இயந்திர பொறியியல் மற்றும் பொது ஒப்பந்தங்கள் சம்பந்தப்பட்ட வணிகத்தை செய்வதற்கு" (to carry on the business of mechanical engineers and general contractors)** என்று குறிப்பிடுகின்றது. மேற்படி **'பொது ஒப்பந்தங்கள்' (general contractors)** என்ற வாசகமானது இயந்திரப் பொறியியல் சம்பந்தப்பட்ட பணியை மட்டுமே குறிக்குமே தவிர வேறு பணிகளை உள்ளடக்காது என நீதிப்பெருமகனார்கள் அவை தீர்ப்பளித்தது.

மேற்படி வழக்கின் தீர்ப்பிற்கு சற்று மாறுபட்ட விதத்தில் தீர்ப்பளிக்கப்பட்ட ஒரு வழக்கை பின்வருமாறு கவனிப்போம்.

Rantansi Hirji v. Emperor[2]

பம்பாய் முனிசிபல் சட்டத்தின் 412–A பிரிவானது, ஒரு நபர், **"பால், வெண்ணெய் அல்லது பிற பால் உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்வதற்காக" (sale of milk, butter or other milk products)** ஒரு இடத்தை பயன்படுத்துவதற்கு நகராட்சியின் உரிமம் (licence) பெற வேண்டும் என்று கூறுகிறது. இங்கு **'நெய்' (ghee)** என்பது **"பிற பால் உற்பத்திப் பொருட்கள்" (other milk products)** என்ற வாசகத்தின் எல்லைக்குள் வருமா, என்ற கேள்வி எழுந்தது. இங்கு மேற்படி இனங்கண்டு பொருள் கொளல் விதிப்படி, முன்னர் இருந்த இரண்டு பொருட்களின் பொதுவான தன்மை கண்டறியப்பட்டதில் அவ்விரண்டு பொருட்களும் அதாவது பால் மற்றும் வெண்ணெய் ஆகியவை எளிதில் கெட்டுப் போகக்கூடியவை. ஆனால் 'நெய்' அவ்வாறு எளிதில் கெட்டுப் போகக்கூடியதல்ல. எனவே, 'பிற பால் உற்பத்திப் பொருட்கள்' என்ற பதத்தில் 'நெய்' அடங்காது எனத் தீர்ப்பளிக்கப்பட்டது. எனவே உரிமம் கோரும் நபர் 'நெய்யை' அந்த இடத்தில் விற்க உரிமம் வாங்க வேண்டியதில்லை எனப்பட்டது.

Kairbeta Estate v. Rajamanickam[3]

1947–ஆம் ஆண்டின் தொழிற் தகராறுகள் சட்டம், பிரிவு 2 (kkk) படி, **'வேலை நிறுத்தம்' (lay off)** என்பது **"நிலக்கரி, மின்சக்தி அல்லது மூலப்பொருட்களின் பற்றாக்குறையால் அல்லது உற்பத்திப் பொருட்களின் குவிப்பால் அல்லது இயந்திரக் கோளாறால் அல்லது வேறு காரணங்களால் தொழில் நடத்தும் முதலாளி (employer), பணியாட்களுக்கு (workmen) பணி**

1. (1875) 44 LJ Exch. 185
2. 1937 B 274
3. 1960 II L.L.J. 276 (Supreme Court)

கொடுக்கத் தவறுதல், மறுத்தல் அல்லது இயலாதிருத்தலாகும்..." (the failure, refusal or inability of the employer on account of shortage of coal, power or raw materials, accumulation of stocks, or the break down of machinery or for any other reason to give employment to a workman . . .) என்கிறது. இதையொட்டி மேற்படி வழக்கில் உச்ச நீதிமன்றத்தின் முன்னர் வைக்கப்பட்ட பிரச்சனை என்னவென்றால், மேற்படி சட்டப் பிரிவில் உள்ள "வேறு காரணங்களால்" (for any other reason) என்பதின் கீழ் தொழில் நடத்தும் முதலாளி அறிவிக்கும் 'கதவடைப்பு' (lock out) வாத்தக்கதா, என்பதேயாகும். இதற்கு உச்ச நீதிமன்றம், 'வேறு காரணங்கள்' என்பது அச்சொற்களுக்கு முன்னர் சொல்லப்பட்டுள்ள காரணங்களுக்கு ஒத்த வகையிலும் அல்லது அதற்கு இயைந்த வகையிலும் இருப்பதைத்தான் குறிக்கும், என்று திட்டவட்டமாக பதிலளித்தது. ஆனால், இங்கு அவ்வாறு இல்லை. எனவே, 'கதவடைப்பு' என்பது, 'வேறு காரணங்கள்' என்பதில் உள்ளடங்காது. சுருங்கக்கூறின், 'கதவடைப்பு' மேற்படி சட்டப் பிரிவில் கூறப்பட்டுள்ள இனங்களுடன் ஒத்து போகவில்லை.

Poulose v. Asst. Labour Officer[1]

1958–ஆம் ஆண்டின் கேரளா தொழில் அமைப்பு (தேசிய மற்றும் விழாக்கால விடுமுறை நாட்கள்) சட்டம், பிரிவு 2(e)-ன்படி, ஒரு "தொழில் அமைப்பு" (industrial establishment) என்பது "தொழிற்சாலை சார்ந்த, வணிகத்துறை சார்ந்த அல்லது வேறு விதமான அமைப்பு எதுவும்" (any establishment, industrial, commercial or otherwise) ஆகும். மேற்படி வழக்கில் மனுதாரர், இடுக்கி நீர் மின்திட்டத்தின் (Idukki Hydro Electric Project) கீழ் கட்டுமானப் பணி புரியும் ஒரு ஒப்பந்தக்காரராவார் (contractor). கேரளா உயர் நீதிமன்றம், மேற்படி "இனங்கண்டு பொருள் கொள்ளும் விதியைப் பயன்படுத்தி மனுதாரரின் பணியானது மேற்படி பிரிவில் கூறப்பட்டுள்ள 'வேறு விதமான' (otherwise) என்ற சொற்களின் கீழ் வராது, என்று தீர்ப்பளித்தது. ஏனென்றால், மனுதாரரின் ஒப்பந்தத்தின் அடிப்படையிலான கட்டுமானப் பணி, 'வேறுவிதமான' என்ற சொற்களுக்கு முன் உள்ள "தொழிற்சாலை சார்ந்த, வணிகத்துறை சார்ந்த" என்ற இனத்துடன் ஒத்திருக்கவில்லை.

மேற்படி விதியைப் பயன்படுத்துவதற்குண்டான நிபந்தனைகள் (Conditions for the application of the above Rule) :

மேற்படி இனங்கண்டு பொருள்கொள்ளும் விதியைப் பயன்படுத்தி பொருள் விளக்கமளிப்பதற்கு பின்வரும் நிபந்தனைகள் பூர்த்தியாகி இருக்க வேண்டும். அவை,

1. தனித்த சொற்கள் சில, சம்பந்தப்பட்ட சட்டப் பிரிவில் இருக்க வேண்டும்.

1. 1975 K.L.T. 281

2. அத்தனிச் சொற்கள் ஒரே இனத்தைச் சார்ந்தவையாக இருக்க வேண்டும்.

3. அந்த இனமானது, முழுமையடையாமல் இருக்க வேண்டும். அதாவது அதில் இன்னமும் ஏதாவது சேர்க்கப்பட வாய்ப்பிருக்க வேண்டும்.

4. அத்தனிச் சொற்களுக்கு அடுத்து பொதுச் சொல் வந்திருக்க வேண்டும்.

5. அப்பொதுச் சொல்லுக்கு பரந்த விளக்கமளிக்கப்பட வேண்டுமே தவிர, வரம்பிடப்பட்ட விளக்கமளித்தல் கூடாது, என்ற வகையில் முரண்பாடான சட்ட மன்றக் கருத்து ஏதும் இருத்தல் கூடாது.

மேற்படி விதிக்கு வரம்புகள் (Limitations to the Rule) :

1. சட்டப் பிரிவில் இருக்கும் தனிச் சொற்கள் அனைத்தும் சேர்த்து ஒரு குறிப்பிட்ட (ஒத்த) இனமாக (distinct genus) விளங்கினால்தான், மேற்படி விதியை பயன்படுத்த இயலும்.

2. 'பொதுச் சொற்களுக்கு' வேறு பரந்த பொருள் கொடுக்கப்பட வேண்டும் என்று சட்டமன்றம் கருதியிருந்தால், மேற்படி விதியை பயன்படுத்த இயலாது.

முடிவுரை :

இவ்வாறு பொதுச் சொற்களுக்கு அவற்றிற்கு முன்னுள்ள தனிச் சொற்களின் இனத்தைக் கண்டறிந்து பொருள் கொடுப்பதால், அனாவசியமான குழப்பங்கள் தவிர்க்கப்படுகின்றன. ஆனால் அவ்வாறு சரியாக இனம் கண்டு பிடிக்க வேண்டியது, நீதிபதியின் கடும் பணிகளுள் மிக முக்கியமான ஒன்றாகிறது.

[vi] தொடர்பு கண்டு பொருள் கொள்ளும் விதி [Rule of Noscitur a sociis]

27. Explain the rule of Noscitur a Sociis. (தொடர்பு கண்டு பொருள் கொள்ளும் விதியை விளக்குக.)

(அல்லது)

What is the rule of Construction of associated words. Explain with case laws. (தொடர்புடைய சொற்களின் பொருள் விளக்க விதி என்றால் என்ன ? வழக்குகளுடன் விளக்குக).

(அல்லது)

"Associated Words take their meaning from one another under the 'doctrine of Noscitur a Sociis'" - Discuss and illustrate. (தொடர்பு கண்டு பொருள் கொள்ளும் கோட்பாட்டின் கீழ் தொடர்புடைய

வார்த்தைகள் ஒன்றுக்கொன்றிடமிருந்து பொருள் பெறுகின்றன" – எடுத்துக் காட்டுகளுடன் விவாதிக்க.)

(அல்லது)

Discuss with illustrations the rule that "associated words take their meaning from one another" and point out its limitations.
("தொடர்புடைய வார்த்தைகள் ஒன்றுக்கொன்றிடமிருந்து பொருள் பெறுகின்றன" என்ற விதியினை உதாரணங்களுடன் விவாதிக்கவும். இவ்விதிக்கான வரையறைகளைக் குறிப்பிடுக.)

முன்னுரை :

முன் சென்ற 'இனம் கண்டு பொருள் கொள்ளும் விதியிலிருந்து' இவ்விதி சற்று மாறுபட்டதாகும். முந்தய விதியில் தனிச்சொற்களின் இனம் கண்டு பொருள் விளக்கமளிக்கப்பட்டது. ஆனால் இவ்விதியில் தனிச் சொற்கள், பொதுச் சொற்கள் என்ற பாகுபாடு இல்லை. அனைத்தும் தனிச் சொற்களே. இவ்விதியில் அப்படிப்பட்ட ஒரு தனிச் சொல்லுக்கு பொருள் காணும் பொழுது, அதற்கு முன்னர் சென்றுள்ள தனிச் சொற்களின் பொருளின் தொடர்பு கண்டு பொருள் விளக்கமளிக்கப் படுகிறது. சற்று விரிவாக வருமாறு :

விதியின் பத விளக்கம் :

"Noscitur a Sociis" என்பது இலத்தீன் சட்ட மொழியாகும். **'Noscere'** என்றால் 'கண்டு கொள்ளுதல்' (to know) என்பதாகும். **'Sociis'** என்றால் 'தொடர்புடைய' (Associated) என்று பொருளாகும்.

விதி கூறும் விளக்கம் :

மேற்படி விதியின்படி, இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட சொற்களை ஒன்றாக தொடர்புபடுத்திப் பார்க்கும் பொழுது, ஒத்த பொருள் வந்தால், அச்சொற்கள் ஒன்றுக்கொன்று தொடர்பு கொண்டு விளங்குபவையாகும். ஒரு சொல், தனக்குண்டான பொருளை மற்றொரு சொல்லின் பொருளிலிருந்து பெறுகின்றது. ஒரு சொல்லின் பொதுவான பொருளானது (general meaning), அது அமைந்திருக்கும் சொற்கூட்டங்களின் தொடர்புப் பொருளை ஒட்டி, ஒத்த பொருளுடையதாகிறது. ஒரு சொல், அது சேர்ந்திருக்கும் பிற சொற்களின் பொருளைப் பொறுத்து அமைகிறது. வானிலிருந்து பெய்யும் மழை, அது சேரும் இடத்தின் தன்மையைப் பெறுவது போல. மேற்படி விதி சட்டமன்றத்தின் கருத்தைக் கண்டறிவதற்கு மிகவும் பயனாகிறது. ஆனால் அதே சமயத்தில், ஒரு சொல் வேறு பரந்த பொருளில் பயன்படுத்தப்பட வேண்டும், என்று சட்டத்திலேயே கூறப் பட்டிருப்பின், மேற்படி விதியைப் பயன்படுத்த இயலாது. இது குறித்த பின்வரும் வழக்குகளை கண்டால், மேலும் தெளிவாகும்.

முக்கிய வழக்குகள்:

Pengelly v. Bell Punch Co. Ltd.,[1]

1961–ஆம் ஆண்டின் தொழிற்சாலைகள் சட்டம், பிரிவு 28(1)–ஆனது, **"தரைகள், படிகள், மாடிப்படிகள், வழிகள் மற்றும் குறுகிய ஊடுவழிகள் ஆகியவற்றில் எவ்வித தடைகளும் இருத்தல் கூடாது" (floors, steps, stairs, passages and gangways are to be kept free from obstruction),** எனக் கூறுகிறது.

மேற்படி வழக்கில் எழுந்த வினா என்னவென்றால், சரக்குகளை இருப்பு செய்வதற்காக தொழிற்சாலையின் ஒரு பகுதியில் முறையாக பயன்படுத்தப்பட்டு வரும் 'தரைகளும்', மேற்படி பிரிவின் கீழ் வருமா என்பதுதான். ஏனென்றால் அத்தரைகளில், சரக்குகளை வைத்தால், அது தடை அல்லது இடைஞ்சல் செய்வது போலாகி விடும். இதனால், மேற்படி பிரிவையும் மீறியது போலாகிவிடும். இருப்பினும் தொழிற்சாலைகளுக்குத் தேவையான சரக்குகளை தொழிற்சாலையின் ஓரிடத்தில் இருப்பு வைத்தாக வேண்டுமே. தொழிற்சாலை அதிபர்கள் கையை பிசைந்து கொண்டு நின்றிருந்த வேளையில், நீதிமன்றம் மேற்படி விதியைப் பயன்படுத்தி பின்வரும் நுணுக்கமான தீர்ப்பை வழங்கியது. அதன்படி, 'தரைகள்' என்ற சொல்லுக்கு அடுத்து வரும் சொற்களாகிய "படிகள், மாடிப்படிகள், வழிகள் மற்றும் குறுகிய ஊடு வழிகள்" ஆகிய அனைத்தும் ஒரு தொழிற்சாலையில் செல்லும் பாதையைக் குறிப்பிடுகின்றன. அதனுடன் தொடர்புபடுத்திப் பார்க்கும் பொழுது, மேற்படி **'தரைகள்'** என்ற சொல்லும் ஒரு தொழிற்சாலையில் **'நடந்து செல்லும் பாதையைக்'** குறிப்பிடுகிறதே தவிர, வேறு விதத்தில் அல்ல என்று நீதிமன்றம் பொருள் விளக்கமளித்தது. இத்தீர்ப்பு தொழிற்சாலை அதிபர்களின் நெஞ்சில் பாலை வார்த்தது போலிருந்தது எனில் அது மிகையாகா.

R. v. Harris[2]

1837–ஆம் ஆண்டின் நபர்களுக்கெதிரான குற்றங்கள் சட்டமானது (The Offences Against the Persons Act, 1837) **"எவரையாவது குத்துதல், வெட்டுதல் அல்லது காயப்படுத்துதல்" ("stab, cut or wound any person")** பெருங்குற்றமெனக் கூறுகிறது. மேற்படி வழக்கில் மேற்படி விதியைப் பயன்படுத்தி தீர்ப்பளித்த நீதிமன்றம் பின்வருமாறு கூறியது.

அஃதாவது, மேற்படி சட்டத்தில் 'காயப்படுத்துதல்' (wound) என்று உள்ள சொல்லை, அதற்கு முன்புள்ள சொற்களான "குத்துதல், வெட்டுதல்" என்ற சொற்களுடன் தொடர்புபடுத்திப் பார்த்தல், ஆயுதங்களை கொண்டு தாக்கினால் மட்டுமே மேற்படி 'குத்துதல், வெட்டுதல்' ஏற்படுவதால் 'காயப்படுத்துதலும்'

1. 1964 (1) W.L.R. 1055
2. 1836 (7 C & P) 446

அவ்வாறே ஆயுதத் தாக்குதலால் ஏற்பட்டதாகவே இருக்க வேண்டுமே தவிர, விரலை அல்லது மூக்கைக் கடித்தல் அல்லது முகத்திற்கு எரியூட்டல் ஆகியவை 'காயப்படுத்துதலில்' சேராது, எனத் தீர்ப்பு வழங்கியது.

முடிவுரை :

'இந்த நாள் இனிய நாள்தான்' அதில் சந்தேகமில்லை. ஆனால் அனாவசிய பிரச்சனைகள், வழக்குகள் என்று வந்துவிட்டால் சிக்கல்தான். அப்பொழுது, வழக்குகளில் பொருள் விளக்கமளிப்பதற்குண்டான விதிகளைப் பயன்படுத்தி, சரியான தீர்ப்பை நீதிமன்றங்கள் மேற்கண்டவாறு நல்குவதால்தான், மீண்டும் இந்த நாள் மட்டுமல்லாது, எந்த நாளும் இனியதாகிறது.

[vii] பொது மற்றும் தனி விதிகளின் பொருள் விளக்கம் [Interpretation of General and Special Provisions]

(அல்லது)

தனி விதிக்கிசைந்தே பொது விதி இயங்கும்; பொது விதிதன்னை தனி விதி மிஞ்சும். [Generalia Specialibus non-derogant; and Generaliabus Specialia derogant]

28. Generaliabus specialia non-derogant and Generaliabus Specialia derogant. - Discuss. (தனி விதிக்கிசைந்தே பொதுவான விதி இயங்கும்; பொது விதிதன்னை தனி விதி மிஞ்சும் – விவாதி.)

(அல்லது)

What are the general and particular provisions in a statute? (ஒரு சட்டத்தின் பொதுவான மற்றும் தனியான விதிகள் யாவை ?)

(அல்லது)

Generalia specialibus non-derogant - Write short notes. (தனி விதிக்கிசைந்தே பொதுவான விதி இயங்கும் – சிறு குறிப்பு எழுதுக.)

(அ) தனி விதிக்கிசைந்தே பொது விதி இயங்கும் :

ஒரு சட்டத்தில், பொது விதிகள் (General Provisions) என்றும், தனி (சிறப்பு) விதிகள் (Special Provisions) என்றும் இருவகை விதிகள் உள்ளன. இவற்றில் தனி விதியின் திறனைப் பொது விதிகள் குறைப்பது இல்லை. ஒன்றைப் பற்றி இருவகை விதிகள் உள்ள பொழுது தனி விதிதான் ஓங்கி நிற்கும். இதை பின்வரும் ஒரு **எடுத்துக்காட்டின்** மூலம் பார்ப்போம்.

"நான்கு சக்கர வாகனங்களுக்கு வரி இருநூறு ரூபாய்" என்பது பொது விதி. "குவாலிஸ் காருக்கு வரி நானூறு ரூபாய்" என்பது தனி விதி. ஒருவர், "நான்கு சக்கர வாகனங்களுக்கு வரி இருநூறு ரூபாய்தான், குவாலிஸ் காரும் நான்கு சக்கர வாகனம்தான், எனவே அதற்கும் வரி இருநூறு ரூபாய்தான்", என வாதிட முடியாது. ஏனெனில், குவாலிஸ் காருக்கென தனி விதி உள்ளது. அந்தத் தனி விதிதான் குவாலிஸ் காருக்குப் பொருந்தும்; நான்கு சக்கர வாகனங்களைக் குறிக்கும் பொதுவிதி பொருந்துவதில்லை. இவ்வாறு தனிவிதி, பொதுவிதி, என்று இருக்கும்பொழுது தனிவிதிக்கு இசைந்துதான் பொதுவிதி இயங்க வேண்டும். இதைத்தான் 'தனிவிதிக்கிசைந்தே பொது விதி இயங்கும்' என்று குறிப்பிடுகிறோம்.

K. Vidyand v. Evamma and another[1]

குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் (பழையது) 342–வது பிரிவானது, குற்றஞ்சாட்டப்பட்டவரை வழக்கு விசாரணையின் பொழுது விசாரிப்பது குறித்து பொதுவான விதிகளைக் கூறுகிறது. ஆனால், பிரிவுகள் 242 மற்றும் 45(1)–ஆனது அழைப்பாணை வழக்குகளின் (Summons cases) விசாரணையின் பொழுது மட்டும் பொருந்தக்கூடிய சிறப்பு விதிகளைக் (Special Provisions) கூறுகிறது. மேலும் இந்த சிறப்பு விதியே அழைப்பாணை வழக்கு விசாரணையில் பயன்படுத்தப் பட வேண்டுமேயொழிய, பிரிவு 342–ன் படியிலான பொது விதியல்ல என மேற்படி வழக்கில் பொருள் விளக்கம் தரப்பட்டது.

மேலும் ஒரு விஷயத்தைக் குறித்து ஏற்கனவே தனியாக ஒரு சட்டம் இருக்கும் பொழுது, அதையொத்த விஷயம் குறித்து அதற்கு இணையாக பொதுவான ஒரு சட்டம் இயற்றப்பட்டால், அது அத்தனிச் சட்டத்தை நீக்கி விட்டதாகப் பொருளாகாது. மாறாக, அத்தனிச் சட்டத்திற்கு வழிவிட்டுதான் அப்பொதுச் சட்டம் செயல்பட வேண்டும். இதற்கு உதாரணமாக பின்வரும் வழக்கொன்றைக் கவனிப்போம்.

Chairman, Thiruvalluvar Transport Corporation v. Consumer Protection Council[2]

இவ்வழக்கில் உச்ச நீதிமன்றத்தின் முன் எழுந்த பிரச்சனை யாதெனில், 1986–ஆம் ஆண்டின் நுகர்வோர் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட தேசிய ஆணையத்திற்கு (National Commission), இயக்கவூர்திகளால் (Motor Vehicles) ஏற்படும் விபத்துகளுக்கு நஷ்டஈடு கோரி தாக்கல் செய்யப்படும் மனுக்களை விசாரிக்கும் அதிகாரவரம்பு உள்ளதா, என்பதுதான். மேற்படி வழக்கை விசாரித்த உச்ச நீதிமன்றம் பின்வருமாறு தனது தீர்ப்பை கூறியது. அதன்படி, 1986ஆம் ஆண்டின் நுகர்வோர் பாதுகாப்புச் சட்டமானது (The Consumer Protection Act, 1986), நுகர்வோர்களின் நலனை பொதுவாகப் பாதுகாக்கும் ஒரு பொதுச் சட்டமாகும். இதன் கீழ் ஒரு பேருந்தில் பயணச்சீட்டு வாங்கிப்

1. A.I.R. 1951 A.P. 94
2. A.I.R. 1995 S.C. 1384

பிரயாணம் செய்யும் ஒவ்வொரு பிரயாணியும், நுகர்வோர்தான். அப்படிப்பட்ட பிரயாணி ஒவ்வொருவரையும், எவ்வித விபத்தும், ஊறும் இல்லாமல் கொண்டு சேர்க்க வேண்டிய சேவையைச் செய்ய வேண்டிய கடப்பாடுடையவர்கள், பேருந்து நிர்வாகத்தினர். ஆனால் அதே சமயத்தில் 'நுகர்வோர்கள்' பல இனங்களின் கீழ் உள்ளனர். உதாரணமாக, தொலைபேசி பயனீட்டாளர் ஒவ்வொருவரும் நுகர்வோரே. மருத்துவமனையில் கட்டணம் செலுத்தி, சிகிச்சை பெறும் ஒவ்வொரு நோயாளியும், நுகர்வோரே. இப்படி பல சேவைகளின் அடிப்படையில், ஒருவர் நுகர்வோராக திகழ்கிறார். எனவே, இது ஒரு பொதுச் சட்டமாகும். அதே நேரத்தில், இயக்கவூர்தி களால் ஏற்படும் விபத்துக்களுக்கு நஷ்டஈடு கோரும் மனுவை விசாரிக்கக்கூடிய அதிகாரத்தை, 1988–ஆம் ஆண்டின் இயக்கவூர்திச் சட்டம் (The Motor Vehicles Act, 1988) மாவட்ட நீதிபதிகளுக்கு அளிக்கிறது. இது இயக்கவூர்திகளின் பயன்பாட்டை யும், அது ஏற்படுத்தும் விபத்துக்களுக்கு, சம்பந்தப்பட்ட வர்களுக்கு நஷ்ட ஈடு வழங்குவதை மட்டுமே நோக்கமாகக் கொண்டுள்ளது. எனவே இது ஒரு தனிச் சட்டமாகும். மேற்கண்ட விதியின்படி பொருள் விளக்கம் அளிக்கும் பொழுது, நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் என்ற பொதுச் சட்டம், இயக்கவூர்திகள் சட்டம் எனும் தனிச் சட்டத்திற்கு வழிவிட்டு நிற்க வேண்டுமேயொழிய, ஆக்கிரமித்துக் கொள்ளக்கூடாது. எனவே, இயக்கவூர்திகளால் ஏற்படும் விபத்துக்களுக்கு நஷ்டஈடு வழங்க தேசிய நுகர்வோர் குறைதீர் ஆணையத்திற்கு அதிகார வரம்பு கிடையாது, என உச்ச நீதிமன்றம் சரியாகக் கூறியது.

(ஆ) பொது விதிதன்னைத் தனி விதி மிஞ்சும் (Generalia specialibus non-derogant) :

தனி விதியும் பொது விதியும் ஒன்றுக்கொன்று முரண்பட்ட நிலையில் இருக்கும் பொழுது தனி விதியே மேலோங்கி நிற்கும். இதைத்தான் பொது விதிதன்னைத் தனி விதி மிஞ்சும் என்று அழைக்கிறோம். பின்வரும் எடுத்துக்காட்டு இதை விளக்குகிறது.

நுகர்வோர் பாதுகாப்புச் சட்டத்தின் 2(2)(i) பிரிவானது, "இச்சட்டம் வணிக நோக்கங்களுக்காக வாங்கப்பட்ட பொருட்களுக்கு பொருந்தாது", எனக் கூறுகிறது (goods for any commercial purpose). அதாவது சொந்தமாக நுகரும் பொருட்டு வாங்கப்பட்ட பொருட்களுக்கே மேற்படி சட்டம் பொருந்தும், என மேற்படி பிரிவு கூறுகிறது. இது பொது விதியாகும்.

ஆனால் மேற்படி பிரிவிற்குண்டான விளக்கப் பகுதியில் (Explanation), **சுய வேலை வாய்ப்பு மூலம் சம்பாதிக்கும் நோக்குடன் வாங்கப்பட்ட பொருட்கள் "வணிக நோக்கத்தில்" அடங்காது,** எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. அதாவது ஒருவர் ஒரு பொருளை சுயமாக வாங்கி அதன் மூலம் வருமானம் ஈட்டி தன்னுடைய பிழைப்பை நடத்தினால், அது வணிக நோக்கமாகாது, எனப் பொருள் தரும்படி மேற்படி விளக்கம் அமைகிறது, இது தனி விதி ஆகும்.

மேற்படி பொதுவிதி மற்றும் தனிவிதியினை பார்க்கையில் ஒன்றுக்கொன்று முரண்பட்ட வகையில் இருப்பது போல் தோன்றும். பொதுவிதியோ, **வணிக நோக்கங்களுக்கு** நுகர்வோர் பாதுகாப்பு சட்டம் பொருந்தாது எனக் கூறுகிறது. தனிவிதியோ, **சுயவேலை வாய்ப்பின் மூலம்** சம்பாதிக்கும் நோக்குடன் வாங்கப்பட்ட பொருட்கள் 'வணிக நோக்கத்தில்' அடங்காது எனக் குறிப்பிடுகிறது. எனவே, இங்கு தனி விதிதான் மேலோங்கி நிற்கும். பொதுவிதி அதற்கு உட்பட்டுதான் செயலுறும்.

[viii] வெளிப்படைக் குறிப்பு விலக்கும் மற்றவைகளை [Expressio unius est exclusio alterius]

29. Exprsssio unius est exclusio alterius - Write short notes.
(வெளிப்படைக் குறிப்பு விலக்கும் மற்றவைகளை – சிறு குறிப்பு எழுதுக.)

முன்னுரை :

மேற்கண்ட "Expressio unius est exclusio alterius" என்பது இலத்தீன் முதுமொழியாகும் (Legal maxim). இதன் பொருள், ஒரு வகைப்பாட்டில் உள்ள விஷயமானது வெளிப்படையாக குறிப்பிடப்பட்டிருப்பின், அதில் மற்ற விஷயங்கள் சேராது, என்பதாகும். இது ஆங்கிலத்தில் 'Mention of one thing excludes the other' எனப்படுகிறது. மேற்படி முதுமொழியின் விளக்கத்தையும், அது சட்டப் பொருள் விளக்கமளிப்பதில் எங்ஙனம் துணை புரிகிறது என்பதையும் பின்வருமாறு காண்போம்.

விளக்கம் :

சட்டமன்றமானது, ஒரு சட்டப் பிரிவில் ஒரு குறிப்பிட்ட வகைப்பாட்டின் கீழான ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட விஷயங்களை வெளிப்படையாகக் கூறியிருப்பின், மற்ற விஷயங்களை அது குறிப்பிடப்படாமல் தவிர்த்து விட்டது என்றே அனுமானிக்க வேண்டும்; அதற்கு மேலே சொல்லக்கூடாது, என்பதே மேற்படி முதுமொழி விளக்கும் பொருளாகும். இது குறித்து பின்வரும் எடுத்துக்காட்டை கண்டால் மேலும் தெளிவாகும்.

எடுத்துக்காட்டு :

'நிலம்' (land) என்ற சொல், பொதுவாக கட்டிடங்களையும் உள்ளடக்கிய தாகும். ஆனால், ஒரு சட்டம் வீடு, கட்டிடங்கள், பணிமனை, வசிப்பிடம், குடியிருப்பு மனை, பாரம்பரிய வழி மனை ஆகியவற்றின் மீது வரி விதித்து விட்டு, 'நிலத்திற்கு' விலக்களிக்கிறது. இங்கு மேற்படி முதுமொழியின் பொருள் விளக்கப்படி, 'நிலம்' என்ற சொல் 'நிலத்தை' மட்டுமே குறிப்பிடுகிறதே தவிர, அதில் வீடுகள், கட்டிடங்கள் அல்லது பணிமனைகள் சேருவதில்லை.

சட்டப் பொருள் விளக்கமளிப்பதில் மேற்படி முதுமொழியின் நிலை :

சட்டமன்றத்தின் கருத்தை கண்டறிவதற்கு மேற்படி முதுமொழி பயனாகிறது அதில் அய்யமில்லை. ஆனால் இதையே, ஒரு விதியாகக் கொள்ள முடியாது. இது சட்டமன்றத்தின் கருத்தைக் காணுவதற்கு உதவும் ஒரு கூறாகுமே (காரணி) தவிர, மேற்கூறியபடி ஒரு விதியாகாது. சட்டமன்றத்தின் கருத்தை தெளிவாகவும், குழப்பமில்லாமலும் சுட்டுக்காட்டும் வண்ணம் சட்டப்பிரிவு இருக்குமேயானால், மேற்படி முதுமொழிக்கு அங்கு வேலை இல்லை. ஏனெனில், சட்டப் பிரிவிலிருந்து ஒரு சொல் விட்டுவிடப்படுவது கவனக்குறைவாகவோ அல்லது தற்செயல் நிகழ்ச்சியாகவோ கூட இருக்கலாம். இதனால் விடப்பட்டவற்றை சட்டம் குறிப்பிட்டுக் கூறவில்லை எனக் கொள்ள முடியாது. மேற்படி முதுமொழியைப் பயன்படுத்தி பொருள் விளக்கம் காணும்போது, அதன் முடிவு சட்டமன்றத்தின் கருத்திற்கு முரண்பாடாகவோ அல்லது அநீதி இழைப்பதாகவோ இருக்குமேயானால், அப்பொருள் விளக்கத்தை நீதிமன்றங்கள் பின்பற்றுதல் கூடாது. மேற்படி முதுமொழியே முடிவானதும், நிறைவானதுமாகாது. ஆனால் மிக்க விழிப்புடன் பின்பற்ற வேண்டிய ஒன்று.

Colquhoun v. Brooks[1] என்ற வழக்கில் நீதிபதி **Lopes L.J.** அவர்களது கூற்றுப்படி, **"மேற்படி முதுமொழி ஒரு மதிப்பு மிக்க வேலையாள்; ஆனால் சட்டத்திற்கு பொருள் விளக்கமளிப்பதில் பின்பற்றுவதற்கு அபாயகரமான முதலாளி**[2]**"** என்கிறார். எனவே, மேற்படி முதுமொழி சட்டத்தின் பொருளைக் காண்பிப்பதற்கு வழிகாட்டும், வழி சரியாகத் தெரியாத ஒரு வழிகாட்டி எனலாம்.

[ix] ஒரு விஷயத்தை இல்லாநிலையாக்குவதைவிட செயலாக்கம் கொடுப்பதே நன்று [Ut res magis valet quam pareat]

30. Ut res magis valet quam pareat - Write short notes. ("ஒரு விஷயத்தை இல்லா நிலையாக்குவதைவிட செயலாக்கம் கொடுப்பதே நன்று" – சிறு குறிப்பு எழுதுக.)

முன்னுரை :

மேற்கண்ட "Ut res magis valet quam pareat" என்பது இலத்தீன் சட்ட முதுமொழியாகும் (Legal maxim). இதன் பொருள், "ஒரு விஷயத்தை இல்லா நிலையாக்குவதைவிட செயலாக்கம் கொடுப்பதே நன்று" என்பதாகும். இது

1. (1889) L.J.Q.B. 53
2. It is often a valuable servant, but a dangerous master to follow in the construction of statutes. - **Lopes L.J.**

ஆங்கிலத்தில், 'It is better for a thing to have effect than to be made void'. இம்முதுமொழி, சட்டப் பொருள் விளக்கத்தில், எவ்வாறு பயனாகிறது என்பதை பின்வருமாறு காண்போம்.

விளக்கம் :

சட்டப் பிரிவு ஒன்றிற்கு பொருள் விளக்கம் அளிக்கப்படும் பொழுது, அதற்கு இரண்டு விதமான பொருள் விளக்கங்கள் வருமேயானால், அதில் எப்பொருள் விளக்கம் சட்டமன்றத்தின் கருத்தை நிலைநாட்டுவதாக உள்ளதோ அல்லது அச்சட்டத்தின் நோக்கத்தை வலியுறுத்துவதாக உள்ளதோ, அப்பொருள் விளக்கத்தை எடுத்துக் கொண்டு, அவ்வாறு இல்லாத மற்றும் குழப்பத்தை உண்டு செய்யும் மற்றொரு பொருள் விளக்கத்தை விட்டுவிடுதல் வேண்டும், என்பதே மேற்படி முதுமொழி கூறும் விதியாகும்.

அறிஞர் மேக்ஸ்வெல் (Maxwell) கூறும் கருத்து :

"ஒரு சட்டப் பிரிவிற்கு இரண்டு பொருள் விளக்கங்கள் சாத்தியமாக இருந்து, அதில் எதைத் தேர்ந்தெடுப்பது என்ற நிலை வருமேயானால், அவற்றில் சட்டத்தின் நோக்கத்தை அடைய இயலாத பொருள் விளக்கமானது, மிகக் குறுகியதாகும். அத்தகு குறுகிய பொருள் விளக்கம், சட்டத்தை பயனற்றதாக்கி விடுமென்பதால், அதனைத் தவிர்த்து விடல் வேண்டும். மாறாக, நல்லதொரு விளைவு ஒன்றிற்காக மட்டுமே பாராளுமன்றம் சட்டமியற்றியுள்ளது என்ற கண்ணோட்டத்தின் அடிப்படையில் உள்ள சிறந்த பொருள் விளக்கத்தையே ஏற்றுக் கொள்ள வேண்டும்."[1]

Commissioner of Sale Tax v. Mangal Sen[2]

இவ்வழக்கில் உச்ச நீதிமன்றம் பின்வரும் கருத்தைத் தெரிவித்தது. அதன்படி, "[3]இயற்றப்பட்ட சட்டமென்பது, சட்டமன்றத்தின் விருப்பத்தை கொண்டிருக்கும் ஒரு அதிகாரபூர்வமான கருவூலம்" எனப்படுகிறது. அதை, 'சட்டமியற்றியவர்களின் கருத்தின்படி பொருள் விளக்கமளிக்க வேண்டியது', நீதிமன்றத்தின் பணியாகும். அப்பணியிலிருந்து நீதிமன்றங்கள் விலக்கக் கூடாது. ஒரு விஷயத்தை இல்லா நிலையாக்குவதை விட செயலாக்கம் கொடுப்பதே நன்று என்ற சட்ட முதுமொழிக்கு

1. If the choice is between two interpretations, the narrower of which would fail to achieve the manifest purpose of the legislation, we should avoid a construction which would reduce legislation to futility and should rather accept bolder construction based on the view that Parliament would legislate only for the purpose of bringing about an effective result - **Maxwell.**
2. A.I.R. 1978 S.C. 449
3. "A statute is supposed to be an authentic repository of the legislative will and the function of the Court is to intepret it "according to the intent of them that made it." From that function, the Court is not to resile. It has to abide by the maxim "ut res magis valet quam pereat . . ." lest the intention of the legislature may go in vain or be left to evaporate into thin air.

நீதிமன்றங்கள் கட்டுப்பட்டவையாகும். . . . இல்லாது போனால், சட்டமன்றத்தின் கருத்து வீணாகலாம் அல்லது காற்றில்கூட கரைந்து போகலாம்".

முடிவுரை :

ஒரு சட்டப் பிரிவிற்கு இரண்டு சட்டப் பொருள் விளக்கங்கள் இருந்தால், எது அச்சட்டத்தை இயற்றிய சட்டமன்றத்தின் கருத்திற்கு வலு சேர்க்கிறதோ, அதை எடுத்துக் கொள்ள வேண்டும்; பிறிதொன்றை விட்டுவிடல் வேண்டும், என்பதே மேற்படி விதி உணர்த்துவதாகும். அதாவது, இரண்டு பொருள் விளக்கங்களையும் விட்டுவிடாமல் அவற்றில் சட்டமன்றத்தின் கருத்தை எடுத்தியம்பும் பொருள் விளக்கத்திற்கு செயலாக்கம் கொடுக்கப்படுகிறது.

[x] சட்டத்திற்கு சம காலத்தவர் அளித்த விளக்கமே, சரியான விளக்கம் [Contemporanea expositio est fortissima in lege]

31. Contemporanea expositio est fortissima in lege - Write short notes. (சட்டத்திற்கு சம காலத்தவர் அளிக்கும் விளக்கமே சரியான விளக்கம்" – சிறு குறிப்பு எழுதுக.)

(அல்லது)

Discuss the rules of contemporanea expositio. Cite case laws. (சமகால பொருள் விளக்கங் கொளல் விதிகளை விவாதிக்க. வழக்குகளைச் சுட்டிக்காட்டுக.)

(அல்லது)

Contemporaneous construction - Write short notes. (இணை கால பொருள் விளக்கங் கொளல் – சிறு குறிப்பு எழுதுக.)

முன்னுரை :

மேற்கண்ட "Contemporanea expositio est fortissima in lege" என்பது இலத்தீன் சட்ட முதுமொழியாகும் (Legal maxim). இதன் பொருள், "ஒரு சட்டத்திற்கு, அச்சட்டம் தொடர்பான காலத்தில் வாழ்ந்தவர் அளித்திருக்கும் விளக்கமே, சரியான விளக்கமாகும்" என்பதாகும். இது ஆங்கிலத்தில், 'Contemporaneous exposition is the best and strongest in the law' எனப் படுகிறது. இது ஆவணங்களுக்கு பொருள் விளக்கமளிப்பதற்கும் பொருந்தும். சற்று விரிவாக வருமாறு.

விளக்கம் :

ஒரு சட்டம் இயற்றப்படும் பொழுது, அதற்கு காரணமாக இருந்த சூழ்நிலைகள் மற்றும் அப்பொழுது இருந்த சூழல்கள் ஆகியவற்றைக் குறித்து தற்பொழுது வாழ்ந்து கொண்டிருப்பவர்கள் அத்தகு சூழ்நிலைகள் மற்றும் சூழல்களை அறிந்திருப்பதைக் காட்டிலும், அச்சட்டம் இயற்றப்படும் பொழுது வாழ்ந்திருப்பவர்கள் அதிகமாக அறிந்திருப்பார்கள், என்று அனுமானிக்கப் படுகிறது.

மேற்படி முதுமொழியின்படி, பழைய சட்டங்களுக்கு பொருள் விளக்கம் அளிக்கும் பொழுது, அச்சட்டம் இயற்றப்பட்ட பொழுது வாழ்ந்திருந்த நீதிபதிகள் கொடுத்திருந்த பொருளுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட வேண்டும். ஏனெனில், சட்டப் பொருள் விளக்கத்தை தீர்மானிப்பதில் தற்பொழுது வாழ்ந்து கொண்டிருக்கும் நீதிபதிகளை விட, அக்காலத்திய நீதிபதிகள்தாம் சிறந்த நிலையிலிருப்பவர்கள். எனவே, அவர்கள் அளித்துள்ள பொருள் விளக்கத்தை காண வேண்டும். வேறு விதத்தில் கூறுவதானால், ஒரு சட்டத்தில் உள்ள சொற்களை, அச்சட்டம் எப்பொழுது இயற்றப்பட்டதோ அச்சமயத்தின்படிதான் புரிந்து கொள்ள வேண்டுமே தவிர, தற்பொழுது உள்ள சூழ்நிலைகளின்படி அல்ல, என்பதே மேற்படி முதுமொழி கூறும் விதியாகும். எனினும், பழைய சட்டத்திற்கு, அச்சமயத்தில் தவறான பொருள் விளக்கம் கொடுக்கப்பட்டிருப்பின், அதைத் தற்பொழுது திருத்தி, சரியான சட்டப் பொருள் விளக்கத்தை அளிப்பதற்கு தற்போதுள்ள நீதிபதிகளுக்கு தடையேதும் இல்லை.

மேற்படி முதுமொழியின் விதிக்கு கூறப்படும் குறைகள் (Criticisms):

மேற்படி முதுமொழி வலியுறுத்தும் பொருள் விளக்க விதி, தற்காலத்தில் ஏற்றுக் கொள்ளத்தக்கதாக இல்லை. ஏனெனில் தற்காலத்திய சமுதாயம் வேகமாக வளர்ந்து வருவதாகும். அதன் வளர்ச்சியும், மாற்றமும் பிரமிக்கத்தக்கது. எனவே, அச்சட்டம் இயற்றப்பட்ட பொழுது, அச்சமயத்தில் வாழ்ந்த நீதிபதிகளால் கொடுக்கப்பட்ட விளக்கமானது, அச்சமயத்திற்கு வேண்டுமானாலும் பொருந்தக் கூடியதாக இருக்கலாமே தவிர, வளர்ந்து வரும் நவீன சமுதாயத்திற்கு பொருந்துமா என்பது கேள்விக்குறியே. ஒரு சட்டத்தின் பொருள் விளக்கமானது, சமுதாயத்தில் நடப்பு பிரச்சனைகளைத் தீர்க்கக் கூடிய வகையில், இருக்க வேண்டும். பழங்கதைகளையோ அல்லது பழம் பொருமைகளையோ பேசிப் பயனில்லை, என ஒரு சாரார் குறை கூறுகின்றனர். அப்படியானால், அப்பழம் சட்டத்தை நீக்கிவிட்டு தற்போதைய நடப்பிற்கொப்ப புதிய சட்டத்தை இயற்றுவதைத் தவிர வேறு சிறந்ததொரு வழி இல்லை, என்கின்றனர் மற்றொரு சாரார்.

எடுத்துக்காட்டு :

ஒரு கால கட்டத்தில் 1956–ஆம் ஆண்டின், இந்து வாரிசுரிமைச் சட்டத்தில் இந்து பெண்களுக்கு கூட்டுக் குடும்ப முன்னோர் வழிச் சொத்தில் பங்கில்லை

என்று இருந்தது. அதற்கு காரணமாக, அப்பொழுதைய நீதிபதிகளால் பல பொருள் விளக்கம் அளிக்கப்பட்டது. ஆனால் சமுதாய வளர்ச்சியின் காரணமாக ஆணும் – பெண்ணும் சமம்; பெண் உரிமை என்ற கருத்துக்கள் வலிமை பெறத் துவங்கின. பெண்ணிற்கும் முன்னோர் வழிச் சொத்தில் பாகம் தரப்பட வேண்டும் என்று கருத்து பெரிதும் வலியுறுத்தப்பட்டது. இந்நிலையில், மேற்படி முதுமொழியின் விதிப்படி அப்பழைய சட்டத்திற்கு அளிக்கப்பட்ட பொருள் விளக்கத்தின் அடிப்படையில் பெண்ணிற்கு சொத்துரிமை தர வியலாது, என்பதைக் காரணமாகக் காட்டி அவர்களது சொத்துரிமையை மறுக்க வியலாது. மாறும் சமுதாயச் சூழ்நிலைக்கொப்ப மாற வேண்டியதுதான் சட்டமும். எனவே, அச்சட்டத்தில், சட்டத் திருத்தம் கொணரப்பட்டு ஒரு இந்துப் பெண்ணும், தனது முன்னோர் வழிச் சொத்தில் பங்குடையவரே என்ற சட்டப் பிரிவு சேர்க்கப்பட்டது.

M/s. Doypack Systems Private Limited v. Union of India[1]

மேற்படி வழக்கில், மேற்கண்ட "சமகாலத்தவரின் விளக்கம்" எனும் விதியின் பயன்பாடு உச்ச நீதிமன்றத்தால் தெளிவாக விளக்கப்பட்டுள்ளது. அஃதாவது, பழைய சட்டங்களில் தெளிவற்ற மொழி நடை இருப்பின் அதற்கு விளக்கமளிக்க மட்டுமே, மேற்படி விதி பொருந்துமே தவிர, தற்போதைய அதாவது சமீப கால சட்டத்திற்கு பொருள் விளக்கமளிப்பதற்குப் (அதற்கு இணையாக முன்பிருந்த சட்டத்தின் பொருள் விளக்கங்கள்) பொருந்தாது, என்று கூறியது.

முடிவுரை :

'ஆறின கஞ்சி, பழங்கஞ்சி' என்பார்கள். தற்போதைய சமுதாயம் சூடானது; வேகமானது. அதற்கொப்ப சட்டத்தின் வேகமும் இருக்க வேண்டும். அதற்கு சட்ட மாற்றம் வேண்டும். எனவே, பழைய சட்டத்திற்கு அளிக்கப்பட்ட பொருள் விளக்கத்தையே, புதிய சூழ்நிலைக்கும் அல்லது அதையொத்த புதிய சட்டத்திற்கும் மேற்படி முதுமொழியின் விதிப்படி பொருள் விளக்கமளிப்பது, அபாயகரமானது மற்றும் பகுத்தறிவுக்குச் சாராதது.

[xi] பொதுவாக ஏற்றுக் கொள்ளப்படும் முறைப்படி சொற்களுக்கு பொருள் கொள்ளும் விதி [Rule of Loguitur ut vulgus]

32. Rule of Loguitur ut vulgus - Write short notes. (பொதுவாக ஏற்றுக் கொள்ளப்படும் முறைப்படி சொற்களுக்கு பொருள் கொள்ளுதல் விதி – சிறு குறிப்பு எழுதுக.)

1. A.I.R. 1988 S.C. 782

முன்னுரை :

மேற்கண்ட "Loguitur ut vulgus" என்பது இலத்தீன் சட்ட முது மொழியாகும் (Legal maxim). இதன் பொருள், பொதுவாகக் கருதப்படும் மற்றும் ஏற்றுக் கொள்ளப்படும் முறைப்படி சொற்களுக்கு பொருள் கொள்ள வேண்டும், என்பதாகும். இது ஆங்கிலத்தில், 'according to the common understanding and acceptation of the terms' என்று கூறப்படுகிறது. சற்று விளக்கமாக வருமாறு.

விளக்கம் :

பொது மக்களுக்கு பயனுறும் விதத்தில் உள்ள சட்டங்களுக்கு பொருள் விளக்கமளிக்கப்படும் பொழுது, அச்சட்டத்திலுள்ள சொற்களுக்கு பொதுமக்கள் பிரபலமாக அல்லது பிரசித்தமாக (popular sense) கொண்டிருக்கும் பொருளையே வழங்குதல் வேண்டுமே தவிர, சட்டரீதியாகவோ அல்லது அறிவியல் பூர்வமாகவோ பொருள் கொள்ளுதல் கூடாது. இதை பின்வரும் எடுத்துக்காட்டு ஒன்றின் மூலம் கண்டால் மேலும் தெளிவாகும்.

எடுத்துக்காட்டு :

1797–ஆம் ஆண்டின் நிலவரிச் சட்டமானது **'மருத்துவமனைகளை' (hospitals)** நிலவரி கட்டுவதிலிருந்து விலக்களித்திருந்தது. இது 'மருத்துவமனை' என்ற பெயரில் மக்களால் அழைக்கப்படும் பொருளில் உள்ள அனைத்து அமைப்பு களையும், மேலும் அனாதைகளின் அடைக்கல இல்லத்தையும் (asylum for orphans) உள்ளடக்கும் என்றும், ஏனெனில் **'அனாதைகளின் அடைக்கல இல்லமானது'** மேற்படி சட்டத்தின் நோக்கத்திற்கு இயைந்த வகையில் இருப்பதால், அதற்கு பரந்த பொருள் கொடுக்கப்பட்டு 'மருத்துவமனை' என்ற சொல்லின் கீழ் சேர்க்க வேண்டுமென்றும், வரையறுக்கப்பட்ட சட்டக் கருத்தில் பொருள் கொள்ளக் கூடாது என்றும், கூறப்பட்டது. ஏனெனில், 'மருத்துவமனை' என்பதில் நோயாளி களுக்குண்டான சிகிச்சையை மருத்துவர்கள் அளிக்கிறார்கள். அவர்களது உடல் நலத்தைப் பேணுகிறார்கள். அதுபோல் யாருமற்ற அனாதைகளின் உடல் நலமும் அதை நடத்தும் அடைக்கல இல்லத்தினரால் பேணப்படுகிறது.[1]

Molipur Zamindar Co. v. State of Bihar[2]

பீகார் விற்பனை வரிச் சட்டமானது, **'பச்சைக் காய்கறிகளுக்கு'** (green vegetables) வரியிலிருந்து விலக்களித்திருந்தது. மேற்படி வழக்கில் எழுந்த பிரச்சனை என்னவென்றால், 'பச்சைக் காய்கறிகள்' என்பதில் **'கரும்பு' (sugar cane)** அடங்குமா என்பதுதான். பொது மக்கள் பிரபலமாக பயன்படுத்தும்

1. Interpretation of Statutes, Maxwell, 12th Edn. p. 82-83
2. A.I.R. 1962 S.C. 660

பொருளின்படி, 'பச்சைக் காய்கறிகள்' என்பதில் வீட்டுத் தோட்டத்திலோ அல்லது பண்ணையிலோ வளரக் கூடியதும், சமையலுக்கு பயன்படுத்தக் கூடியதும் ஆகும். ஆனால் மேற்படி 'கரும்பானது' வீட்டுத் தோட்டத்திலோ அல்லது பண்ணையிலோ வளர்க்கக் கூடியதல்ல. பெருந் தோட்டம் அதற்கு வேண்டும். மேலும் அது சமையலுக்கு பயன்படுத்தப்படுவதல்ல. எனவே, 'பச்சைக் காய்கறிகளில்' கரும்பு அடங்காது என்றும், அதற்கு வரி விலக்கு கிடையாது என்றும் உச்ச நீதிமன்றம் கூறியது. மேற்படி விதிக்கு இவ்வழக்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகும்.

[xii] ஒன்று மற்றொன்றிற்கு பொருத்திப் பொருள் காண்க [Reddendo Singular Singulis]

33. Examine the rule of "Reddendo Singular Singulis" in interpretation of Statutes. (சட்டப் பொருள் விளக்கத்தில் "ஒன்று மற்றொன்றிற்கு பொருத்திப் பொருள் கொள்க" எனும் விதியை ஆய்க).

(அல்லது)

Explain "Reddendo Singular Singulis". ("குறிப்பிட்ட பிரிவிற்கு பொதுவாகக் குறிப்பது" – விளக்குக.)

முன்னுரை :

ஒரு பத்திரத்தின் அல்லது பிற ஆவணத்தின் ஒரு பகுதியிலுள்ள பல்வேறு பட்ட சொற்களானது, அதன் மற்றொரு பகுதியில் அதற்கு பொருத்தமாக உள்ள விஷயத்துடன் பொருத்தி, பொருள் காண வேண்டும், என்பதையே மேற்படி விதி, 'ஒன்று மற்றொன்றுக்கு பொருத்திப் பொருள் காண்க' என்று கூறுகிறது. சற்று விளக்கமாக வருமாறு :

விளக்கம் :

சட்டத்தைப் பொறுத்தவரை மேற்படி விதியின் பயன் யாதெனில், ஒரு சட்டத்தில் உள்ள சொற்றொடரானது, பல காரணங்களையும் (antecedents) மற்றும் காரியங்களையும் (consequences) கொண்டிருக்கும். அவற்றை நிறைவுற்ற விதத்தில் படித்தல் வேண்டும். அதாவது, ஒவ்வொரு கருத்தும் அதற்குத் தொடர்புடைய நோக்கத்துடன் பொருத்திப் படித்தல் வேண்டும்.

எடுத்துக்காட்டு :

ஒரு சட்டத்தில் ஆரம்பப் பகுதியில் 'வரையறைப் பகுதி' (definition clause) வருகிறது. அதில் அச்சட்டத்திலுள்ள சட்டப் பதங்களுக்கு வரையறை

தரப்பட்டிருக்கும். மேற்படி விதியின்படி, அந்த வரையறையை, அச்சட்டத்தின் உட்பகுதியில் கூறப்பட்டுள்ள நோக்கத்திற்கு தொடர்புபடுத்திப் படிக்க வேண்டுமேயொழிய தனித்துப் படித்துப் பொருள் கொள்ளக்கூடாது. அதாவது அவ்வரையறையின் பொருள், அச்சட்டத்தினுள் அது தொடர்பாக கூறப்பட்டுள்ள நோக்கத்திற்கு அல்லது கருத்திற்கு உயிர் கொடுக்கிறது எனலாம்.

Nagpur Electric Co. Ltd., v. Sreepathi Rao[1]

இவ்வழக்கில் உச்ச நீதிமன்றம் மேற்படி விதியைப் பின்பற்றி ஒரு சிறப்பான தீர்ப்பை வழங்கியது. மேற்படி வழக்கில் ஒரு நிறுவனத்தின் நிலையாணைகளானது (Standing Orders of a Company), **'வேலை செய்பவர்கள்' (Employees)** என்ற பதத்திற்கு வரையறை தந்திருந்தது. அதில், 'வேலை செய்பவர்கள்' என்பதில் துறைப் பதிவேடுகளில் பெயரும், சீட்டு எண்ணும் (ticket numbers) சேர்க்கப்பட்டுள்ள அலுவலகத்தில் வேலை செய்யும் அனைத்து நபர்களும் அடங்குவர், எனப்பட்டது. அது போல் ஒரு **'பணியாள்' (Workman)** என்பவர், நிறுவனத்தில் அப்போதைக்கப்போது 'பணியாள்' என்ற வகையில் சேரத் தக்கவர்கள் என அறிவிக்கப்படும் நபர்கள், என 'பணியாளுக்கு' வரையறை செய்யப்பட்டிருந்தது. இங்கு தான் பிரச்சனை ஆரம்பமானது. 'வேலை செய்பவர்' (employer) ஒருவர், தற்காலிக வேலை நீக்கம் செய்யப்பட்டு, பின்னர் அவருக்கெதிரான சில குற்றச்சாட்டுகளுக்காக நிரந்தர வேலை நீக்கம் செய்யப் பட்டார். விடுவாரா வேலை செய்பவர் ? உடனே நீதிமன்றம் சென்றார். அங்கே, தாம் 'வேலை செய்பவர்' என்பதற்குண்டான வரையறையின்படி, தனக்கு சீட்டோ அல்லது சீட்டு எண்ணோ (ticket or ticket number) தரப்படவில்லை என்றும், தன்னைப் போன்ற நபர்கள் தொடர்பாக நிறுவனம் நிலையாணைகள் ஏதும் ஏற்படுத்த வில்லை என்றும், எனவே, தாம் 'வேலை செய்பவர்' என்ற வரையறை யின் கீழ் வராதவர் என்றும், இதனடிப்படையில் தம்மை வேலை நீக்கம் செய்தது செல்லாதது என்றும் வாதிட்டார்.

ஆனால் உச்ச நீதிமன்றம் அவரது வாதத்தை ஏற்றுக் கொள்ளவில்லை. 'வேலை செய்பவர்' என்ற சொல்லுக்கு மேற்படி பொருள் விளக்க விதியின்படி விளக்கமளித்தது. அதன்படி 'வேலை செய்பவர்' என்பதற்குண்டான வரையறையை, சீட்டோ அல்லது சீட்டு எண்ணோ இல்லாத வேலை செய்பவர்களை தவிர்த்துவிடும் எண்ணத்துடன் இயற்றப்பட்ட ஒன்றாகப் படித்தல் கூடாது. 'அந்தந்த துறையின் பதிவேடுகளில், பெயரும் சீட்டு எண்ணும் சேர்க்கப்பட்டவர்கள்' ("whose names and ticket numbers are included in the department musters") என்ற சொற்றொடரானது, "துறைப் பதிவேடுகளில், பெயரும் சீட்டு எண்ணும், **ஏதாவது,** இருந்து சேர்க்கப்பட்டவர்களும்" ("whose names and ticket numbers **if any,** are included in the departmental musters"), என்று

1. A.I.R. 1958 S.C. 688

படிக்கப்பட வேண்டுமென, உச்ச நீதிமன்றம் கூறியது. அதாவது பெயர் மற்றும் சீட்டு எண் ஏதேனும் இருந்து முறைப் பதிவேட்டில் சேர்க்கப்பட்டவர்களும் 'வேலை செய்பவர்' என்பதில் அடங்குவர் என்பது, அப்படி பெயரும் சீட்டு எண்ணும் முறைப் பதிவேட்டில் சேர்க்கப்படாதவர்களையும் உள்ளடக்கும் என்று பொருளாகும். மேற்படி பொருள் விளக்கத்தின் அடிப்படையில், சம்பந்தப்பட்டவர் 'வேலை செய்பவர்' தான் என்றும், அவரை வேலை நீக்கம் செய்தது செல்லத்தக்கதே என்றும் உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

[xiii] சரியாகவும் சட்டப்படியாகவும் பொருள் கொள்க எனும் விதி [Rule of Bonam Partem]

34. Write Short Notes on "Bonam Partem". (சரியாகவும் சட்டப்படியாகவும் பொருள் கொள்க – சிறு குறிப்பு எழுதுக.)

முன்னுரை :

"Bonam Partem" என்பது இலத்தீன் சட்டச் சொல்லாகும். இதன் பொருள், சரியான மற்றும் சட்டப்படியான விதத்தில் சொற்களுக்கு பொருள் கொள்க என்பதாகும். இது ஆங்கிலத்தில் "words are to be taken in their rightful and lawful sense" எனப்படும். பின்வரும் எடுத்துக்காட்டு இதை மேலும் தெளிவாக்கும்.

எடுத்துக்காட்டு :

ஒரு வாடகைதாரர் சட்டப்படியான அனைத்து வாடகைகளையும் செலுத்த வேண்டும் என்று நில உரிமையாளருடன் ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளார். இங்கு அவர் மேற்படி விதியின்படி, ஒரு வாடகைதாரர் என்ற நிலையில் சட்டப்படியாக என்ன வரிகளைச் செலுத்த வேண்டுமோ, அதைச் செலுத்த மட்டுமே, கடமைப் பட்டவரே தவிர, நிலச் சொந்தக்காரரின் சொத்து வரியை அல்ல, என்று பொருள் விளக்கமளிக்கப்பட்டது.

Glamorsan Country Council v. Carter[1]

1947–ஆம் ஆண்டின் நகர்ப்புற மற்றும் கிராமப்புறத் திட்டச் சட்டத்தின் 12(5)–வது பிரிவானது, 'நிர்ணயிக்கப்பட்ட தேதியன்று ஒரு நிலமானது எவரது உடைமையிலும் இல்லையென்றால், அந்நிலம் எதற்காக இறுதியாக பயன்பட்டதோ (use) அதற்காக பயன்படுத்துதல் குறித்து . . . அனுமதி ஏதும் இப்பிரிவின் கீழ் தேவையில்லை' என்று கூறியது. மேற்படி பிரிவில் 'பயன்பாடு' (use) என்ற

1. 1963 (1) w.l.r.j.

கொள்ளைது மேற்படி விதியின்படி அந்நிலத்தின் சட்டப்படியான பயன்பாட்டை (lawful use) மட்டுமே குறிப்பிடுமே தவிர, குற்றமொன்றைத் தோற்றுவிப்பதற்கு காரணமாக அமையும் பயன்பாட்டை குறிப்பிடாது. என மேற்படி வழக்கில் கூறப்பட்டது.

முடிவுரை :

சட்டமெனும் வட்டத்திற்குள் நுழைந்து விட்டால், அனைத்தும் சரியாக இருக்க வேண்டும், அத்தோடு மட்டுமின்னாமல் சட்டப்படியாகவும் இருக்க வேண்டும், என்பதே மேற்படி விதி உணர்த்தும் பொருள் விளக்கமாகும்.

[xiv] 'எச்சட்டத்திலும் முரண்பாடாக யாது கூறப்பட்டிருப்பினும்' (அல்லது) 'எது எப்படி இருந்தாலும்' எனும் கூறு [Non-obstante aliquo statuo in contrarum (or) Non-obstante clause]

35. What is meant by Non-Obstante clause? Explain. ('எச்சட்டத்திலும் முரண்பாடாக யாது கூறப்பட்டிருப்பினும்' என்பதின் பொருள் என்ன? விளக்குக.)

(அல்லது)

Explain the rule of the Non-Obstante clause in a statute. (ஒரு செய் சட்டத்தில் தேவைப்படும் போது உபயோகிக்க உதவும் பிரிவின் பங்கினை விளக்குக.)

(அல்லது)

Scope of non obstante clause interpretation - Write short notes. (எது எவ்வாறிருப்பினும் என்ற சரத்துகளை பொருள் விளக்கங் காணுதலின் நோக்கெல்லை – சிறு குறிப்பு எழுதுக.)

(அல்லது)

Non-obstante clause - Write short notes. (எது எவ்வாறிருப்பினும் என்ற பிரிவு – சிறு குறிப்பு எழுதுக.)

(அல்லது)

Special Act - Write short notes. (சிறப்புச் செய் சட்டம் – சிறு குறிப்பு எழுதுக.)

முன்னுரை :

"Non-Obstante aliquo statutuo in contrarum" என்பது

இலத்தீன் மொழியின்பாற்பட்டதாகும். இதன் பொருள், வேறு சட்டங்கள் ஏதேனும் ஒரு சட்டத்திலுள்ள பிரிவுகளுக்கு முரண்பாடாக என்ன கூறியிருந்தாலும், அதைப் பற்றி அக்கறை கொள்ளத் தேவையில்லை, என்பதாகும். இதுவே, 'எச்சட்டத்திலும் முரண்பாடாக யாது கூறப்பட்டிருப்பினும்' எனப்படுகிறது. இது சுருக்கமாக, 'எது எப்படி இருந்தாலும்' எனும் கூறு (Non-Obstante clause) என்றும் அழைக்கப் படுகிறது. மேலும் இது ஆங்கிலத்தில், "Notwithstanding any statute to the contrary" எனப்படுகிறது. சற்று விளக்கமாக வருமாறு.

விளக்கம் :

சட்டமன்றம் ஒரு சட்டத்தை வரையும் பொழுது, அது தொடர்பாக அல்லது எதிராக உள்ள பிற சட்டங்கள், ஒப்பந்தங்கள், வழக்கங்கள் அல்லது நீதிமன்ற தீர்ப்பாணைகள் ஆகியவற்றையெல்லாம் கருத்தில் கொண்டு செயல்படும். ஆனால், அதே சமயத்தில் ஒரு சட்டத்தின் நோக்கம், அச்சட்டத்தின் சட்டப் பிரிவுகளுக்கு மட்டுமே பொருந்தக் கூடிய வகையில் தனித்தன்மை வாய்ந்த, குறிப்பாக **'சிறப்புச் சட்டமாக' (Special Act)** இருப்பின், மற்ற சட்டங்களில் அதற்கு முரணாக எது கூறப்பட்டிருந்தாலும், அச்சட்டம் கவலை கொள்வதில்லை. உதாரணமாக, பிற சட்டங்கள் அனைத்தும் **'முயலுக்கு நான்கு கால்'** என்கிறது. ஆனால் ஒரு சிறப்புச் சட்டத்தின் நோக்கம் **'முயலுக்கு மூன்று கால்'** என்பது. இங்கு மேற்படி விதியைப் பின்பற்றி, வேறு சட்டத்தில் 'முயலுக்கு நான்கு கால்' என்று சொல்லப்பட்டிருந்தாலும், இச்சட்டத்தின்படி 'முயலுக்கு மூன்று கால்' எனக் கூறப்படுகிறது. இது பிற சட்டங்களைப் பொறுத்தமட்டிலும் அல்ல; அதனுடன், ஒப்பந்தங்கள், வழக்கங்கள் அல்லது நீதிமன்ற தீர்ப்பாணையில் யாது கூறப்பட்டிருந்தாலும், தனியாக அல்லது சிறப்பாக குறிப்பிட்டு சட்டம் இயற்ற வகை செய்கிறது. சுருங்கக்கூறின், வேறு சட்டங்கள், ஒப்பந்தங்கள், வழக்கங்கள் அல்லது நீதிமன்ற தீர்ப்பாணைகளில் என்ன கூறப்பட்டிருந்தாலும், இச்சட்டத்திலுள்ள பிரிவே அவற்றிற்கெல்லாம் மேலோங்கி நிற்குமே தவிர, இச்சட்டப் பிரிவின் செயலாக்கத்திற்கு, அவை எவ்விதத் தடையையும் விதிக்க இயலாது. இதைத்தான், மேற்படி 'எது எப்படி இருப்பினும்' என்ற கூற்றை, சட்டமன்றம் சம்பந்தப்பட்ட சட்டப் பிரிவின் ஆரம்பத்தில் குறிப்பிட்டு, தான் கருதியது இதுதான், என்று குறிப்பிடுகிறது.

முடிவுரை :

மேற்படி 'எது எப்படியிருப்பினும்' என்ற கூற்றிற்கு எதிர்மறையாக இருக்கும் கூறு "உட்பட்டு" (subject to) என்பதாகும். அதாவது 'எது எப்படியிருப்பினும்' என்ற கூறு பிற சட்டங்களை, வழக்கங்களை, தீர்ப்புகளை எடுத்தெறிந்து பேசுகிறது; தனக்கென ஒரு பாதை வகுத்து அதில் தனிக்காட்டு இராஜாவாகச் செல்கிறது. ஆனால், 'உட்பட்டு' எனும் கூறு, அதற்கு அடுத்துக் கூறப்பட்டுள்ள பிற சட்டங்களின் வகைமுறைகளுக்கும், அச்சட்டத்திலேயே உள்ள பிரிவுகளுக்கும் வழக்கங்களுக்கும் கீழ்ப்படிந்து, அடங்கி நடக்கிறது.

[xv] சட்டத்திற்கில்லை அற்பத்தில் அக்கறை [De minimis non curat lex]

36. Write Short Notes on "De minimis non curat lex". (சட்டத்திற்கில்லை அற்பத்தில் அக்கறை – சிறு குறிப்பு வரைக).

முன்னுரை :

"De minimis non curat lex" என்பது இலத்தீன் சட்ட முதுமொழியாகும். இதன் பொருள், "சட்டத்திற்கில்லை அற்பத்தில் அக்கறை" என்பதாகும். இது ஆங்கிலத்தில் "Law does not concern it self with or care about trifles" என்று வழங்கப்படுகிறது. சற்று விளக்கமாக வருமாறு.

விளக்கம் :

ஒரு சட்டத்திற்கு பொருள் விளக்கம் அளிக்கும் பொழுது மேற்படி முதுமொழி மிகவும் பயனாகிறது. மிகவும் சாதாரணமான, அற்பமான விஷயங்களுக்கெல்லாம் நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்தால், முக்கியத்துவம் வாய்ந்த வேறு வழக்குகளை எவ்வாறு நீதிமன்றம் கவனிக்க இயலும். எனவே, அற்பமான விஷயங்கள் குறித்து சட்டம் அக்கறை காட்டுவதில்லை. பின்வரும் எடுத்துக்காட்டுகளைக் கண்டால், இது மேலும் தெளிவாகும்.

எடுத்துக்காட்டுகள் :

1. இந்தியத் தண்டனைச் சட்டத்தில் கூறப்பட்டுள்ள 'திருட்டு' என்ற குற்றத்தில், அடுத்தவனின் மை புட்டியில் அவனுக்குத் தெரியாமல், ஒருவன், எழுதுவதற்காக தனது பேனாவின் முனையை தொட்டுக் கொள்வது, அடங்குமா?

2. 'தாக்குதல்' என்ற குற்றத்தில் வேகமாக ஓடிச் செல்வதன் மூலம், புழுதியைக் கிளப்பி, தனக்கு பின்னால் வருபவனை அப்புழுதியால் மூடுதல், அடங்குமா?

மேற்கண்ட செயல்கள் எல்லாம் முறையே திருட்டு மற்றும் தாக்குதலில் அடங்காது. இப்படிப்பட்ட சிறிய தீங்குகளை (விஷயங்களை), நீதிமன்றங்கள் மேற்படி முதுமொழியைப் பின்பற்றி, தள்ளி விடுகின்றன. தங்களது பொன்னான நேரத்தை, மேற்கண்டவாறான விஷயங்களை விசாரிப்பதன் மூலம் வீணடிப்பதில்லை. பின்வரும் வழக்கு இதை விளக்குகிறது.

Veeda Menezes v. Yusuf Khan[1]

மேற்படி வழக்கில் குற்றவாளி காரசாரமான வாய்ச் சண்டைக்குப் பின்னர்

1. A.I.R. 1966 S.C. 1773

கோப்புகளை (Files) எடுத்து மேல்முறையீட்டாளர் மீது தூக்கி எறிந்தார். இதனால் அவருக்கு சிராய்ப்புக் காயங்கள் (Scratch) ஏற்பட்டன. இது அற்ப விஷயமென உச்ச நீதிமன்றம் கூறியது.

ஆனால், மேற்படி முதுமொழியைப் பின்பற்றுவதினால், சட்டத்தின் நோக்கத்திற்கு ஊறு ஏதும் நிகழ்ந்துவிடக் கூடாது. எது அற்பம், எது முக்கியத்துவம் என்பது சம்பந்தப்பட்ட சட்டத்தின் நோக்கத்தைச் சார்ந்ததாகும். பின்வரும் வழக்கில், மேற்படி முதுமொழியைப் பயன்படுத்த நீதிமன்றம் மறுத்துவிட்டது.

Delaroy Hall v. Tadma[1]

இவ்வழக்கில் ஒரு ஓட்டுநர் குடிபோதையில் வாகனம் ஓட்டியதற்காக வழக்கிடப்பட்டார். ஆனால் அவரது இரத்தத்தைப் பரிசீலனை செய்து பார்த்ததில், அனுமதிக்கப்பட்ட அளவிற்கு மிகச் சிறிதளவு மட்டுமே, மதுவானது அவரது இரத்தத்தில் கலந்திருப்பது தெரிய வந்தது. மேற்படி முதுமொழியின் பலனை தனக்கு அளிக்கும்படி, அந்த ஓட்டுநர் கோரினார். ஆனால் வழக்கை விசாரித்த **நீதிப்பெருமகனார் பார்க்கர் அவர்கள்,** மேற்படி முதுமொழியின் பலனை அளிக்க மறுத்துவிட்டது. 'நெற்றிக் கண்ணைத் திறப்பினும் குற்றம் குற்றமே' என நக்கீரர் சொன்னதைப் போல, மதுவானது இரத்தத்தில் அனுமதிக்கப்பட்ட அளவை விட சிறிதளவே அதிகமானதும் சரி அல்லது பெருதளவில் இருந்தாலும் சரி, சட்டத்தின் நோக்கம் குடிபோதையில் வாகனம் ஓட்டுவது குற்றம் என்பதுதான். எனவே, போதை, போதைதான்; குற்றம், குற்றம்தான், என நீதிமன்றம் கூறியது.

[xvi] விடுபட்ட விபரம் [Causus Omisus]

37."Causus Omisus" - Write Short Notes. (விடுபட்ட விபரம் – சிறு குறிப்பு எழுதுக.)

(அல்லது)

Explain the rule of "Causus Omisus". (செய்யத் தவறிய காரணத்தால் இட்டு கட்டும் விதியை விளக்குக.)

முன்னுரை :

"Causus Omisus" என்பது, "விடுபட்ட விபரம்" எனப்படும். இது ஆங்கிலத்தில் "a case omitted" எனப்படுகிறது. சற்று விரிவாக வருமாறு.

விளக்கம் :

'விடுபட்ட விபரம்' எனில், சட்டமன்றம், தான் இயற்றிய ஒரு சட்டத்தில்

1. 1969 (2) W.L.R. 92

எந்த ஒரு விபரத்தை தந்திருக்க வேண்டுமோ, அந்த விபரத்தை விட்டுவிட்டு சட்டமியற்றியிருப்பதாகும். ஆகவே அந்த விடுபட்ட விபரத்தை சட்டமன்றம்தான் பூர்த்தி செய்ய வேண்டுமேயொழிய, நீதிமன்றங்கள் அல்ல. இம்மாதிரியான தருணங்களில், நீதிமன்றத்தின் கடமை, அச்சட்டத்தில் கூறப்பட்டுள்ள வெறும் வார்த்தைகளுக்கு பொருள் தருவது மட்டுமேயாகும். இதனை விடுத்து, சட்ட மன்றத்தின் நோக்கம் என்னவாக இருந்தது என்பதை ஊகிக்கக் கூடாது. சட்டத்தில் விடுபட்டுள்ள குறைகளைத் திருத்தவோ அல்லது சரிக்கட்டவோ நீதிமன்றங்கள் முயலக்கூடாது. இதனை அச்சட்டத்தை இயற்றிய சட்டமன்றம் மட்டுமே செய்ய வேண்டும்.

வழக்கு :

Hemdan v. State of Rajasthan[1]

குற்றவியல் நடைமுறைச் சட்டம் (பழைய சட்டம்) பிரிவு 142–ன் கீழான நடைமுறையில், பிரமாணப் பத்திரத்தின் (affidavit) வழியாக அளிக்கப்படும் சாட்சியத்தை பயன்படுத்துதல் என்ற விபரம் விடுபட்டிருந்தது. இது சட்டம் வரைந்தவர்களின் கவனக்குறைவான செயல் என்றாலுமே கூட, நீதிமன்றங்கள் அதற்காக அதை சட்டத்தில் சேர்த்தல் கூடாது என மேற்படி வழக்கில் கூறப்பட்டது.

முடிவுரை :

'சட்டமன்றம் என்ன கருதியிருக்க வேண்டும்' (ought to have meant) என்று நீதிமன்றங்கள் ஊகித்தல் கூடாது. மாறாக, **"சட்டமன்றம் என்ன கருதியதோ அதைச் சொல்லியுள்ளது"** (what it has said it meant) என்ற அடிப்படையில்தான் நீதிமன்றங்கள் பொருள் விளக்கமளிக்க வேண்டும்.

மேற்படி விதி, நாம் முன்னர் கண்ட இலக்கண மரபு குன்றாப் பொருள் விளக்க விதியின் துணை விதியான **'இல்லாமையைக் கற்பித்தல் கூடாது' (Omissions not to be inferred)** என்பதின்பாற்பட்டதாகும். ஒரு சட்டத்தை இயற்றியவர்கள் குறிப்பிட்ட விஷயத்தை கருத்தில் கொண்டிருந்தனர். ஆனால் அதற்கு சொல் வடிவம் கொடுக்கவில்லை. அப்படி கொடுக்காமல், விடுபட்டுப் போய் விட்டது என்பதை மெய்ப்பிக்கத்தக்க ஆதாரங்கள் இல்லாத சமயத்தில், அதை அச்சட்டத்தில் சேர்க்கவோ, இணைக்கவோ அல்லது இட்டுக்கட்டவோ கூடாது. இதையே **லோர்பர்ன் என்ற நீதிப் பெருமகனாரும் (Lord Loreburn)**, சட்டத்தின் நான்கு மூலைகளுக்குள்ளேயே தகுந்த காரணங்கள் காணப்பட்டாலன்றி, அச்சட்டத்தில் புதிதாக ஏதேனும் சேர்த்து வாசிப்பதற்கு நீதிபதிகளுக்கு எவ்வித உரிமையும் கிடையாது, என்று கூறினார்.

சுருங்கக்கூறின், சட்டத்தில் விடுபட்டுள்ள வார்த்தைகளை, விபரங்களை

1. A.I.R. 1966 (Raj.) 5

சட்டமன்றம் மட்டுமே சேர்க்கவேண்டுமே தவிர, நீதிமன்றங்கள் சேர்க்கக்கூடாது. ஆனால் 'விடுபட்ட விபரம்' எனும் இக்கோட்பாடு, வளர்ந்து வரும் இன்றைய நீதித்துறைக்கு சிறப்பளிப்பதாக இல்லை, என்பதே உண்மை.

[xvii] அளிப்படைவு அதிகாரத்தை மீட்டளிக்க இயலாது [Delegatus non potest delegare]

38. "Delegatus non potest delegare" - Write Short Notes.
("அளிப்படைவு அதிகாரத்தை மீட்டளிக்க இயலாது" – சிறு குறிப்பு எழுதுக.)

(அல்லது)

"A Delegated Authority cannot be re-delegated" - Explain.
("அளிப்படைவு அதிகாரத்தை மீட்டளிக்க இயலாது" – விளக்குக.)

முன்னுரை :

"Delegatus non potest delegare" என்பது இலத்தீன் சட்ட முது மொழியாகும். இதன் பொருள், "பெற்ற அதிகாரத்தை மீண்டும் மற்றொருவருக்கு மாற்றிக் கொடுக்க முடியாது" என்பதாகும். இது ஆங்கிலத்தில் "A delegate cannot further delegate" என்று குறிப்பிடப்படுகிறது. சற்று விரிவாக வருமாறு.

விளக்கம் :

மேற்படி முதுமொழி ஒப்பந்தச் சட்டத்தைப் பொறுத்தவரை 'முகவாண்மை ஒப்பந்தத்திற்கு' (Law of Agency) அடிப்படையாக விளங்குகிறது. அதாவது ஒரு முதல்வரிடம் (Principal) இருந்து அவரது முகவர் (Agent) பெற்ற அதிகாரத்தை, அம்முகவர் மீண்டும் ஒருவருக்கு மாற்றியளிக்க முடியாது. பொதுவாக, ஒரு முகவர் தனக்கு அளிக்கப்பட்ட அதிகாரப் பொறுப்பை தாமாகவே செய்தாக வேண்டும். ஒரு முகவர் என்பவரே, அளிப்படைவு பெற்றவர்தான். எனவே, அவர் தமக்கு அளிக்கப்பட்ட அதிகாரத்தை, வேறு ஒரு மூன்றாம் நபருக்கு அளிப்படைவு செய்ய முடியாது.

இதைத்தான் மேற்படி முதுமொழி, 'அளிப்படைவு அதிகாரத்தை மீட்டளிக்க இயலாது' என்று குறிப்பிடுகிறது. அது சரி, சட்டப் பொருள் விளக்கத்தில் மேற்படி முதுமொழிக்கு என்ன வேலை, என்ற கேள்வி எழுந்தால், அதில் வியப்பில்லை.

சட்டப் பொருள் விளக்கமளிப்பதில் மேற்படி முதுமொழியின் பங்கு:

சட்டப் பொருள் விளக்கத்தில், மேற்படி முதுமொழி, ஒரு பொருள் விளக்க விதியாக செயல்படுகிறது. பொதுவாக, சட்டமன்றம் தனது சட்டங்களின் வாயிலாக, ஒரு செயலை ஒரு குறிப்பிட்ட விதத்தில் செய்யக்கூடிய அதிகாரத்தை

தனக்குக் கீழ் அமைந்துள்ள அமைப்பிடம் வழங்கினால், அவ்வமைப்பே சட்டமன்றம் கூறியுள்ள அச்செயலை செய்து முடிக்க வேண்டும். அதை விடுத்து தனக்கு வழங்கப்பட்ட அவ்வதிகாரத்தை அவ்வமைப்பு, பிறிதொரு அமைப்பிடம் மாற்றித் தருதல் கூடாது. மேற்படி விதியின்படி, அவ்வாறு மாற்றித் தருதல் செல்லாது.

ஆனால் அவ்வாறு மாற்றித் தரலாம் என அச்சட்டத்தில் வெளிப்படையாக குறிப்பிடப்பட்டிருப்பின், அம்மாற்றளிப்பு செல்லத்தக்கதாகும். அவ்வாறு வெளிப் படையாக கூறப்படாவிட்டால், அச்சட்டத்தின் மொழி, நடை, எல்லை மற்றும் நோக்கத்தின் அடிப்படையில் பொருள் கொண்டு மேற்படி முதுமொழி கூறும் விதியைப் பின்பற்றி நீதிமன்றங்கள் பொருள் விளக்கமளிக்கலாம். இந்நிலையில், எப்பொருள் விளக்கம், அச்சட்டத்தின் நோக்கத்தையும், பயன்பாட்டையும் சிறந்த முறையில் அடையத் தக்க வகையில் உள்ளதோ, அப்பொருள் விளக்கத்தையே நீதிமன்றங்கள் எடுத்துக் கொள்ளலாம், என **Barium Chemicals Ltd. v. Company Law Board**[1] என்ற வழக்கில் உச்ச நீதிமன்றம் கூறியது.

A.K. Roy v. State of Punjab[2] என்ற மற்றொரு வழக்கில், அதிகாரத்தை மாற்றியளிக்கக் கூடிய (Sub-delegation) வசதியை சட்டமன்றங்கள் பல சமயங்களில் தங்களது சட்டங்களில் செய்து கொடுத்தாலும், மேற்படி முது மொழியின்படி, ஒரு அதிகாரத்தை மீண்டும் மாற்றியளிப்பது என்பது சாதாரணமாக அனுமதிக்கத் தக்கதல்ல என்று மட்டுமே குறிப்பிடுகிறது, என உச்ச நீதிமன்றம் கூறியது.

முடிவுரை :

மேற்கண்டவற்றை பார்க்கும் பொழுது, மேற்படி முதுமொழி கூறும் பொருள் விளக்க விதி **கடுமையானதல்லவென்பதும்,** சட்டத்தில் கூறப்பட்டுள்ள சூழ்நிலைகளுக்கொப்ப, சட்டத்தின் நோக்கத்தை முன்னேற்றும் பொருள் விளக்கத்தை கருத்தில் கொள்ளலாம் என்பதும், அப்படி முன்னேற்றம் தரும் நிலையில், ஒரு அதிகாரம் மீண்டும் மாற்றியளிக்கப்பட்டிருந்தாலும் பெரிதாக கவலைப்படுவதற்கு ஏதுமில்லை என்பதும், தெளிவாகப் புலனாகிறது.

[xviii] பின்னோக்கிச் சென்ற காலத்தையும் உட்படுத்துகிற சட்டம் [Expost facto law]

39. What is meant by "Expost facto law"? Explain. ("பின்னோக்கி சென்ற காலத்தையும் உட்படுத்துகிற சட்டம்" என்றால் என்ன ? விளக்குக.)

1. A.I.R. 1967 S.C. 295
2. (1986) 4. S.C.C. 326

முன்னுரை :

"Expost facto" என்றால், **"பின்னோக்கி சென்ற காலம்"** என்று பொருள். அதாவது ஒரு விஷயத்திற்கு (fact) பிறகு எழும் காலம், என்பதாகும். இது **"தொடக்கம் முதல்" (ab initio)** என்பதற்கு எதிர்ப்பதமானதாகும். மேற்படி, 'பின்னோக்கி சென்ற காலம்' எவ்வாறு சட்டப் பொருள் விளக்கத்தில் பங்கு கொள்கிறது, என்பதை பின்வருமாறு காண்போம்.

பின்னோக்கி சென்ற காலத்தையும் உட்படுத்தும் சட்டம் (Expost facto law) :

ஒரு சட்டத்திற்குப் பிறகோ அல்லது ஒரு நிகழ்விற்குப் பிறகோ ஒரு சட்டம் இயற்றப்படுமானால், அது அச்சட்டத்தின் செயல்பாட்டையோ அல்லது அந்நிகழ்வின் விளைவுகளையோ அச்சட்டத்திற்கொப்ப மாற்றக்கூடிய தன்மையுடையதாகும். அதாவது, ஏற்கனவே இயற்றப்பட்ட சட்டத்தையும், நடந்த நிகழ்வையும், மேற்படி 'பின்னோக்கும் சட்டம்' பாதிக்கத்தக்கதாகும். இதனை **'முன்மேவும் அதிகாரம்' (retrospective power)** என்றும் குறிப்பிடலாம். குற்றவியல் வழக்குகளில், இதன் விளைவு அபாயகரமானதாகும். எனவே, 'பின்னோக்கி செல்லும் காலத்தையும் உட்படுத்தும் சட்டங்கள்' குற்றவியல் சட்டங்களைப் பொறுத்து நலம் பயப்பதல்ல.

எடுத்துக்காட்டு :

ஒரு சட்டத்தின் கீழ் ஒரு குற்றத்திற்காக ஒருவனுக்கு "ஆறு மாதங்கள்" தண்டனை விதிக்கப்படலாம், என்றுள்ளது. அச்சட்டத்திற்கு பிறகு கொண்டு வரப்பட்ட சட்டத்தில் அதே குற்றத்திற்கு "ஆறு வருடங்கள்" தண்டனை என்பதே, பின்னோக்கி சென்ற காலத்தையும் உட்படுத்தும் சட்டமாகும். இதைப் பின்பற்றி ஆறு மாதங்கள் தண்டனையென சட்டம் அறிவித்திருந்த காலத்தில் குற்றம் புரிந்த ஒருவனுக்கு, பின்னோக்கி சென்ற காலத்தையும் உட்படுத்தும் சட்டத்தின் கீழ் "ஆறு வருடங்கள்" தண்டனை அளித்தால், அது இயற்கை நீதிக்கு முரணானதாகும்.

இது குறித்து இந்திய அரசியலமைப்புச் சட்டம் என்ன கூறுகிறது?

அமெரிக்க அய்க்கிய நாடுகளின் அரசியலமைப்பானது, பின்னோக்கி சென்ற காலத்தையும் உட்படுத்துகிற சட்டங்களை இயற்றுவதை தடை செய்கிறது. நமது இந்திய அரசியலமைப்புச் சட்டமும், சரத்து 20(1)–ன் கீழ், குற்றவியல் சட்டங்களைப் (Criminal Laws) பொறுத்தவரை மேற்படி சட்டங்களை இயற்றுவதை தடை செய்கிறது. அதே சமயத்தில் உரிமையியல் சட்டங்களில் (Civil Laws) மேற்படி பின்னோக்கி செல்லும் காலத்தையும் உட்படுத்துகிற சட்டங்களை இயற்றுவதைத் தடை செய்யவில்லை. சரத்து 20(1)–ன்படி, ஒரு குற்றமென, குற்றஞ்சாட்டப்பட்ட செயல் செய்யப்பட்ட காலத்தில் அமலில் இருந்த சட்டத்தினைத் தவிர, அதற்குப் பின் வந்த வேறு எந்தச் சட்டத்தின்படியிலான குற்றத்திற்காகவும் ஒரு நபர்

தண்டிக்கப்படலாகாது மற்றும் குற்றம் நடந்த காலத்தில் அமலில் இருந்த சட்டத்தின் கீழ் எது அபராதத் தொகையாக விதிக்கப்பட்டிருக்குமோ, அதற்கு மேற்பட்ட அபராதத் தொகைக்கு வேறு ஒரு சட்டத்தின் கீழோ அல்லது சட்டத் திருத்தத்தின் கீழோ ஒரு நபரை உட்படுத்தக் கூடாது என்கிறது.

முடிவுரை :

எனவே, ஒரு வழக்கு குற்றவியல் சார்ந்ததா அல்லது உரிமையியல் சார்ந்ததா என்று அறிந்தே, பின்னோக்கி சென்ற காலத்தையும் உட்படுத்தும் சட்டங்களுக்குப் பொருள் விளக்கமளிக்க வேண்டும். குற்றவியல் வழக்குகளில் மேற்படி சட்டங்களுக்கோ அல்லது சட்டத் திருத்தங்களுக்கோ நீதிமன்றம் பொருள் விளக்கமளித்து, செயலாக்கம் தருவது, இந்திய அரசியலமைப்பால் தடுக்கப் பட்டுள்ளது. உரிமையியல் வழக்கில், அதன் சூழலுக்கேற்றவாறு, சட்டமன்றத்தின் கருத்தைக் கண்டு, அதன் நோக்கத்தை நிலை நிறுத்தும் வகையில் பொருள் விளக்கமளிக்கலாம்.

[xvix] சட்டங்கொள் புனைவு [Legal Fiction]

40. "Legal Fiction" - Write Short Notes. (சட்டங்கொள் புனைவு – சிறு குறிப்பு எழுதுக.)

(அல்லது)

Explain a legal fiction. How far it is applicable for interpretation of statute. (சட்டப் புனைவு என்பதனை விளக்குக. இயற்றுமுறை சட்டப் பொருள் விளக்கத்தில் அது எந்த அளவிற்கு பயன்படுத்தப்படுகிறது?)

முன்னுரை :

"Fiction" என்றால், "கற்பனை" என்று பொருளாகும். அதாவது இல்லாத ஒன்றை இருப்பதாகக் கற்பனையாகக் கருதுதல் அல்லது புனைந்து கொள்ளுதல் (deeming). சட்டத்தில் அவ்வாறு கருதுதலே "சட்டங்கொள் புனைவு" என்பதாகும். இது முன்சென்ற "இல்லாமையைக் கற்பித்தல் கூடாது" என்ற பொருள் விளக்க விதிக்கு நேர் மாறுபட்டதாகும். ஆனால் இது ஒரு வரம்பிற்கு உட்பட்டதாகும். சட்டப் பிரிவிலேயே, இல்லாத ஒன்றைக் குறித்து இருப்பதாகக் கருதிக் கொள்ள வேண்டும் என்று வெளிப்படையாகக் கூறப்பட்டிருந்தால்தான் மேற்படி சட்டங்கொள் புனைவு விதியைப் பின்பற்ற முடியும். சற்று விளக்கமாக வருமாறு.

விளக்கம் :

'சட்டங்கொள் புனைவு' என்பது ஒரு சட்டத்தின் நோக்கத்தை

அடைவதற்கு வழிகாட்டும் ஒரு சட்டமன்றக் கருவியாகும். நீதியின் நலனை மேம்படுத்துவதற்காகவோ அல்லது சட்டத்தை முன்னேற்றுவதற்காகவோ, சட்டங்கொள் புனைவு செய்யப்படுகிறது. உதாரணமாக, கருவில் இருக்கும் குழந்தை, இன்னும் பிறக்காதது. ஆனால், பூமியில் பிறந்த ஒருவனுக்கு சொத்தில் பாகம் கேட்க உள்ள உரிமைகள் அனைத்தும், பூமியில் இன்னும் பிறக்காத, கருநிலையில் இருக்கும் அக்குழந்தைக்கும் உண்டு என கற்பனையாக சட்டம் புனைந்து கொள்கிறது. எனவே, ஒரு சட்டம், சட்டங்கொள் புனைவை ஏற்படுத்து கிறதென்றால், மற்றபடி அடைய இயலாத ஒரு நிலையை, சில சூழ்நிலைகளின் கீழ் அடையப்படுகிறது என கருதுதலே, சட்டங்கொள் புனைவின் விளைவாகும். ஆனால் சட்டங்கொள் புனைவின் மேற்படி விளைவை, நீதிமன்றங்கள் எப்படிப்பட்ட சூழ்நிலையில் எடுத்துக் கொள்ள வேண்டுமென **நீதிபதி ஜேம்ஸ் (James, L.J.)** பின்வருமாறு கூறியுள்ளார். அதன்படி, ஒரு சட்டம், சில விஷயங்கள் செய்யப்பட்டு விட்டதென கருதிக் கொள்ளப்பட வேண்டுமென கூறும் பொழுது, நீதிமன்றங்கள் எதற்காக மற்றும் எந்நபர்களுக்கிடையே அவ்வாறு கருதிக் கொள்ள வேண்டும் எனக் கண்டறிதல் வேண்டும் என்று கூறுகிறார். இக்கொள்கையை உச்ச நீதிமன்றம் **State of Bombay v. Pandurang**[1] என்ற வழக்கில் பின்பற்றி உள்ளது. இது குறித்து பின்வரும் வேறு சில வழக்குகளையும் சற்று கவனிப்போம்.

Chief Inspector of Mines v. K.C. Thapar[2]

இவ்வழக்கில் சட்டங்கொள் புனைவிற்கு ஒரு உதாரணத்தை உச்ச நீதிமன்றம் பின்வருமாறு கூறியது. அதன்படி, "A என்பவரை B என்பவராகக் கருத வேண்டும் என்றால், சட்டத்தில் A எங்கெல்லாம் இயைந்துள்ளாரோ அங்கெல்லாம் B-யும் இயைந்துள்ளவாராவர். அதுபோல் சட்டத்தில் A எங்கெல்லாம் முரண்பட்டுள்ளாரோ அங்கெல்லாம் B-யும் முரண்பட்டுள்ளதாகவோ கருத வேண்டும்" என்று கூறியது.

C.I.T., Bombay v. Bombay Corpn.[3]

இந்திய உச்ச நீதிமன்றத்தின் உதயத்திற்கு முன்பிருந்த இங்கிலாந்தின் பிரிவி கவுன்சில் நீதிமன்றமானது, சட்டங்கொள் புனைவின் விளைவு எத்தகையது என மேற்படி வழக்கில் கூறியுள்ளது. அதன்படி, "ஒரு நபர் மற்றொரு வகையினராக கருதப்பட வேண்டும் என்று சட்டம் கூறும் பொழுது, அதற்கு சாத்தியமாகக் கூடிய வகையில் இருக்கும் ஒரே பொருள் யாதெனில், உண்மையில் அவர், அந்த மற்றொரு வகையினராக இல்லாத பொழுது, பாராளுமன்றச் சட்டமானது அவரை, அந்த மற்றொரு வகையினராகவே பாவிக்க் வேண்டும்" என **நீதிப்பெருமகனார் Viscount Dunedin** அவர்கள் மேற்படி வழக்கில் கூறியுள்ளார்.

1. A.I.R. 1953 S.C. 244
2. A.I.R. 1961 S.C. 838
3. A.I.R. 1930 P.C. 54

"கருதும் சட்டப்பிரிவு" (Deeming Provision) :

ஒரு சட்டத்தில் மேற்கண்ட சட்டங்கொள் புனைவு தேவையாக இருப்பின் அச்சட்டத்திலேயே, அதற்கு ஒப்பவாறு "கருதும் சட்டப் பிரிவு" இயற்றப்பட்டிருக்கும். அத்தகு கருதும் சட்டப்பிரிவானது, ஒரு விஷயம் மற்றொரு விஷயமாக கருதப்பட வேண்டும் எனும் பொழுது, உண்மையில் அவ்விஷயம், மேற்படி மற்றொரு விஷயமாக இல்லாத நிலையில், அவ்விஷயத்தை அம்மற்றொரு விஷயமாக கருதுதல் வேண்டுமென்ற, ஒரு எண்ணத்தை தெரிவிக்கிறது.

சட்டமியற்றுதலில் 'கருதும் சட்டப் பிரிவின்' பங்கு என்னவென்றால், சட்டத்தின் எல்லைக்குள் சாதாரணமாக வராத விஷயங்களை, சட்டத்தின் எல்லைக்குள் கொண்டு வருதலாகும். ஆனால் எவ்விஷயம் சட்டத்தின் எல்லைக்குள் கொண்டு வரப்பட முடியாது என்பதற்குண்டான காரணங்களை சட்டமன்றம் தெளிவாகக் கொண்டுள்ளதோ, அவ்விஷயங்களை கருதும் சட்டப்பிரிவின் வரம்பிற்குள் கொண்டு வருதல் கூடாது, என **Hoore Mitter & Co. Ltd., v. Assistant Collector of Customs**[1] என்ற வழக்கில், கல்கத்தா உயர் நீதிமன்றம் கூறியுள்ளது.

"சட்டங்கொள் புனைவு" செய்யப்பட்டால், அதற்கு முழு பலத்தைக் கொடுத்தல் வேண்டும். மேலும் அது தர்க்கவியல்படியிலான சரியான முடிவுகளைத் தரவல்லதாக இருக்க வேண்டுமென **Boucher Pierne Andre v. Superintendent, Central Jail**[2] என்ற வழக்கில் உச்ச நீதிமன்றம் கூறியது.

மேற்படி சட்டங்கொள் புனைவிற்கு வரம்புகள் (Limits) :

சட்டங்கொள் புனைவின் அடிப்படையில் பொருள் விளக்கமளித்தலின் எல்லை, மிகக் குறுகியதாகும்; வரம்பிடப்பட்டதாகும். **'கருதலாம்'** அல்லது **'புனையலாம்'** என்று எங்கு கூறப்பட்டுள்ளதோ, அந்த இடத்தில் மட்டுமே, சட்டங்கொள் புனைவு செயல்படத்தக்கது. அதற்கு மேலே சட்டங்கொள் புனைவை இழுத்துச் செல்ல அனுமதி இல்லை. மேலும் சட்டமன்றத்தால் எந்நோக்கத்தின் பொருட்டு, சட்டங்கொள் புனைவை செய்து கொள்ளலாம் என்று கூறப்பட்டுள்ளதோ, அதற்கு மாறாக உள்ளவற்றிற்கு சட்டங்கொள் புனைவை பயன்படுத்துதல் கூடாது. சுருங்கக்கூறின், சட்டமன்றத்தின் விளம்புகை இல்லாத பொழுது, நீதிமன்றங்கள் 'சட்டங்கொள் புனைதல்' என்பதின் கீழ் சட்டப் பிரிவுகளுக்கு பொருள் விளக்கம் அளித்தல் கூடாது; சட்டங்கொள் புனைவைப் பற்றி சிந்தித்துப் பார்க்கவும் கூடாது.

முடிவுரை :

சட்டங்கொள் புனைவிற்கு மேற்படி வரம்புகள் இல்லாது போனால், அது

1. A.I.R. 1975 Calcutta 440
2. A.I.R. 1975 S.C. 164

'இல்லாமையைக் கற்பித்தல்' என்ற நிலைக்கு வழி வகுத்து விடும். வரம்பற்ற சட்டங்கொள் புனைவு, கடிவாளமற்ற குதிரையைப் போலாகும். எனவே சட்டம் எனும் குதிரை சரியான பாதையில் செல்ல, மேற்கண்ட வரம்புகள் எனும் கடிவாளம் சட்டங்கொள் புனைவிற்கு அவசியம் தேவை. ஆனால், தற்காலச் சட்டங்களில், இத்தகு சட்டங்கொள் புனைவிற்கு வழிவகுக்கும் 'கருதும் சட்டப் பிரிவுகள்' ஏதும் இல்லை, என்பது மறுக்க முடியாத உண்மை. ஏனெனில் பயம் தான் காரணம். சட்டமன்றம் விளக்கமாக சொல்லியுள்ளதற்கே, பல விளக்கங்கள் எழும்பொழுது, இல்லாததை இருப்பதாகக் கொள்ள வேண்டும் என்று கூறினால் குழப்பம்தான் எஞ்சும்.

[xx] ஒத்த விஷயத்தைப் பொறுத்த சட்டப் பொருள் விளக்கம் [Interpretation of Statutes in Pari Materia]

41. The interpretation placed on similar statutes - Write short notes (ஒத்த செய் சட்டங்களுக்கு பொருள் விளக்கம் செய்ய வேண்டிய முறை – சிறு குறிப்பு எழுதுக.)

(அல்லது)

Interpretation based on similar statutes - Write Short Notes. (ஒத்த செய் சட்டங்களின் அடிப்படையில் பொருள் கொள்ளுதல் – சிறு குறிப்பு எழுதுக.)

(அல்லது)

Interpretation of statutes in pari materia - Write Short Notes. (ஒத்த விஷயத்தைப் பொறுத்த சட்டப் பொருள் விளக்கம் – சிறு குறிப்பு எழுதுக.)

முன்னுரை:

'Par' என்றால் 'ஒத்தது', 'சமமானது' (Similar) என்று பொருள். பிளாக் என்பவரின் சட்ட அகராதிபடி 'Pari materia' என்றால், 'ஒத்த விஷயம்' (same matter) அல்லது 'ஒத்த பொருள்' (same subject) பற்றியது என்று பொருளாகும்.

ஒத்த சட்டங்களின் அடிப்படையில் பொருள் விளக்கமளித்தல் [Interpretation of Statutes in pari materia (or) Interpretation based on similar statutes]:

இரண்டு சட்டங்கள் ஒத்த நோக்கத்துடன், ஒரே வகையிலான நபர்களை அல்லது பொருள்களைப் பொறுத்து ஒத்த வகையிலான முறையில் இயற்றப் பட்டிருப்பின், அவ்விரு சட்டங்களும் 'ஒத்த விஷயத்தின்' **'in pari materia'** அடிப்படையிலானது என்று கூறலாம்.

சட்டமொன்றில் குறிப்பிடப்பட்டுள்ள சொற்றொடருக்குண்டான பொருளைக் கண்டறிவதில் சிக்கல் ஏற்பட்டால், அச்சட்டத்தில் கூறப்பட்டுள்ள அதே விஷயம் தொடர்பாக முன்னதாக இயற்றப்பட்டுள்ள மற்றொரு சட்டத்தில் அச்சொற்றொடருக்கு என்ன பொருள் அளிக்கப்பட்டுள்ளது என்பதைக் கண்டறிந்து அப்பொருளை அதற்குப் பொருத்தி விளக்கம் காணலாம்.

ஒரு சட்டத்தில் உள்ள சில வகைமுறைகள் இரு பொருள் தரக் கூடியதாக இருப்பின், அச்சட்டத்தின் அதே கருப் பொருளைக் குறித்து கூறும் மற்றொரு சட்டத்தில் அவ்வகையிலான வகைமுறைகளுக்கு என்ன விளக்கம் அளிக்கப் பட்டுள்ளது என்பதிலிருந்து சட்டமன்றத்தின் எண்ணத்தை (intention of legislature) அறியலாம்.

இதைத்தான் அறிஞர் மேக்ஸ்வெல் அவர்கள், 'மற்றொரு முந்தைய சட்டத்தில் கூறப்பட்டுள்ள ஒரு குறிப்பிட்ட வாக்கியத்தைச் சுட்டிக்காட்டுவதன் மூலம் அச்சட்டத்தையொத்தவாறு உள்ள ஒரு சட்டத்தில் கூறப்பட்டுள்ள வாக்கியத்திற்கு பொருள் காணலாம்'[1] என்று கூறுகிறார்.

இரண்டு சட்டங்கள் ஒத்தவாறாக இருக்க வேண்டும் என்பதற்கு, அவை இரண்டும் ஒரே காலத்தில் இயற்றப்பட்டதாக அல்லது ஒன்று மற்றொன்றை பரஸ்பரம் குறிப்பிடுவதாக இருக்க வேண்டுமென்பதில்லை. எனினும், அவ்விரண்டு சட்டங்களும் ஒத்த விஷயத்திற்குத் தொடர்புடையதாக இருப்பின் அல்லது ஒரே ஆண்டில் சட்ட மன்றத்தின் ஒரே கூட்டத் தொடரில் அல்லது அடுத்தடுத்த கூட்டத் தொடரில் இயற்றப் பட்டதாக இருப்பின், அவ்விரு சட்டங்களும் ஒன்றுக்கொன்று ஒத்ததாக உள்ளது என்று கருதுவதற்குண்டான வாய்ப்பு அதிகமானதாக உள்ளது. **ஏனெனில் அவ்விரு சட்டங்களும் சட்டமன்றத்தில் அமர்ந்திருக்கும் ஒத்த மனிதர்களால் ஒரே கால கட்டத்தில் இயற்றப்பட்டதாக இருப்பதால், அங்கு ஓட்டு மொத்த சட்டமன்றத்தின் கருத்தும் ஒத்தவாறே இருக்கும் என்று இங்கு அனுமானிக்கப்படுகிறது.**

முக்கிய வழக்குகள்:

Adilabad Municipality v. Mahadeo[2]

இவ்வழக்கில் ஹைதராபாத் மாநகராட்சி சட்டத்தில் (Hyderabad Municipal Corporation Act) காணப்படும் 'ஆக்ட்ராய்' (Octroi) வரி தொடர்பான வகைமுறையானது, ஹைதராபாத் மாவட்ட நகராட்சி சட்டத்தில் (Hyderabad District Corporation Act) கூறப்பட்டுள்ள வகைமுறைக்கு ஒத்ததாக இருந்தது. மேற்கண்ட இரண்டு சட்டங்களும் ஒரே சட்டமன்றத்தால் ஒரே ஆண்டில் (அதாவது 1956–ஆம் ஆண்டில்) இயற்றப்பட்டதாகும். எனவே மேற்கண்ட இரண்டு

1. 'Light may be thrown on the meaning of a pharase in a statue by reference to a specific pharse in an earlier statute dealing with the same subject matter' - **Maxwell.**
2. A.I.R. 1967 A.P. 363

சட்டங்களும் ஒத்தவாறு உள்ளதாகக் கூறி, ஹைதராபாத் மாவட்ட நகராட்சி சட்டத்தில் காணப்படும் 'உணவு' (food) எனும் பதத்திற்கு, அச்சட்டத்திற்கு உடன் முன்பாக இயற்றப்பட்ட ஹைதராபாத் மாநகராட்சி சட்டத்தில் அப்பதத்திற்கு என்ன பொருள் கொடுக்கப்பட்டிருந்ததோ, அதே பொருளை ஆந்திரபிரதேச உயர் நீதிமன்றம் கொடுத்தது.

State of Assam v. P.Barua[1]

இவ்வழக்கில் 1922–ஆம் ஆண்டின் வருமான வரிச் சட்டமும், 1939–ஆம் ஆண்டின் அஸ்ஸாம் வேளாண் வருமான வரிச் சட்டமும் ஒன்றுக்கொன்று ஒத்ததாக இருந்தன. எனவே பிந்தய சட்டத்தின் 19–வது பிரிவிற்கு பொருள் விளக்கம் அளிப்பதற்கு, முந்தைய சட்டத்தின் 22–வது பிரிவின் துணையை நாடலாம் என்று உச்ச நீதிமன்றம் கூறியது.

-o0o-

இதுவரை . . .

முன்சென்ற முதல் அத்தியாயத்தின் வழியாக, இயற்றப்பட்ட சட்டம் என்றால் என்ன, அதன் பகுதிகள் யாவை, சட்டங்களின் தொடக்கம், நீக்கம் மற்றும் புதுப்பிப்பு, சட்டங்களை தொகுத்தல் மற்றும் சேர்த்தல் ஆகியவற்றைக் கண்டோம்.

அதற்கடுத்த, இரண்டாவது அத்தியாயத்தில், சட்டப் பொருள் விளக்கமளித்தலின் நோக்கம், முக்கியத்துவம், கோட்பாடுகள், விதிகள் மற்றும் துணை விதிகளைக் கண்டோம். மேற்கண்ட இரண்டு அத்தியாயங்களில் கூறப்பட்டுள்ளவை யாவும், சட்டப் பொருள் விளக்கம் எனும் பிரம்மாண்டமான மாளிகையின் அடித்தளமாக விளங்கும் அஸ்திவாரங்கள் ஆகும். இப்பாடம் குறித்து முந்தய ஆண்டுகளின் பல வினாத்தாள்களை கவனமுடன் பரிசீலித்த பொழுது, மேற்கண்ட இரண்டு அத்தியாயங்களிலிருந்தும் பலமுறை வினாக்கள் கேட்கப்பட்டுள்ளதை அறிந்தேன். மேற்படி இரண்டு அத்தியாயங்களிலிருந்தும் வினா கேட்கப்படாத வினாத் தாளே இருக்க முடியாது, என்ற அளவில் உள்ளது. எனவே, கவனமாக ஒன்றுக்கு இருமுறை படித்துக் கருத்துக்களை மனதில் ஆழமாக பதிந்து கொள்ளவும். வழக்குகள் மிக முக்கியம்.

இனி அடுத்த அத்தியாயத்திற்கு செல்வோமா ? . . .

1. A.I.R. 1969 S.C. 831

4

சட்டப் பொருள் விளக்கத்திற்கு உதவும் கூறுகள் அல்லது கருவிகள் அல்லது காரணிகள் [Aspects or Aids to Interpretation of Statutes]

உதவும் கூறுகள் அல்லது கருவிகள் அல்லது காரணிகள் – ஒரு அறிமுகம் [Aspects or Aids - An Introduction]

இயற்றப்பட்ட சட்டத்தில் உள்ள சொற்களுக்கு பொருள் விளக்கம் அளிக்கும் பொழுது மிக்க கவனமுடன் செயல்பட வேண்டும். அச்சட்டத்தின் மூலப் பொருளை ஒட்டியே பொருள் விளக்கம் தரப்பட வேண்டும். சட்டத்தின் வார்த்தைகள் தெளிவாகவும், ஒரு பொருளுடனும் இருக்கையில், அதன் விளக்கத்தை கண்டறிய உதவும் காரணிகள் தேவையில்லை, என்பது உண்மைதான். (when the words of a Statute is clear and unambiguous, there is no need for any aid for interpretation). ஆனால் சில சமயங்களில் சட்டமன்றமானது, சட்டத்தின் சொற்களை சந்தேகத்திற்கு இடமளிக்கும் வகையில் அமைந்துவிடும். அதுதான் எண்ணிய கருத்தை குழப்பமான வழியில் சொல்லியிருக்கும். இம்மாதிரியான சமயங்களில் நீதிமன்றம் எவ்வழி முறைகளைப் பின்பற்றி, சட்டத்தின் குழப்பமான சொற்களுக்கு சரியான பொருள் விளக்கம் தருவது? சட்டமன்றத்தின் உள்ளக் கிடக்கையை எங்ஙனம் கண்டறிவது? இதற்கு உதவி புரிவதற்கென்றே இரண்டு கூறுகள் அல்லது காரணிகள் நீதிமன்றத்திற்கு வழிகாட்டும் ஒளிவிளக்காக இருக்கின்றன. அவை :

(அ) வெளிப்பண்புக் கூறுகள் (External aspects or aids)
(ஆ) உட்பண்புக் கூறுகள் (Internal aspects or aids)

இனி மேற்கண்டவற்றை சற்று விளக்கமாக பின்வருமாறு காண்போம்.

(அ) வெளிப்பண்பு உதவும் கூறுகள் அல்லது புறக்கூறு கருவிகள் அல்லது காரணிகள் [External Aspects or Aids to Interpretation of Statutes]

42. Explain external aids to interpretation. (சட்டப் பொருள் விளக்கத்திற்கு வெளியிலிருந்து உதவும் கூறுகளை விளக்குக.)

(அல்லது)

What are the extrinsic aids in interpretation of statutes? (பொருள் விளக்கங் கொள்வதில் புறக்கூறு கருவிகள் யாவை?)

(அல்லது)

Discuss the role of extrinsic aids in the interpretation of statutes. (செய் சட்டத்தின் பொருள் அறிவதற்கு வெளிப்படை கருவிகளின் பங்கினை விவாதி.)

(அல்லது)

Briefly explain the external aids to construction of statutes. (பொருள் விளக்கம் கொள்வதில் புறக்கூறு கருவிகளை சுருக்கமாக விளக்குக.)

(அல்லது)

Mention and explain various external sources in statutory interpretation. (சட்டப் பொருள் விளக்கத்தில் வெளிப்படையான ஆதாரங்களை எடுத்துக் கூறி விளக்குக.)

(அல்லது)

Explain the various external sources in statutory interpretation. (சட்டப் பொருள் விளக்கத்தில் பல்வேறு புற மூலங்களை விளக்குக.)

(அல்லது)

Briefly explain the external aids to interpretation of statutes. (சட்டப் பொருள் விளக்கம் தொடர்பாக உள்ள வெளிப்படை ஆதாரங்களை சுருக்கமாக விளக்குக.)

(அல்லது)

What are the external aspects that must be taken into consideration while reading words in their context? (சொற்களுக்கு பொருள் காணும்போது கவனத்தில் கொள்ள வேண்டிய சட்டத்திற்கு அப்பாற்பட்ட வெளிப்பண்புக் கூறுகள் யாவை ?)

(அல்லது)

External sources in statutory interpretation - Write Short Notes. (சட்டப் பொருள் விளக்கத்திற்கான வெளி மூலங்கள் – சிறு குறிப்பு எழுதுக.)

(அல்லது)

External Aids - Write Short Notes. (புற ஆதாரங்கள் – சிறு குறிப்பு எழுதுக.)

முன்னுரை :

சட்டப் பொருள் விளக்கமளித்தலுக்குப் பயன்படும் வெளிப்பண்பு உதவும் கூறுகளை (aspects), கருவிகள் (aids), மூலங்கள் (sources), காரணிகள், ஆதாரங்கள், சாதனங்கள் என்றும் கூறலாம். அனைத்தும் ஒரே பொருள் தரக்கூடியதுதான். எனவே, குழப்படையத் தேவையில்லை.

சட்டத்தின் கருப்பொருளுக்கேற்பச் சொற்கள் பொருள் கொள்ளப்பட வேண்டும் (Reading words in their context) :

இயற்றப்பட்ட சட்டத்தின் சொற்கள் சந்தேகத்திற்கு இடமளித்தால், அதன் சரியான பொருள் விளங்காமல் போகலாம். அவ்வாறு நேரும் சமயங்களில் அச் சட்டத்தின் கருப்பொருளுக்கேற்பச் சொற்கள் பொருள் கொள்ளப்பட வேண்டும். கருப்பொருளை விளங்க வைக்கும் வகைகளிலேயே, சொற்களின் அர்த்தம் தொனிக்க வேண்டும். ஒரு சொல் பல சட்டங்களில் இடம் பெற்றிருக்கலாம். ஆனால், அவை அனைத்துக்கும், ஒரே பொருளைக் கற்பிப்பது தவறு. எல்லாச் சட்டங்களும் ஒரே கருப்பொருளைத் தாங்கி நிற்பவை அல்ல; அவற்றின் நோக்கங்கள் வேறு; குறிக்கோள்கள் வேறு; அவை இயற்றப்பட்ட சூழ்நிலைகள் வேறு; அதுபோல் அவை களைய நினைக்கும் குற்றங் குறைகள், செய்யவிருக்கும் சீர்திருத்தங்களும் வேறு வேறு. எனவே, ஒரு சொல் பல சட்டங்களில் இடம் பெற்றிருக்கும் பொழுது, அச்சொல் ஒரு பொருளைக் கொண்டிருக்கிறது என்று கூற முடியாது. சொற்களுக்குப் பொருள் காணும் முயற்சியில் சட்டத்திற்கு அப்பாற்பட்ட கூறுகள் சிலவற்றையும் (external aspects) கவனிக்க வேண்டும். அவற்றை ஒன்றன்பின் ஒன்றாக

பின்வருமாறு காண்போம். (ஆனால் இந்த வெளிப்பண்புக் கூறுகளையும் நீதிமன்றங்கள் சில வரம்புகளுக்கு உட்பட்டே பின்பற்ற வேண்டியுள்ளது என்பதையும் நினைவிற் கொள்ள வேண்டும்).

(1) சட்டம் இயற்றப்படுவதற்குண்டான காரணங்கள் மற்றும் அதன் நோக்கங்கள் குறித்த அறிக்கை (Statement of objects and Reasons) :

சட்டமன்றத்தின் உள்ளக்கிடக்கையை (Logislativo Intontion) கண்டறிவதற்கு, மேற்கண்ட அறிக்கையை பயன்படுத்த நீதிமன்றத்திற்கு அனுமதியளிக்கப்பட்டிருக்கிறது. அதாவது சட்டத்தில் ஒரு சொல்லானது இரு பொருளைத் தரக்கூடியதாகவோ அல்லது அய்யத்திற்கிடமுடையதாகவோ இருப்பின், அச்சட்டம் இயற்றப்படுவதற்கு முன் என்ன சூழ்நிலை இருந்து வந்தது? (காரணங்கள்) எந்த தீங்கைத் தவிர்ப்பதற்காக அச்சட்டம் இயற்றப்பட்டது ? (நோக்கங்கள்) போன்றவை அடங்கிய அறிக்கை.

ஆனால் **State of West Bengal v. Union of India**[1] என்ற வழக்கில், ஒரு சட்டப்பிரிவின் உண்மையான நோக்கத்தையும் விளைவையும் தீர்மானிக்க சட்டம் இயற்றப்படுவதற்கான காரணங்கள் மற்றும் நோக்கங்கள் குறித்த அறிக்கையை பயன்படுத்தக் கூடாது என்றும், ஒரு குறிப்பிட்ட சட்டம் இயற்றப் படுவதற்கு வழி வகுத்த காரணங்கள் மற்றும் பின்னணியை அறிவதற்காக மட்டுமே பயன்படுத்த வேண்டுமே தவிர, வேறு எந்நோக்கத்திற்காகவும், பயன்படுத்தக்கூடாது என்றும், ஒரு சட்டத்திற்கு பொருள் விளக்கமளிக்க முழுக்க முழுக்க மேற்படி அறிக்கையை ஒரு கருவியாக நீதிமன்றங்கள் பயன்படுத்தக் கூடாது என்றும், உச்ச நீதிமன்றம் கூறியது.

Gujarat University v. Sree Krishna[2] என்ற வழக்கில் குஜராத் பல்கலைக் கழக சட்டத்தின் நோக்கம் (object) என்னவென்றால், "... கல்வியை போதிக்கும் மொழியாக, குஜராத் மொழியையோ அல்லது தேசிய மொழியையோ பின்பற்றுவதற்கு பல்கலைக்கழகத்திற்கு அதிகாரமளிக்கப்பட தீர்மானிக்கப் பட்டிருக்கிறது..." என்பதாகும். குஜராத் மொழியை போதனா மொழியாக பின்பற்றலாமா என வினா எழுந்தபொழுது, நீதிமன்றம் மேற்படி சட்டத்தின் நோக்கத்தை (object) அறிந்து கொண்டு, சட்டமன்றம் மேற்படி மொழிகளை போதனா மொழியாக பின்பற்றுவதற்கு பல்கலைக் கழகத்திற்கு அதிகாரமளிக்க அச்சட்டத்தின் காரணங்கள் மற்றும் நோக்கங்கள் குறித்த அறிக்கையில் தீர்மானித்து உள்ளதே தவிர, உண்மையில் அத்தகு அதிகாரத்தினை அளித்துவிடவில்லை என்று பொருத்தமான பொருள் விளக்கத்தை பகர்ந்தது.

1. A.I.R. 1963 S.C. 1241
2. A.I.R. 1963 S.C. 703

(2) பாராளுமன்ற விவாதங்கள் மற்றும் உரைகள் (Debates and Speeches in Parliament) :

அய்யப்பாடு மிகுந்த ஒரு சட்டத்திற்கு பொருள் விளக்கம் தருகையில், பாராளுமன்றத்தில் அச்சட்டம் இயற்றப்படுவதற்கு முன் நடந்த விவாதங்களை பயன்படுத்தக் கூடாது. ஆனால் அச்சட்டத்தின் சரித்திர பின்னணியை அறிந்து கொள்ள பயன்படுத்தலாம், என அறிஞர்கள் **மேக்ஸ்வெல், கிராஃபோர்டு** ஆகியோர் கூறுகின்றனர்.

A.G. of Bengal v. P.C. Mallick[1] எனும் பழைய வழக்கில், ஒரு சட்டத்தின் பொருள் விளக்கத்திற்கு, அச்சட்டம் தொடர்பாக சட்டமன்றத்தில் நிகழ்ந்த நடவடிக்கைகளை சட்டப்படியான கருவிகளாக பயன்படுத்துதல் கூடாது, என பிரிவி கவுன்சில் நீதிமன்றம் (Privy Council) கூறியது.

State of West Bengal v. Union of India[2] என்ற வழக்கில், பாராளுமன்றத்தால் இயற்றப்பட்ட ஒரு சட்டமென்பது, சட்டமியற்றுபவர்கள் அனைவது ஒருமித்த கருத்தாகும். அச்சட்டத்தின் கருத்து மற்றும் நோக்கம் குறித்து தனிநபர் ஒருவர் அல்லது ஒரு அமைச்சரே ஆனாலும், அவர்கள் கூறிய உரையைக் கொண்டு, அச்சட்டத்தில் பயன்படுத்தப்பட்டுள்ள சொற்களின் பொதுத் தன்மையை நீக்குவதற்காக பயன்படுத்துதல் கூடாது, என உச்ச நீதிமன்றம் கூறியது.

Golaknath v. State of Punjab[3] – அரசியலமைப்புச் சட்டம் குறித்த மிகப் பிரபலமான இவ்வழக்கில், "இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 368–வது சரத்திற்கு பொருள் விளக்கமளிக்கும் பொருட்டு அல்லது அதன் எல்லையைக் குறித்து வரையறுப்பதற்கு அல்லது அச்சரத்து எதை உள்ளடக்குகிறது அல்லது எதைத் தள்ளுகிறது என்பதை தீர்மானிக்கும் பொருட்டு, அரசியலமைப்பு நிருணய சபையில் செய்யப்பட்ட உரைகளைப் படித்தறிதல் இயலாத செயலாகும்" என **உச்ச நீதிமன்ற நீதியரசர் Wanchoo** அவர்கள் கூறினார்.

மேற்கண்ட தீர்ப்புகளைப் பார்க்கும் பொழுது, ஒரு சட்டப் பிரிவின் மொழிநடையின் உண்மையான பொருள் விளக்கத்தை தீர்மானிக்க பாராளுமன்ற நடவடிக்கைகளை கருத்தில் கொள்வது சரியல்ல, என்பது புலனாகிறது. எனவே, ஒரு சட்டப் பிரிவை அது இருக்கும் நிலையிலிருந்துதான் நீதிமன்றங்கள் பொருள் காண வேண்டுமேயொழிய, பாராளுமன்றத்தின் தனியொரு உறுப்பினர் அச்சட்டம் குறித்து நிகழ்த்திய உரைக்காக, என்ன நினைத்திருப்பார் அல்லது எதை நம்பி உரை நிகழ்த்தினார் என்பதைக் கண்டு பொருள் விளக்கமளித்தல் கூடாது. ஆனால் அதே சமயத்தில், அவ்விவாதங்களும் உரைகளும், எச்சூழ்நிலையில்

1. 1895 (22) Ind. App. 107 (P.C.)
2. A.I.R. 1963 S.C. 1241
2. A.I.R. 1967 S.C. 1682

அச்சட்டம் இயற்றப்பட்டது என்பதற்கான சரித்திர அமைப்பை விளக்கக் கூடியது என்பதையும் மறந்துவிடல் கூடாது. அதாவது, பாராளுமன்ற விவாதங்களும் உரைகளும் ஒரு சட்டம் ஏற்பட வழிவகுத்தாலும், அச்சட்டத்திற்கு பொருள் விளக்கம் தருதலில் அவற்றை ஒரு கருவியாகப் பயன்படுத்துதல் கூடாது; ஆனால் அச்சட்டத்தின் சரித்திர பின்னணியை அறிந்து கொள்ள பயன்படுத்தலாம்.

K.P. Varghese v.. I.T. Officer[1] என்ற வழக்கில் வருமான வரிச் சட்டத்தில் 52(2) என்ற ஒரு பிரிவை அறிமுகப்படுத்துவதற்காக, அச்சட்டத்தை திருத்தும் நோக்குடன் நிதியமைச்சர் சட்ட மசோதா ஒன்றை பாராளுமன்றத்தில் அறிமுகப்படுத்தினார். அச்சமயத்தில் அவர் செய்த உரையானது, மேற்படி திருத்தத்தின் நோக்கம் மற்றும் பயன்பாட்டை, தெளிவாக விளக்கும் பொருட்டு உள்ளதால், அவ்வுரையானது, பொருள் விளக்கத்திற்கு தொடர்புடையதாகும், என்று உச்ச நீதிமன்றம் கூறியது. ஒரு சட்ட மசோதாவினை அறிமுகப்படுத்துவதற் காக, அதன் காரணங்களை விளக்கி அம்மசோதாவை அறிமுகப்படுத்துபவர் நிகழ்த்தும் உரையை, எக்குறையைக் களைவதற்காக மற்றும் எந்நோக்கத்திற்காக அச்சட்டம் இயற்றப்படுகிறது என்பதை நிர்ணயிப்பதற்கு நிச்சயமாக பயன் படுத்தலாம், என உச்ச நீதிமன்றம் மேலும் கூறியது.

(3) *சரித்திரப் பின்னணி* (Historical Background) :

சட்டத்தின் சரித்திரப் பின்னணியையும், சட்டம் இயற்றப்பட்ட சூழ்நிலை களையும் சட்டமன்றம் காட்டும் வழியில் சென்று ஆராய நீதிமன்றங்களுக்கு உரிமை உண்டு. அவ்வழியில் சென்றுதான் சட்டப் பிரிவுகளுக்கு விளக்கம் கொடுக்க வேண்டுமே தவிர, வேறு வழியில் பொருள் தர முனைதல் கூடாது; புதுக்கதை புனைதல் ஆகாது. சிக்கலான வினாக்களுக்கெல்லாம் விடையளிக்கும் வகையில் உள்ள சரித்திர விஷயங்கள் பற்றிய ஏடுகளை நீதிமன்றம் பயன்படுத்தி தக்க மற்றும் சரியான பொருள் விளக்கத்தை நல்கலாம்.

Sir George Jessel M.R. அவர்கள், "சட்டத்தின் மற்றும் சட்டமியற்றலின் வரலாற்றை நீதிமன்றமானது மறந்து விடக்கூடாது. சட்டமன்றத்தை உந்தியதாக (influence) நினைக்கப்படும் நோக்கங்களைக் கொண்டு அது இயற்றிய சட்டங்களை ஆராய்வதற்கு நீதிமன்றத்திற்குச் சுதந்திரம் இல்லையென்றாலும், சட்டம் மற்றும் சட்டமியற்றலின் வரலாறு மற்றும் முந்தைய தீர்ப்புகள், நீதிமன்றத்திற்கு இவைதான் சட்டமன்றத்தின் அறுதிக் கருத்து என்று தெளிவாக்கும்பட்சத்தில், நீதிமன்றம் அதே பாதையில் சென்று சட்டப் பிரிவுகளுக்கு விளக்கம் காண வேண்டுமே தவிர, கருதப்படாத புதியவற்றுக்கு விரித்துச் செல்லக்கூடாது" என்று கூறுகிறார்.

R.M.D.C. v. Union of India[2] என்ற வழக்கில் சட்ட அதிகாரங்களைப்

1. A.I.R. 1981 S.C. 1922
2. A.I.R. 1957 S.C. 628

பிரித்துப் (severability) பொருள் கொள்ளும் பொழுது, சட்டமன்றத்தின் கருத்தை கண்டறிவதற்கு, அச்சட்டத்தின் சரித்திரத்தை காண்பது அனுமதிக்கத்தக்கதே, என உச்ச நீதிமன்றம் கூறியது.

Saushvri v. M.C.G. & K.M.W. Union[1] என்ற வழக்கில் ஒரு சட்டத்தின் வரலாற்றையும், அச்சட்டம் இயற்றப்படுவதற்கு பின்னணியாக இருந்த சூழ்நிலைகளையும் நீதிமன்றம் கருத்தில் கொள்ளலாம் என்றும், ஆனால் இது, சட்டமன்றம் என்ன குறையை மனதில் கொண்டு, அதனைக் களைய சட்டம் இயற்றியது என்பதை அறிவதற்கு உண்டான ஒரு குறிப்பிட்ட வரம்பிற்கு உட்பட்டு மட்டுமே பயன்படுத்த வேண்டும் என்றும், உச்ச நீதிமன்றம் கூறியது.

Central Bank of India v. P.S. Rajagopalan[2] என்ற வழக்கில் 1947–ஆம் ஆண்டின் தொழிற் தகராறுகள் சட்டத்தின் 33-C என்ற பிரிவிற்கு பொருள் விளக்கமளிக்கும் போது, அப்பிரிவின் வரலாற்றை உச்ச நீதிமன்றம் ஆராய்ந்தது. இது சரித்திரப் பின்னணியை, பொருள் விளக்கமளிக்கும் பொருட்டு ஒரு கருவியாக எடுத்துக் கொள்ளலாம் என்பதற்கு எடுத்துக்காட்டாக விளங்கும் வழக்காகும்.

அதுபோல், Ceylon Bribery Act, 1954 என்ற சட்டத்திற்கு Judicial Committee விளக்கம் கண்டபோது, 'இலங்கை, இங்கிலாந்து நாடுகளின் பாராளுமன்றங்களிடையே நிலவிய சரித்திரத் தொடர்புகளைப் பார்க்கும் பொழுது, இங்கிலாந்து பாராளுமன்ற உறுப்பினர்களின் நடத்தையை ஆட்சி செய்யும் பழக்க வழக்கங்கள், ஒழுங்குமுறைகள் ஆகியவற்றை உதவிக்கு எடுத்துக் கொள்வது முற்றிலும் பொருத்தமானதே' என்று கூறியது.

(4) சட்டம் இயற்றப்படும்பொழுது இருந்த நிலை (State of things at the time of Legislation) :

சட்டம் நிறைவேற்றப்படும் பொழுது என்ன சூழ்நிலை இருந்தது, அது என்ன தீர்வழியைக் கொடுக்கிறது என்று ஆராய்ந்து பொருள் விளக்கம் தர நீதிமன்றங்களுக்கு அனுமதியளிக்கப்பட்டுள்ளது.

(5) சட்டமியற்றல் குறித்த பாராளுமன்ற வரலாறு (Parliamentary History or History of Legislation) :

சட்டத்திற்கு பொருள் விளக்கம் தரும் பொழுது, பாராளுமன்றத்தின் வரலாற்றையும் வெளிப்பண்பு கூறாக கருத்தில் கொள்ளலாம். ஏனென்றால் "சட்டங்களை இயற்றுவதே பாராளுமன்றம்தானே". ஆனால் இந்நிலை முந்திய காலகட்டத்திற்கு வேண்டுமானால் உகந்ததாக இருந்தது. தற்பொழுது அவ்வாறு இல்லை. சற்று விளக்கமாக வருமாறு.

1. A.I.R. 1969 S.C. 530
2. A.I.R. 1964 S.C. 743

இங்கிலாந்தில், முந்திய கால கட்டங்களில், சட்டத்தை இயற்றியவர்களின் எண்ணத்திற்கும் அல்லது அவர்கள், தாங்கள் இயற்றவுள்ள சட்டத்தால் என்ன செய்ய எண்ணம் கொண்டிருந்தார்கள் அல்லது என்ன நடப்பதாக அறிந்திருந்தார்கள் ஆகிய (சட்டமன்ற உறுப்பினர்களின்) மன நிலைகளுக்கெல்லாம், சட்டப் பொருள் விளக்கத்தில் இடம் கொடுக்கப்பட்டது. ஆனால் இப்படிப் பட்ட எண்ணங்களுக்கும், நம்பிக்கைகளுக்கும் தற்காலத்திய சட்டப் பொருள் விளக்கத்தில் சற்றும் இடம் கிடையாது. சட்டமியற்றிவன் பாராளுமன்ற வரலாறு, சட்டப் பொருள் விளக்கத்திற்கு உதவும் ஒரு கூறாக அனுமதிக்கவியலாது, என **அறிஞர் மேக்ஸ்வெல்**[1] திட்ட வட்டமாகக் கூறுகிறார்.

இதனடிப்படையில் பார்க்கும் பொழுது, சட்டமியற்றலின் பாராளுமன்ற வரலாற்றில் அடங்கக்கூடிய, சட்ட மசோதா மீதான விவாதங்கள், தேர்வுக் குழுக்களின் அறிக்கைகள், நோக்கங்கள் மற்றும் காரணங்கள் குறித்த அறிக்கைகள் ஆகியவற்றையும் கூட, சட்டப் பொருள் விளக்கத்திற்கு உதவும் கூறுகளாக அனுமதிக்கவியலாது.

A.K. Gopalan v. State of Madras[2] என்ற மிகப் பிரபலமான வழக்கில், பாராளுமன்ற விவாதத்தின் பொழுது செய்யப்பட்ட ஒரு உரையை, சட்டப் பொருள் விளக்கத்திற்கு உதவும் ஒரு கூறாக எடுத்துக் கொள்ள முடியாது, என்று உச்ச நீதிமன்றம் கூறியது. ஒரு சட்ட மசோதா மீதான விவாதத்தின் பொழுது, பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் செய்யும் உரையானது, அம்மசோதா குறித்து அவரது மனதில் நிழலாடும் எண்ணங்களை மட்டுமே பிரதிபலிக்கிறதே யொழிய, அம்மசோதாவை கொண்டு வருவதற்காக பெரும்பான்மையினர் அளித்த ஓட்டுக்களின் பின்புறத்தில் உள்ள எண்ண ஓட்டங்களை அது பிரதிபலிக்கவில்லை என்றும், சம்பந்தப்பட்ட சட்டம் குறித்து சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவரது எண்ணங்களும் ஒரே மாதிரியாக இருந்தது என்ற ஊகிப்பதும் தவறு என்றும், மேலும் உச்ச நீதிமன்றம் கூறியது.

Kesavanand Bharathi v. State of Kerala[3] என்ற அரசியலமைப்பு தொடர்பான மற்றொரு புகழ் பெற்ற வழக்கில், **தலைமை நீதியரசர் Sikri** அவர்கள், ஒரு சட்டம் இயற்றுவது தொடர்பான விவாதத்தில் சட்டமன்ற உறுப்பினர்களால் ஆற்றப்படும் உரைகளை, அச்சட்டத்திற்கு பொருள் விளக்க மளிக்கையில் ஒரு உதவும் கூறாக (aid) கருதக் கூடாது என்றும், சட்டம் குறித்து உரை நிகழ்த்தாத உறுப்பினர்கள், உரை நிகழ்த்தியவர்களுடன் ஒத்திருப்பார்கள் என்று கூற முடியாது; அதுபோல் உரை நிகழ்த்தியவர்கள், உரை நிகழ்த்தாதவர் களுடன் ஒத்திருப்பார்கள் என்று கூற முடியாது என்றும் கூறினார். அதே சமயத்தில்

1. Maxwell 12th Edn. p. 50
2. A.I.R. 1950 S.C. 27
3. A.I.R. 1973 S.C. 1461

மேற்படி வழக்கில் நீதியரசர்கள் Shelat, Grover, Jagan Mohan Reddy, Palekar மற்றும் Mathew ஆகியோர்கள், அரசியலமைப்பு நிருணய சபையில் (Constituent Assembly) நிகழ்த்தப்பட்ட உரைகளை, இந்திய அரசியலமைப்பு சட்டத்திற்கு பொருள் விளக்கம் அளிக்கும் பொழுது அதை உருவாக்கியவர்களின் உன்மையான உள்ளக் கிடக்கையை கண்டறிவதற்கு பயன்படுத்தலாம், என்று கருத்து தெரிவித்தார்கள். மேற்கண்டவற்றைப் பார்க்கையில், இது இந்திய அரசியலமைப்புச் சட்டத்திற்குப் பொருள் விளக்கமளிக்கும் போது மட்டுமே பயனாகுமே தவிர, பிற சட்டங்களுக்குப் பொருந்தாது என்பது தெளிவாகிறது.

Aswini Kumar v. Arbinda Bose[1], Vajrevelu v. Special Deputy Collector[2], A.C.Sharma v. Delhi Administration[3] ஆகிய வழக்குகளிலும், பாராளுமன்ற விவாத உரைகளோ அல்லது சட்டத்தின் நோக்கங்கள் மற்றும் காரணங்கள் குறித்த அறிக்கையோ, பொருள் விளக்கத்திற்கு உதவும் கூறாகக் கொள்ளக் கூடாது என்றும், அவை அச்சட்டத்தின் பொருளைக் கட்டுப்படுத்தாது என்றும் உச்ச நீதிமன்றம் கூறியது.

ஆனால் **K.P. Varghese v. I.T. Officer[4]** என்ற வழக்கில் சட்ட மன்றத்தில் நிகழ்த்தப்படும் உரையை, பொருள் விளக்கத்திற்குப் பயன்படுத்தலாம், என்ற மாறுபட்ட கருத்தை உச்ச நீதிமன்றம் கூறியது. (வழக்கின் பொருண்மைகளை 2-வது உதவும் கூறின் கீழ்க் காண்க.)

S.P. Gupta v. President of India[5] என்ற மற்றொரு வழக்கில் அரசியலமைப்பு சட்டம் தொடர்பான வகைமுறைகளில் அச்சட்டமியற்றலின் வரலாற்றை சில வரம்புகளுக்குட்பட்டு, குறிப்பாக, அச்சட்ட வகைமுறை சட்டத்தில் சேர்க்கப்படுவதற்கு எது தொடக்கமாக அமைந்தது, அதன் முடிவு யாது என்பதற்காக மட்டும் பொருள் விளக்கம் காணுவதற்கு ஒரு உதவும் கூறாக பயன்படுத்தலாம் என்று உச்ச நீதிமன்றம் கூறியது.

முடிவாக, சட்டமியற்றலின் வரலாற்றை அரசியலமைப்புச் சட்டங்களுக்கு பொருள் விளக்கம் தருதலில் பயன்படுத்தலாம். பிற சட்டங்களுக்குப் பெரும்பாலும் பயன்படுத்துதல் கூடாது, என்பது தெளிவாகிறது.

(6) குழுவின் அறிக்கைகள் (அல்லது) அரசாங்க வெளியீடுகள் [Committee Reports (or) Government Publications] :

குழுவின் அறிக்கைகள் என்பது சட்டமியற்றப்படுவதற்கு முன் அரசினரால்

1. A.I.R. 1952 S.C. 369
2. A.I.R. 1965 S.C. 1017
3. A.I.R. 1973 S.C. 913
4. A.I.R. 1981 S.C. 1922
5. A.I.R. 1982 S.C. 149

நியமிக்கப்பட்ட ஆணையங்கள் (Commissions) மற்றும் குழுக்களின் (Committees) அறிக்கைகள் ஆகும். பொருள் விளக்கம் காணும் பொழுது, குழுவின் அறிக்கைகளை படித்துப் பார்ப்பதும் அவற்றினை உதவியாகக் கொண்டு, ஆராய்வதும் முன்னர் ஏற்றுக் கொள்ளப்படவில்லை. ஆனால் பின்னர் ஏற்பட்ட சில வழக்குகளில் கமிட்டி அறிக்கைகளை, நீதிமன்றத்தில் எடுத்தாள்வது பொருத்தமானதெனக் கருதப்பட்டது.

Assam Railways and Trading Co. Ltd. v. Inland Revenue Commissioner[1] என்ற வழக்கில் பெருமகனார்கள் அவையின் (House of Lords) முன்பாக கூறப்பட்ட வாதத்தில் 1920–ஆம் ஆண்டின் நிதிச் சட்டத்தில் (Finance Act, 1920) ஏற்படுத்தப்பட்ட சில திருத்தங்கள் Royal Commission of Income Tax-னுடைய பரிந்துரைக்கு ஏற்பவே வரையப்பட்டது. எனவே, அப்பரிந்துரையை ஏன் சட்டமன்றத்தின் நோக்கமாகக் கொள்ளக் கூடாது, என்ற வினா எழுப்பப்பட்டது. இதை **Lord Wright** அவர்கள் மற்றுமிரு உறுப்பினர்களோடு ஏற்க மறுத்துக் கூறிய தீர்ப்பில், Commission-னுடைய அறிக்கைக்கும், சட்டமன்றத்தின் நோக்கத்திற்கும் வெகுதூரம் உள்ளது; அறிக்கையில் கூறப்படும் பரிந்துரைகள், காரண காரியங்கள் யாவும் சட்ட மன்றத்தினால் ஏற்றுக் கொள்ளப்பட்டது என்று கூற இயலாது, என்றனர்.

இந்த வழக்கிற்குப் பின், அறிக்கையின் உதவியைப் பெறுவது சம்பந்தமாகப் பல்வேறு கருத்துகள் நிலவின. பெரும்பாலான வழக்குகளில், அறிக்கைகள் சட்டமன்றத்தின் நோக்கத்தைப் புரிந்து கொள்வதற்காக நாடப்படாமல், சட்டம் எந்தக் குறைபாடுகளையும், தீமைகளையும் களைய நினைத்தது என்பதை அறிவதற்காக நாடப்பட்டது.

Letang v. Cooper[2] என்ற வழக்கில் **Lord Denning, M.R.,** அவர்கள், "குழுக்களின் (கமிட்டிகளின்) அறிக்கையை உதவியாகக் கொள்வது நியாயமானதே. சட்டமியற்றப்பட்டதின் பின்னணி யையும், சூழ்நிலைகளையும், உண்மைகளையும் அறிவதற்கு இது உதவுகிறது. ஆனால், அறிக்கை என்ன பரிந்துரைக்கிறது என்பதைக் கவனிக்கக் கூடாது. அப்படி நீங்கள் பார்க்கும் பட்சத்தில் அதனால் நீங்கள் உந்தப்படும்படி (influence) விட்டுவிடக் கூடாது. ஏனெனில், பரிந்துரையில் கூறப்படும் வழிமுறைகளையே சட்டமன்றம் பின்பற்றுவது கிடையாது. பல சமயங்களில் வேறுவழி முறைகளைச் சட்டத்தில் ஏற்படுத்துகிறது" எனப் பொருள் விளக்கப் பணியை மேற்கொள்ளும் நீதிபதிகளுக்கு அறிவுறுத்தினார்.

நமது இந்திய நாட்டில் குழுக்களின் அறிக்கைகளும், சட்ட ஆணையத்தின் பரிந்துரைகளும், சட்டப் பொருள் விளக்கத்திற்கு உதவக்கூடிய ஒரு கூறாகவே

1. 1934 All E.R. (Rep) 646
2. 1965

எடுத்துக் கொள்ளப்படுகிறது. எடுத்துக்காட்டிற்கு பின்வரும் வழக்குகளே சான்றாகும்.

Mithilesh Kumari v. Prem Behari[1] என்ற வழக்கில், சட்ட ஆணையத்தின் அறிக்கைகளை (Law Commission Reports), சட்டப் பிரிவுகளுக்கு பொருள் விளக்கம் காணும் பொழுது ஒரு உதவும் கூறாக பயன்படுத்தலாம், என்று உச்ச நீதிமன்றம் கூறியது. மேற்படி வழக்கில் எழுந்த பிரச்சனை என்னவென்றால், 1988-ஆம் ஆண்டின் பெயரிரவல் நடவடிக்கைகள் தடுப்புச் சட்டத்திற்கு [Benami Transactions (Prohibition) Act, 1988] முன்மேவு அதிகாரம் (Retrospective effect) வழங்குவதா அல்லது வேண்டாமா என்பதுதான். அப்படிப்பட்ட சட்டங்களுக்கு முன்மேவு அதிகாரம் வழங்கப்பட வேண்டும் என்று சட்ட ஆணையத்தின் 130-வது அறிக்கையில் செய்யப்பட்ட பரிந்துரைகளைக் கொண்டு, மேற்படி சட்டத்திற்கு முன்மேவு அதிகாரம் உண்டு, என்று உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்தது. மேற்படி பொருள் விளக்கம், சட்டத்தின் கண்களில் மண்ணைத் தூவும் பொருட்டும், அதன் பிடியிலிருந்து தப்பிக்கும் பொருட்டும் முந்திய கால கட்டங்களில் பெயரிரவலாக செய்யப்பட்ட சொத்து மாற்றங்களையும் (past benami transactions), மேலும் அது தொடர்பாக நிலுவையிலுள்ள நடவடிக்கைகளையும் மேற்படி சட்டத்தின் கீழ் கொண்டு வந்தது. அத்தகு சொத்து மாற்றங்களும் தடை செய்யப்பட்டது.

R.S. Nayak v. A.R. Antuley[2] என்ற மற்றொரு மிகப் பிரபலமான, நாடறிந்த வழக்கில், பொருள் விளக்கமளிப்பதற்கு குழுக்களின் அறிக்கைகள், பாராளுமன்ற இணை குழுக்களின் அறிக்கைகள், ஆணையத்தின் அறிக்கைகள் ஆகியவை அனுமதிக்கத் தக்க வெளியிடை உதவும் கூறுகளாகும் (Permissable external aids), என உச்ச நீதிமன்றம் கூறியது.

(7) சர்வதேசப் பொது விதிகள் (International Conventions) :

சட்டத்தின் விதிகள் தெளிவாக இல்லாத சமயங்களில், சர்வதேச பொதுவிதிகளின் உதவியை நாடலாம். ஆனால், சந்தேகங்களுக்கு இடமளிக்கும் சந்தர்ப்பங்கள் இல்லாத நேரங்களில் இவற்றை நாடுவது சரியல்ல.

(8) வெளிநாட்டுத் தீர்ப்புகள் (Foreign Decisions) :

இந்தியாவைப் பொறுத்தவரை, இங்கிலாந்து மற்றும் அமெரிக்க நாட்டின் தீர்ப்புகளை கருத்தில் கொண்டு பொருள் விளக்கமளிக்கலாம். ஏனெனில் அவர்களுடைய சட்டவியலும் இந்திய நாட்டின் சட்டவியலும் ஏறக்குறைய ஒன்றாக உள்ளதே இதற்குக் காரணம். ஆனால் இந்திய நாட்டு சட்டத்தில் சொற்கள் தெளிவாக இருந்தால், மேற்படி வெளிநாட்டுத் தீர்ப்புகளைக் கருத்தில் கொள்வது அவ்வளவு நல்லதல்ல.

1. A.I.R. 1989 S.C. 1247
2. A.I.R. 1984 S.C. 684

Bangalore Water Supply Sewerage Board v. A. Rajappa[1] என்ற வழக்கில் இந்திய நாட்டு சட்டத்தினை, இந்திய நாட்டின் தீர்ப்புகளைக் கொண்டே பொருள் விளக்கம் தரல் வேண்டும் என கூறப்பட்டது.

(9) அகராதிகளும் விளக்க நூல்களும் (Dictionaries and Text Books):

சட்டமன்றங்களினால் இயற்றப்பட்ட சட்டங்களில் உபயோகப் படுத்தப்பட்டிருக்கும் சொற்களுக்குப் பொருள் விளக்கம் காண மொழியியல் அகராதிகள், ஒரு சிறந்த வழியாக கருதப்பட முடியாவிட்டாலும், அது ஒரு கருவியாக, தூண்டுகோலாக பயன்படுத்தப்படுகிறது. 'Park', 'Rubbish', 'Document', Practicable' போன்ற சொற்களுக்கு பொருள் காண அகராதிகள் பெரிதும் உதவியுள்ளன. சட்ட அகராதிகளில், Webster-ன் சட்ட அகராதியை, ஒரு சிறந்த அகராதியாகக் கொள்ளலாம்.

அதுபோல், பல நீதிபதிகளாலும் எடுத்தாளப்பட்டு வரும் விளக்க நூல்களையும் (பாட நூல்களையும்) (Text Books) துணையாகக் கொண்டு சட்டப் பொருள் விளக்கமளிக்கலாம். ஆனால் அப்படிப்பட்ட நூல்களை அடிப்படையாகக் கொண்டு கூறப்படும் வாதங்களை ஏற்றுக் கொள்ளவோ அல்லது மறுக்கவோ நீதிமன்றங்களுக்கு முழு உரிமை உண்டு.

(10) நீதிமுறை, நிருவாக, வணிகப் பழக்க வழக்கங்கள் (Judicial, Administrative and Commercial Practices) :

நீதிமுறைப் பழக்க வழக்கங்கள், சட்டப் பொருள் விளக்க முயற்சியில் மிகவும் செல்வாக்குப் படைத்தவையாக உள்ளன. ஆனால், நிருவாகப் பழக்க வழக்கங்கள் நீதிமுறைப் பழக்கத்தைப் போல் அவ்வளவு பலம் கொண்டவை அல்ல. அவை சட்டத்தையோ சட்டத்தில் கூறப்பட்டிருக்கும் உரிமைகளையோ மீறுவதாக இருந்தால், அதை நீதிமன்றம் ஏற்க மறுக்கலாம். வணிகப் பழக்க வழக்கங்கள் பெரும்பாலும் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன.

முடிவுரை :

சட்டப் பொருள் விளக்கத்திற்கு மேற்கண்டவை, வெளியிலிருந்து உதவும் கூறுகளாக இருப்பினும், அவற்றை முழுக்க முழுக்க சார்ந்திருக்க முடியாது என்பதையும், அவற்றை சில வரம்புகளுக்குட்பட்டுதான் பயன்படுத்த முடியும் என்பதையும் மேற்சென்றவற்றை கவனமாக பரிசீலிக்கும் பொழுது தெளிவாகிறது.

43. Show how far is historical background a permissible aid in construing a statute. (வரலாற்றின் அடிப்படையில் செய்சட்டத்தின் பொருள் கொள்ளல் எவ்வளவுக்கு அனுமதிக்கப்படும் ?)

1. A.I.R. 1978 S.C. 548

[முந்தய வினாவின் விடையில் 3–வது உதவும் கூறின் கீழ் உள்ளவற்றை படித்தறிந்து கொள்ளவும்.]

44. Can Parliamentary history of legislation serve as an aid in construing a statute ? (சட்டமியற்றலின் பாராளுமன்ற வரலாறு ஒரு சட்டத்தை பொருள் விளக்கம் தருதலில் ஒரு உதவும் கூறாக முடியுமா ?)

(அல்லது)

Discuss the following statement, "the Parliamentary history of Legislation is not a permissable aid in construing a statute". ("செய் சட்டம் ஒன்றிற்கு பொருள் விளக்கம் அளித்தலில் சட்டமியற்றுதல் தொடர்பான பாராளுமன்றத்தின் வரலாறு ஒரு அனுமதிக்கப்படவியலாத கூறு" என்ற கூற்றை விவாதி.)

(அல்லது)

Parliamentary history - Write Short Notes. (பாராளுமன்ற வரலாறு – சிறு குறிப்பு எழுதுக.)

(அல்லது)

The objects of all interpretations is to discover the intention of Parliament. But the intention of Parliament must be deducted from the language used for, it is well accepted that the belief and assumption of those who frame Acts of Parliament, cannot make laws. (பாராளுமன்றத்தின் கருத்தைக் கண்டுபிடிப்பதே எல்லா விளக்கம் காண்பதின் நோக்கங்கள் ஆகும். ஆனால் பாராளுமன்றத்தின் கருத்தை, பயன்படுத்தப்பட்ட மொழி யிலிருந்துதான் உய்த்துணர வேண்டும். ஏனெனில், பாராளுமன்றச் சட்டங்களை இயற்றுபவர்களின் கோட்பாடுகளும் ஊகங்களும், சட்டமாக ஆகாது என்பது நன்றாக ஒத்துக் கொள்ளப்பட்டுக்கிறது – விவாதி.)

[முந்தய வினாவின் விடையில் 2–வது உதவும் கூறின் கீழ் உள்ளவற்றையும், 5–வது உதவும் கூறின் கீழ் உள்ளவற்றையும் சேர்த்துப் படித்தறிக. அவற்றில் 5–வது உட்கூறின் கீழான, 'சட்டமியற்றல் குறித்த பாராளுமன்ற வரலாறு' என்ற தலைப்பின் கீழ் உள்ளவற்றிற்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கவும்.]

45. Uses of Dictionaries in interpretation - Write Short Notes. (செய் சட்ட பொருள் விளக்கம் காண்பதில் அகராதிகளின் பயன்கள் – சிறு குறிப்பு எழுதுக.)

(அல்லது)

Dictionaries - Write Short Notes. (அகராதிகள் – சிறு குறிப்பு எழுதுக.)

[முந்தய வினாவின் விடையில் 9–வது உதவும் கூறின் கீழ் உள்ளவற்றை படித்தறிந்து கொள்ளவும்.]

(ஆ) உட்பண்பு உதவும் கூறுகள் அல்லது உள்ளிடைக் கருவிகள் அல்லது காரணிகள் [Internal Aspects or Aids to Interpretation of Statutes]

46. What are the internal aids permissible in the construction of a statute. (செய் சட்டத்திற்கு அளிக்கப்படும் பொருள் விளக்கத்திற்கு அனுமதிக்கப்பட்ட உள்ளிடைக் கருவிகள் யாவை ?)

(அல்லது)

What are the internal aids that are permissible to interpret a statute? (செய் சட்டத்தின் பொருள் விளக்கம் அறிவதற்கு அனுமதிக்கப்பட்ட உள்ளிடைக் கருவிகள் யாவை?)

(அல்லது)

What are the available internal aids of interpretation of statutes. (சட்டப் பொருள் விளக்கத்திற்கு உதவியாக இருக்கும் உள்வழி முறைகள் யாவை?)

(அல்லது)

Elucidate the different parts of a statute relevant for interpretation. (இயற்றுமுறைச் சட்டப் பொருள் காணுகையில் பயன்படும் பலவகை சட்டப் பகுதிகள் பற்றி விளக்குக.)

(அல்லது)

Internal Aids - Write short notes. (அக உதவி கூறுகள் – சிறு குறிப்பு வரைக.)

(அல்லது)

Evaluate the position of 'titles', 'preamble', 'explanation' and 'definition' in the interpretation of statutes. (இயற்று முறைச் சட்டத்தின் பொருள் விளக்கம் தருவதில், 'தலைப்பு', 'முகப்புரை', 'விளக்கம்' மற்றும் 'வரையறை' பற்றி மதிப்பீடு செய்க.)

(அல்லது)

Examine how far the Court can use the following as aids to the construction of statute

a) Preamble
b) Marginal Notes
c) Headings.

செய் சட்டங்களுக்கு பொருள் விளக்கமளிக்கையில் பின்வருவன வற்றை எந்த அளவிற்கு நீதிமன்றங்கள், உதவும் கூறுகளாக பயன்படுத்தலாம் என்பதை ஆய்க:

(அ) முகப்புரை
(ஆ) ஓரக்குறிப்புகள்
(இ) தலைப்புகள்

(அல்லது)

Examine the role of

a) Preamble
b) Long Title
c) Schedules in interpretation of statutes.

சட்டப் பொருள் விளக்கம் காண்பதில்

(அ) முகப்புரை
(ஆ) நீள்தலைப்பு
(இ) அட்டவணைகள் ஆகியவற்றின் பங்கினை விவரி.

(அல்லது)

Explain how different parts of a statute are useful in its interpretation. (ஒரு செய் சட்டத்தின் பல்வேறு பகுதிகள் அதன் பொருள் விளக்கத்தில் எவ்வாறு பயன்படும் என்பதனை விளக்குக.)

(அல்லது)

Discuss the extent to which "preamble" can be considered as a legitimate aid in construction of statutes. (சட்டங்களைப் பொருள் விளக்கம் கொள்வதில் முகப்புரை எவ்வாறு முறையான கருவியாக கருதப்படுகிறது என்பதை விவரிக்க.)

முன்னுரை :

தெளிவற்ற மற்றும் அய்யப்பாடான சட்டத்திற்கு பொருள் விளக்கம் தருகையில் வெளிப்பண்பு கூறுகளை விட (External aspects), முதலில் உட்பண்புக் கூறுகளை பார்க்க வேண்டியது இன்றியமையாததாகும். உட்பண்புக்

கூறுகள் பொருள் விளக்கத்திற்கு உதவாத சமயத்தில்தான் வெளிப்பண்பு கூறுகளை உற்று நோக்க வேண்டும். சட்டத்தின் பொருள் விளக்கத்திற்கு உதவும் உட்பண்புக் கூறுகளை பின்வருமாறு காண்போம்.

சொற்களைக் கருப்பொருளுடன் சேர்த்து வாசித்தல் (Reading words in their context) :

தனிப்பட்ட சொற்களை அவற்றின் தனிமையில் பொருள் கொள்ளக் கூடாது. அந்தச் சொல் சேர்ந்து வரும் சொற்றொடர் முழுவதையும் கவனத்தில் கொண்டுதான் பொருள் கொள்ளப்பட வேண்டும். அதேபோல், சொற்றொடர்களின் பொருளை சட்டப் பகுதியின் முழுமையைக் கருத்தில் கொண்டே காண வேண்டும். இதற்கு உதவி புரியும் கூறுகள் அச்சட்டத்திலேயே உள்ளன. **அத்தகு உட்பண்பு உதவும் கூறுகளை (Intrinsic Aids) பின்வருமாறு ஒன்றன்பின் ஒன்றாகக் காண்போம்.**

(1) தலைப்பு (Title) :

இயற்றப்பட்ட சட்டம் ஒவ்வொன்றும் ஒரு நீள் தலைப்பையும் (Long Title), ஒரு குறுந் தலைப்பையும் (Short Title) கொண்டிருக்கும். நீள் தலைப்பு என்பதில் ஒரு சட்டத்தின் பொதுவான நோக்கம் பற்றி முழுவதுமாக விளக்கப் பட்டிருக்கும். அது அச்சட்டத்தின் முகப்பில் அமைக்கப்பட்டிருக்கும். குறுந் தலைப்பு என்பதில் ஒரு சட்டத்தின் பொதுவான நோக்கம் பற்றி முழுவதுமாக விளக்கப் பட்டிருக்கும். அது அச்சட்டத்தினைப் பற்றி அறிந்து கொள்வதற்கு வசதியாக குறிப்புரை (reference) கொடுக்கப் பட்டிருக்கும். இதில் விளக்கங்கள் ஏதும் இரா. ஒரு சட்டத்தின் பொருள் விளக்கமானது இதற்கு உட்பட்டுதான் இருக்க வேண்டும்.

உதாரணத்திற்கு, 1986–ஆம் ஆண்டின் நுகர்வோர் பாதுகாப்புச் சட்டத்தை (The Consumer Protection Act, 1986) எடுத்துக் கொள்வோம். அதன் **நீள் தலைப்பு (Long Title)** பின்வருமாறு அமைந்துள்ளது. அஃதாவது, "நுகர்வோர் நலன்களைச் சிறந்த முறையில் பாதுகாத்தல், அவ்வாறு பாதுகாப்பதற்காக, நுகர்வோர் தகராறுகளைத் தீர்த்து வைக்கும் பொருட்டு நுகர்வோர் குழுக்களையும் பிற அதிகார அமைப்புகளையும் ஏற்படுத்த வகை செய்தல் மற்றும் அது தொடர்பான விஷயங்களுக்காகவும் இயற்றப்பட்ட ஒரு சட்டம்" என்பதே நீள்தலைப்பாகும். அதுபோல், "இச்சட்டம் 1986–ஆம் ஆண்டின் நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் என அழைக்கப்படும்" என்பது **குறுந் தலைப்பு (Short Title)** ஆகும்.

(2) முகப்புரை (Preamble) :

சட்டத்தின் முக்கிய நோக்கம், இதில் கூறப்பட்டிருக்கும். ஒரு அய்யப்பாடான சட்டத்திற்கு மிக மிக முக்கியமாக கருத்தில் கொள்ள வேண்டியது இந்த முகப்புரையைத்தான். மேலும் விரிவாக அறிய, "இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின்

முகப்புரை பற்றிய பொருள் விளக்கம் – சிறு குறிப்பு எழுதுக" என்ற வினாவின் விடையில் காண்க. அது பக்கம் எண். 248–ல் கொடுக்கப்பட்டுள்ளது.

(3) ஓரக் குறிப்புகள் (Marginal Notes) :

ஒரு சட்டப்பிரிவின் ஓரத்தில் அதனைப் பற்றி சுருக்கமாக குறிப்பிடப் பட்டிருப்பவைகள்தான், ஓரக் குறிப்புகள் ஆகும். பொருள் விளக்கத்திற்கு இதனை பயன்படுத்தக்கூடாது என உச்ச நீதிமன்றம் பல வழக்குகளில் கூறியுள்ளது.

Indian Aluminium Co. v. K.S.E. Board[1] என்ற வழக்கில், "ஓரக் குறிப்புகளானது, ஒரு சட்டப் பிரிவிற்கு பொருள் விளக்கம் அளிப்பதற்கு உதவும் ஒரு சட்டப்படியான கூறாக அமைவதில்லை என்பது உண்மைதான்; ஆனால், அச்சட்டப் பிரிவின் சுருக்கத்தை சுட்டிக் காட்டுவதற்காகவும் அல்லது அச்சட்டப் பிரிவு எது குறித்து கூறுகிறது என்பதை அறிவதற்காகவும் ஓரக் குறிப்புகளை சார்ந்து நிற்கலாம்" என்று உச்ச நீதிமன்றம் கூறியது.

அதாவது, குறிப்பிட்ட சட்டப் பிரிவின் மொழி நடையில் குழப்பங்கள் இருப்பின், அதனை அறிவதற்காக மட்டுமே ஓரக் குறிப்புகளைப் பயன்படுத்தலாம். அதற்கும் மேல் செல்ல இயலாது. சட்டப் பிரிவே தெளிவாகவும் குழப்பமற்றும் இருக்கும் பொழுது, அதன் ஓரக் குறிப்புகளை ஓரக் கண்ணால் கூட காணக் கூடாது.

(4) சட்டப் பிரிவின் தலைப்பு (Heading of a Section) :

சட்டத்தில், ஒவ்வொரு சட்டப் பிரிவிற்கும் தனித்தனி தலைப்பு வழங்கப் பட்டிருக்கும். உதாரணமாக, 1993–ஆம் ஆண்டின் மனித உரிமைகள் பாதுகாப்புச் சட்ட்த்தின், 3–வது சட்டப் பிரிவானது **"ஒரு தேசிய மனித உரிமை ஆணைத்தின் அமைப்பு" (Constitution of a National Human Rights Commission)** என்ற தலைப்பின் கீழ் ஆரம்பமாகிறது. இப்படிப்பட்ட தலைப்புகளை, சம்பந்தப்பட்ட சட்டப்பிரிவின் முகப்புரை எனலாம். ஒரு சட்டத்தின் சாதாரண சொற்களின் பொருளை மேற்படி தலைப்பு கட்டுப்படுத்தாது. ஆனால் அதன் கீழான சட்டப் பிரிவின் வாசகத்தில் குழப்பமான சொற்றொடர்கள் ஏதேனும் இருப்பின், அவற்றை விளக்க அத்தலைப்பு உதவக் கூடியதாகும். "ஓரக் குறிப்புகளுக்கு" சட்டப் பொருள் விளக்கமளிப்பதில் என்ன நிலை உள்ளதோ, அதே நிலைதான் 'தலைப்பிற்கும்' உள்ளது.

(5) நிறுத்தற் குறிகள் (Punctuation Marks) :

சட்டப் பிரிவுகளில் பல இடங்களில், **காற்புள்ளி (Comma), அரைப்புள்ளி, புள்ளி** ஆகிய நிறுத்தற் குறிகள் காணப்படுவதுண்டு. ஒரு சட்டப் பிரிவிற்கு பொருள் விளக்கம் அளிக்கும் பொழுது, நீதிமன்றமானது முதலில் அச்சட்டப் பிரிவிலுள்ள நிறுத்தற் குறிகளை கருத்தில் கொள்ளாமல் வாசிக்க வேண்டும். அச்சட்டப்

1. A.I.R. 1975 S.C. 1967 at p. 1977

பிரிவில் உள்ள நிறுத்தற் குறியானது ஒரு முரண்பாட்டிற்கு வழி வகுக்குமேயானால், அந்நிறுத்தற் குறியைப் பற்றி நீதிமன்றங்கள் அக்கறை கொள்ள வேண்டியதில்லை; ஒதுக்கி விடலாம். ஏனெனில், நிறுத்தற் குறிகள் சட்டத்தின் பகுதியாக ஆவதில்லை. எனவே, அவற்றை கருத்தில் கொண்டுதான் பொருள் விளக்கமளிக்க வேண்டும் என்ற கட்டாயம் ஏதும் கிடையாது. ஆனால் அதே சமயத்தில், அச்சட்டப் பிரிவில் சரியான இடத்தில்தான் நிறுத்தற் குறிகள் வைக்கப்பட்டுள்ளன என நீதிமன்றங்கள் திருப்தி அடையுமேயானால், அச்சட்டப் பிரிவின் பொருளை அறிய உதவும் வழிகாட்டியாக அந்நிறுத்தற் குறிகளைப் பயன்படுத்தலாம் என **Justice Kishore v. State of Rajasthan**[1] எனும் வழக்கில் இராஜஸ்தான் உயர் நீதிமன்றம் கூறியது. ஆங்கில நீதிமன்றங்கள், நிறுத்தற் குறிகளுக்கு அதிக முக்கியத்துவம் அளிப்பதில்லை. எனினும், நிறுத்தற் குறிகளின் முக்கியத்துவம் சில சமயங்களில் அதி முக்கியத்துவம் வாய்ந்தவையாக அமைந்து விடுவதுண்டு.

உதாரணமாக, **"Kili him not ! Leave him !"** - இந்த வாக்கியத்தில் உள்ள நிறுத்தற் குறிகளின்படி பொருள் கண்டால் **"அவனைக் கொல்லாதே ! விட்டு விடு !"** என்று வருகிறது. இதில் புள்ளிகள் சற்று இடம் மாறினால், அதாவது, **"Kill him ! Not leave him !"** - என்று வந்தால், **"அவனைக் கொன்று விடு! விட்டு விடாதே !"** என்ற அதிபயங்கர பொருள் வருகிறது.

(6) உதாரணங்கள் (Illustrations) :

ஒரு சட்டப் பிரிவை தெளிவாக்கும் பொருட்டு, அதன் கீழ் கொடுக்கப் படும் எடுத்துக்காட்டுகளே, 'உதாரணங்கள்' ஆகும். அவ்வுதாரணங்கள் சட்டத்தின் பகுதியாகும். மேலும் அவை சட்டத்தை உருவாக்கியவர்களின் கருத்தை கூட்டிக் காட்டுகிறது. எனவே, அக்கருத்தை கண்டறிய "உதாரணங்கள்" ஒரு உதவும் கூறாக விளங்குகிறது. ஆனால் அவ்வுதாரணங்களையே ஆதாரமாகக் காண்பித்து, அது தொடர்பான சட்டப் பிரிவின் எல்லையை குறுக்கவோ அல்லது விரிக்கவோ கூடாது. சட்டப் பிரிவின் மொழி நடையை "உதாரணங்கள்" மாற்றவியலாது. எனினும், சட்டப் பிரிவின் சரியான பொருளை பெற்றுத் தர உதவும் ஒரு கூறாக "உதாரணங்கள்" விளங்குகின்றன. சட்டப் பிரிவிற்கு முரணாக "உதாரணங்கள்" விளங்கினால், அவ்வுதாரணங்களைத்தான் நீதிமன்றங்கள் தள்ளிவிட வேண்டுமேயொழிய, அச்சட்டப் பிரிவை அல்ல. சட்டப் பிரிவிற்கு இணக்கமாக இருக்குமளவிற்குத்தான் "உதாரணங்களுக்கு" பொருள் விளக்கம் தருதல் வேண்டும்.

(7) விளக்கங்கள் (Explanations) :

ஒரு சட்டப்பிரிவிற்கு கீழே அதில் குறிப்பிட முடியாதவை, அதன் கீழே விளக்கங்களின் வழியாகக் கொடுக்கப்பட்டிருக்கும். எனவே சட்டப்பிரிவில் ஏதேனும் சந்தேகம் எழுந்தால், அதன் கீழே உள்ள விளக்கங்களைக் காணுவது சாலச் சிறந்தது.

1. A.I.R. 1973 Rajasthan 244

(8) வரையறைக் கூறு பகுதி (அல்லது) சட்டப் பொருள் காணுதல் பகுதி (Definition Clause or Interpretation Clause) :

ஒரு சட்டத்தின் வகைமுறைகள் தொடங்கும் முன்னர், அதில் உள்ள சில சொற்களுக்கு வரையறைகள் அல்லது பொருள் காணுதல் பகுதி, அச்சட்டத்தின் தொடக்கத்திலேயே தரப்பட்டிருக்கும். ஆகவே அச்சட்டத்தின் நடுப்பகுதியிலோ அல்லது பிற்பகுதியிலோ வரும் சொற்களை, மேற்படி சட்டத்தின் ஆரம்பத்தில் கொடுக்கப்பட்டிருக்கும் வரையறைகளுடன் தொடர்புபடுத்தி பொருள் காண வேண்டும். இப்பகுதியை அக்குறிப்பிட்ட சட்டத்தினுள்ளேயே பொதித்து வைக்கப் பட்டிருக்கும் அகராதி (statutory dictionary) என்று கூட கூறலாம்.

உதாரணமாக இந்திய தண்டனைச் சட்டத்தின் 21–வது பிரிவில் **'அரசு ஊழியர்'** என்பதற்கு வரையறை கொடுக்கப்பட்டுள்ளது. அச்சட்டத்தின் 161–வது பிரிவு **'அரசு ஊழியர்'** இலஞ்சம் வாங்கினால் குற்றம், எனக் கூறுகிறது. இங்கு அந்த 'அரசு ஊழியர்' என்ற சொல்லில் எவரெல்லாம் அடங்குவர் என்பதைக் காண பிரிவு 21–ல் கூறப்பட்டுள்ள வரையறையைக் காண வேண்டியது அவசியமாகும். ஆனால் இந்திய தண்டனைச் சட்டத்தில் கூறப்பட்டுள்ள 'அரசு ஊழியர்' என்ற சொல்லுக்குண்டான வரையறையை வேறு சட்டத்திற்கு பொருள் விளக்கம் தரும் பொழுது பயன்படுத்துதல் கூடாது. அதுபோல் பிரிவு 161–ல் கூறப்பட்டுள்ள அரசு ஊழியர் எனும் பதத்திற்கு இந்திய தண்டனைச் சட்டம் தவிர வேறு சட்டங்களில் கூறப்பட்டுள்ள 'அரசு ஊழியர்' எனும் சொற்களுக்கான வரையறையை பொருள் காண எடுத்துக் கொள்ளக் கூடாது.

அதாவது ஒரு குறிப்பிட்ட சட்டத்தில் கொடுக்கப்பட்டிருக்கும் வரையறையைப் பகுதியை, அச்சட்டத்தில் கூறப்பட்டுள்ள சொற்களுக்கு பொருள் விளக்கம் காண பயன்படுத்த வேண்டுமேயொழிய, வேறு சட்டங்களில் காணப்படும் சொற்களுக்கு பொருள் விளக்கம் அளிப்பதற்காக பயன்படுத்தக் கூடாது. மேலும் அச்சொற்களுக்கு விளக்கம் அளிப்பதற்காக வேறு சட்டங்களில் கொடுக்கப்பட்டுள்ள வரையறையைப் பகுதியில் உள்ள வரையறைகளை கருத்தில் எடுத்துக் கொள்ளக் கூடாது.

எனினும் **Janaky v. Chellappan**[1] எனும் வழக்கில் சட்டமொன்றில் பொருள் விளக்கம் காணப்பட வேண்டிய ஒரு சொல், அச்சட்டத்தில் எந்த கண்ணோட்டத்தில் வருகிறது என்பதைக் கவனித்து அதற்கொப்ப வரையறையைப் பகுதியில் கொடுக்கப்பட்டுள்ள அச்சொல்லிற்கான வரையறையைப் பொருத்திப் பார்த்து புரிந்து கொள்ள வேண்டும் எனப்பட்டது. ஏனெனில் சில சமயங்களில் அவ்வரையறைக்கே பொருள் வேண்டிய நிலையும் ஏற்பட வாய்ப்புண்டு.

Angoori Devi v. U.P. State[2] எனும் வழக்கில், ஒரு சட்டத்தில்

1. 1973 K.L.T. 736
2. 1964 A.L.J. 851

ஒரு சொல்லுக்குண்டான வரையறை தெளிவாக கூறப்பட்டிருக்கும் பொழுது, அவ்வரையறையைத்தான் கருத்தில் கொள்ள வேண்டுமேயொழிய, அச்சொல்லின் சாதாரணமான பொருளை கருத்தில் கொள்ளக் கூடாது என்று கூறப்பட்டது.

(9) 'பொருள்படுதல்' மற்றும் 'உட்படுதல்' ஆகிய சொற்களின் பயன் (Use of the words "Means and includes") :

'பொருள்படுதல்' என்றால் ஒன்றைக் குறித்த விளக்கம் என்ன வென்பதைக் கூறுவதாகும். 'உட்படுதல்' என்றால் அப்பொருளில் எவையெவை உட்படுகிறது என்று அறிவிப்பதாகும். ஒரு சட்டப் பதத்தின் வரையறையானது முதலில் அச்சட்டப் பதத்தின் பொருள் என்னவென்பதைக் கூறுகிறது; பிறகு அப்பொருளில் எவையெல்லாம் உள்ளடங்குகிறது, என்பதைப் பற்றிக் குறிப்பிடுகிறது. சுருங்கக்கூறின், "பொருள்படுதல்" என்பது சொற்களின் விளக்கத்தைக் கூறுவதாகும். 'உட்படுதல்' என்பது அப்பொருளின் விரிவாக்கம் ஆகும். அதாவது, எவையெவை அப்பொருளில் அடங்குகின்றன என்பதைக் கூறுவதாகும். எனவே, ஒரு சட்டப் பிரிவிற்கு பொருள் விளக்கமளிக்கும் பொழுது, மேற்படி சொற்களானது ஒரு உதவும் கூறாகச் செயல்படுகிறது.

(10) விதிவிலக்குகள் (Exceptions) :

"பின்வரும் விதிவிலக்குகளுக்கு உட்பட்டு ..." என சில சட்டப்பிரிவுகள் ஆரம்பிப்பதுண்டு. அச்சமயத்தில் அவ்விதிவிலக்குகளை படித்தறிந்த பின்னரே மூலப் பிரிவிற்கு பொருள் விளக்கம் கூற வேண்டும்.

(11) நிபந்தனைகள் (அல்லது) வரம்புரை வாசகம் (Proviso) :

ஒரு சட்டப் பிரிவில் ஒரு விஷயம் குறித்த சட்ட வகைமுறைகள் கூறப் பட்டிருக்கும். ஆனால் அவ்வகைமுறைகள் செயல்படுவதற்கோ, அல்லது சம்பந்தப் பட்ட விஷயத்தின் மீது ஆதிக்கம் செலுத்துவதற்கோ அல்லது இன்னபிற காரணங் களுக்காகவோ, அச்சட்டப் பிரிவின் அடுத்த பத்தியில் சில விதிகள் கூறப் பட்டிருக்கலாம். அவ்விதிகள்தாம் 'நிபந்தனைகள்' எனப்படுகின்றன. அந்நிபந்தனை களுக்குட்பட்டுதான் அல்லது அந்நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்பட்டால்தான், அச்சட்டப் பிரிவு செயலாக்கத்திற்கு வரும். எனவே, பொருள் விளக்கமளிக்கும் பொழுது, அப்படிப்பட்ட நிபந்தனைக் கூறு (Proviso Clause) ஏதேனும் உள்ளதா, அது பூர்த்தியாகி உள்ளதா என்பதைக் கண்டுணர்ந்துதான், தீர்ப்பு வழங்க வேண்டும். எனவே, "நிபந்தனை" பகுதி, ஒரு உள்ளிடைக் கருவி ஆகும்.

உதாரணமாக, ஒரு சட்டப் பிரிவு "மோட்டார் வாகனங்களுக்கு சாலை வரி ரூ. 1000/– என்று குறிப்பிடுகிறது, என வைத்துக் கொள்வோம். அதன் கீழ் "டீசலில் இயங்கும் வாகனங்களுக்கு மட்டுமே மேற்படி பிரிவு பொருந்தும்" என்று மற்றொரு கூறு இருந்தால், அது நிபந்தனைக் கூறு எனப்படுகிறது. எனவே, இந்

நிபந்தனையின்படி, "டீசலில் இயங்கும் வாகனங்களுக்கு சாலை வரி ரூ. 1000/–" எனப் பொருள் கொள்ள வேண்டும்.

இதற்கு சட்டத்தில் கண்கூடான ஒரு எடுத்துக்காட்டை கூற வேண்டுமானால், இந்திய தண்டனைச் சட்டத்தின் கீழ் 300–வது பிரிவின்படியிலான கொலைக் குற்றத்தையும் (murder) 299–வது பிரிவின்படியிலான மரணம் விளைவிக்கும் குற்றத்தையும் (culpable homicide) குறிப்பிடலாம். இந்த 299–வது பிரிவு, மரணம் விளைவிக்கும் குற்றமானது, எப்பொழுது கொலைக் குற்றமாகிறது (பிரிவு 300–ன்படி) என்றால், அதற்கு பின்வரும் நிபந்தனைகள் பூர்த்தியாகியிருக்க வேண்டும், என்று கூறுகிறது. அந்நிபந்தனைகள் நிறைவு செய்யப்படவில்லையானால். அது மரணம் விளைவிக்கும் குற்றமே ஆகும், என்று பொருள்படும்.

(12) அட்டவணைகள் (Schedules) :

ஒரு சட்டத்தின் இடையில் விரிவாக குறிப்பிட முடியாத விபரங்கள், அச்சட்டத்தின் இறுதியில் ஒரு அட்டவணையின் கீழ் தொகுக்கப்பட்டு கொடுக்கப் பட்டிருக்கும். அக்குறிப்பிட்ட சட்டத்திற்கு பொருள் விளக்கம் காணும் பொழுது, இந்த அட்டவணைகள் மிகவும் உதவி புரிகின்றன. உதாரணமாக, இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் இறுதியில் பல அட்டவணைகள் கொடுக்கப்பட்டுள்ளன. அதுபோல், எக்குற்றத்தை ஜாமீனில் விடலாம் மற்றும் விடக் கூடாது என்ற விளக்கத்திற்கு, குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் இறுதியில் அட்டவணை கொடுக்கப்பட்டுள்ளது. இதனைக் கொண்டு, ஒரு குற்றம், ஜாமீனில் விடத்தக்கதாக என்பதை அறிந்து பொருள் தரலாம்.

முடிவுரை :

சட்டப் பொருள் விளக்கமளித்தல் என்பது, **"நெருப்பாற்றின் குறுக்கே மயிர்ப்பாலம் கட்டி நடப்பது"** போன்றதாகும். நெருப்பு அதிகமானால் மயிர்ப்பாலம் கருகி விடும். எடை அதிகமானால் மயிர்ப்பாலம் தாங்காது; நெருப்பில் விழ வேண்டியது தான். சட்டப் பிரிவின் மொழி நடை சரியாக இருந்துவிட்டால் கவலையில்லை. ஆனால் குழப்பங்கள் என வந்துவிட்டால், பொருள் விளக்கமளிக்க வேண்டிய சூழ்நிலை ஏற்படுகிறது. அதற்கென பல விதிகள் உண்டு. அவற்றை நாம் ஏற்கனவே கண்டுள்ளோம். எனினும் அப்பொருள் விளக்கமும் தவறாகி விடக் கூடாது என்பதற்காக, சட்டத்தினுள்ளேயே இருக்கும் மேற்கண்ட உட்பண்பு உதவும் கூறுகளை அல்லது காரணிகளை பயன்படுத்த நீதிமன்றங்களுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது, எனில் அது மிகையாகா.

47. Punctuation Marks - Write short notes. (நிறுத்தற் குறியீடுகள் – சிறு குறிப்பு எழுதுக.)

(அல்லது)

Explanation and Exceptions - Write short notes. (விளக்கங்களும் விதிவிலக்குகளும் – சிறு குறிப்பு எழுதுக.)

(அல்லது)

Long title - Write short notes. (நீண்ட தலைப்பு – சிறு குறிப்பு எழுதுக.)

(அல்லது)

Marginal notes - Write short notes. (ஓரக் குறிப்பு – சிறு குறிப்பு எழுதுக.)

(முந்தைய வினாவின் விடையில் காண்க.)

48. Definition clause - Write short notes. (வரையறை பிரிவு – சிறு குறிப்பு எழுதுக.)

(அல்லது)

Write Short notes on "Interpretation Clause". ("சட்டப் பொருள் காணுதல் பகுதி" – சிறு குறிப்பு எழுதுக.)

(அல்லது)

Point out the arrangement of a defintion clause in a statute. What is the importance of a defintion clause? Briefly explain the different kinds of definitions. (செய் சட்டத்தில் வரையறை பிரிவின் அமைப்பினை விளக்குக. அதன் முக்கியத்துவம் என்ன? அதன் பல்வேறு வகைகளை சுருக்கமாக விளக்குக.)

வரையறைக் கூறு பகுதி அல்லது பொருள் விளக்கப் பகுதி (Definition Clause or Interpretation Clause):

சென்ற வினாவின் விடையிலேயே (8–ஆம் எண் கொண்ட தலைப்பின் கீழ்) நாம் வரையறைப் பகுதி குறித்தும், சட்டப் பொருள் விளக்கத்தில் அதன் முக்கியத்துவம் குறித்தும் நாம் விரிவாகக் கண்டோம். இருப்பினும் அதை இங்கு மற்றொரு முறை சுருக்கமாகக் காண்போம். ஒரு சட்டத்தின் பல்வேறு பிரிவுகளில் கொடுக்கப்பட்டிருக்கும் பல்வேறு சொற்களுக்கு அப்பிரிவுகளிலேயே வரையறை கூறி விளக்க முடியாது. எனவே அச்சொற்களுக்குண்டான வரையறையானது, அச்சட்டத்தின் ஆரம்பத்திலேயே கொடுக்கப்பட்டிருக்கும். இதுவே அச்சட்டத்தின் வரையறைப் பகுதி (Definition clause) எனப்படுகிறது. இது சில நேர்வுகளில் பொருள் விளக்கப்பகுதி (Interpretation clause) என்றும் அழைக்கப்படுகிறது.

வரையறைப் பகுதியின் அமைப்பு (Arrangement):

இத்தகு வரையறைகள் பெரும்பாலும் ஒரு சட்டத்தின் 2–வது அல்லது 3–வது பிரிவின் கீழ் கொடுக்கப்பட்டிருக்கும். எடுத்துக்காட்டாக 1872–ஆம்

ஆண்டின் இந்திய சாட்சிய சட்டத்தின் 3–வது பிரிவின் கீழ் 'பொருண்மை' (Fact), 'தீர்வுதரு பொருண்மை' (Fact in issue), 'தீர்வுதவு பொருண்மை' (Relevant Fact), 'மெய்ப்பிக்கப்பட்டது' (Proved), 'பொய்ப்பிக்கப்பட்டது' (Disproved), 'மெய்ப்பிக்கப்படவில்லை' (Not proved), போன்று பல சொற்களுக்கு வரையறை தரப்பட்டுள்ளது. இதனால் இது வரையறைப் பகுதி ஆகிறது.

அதுபோல், மற்ற சட்டங்களில் கூறப்பட்டுள்ள விளக்கங்களை கருத்தில் கொள்ளும்படி ஒரு சட்டத்தில் கூறப்பட்டிருப்பின், அது 'பொருள் விளக்கப் பகுதி' எனப்படுகிறது. எடுத்துக்காட்டாக, இந்திய அரசியலமைப்பின் 366(1)–வது சரத்து, 'வேளாண் வருமானம்' (Agricultural income) பற்றி வரையறுக்கும் பொழுது, 'இந்திய வருமான வரி தொடர்பாக இயற்றப்பட்டுள்ள சட்டங்களின் நோக்கத்திற்காக வரையறுக்கப்பட்டுள்ளவாறு அமைந்த வேளாண் வருமானம்' என்று குறிப்பிடுகிறது. எனவே இங்கு வேளாண் வருமானம் குறித்த விளக்கத்தை அறிய, நாம் இந்திய வருமான வரிச் சட்டங்களில் காண வேண்டியுள்ளது.

வரையறையின் பல்வேறு வகைகள் (Kinds of Definition):

வரையறைகள் பின்வருமாறு அய்ந்து வகைப்படும். அவை,

(1) வரம்புடைய வரையறை (Restrictive definition): ஒரு சொல் அதன் இயல்பான பொருளில் மட்டும் வரையறுக்கப்பட்டிருப்பின், அது வரம்புடைய வரையறை எனப்படுகிறது.

(2) விரிவான வரையறை (Extensive definition): ஒரு சொல்லின் வரையறையில் இன்னதெல்லாம் உள்ளடங்கியுள்ளது என்று கூறும் வகையில் அச் சொல்லிற்கு வரையறை அளிக்கப்பட்டிருப்பின், அது விரிவான வரையறை எனப்படுகிறது.

(3) இருபொருள் தரக்கூடிய வரையறை (Ambiguous definition): ஒரு சொல்லுக்கு அளிக்கப்பட்டுள்ள வரையறையின் மொழிநடையானது, தெளிவற்றதாக இருக்கலாம். இதனால், சட்டமன்றம் கருதியிருந்த பொருளை அச் சொல்லுக்கு அளிக்க, அதற்கு பொருள் விளக்கம் காண வேண்டிய சூழல் ஏற்படலாம். அப்படிப்பட்ட வரையறைகள், இரு பொருள் தரக் கூடிய வரையறை எனப்படுகிறது.

எடுத்துக்காட்டாக, 1947–ஆம் ஆண்டின் தொழிற் தகராறுகள் சட்டத்தின் பிரிவு 2(oo)–ல் 'ஆட்குறைப்பு' (retrenchment) எனும் பதத்திற்கு வரையறை தரப்பட்டுள்ளது. ஆனால் அவ்வரையறையின் மொழிநடை இரு பொருள் தரக் கூடியதாக இருந்த காரணத்தால், உச்ச நீதிமன்றம் பல்வேறு பொருள் விளக்கங்களை அளிக்க நேர்ந்தது. அதன்படி, **L.Robert De Souza v. Executive Engineer, Sothern Railway** எனும் வழக்கில், தொழிலாளி

ஒருவரை தண்டிக்கும் விதத்தில் அவரை பணி விடுவிப்பு செய்தலும், 'ஆட்குறைப்பே' என்று கூறப்பட்டது. மற்றொரு வழக்கான **State Bank of India v. Workmen of State Bank of India** என்பதில், பணித் துறப்பின் (resignation) காரணமாக விருப்ப ஓய்வு அளித்தல் 'ஆட்குறைப்பாகாது' எனப்பட்டது.

(4) குழப்பமற்ற வரையறை (Unambiguous definition): ஒரு வரையறையில் பயன்படுத்தப்பட்டுள்ள வார்த்தைகள், மொழிநடை ஆகியவை தெளிவாகவும், இரு பொருள் ஏதுமில்லாமலும் இருப்பின், அவ்வரையறை குழப்பமற்ற வரையறை எனப்படுகிறது. எனவே இதற்கு பொருள் விளக்கம் அளிக்க வேண்டிய தேவை ஏதுமில்லை.

(5) சூழலுக்கு முரண்பட்ட வரையறை (Contrary context definition): சில சமயங்களில் ஒரு சட்டத்தின் வகைமுறை விளக்கும் சூழல், வரையறைப் பகுதியில் உள்ள சொற்களின் பொருளுக்கு முரண்பட்டு நிற்கலாம். எனவே அவ்வகைமுறையில் பயன்படுத்தப்பட்டுள்ள சொற்களுக்கு, வரையறைப் பகுதியில் கொடுக்கப்பட்டுள்ள விளக்கத்திலிருந்து மாறுபட்ட ஒரு பொருளைக் கொடுக்க வேண்டியிருக்கும். இதனால், இத்தகு முரண்பாட்டை களையும் பொருட்டு, வரையறைப் பகுதியில் அத்தகு சொற்களுக்காக அளிக்கப்பட்டுள்ள வரையறையில், 'சூழல் வேறு விதத்தில் தேவைப்பட்டாலொழிய' (unless the context otherwise requires) என்று வாசகம் காணப்படும். அதாவது வேறு விதமான சூழல் ஏதும் நிலவாத வரையில், அவ்வரையறையே அச்சொல்லுக்குப் பொருந்தும். மாறுபட்ட சூழல் ஏதும் இருப்பின், அச்சூழலுக்குண்டான வரையறையே பொருந்தும் என்பதை சுட்டிக்காட்டும் வண்ணம் இத்தகு வரையறைகள் அமைக்கப்படுகின்றன.

49. Drafting definition of terms in a statute - Write Short notes. (ஒரு செய் சட்டத்திலுள்ள சொற்களை வரையறை செய்தல் – சிறு குறிப்பு எழுதுக.)

(அல்லது)

Drafting definitions in a statute - Write Short notes. (செய் சட்டத்திலுள்ள வரையறுக்கும் சொற்களை வரைதல் – சிறு குறிப்பு எழுதுக.)

முன்னுரை:

ஒரு சட்டத்தின் தொடக்கத்தில் கொடுக்கப்பட்டிருக்கும் 'வரையறைப் பகுதி' (Definition clause) என்பது, அச்சட்டத்தில் வரும் சொற்களுக்கு விளக்கம் காண உதவும் ஒரு முக்கியமான பகுதியாகும். அதாவது அச்சட்டத்தில் வரும் குறித்த வகையிலான சொற்கள் (specific terms) இரு பொருள் தரக் கூடியதாக அல்லது குழப்பமான பொருளைத் தரக் கூடியதாக இருப்பின், அச்சொற்களுக்கு வரையறைப் பகுதியில் என்ன வரையறை கொடுக்கப்பட்டுள்ளது

என்பதைக் கவனித்து, அதனை அச்சொற்களுக்கு பொருத்தி விளக்கம் காண வேண்டும். எனவே வரையறைப் பகுதியில் வரும் சொற்களுக்கான வரையறையே இருபொருள் தரக் கூடியதாக அல்லது குழப்பமானதாக இருத்தல் கூடாது. இதன் பொருட்டு அப்பகுதியில் வரும் சொற்களுக்கான வரையறையை வரையும் பொழுது, பின்வரும் விஷயங்களை சட்டம் வரைபவர் ஒருவர் தனது கவனத்தில் மிக முக்கியமாகக் கொள்ள வேண்டும்.

வரையறுக்கும் சொற்களை வரையறுப்பதற்கான நெறிகள்:

1. வரையறை சுத்தமாகவும், தெளிவாகவும் மற்றும் சுருக்கமாகவும் இருக்க வேண்டும்.

2. வரையறை புரிந்து கொள்ள இயலாதவாறு குழப்பமாக இருக்கக் கூடாது.

3. சட்டத்தில் பயன்படுத்தப்படாத சொற்களுக்கு வரையறை தரக் கூடாது.

4. பொதுச்சொல் விளக்கச் சட்டத்தின் (General Clauses Act) பொருளுடன் வரையறை மாறுபட்டு இருப்பின், அவ்வாறு மாறுபட்டு இருப்பதை வெளிப்படையாகத் தெரிவித்துவிட வேண்டும்.

5. ஒரு சொல் அல்லது ஒரு வாக்கியமானது ஒரு பொருள் தரும் விதத்தில் வரையறை தரப்பட்டிருப்பின், அச்சட்டம் முழுவதும் அச்சொல் அதே பொருளுடன் பயன்படுத்தப்பட்டிருக்க வேண்டும். ஓரிடத்தில் ஒரு பொருளும், வேறொரு இடத்தில் வேறொரு பொருளையும் ஒரே சொல் தருதல் கூடாது.

6. வரையறை தரும் சட்டக்கூறு பெரும்பாலும் 'என்பதன் பொருள்' (Means) அல்லது 'உள்ளடக்குகிறது' (includes) என்பதைக் கொண்டிருக்கும். 'என்பதன் பொருள்' என்பது ஒன்றிற்கு விளக்கமளிப்பதாக உள்ளது. 'உள்ளடக்குகிறது' என்பது எவையெவற்றை உள்ளடக்கும் என்று தெரிவிக்கிறது.

7. ஒரு சொல்லானது எதை சாதாரணமாக உள்ளடக்கக் கூடாதோ, அதை உள்ளடக்கும் விதத்தில் வரையறை தரக்கூடிய வகையில் இருக்கக் கூடாது.

உதாரணமாக, 'குதிரை' என்பது 'பசு'வையும் உள்ளடக்கும் (Horse includes cow) என்று இருத்தல் கூடாது.

8. முற்றிலும் முரணான ஒரு பொருளைத் தரும் சொல் ஒன்றை உள்ளடக்குவதாக, ஒரு சொல்லிற்கு வரையறை தரக்கூடாது. உதாரணமாக "நிலம்" என்பது "கப்பலையும்" உள்ளடக்கும் என்று இருக்கக் கூடாது. ('Land' includes 'ship').

9. வரையறையில் "மற்றும்" (and) "அல்லது" (or) என்ற சொல் மாறுபட்ட பொருளுடன் உபயோகப்படுத்தக் கூடாது. இரண்டு விஷயங்களை பிரிக்கும் பொழுது 'அல்லது' (or) என்ற சொல்லை உபயோகிப்பது, சாலச் சிறந்தது.

10. ஒரே அர்த்தமுள்ள இரண்டு சொற்களையும் சேர்த்து எழுதுவது அர்த்தமற்றது. உதாரணமாக, null and void-அய்க் குறிப்பிடலாம், ஏனெனில், null என்பதின் பொருள் 'இல்லாநிலையது' என்பதாகும். அதுபோல் 'void' என்பதின் பொருளும் 'இல்லா நிலையது' என்பதேயாகும். எனவே இது தவிர்க்கப்பட வேண்டும்.

-o0o-

இதுவரை . . .

இன்று நாம் அனைவரும் பெரும்பாலும் மோட்டார் வாகனங்களை பயன்படுத்துகிறோம். அவற்றில் டி.வி.எஸ் 50 முதல் சமீபத்திய புது இரகக் கார்கள் வரை அடங்கும். அவற்றை உபயோகிக்கும்பொழுது ஏற்படும் சிறுசிறு பழுதுகளை சரி செய்வதற்காக, அவ்வாகனத்திற்குள்ளாகவே அடங்கக்கூடிய சிறிய கருவிகள் அடங்கிய பெட்டி அல்லது பை (tool box) கொடுக்கப் படுவது வழக்கம். பெரிய பழுதுகள் ஏற்படும் பொழுது அவற்றை அதற்குரிய பெரிய கருவிகளைக் கொண்டு, அவ்வாகனங்களை பழுது பார்ப்பதற்காக வெளியில் இயங்கும் அவற்றிற்குரிய பட்டறையில்தான் சரி செய்ய முடியும்.

இச்சூழலை, நாம் இதுகாறும் கண்ட **மூன்றாவது அத்தியாயத்தின் படியிலான**, உள்ளிடைக் கருவிகள் மற்றும் வெளியிடைக் கருவிகளுக்கு இணையாகப் பொருத்திக் கூறலாம்.

நாம், நமது வாகனத்தில் ஏற்படும் **சிறு பழுதை,** அவ்வாகனம் வாங்கும் பொழுது அவ்வாகனத்தின் ஒரு பகுதியாக அளிக்கப்படும் சிறிய கருவிகள் அடங்கிய பெட்டி அல்லது பையில் உள்ள அக்கருவிகளைக் கொண்டு எவ்வாறு சரிசெய்து கொள்கிறோமோ, அவ்வாறே சட்டத்தில் உள்ள பழுதைக் களைவதற்காக, அச்சட்டத்திற்குள்ளாகவே இருக்கக்கூடிய தலைப்பு, வரையறை பகுதி, நிறுத்தற் குறிகள், விளக்கக் கூறுகள், விதிவிலக்குகள், நிபந்தனைக் கூறுகள் ஆகிய உள்ளிடைக் கருவிகள் பயன்படுத்தப்பட்டு பொருள் விளக்கம் அளிக்கப்படுகிறது.

ஆனால் அதே சமயத்தில், வாகனத்தில் **பெரும் பழுதுகள்** ஏற்படும் பொழுது, நாம் எவ்வாறு அவ்வாகனத்திற்குரிய பட்டறைக்கு வாகனத்தைக் கொண்டு சென்று அதற்குரிய பெரிய கருவிகளைக் கொண்டு, அப்பழுதை நீக்கிக் கொள்கிறோமோ, அவ்வாறே

பழுதடைந்த சட்டத்திற்கு பொருள் விளக்கம் அளிக்கும் பொழுது, அதன் உள்ளிடைக் கருவிகள் பயனாகாத சமயத்தில் சட்டத்தின் காரணங்கள் மற்றும் நோக்கங்கள் குறித்த அறிக்கை, பாராளுமன்ற விவாதங்கள் மற்றும் உரைகள், சரித்திரப் பின்னணி, வெளிநாட்டுத் தீர்ப்புகள், அகராதிகள் ஆகிய வெளியிடைக் கருவிகளின் துணையால் அச்சட்டத்திற்கு தக்க பொருள் விளக்கம் அளிக்கப் படுகிறது.

எவ்வாறு வாகனத்தில் ஏற்பட்ட பழுதின் தன்மையைப் பொறுத்து அதனை சரி செய்வதற்குண்டான கருவிகளும், சரி செய்யப்படும் இடமும் மாறுபடுகின்றதோ, அதுபோலவே சட்டத்தில் அல்லது சட்டப் பிரிவில் ஏற்பட்டுள்ள குழப்பம் மற்றும் சிக்கல்களின் தன்மையைப் பொறுத்து, சட்டமன்றத்தின் கருத்தைக் கண்டறிந்து சரியான பொருள் விளக்கமளிக்க, அதற்குண்டான கருவிகளும் மாறுபடுகின்றது.

மேற்படி அத்தியாயம் தேர்விற்கு மிக முக்கியமான பகுதி. நிச்சயம் ஒரு நெடுவினாவை எதிர்ப்பார்க்கலாம். வழக்குகளுடன் விளக்கமாக எழுதினால், நிறைவான மதிப்பெண்கள் கிட்டும். எனவே கவனமாகப் படிக்கவும்.

இனி அடுத்த அத்தியாயத்திற்குச் செல்வோமா ? . . .

5

சட்டத்தின் நோக்கம் மற்றும் பயன்பாடு குறித்து பொருளமைதி காணல் [Construction with reference to the object and purpose of the Statute]

(அ) பயன்மிகு பொருள் கொள் முறை (அல்லது) அனுகூலமான பொருள் விளக்கம் [Beneficial Construction (or) Beneficial Interpretation]

50. When beneficial construction of a statute is permissible under the rules of interpretation? Cite any decided case in support of your answer. (பொருள் விளக்க விதிகளின் கீழ் ஒரு சட்டத்திற்கு எப்பொழுது பயன்மிகு பொருள் கொள்முறை அனுமதிக்கத்தக்கது ? உமது விடைக்கு ஆதாரமாக முடிவான வழக்கு ஏதேனும் குறிப்பிடுக.)

(அல்லது)

Explain the beneficial construction of a statute, giving examples. (சட்டத்தை அனுகூலமாகப் பொருள் கொள்ளல் என்பதனை எடுத்துக் காட்டுகள் தந்து விளக்குக.)

(அல்லது)

What is meant by Beneficial construction of statute? When it can be resorted to? What are the limitations? (அனுகூலமான

பொருள் விளக்கம் என்றால் என்ன? எப்பொழுது அதை உபயோகிக்கலாம்? அது குறித்தான கட்டுப்பாடுகள் யாவை?)

(அல்லது)

Elucidate the statement 'Beneficial construction is a tendency rather than a rule'. ("பயன்மிகு பொருள் கொள்முறை, ஒரு விதி என்பதை விட ஒரு போக்கு எனலாம்", என்ற உரையை விளக்குக.)

(அல்லது)

Beneficial Construction - Write short notes. (பயன்மிகு பொருள் கொள்முறை – சிறு குறிப்பு எழுதுக.)

(அல்லது)

Beneficial interpretation - Write short notes. (அனுகூலமான பொருள் விளக்கம் – சிறு குறிப்பு எழுதுக.)

முன்னுரை :

சட்டப் பொருள் விளக்கம் அளிக்கும் பொழுது, அச்சட்டத்தின் மொழி நடையில் உள்ள இயற்கையான பொருளிலிருந்து சாதாரணமாக விட்டு விடப்பட்ட விஷயங்களையும் சேர்த்துக் கொள்ளும் அளவிற்கு வார்த்தைகளை இழுத்து, நீதிமன்றங்கள் பொருள் கொள்ளக்கூடாது, என்பது பொது விதி. இருப்பினும்; வார்த்தைகளின் சாதாரண பொருளானது, சட்டமன்றம் எண்ணிய கருத்திற்கு வடிவம் கொடுக்காத பொழுது, எப்பொருள் விளக்கம் சட்டமன்றத்தின் கருத்தை நிலைநிறுத்தத் தக்க வகையில் உள்ளதோ, அதற்கொப்ப அவ்வார்த்தைகளின் பொருளை எடுத்துரைக்க தடையேதுமில்லை. அதாவது சட்டமன்றத்தின் கருத்தை உணர்த்துவதற்கு பயனாகும் பொருள் விளக்கத்தை எடுத்துக் கொண்டு, பிறவற்றை விட்டுவிடலாம். இதையே, **பயன்மிகு பொருள் கொள்முறை** எனலாம்.

சுருங்கக்கூறின், சட்டப்பொருள் விளக்கமளிப்பதில் உள்ள மூவகை விதிகளில் 'இலக்கண மரபு குன்றாமல் பொருள் விளக்கமளிக்க வேண்டும்' (Grammatical or Literal Rule) என்ற விதி கூறும் கட்டுப்பாட்டை தளர்த்தும் வண்ணம் உள்ள விதியே "பயன்மிகு பொருள் கொள்முறை" எனும் விதியாகும், என்று அறிஞர் **மேக்ஸ்வெல்** கூறுகிறார். எனவே, இதனை **'கேடு அகற்றும் விதியின்' (Mischief Rule)** ஒரு பிரதிபலிப்பு என்றே கூறலாம்.

எப்பொழுது 'பயன்மிகு பொருள் கொள் முறையின்' படி விளக்கம் தரப்படுகிறது ?

இயற்றப்பட்ட சட்டம் ஒன்றிற்கு இரண்டு விதங்களில் பொருள் விளக்கம்

கொடுக்கலாம் என்று வைத்துக் கொள்வோம். அதில் ஒரு பொருள் விளக்கம் அச்சட்டத்தின் நோக்கத்தை நிலைநிறுத்துவதாக உள்ளது. இங்கு சட்டத்தின் நோக்கத்தை நிலைநிறுத்தும் அந்த மற்றொரு பொருள் விளக்கத்தையே தர வேண்டும். இதுவே பயன்மிகு பொருள்கொள்முறை எனப்படுகிறது.

உதாரணமாக, **Smith v. Hughes**[1] வழக்கினைக் குறிப்பிடலாம். இவ்வழக்கில் தெருவிலிருந்து விபசாரத்திற்கு அழைப்பது குற்றம் என ஒரு சட்டம் குறிப்பிடுகிறது. இங்கு வீட்டு ஜன்னலிலிருந்தோ அல்லது பால்கனியிலிருந்தோ விபசாரத்திற்கு அழைத்தாலும், குற்றமாகும் என சட்டத்தின் நோக்கத்தை நிலை நிறுத்தும் பொருள் விளக்கம் எடுத்துக் கொள்ளப்பட்டது. இங்கு சட்டத்தின் நோக்கம் விபசாரத்தை தடுக்க வேண்டும் என்பதாகும். ஆகவே விபசாரத்திற்கு எங்கிருந்து அழைத்தாலும் அது குற்றமென பொருள் விளக்கம் தரப்பட்டது.

"பயன்மிகு பொருள் கொள்முறையை ஒரு விதி என்பதைவிட ஒரு போக்கு எனலாம்" - விளக்கம் :

அறிஞர் **மேக்ஸ்வெல்** அவர்கள், "பயன்மிகு பொருள் கொள் முறையை ஒரு விதி என்பதை விட ஒரு போக்கு எனலாம்"[2] என்று கூறுகிறார். இது உண்மைதான். அதாவது, அளிக்கும் சட்டப் பொருள் விளக்கத்தின் போக்கு, சட்டமன்றக் கருத்தை நிலைநாட்டும் வண்ணம் உள்ளதா, என்பதை பயன்மிகு பொருள் கொள்முறை எடுத்துக் கூறுகிறது. எனவே, பயன்மிகு பொருள் கொள்முறையை 'விதி' என்னும் ஒரு குறுகிய வட்டத்திற்குள் அடக்காமல், 'போக்கு' (tendency) என்ற பரந்த பொருளில் கூறுவதே சாலச் சிறந்தது.

ஆனால் மேற்கண்ட 'போக்கு' பெரும் போக்காக ஆகிவிடக் கூடாது. அதாவது, எடுத்ததெற்கெல்லாம், பயன்மிகு பொருள் கொள் முறைப்படி பொருள் விளக்கமளித்தல் கூடாது. வேறு விதத்தில் கூறுவதானால், இயற்றப்பட்ட சட்டத்தின் வாசகங்கள், ஒரே ஒரு பொருளை மட்டும் தருவதாக இருந்தால், அங்கு பயன்மிகு பொருள்கொள் முறையே உபயோகிக்கக்கூடாது. சட்டமன்றம் பயன்படுத்தியுள்ள மொழிநடை குழப்பமில்லாமலும், தெளிவாகவும் இருந்தால் அங்கு பயன்மிகு பொருள்கொள் முறை பற்றி பேச்சே எழாது.

ஆனால், இரு பொருள் தரக்கூடிய விதத்தில் அம்மொழி நடை அமைந்திருந்து, அதற்கு இரண்டு பொருள் விளக்கங்கள் சாத்தியமாக இருக்கும் பட்சத்தில், எப்பொருள் விளக்கம், அச்சட்டத்தின் நோக்கத்திற்கு சேர்க்கக்கூடிய விதத்தில் பரந்த பொருளுடன் உள்ளதோ – அதனை எடுத்துக்கொண்டு, எப்பொருள் விளக்கம், அச்சட்டத்தின் நோக்கத்தை வலுவிழக்கச் செய்யும் விதத்தில் குறுகிய பொருளுடன் உள்ளதோ – அதனை நீதிமன்றங்கள் நிராகரித்து

1. 1960 (1) W.L.R. 830
2. 'beneficial construction is a tendency rather than a rule' - Maxwell, p. 92

விட வேண்டும். இதுவே 'பயன்மிகு பொருள் கொள் முறைக்கு' அணி சேர்க்கும் சரியான போக்கு ஆகும்.

வழக்குகள் :

Workmen of Firestone Tyre and Rubber Co. v. The Management[1]

இவ்வழக்கில், உச்சநீதிமன்றம் பின்வருமாறு கூறியது. அதன்படி, 1947-ஆம் ஆண்டின் தொழிற் தகராறுகள் சட்டமானது, தொழிலாளர்களின் நலனுக்கென இயற்றப்பட்டதொரு பயன்தரும் சட்டமாகும் (beneficial piece of legislation). எனவே, இச்சட்டத்தின் பிரிவுகளுக்கு பொருள் விளக்கம் தரும் பொழுது, தொழிலாளர்களின் நலன்களைக் கருத்தில் கொண்டு, அவர்களுக்கு நலம் பயக்கும் விதத்தில் உள்ள பயன்மிகு பொருள் விளக்கத்தை தர வேண்டும்; பிறவற்றை விட்டு விட வேண்டும்.

Sheik Gulfan v. Sant Kumar[2]

மேற்படி வழக்கில், "இரண்டு பொருள் விளக்கங்கள் சாத்தியமானால், அவற்றில் எது சட்டத்தின் பயன்மிகு நோக்கத்தை நிலை நிறுத்துவதற்கு உதவுகிறதோ அதையே நீதிமன்றங்கள் முன்னிறுத்த வேண்டும்" என **தலைமை நீதியரசர் கஜேந்திர காட்கர்** கூறினார்.

Baldev Sahai v. R.C. Bhasin[3]

இது பயன்மிகு பொருள் கொள்முறையை விளக்கக்கூடியதொரு சுவாரஸ்சியமான வழக்காகும். இவ்வழக்கின் பொருண்மைகளின்படி, ஒரு வாடகை தாரர் (tenant), வாடகை வீடு ஒன்றில் வசித்து வந்தார். அவருடன் அவரது பெற்றோர்களும், இரண்டு சகோதரிகளும், ஒரு சகோதரரும் வசித்து வந்தனர். இவ்வாறு இருக்கையில், அவ்வாடகைதாரர் கனடா நாட்டில் நிரந்தரமாக குடியேறும் பொருட்டு, இந்தியாவை விட்டு சென்று விட்டார். அவ்வாறு செல்லும் பொழுது, அவ்வாடகை வீட்டில் தனது தாயாரையும், சகோதரரையும் விட்டு விட்டுச் சென்றார். அவர்கள் அவ்வீட்டிற்குரிய வாடகையை தவறாமல் செலுத்தி வந்தனர். இந்நிலையில் அவ்வீட்டின் உரிமையாளர், சம்பந்தப்பட்ட வாடகைதாரரே அவ்வீட்டில் குடியிருக்காததால், 1958-ஆம் ஆண்டின் தில்லி வாடகைக் கட்டுப்பாட்டுச் சட்டம் (Delhi Rent Control Act, 1958) பிரிவு 14(1)(d) மற்றும் (e) யின் கீழ், அவ்வீட்டில் குடியிருக்கும் மேற்படி வாடகைதாரரின் தாயார் மற்றும் சகோதரரை காலி செய்ய நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தார். அம்மனுவில், மேற்படி வாடகைதாரரின் தாயார் மற்றும் சகோதரரை, அவ்வாடகைதாரரின்

1. A.I.R. 1973 S.C. 1227 at p. 1240
2. A.I.R. 1965 S.C. 1839 at p. 1848
3. A.I.R. 1982 S.C. 1091

குடும்பத்தினராக பாவிக்க இயலாது, என்று குறிப்பிட்டிருந்தார். மேல்முறையீட்டில், இவ்வழக்கை விசாரித்த உச்ச நீதிமன்றமானது, 'குடும்பம்' (family) என்பதற்கு பரந்த பொருள் அளிக்கப்பட வேண்டுமென்றும், 'குடும்பம்' என்ற சொல் 'குடும்பத் தலைவரை' மட்டும் உள்ளடக்காது; அதில், பொது மூதாதையர்களின் வழி வந்தவர்களும் அல்லது அக்குடும்பத் தலைவரின் கீழ் உண்மையில் வசித்து வரும் அனைத்து உறுப்பினர்களும் அடங்குவர் என்றும் கூறியது. உச்ச நீதிமன்றம் மேலும் கூறுகையில் மேற்படி தில்லி வாடகைக் கட்டுப்பாட்டு சட்டமானது, வாடகையில் உள்ளோர்களின் நலனைப் பாதுகாப்பதற்காக இயற்றப்பட்டதொரு சட்டமாகும் என்றும், எனவே, அச்சட்டத்தின் நோக்கத்தை நிலைநிறுத்தும் வகையில் அல்லது மேம்படுத்தும் வகையில், அச்சட்டத்தின் வகைமுறைகளுக்கு சரியான பொருள் விளக்கத்தை தர வேண்டும் என்றும், அப்பொழுது, அச்சட்டத்தில் காணப்படும் விடுபாடுகள் மற்றும் குறைகளைச் சரி செய்ய நீதிமன்றத்திற்கு அதிகாரம் உண்டு என்றும், கூறியது. அதன்படி, 'குடும்பம்' என்ற பதமானது, அக்குடும்பத் தலைவரின் நெருங்கிய உறவினர்களையும் உள்ளடக்கியதாகும், என்று பயன்மிகு பொருள் கொள்முறையைப் பயன்படுத்தி, சரியான பொருள் விளக்கத்தை, உச்ச நீதிமன்றம் பகர்ந்தது.

எப்பொழுது 'பயன்மிகு பொருள் கொள் முறையை' பயன்படுத்த இயலாது ?

நாம் முன்னரே கண்டது போல், இயற்றப்பட்ட சட்டத்தின் வாசகங்கள், ஒரே ஒரு பொருளை மட்டும் தருவதாக இருந்ததாலோ, அல்லது சட்டமன்றம் பயன்படுத்தியுள்ள மொழி நடை குழப்பமில்லாமலும், தெளிவாகவும் இருந்தால், அங்கு பயன்மிகு பொருள் முறையை உபயோகிக்கக் கூடாது. பல வழக்குகளில், உச்ச நீதிமன்றம் பயன்மிகு பொருள் கொள்முறையை பயன்படுத்த மறுத்தும் உள்ளது. அவற்றில் ஒரு வழக்கை பின்வருமாறு காண்போம்.

Ramji v. State of Bihar[1]

இவ்வழக்கில், 1958–ஆம் ஆண்டின் குற்றவாளிகள் நன்னடத்தைக் கண்காணிப்பு விடுதலைச் சட்டத்தின் (The Probation of Offenders Act, 1958) 6–வது பிரிவில் கூறப்பட்டிருக்கும், "21 வயதிற்குள் உள்ள எவரேனும் குற்றம் புரிந்தவராக இருக்கும் பொழுது ...." ('When any person under twenty one years of age is found guilty ...') என்ற சொற்றொடருக்கு பொருள் விளக்கம் அளிக்கும் பொழுது, உச்ச நீதிமன்றம் பின்வருமாறு கூறியது. அதன்படி, வயதை கணக்கிடுவதற்கான சாரமான தேதி (material date) யாதெனில், தண்டனை அளிக்கப்பட்ட தேதியே தவிர, குற்றம் புரியப்பட்ட தேதியன்று, என்று கூறியது. எனவே, மேற்படி சட்டத்தின் பயனை குற்றஞ்சாட்டப்பட்டவர்

1. A.I.R. 1963 S.C. 1088

அடைய வேண்டுமெனில், அவருக்கு எந்தத் தேதியில் தண்டனை விதித்து தீர்ப்பளிக்கப்பட்டதோ, அந்தத் தேதியில் அவர் 21 வயதிற்குள் இருப்பவராக இருத்தல் வேண்டும், என்று உச்ச நீதிமன்றம் தீர்ப்பு கூறியது. அது, பயன்மிகு பொருள் முறையை இங்கு பயன்படுத்த மறுத்து விட்டது. ஏனெனில், மேற்படி 6-வது பிரிவிலேயே '21 வயதிற்குள்' என்பதற்கு தொடர்புடைய தேதியானது, எந்த தேதியில் அவர் குற்றம் புரிந்தவராக தீர்ப்பளிக்கப்பட்டுள்ளாரே அந்தத் தேதி, என்பது தெளிவாகவும் குழப்பமில்லாமலும் கொடுக்கப்பட்டுள்ளது. மேற்படி வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்டவரோ, அவருக்கு தண்டனை வழங்கப்பட்ட தேதியில் 21 வயதுக்கு மேற்பட்டவராக இருந்தார். எனவே, வேறு விதமான பொருள் விளக்கத்திற்கு இங்கு இடமில்லை.

முடிவுரை :

மேற்படி கருத்துரைகளையும், வழக்குகளையும் காணும் பொழுது, தெளிவாக உள்ள மொழி நடைக்கு பயன்மிகு பொருள் முறை தேவையில்லை. குழப்பமான மொழி நடைக்கு விளக்கமளிக்கும் பொழுது, இரண்டு பொருள் விளக்கங்கள் சாத்தியமாக இருப்பின், அவற்றில் சட்டமன்றத்தின் கருத்தை அல்லது சட்டத்தின் நோக்கத்தை மேம்படுத்தும் வண்ணம் உள்ள பயன்தரும் பொருள் விளக்கத்தையே எடுத்துக் கொள்ள வேண்டும். அவ்வாறு அல்லாத பொருள் விளக்கத்தை விட்டு விட வேண்டும். பயன் மிகுதியாகத் தரும் பொருள் விளக்கம், பயனாகும். பயன் குறைவாகத் தருவது அல்லது பயன் தராதது, நமக்கெதற்கு ?

(ஆ)[i] பிடி நழுவல் தவிர் பொருள் கொள் முறை [Construction to Prevent Evasion]

51. Explain the principles that govern the construction of statutes in order to prevent evasion. (சட்டக் கடமை தவிர்ப்புகளை தவிர்க்க சட்டங்களுக்கு பொருள் கொள்ளும் முறையை அளாவி நிற்கும் குறிக்கோள்களை விளக்குக.)

(அல்லது)

Construction to prevent evasion - Write short notes. (பிடி நழுவல் தவிர் பொருள் விளக்க முறை – சிறு குறிப்பு எழுதுக.)

விளக்கம் :

ஒரு செயலை, ஒரு விதத்தில் செய்தால் குற்றம் என சட்டம் கூறுவதாக வைத்துக் கொள்வோம். அதனை சட்டத்தின் நேரடிப் பார்வையில் படாமல் வேறு வழியில் செய்தாலும் குற்றமேயாகும்.

சுருங்கக்கூறின், சட்டத்தினை ஏமாற்றும் அல்லது தவிர்க்கும் நபர்களை தடுக்கும் உண்மையான நோக்கத்தை, இந்த பிடிநழுவல் தவிர் பொருள்கொள் முறையைப் பயன்படுத்தி நிலைநிறுத்த வேண்டியது, நீதிமன்றத்தின் தலையாய பணியாகும்.

Day v. Simpson[1]

இவ்வழக்கில், நாடக அரங்குகள் சட்டத்தின்படி எந்த ஒரு நாடகத்தையும் அனுமதியின்றி (Licence) நடத்துவது குற்றம் ஆகும். இந்த சட்டப்பிரிவை மீறுவதற்காக நடிகர்கள் பார்வையாளர்கள் முன்னால் தோன்றாமல் மேடைக்கு கீழே நடித்து அதைக் கண்ணாடிகள் மூலம் பார்வையாளருக்குத் தெரியும்படி பிரதிபலிக்கச் செய்தார்கள். இங்ஙனம் சட்டத்தின் பிடியிலிருந்து நழுவி சுற்றி வளைத்துச் செய்த செயலும் குற்றமேயாகும் என மேற்படி வழக்கில் தீர்ப்பு கூறப்பட்டது.

எடுத்துக்காட்டு :

அவதூறு செய்ததற்காக மன்னிப்புக் கேட்கும் அறிக்கை ஒன்று செய்தித் தாளில் வெளியிட வேண்டியிருந்த ஒரு சந்தர்ப்பத்தில் அந்த அறிக்கை செய்தித் தாளை மேலோட்டமாக படிக்கும் வாசகர்களின் கண்களுக்கு தட்டுப்படாமல் வெளியிட்டது சட்டப்பிரிவை முழுமையாக கடைப்பிடித்ததாகாது என்று முடிவு கூறப்பட்டது.

பிடியிலிருந்து நழுவுதல் மற்றும் பிடிக்குள்ளேயே வராமல் இருத்தல் - வேறுபாடு :

இந்த இடத்தில் ஒரு பிரச்சனை எழுகிறது. அதாவது சட்டத்தின் பிடியிலிருந்து நழுவ முயலுவது வேறு; சட்டத்தில் எல்லைக்குள்ளேயே வராமல் இருக்க முயலுவது வேறு. முதலில் கூறப்பட்டது, வலைக்குள் சிக்கிய முயல் துவாரம் இட்டு ஓட முயல்வதற்கு ஒப்பாகும். இரண்டாவதாக கூறப்பட்டது, வலையைப் பார்த்ததுமே அதனுள் நுழையாமல் சுற்றிச் செல்லும் முயலைப் போன்றதாகும். ஆகவே சட்டத்தின் பிடிகளுக்கு (எல்லைகளுக்கு) அப்பால் நிற்பது, குற்றமாவதில்லை.

உதாரணமாக, ஒரு வேலையாளை ஒரு வருடகாலம் வரை வேலைக்கு வைத்துக் கொண்டால் அவருக்கு சட்டப்படியான சில உரிமைகள் ஏற்படுகின்றன. ஆனால் அதே வேலையாளை ஒரு வருடத்திற்கு சில தினங்கள் குறைவாக வேலைக்கு அமர்த்திக் கொண்டால் அவருக்கு எவ்வுரிமையும் ஏற்படாது. மேலும் அமர்த்திக் கொள்பவரும் எவ்வித பொறுப்புக்கும் ஆளாகமாட்டார்.

1. 1865

(ஆ)[ii] அதிகார துஷ்பிரயோகம் தவிர் பொருள் கொள் முறை [Construction to Prevent abuse of powers]

52. Discuss the construction to prevent abuse of powers. (அதிகார துஷ்பிரயோகத்தை தவிர்க்கும்படியான பொருள் விளக்கத்தை விவாதி.)

(அல்லது)

"The best law is that which leaves least to the discretion of the Judge" - Examine. ("நீதிபதிக்கு மிக மிகக் குறைவாக தன் விருப்புரிமையை விட்டுவிடும் சட்டமே மிகச் சிறந்த சட்டமாகும்" – ஆராய்க.)

(அல்லது)

What is meant by statutory discretion? Elucidate the statement that "statutory discretion must be truly exercised, and when exercised it must be reasonably"? (சட்டப்படியான தன் விருப்புரிமை என்றால் என்ன ? "சட்டப்படியான தன் விருப்புரிமை உண்மையாக பிரயோகிக்கப்பட வேண்டும் மற்றும் அவ்வாறு பிரயோகிக்கப்படும் பொழுது, அது நியாயமாக இருக்க வேண்டும்" என்ற கூற்றை விளக்குக.)

தன்விருப்புரிமை (Discretion) - விளக்கம் :

'Discretion' என்ற ஆங்கிலச் சொல்லுக்கு, "தன்விருப்புரிமை", 'பொருந்துமாறு அறிதல்', 'உசிதம்' என ஆங்கிலம்– தமிழ் அகராதி[1] கூறுகிறது. சட்டத் தமிழ் அகராதி (ஆங்கிலம்–தமிழ்)[2] 'Discretion' என்ற ஆங்கிலச் சட்டச் சொல்லுக்கு 'தன் விருப்ப முடிவு', 'உளத்தேர்வு' என்று கூறுகிறது. மேலும் அதன் கீழான விளக்கத்தில், "ஒரே வகை விதிகளைப் பின்பற்றுவதற்கு மாறாக, குறித்த சூழ்நிலைக்கு ஏற்ற வகையைத் தெரிந்துணர்தல்" என்று பொருள் கூறுகிறது. இதிலிருந்து 'தன்விருப்புரிமை' என்பது, சூழ்நிலைக்குத் தக்கவாறு (உசிதம் போல்) செயல்படுதல் என்பது தெளிவாகிறது. தற்பொழுது, சட்டப்படியான தன் விருப்புரிமையை பின்வருமாறு காண்போம்.

சட்டப்படியான தன்விருப்புரிமை (Statutory Discretion) - விளக்கம் :

சட்டப்படி அதிகாரம் பெற்றவர்கள், அச்சட்டப்படி செயலாற்ற வேண்டும்;

1. ஆங்கிலம்–தமிழ் அகராதி, முனைவர் ஏ.சிதம்பரநாத செட்டியார், 1965, பக். 304
2. சட்டத் தமிழ் அகராதி (ஆங்கிலம்–தமிழ்), மா.சண்முக சுப்பிரமணியன் மற்றும் புலமை வேங்கடாசலம், தமிழ் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், முதல் பதிப்பு, 1994, பக். 146

பிற விதங்களில் செயலாற்றக் கூடாது, என்பது அடிப்படை விதி. ஆனால், அச்சட்டமே, தன்னால் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளவர்கள், சில குறிப்பிட்ட சூழ்நிலைகளில் சட்டப்படி இல்லாமல், சூழ்நிலைக்கேற்றவாறு தங்களுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தை பிரயோகிக்கலாம் என்று குறிப்பிடுமேயானால், அது அவர்களுக்கு தன்விருப்புரிமை அதிகாரத்தை வழங்கியிருப்பதாகப் பொருளாகும். இதுவே சட்டப்படியான தன்விருப்புரிமை எனப்படுகிறது. ஆனால் அதை எப்பொழுது பிரயோகிக்கலாம் அல்லது பிரயோகிக்கக் கூடாது என்பதற்கு சில வரம்புகள் உள்ளன. விரிவாக வருமாறு.

தன்விருப்புரிமையை பிரயோகித்தல் மீதான வரம்புகள் :

சட்டத்தினால் அதிகாரம் வழங்கப்பட்டிருக்கும் ஒரு நபர் அல்லது அமைப்பு அதை பிரயோகிக்கும்போது எந்தவித பொறுப்பும் இல்லாமல் கண்மூடித்தனமாக நடந்து கொள்ள நீதிமன்றங்கள் அனுமதிப்பதில்லை. அம்மாதிரியான போக்கினை அங்கீகரிக்கும் விதத்தில் சட்டப் பிரிவுகளும் பொருள் கொள்ளப்படுவதில்லை.

ஒரு அதிகாரி "தன்னுரிமைப்படி" (Discretion) செயல்படலாம், என்பது அவருடைய செயல்களைப் பற்றி யாதொரு கேள்வியும் கேட்கக் கூடாது என்பது பொருள் அல்ல. மேலும் அவர் தன் இஷ்டப்படியோ அல்லது தனது மனம் போனபடியோ செயல்படவும் கூடாது. அவர் "தன்னுரிமைப்படி" செயல்படும் பொழுது சுற்றியுள்ள சூழ்நிலைகள், காரண–காரியங்கள் காண்பிக்கின்ற வழியின்படி அவர் நடக்க வேண்டும். கொடுக்கப்பட்ட அதிகாரத்தை மீறி செயல்படக் கூடாது.

தன்விருப்புரிமை அதிகாரத்தை துஷ்பிரயோகமாக (Abuse) பயன்படுத்தக் கூடாது. இவை தவிர அவரது செயல் நல்லெண்ணத்தின் (good faith) அடிப்படையிலும் இருக்க வேண்டும்.

தன்விருப்புரிமையை பிரயோகித்தல் உண்மையாகவும் நியாயமாகவும் இருத்தல் வேண்டும் :

தன்விருப்புரிமையை பிரயோகிக்கும் அதிகாரம் பெற்றவர், எந்நோக்கத் திற்காக அவ்வதிகாரம் கொடுக்கப்பட்டதோ, அந்நோக்கத்தை நிலை நிறுத்தும் பொருட்டு உண்மையாக பிரயோகிக்க வேண்டும்.

மேலும் அப்பிரயோகம் நியாயமாக இருக்க வேண்டும். 'நியாயம்' என்றால் ஒரு செயலின் காரண–காரியத் தொடர்பு என்று பொருளாகும். எனவே, தன்னுரிமை அதிகாரம் காரண காரியத்துடன் இணைந்திருக்க வேண்டும் என்பது ஒரு முக்கியமான விதியாகும். அதாவது தன்னுரிமை என்பது அதிகாரம் உள்ளவர்களின், சொந்த மனநிலையைப் பொருத்ததன்று; அவர்கள் சொந்தக் கருத்தை கூறுவதும் அன்று. காரண காரியங்கள் (Reasoning) மற்றும் நீதி நேர்மை (Equity) ஆகியவற்றின் கோட்பாடுகளுக்கு இணைந்தே முடிவுகள்

கொடுக்கப்பட வேண்டும். அவை சட்டப்பூர்வமாகவும், ஒரு ஒழுங்குமுறையுடனும் இருக்க வேண்டுமேயன்றி நிர்தாட்சண்யமானதாகவும் வெறுமையானதாகவும், தான்தோன்றித்தனமாகவும் இருத்தல் கூடாது.

உதாரணமாக, Roberts v. Hopwood[1] என்ற வழக்கில், நகராட்சி ஊழியரின் ஊதியத்தை நிர்ணயிக்க நகரசபைக்கு முழு அதிகாரம் வழங்கப் பட்டிருந்தது. ஆனால் இந்த அதிகாரம் நகர மக்களின் நலன் காக்கும் பொறுப்பாளர் நிலையிலிருந்து பிரயோகிக்கப்பட வேண்டுமேயன்றித் தாராள தரும சிந்தனையோடு உபயோகிக்கப்படக் கூடாது.

அதுபோல **R. v. Paddington and St. Maryleborne Rent Tribunal**[2] என்ற வழக்கில், தன்விருப்புரிமையை பிரயோகிக்க சட்டப்படி அதிகாரம் பெற்றுள்ள நபர் அல்லது அமைப்பு, எங்கெல்லாம் அத்தன் விருப்புரிமை அதிகாரத்தை பிரயோகிக்க சட்டத்தால் கூறப்பட்டுள்ளதோ அங்கெல்லாம் அதைப் பிரயோகிக்க கடமை படைத்தவர். மாறாக, அவர் அல்லது அந்த அமைப்பு தனக்குத் தானே வகுத்துக் கொண்ட விதிகளின்படி, தன்விருப்புரிமை அதிகாரத்தை பிரயோகிப்பதில் இருந்து தவிர்த்துக் கொள்ளக் கூடாது, என்று கூறப்பட்டது.

நீதிபதிகளுக்கு குறைந்த தன்விருப்புரிமையை வழங்கும் சட்டமே சிறந்த சட்டம் :

மேற்கண்டவாறே, வழக்குகளை தீர்ப்பதற்கு, நீதிபதிகளுக்கும் தன்னுரிமை (தன்விருப்புரிமை) அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. ஒரு சட்டம் மிக மிக குறைந்த தன் விருப்புரிமையை நீதிபதிக்கு வழங்கினால், அது மிகச் சிறந்த சட்டமாக கருதப்படுகின்றது. ஏனெனில் அதற்கு மேற்கண்டவைகளே காரணமாகும். நீதி நேர்மைக் கொள்கைகளை (Equity principles) கடைப்பிடிக்காமல், நீதிபதி தன்விருப்புரிமை அதிகாரத்தைப் பயன்படுத்தி தீர்ப்பு வழங்கினால், அது அநீதிக்குத்தான் வழிவகுக்கும். ஆகவே, நீதிபதிக்கு குறைந்த தன்விருப்புரிமையை அளிப்பதுதான், சாலச் சிறந்தது.

(இ) வரையறு பொருள் கொள் முறை [Restrictive Construction]

53. What are the restrictions as to construction of a statute and what are their consequences? (சட்டத்தை பொருள் கொள்ளுதலுக்கான கட்டுப்பாடுகள் மற்றும் அவைகளின் விளைவுகள் யாவை ?)

1. 1925
2. (1949) 1 K.B. 666

(அல்லது)

Restrictive Construction - Write Short Notes. (வரையறு பொருள் கொள்முறை – சிறு குறிப்பு எழுதுக.)

(அல்லது)

What is meant by the restrictive construction of statute ? In what circumstances a court may resort to restrictive construction? (சட்டத்தின் வரையறு பொருள் கொள்முறை என்றால் என்ன? எச்சூழ்நிலைகளில் ஒரு நீதிமன்றம் வரையறு பொருள் கொள்முறையை நாடலாம்?)

(அல்லது)

Lord Reid has observed - "If the language is capable of more than one interpretation, we ought to discard the more natural meaning if it leads to unreasonable result, and adopt the interpretation which leads to a reasonably practicable result". Discuss the correctness of this statement in the light of latest decisions. (மொழி நடையானது ஒன்றுக்கு மேற்பட்ட பொருள் விளக்கத்தை தரவல்லதானால், நியாயமற்ற விளைவிற்கு அழைத்துச் செல்லும் அதிக இயற்கையான பொருள் விளக்கத்தை நாம் விட்டுவிட வேண்டும் மற்றும் நியாயமான நடைமுறைப்படுத்தக் கூடிய விளைவிற்கு அழைத்துச் செல்லும் பொருள் விளக்கத்தை பின்பற்ற வேண்டும் – லார்டு ரெய்டு. இந்த உரை சரியானதா என்பதை சமீபத்திய வழக்குகளின் துணை கொண்டு விவாதிக்க.)

பொது விதி :

இயற்றப்பட்ட சட்டம் ஒன்றின் வார்த்தைகள் தெளிவாகவும் குழப்பமில்லாத தாகவும் இருந்தால் நீதிமன்றங்கள் அதற்கு அப்படியே பொருள் விளக்கம் தர வேண்டும். அதாவது அதில் எவ்வித மாற்றங்களும் செய்தல் கூடாது. அப்படி பொருள் விளக்கம் தருவதினால், ஏற்படும் விளைவுகளைப்பற்றி நீதிமன்றம் கருத்தில் கொள்ளக்கூடாது. மேற்கூறப்பட்டது பொருள் விளக்கம் பற்றிய பொது விதியாகும்.

வரையறு பொருள்கொள்முறை – விளக்கம் :

மேற்கூறப்பட்ட பொது விதிக்கு இணையாக மற்றுமொரு விதி உள்ளது. அது வரையறு பொருள் கொள்முறையாகும். ஒரு சட்டப் பிரிவிற்கு மேற்கண்ட பொது விதியின்படி பொருள் விளக்கம் தந்தால் அது அச்சட்டப்பிரிவின் நோக்கத்தையே அழித்துவிடுவதாக இருப்பின், அங்கு வரையறு பொருள் கொள்முறையினைப் பயன்படுத்தி விளக்கமளிக்கலாம். அதாவது ஒரு சட்டப் பிரிவிற்கு பரந்த பொருள் கொடுத்தோமானால், அது விரும்பத்தகாத மற்றும் அடிமுட்டாள்தனமான விளைவுகளுக்கு அழைத்துச் செல்லலாம். ஆகவே

அச்சமயத்தில் சட்டத்தின் நோக்கத்தினை சரியாக நிலைநிறுத்த வரையறு பொருள் கொள்முறையினைப் பயன்படுத்தி, தக்க விளக்கமளிக்கலாம்.

வரையறு பொருள் கொள்முறைக்கான விதிகள் :

1. பொருள் விளக்கம் தரும்பொ7ழுது அதனால் ஏற்படும் விளைவுகளைப் பற்றி எப்பொழுது நீதிமன்றங்கள் கருத்தில் கொள்ள வேண்டும் ? (When the court should consider the consequences ?) :

ஒரு தெளிவான சட்டப்பிரிவு, ஒரே ஒரு பொருளை தருவதாக இருந்தால், முன்கண்ட பொது விதியின்படி அதற்கு அப்படியே பொருள் தர வேண்டும். அதனால் விரும்பத்தகாத விளைவுகள் ஏதேனும் ஏற்பட்டாலும் பரவாயில்லை. மேலும் அதனைப்பற்றி கருத்தில் கொள்ள வேண்டிய அவசியமுமில்லை.

ஆனால் ஒரு சட்டப்பிரிவு ஒன்றுக்கு மேற்பட்ட பொருளைத் தருவதாக இருந்தால், அவை ஒவ்வொன்றின் விளைவுகளையும் தனித்தனியே கவனித்தல் அவசியம். அவற்றில் ஒன்று, நமக்கு சரியான திசையை சுட்டிக்காட்டும் வழிகாட்டியாக விளங்கும் என்பதில் எவ்வித அய்யமுமில்லை. இங்கு மேற்கண்ட பொதுவான பொருள் விளக்க விதி பயனாகாது. வரையறு பொருள் கொள்முறை ஒன்றுதான் இங்கு உபயோகமாகும். சுருங்கக் கூறின் இயற்கையான இலக்கண பொருள் கொள்விதி (Literal rule) இங்கு எடுபடாது.

எனவே, **நீதிப்பெருமகனார் ரெய்டு (Lord Reid)** கூறியபடி, சட்டத்தின் மொழி நடையானது ஒன்றுக்கு மேற்பட்ட பொருள் விளக்கத்தை தரவல்லதானால், அவற்றில் நியாயமற்ற விளைவிற்கு அழைத்துச் செல்லும் அதிக இயற்கையான பொருள் விளக்கத்தை விட்டுவிட்டு, நியாயமான மற்றும் நடைமுறைப்படுத்தக் கூடிய விளைவிற்கு அழைத்துச் செல்லும் பொருள் விளக்கத்தை பின்பற்றுதல் வேண்டும், என்பது சரியானதேயாகும்.

சில எடுத்துக்காட்டுகள் :

"சிறையில் இருந்து தப்பி ஓடுவது" (to break from prison) பெருங்குற்றம் என ஒரு சட்டப் பிரிவு கூறுகிறது. கைதி ஒருவன் சிறை தீப்பிடித்து எரிந்து கொண்டிருக்கும் பொழுது, தப்பி ஓடினால், அவனை மேற்கண்ட பெருங்குற்றத்திற்கு பொறுப்பாளி ஆக்க முடியாது. ஏனெனில் அவனுடைய நோக்கம் சிறையிலிருந்து தப்பி ஓடுவதல்ல. மாறாக தன்னுடைய உயிரை காப்பாற்றிக் கொள்வதற்காக ஆகும். இங்கு மேற்படி சட்டப்பிரிவிற்கு இலக்கண ரீதியாக பொதுவான பொருளைக் கொண்டால், சிறை தீப்பிடித்து எரிந்து கொண்டிருக்கும்பொழுது அதனுள் இருந்த கைதி ஒருவன் தன்னுடைய உயிரைக் காப்பாற்றிக் கொள்ள வெளியே ஓடி வந்த செயல், சிறையிலிருந்து தப்பி ஓடிய செயலே ஆகும். ஆனால் அச்சட்டத்தின் நோக்கம் "சிறை தீப்பிடித்து எரிந்து

கொண்டிருக்கும் பொழுது, கைதி உள்ளேயே கிடந்து கருகிச் சாம்பலாக வேண்டும்" என்பதல்ல. ஆகவே நீதிமன்றம் மேற்படி விளைவினைக் கருத்தில் கொண்டு வரையறு பொருள் கொள் முறையினை பயன்படுத்தி, அக்கைதி தப்பி ஓடியவனாக மாட்டான் என சரியான பொருள் விளக்கம் அளித்தது.

இதேபோல **Re. Rose**[1] என்ற வழக்கில், ஆழ்கடலிலே இருக்கும் ஒரு கப்பலுக்குள் ஒரு கலகத்தை விளைவிப்பது கடுமையான குற்றமாக சட்டம் கூறுகிறது. ஆனால் ஒரு கப்பல் தலைவன் இரத்த வெறி பிடித்துக் கப்பலில் உள்ளவர்களைத் தன்னிஷ்டம் போல் கொலை செய்து கொண்டிருக்கும் பட்சத்தில் அவனுக்கு எதிராக போர்க்கொடி உயர்த்துவதை 'கலகம்' என்று பொதுவாக பொருள் விளக்கம் தந்துவிடக்கூடாது. அப்படி தந்தால், கப்பலிலுள்ளோர்கள் எல்லோரும், கப்பல் தலைவனின் இரத்தவெறிக்கு பலியாக வேண்டிய பரிதாப நிலை ஏற்பட்டுவிடும். மேலும் மேற்படி சட்டத்தின் நோக்கம் அதுவல்ல. ஆகவே இங்கு மேற்படி விளைவினைக் கருத்தில் கொண்டு, வரையறு பொருள் கொள்முறையினைப் பயன்படுத்திட வேண்டும், என்று கூறப்பட்டது.

மேலும் **Re. Turner**[2] என்ற வழக்கில், ஒரு பணியாள், தனது பணிக்காலம் முடிவடைவதற்கு முன்பு, பணிக்கு வராமல் இருந்ததால், அவருக்கு மூன்று மாத சிறைத்தண்டனையும், அவரது ஊதியம் பறிமுதல் செய்யப்பட வேண்டுமெனவும், ஒரு சட்டம் விதிக்கிறது. இதை, சில தவிர்க்க இயலாத நியாயமான காரணங்களின், உதாரணமாக, உடல் நலம் சரியின்மை, குடும்ப உறவினர் இறப்பு போன்றவற்றின் அடிப்படையில் பணிக்கு வராமல் இருப்பவர்களுக்கெல்லாம் பொருத்திப் பார்த்தால், யாருமே பணிக்கு வரமாட்டார்கள். எனவே, இந்த விளைவு தவிர்க்கப்பட வேண்டும். மேலும் எவர் ஒருவர் நியாயமற்ற காரணங்களின் அடிப்படையில், அதாவது அவர் பணிக்கு வராமல் இருந்தது, மன்னிக்க முடியாத அளவிற்கு இருந்தால்தான், மேற்படி சட்டப்படி மேற்கண்ட தண்டனைகளை, அப்பணியாளருக்கு விதிக்க வேண்டுமென, வரையறு பொருள் கொள்முறைப்படி தீர்ப்பளிக்கப்பட்டது.

2. சட்டத்தின் செயல்பாட்டினை வரையறுக்க, வரையறுக்கப் பட்ட பொருள் தரல் (Restricted meaning to restrict the operation of the Act) :

சில சமயங்களில் சட்டத்தின் செயல்பாட்டைக் குறிப்பிட்ட சில நபர்களுக் கிடையே மட்டும் அல்லது குறிப்பிட்ட சில சூழ்நிலைகளுக்கு மட்டும், அல்லது குறிப்பிட்ட சில நோக்கங்களுக்கு மட்டும் உபயோகப்படுத்த வேண்டியிருக்கிறது. ஆனால், இவ்வாறுதான் அதன் செயல்பாடு அமைய வேண்டும் என்பது, அச்சட்டத்தில் இல்லாமலிருக்கலாம்.

1. 1847
2. (1846) I.Q.B. 80

சில எடுத்துக்காட்டுகள் :

1. 1737–ஆம் ஆண்டின் வாடகைக்காக உடைமைக் கைப்பற்றீட்டுச் சட்டத்தின் (The Distress for Rent Act, 1737) 3–வது பிரிவானது, வீட்டின் சொந்தக்காரர், தனது வீட்டில் குடியிருக்கும் ஒருவர் வாடகை செலுத்தத் தவறும் பட்சத்தில், வீட்டின் உடைமையைக் கைப்பற்றும் பொழுது, அதனைத் தவிர்ப்பதற் காக, அவ்வாடகைதாரர் அவ்வீட்டில் உள்ள பொருட்களை மோசடியாக எடுத்துச் சென்றால் அதன் மதிப்பிற்கு இரண்டு மடங்கு அளவில் தொகை திரும்பப் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்க, அவ்வீட்டின் மேற்படி சொந்தக்காரருக்கு உரிமை அளிக்கிறது. இங்கு அப்பொருட்கள் வாடகைதாரருக்கு சொந்தமானதாக இருக்கும் பட்சத்தில் மட்டுமே, மேற்கண்ட பிரிவு 3 பொருந்துமே தவிர, ஒரு மூன்றாம் நபருடைய பொருட்கள் எனும் பட்சத்தில் பொருந்தாது.

2. இரயில் சட்டத்தின் சில பிரிவுகள், இரயில்வே நிர்வாகத்தினை சில இயக்குநர்களின் கையில் ஒப்படைத்தது. மேற்படி பிரிவுகள், பங்குதாரர்களின் நலனை காப்பதற்காக மட்டுமே ஏற்படுத்தப்பட்டது. எனவே, ஒரு மூன்றாவது நபர், நிர்வாகத்தை மேற்கண்ட இயக்குநர்களின் ஒப்படைப்பதில், மேற்படி பிரிவுகளின் கீழான நிபந்தனைகள் கடைப் பிடிக்கப்படவில்லை, எனப் புகார் கூற முடியாது. பங்குதாரர்கள் மட்டுமே புகார் செய்ய உரிமை படைத்தவர்கள்.

3. அதுபோல், **Re Alma Spinning Co.,**[1] என்ற வழக்கில், ஒரு நிறுவனத்தின் நிர்வாகத்தை நடத்தும் இயக்குநர் குழு, அந்நிறுவனத்தின் பங்குதாரர்களுக்கு செய்ய வேண்டிய கடமைகளைப் பற்றிப் புகார் கூற, வெளிநபர் எவருக்கும் உரிமை இல்லை, எனப்பட்டது.

3. சட்டத்தின் குறிப்பிட்ட நோக்கங்களுக்கு வரையறு பொருள் கொள்முறை (Restrictive construction to specific objects) :

சாதாரணமான மற்றும் இலக்கண ரீதியான பொருள் (literal meaning) சட்டத்தின் நோக்கங்களுக்கு அல்லது எல்லைக்கு அப்பாற்பட்டதாக இருந்தால், அங்கு வரையறு பொருள் கொள் முறையைப் பயன்படுத்த வேண்டும்.

சில எடுத்துக்காட்டுகள் :

1. **Governor of Brixton Press, ex. p. v. Stallmann**[2] என்ற வழக்கில், ஆட்கொணர்விக்கும் நீதிப்பேராணையின் கீழ் (Habeas Corpus) விடுவிக்கப்பட்ட ஒரு நபரை மீண்டும் அதே குற்றத்துக்காகத் (For the same offence) திரும்பவும் கைது செய்ய நீதிமன்றத்தின் முன் அனுமதி பெற வேண்டும் என்பது சட்டத்தின் இலக்கணரீதியான சாதாரணப் பொருளாகும். ஆனால்

1. 1880
2. 1912

'அதிகாரவரம்பு' (Jurisdiction) இல்லாமல் ஒரு நபர் கைது செய்யப்பட்டார். இந்த காரணத்துக்காக, நீதிமன்றம் Habeas Corpus மனுவின் பேரில் அந்த நபரை விடுவித்தது. பின் 'அதே குற்றத்துக்காக' அந்த நபர் இரண்டாவது தடவை அதிகாரவரம்புடன் **நீதிமன்றத்தின் அனுமதியில்லாமல்** கைது செய்யப்பட்டார்.

மேற்கண்ட இலக்கணரீதியான சாதாரணப் பொருளின்படி பார்த்தால், ஆட்கொணர்விக்கும் நீதிப்பேராணைப்படி ஏற்கனவே விடுவிக்கப்பட்ட நபரை, அதே குற்றத்திற்காக மீண்டும் கைது செய்யும் பொழுது, நீதிமன்றத்தின் முன் அனுமதி பெற வேண்டும். இச்சூழ்நிலையில், நீதிமன்றத்தின் அனுமதி இல்லாமல் கைது செய்யப்பட்ட நபர், மேற்படி இலக்கணரீதியான பொருள் விளக்கப்படி மீண்டும் அதே குற்றத்திலிருந்து விடுவிக்கப்பட்டு விடுவார். குற்றம் செய்தவரை விடுவிக்கச் சொல்லுமாறு உள்ள மேற்படி இலக்கண ரீதியான பொருள் விளக்கத்தை எடுத்துக் கொள்வது என்பது, குற்றவியல் சட்டத்தின் நோக்கத்திற்கு அப்பாற்பட்டதாக உள்ளதால், இங்கு வரையறு பொருள் கொள்முறையையே பிரயோகிக்க வேண்டும். அதன்படி, நீதிமன்ற அனுமதி இல்லாமலேயே, ஏற்கனவே மேற்கண்டவாறான சூழ்நிலைகளின் கீழ் விடுவிக்கப்பட்ட அதே நபரையே, அதே குற்றத்திற்காக மீண்டும் கைது செய்ததில் தவறொன்றுமில்லை என நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

2. அதேபோல், **Ieeford Corporation v. Bettercleam (Seven Kings) Ltd.,**[1] என்ற வழக்கில் வாடிக்கையாளரால் நாணயங்கள் போடப்பட்டுத் தானியங்கி இயந்திரங்களினால் சேவை செய்தல், சூடான பானங்கள் மற்றும் பல பொருள்களைத் தரும் நிறுவனம் ஒன்று வியாபார நிறுவனங்கள் சட்டத்தின் கீழ் ஞாயிற்றுக் கிழமைகளில் மூடப்பட வேண்டுமா என்ற கேள்வி எழுந்தது.

"ஞாயிற்றுக் கிழமைகளில் வாடிக்கையாளருக்குச் சேவை செய்தல்" என்ற வாக்கியம் 'மனிதரால் சேவை செய்தல்' (Personal service) என்ற வரைமுறைக்குட்பட்டு பொருள் கொள்ளப்பட்டு, தானியங்கி இயந்திர சேவை சட்டத்தின் எல்லைக்கு அப்பாற்பட்டதாகக் கொள்ளப்பட்டது. அதாவது தானியங்கி சேவை செய்யும் நிறுவனங்கள் ஞாயிற்றுக்கிழமைகளில் மூடப்பட வேண்டியதில்லை. ஆனால் அதுவே மனிதர்களால் சேவை செய்யப்படும் நிறுவனங்களாக இருப்பின், மூடப்பட வேண்டும் என வரையறு பொருள் கொள்ளப்பட்டது.

4. இயற்றாச் சட்டத்தில் மாறுதல்களை ஏற்படுத்தச் செய்சட்டம் முனைந்துள்ளது என்ற அனுமானம் கூடாது (Presumption against changes in the Common Law) :

இயற்றாச் சட்டத்தில் உள்ள நடைமுறைகளைச் செய் சட்டம் தெள்ளத் தெளிவாகவும், வெளிப்படையாகவும் செல்லாததாக்கும் தருணங்களைத் தவிர

1. 1965

மற்ற இடங்களில் இயற்றாச் சட்டம் பின்பற்றப்படல் வேண்டும். அதை மாற்றும் பொருட்டு சட்டமன்றங்கள் சட்டம் இயற்றியிருப்பதாக அனுமானித்தல் கூடாது.

இதையே, ரெய்டு நீதிப்பெருமகனார் அவர்கள், 'இரண்டு சட்டப் பொருள் விளக்க வாதங்கள் சரிசம எடையில் இருக்கும் போது, எந்த ஒரு வாதம் இருக்கும் சட்டத்தில் குறைந்த அளவு மாற்றம் ஏற்படுத்துவதாக இருக்கிறதோ அதையே எடுத்துக் கொள்ள வேண்டும்' என்று **George Wimply & Co. Ltd., v. B.O.A.C.**[1] என்ற வழக்கில் கூறுகிறார். இங்கு மற்றொரு வழக்கையும் பின்வருமாறு கவனிப்போம்.

Leach v. R.[2] இவ்வழக்கில் சாட்சியச் சட்டத்தின் பிரிவு ஒன்று, மனைவியோ அல்லது கணவனோ குற்ற வழக்கு ஒன்றில் ஒருவர் மற்றவருக்கு எதிராகவோ, அல்லது சார்பாகவோ சாட்சியம் கூற **அழைக்கப்படலாம்,** என்று குறிப்பிடுகிறது. ஆனால் இயற்றாச் சட்டத்தில், கணவனுக்கு எதிராகச் சாட்சியம் கூற மனைவி கட்டாயப்படுத்தப்படக் கூடாது, என்ற விதி மிக ஆழமாக நிலவுகிறது. அதாவது மனைவி தாமாக வலிய கணவனுக்கு எதிராக சாட்சியம் சொல்ல தடையேதுமில்லை; ஆனால் கட்டாயப்படுத்தப்படக் கூடாது. எனவே, சாட்சியச் சட்டத்தின் மேற்கண்ட பிரிவு, **'மனைவியை எதிர்சாட்சியம் சொல்லத் தகுதியானவளாக்குகிறது'** என்று பொருள் கொள்ள வேண்டுமேயன்றி, மனைவி எதிர் சாட்சியம் சொல்லக் கட்டாயப்படுத்தப்படலாம் என்று பொருள் கொள்ளக் கூடாது. 'கட்டாயப்படுத்தலாம்' என்று கொள்வதற்கு, இன்னும் மிகத் தெளிவான, நேர்மறையான ஒரு வாக்கியம் சட்டத்தில் தேவைப்படுகிறது, என **அட்கின்சன் நீதிப்பெருமகனார் (Lord Atkinson)** கூறுகிறார்.

-oOo-

1. 1955
2. 1912

6

அதிகாரவரம்பு பற்றிய அனுமானங்கள் [Presumptions regarding Jurisdiction]

54. Presumptions regarding Jurisdiction - Write short notes.
(அதிகாரவரம்பு பற்றிய அனுமானங்கள் – சிறு குறிப்பு எழுதுக.)

அதிகாரவரம்பு (Jurisdiction) - விளக்கம் :

ஒரு பிரச்சனை என்று வந்து விட்டால், அது குறித்து எந்த நீதிமன்றத்தில் வேண்டுமானாலும் வழக்கு தொடுக்க இயலாது. அந்த பிரச்சனை, எந்த வட்டார எல்லைக்குள் (Territorial Limit) வருகிறதோ, அங்கு உள்ள நீதிமன்றத்தில்தான் வழக்கு தொடுக்க இயலும். அந்த வட்டார எல்லையும், அப்பிரச்சனையின் மதிப்பினால் (Value) கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. இது, நிதிநிலை எல்லை (Pecuniary limit) எனப்படுகிறது. எனவே அதிகாரவரம்பானது, வட்டார அதிகாரவரம்பு (Territorial Jurisdiction) என்றும், நிதிநிலை அதிகாரவரம்பு (Pecuniary Jurisdiction) என்றும் இரு வகைப்படும்.

உதாரணமாக, சேலம் மாவட்டத்தில் பிரச்சனை ஒன்று எழுந்தால், அது குறித்த வழக்கை, அம்மாவட்டத்தின் எல்லைக்குள் உள்ள நீதிமன்றத்தில்தான் தாக்கல் செய்ய வேண்டும். அதே சமயத்தில் அப்பிரச்சனையின் மதிப்பு ரூ. 1,00,000/–த்திற்குள் இருப்பின், சம்பந்தப்பட்ட வழக்கை மாவட்ட உரிமையியல் நீதிபதி நீதிமன்றத்தில்தான் (District Munsif Court) தாக்கல் செய்ய வேண்டும்; ரூ. 1,00,000/–த்திற்கு மேற்பட்டிருப்பின், மாவட்ட சார்பு நீதிமன்றத்தில்தான் (Sub-Judge) தாக்கல் செய்ய வேண்டும். இதுவே அதிகாரவரம்பு குறித்த அடிப்படையாகும்.

"அதிகாரவரம்பு" என்பது சட்டமன்றத்தால் தக்க விதத்தில் திட்டமிடப் பட்டு செய்யப்பட்டதாகும். எனவே அதை நெகிழ்வித்துப் பொருள் கொள்ளக் கூடாது என்பதற்காக, சில அனுமானங்கள் பின்பற்றப்படுகின்றன. அவற்றை பின்வருமாறு காண்போம்.

அதிகாரவரம்பு குறித்த அனுமானங்கள் :

1. நீதிமன்றத்தின் அதிகாரவரம்புகளை நீக்குதல், புதிய அதிகார வரம்புகளை உருவாக்குதல் மற்றும் இருக்கும் அதிகாரவரம்புகளை விரிவாக்கல் ஆகியவற்றிற்கு எதிரான அனுமானம் (Presumption against Ouster of Established Jurisdictions, Creation of New Jurisdictions and Enlargement of Existing Jurisdictions of Courts) :

சட்டத்தின் வரிகளில் எவ்வித குழப்பமும் இல்லாமல் கூறப்பட்டிருந்தால் தவிர, நீதிமன்றங்களின் அதிகார வரம்பை நீக்கும் வண்ணம், எச்சட்டமும் பொருள் கொள்ளப்படக் கூடாது. அதாவது, ஒரு சட்டத்தை பொருள் கொள்ளும் பொழுது, அது நீதிமன்றத்தின் அதிகாரவரம்பை நீக்குவதாக அனுமானித்தல் கூடாது. அதுபோலவே, புதிய அதிகாரவரம்பை உருவாக்கும் வண்ணமும், இருக்கும் அதிகாரவரம்பை விரிவாக்கும் விதத்திலும் பொருள் தரக் கூடாது. அதாவது ஒரு சட்டமானது ஒரு புதிய அதிகாரவரம்பை உருவாக்குகிறது என்றோ அல்லது இருக்கும் அதிகாரவரம்பை விரிவாக்குகிறது என்றோ அனுமானித்தல் கூடாது. அப்படி உருவாக்கவும் அல்லது விரிவாக்கவும் செய்ய வேண்டுமெனில், அது குறித்து அச்சட்டத்திலேயே தெளிவாக கொடுக்கப்பட்டிருக்க வேண்டும்.

நீதிமன்றத்தின் அதிகாரவரம்பு நீக்கப்படுகிறது என்பதற்கு எதிரான அனுமானம் குறித்து, பின்வரும் வழக்கொன்றை கவனிப்போம்.

Pyre Granite Co. Ltd., v. Minister of Housing and Local Government[1] என்ற வழக்கில், "நிலத்தின் மேல் செய்யப்படும் எவ்வித அமைப்புகளும், நகராட்சியின் முன் அனுமதியின் பேரில்தான் நடைபெற வேண்டும். நகராட்சியின் முடிவுக்கு எதிரான மேல்முறையீடுகள் யாவும் சம்பந்தப்பட்ட அமைச்சருக்கே செய்யப்படல் வேண்டு; அவருடைய முடிவே இறுதியானது," என்பது சட்டப் பிரிவுகளின் பொருளாகும். இதை, அமைச்சரின் முடிவானது, நீதிமன்றத்தின் மறுபார்வைக்கு (Judicial Review) அப்பாற்பட்டது என்று பொருள் கொள்ளுதல் தவறு. 'அமைச்சரின் முடிவு இறுதியானது' என்ற சொற்றொடர், பாதிக்கப்பட்ட நபர் நீதிமன்றத்தை அணுக முடியாது என்றோ, நீதி மன்றத்திற்கு இது சம்பந்தமாக நியாயம் வழங்கும் அதிகாரவரம்பு இல்லையென்றோ உணர்த்தவில்லை என்று இங்கிலாந்து பெருமகனார்கள் அவை (House of Lords) தீர்ப்பு வழங்கியது.

2. நாட்டிடைச் சட்டத்தின் மீறலுக்கு எதிரான அனுமானம் (Pre sumption against a Violation of International Law) :

உலக நாடுகளை ஒரு முறையமையில் கொண்டு செல்வதற்காக

1. 1960

பொதுவாக ஏற்படுத்தப்பட்ட விதிமுறைகளே, நாட்டிடைச் சட்டமாகும். எனவே, அந்நாட்டிடைச் சட்டத்தின் விதிகளையோ அல்லது நாடுகளின் நெறிமுறைகளையோ முரண்படுத்தும் வண்ணம், ஒரு சட்டத்திற்கு பொருள் விளக்கம் அளித்தல் கூடாது, உள்நாட்டு சட்டம் (Municipal Law) ஒன்றிற்கு பொருள் விளக்கம் அளிக்கும் பொழுது, அது நாட்டிடைச் சட்ட விதிகளுக்கு முரணாக இருப்பின், நீதிமன்றம் இயன்றவரை, அப்பொருள் விளக்கத்தை தவிர்ப்பதற்கு முயற்சித்தல் வேண்டும். ஆனால் அதே சமயத்தில் அது குறித்து, சட்டத்தின் மொழி நடையானது, தெளிவாகவும் குழப்பமில்லாமலும் இருப்பின், அப்பொருள் விளக்கம், நாட்டிடைச் சட்ட விதிகளுடன் மோதுவதாக இருந்தாலும், அவ்வாறே பொருள் கொள்வதைத் தவிர, நீதிமன்றத்திற்கு வேறு வழி ஏதுமில்லை. ஏனெனில், உள்நாட்டுச் சட்டம் என்பது அந்நாட்டிற்கே உரித்த, குறுகிய எல்லையில் செயல்படும் ஒரு சட்டம். நாட்டிடைச் சட்டமென்பது, உலக நாடுகளுக்கெல்லாம் பொருந்தக் கூடியதும், பரந்த எல்லையுடையதுமான ஒரு சட்டம்.

ஆனால், அதே சமயத்தில் ஒரு சட்டத்திற்கு இரண்டு பொருள் விளக்கங்கள் தரலாம் என்ற நிலை இருந்து, அவற்றில் ஒன்று நாட்டிடைச் சட்ட விதிகளோடு ஒத்துப் போவதாக இருப்பின், அப்பொருள் விளக்கத்தை நீதிமன்றங்கள் எடுத்துக் கொள்ள வேண்டும்.

3. வட்டார எல்லைக்கு அப்பாற்பட்ட செயல்பாட்டிற்கு எதிரான அனுமானம் (Presumption against Extra-Territorial Operation) :

வேறு விதத்தில் குறிப்பிடப்படாவிட்டால், பாராளுமன்றத்தின் சட்டம், அதற்கு உரித்த வட்டார எல்லைக்கு மட்டுமே பொதுவாகப் பொருந்தும் என்பது, இங்கிலாந்தில் நிலவும் அனுமானம் ஆகும். ஆனால் அதே சமயத்தில் இங்கிலாந்திலும் மற்றும் இங்கிலாந்திற்கு வெளியிலும் உள்ள இங்கிலாந்து பிரஜைகள் அனைவருக்கும் பொருந்தும் வண்ணமும் சட்டப் பிரிவுகளை ஏற்படுத்தலாம். அதேபோல், இங்கிலாந்தில் தங்கியிருக்கும் வெளிநாட்டு பிரஜைகளும், இங்கிலாந்து நீதிமன்றங்களின் அதிகாரவரம்பிற்கு உட்பட்டவர்களே. மேலும் வெளிநாட்டினருக்கு பொருந்தக்கூடிய சட்டங்களையும், இங்கிலாந்து நாட்டின் நீதிமன்ற அதிகாரவரம்பின் கீழ் கொண்டு வரலாம்.

தனி நாட்டிடைச் சட்டத்தின் (Private International Law) பொது விதி என்னவென்றால், ஒரு அரசின் சட்ட–திட்டங்களுக்கு, அவ்வரசு கோலோச்சும் நிலப்பரப்பில் உள்ள அனைவரும் உட்பட்டவர்கள். இங்கு அவர்களது நாட்டுரிமை, இருப்பிடம் மற்றும் வாழ்வகம் ஆகியவை தொடர்பற்றவையாகும். அதுபோல் இங்கிலாந்தில் வசிப்பவரின் அசையும் சொத்துக்கள் வெளிநாட்டில் இருந்தாலும், அதற்கும் இங்கிலாந்து நாட்டு சட்டமே பொருந்தும். ஆனால், வேறு நாட்டவரின் அசையும் சொத்துக்கள், இங்கிலாந்தில் இருப்பின் அதற்கு இங்கிலாந்து நாட்டு

சட்டம் பொருந்தாது. இதுவே இங்கிலாந்தைப் பொறுத்த, வட்டார எல்லைக்கு அப்பாற்பட்ட அதிகாரவரம்பின் செயல்படு தன்மையாகும்.

இந்தியாவைப் பொறுத்தவரை, சட்டங்களின் வட்டார எல்லைக்கு அப்பால் செயல்படும் தன்மையின் மீதான அனுமானம் எதிரானதாக உள்ளது. ஆனால், பாராளு மன்றத்தின் ஆட்சி எல்லைக்கு உட்பட்ட பகுதி குறித்து மட்டுமே சட்டமியற்றல் வேண்டும், என பாராளுமன்றத்தை மேற்படி அனுமானம் கட்டுப்படுத்தவில்லை. **இந்திய அரசியலமைப்பின்** சரத்து 245-ன் 2-வது உட்கூறானது [Article 245 (2)], பாராளுமன்றத்தின் ஒரு சட்டம், வட்டார எல்லையின் செயல்பாட்டிற்கு அப்பால் உள்ளது என்ற ஒரு காரணத்திற்காக, அச்சட்டத்தை செல்லாத ஒன்றாக கருதக் கூடாது என்று கூறுகிறது. ஒரு நாடு தனது எல்லைக்குள் உள்ள பிரஜை எவர் மீதும் அல்லது எவ்விஷயம் மீதும் அல்லது தனது கப்பல்கள் மற்றும் வானூர்திகள் அவை எங்கிருந்தாலும் மற்றும் தனது நாட்டில் தங்கியிருக்கும் வெளிநாட்டினர் மீதும் சட்டமியற்றலாம், என **நாட்டிடைச் சட்டமானது** கூறுகிறது. மேற்படி கொள்கையை நமது **இந்திய தண்டனைச் சட்டம் (Indian Penal Code)** பின்பற்றியுள்ளது. அச்சட்டத்தின் **3-வது பிரிவானது,** இந்தியச் சட்டப்படி பொறுப்புடைய ஒருவர், அவர் இந்தியாவிற்கு வெளியே குற்றம் ஏதேனும் புரிந்திருந்தாலும், அக்குற்றம் இந்தியாவிற்குள் செய்யப்பட்டால், அவர் எந்த விதத்தில் தண்டிக்கப்படுவாரோ, அதே விதத்தில் தண்டிக்கப்படுதல் வேண்டும், என்று கூறுகிறது. மேலும் அச்சட்டத்தின் **4-வது பிரிவு** பின்வரும் (இந்தியப் பிரஜை) நபர்களுக்கும் பொருந்தும் என்று கூறுகிறது. அவர்கள் (1) இந்தியாவிற்கு வெளியில் அல்லது இந்தியாவில் அல்லாமல் வேறு எந்த இடத்திலும் குற்றம் ஏதேனும் புரிந்தவர்கள்; (2) இந்தியாவில் பதிவு செய்யப்பட்ட கப்பல் அல்லது வானூர்தியில், அது எங்கிருந்தாலும் அவற்றில் குற்றம் ஏதேனும் புரிந்தவர்கள்.

4. சட்டங்கள் அரசை பாதிக்குமா என்பதற்கான அனுமானம் (Presumption whether Statutes affect the State) :

சட்டங்கள் மக்களுக்காக அரசால் இயற்றப்படுகின்றன. எனவே, அவை, அரசை எவ்விதத்திலும் பாதிப்பதில்லை, என்று அனுமானித்தல் வேண்டும். சட்டங்களை இயற்றுவதின் மூலம், அரசானது தனது சொந்த நலனிற்கே ஊறு விளைவித்துக் கொள்ள விரும்புவதில்லை; மேலும் தனது சொந்த உரிமைகளில் அச்சட்டம் தலையிடுவதையும் அனுமதிப்பதில்லை. சுருங்கக்கூறின், **அரசு, தான் இயற்றிய சட்டங்களுக்கு கட்டுப்படக் கூடாது (Crown is not bound by a Statute)** என்பது இது குறித்த அனுமானமாகும். அப்படிக் கட்டுப்பட வேண்டுமானால், அது குறித்த வெளிப்படையான வரைமுறைகளோ அல்லது குறிப்போ, அச்சட்டத்தில் இருத்தல் வேண்டும்.

அறிஞர் மேக்ஸ்வெல் அவர்களைப் பொறுத்தவரை, மேற்கண்ட அனுமானம் அரசின் பணியாட்கள் மற்றும் முகவர்களுக்கும் பொருந்தக் கூடியது

மட்டுமல்லாமல், செய்யும் பணியைப் பொறுத்து அரசுப் பணியாட்களாகவும் முகவர்களாகவும் உள்ள பல நபர்களுக்கும் மற்றும் அமைப்புகளுக்கும், பொருந்தக் கூடியதாகும் என்று குறிப்பிடுகிறார்.[1]

பின்வரும் நான்கு சூழ்நிலைகளில் ஒரு அரசு, தான் இயற்றிய சட்டங்களுக்கு கட்டுப்பட்டதாகிறது, என்று அறிஞர் மேக்ஸ்வெல் மேலும் குறிப்பிடுகிறார். அவை,

1. அரசு, தான் இயற்றிய சட்டத்திலேயே, அச்சட்டத்திற்கு தானும் கட்டுப் பட வேண்டும் என வெளிப்படையாக சட்டப் பிரிவுகள் ஏற்படுத்தியிருக்கும் பொழுது;

2. அரசை அவ்வாறு கட்டுப்படுத்த வேண்டும் என்ற எண்ணம் வெளிப் படையாக இருக்கும் பொழுது;

3. அரசின் மேன்மைமிகு உரிமைகளும், சொத்துக்களும் பிரச்சனைக்கு உரியவையல்லாததாக இருக்கும் பொழுது; மற்றும்

4. ஒரு சட்டமானது, சமயத்தை அல்லது கற்பித்தலை மேம்படுத்துவதற் காகவும் மற்றும் வறியவருக்கு வாழ்க்கைப் பொருளுதவி அளிப்பதற்காகவும் அல்லது தவறை அடக்குவதற்காகவும், அல்லது கொடையளிப்பவரின் உயிலை நிறைவேற்றுவதற்காகவும் இருக்கும் பொழுது;[2]

மேற்கண்டவை யாவும், இங்கிலாந்தைப் பொறுத்து நிலவும் அனுமானம் ஆகும்.

இந்தியாவைப் பொறுத்தவரை, அரசானது, தான் இயற்றிய சட்டங்களுக்கு கட்டுப்படக் கூடியதாக அல்லது கட்டுப்படாததா என்ற வினாவிற்கு, எவ்வித அய்யப் பாட்டிற்கும் இடமில்லாமல் தெளிவாக பதிலளிக்க இயலாததாக தோன்றுகிறது.

உச்ச நீதிமன்றமானது 1964[3]–ஆம் ஆண்டு வரை, மேற்கண்ட இங்கிலாந்து அனுமானத்தைப் பின்பற்றி, வெளிப்படையாக குறிப்பிடப்பட்டிருந்தாலன்றி, அரசானது, தான் இயற்றிய சட்டங்களுக்கு கட்டுப்படாதது என்றே தீர்மானித்தது. ஆனால் இந்நிலை 1967[4]–ஆம் ஆண்டு முதல் மாறிவிட்டது. ஏனெனில் அந்த ஆண்டில், மேற்படி இங்கிலாந்து நாட்டு அனுமானம் இந்தியாவில் எடுபடாது, என உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்தது. அதாவது, அரசு, தான் இயற்றிய சட்டங்களுக்கும் கட்டுப்பட்டதேயாகும் என்பதே அத்தீர்ப்பு.

---

1. Interpretation of Statutes, 12th Edn. p. 162
2. மேற்கண்ட அடிக்குறிப்பு 1–ல் பக்கங்கள் 166 மற்றும் 167
3. V.S. Rice and Oil Mills v. State of A.P. - A.I.R. 1964 S.C. 1781
4. Superintendent and Remembrances of Legal Affairs, West Bengal v. Corporation of Calcutta. - A.I.R. 1967 S.C. 997.

Union of India v. Jubili[1] என்ற வழக்கில், அரசு இயற்றிய ஒரு சட்டம் எங்ஙனம் ஒரு சாதாரண குடிமகனுக்குப் பொருந்துமோ, அதே போன்றுதான் அரசுக்கும் பொருந்தும், என உச்ச நீதிமன்றம் கூறியது. அதே சமயத்தில் அரசு இயற்றிய சட்டம், அரசுக்கு பொருந்தாது; அச்சட்டத்தின் ஆட்சியிலிருந்து, அரசு விலக்கப்பட்டு உள்ளது என்றால், அது குறித்து அச்சட்டத்திலேயே நேரிடையாகவோ (directly) அல்லது இன்றியமையாத உட்குறிப்பின் (necessary implication) மூலமாகவோ குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும், என உச்சநீதிமன்றம் மேலும் கூறியது.

55. State the rules for interpretation of a statute which excludes the jurisdiction of the Courts. (நீதிமன்றங்களின் அதிகார வரம்பை நீக்கும் சட்டத்தை விளக்குவதற்கு மேற்கொள்ள வேண்டிய சட்ட விளக்க விதிமுறைகளைக் குறிப்பிடுக.)

(முந்தைய வினாவின் விடையில் 1–வது தலைப்பின் கீழ் காண்க.)

56. "The Crown is not bound by a statute unless it is directly or by necessary implication referred to ..." - Comment. ("தாம் நேரிடையாக அல்லது இன்றியமையாத உட்குறிப்பின் மூலம் குறிப்பிடப்பட்டிருந் தாலன்றி அரசர் செய்சட்டம் ஒன்றுக்குக் கட்டுப்பட்டவரல்லர்" – விளக்கக் குறிப்பு தருக.)

(அல்லது)

Is the State bound by its own statutes? Refer to Cases. (அரசு இயற்றிய சட்டம் அரசைக் கட்டுப்படுத்துமா ? முடிவுற்ற வழக்குகளின் உதவியோடு ஆய்க.)

(அல்லது)

How far the State is bound by its own Statutes? Explain. (அரசு எந்த அளவிற்கு தன்னுடைய சட்டத்தாலேயே கட்டுப்படுத்தப்படும் ? விளக்குக.)

(முந்தைய வினாவின் விடையில் 4–வது தலைப்பின் கீழ் காண்க.)

-o0o-

1. A.I.R. 1968 S.C. 360

7

பல்வேறு அனுமானங்கள் [Presumptions]

57. Examine the various presumptions in interpretation of law. (சட்டப் பொருள் விளக்கத்தில் பல்வேறு அனுமானங்களை ஆராய்க.)

(அல்லது)

Presumptions - Write short notes. (அனுமானங்கள் – சிறு குறிப்பு எழுதுக.)

முன்னுரை :

சட்டப் பொருள் விளக்கத்தில் அதிகாரவரம்பு குறித்த அனுமானங்கள் போக, வேறு சில அனுமானங்களும் உண்டு. சட்டப் பொருள் விளக்கமளிக்கும் பொழுது, சில சூழ்நிலைகளில் அனுமானம் செய்து கொள்ள வேண்டியது அவசியமாகிறது. அனைத்திற்கும் விதிகளை இயற்றி, விளக்கிக் கொண்டிருக்க முடியாது. எனவேதான், அனுமானம் அவசியமாகிறது. அவ்வாறு அனுமானம் செய்யும்போது, சில குறிப்பிட்ட வகையில்தான் அனுமானிக்க வேண்டும் என்ற வரையறை உள்ளது. எப்படி வேண்டுமானாலும் அனுமானிக்கலாம், என்பதற்கு சட்டப் பொருள் விளக்கத்தில் இடமில்லை. இப்படித்தான் அனுமானிக்க வேண்டும்; இப்படி அனுமானிக்கக் கூடாது என்பதற்கு அறிஞர்கள் சில வரம்புகள் வைத்துள்ளனர். அதற்கான காரண–காரியங்களையும் விளக்கியுள்ளனர். அப்படி அனுமானம் செய்து கொள்ள பின்வரும் நான்கு சூழ்நிலைகளின் கீழ் நீதிமன்றங்கள் அனுமதிக்கப்பட்டுள்ளன. விரிவாக வருமாறு :

1. அசௌகரியமானதும், காரண-காரியத் தொடர்பு அற்றதுமான முடிவுகளுக்கு எதிரான அனுமானம் (Presumption against Intending what is Inconvenient and Unreasonable) :

ஒரு சட்ட வாசகத்தை இலக்கணரீதியாக பொருள் கொள்ளும் பொழுது, அது குழப்பமில்லாமல் ஒரே ஒரு பொருளை மட்டுமே தருவதாக இருப்பின், அப்பொருள் ஒரு அசௌகரியமான மற்றும் காரண–காரியத் தொடர்பு அற்றதுமான முடிவுகளுக்கு அழைத்துச் சென்றாலும் கூட, நீதிமன்றங்கள் அது குறித்து கவலைப் படக் கூடாது, என்பது சட்டப் பொருள் விளக்கத்தின் அடிப்படை விதி.

ஆனால் அதே சமயத்தில், அசௌகரியமானதும், காரண–காரியத் தொடர்பு அற்றதுமான முடிவுகளுக்கு எதிராக, ஒரு அனுமானம் உள்ளது. ஒரு சட்ட வாசகத்தின் பொருளானது, தெளிவற்றதாகவும், அய்யத்திற்கு இடமளிக்கும் வகையிலும் இருப்பின், அது அசௌகரியமானது என்று அனுமானிக்க அனுமதி உண்டு. மேலும், ஒரு சட்டப் பிரிவிற்கு இரண்டு பொருள் விளக்கங்கள் தர முடியும் என்ற நிலை இருக்கும் பொழுது, அவற்றில் எப்பொருள் விளக்கம் குறைந்த அளவு அசௌகரியத்தையும் அல்லது காரண–காரிய தொடர்பற்ற தன்மையையும் கொண்டுள்ளதோ, அதை நீதிமன்றங்கள் பின்பற்றலாம். இம்மாதிரியான சூழ்நிலைகளில், அசௌகரியமான விளைவுகளை களையும் வண்ணம், அச்சட்டத்தின் வாசகத்திற்கு நீதிமன்றங்கள் பொருள் தரலாம். அதாவது, இரண்டு பொருள் விளக்கங்களில் காரண–காரியமற்ற பொருள் கொள்ளுதலை விட்டுவிட்டு, சௌகரியமானதாகவும், பகுத்தறிவுக்கும், காரண–காரியத்திற்கும் ஒப்புதலாக உள்ள மற்றொரு பொருள் விளக்கத்தை, நீதிமன்றங்கள் பின்பற்றலாம்.

In Re B (An Infant) என்ற வழக்கில், ஒரு குழந்தையை தத்தெடுப்பது தொடர்பாக உத்திரவிடப்படும் பொழுது, அவ்வாறு உத்திரவிடப்படும் தினத்திற்கு முன்பாக அடுத்தடுத்த மூன்று மாதங்கள் வரை, யார் அந்த தத்தெடுக்கும் உத்திரவிற்கு மனுச் செய்துள்ளாரோ அவரது பராமரிப்பிலும் உடமையிலும் சம்பந்தப் பட்ட குழந்தை இருக்க வேண்டும், என்று 1958–ஆம் ஆண்டின் தத்தெடுப்புச் சட்டத்தின் 3(1)–வது பிரிவு கூறுகிறது. மேற்படி பிரிவு, தெளிவாகத்தான் உள்ளது. இருப்பினும் பின்வரும் சூழ்நிலைக்கு அதைப் பொருத்திப் பார்த்தால் அசௌகரிய மானதும் காரண காரியமற்றதுமான முடிவு வருகிறது. அதாவது, சம்பந்தப்பட்ட குழ்ந்தை, தத்தெடுப்பு உத்திரவு பிறப்பிக்கப்படுவதற்கு முன்பு பள்ளியில் பயின்று கொண்டிருந்தது. இச்சூழ்நிலையில், மேற்படி பிரிவின்படி பொருள் கொண்டால், தத்தெடுப்பு உத்திரவு வேண்டுபவர் வசம், அக்குழந்தை இல்லை; எனவே தத்தெடுப்பு உத்திரவிட முடியாது, என்று நீதிமன்றங்கள் கூற வாய்ப்புண்டு. ஆனால், இதனால் தேவையற்றதும் அசௌகரியமானதுமான சூழ்நிலை ஏற்படும். ஏனெனில், மேற்படி சட்டப் பிரிவின் கீழ் தத்தெடுப்பு உத்திரவு பெற, பள்ளிக்குச் செல்லும் குழந்தையை, தத்தெடுப்பவர் தன் வசமே மூன்று மாதங்கள் வைத்திருக்க வேண்டும், என்று பொருள் விளக்கம் கிடைக்கிறது. இது காரண–காரியமற்ற முடிவு என்பது எவருக்கும் புரியும் சமயத்தில் நீதிபதிகளுக்குப் புரியாதா? எனவே, குழந்தை பள்ளியில் பயின்று கொண்டிருந்தாலும், அது சம்பந்தப்பட்ட தத்தெடுப்பவரின் பராமரிப்பில் இருந்ததாகவே அனுமானிக்க வேண்டும், என சரியான பொருள் விளக்கத்தை

நீதிமன்றம் கூறியது. மேலும் தத்தெடுப்பு உத்திரவு வேண்டுபவர், ஒரு வேளை தனது பணி நிமித்தமாக, குழந்தையை தனது வேலையாளிடம் அல்லது உறவினரிடம் ஒப்படைத்துவிட்டு மூன்று மாதங்கள் வெளியூர் சென்றுவிட்டிருக்கும் பொழுதோ அல்லது தனது நண்பரை சந்திக்க சென்றிருந்த பொழுதோ, சட்டப்படி, அக்குழந்தை அவர் வசம் இல்லை என்ற அடிப்படையில் அவருக்கு தத்தெடுப்பு உத்திரவை தர மறுப்பதும், காரண–காரியமற்ற முடிவிற்கு கொண்டு செல்லக் கூடியதாகும், என்றும் நீதிமன்றம் கூறியது.

2. செயற்கையானதும் முரண்பாடானதுமான பொருள் தவிர்க்கப் படல் வேண்டும் என்று அனுமானம் (Artificiality and Anomaly to be avoided) :

அறிஞர் மேக்ஸ்வெல் அவர்கள், "கூடுமான வரையில், சட்டத்தில் நீண்ட செயற்கைத் தன்மையையும், முரண்பாடான விளைவுகளைத் தோற்றுவிக்கும் பொருளையும் தவிர்த்து, அச்சட்டத்தால் வகுக்கப்பட்டுள்ள சட்டமன்றத்தின் திட்டத்தை மென்மையாக செயல்படுத்துவதற்கு வழிவகுக்கும் பொருள் விளக்கத்தையே நீதிமன்றங்கள் பின்பற்றுதல் வேண்டுமெனக்[1]" கூறுகிறார்.

In Re Cohen (A Bankrupt) என்ற வழக்கில், ஒரு திவாலாவுக்குச் (Bankrupt) சொந்தமான அசையும் மற்றும் அசையாச் சொத்திலிருந்து வரும் வருமானங்களை நொடிப்புநிலை அதிகாரி (Official Receiver) பெற்றுக் கொள்வதற்கு நொடிப்புநிலைச் சட்டம் (Bankruptcy Act) வகை செய்கிறது. அதே சமயத்தில் ஒரு திவாலா தன் சொத்துக்களிலிருந்து வரும் வருமானங்களைத் தன் வாழ்நாள் முழுவதும் அனுபவிப்பதற்கான உரிமையை ஒரு அறுதியாவணத்தின் (Settlement) கீழ்ப் பெற்றிருக்கும் தருணத்தில், கடன் கொடுத்தவர்களின் நலனுக்கும் கடன்பட்ட திவாலாவின் உரிமைக்கும் இடையே ஒரு முரண்பாடு ஏற்படுகிறது. இதை ஒரு **வீணான முரண்பாடு (Extravagent anomaly)** என்று கூறி நீதிபதி, அதை ஏற்றுக் கொள்ள மறுத்துவிட்டார்.

ஆனால் தெளிவுபட இருக்கும் ஒரு சட்டப் பிரிவிற்கு குற்றச் செயல் புரிந்தவருக்குச் சாதகமாக ஒரு பொருள் விளக்கம் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டியதில்லை. **உதாரணமாக,** ஒரு வழக்கில், வருமான வரிச் சட்டத்தின்படி வருமான வரி கட்டும் ஒருவர் வருமானத்தின் ஒரு பகுதியை மறைத்து வருமான வரித் துறைக்கு வெளியிடாமல் இருந்தால், "அவர் செலுத்த வேண்டிய வரியின் மும்மடங்கை அபராதமாகச் செலுத்த வேண்டும்". **'வரியின் மும்மடங்கு'** என்பது, அவர் செலுத்தத் தவறிய வரியின் (ஒளிக்கப்பட்ட வருமானத்திற்குண்டான வரி)

1. "Where possible, a construction should be adopted which will facilitate the smooth working of the scheme of legislation established by the Act which avoids producing or prolonging artificiality in the law, and which will not produce anomalous result." - **Maxwell, Interpretation of Statutes, 12th Edn. p. 201**

மும்மடங்கைக் குறிப்பதா அல்லது அவர் அந்த வருடத்திற்குச் செலுத்த வேண்டிய மொத்த வரியின் மும்மடங்கை குறிப்பதா என்ற கேள்வி எழுந்தது. இதை ஆராய்ந்த நீதிப்பெருமகனார்கள் அவை (House of Lords) சட்டப் பிரிவின் இயற்கையான பொருளையே ஏற்றுக் கொண்டு, அவை விபரீதமான முடிவுகளைத் தருவதாக இருப்பினும், அது சரி எனத் தீர்ப்பளித்தது.

3. அநீதிக்கும் அடிமுட்டாள்தனத்துக்கும் எதிரான அனுமானம் (Presumption against intending Injustice and Absurdity) :

எந்த ஒரு சட்டப் பிரிவிற்கும் பொருள் காணும் தருவாயில் அவை தரும் ஒரு பொருள் அநீதிக்கு வித்திடுவதாக அமைந்தால், நீதிமன்றம் அந்தப் பொருள் சட்டமன்றத்தின் உள்ளக்கிடக்கை அன்று என்றே அனுமானித்தல் வேண்டும். ஆனால் நீதிமன்றம் அநீதியை நிர்ணயிக்கும்போது நிதானத்துடன் செயல்படல் வேண்டும். அநீதி உண்மையான அநீதியாக இருக்க வேண்டும். முற்றிலும் நடவாத் தன்மை சார்ந்த (never or rarely occur in practice) அல்லது பல்வேறு கற்பனை நிபந்தனைகள் மீது நடக்கக் கூடிய (Purely Hypothetical) ஒன்றை அநீதியாக ஏற்றுக் கொள்ளுதல்கூடாது. ஏனெனில், வழக்குரைஞர்கள் பல சமயங்களில் தங்கள் கட்சிக்காரரைக் காப்பதற்காக முற்றிலும் நடைமுறையில் வராத, தகுதியற்ற, எடுத்துக்கட்டிய அநீதிகளை நீதிமன்றத்தின் முன் வைக்கலாம்.

உதாரணமாக, **Calder v. Halket**[1] என்ற வழக்கில், கிழக்கிந்தியக் கம்பெனிச் சட்டம் 1780–ன்படி (East India Company Act, 1780) மாஜிஸ்ட்ரேட்டுகள் அலுவல் நிமித்தம் செய்யும் எந்தத் தவறுகளும், உரிமை தீங்குகளும் அவர்களை பாதிக்காது. இந்தச் சட்டப்பிரிவு, அவர்கள் அதிகார எல்லைக்குள் நல்லெண்ணத்துடன் செய்யப்பட்ட தவறுகளிடமிருந்து மட்டுமே பாதுகாப்பு அளிக்கிறது என்று பொருள் கொள்ளப்பட்டது.

அதுபோல், **Maxfield v. Llewellyn**[2] என்ற வழக்கில், ஒரு உரிமை தீங்கிற்காக, கூட்டாக தீங்கிழைத்தவர்கள், அந்த உரிமைத் தீங்கினால் பாதிக்கப் பட்டவருக்கு நஷ்ட ஈடு வழங்க வேண்டும் என்று நீதிமன்றம் தீர்ப்பளித்தது. இங்கு நஷ்ட ஈடு வழங்க வேண்டும் என்று கூறும் சட்டப் பிரிவின் பொதுப் பொருள்படி, நீதிமன்றம் சரி என்று கருதும் அளவில், தீங்கிற்கு காரணமானவர்களிடம் இருந்து அது நஷ்ட ஈட்டுத் தொகையை வசூலிக்கலாம் என்பதாகும். இதற்குப் பொருள் விளக்கமளிக்கும் பொழுது, தீங்கிற்கு காரணமானவர்கள் என்பது அனைவரையும் குறிக்குமா அல்லது நீதிமன்றத்தின் முன்கொண்டு வரப்பட்டுள்ளவர்கள் மட்டுமா என்பது பிரச்சனையாக்கப்பட்டது. நீதிமன்றம் தனது தீர்ப்பில், "நீதிமன்றத்தின் முன் விளக்கம் கூறுவதற்குச் சந்தர்ப்பம் அளிக்கப்படாத ஒரு நபரின் பொறுப்பைக் கணிப்பது நீதி வழங்கு முறையின் அடிப்படைக் கருத்துக்களைத் தகர்ப்பதாகும்",

1. 1840
2. 1961

என்று கூறியது. அதாவது, மேற்படி பிரிவிற்கு நேரடிப் பொருள் கொள்ளப்பட்டால், அது வழக்கில் சம்பந்தப்படாதவர்களிடமிருந்தும் 'தீங்கிற்கு காரணமானவர்கள்' என்பதின் கீழ் நஷ்டஈட்டை வசூலிக்க வழி வகுத்துவிடும். இது அநீதியை விளைவிப்பதாகும். எனவே, தவிர்க்கப்பட்டது.

இதுபோலவே அர்த்தமற்ற முட்டாள்தனமான செயலுக்கு அழைத்துச் செல்லும் பொருள் விளக்கத்தைக் கைவிட வேண்டும்.

உதாரணமாக, பொது மக்கள் சுகாதாரச் சட்டமானது (Public Health Act, 1875) நகராட்சி அமைப்புகள் 'தண்ணீர் விநியோகிக்கும் பணியில் ஈடுபட்டிருந்தால்' குழாய்கள் பதித்துக் கொள்வதற்குச் சில உரிமைகளை அளித்திருந்தது. இந்த உரிமையைப் பிரயோகிப்பதற்கு முன்பே, தண்ணீர் விநியோகிக்கும் பணியை நகராட்சி மேற்கொண்டிருந்தால்தான் அது அவர்கள் உரிமையாகும் என்று கூறப்பட்ட வாதம் பொருளற்றதும் முட்டாள்தனமானதாகும் என்று தீர்ப்பு கூறப்பட்டது. ஏனென்றால், குழாயை பதிப்பதற்கு முன்பே, எப்படி தண்ணீரை விநியோகிக்கும் பணியைச் செய்வது ?

4. ஒருவருடைய தவறு அவருக்கே பயன்தரும் முறையை எதிர்க்கும் அனுமானம் (Presumption against permitting advantage from one's own wrong) :

ஒருவருடைய தவறு அவர் ஆற்றவேண்டிய கடமையிலிருந்து விடுப்பு கொடுக்கும் வகையிலான அல்லது அவருடைய தவறு அவருக்கே பயனளிக்கும் வகையிலான சட்டப் பொருள் விளக்கங்கள் தவறு என்பது ஏற்றுக் கொள்ளப்பட்ட அனுமானமாகும். ஏனெனில் இவை அனுமதிக்கப்பட்டால், அது சட்டத்தின் நோக்கத்தைச் சிதைப்பதாகவும், மற்றவர்களும் அதுபோல் செய்து சட்டத்தை மீறுவதற்கு முன்மாதிரியாகவும் அமைந்துவிடும்.

உதாரணமாக, Dulton v. Atkins[1] என்ற வழக்கில், தடுப்பூசிச் சட்டமானது (Vaccination Act), ஒரு நீதிபதி, பெற்றோரை அவர் குழந்தையுடன் தம்முன் தோன்றுவதற்கு ஆணை பிறப்பிக்கவும், அவ்வாறு தோன்றியபின் குழந்தைக்குத் தடுப்பூசி போடப்படாமல் இருந்தால் போடும்படி செய்ய உத்தரவு பிறப்பிக்கவும் அதிகாரம் அளித்தது. குழந்தையுடன் தோன்றினால்தான் இந்த உத்தரவைப் பிறப்பிக்க முடியும் என்ற வாதம் தள்ளப்பட்டது. இவ்வாதம் ஒப்புக் கொள்ளப்பட்டால் 'குழந்தையுடன் வராமல்' இருக்கும் தவற்றைச் செய்த பெற்றோருக்கு அத்தவறே பலனளிக்கும் விதத்தில் அமையும். மேலும் சட்டத்தின் நோக்கமும் முழுமை அடையாது.

அதுபோல், **London School Board v. Wood** என்ற வழக்கில், பிரதிவாதி, பள்ளிக்கட்டணம் செலுத்தாமலேயே தனது குழந்தையை பள்ளிக்கு

1. 1871

தொடர்ந்து அனுப்பினார். எனவே பள்ளிக் கட்டணம் செலுத்தக் கோரி, பள்ளி நிருவாகம் (வாதி), அவர் மீது வழக்குத் தொடர்ந்தது. இங்கு பிரதிவாதி புரிந்த எதிர்வாதம் என்னவென்றால், "ஒவ்வொரு பெற்றோரும் தத்தம் குழந்தையை பள்ளிக்கு அனுப்புதல் வேண்டும் என்று சட்டம் கூறியுள்ளது; எனவே, சட்டத்தை மீறாத குடிமகனாகிய நான், எனது குழந்தையை பள்ளிக்கு அனுப்பியுள்ளேன். நான் செய்த தவறு, கட்டணம் ஏதும் செலுத்தாதது. ஏனெனில் கட்டணம் ஏதும் கட்டச் சொல்லி அச்சட்டத்தில் கூறப்படவில்லை. எனவே, என்னிடம் கட்டணம் ஏதும் பள்ளி நிருவாகம் கோர முடியாது" என்று வாதிட்டார். சற்று வேடிக்கையான வாதம்தான். மேற்கண்ட சட்டப்படி இவ்வழக்கை தீர்மானித்தால், பிரதிவாதி கட்டணம் செலுத்தாமல், குழந்தையை சட்டப்படி பள்ளிக்கு அனுப்பியது சரிதான் என்ற பொருள் விளக்கம் வரும். ஆனால், இப்பொருள் விளக்கம், கட்டணம் செலுத்தத் தவறிய அப்பிரதிவாதிக்கே நன்மை அளிப்பதாக உள்ளது. எனவே, இவ்வாறு தவறு செய்தவனுக்கே அத்தவறு நன்மை அளிக்கும் பொருள் விளக்கத்திற்கு எதிரான அனுமானம் இங்கு மேற்கண்டவாறு பின்பற்றப்பட்டது. இறுதியில் பள்ளிக் கட்டணம் செலுத்துமாறு பிரதிவாதிக்கு நீதிமன்றம் உத்திரவிட்டது.

-o0o-

8

சட்டத்தின் முன்மேவு ஆளுகை [Retrospective Operation of Law]

58. "No Statute shall be construed to have a retrospective operation unless such a construction appears very clearly in the terms of the Act" - Comment. ("எந்த ஒரு செய் சட்டத்திலும் குறிப்பாக முன்மேவு ஆளுகை கூறப்பட்டிருந்தால் ஒழிய, சட்டங்களுக்கு முன்மேவு ஆளுகை கொடுக்கப்படக் கூடாது"– விமர்சிக்க.)

(அல்லது)

Can a statute operate retrospectively ? Whar are the general principles relating to this? (இயற்சட்டம் பின்மேவு செயலாக்கப்படலாமா? அது சம்பந்தமான பொதுக் கொள்கைகள் யாவை?)

(அல்லது)

"Every statute is primafacie prospective unless it is expressly or by necessary implication made to have retrospective operation" - Discuss. ("இயற்சட்டம் ஒவ்வொன்றும் வெளிப்படையாகவோ அல்லது மறைமுகமாகவோ பின்மேவு செயலுறுத்தம் செய்யப்படாத வரையில், முதல் நோக்கில் முன்மேவு செயலுறுத்தம் உடையதாகும்" – விவாதிக்க.)

(அல்லது)

Distinguish prospective operation of statutes from retrospective operation. State the rules which govern them. What is its effect on alteration in substative and procedural law? (வருமேவு ஆளுகை மற்றும் முன்மேவு ஆளுகையை வேறுபடுத்துக. அவற்றை வழி நடத்தும் விதிகளைக் குறிப்பிடுக. நிலைமுறை மற்றும் நடைமுறை சட்டத்தில் செய்யப்படும் மாற்றங்களில் அவற்றின் விளைவு யாது?)

(அல்லது)

State the general principles regarding the operation of Statutes and discuss the circumstances under which retrospective operation of statutes is permissible. (செய்சட்டம் நடைமுறைக்கு வருதல் குறித்த பொது விதிகளை கூறுக. எச்சூழ்நிலைகளில் செய்சட்டத்தின் பின்மேவு ஆளுகை நடைமுறைப்படுத்தல் அனுமதிக்கப்படுகிறது என்பதை விவாதிக்க.)

(அல்லது)

Retrospective operation - Write short notes. (முன்மேவு ஆளுகை – சிறு குறிப்பு எழுதுக.)

சட்டத்தின் ஆளுகை – விளக்கம் :

பொதுவாக ஒரு சட்டத்திற்கு இரண்டு விதமான ஆளுகைகள் உண்டு. (1) வருமேவு ஆளுகை (Prospective Effect); (2) முன்மேவு ஆளுகை (Retrospective Effect). **வருமேவு ஆளுகை என்பது,** ஒரு சட்டம் இயற்றப்பட்ட பிறகு தோன்றும் வழக்குகளுக்கும் மற்றும் சம்பவங்களுக்கும் அச்சட்டம் பொருந்துவதாகும். **முன்மேவு ஆளுகை என்பது,** ஒரு சட்டம் இயற்றப்படுவதற்கு முன் தோன்றிய வழக்குகளுக்கும் மற்றும் நடந்த சம்பவங்களுக்கும் அச்சட்டம் பொருந்துவதாகும்.

இதில் வருமேவு ஆளுகை பெரும்பாலும் அனைத்து சட்டங்களுக்கும் உள்ளது. ஆனால் முன்மேவு ஆளுகை அச்சட்டத்தில் குறிப்பாக கூறப்பட்டிருந்தால் தான் உண்டு. அப்படிக் குறிப்பிடாவிட்டால் முன்மேவு ஆளுகை இருப்பதாக அனுமானிக்கக் கூடாது.

முன்மேவு ஆளுகை – அடிப்படையான பொதுக் கோட்பாடு :

ஆங்கில சட்டமுறையின் அடிப்படை கோட்பாடுகளில் ஒன்றாக, "எந்த ஒரு செய் சட்டத்திலும் குறிப்பாக முன்மேவு ஆளுகை கூறப்பட்டிருந்தாலொழிய, சட்டங்களுக்கு முன்மேவு ஆளுகை கொடுக்கப்படக் கூடாது" என்பது கருதப்படுகிறது. அதுபோல், **"ஒரு சட்டத்திற்கு வெளிப்படையாகவோ அல்லது மறைமுகமாகவோ முன்மேவு ஆளுகை கொடுக்கப்படாத வரையில், முதல் நோக்கில் அது வருமேவு ஆளுகை உடையதாகும்."** சுருங்கக் கூறின், ஒரு சட்டத்திற்கு முன்மேவு ஆளுகை உண்டு என்பது அச்சட்டத்தில் ஒன்று வெளிப்படையாக கூறப்பட்டிருக்க வேண்டும் அல்லது அவ்வாறு கொடுக்கப்பட்டுள்ளது என்பதை அனுமானிக்கத்தக்க வகையில் மறைமுகமாகவோ (by necessary implication) இருக்க வேண்டும். அவ்வாறு இல்லையெனில், அச்சட்டத்திற்கு வருமேவு ஆளுகை மட்டுமே உண்டு என்று கொள்ள வேண்டும்.

முன்மேவு ஆளுகை - விளக்கம் :

அதாவது, பொதுவாக சட்டம் இயற்றப்பட்ட பிறகு, தோன்றும் வழக்குகள் மற்றும் சம்பவங்களுக்கு மட்டுமே அச்சட்டம் பொருந்தும். ஆனால் ஒரு சட்டம் முன்மேவு ஆளுகையைக் கொண்டிருக்கிறது என்றால் அச்சட்டம் இயற்றப்படுவதற்கு முன் இருந்த வழக்குகளுக்கும் அது பொருந்தும். இதில் ஒரு நிபந்தனை என்னவென்றால், அச்சட்டத்தில் அது முன்மேவு ஆளுகையை கொண்டிருக்கிறது என கூறப்பட்டிருக்க வேண்டும்.

முக்கிய வழக்குகள் :

In Re A Solicitor's clerk[1]

இவ்வழக்கில் ஒரு வக்கீல் குமாஸ்தா திருட்டுக் குற்றம் சம்மந்தமாக தண்டனை பெற்றார். ஆனால் அவருடைய திருட்டுக் குற்றம் வக்கீலுக்கோ அல்லது அவரது கட்சிக்காரருக்கோ சொந்தமான பொருள்கள் சம்மந்தமுடையது அல்ல. ஆகவே அவரை வக்கீல்கள் வேலைக்கு வைத்துக் கொள்ளக் கூடாது என வக்கீல் சட்டத்தின்படி (Solicitor's Act) ஆணை பிறப்பிக்க முடியவில்லை. ஆனால் இச்சம்பவத்திற்குப் பிறகு வக்கீல் சட்டத்தில் ஒரு திருத்தம் கொண்டு வரப்பட்டது. அதன்படி ஒரு வக்கீல் குமாஸ்தா யாருடைய பொருளைத் திருடினாலும், அவரை யாரும் வேலையில் வைத்துக் கொள்ளக்கூடாது என அத்திருத்தம் அமைந்திருந்தது. ஆனால் இத்திருத்தம் மேற்படி வக்கீல் குமாஸ்தாவை பாதிக்காது. அவர் மற்றொரு வக்கீலிடம் குமாஸ்தாவாக பணிபுரிய இன்னமும் தகுதியுடையவராகத்தான் இருக்கிறார் எனக் கூறப்பட்டது. ஏனெனில் வக்கீல்கள் சட்டத்தில் கொண்டு வரப்பட்ட மேற்படி திருத்தத்திற்கு முன்மேவு ஆளுகை கிடையாது. வருமேவு ஆளுகைதான் (Prospective Effect) உண்டு. ஆகவே அத்திருத்தத்திற்கு பிறகு எந்த ஒரு வக்கீல் குமாஸ்தாவாவது திருட்டுக் குற்றம் புரிந்தால் அவரைத்தான் யாரும் வேலைக்கு வைத்துக் கொள்ளக் கூடாது.

Gilmord v. Shuter

ஒரு திருமண உடன்படிக்கை எழுத்து மூலமாக இல்லையென்றால், அவ்வுடன்படிக்கை மீறப்படும்பொழுது அதனை மீறியவர் மீது எவ்வித சட்ட நடவடிக்கையும் எடுக்க முடியாது என 'மோசடிகள் சட்டம்' (Statutes of Frauds) கூறுகிறது. ஆனால் இச்சட்டம் இயற்றப்படுவதற்கு முன் செய்து கொள்ளப்பட்ட உடன் படிக்கைகளுக்கு இது பொருந்தாது, என மேற்படி வழக்கில் தீர்மானிக்கப்பட்டது.

Krishna Chandra v. Commissioner of Endowments[2]

ஒரு மடத்தின் பரம்பரை அறக்கட்டளைதாரர் (Hereditory Trustee)

1. 1957
2. A.I.R. 1976 Ori. 52

தன் வாரிசை நியமனம் செய்யும் பொழுது, அறக்கட்டளை ஆணையாளருக்கு அது குறித்து தகவல் தெரிவிக்க வேண்டும் என ஓரிஸ்ஸா இந்து சமய அறக்கட்டளைகள் சட்டம் கூறுகிறது. ஆனால் இதற்கு முன்மேவு ஆளுகை கிடையாது. வருமேவு ஆளுகைதான் (Prospective Effect) உண்டு என மேற்படி வழக்கில் முடிவு செய்யப் பட்டது. ஏனெனில் இச்சட்டத்தில் முன்மேவு ஆளுகை உண்டு என குறிப்பாக கூறப்பட்டிருக்கவில்லை.

மேல்முறையீடு செய்ய உரிமை (Right to Appeal) :

ஒரு கீழ் நீதிமன்றத்தின் தீர்ப்புக்கு எதிராக மேல்முறையீடு செய்த பின், புதிய ஒரு சட்டம் அல்லது ஒரு சட்டத் திருத்தம் அமலுக்கு வந்தாலும் முந்தைய சட்ட திட்டங்களின்படியே மேல்முறையீட்டு நீதிமன்றம், அதை ஆராய வேண்டும். ஆனால் நீதிமன்றங்களில் வழக்கு நடந்து கொண்டிருக்கும் பொழுது அதற்கு பொருந்தக்கூடிய விதத்தில் புதிய சட்டம் அல்லது சட்டத் திருத்தம் ஏற்படலாம். அச்சமயங்களில் இவ்விதி பயன்படாது.

முன்மேவு ஆளுகையினால் ஏற்படும் விளைவுகள் :

முன்மேவு ஆளுகையைச் செயல்படுத்தினால், அது கடந்த கால நடவடிக்கைகளையும், உரிமைகளையும், ஒப்பந்தங்களையும் பாதிக்கும். மேலும் புதிய உரிமைகளையோ, கடமைகளையோ, தகுதிகளையோ, தகுதியின்மையையோ, பழைய, முடிந்த நடவடிக்கைகளுக்குத் தோற்றுவிக்கலாம். ஆகையால், புதிய சட்டங்களில் முன்மேவு ஆளுகை தெளிவாகச் சொல்லப்படாத தருணங்களில், ஏற்கனவே நீதிமன்றங்களின் முன் இருக்கும் வழக்குகளை அவை தாக்கல் செய்யப் படும் போது இருந்த சட்ட திட்டங்களைக் கொண்டே தீர்வு செய்ய வேண்டும்.

முடிவுரை :

சட்டங்களுக்கு முன்மேவு ஆளுகையைக் கொடுப்பது அவ்வளவு நல்ல விளைவுகளை ஏற்படுத்தாது. மாறாக நீதிமன்றங்களின் பணி கூடும். வழக்குகளில் சிக்கல்களும், குழப்பங்களும் ஏற்படலாம்.

59. "If the enactment is expressed in a language which is fairly capable of either interpretation, it ought to be construed as prospective only" - Discuss. ("நியாயமாகப் பார்க்குங்கால், ஒரு சட்டம் இரண்டு விதமான பொருள் விளக்கங்களைத் தரத்தக்கதாக இயற்றப் பட்டிருக்குமாயின், அது எதிர்நோக்குடைய ஒன்று என்றுதான் பொருள் கொள்ளல் வேண்டும்"– விவாதிக்க.)

முன்னுரை :

பொதுவாக ஒரு சட்டத்திற்கு இரண்டு விதமான ஆளுகைகள் உண்டு. (1) வருமேவு ஆளுகை (Prospective Effect); (2) முன்மேவு ஆளுகை

(Retrospective Effect). வருமேவு ஆளுகை என்பது ஒரு சட்டம் இயற்றப்பட்ட பிறகு தோன்றும் வழக்குகளுக்கும் மற்றும் சம்பவங்களுக்கும் அச்சட்டம் பொருந்துவதாகும். முன்மேவு ஆளுகை என்பது ஒரு சட்டம் இயற்றப்படுவதற்கு முன் தோன்றிய வழக்குகளுக்கும் மற்றும் நடந்த சம்பவங்களுக்கும் அச்சட்டம் பொருந்துவதாகும். இதில் வருமேவு, அதாவது எதிர்நோக்குடைய ஆளுகை பெரும்பாலும் அனைத்துச் சட்டங்களுக்கும் உள்ளது. ஆனால் முன்மேவு ஆளுகை சட்டத்தில் குறிப்பாக கூறப்பட்டிருந்தால் உண்டு. அப்படிக் குறிப்பிடாவிட்டால் முன்மேவு ஆளுகை இருப்பதாக அனுமானிக்கக் கூடாது. இவற்றையெல்லாம் நாம் சென்ற வினாவிலேயே கண்டுள்ளோம்.

எவ்வாறு பொருள் கொள்வது ?

ஒரு சட்டம் இரண்டு விதமான பொருள் விளக்கங்களைத் தரத்தக்கதாக இயற்றப்பட்டிருக்குமாயின் அதனை எதிர்நோக்குடைய (வருமேவு ஆளுகை) ஒன்றாகத்தான் பொருள் கொள்ள வேண்டும். ஏனெனில் ஒவ்வொரு சட்டமும் எதிர்கால நிகழ்ச்சி களுக்கு பொருந்தக்கூடிய விதத்தில்தான் இயற்றப்படுகின்றன. ஆகவே முன்மேவு (Retospective) விளைவு தரத்தக்க வகையில் பொருள் கொள்ளக் கூடாது. ஆனால் இது பின்வரும் விதிவிலக்கிற்குட்பட்டது.

விதிவிலக்கு :

ஒரு சட்டத்தில், அதன் சட்டப்பிரிவுகளுக்கு முன்மேவு ஆளுகை கொடுக்கப்படலாம் என குறிப்பாக கூறப்பட்டிருப்பின், அதன் இரண்டு பொருள் விளக்கங்களில் சூழ்நிலைக்கு தக்கவாறு உள்ள முன்மேவு விளைவு தரக்கூடிய பொருள் விளக்கத்தை எடுத்துக் கொள்ளலாம். அதாவது அச்சட்டம் இயற்றப் படுவதற்கு முன்பு நடந்த நிகழ்ச்சிகள் மற்றும் சம்பவங்களுக்கு பொருந்தக்கூடிய விதத்தில் பொருள் கொள்ளுதலாகும். ஆனால் இவ்வகை பொருள் கொள்முறை சிக்கலையும், குழப்பத்தையும் உண்டு செய்யும். எனவே, இரண்டு பொருள் விளக்கம் தரக் கூடிய சட்டத்தை, எதிர் நோக்குடைய விளைவு தரக்கூடியதாக பொருள் கொள்வதே நலம்.

-o0o-

9

வரிச் சட்டங்களின் பொருள் விளக்கம் [Interpretation of Taxing Statutes]

60. "A Taxing Statute has to be strictly construed" - Elucidate. ("வரிச் சட்டம் ஒன்று கண்டிப்புடன் பொருள் கொள்ளப்பட வேண்டும்"– விளக்குக.)

(அல்லது)

How construction of Taxing Statutes are made by the courts? (வரிச் சட்டங்கள் நீதிமன்றங்களால் எவ்வாறு சட்ட விளக்கம் செய்யப்படுகின்றன?)

(அல்லது)

State and explain the general principles of interpretation of taxing statute. (வரிச் சட்டத்தினை பொருள் விளக்கம் செய்வதற்கான பொது விதிகளை குறிப்பிட்டு விளக்குக.)

(அல்லது)

Bring out the general rules relating to Interpretation of fiscal statutes. (வரிச் சட்டங்களுக்கு பொருள் விளக்கம் காண்பது குறித்தான பொதுவான விதிகளை வெளிக் கொணர்க.)

(அல்லது)

How Taxing Statutes are Interpreted ? Explain. (வரிச் சட்டங்கள் எவ்வாறு பொருள் விளக்கம் கொள்ளப்படுகின்றன ? விளக்குக.)

(அல்லது)

What are the rules followed by the courts while trying to interpret a taxing statute? (ஒரு வரிவிதிப்புச் சட்டத்தின் பொருள் விளக்கம் காணும்போது நீதிமன்றம் பின்பற்றும் விதிகள் யாவை?)

(அல்லது)

Why should a taxing statute be strictly construed? Give your reasons and illustrations in support of your answer. (ஏன் ஒரு வரிச் சட்டம் கண்டிப்புடன் பொருள் கொள்ளப்பட வேண்டும் ? உமது விடைக்கு துணையாக, உமது காரணங்களையும் மற்றும் எடுத்துக்காட்டுகளையும் தருக.)

(அல்லது)

Taxing statute - Write short notes. (வரிச் சட்டம் – சிறு குறிப்பு எழுதுக.)

விரி விதிப்பின் நோக்கம் :

ஒரு குடும்பத்தலைவர், தனது வீட்டு நிர்வாகத்தை நடத்த வேண்டுமெனில், அதற்கு பணம் தேவை. அப்பணத்திற்காக அவர் சம்பாதிக்க வேண்டும். அதுபோல் ஒரு அரசு, தனது நாட்டு நிர்வாகத்தை நடத்த வேண்டுமெனில், அதற்குப் பணம், அதாவது வருவாய் தேவை. அப்பணத்தை அரசு எவ்வாறு சம்பாதிக்கிறது என்றால், தனது நாட்டு மக்களின் மீது பல்வேறு வரிகளை விதித்து, அவ்வரிகளை மக்கள் செலுத்துவதின் மூலம், பெறுகிறது. அந்த வரித் தொகையை மீண்டும் மக்களின் நலனுக்காகவே, அரசு செலவழிக்கிறது. சுருங்கக்கூறின், மக்களின் நன்மைக்காக செலவழிப்பதற்கு, அரசு அம்மக்கள் மீதே விதிப்பது, 'வரி' எனப்படும். இதுதான் வரிவிதிப்பின் முக்கிய நோக்கமாகும்.

விரி விதிக்கும் சட்டங்கள் :

எவர் மீது வரி விதிக்கப்படுகிறது என்பதும், எந்நடவடிக்கை வரி விதிப்பிற்கு உள்ளாகிறது என்பதும், நாட்டின் சமூக, பொருளாதார மற்றும் நிருவாகத் தன்மைகளைச் சார்ந்துள்ளது. ஒரு மக்களாட்சி நாட்டில், எந்த மாதிரியான பொருளாதார மற்றும் சமூகக் கொள்கைகளைப் பின்பற்றுவது அல்லது எந்த விதமான நிருவாக முறையை கருத்தில் கொள்வது என்பனவற்றை தீர்மானிக்க வேண்டிய பொறுப்பு, பாராளுமன்றத்தின் கைகளில்தான் உள்ளது. எனவே, பாராளுமன்றம், தாம் தீர்மானித்த சமூக, பொருளாதார மற்றும் நிருவாக முறை கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டு, வரியை வசூலிக்க தக்க சட்டங்களை இயற்றுகிறது. இங்கு அத்தகு வரிச்சட்டங்களை எவ்வாறு பொருள் கொள்வது, என்ற வினா எழுகிறது. ஏனெனில், ஒருபுறம் வரி விதிப்பது என்பது, பொது மக்களை பணம் கேட்டு துன்புறுத்துவது போன்றதாகும். ஆனால் மறுபுறம், ஒரு நாடு, தனது நிருவாகத்தை நடத்துவதற்கு பணம் தேவை. அதுவும், திரும்ப பொது மக்களுக்கே பயன்படுத்தப்படுகிறது. எனவே, எந்த விதத்தில் பொருள் கொண்டால், அது இரண்டு நிலைக்கும் நியாயமாக இருக்கும் என்று கவனிக்க வேண்டியுள்ளது. அதற்கு பல வழக்குகளின் வழியாக உச்ச நீதிமன்றம் விளக்கமளித்துள்ளன. சற்று விரிவாகப் பின்வருமாறு.

வரிச் சட்டங்கள் கண்டிப்புடன் பொருள் கொள்ளப்பட வேண்டும் (Taxing Statutes should be construed strictly (or) Strict Construction to Taxing Statutes) :

முந்தய பத்தியில் கண்ட காரணத்திற்காக, வரிகளை விதிக்கும் வரிச் சட்டங்களை கண்டிப்பான முறையில் பொருள் கொள்ள வேண்டும்.

கண்டிப்பான பொருள் விளக்கம் (Strict Construction):

இங்கு 'கண்டிப்பான பொருள் விளக்கம்' (Strict Construction) என்பதன் விளக்கத்தை நாம் முதலில் அறிந்து கொள்ள வேண்டும். அதாவது, சட்டத்தின் வாசகத்தில் என்ன தெளிவாக கூறப்பட்டுள்ளதோ, அதை அவ்வாறே பொருள் கொள்ள வேண்டும். அதை விடுத்து, சட்ட வாசகத்தை, சட்டமன்றத்தின் நோக்கத்திற்கு தொடர்புபடுத்தி, வேறு விதமாகப் பொருள் கொள்ளக் கூடாது. இதுவே, கண்டிப்பான முறையில் பொருள் கொள்ளல் எனப்படுகிறது.

வரிச் சட்டங்களைப் பொறுத்தவரை, வரி செலுத்தப்பட வேண்டும் என்று அச்சட்டங்களில் தெள்ளத் தெளிவாக கூறப்பட்டிருந்தால் மட்டுமே, சம்பந்தப் பட்டவர் வரி செலுத்த வேண்டும், என்று பொருள் கொள்ள வேண்டும். அவ்வாறு இல்லையெனில், சட்ட வார்த்தைகளின் பொருளை நெகிழ்வித்து, வரி விதிக்கும் சட்டங்களின் நோக்கம், வரி விதிப்பதாகும்; எனவே, வரி செலுத்த வேண்டும், என்று பொருள் கொள்ளக் கூடாது. அதாவது, **வரிச் சட்டத்தின் வாசகத்தை (letter of the law)** மட்டுமே பார்க்கவேண்டுமேயொழிய, **அச்சட்டத்தின் உயிரோட்டத்தை (spirit of law)** பார்த்தல் கூடாது.

ஒரு வரிச் சட்டத்தின் மொழி நடையில், எவ்வித குழப்பமும் இல்லாமல், அது தன்னை எந்த விதத்திலும் வருத்திக் கொள்ளாமல், சம்பந்தப்பட்டவர்கள் வரி செலுத்த வேண்டும் என்று தெளிவாகக் கூறினாலன்றி, அவர்கள் மீது எவ்வித வரியையும் விதிக்க இயலாது. அவ்வாறு வரி விதிக்கும் எண்ணம் சட்டமன்றத்திற்கு இருந்ததா அல்லது இல்லையா என்பதை, அச்சட்டத்தில் உள்ள வார்த்தைகளின் இயற்கையான மற்றும் சாதாரணமான பொருளைக் கொண்டு மட்டுமே தீர்மானிக்க வேண்டும். இதை விடுத்து, வரி செலுத்துவது குறித்து எவ்வித அனுமானத்தையும் (presumption) செய்யக் கூடாது மற்றும் வேறுவிதமான பொருள் விளக்கத்தையும் தரக்கூடாது. அதுபோல், வரி செலுத்த வேண்டும் என்று உட்கிடையாகச் சொல்லப் பட்டது, என்றும் ஊகிக்கக்கூடாது. வரிச் சட்டத்தில், 'வரி செலுத்த வேண்டும்' என்று தெளிவாக இருந்தால் மட்டுமே, வரி செலுத்தும்படியிலான பொருள் கொள்ள வேண்டும். அவ்வாறு ஆணித்தரமாக இல்லையெனில், 'வரி செலுத்தும் பொறுப்பு' இல்லையென்றே பொருள் விளக்கம் தர வேண்டும். சுருங்கக்கூறின், வரிச் சட்டத்தின் வாசகங்கள் தெளிவாக இருக்கும் பொழுது, அதை அப்படியேதான் பொருள் கொள்ள வேண்டும். அச்சமயத்தில் ஏற்படும் எந்த விளைவைப் பற்றியும்

நீதிமன்றம் கவலைப்பட வேண்டியதில்லை. அச்சட்டத்தின் வட்டத்திற்குள் வராதவர்களை, அரசு கொண்டு வந்து, அவர்களிடமிருந்து வரி வசூல் செய்ய முயற்சித்தல் கூடாது.

மேற்கண்டவற்றை காணும்பொழுது, வரிச் சுமையை விதிக்கும் சட்டங்களை, அச்சட்டங்கள் எவர் மீது அச்சுமையை விதிக்கிறதோ, அவருக்கு சார்பாகவே கண்டிப்பான முறையில் பொருள் கொள்ளப்பட வேண்டும் என்பது தெளிவாகிறது.[1] ஆனால் அதே சமயத்தில் ஒரு வரிச் சட்டத்தின் மொழி நடையானது அரசிற்கு உதவி செய்யும் வண்ணம் இழுக்கப்படக் கூடாது; அதுபோல், வரி செலுத்த வேண்டியவருக்கு நலன் கிட்டும் வகையில் குறுக்கவும் கூடாது. சட்டத்தில் சொல்லியிருப்பதை, அவ்வாறே கொள்ள வேண்டும்.

இதனடிப்படையில், சில சமயங்களில் பின்வருமாறான ஒரு இக்கட்டான சூழ்நிலையும் ஏற்படுவதுண்டு. அதாவது, ஒரு வரிச் சட்டத்தில் பயன்படுத்தப்பட்டுள்ள மொழி நடையானது, பல தரத்தவரையும் வரி செலுத்தக் கோரும் வண்ணம் மிகவும் பரந்ததாக அமைந்திருப்பதாகக் கொள்வோம். ஆனால் அதே சமயத்தில் அவ்வரிச் சட்டத்தின் நோக்கத்திலோ, அவர்கள் அனைவரையும் வரி செலுத்தக் கோரும் எண்ணம் ஏதும் இல்லை. இங்கு நீதிமன்றம் எப்படி பொருள் விளக்கம் அளிப்பது? நாம் முன்னரே கண்டபடி, சட்டத்தின் மொழி நடையில் என்ன கூறப்பட்டுள்ளதோ, அதையே பின்பற்ற வேண்டும். அதன்படி, மேற்படி சட்டத்தின் நோக்கத்தில் அவ்வாறு இல்லாது போனாலும், சட்டத்தின் மொழி நடையில் பல தரத்தவரையும் வரி செலுத்தக் கோரியிருப்பதால், அவர்கள் அனைவரும் வரி செலுத்தத்தான் வேண்டும், என்றே நீதிமன்றம் பொருள் விளக்கம் அளிக்க வேண்டும். வேறுவிதமாக எதையும் கூற முடியாது. "எனது எஜமான், என்ன சொல்கிறாரோ, அதன்படி எல்லாம் நடப்பேன்" என்று சொன்னானாம் ஒரு பணியாள். அந்த எஜமானே, அவனை ஒரு உயரமான மலையிலிருந்து குதிக்கச் சொன்னானாம். வேறு வழியில்லை, எஜமானனுடைய வார்த்தைகளின்படி, அப்பணியாள் குதித்துத்தான் ஆக வேண்டும். இச்சூழ்நிலைதான், மேற்கண்ட பொருள் விளக்கத்திலும் நிலவுகிறது.

மேற்கண்ட இக்கட்டான சூழ்நிலையை தவிர்ப்பதற்கென, நீதிமன்றங்கள் பின்வரும் ஒரு உபாயத்தையும் கையாளுகிறது. எல்லாம் வரி செலுத்துபவர்களின் நன்மைக்காகத்தான். அதாவது, ஒரு வரிச் சட்டத்தின் வாசகங்களுக்கு, இரண்டு நியாயமான விதங்களில் பொருள் தரலாம் என்ற நிலை இருந்தால், அதுவும் அவ்வாசகங்களை கசக்கி பிழியாமல் இருப்பின், அவற்றில் எவர் மீது வரி விதிக்க அவ்வாசகம் சொல்கிறதோ, அவருக்கு சார்பாக உள்ள பொருள் விளக்கத்தையே, நீதிமன்றம் எடுத்துக் கொள்ள வேண்டும்.

அதுபோல், ஒரு வரிச் சட்டத்திற்கு பொருள் விளக்கம் அளிக்கும்

1. Statutes imposing pecuniary burdens are interpreted strictly in favour of those on whom the burden is desired to be imposed.

பொழுது, தகைமை நெறி பொருள் விளக்கத்தை (Equitable Construction) பயன்படுத்துதல் கூடாது. அதாவது நீதி, நேர்மை, நியாயம் என்பதற்கு இடமில்லை. சட்டம் என்ன கூறுகிறது என்றுதான் பார்க்க வேண்டும்.

மேலும் ஒரு வரிச் சட்டத்தை உட்கிடை குறிப்பின் (implication) மூலம் உய்த்துணர்ந்தோ அல்லது ஒப்புமைப்படுத்தி விரிவாக்கலின் (analogical extension) மூலமாகவோ பொருள் விளக்கம் தருதல் கூடாது.

இது தவிர, ஒரு வரிச் சட்டத்திற்கு முன்மேவும் அதிகாரம் (Retrospective operation) ஏதும் கிடையாது. பொதுவாக, ஒரு சாதாரண சட்டத்திற்கு முன்மேவும் அதிகாரம் கொடுக்கப்பட்டாலே, அது பல குழப்பங்களை விளைவிக்கும். இந்நிலையில், பணத்தை வரியாகச் செலுத்தக் கோரும் வரிச் சட்டங்களுக்கு முன்மேவும் அதிகாரம் கொடுக்கப்பட்டால், குழம்பம் தவிர, வேறு எதுவும் மிஞ்சாது.

மேற்கண்டவற்றை பார்க்கும் பொழுது, வரிச்சட்டங்களை மிக மிக கண்டிப்பான விதத்தில்தான் பொருள் கொள்ள வேண்டும் என்பது மிகத் தெளிவாகப் புலனாகும். இதில் எவ்வித சமரசத்திற்கும் இடமில்லை. இனி மேற்கண்ட கருத்துக்களை வலியுறுத்திய சில வழக்குகளை பின்வருமாறு காண்போம்.

வழக்குகள் :

New Piece Goods Bazaar Company v. Commissioner of Income Tax, Bombay[1]

மேற்படி வழக்கில் மேல்முறையீட்டாளர் நகராட்சி வரிகள் சிலவற்றையும், அசையாச் சொத்து வரிகள் சிலவற்றையும் கட்டினார். அப்பொழுது 1922 –ஆம் ஆண்டின் வருமான வரிச் சட்டத்தின் பிரிவுகள் 9(1) (iv) மற்றும் 9(1)(v)–படிக்கு சில தொகைகளை அவ்வரியிலிருந்து கழித்துக் (deductions) கொள்ளும்படி கோரினார். இதனை ஆராய்ந்த உச்ச நீதிமன்றம் மேல்முறையீட்டாளர் கோரியபடி, அவ்வாறு கழித்துக் கொள்வது, மேற்படி பிரிவு 9(1)(iv)–ன் கீழ் தெளிவாகவும், குழப்பமில்லாமலும் கூறப்பட்டிருப்பதால், அது அனுமதிக்கத்தக்கதே; மேல் முறையீட்டாளர் அந்த கழிவுத் தொகைகளை கோர உரிமை படைத்தவரே, என்று தீர்ப்பளித்தது. இங்கு, அச்சட்டத்தின் வாசகத்திலேயே அவ்வாறு கழித்துக் கொள்ள வேண்டும், என்ற சட்டமன்றத்தின் கருத்து தெளிவாக உள்ளது.

Union of India v. Commercial Tax Officer[2]

இவ்வழக்கின் பொருண்மைகள்படி, சில பொருட்கள் இந்திய அரசாங்கத்தின், தொழில் மற்றும் பொருள் வழங்கல் அமைச்சகத்திற்கு (Ministry of Industry and Supplies) விற்கப்பட்டன. அச்சமயத்தில் அங்கு எழுந்த வினா

1. A.I.R. 1955 S.C. 165
2. A.i.R. 1956 S.C. 202

என்னவென்றால், 1941–ஆம் ஆண்டின் வங்காள நிதி (விற்பனை வரி) சட்டத்தின் [Bengal Finance (Sales Tax) Act, 1941] பிரிவு 5(2)–ன் கீழ், மேற்கண்டவாறு விற்கப்பட்ட பொருட்களுக்கு விற்பனை வரி விலக்கு உண்டா என்பதுதான். ஏனெனில், பிரிவு 5(2)–ஆனது, இந்திய பொருள் சேமிப்புத் துறை (Indian Stores Department), இந்திய அரசின் மற்றும் இரயில்வே அல்லது நீர் போக்குவரத்து நிர்வாகத்தினரின் பொருள் வழங்கல் துறை ஆகியவற்றிற்கு (Supply Department of the Government of India and Administration of the Railway or Water Transport) விற்கப்படும் பொருட்களுக்கு விற்பனை வரி விலக்கு அளித்திருந்தது. இங்கு உயர் நீதிமன்றம், மேற்படி தொழில் மற்றும் பொருள் வழங்கல் அமைச்சகமானது, மேற்கண்ட இந்திய பொருள் சேமிப்புத் துறை அல்லது இந்திய பொருள் வழங்கல் துறையை ஒத்தது ஆகாது. எனவே அத்துறைகளுக்கு வரி விலக்கு அளிக்கப்பட்டுள்ளது போன்று, தொழில் மற்றும் பொருள் வழங்கல் அமைச்சகம் வாங்கிய பொருட்களுக்கு விற்பனை வரி விலக்கு அளிக்கப்பட முடியாது என்று தீர்ப்பளித்தது. இதை எதிர்த்து மேற்படி அமைச்சகம் உச்ச நீதிமன்றத்திற்கு மேல்முறையீடு செய்தது. ஆனால் உச்ச நீதிமன்றமும், உயர்நீதிமன்றம் கூறிய மேற்படி தீர்ப்பை அப்படியே ஊர்ஜிதம் செய்தது. உச்ச நீதிமன்றம் தனது தீர்ப்பில், மேற்படி பிரிவு 5(2)–ஆனது, மேற்கண்ட இரு துறைகளான இந்திய பொருள் சேமிப்புத் துறை மற்றும் இந்திய பொருள் வழங்கல் துறையை குறிப்பாகவும் தெளிவாகவும் குறிப்பிட்டு, அவற்றிற்கு விற்கப்படும் பொருட்களுக்கு விற்பனை வரி விலக்கு அளித்துள்ளது. அப்பிரிவில், மேற்படி தொழில் மற்றும் பொருள் வழங்கல் அமைச்சகமானது சேர்க்கப்பட வில்லை. எனவே, வரி விலக்கு அளிக்க இயலாது. ஒரு துறை, மற்றொரு துறையுடன் ஒத்ததாக உள்ளது என்ற ஒப்புமையின் (analogy) கீழ், வரியின் எவ்வித விலக்கையும் அளிக்க இயலாது அல்லது அரசின் ஒரு துறைக்கு வரி விலக்கு கொடுக்கப் பட்டிருக்கும் பொழுது, அதே அரசின் மற்றொரு துறைக்கும் வரி விலக்கு கொடுக்கப்பட வேண்டும், என சட்டப் பிரிவை இழுத்துப் (extension) பொருள் தர முடியாது. மேற்படி தொழில் மற்றும் பொருள் வழங்கல் அமைச்சகத்திற்கு, விற்பனைவரி விலக்கு தர வேண்டும் என்று சட்டமன்றம் கருதியிருந்தால், மேற்படி அமைச்சகத்தின் பெயரை அப்பிரிவிலேயே தெளிவாகக் குறிப்பிட்டிருக்குமே! அது, அவ்வாறு செய்யாததால், தொழில் மற்றும் பொருள் வழங்கல் அமைச்சகத்திற்கு விற்பனை வரி விலக்கு அளிக்க இயலாது, என்றது.

Income Tax Commissioner v. Shahzadanand[1]

இவ்வழக்கில் ஒரு வரி விதிப்பு குறித்து, தகைமை நெறி ஏதும் கிடையாது. சட்ட நெறிதான் பின்பற்றப்பட வேண்டும். அதுபோல் ஒரு வரி விதிப்பு குறித்து அனுமானங்கள் ஏதும் செய்து கொள்ளக் கூடாது; உட்கிடையாக சொல்லப்

1. A.I.R. 1966 S.C. 1342

பட்டுள்ளது என்று உய்த்துணரவும் கூடாது. ஒன்றே ஒன்று, அவ்வரிச் சட்டத்தின் வாசகத்தில் என்ன கூறப்பட்டுள்ளதோ அதை மட்டுமே பார்க்க வேண்டும், என உச்ச நீதிமன்றம் கூறியது.

Baidyanath Ayurved Bhavan v. Excise Commissioner, Uttar Pradesh[1]

இவ்வழக்கின் பொருண்மைகள்படி, மேல்முறையீடு செய்துள்ள நிறுவனமானது, 'டிங்சர்' (tincture) மற்றும் 'ஸ்பிரிட்' (spirit) ஆகியவை அடங்கிய சில மருந்துகளை தயார் செய்தது. மேற்படி 'டிங்சர்' மற்றும் 'ஸ்பிரிட்டில்' 'ஆல்கஹால்' (alcohol) கலந்துள்ளபடியால், மேல்முறையீட்டாளர் நிறுவனம், 1955–ஆம் ஆண்டின் மருந்து சார்ந்த மற்றும் ஒப்பனைப் பொருள் தயாரிப்புகள் (ஆயத் தீர்வைகள்) சட்டத்தின் கீழ் [The Medicinal and Toilet Preparations (Excise Duties) Act, 1955], ஆயத் தீர்வை கட்டும்படி கோரப்பட்டார். ஆனால் இதை எதிர்த்து மேல்முறையீட்டாளர் வாதம் புரியும் பொழுது, மேற்படி சட்டத்தின் கீழ் 'ஆல்கஹால்' என்ற பதமானது, தூய ஆல்கஹாலையே (Pure Alcohol) குறிப்பிடுகிறது; மேற்படி தூய ஆல்கஹால், தங்களது மருந்து தயாரிப்புகளில் பயன்படுத்தப்படவில்லை; எனவே எவ்வித தீர்வையையும் விதிக்க இயலாது, என்று கூறியது. இங்கு வரிச் சட்டத்திற்கு பொருள் விளக்கம் அளிக்க வேண்டியிருப்பதால், மேற்படி 'ஆல்கஹால்' என்ற பதத்திற்கு பொருள் விளக்கமளிக்கும் பொழுது, வரி செலுத்தக் கோரப்பட்ட நிலையில் உள்ள தமக்குச் சாதகமாக கண்டிப்பான முறையிலேயே, பொருள் கொள்ள வேண்டுமென மேல்முறையீட்டாளர் மேலும் வாதம் புரிந்தார். ஆனால் இவ்வாதத்தை உச்ச நீதிமன்றம் நிராகரித்து விட்டது. அது தனது தீர்ப்பில், வரி விதிக்கும் சட்டங்களைக் கண்டிப்பான முறையில் பொருள் கொள்ளுதல் கோட்பாடு என்பது, சட்ட வாசகத்தின்படி வரி செலுத்தக் கோரப்பட்டிருப்பவர்கள், வரி செலுத்தியே தீர வேண்டும்; இரண்டு பொருள் விளக்கங்கள் தரக்கூடிய நிலை இருப்பின், அவற்றில் எது வரி செலுத்தக் கோரப்பட்டிருப்பவருக்கு சாதகமாக உள்ளதோ, அப்பொருள் விளக்கத்தை எடுத்துக் கொள்ள வேண்டும், என்று கூறியது. இங்கு 'ஆல்கஹால்' என்ற பதத்திற்கு இரண்டு பொருள் விளக்கங்கள் அளிக்கக் கூடிய வாய்ப்பேதும் இல்லை. ஏனெனில், அது, தெளிவான மற்றும் குழப்பமற்ற பொருளைக் கொண்டுள்ளது. ஒரு மருந்தோ அல்லது ஒப்பனைப் பொருள் தயாரிப்போ, 'ஆல்கஹாலை' உள்ளடக்கி இருப்பின், அது மேற்படி சட்டத்தின் கீழ் ஆயத் தீர்வைக்கு உட்பட்டதாகும். எனவே, ஒரு மருந்து, தூய ஆல்கஹாலைக் கொண்டிருக்கிறதா அல்லது ஆல்கஹாலின் குணமுடைய சில சாரம்சத்தை கொண்டுள்ளதா என்பது குறித்து ஆராய்வது, தேவையில்லாததாகும். வரிச் சட்டம் ஒன்றில் பயன்படுத்தப்பட்டுள்ள வாசகத்திற்கு, இரண்டு பொருள் விளக்கங்கள்

1. A.I.R. 1971 S.C. 374

தரலாம் என்ற சூழ்நிலைகளில் மட்டுமே, வரி விதிக்கப்பட்டுள்ளவருக்கு சாதகமாக உள்ள பொருள் விளக்கத்தை எடுத்துக் கொள்ள வேண்டும். இந்த எல்லைக்குட் பட்டுதான், வரிச் சட்டத்தை, வரிவிதிக்கப்பட்டவருக்கு சாதகமாக கண்டிப்புடன் பொருள் கொள்ளும் நிலை உள்ளது. மேற்படி வழக்கில், இம்மாதிரியான சூழ்நிலை ஏதும் இல்லாததால், மேற்படி சட்டத்தின் கீழ், ஆயத் தீர்வை கட்ட மேற்படி மேல்முறையீட்டாளருக்கு உச்ச நீதிமன்றம் உத்திரவிட்டது.

Commissioner of Wealth Tax v. Kripa Shankar[1]

வரி விதிக்கும் சட்டப் பிரிவுகளை நீதிமன்றங்கள் கண்டிப்பான முறையில் பொருள் கொள்ள வேண்டும். அச்சட்டப் பிரிவுகளில் குழப்பங்கள் ஏதும் இருப்பின், அதன் பலன், வரி விதிக்கப்பட்டவருக்கு சாதகமாக அளிக்கப்பட வேண்டும். அதாவது, வரி விதிக்கப்பட்டவருக்கு சாதகமாக பொருள் விளக்கம் தரப்பட வேண்டும். ஆனால் அதே சமயத்தில் அப்பொருள் விளக்கம், காரண–காரிய தொடர்புடையதாக இருக்க வேண்டும், என்று மேற்படி வழக்கில் உச்ச நீதிமன்றம் கூறியது.

M/s. Goodyear India Ltd. v. State of Haryana[2]

இவ்வழக்கில் வரிச் சட்டங்கள் கண்டிப்புடன் பொருள் கொள்ளப்பட வேண்டும் என்றும், வார்த்தைகள் என்ன சொல்லுகிறதோ, அதைத்தான் அவற்றின் பொருளாகக் கொள்ள வேண்டுமென்றும், எதையும் ஊகித்தல் கூடாது; உட்கிடையாக உள்ளது என்று கூறக் கூடாது என்றும், இதற்கெல்லாம் அவ்வரிச் சட்டத்தின் மொழிநடைதான் சரியானதைச் சுட்டிக்காட்ட பயன்படுத்தப்பட வேண்டிய உண்மையான சோதனை என்றும், உச்ச நீதிமன்றம் கூறியது.

இவ்வாறு ஒன்றல்ல, இரண்டல்ல, பல வழக்குகள் உள்ளன. **(நமது விடைக்கு இந்த அளவு போதும் – ஆசிரியர்.)**

நலன் தரும் பொருள் விளக்கம் (Beneficial Construction) :

வரிச் சட்டங்களுக்கு கண்டிப்பான முறையில் பொருள் விளக்கம் தரப்பட வேண்டுமென்றும், வரிச் சட்டப் பிரிவில் குழப்பமில்லாமல், தெளிவாக என்ன கூறப்பட்டுள்ளதோ அதை எடுத்துக் கொள்ள வேண்டுமென்றும் இதுகாறும் கண்டோம்.

அதே சமயத்தில், வரிச் சட்டங்களுக்கு, வரி விதிக்கப்பட்டவர்களுக்கு நலன் தரும் வகையிலும் பொருள் விளக்கம் தரலாம், என்று உச்ச நீதிமன்றம் பல வழக்குகளில் குறிப்பிட்டுள்ளது.

---

1. A.I.R. 1971 S.C. 2463
2. A.I.R. 1980 S.C. 891

வழக்குகள் :

Kv. Vishwanath Singh v. The State[1]

இவ்வழக்கில், வரிச் சட்டம் ஒன்றிற்கு பொருள் விளக்கம் தரும் பொழுது, அது அரசுக்கு நலன் தருவதைவிட, வரி விதிக்கப்பட்டவர்களுக்கு நலன் தருவதாக இருத்தல் வேண்டும், என்று கூறப்பட்டது.

Diwan Brothers v. Central Bank of India[2]

இவ்வழக்கில், வரிச் சட்டத்திற்கு கண்டிப்புடன் பொருள் விளக்கம் தரப்பட வேண்டும்; அப்படி பொருள் விளக்கம் தரும் பொழுது, சந்தேகங்கள் ஏதும் எழுந்தால், அந்த சந்தேகத்தின் பலனை வரி விதிக்கப்பட்டவருக்கு சாதகமாக அளிக்க வேண்டும்; என்று உச்ச நீதிமன்றம் கூறியது.

Collector of Estate Duty v. Alladi Kuppusamy[3]

மேற்படி வழக்கில், வரிச் சட்டத்தின் மொழி நடையில் குழப்பங்கள் இருந்து, அதற்கு இரண்டு நியாயமான பொருள் விளக்கங்கள் தரலாம் என்றிருந்தால், வரி விதிக்கப்பட்டவருக்கு நலன் தரக்கூடிய பொருள் விளக்கத்தையே நீதிமன்றங்கள் ஏற்க வேண்டுமென, உச்ச நீதிமன்றம் கூறியது. (ஆனால் மேற்படி வழக்கின் பொருண்மைகள்படி, அப்படிப்பட்ட சூழ்நிலை ஏதும் இல்லை).

A.V. Frenandaz v. The State of Kerala[4]

ஒரு வரிச் சட்டத்தின் நான்கு மூலைகளுக்குள், ஒரு வழக்கு வருகின்றது என வருவாய்த் துறையினர் நீதிமன்றத்தின் முன்னர் எடுத்துக் காட்டினால், சம்பந்தப்பட்டவர் வரி செலுத்த வேண்டும் என்று அந்நீதிமன்றம் பொருள் விளக்கம் தரலாம். ஆனால் அதே சமயத்தில், அந்நான்கு மூலைகளுக்குள் அவ்வழக்கு வரவில்லையென்றால், சட்டமன்றத்தின் கருத்து என்னவாக இருந்தது என்பதின் ஊகிப்பதின் (inference) மூலமாகவோ அல்லது ஒப்புமைப் படுத்துவதின் (analogy) வாயிலாகவோ அல்லது புலனாய்வு (Probe) செய்வதின் மூலமாகவோ அறிந்து வரி ஏதும் அக்குடிமகன் மீது விதித்தல் கூடாது, என்று உச்ச நீதிமன்றம் கூறியது.

முடிவுரை :

'சட்டப் பொருள் விளக்கம்' எனும் இயலுக்கு முன்னுரை தந்தவர் அறிஞர் **மேக்ஸ்வெல் (Maxwell)** அவர்கள். எனவே, அவரை முடிவுரைக்கு அழைப்பதிலும்

1. 1959 All. L.J. 633
2. A.I.R. 1976 S.C. 1503
3. A.I.R. 1977 S.C. 2069
4. A.I.R. 1957 S.C. 657

தவறொன்றுமில்லை. அவாது கூற்றின்படி, "..... குடிமகன் மீது விதிக்கப்படும் அனைத்து வரிகளும், தெளிவான மற்றும் குழப்பமில்லாத மொழி நடையில் இருத்தல் வேண்டும், என்பது சட்டம் நன்கு ஏற்றுக் கொண்ட ஒன்றாகும். ஏனெனில் சில கோணங்களில், அவ்வரிகள், குடிமகன் மீது விதிக்கப்படும் தண்டத் தொகையாக உள்ளது. சட்டத்தின் மொழி நடையானது, வரி செலுத்த வேண்டும் என்கிற கடப்பாட்டை தெளிவாக விதிக்காதபட்சத்தில், எக்குடிமகனும் வரி செலுத்தக் கட்டாயப்படுத்தப்படக் கூடாது. மேலும் ஒரு நடவடிக்கை மீது வரி விதிக்கும் வண்ணம், அம்மொழி நடையை கசக்கி துன்புறுத்தக் கூடாது. ஏனெனில், வரி விதிக்கப்பட வேண்டும் என்கிற எண்ணம் சட்டமன்றத்திற்கு இருந்திருப்பின், அதை சரியான வார்த்தைகளின் வழியாக சட்டமன்றம் சொல்லியிருக்குமே"[1] என்கிறார். இவ்வாறு வரி விதிக்கப்பட்டவர்களுக்கு நலன் சேர்க்கும் விதத்தில் கருத்துக்களைக் கூறிய அதே அறிஞர் **மேக்ஸ்வெல்** அவர்களே பின்வருமாறும் கூறுகிறார். அதாவது, "பொருள் விளக்கத்தின் இந்த கண்டிப்பான தன்மையானது, குடிமகனுக்கு எப்பொழுதுமே நலன் தரக்கூடியது என உறுதியளிக்க இயலாது; ஏனெனில், வரி விதிக்கப்பட வேண்டிய ஒரு நபர், சம்பந்தப்பட்ட வரிச் சட்டத்தின் வாசகத்திற்குள் வந்துவிட்டால், அதனால் நீதிபதியின் மனதிற்கு தெரியும் கஷ்டங்கள் எவ்வளவு பெரிதாக இருப்பினும் கூட, அவர் மீது வரி விதிக்கப்பட்டே ஆக வேண்டும்[2]", என்கிறார் கற்றறிந்த அறிஞர் **மேக்ஸ்வெல்** அவர்கள்.

-o0o-

1. " .... It is well settled of law that all charges upon the subject must be imposed by clear and unambiguous language, because in some degree they operate as penalties; the subject is not to be taxed unless the language of the statute clearly imposes the obligation, and language must not be strained in order to tax a transaction which, and the legislature thought of, it would have been covered by appropriate words" - **Maxwell. Interpretation of Statutes, 12th Edn. p. 256**
2. " this strictness of interpretation may not always ensure to the subject benefit, for, if a person sought to be taxed comes within the letter of the law, he must be taxed, however great the hardship may appear to the judicial mind" - **Maxwell. Interpretation of Statute - 12th Edn. p. 256**

10

தண்டனைச் சட்டங்களின் பொருள் விளக்கம் [Construction of Penal Statutes]

(அ) கண்டிப்பான பொருள் விளக்கம் [Strict Construction]

61. Explain the canons of construction applicable to penal statutes. (தண்டனைச் சட்டத்திற்கு பொருந்துகிற கட்டுமான விதிகளை விளக்குக.)

(அல்லது)

"If there are two reasonable constructions, we must give effect to the more lenient one. This is the settled rule for the construction of penal sections". Examine. ("இரண்டு நேரிய பொருள் விளக்கம் இருக்குமேயாயின், அவகைளில் அதிகமாக தளர்த்திவிடப்பட்ட ஒன்றையே பொருள் கொள்ள வேண்டும். தண்டனை விதிகளின் பொருள் விளக்கத்தில் இதுவே முடிவு செய்யப்பட்ட விதி". ஆராய்க.)

(அல்லது)

Describe the rules relating to the Construction of Penal laws. (தண்டனைச் சட்டங்களினுடைய பொருள் காண்பதற்கான விதிகளை விளக்குக.)

(அல்லது)

What are the general principles to be followed in the construction of statutes where punishments are provided?

(தண்டனைகள் கொடுக்கப்பட்டுள்ள சட்டத்தினை பொருள் கொள்ளுவதில் பின்பற்றப்பட வேண்டிய பொது கொள்கைகள் யாவை?)

(அல்லது)

Is a peanl statute capable of wider interpretation? If so in what circumstances? Explain with illustrations. (தண்டனைச் சட்டம் பரந்த பொருள் விளக்கத்திற்கு சாத்தியமானதா? ஆம் எனில் எந்த தருணங்களில்? உதாரணங்களுடன் விளக்குக.)

(அல்லது)

Construction of penal statute - Write short notes. (தண்டனைச் சட்டத்தின் பொருள் கொளல் – சிறு குறிப்பு எழுதுக.)

(அல்லது)

Critically examine with reason the statement that penal statutes must be construed strictly. (தண்டனைச் சட்டங்கள் கண்டிப்பான பொருள் விளக்கத்திற்கு உள்ளடங்கி பொருள் விளக்கம் செய்யப்பட வேண்டும் என்பதை காரணங்களோடு திறனாய்வு செய்க.)

(அல்லது)

How are penal statute construed ? (தண்டனைச் சட்டங்களுக்கு எவ்வாறு பொருள் விளக்கம் தரப்படுகிறது ?)

(அல்லது)

How construction of penal statutes are made by the courts? (தண்டனைச் சட்டங்கள் நீதிமன்றங்களால் எவ்வாறு சட்ட விளக்கம் செய்யப் படுகின்றன?)

(அல்லது)

Strict construction - Write short notes. (கண்டிப்பான பொருள் விளக்கம் – சிறு குறிப்பு எழுதுக.)

முன்னுரை :

குற்றங்களையும், அதற்குண்டான தண்டனைகளைப் பற்றியும் கூறுபவை தண்டனைச் சட்டங்கள் (Penal Statutes). ஒரு நபர் குற்றம் புரிந்துள்ளார், என்பது எவ்வித நியாயமான சந்தேகங்களுக்கும் இடமில்லாமல் மெய்ப்பிக்கப்படும் பொழுதுதான், அந்நபருக்கு தண்டனை விதிக்கப்படுகிறது. (The alleged guilty act must be proved beyond all reasonable doubts). இதுவே தண்டனை விதிப்பதற்குண்டான அடிப்படை விதியாகும். ஏனெனில், "**ஆயிரம் குற்றவாளிகள்**

தப்பி விடலாம்; ஆனால் ஒரு நிரபராதி தண்டிக்கப்பட்டுவிடக் கூடாது" என சட்டவியல் அறிஞர் பிளாக்ஸ்டோன் (Blackstone) குறிப்பிடுகிறார். இக்கொள்கை, தண்டனை விதித்து தீர்ப்பு வழங்கும் அனைத்து நீதிபதிகளின் மனதிலும் இருக்க வேண்டிய சூத்திரமாகும். எனவே, தண்டனைச் சட்டங்களை, "பத்தோடு பதினொன்று; அத்தோடு இதுவும் ஒன்று" என்ற விதத்தில் மேலெழுந்த வாரியாக பொருள் கொண்டு விடக்கூடாது. ஆழ்ந்த கவனமும், தேர்ந்த அறிவும் கொண்டு, கண்டிப்பான விதத்திலேயே (strictly) பொருள் கொள்ள வேண்டும்.

தண்டனைச் சட்டங்களுக்கு பொருள் விளக்கம் அளிப்பதற்குண்டான பொது விதிகள் அல்லது கோட்பாடுகள் (General Rules) :

நாம் மேலே கண்டவாறு, தண்டனைச் சட்டங்களுக்கு கண்டிப்பான முறையில்தான் பொருள் விளக்கம் வேண்டும், என்பது இது குறித்த பிற விதிகளுக்கெல்லாம், அடிப்படையான பொது விதியாகும். இங்கு கண்டிப்பான முறையில் பொருள் கொள்வது என்பது, குற்றஞ்சாட்டப்பட்டுள்ள நபருக்கு சாதகமாக, என்று பொருளாகும். ஏனெனில், இன்னென்ன செயல்கள், குற்றங்கள் என்று வரையறுத்துக் கூறுவதும், அதற்குண்டான தண்டனைகளை நிர்ணயித்து வெளியிடுவதும், சட்டமன்றத்தின் பணியாகுமே தவிர, நீதித்துறையின் பணி அன்று. சொல்லப்படாத ஒரு செயல் குற்றமென அறிவிக்க, நீதிமன்றங்களுக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டுவிட்டால், நீதிமன்றமும் தன் வசதிக்கேற்றபடி, சட்டத்தால் குற்றமென அறிவிக்கப்படாத செயல்களையும் குற்றமெனத் தீர்மானித்து, தண்டனை வழங்கிவிடக் கூடிய அபாயம் ஏற்பட்டு விடும். இதனால், ஒரு நிரபராதி கூட தண்டிக்கப்பட நேரிடலாம். எனவே, சட்டப் பிரிவுகளின் கீழ், குற்றமென ஒரு செயல் கொண்டு வரப்படாத சமயத்தில், நீதிமன்றங்கள் அச்செயலை குற்றமெனப் பொருள் கொள்ளுதல் கூடாது.

எனவே, மேற்கண்ட கண்டிப்பான பொருள் விளக்க விதிப்படி, ஒரு தண்டனைச் சட்டப் பிரிவில் அய்யப்பாடுகளோ அல்லது குழப்பங்களோ இருப்பதாக நீதிமன்றங்கள் கருதினால், அதன் பலனை குற்றஞ்சாட்டப்பட்ட நபருக்கு சாதகமாகவே வழங்கிடுதல் வேண்டும்.

மேலும், குற்றஞ் சாட்டப்பட்டவருக்கு தண்டனை வழங்கப்பட வேண்டியது தவிர்க்கப்பட வேண்டிய ஒன்று, என்று நியாயமான அடிப்படையில் அமைந்த பொருள் விளக்கம் கிடைக்குமானால், அதையே நீதிமன்றங்கள் கைக் கொள்ள வேண்டும்.

தண்டனைச் சட்டப் பிரிவு ஒன்றிற்கு இரண்டு நியாயமான பொருள் விளக்கங்கள் தரக்கூடிய சூழ்நிலை இருப்பின், அவற்றில் எப்பொருள் விளக்கம், குற்றஞ் சாட்டப்பட்ட நபருக்கு சாதகமாக உள்ளதோ அதையே நீதிமன்றங்கள் எடுத்துக் கொள்ள வேண்டும்.

குற்றஞ் சாட்டப்பட்ட நபரை தண்டிப்பதற்கு முன்னர், அவர் சம்பந்தப்பட்ட வழக்கானது, தண்டனைச் சட்டத்தின் சாதாரண வாசகங்களின் நான்கு மூலை களுக்குள் வருகின்றனவா, என்பதை ஆய்ந்தறிய வேண்டியது, நீதிமன்றங்களின் கடமையாகும்.

அறிஞர் மேக்ஸ்வெல் (Maxwell) கூறுவதாவது :

தண்டனைச் சட்டங்களுக்கு கண்டிப்பான முறையில் பொருள் விளக்கமளித்தல் என்பது, பின்வரும் நான்கு விஷயங்களை உள்ளடக்கியதாகும் என அறிஞர் மேக்ஸ்வெல்[1] கூறுகிறார். அவை,

1. குற்றமொன்றை உருவாக்க, வெளிப்படையான மொழி நடை அவசியம் (Express language for the creation of an offence) :

இதன்படி, தண்டனைச் சட்டத்தின் வார்த்தைகள், ஒரு செயலை குற்றமென வெளிப்படையாக அறிவிக்காத பொழுது, அதை குற்றமெனக் கொள்ளுதல் கூடாது. **"நெற்றிக்கண்ணைத் திறப்பினும் குற்றம் குற்றமே"** என்பதைப் போன்ற நக்கீர வாதங்கள் இங்கு எடுபடாது. சட்டத்தின் சாதாரண வார்த்தைகளின் கீழ், ஒரு செயல் குற்றமெனக் கூறப்பட்டுள்ளதா, என்பதையே பார்க்க வேண்டும்.

2. குற்றச் செயல் ஒன்றிற்கான உட்கூறுகளை அமைத்துக் கூறும் வார்த்தைகளை கண்டிப்பான முறையில் பொருள் கொள்ள வேண்டும். (Words setting out the elements of an offence must be strictly construed) :

'திருட்டு' எனும் குற்றத்திற்கு என்னென்ன உட்கூறுகள் (elements) தேவை, என்று இந்தியத் தண்டனைச் சட்டத்தின் 378–வது பிரிவு கூறுகிறது. அதன்படி (1) திருடப்பட்ட சொத்து அசையும் சொத்தாக இருக்க வேண்டும் (Movable Property), (2) யாருடைய உடமையிலாவது இருக்க வேண்டும். (Possession of any person). (3) அந்த நபரின் உடமையிலிருந்து அதை எடுத்துக் கொள்ள நேர்மையான எண்ணம் இருக்க வேண்டும் (Dishonest intention) (4) அவருடைய இசைவு இருக்கக் கூடாது (without his consent) (5) அப்படி எடுத்துக் கொள்ள அப்பொருளை நகர்த்த வேண்டும் (moving). இந்த அய்ந்து உட்கூறுகள் இருந்தால்தான், 'திருட்டு' எனும் குற்றச் செயல் முழுமையடைந்ததாகும். சம்பந்தப்பட்டவரையும் தண்டிக்க இயலும். எனவே, இந்த அய்ந்து உட்கூறுகளில், ஒன்று குறைந்தாலும், 'திருட்டுக்' குற்றம் ஏற்படாது.

இதுபோன்று பல குற்றங்களுக்கும், அதற்குண்டான உட்கூறுகள் உண்டு. எனவே, அத்தகு உட்கூறுகளை குறிப்பிட்டுக் கூறும் வார்த்தைகளை

1. Interpretation of Statutes, 12th Edn. pp. 239-240

கண்டிப்புடன் பொருள் கொள்ள வேண்டியது, மிக்க இன்றியமையாததாகும். ஒரு வேளை, மேற்கண்ட உட்கூறுகளைக் கூறும் வார்த்தைகளானது, இரு பொருள் தொணிக்கக் கூடிய தன்மை யுடையதாக இருப்பின், அதனை குற்றஞ்சாட்டப் பட்டவருக்கு சாதகமாகத்தான் தீர்மானிக்க வேண்டும். ஏனெனில், சம்பந்தப்பட்ட வழக்கு, அத்தண்டனைச் சட்டத்தின் வரம்பிற்குள் வருகிறதா, என்பதே அய்யப் பாட்டிற்கு இடமுடையதாக ஆகிவிடுகிறது அல்லவா ?

Smaje v. Balmer[1] என்ற வழக்கில், எழுந்த பிரச்சனை யாதெனில், 'கல்' (stone) எனும் வார்த்தை, 1916–ஆம் ஆண்டின் திருட்டுச் சட்டத்தின் (The Larceny Act, 1916) 28(1)–வது பிரிவின் கீழான "அபாயகரமான அல்லது குற்றமிழைப்பதற்குரிய ஆயுதம் அல்லது கருவி ஏதேனும்" (any dangerous or offensive weapon or instrument) என்ற வார்த்தைகளில் வரக்கூடியதாக என்பதுதான். 'கல்' என்ற வார்த்தை, மனித உயிருக்கு காயம் விளைவிப்பதற்கு பயன்படுத்தப்படக்கூடிய ஆயுதங்கள் அல்லது கருவிகளைக் குறிக்கும் வார்த்தைகளின் கீழ் வருவதில்லை, என நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

3.. தண்டனை விதிப்பதற்குமுன், அதற்குத் தேவையாக உள்ள முன் நிபந்தனைகள் கண்டிப்பாக பூர்த்தி செய்யப்பட்டிருக்க வேண்டும். (Before inflicting punishment, the conditions precedent should be strictly fulfilled) :

சம்பந்தப்பட்ட குற்ற வழக்கின் சூழ்நிலைகள், அத்தண்டனைச் சட்டத்தின் வார்த்தைகளுக்குள் திட்டவட்டமாக வந்துள்ளதா, என்பது குறித்து, நீதிமன்றம் ஆராய்ந்தறிந்து மனநிறைவு கொண்ட பிறகுதான் தண்டனையை விதிக்க வேண்டும். அதாவது, தண்டனை விதிக்கப்படுவதற்கு முன் எந்த நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்க வேண்டும் என்று சட்டத்தால் கூறப்பட்டுள்ளதோ, அவை பூர்த்தி செய்யப்பட்டிருப்பதாக நீதிமன்றம் அய்யமற அறிந்த பிறகுதான், தண்டனை விதித்து தீர்ப்பளிக்க வேண்டும். அவ்வாறு பூர்த்தியாகாமல் இருப்பின், அதன் பலனை குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு சாதகமாக்க வேண்டும்.

4. குற்றவியல் நடைமுறை மற்றும் அதிகாரவரம்பு குறித்த சட்ட நுணுக்கச் சார்ந்த வகைமுறைகளை கண்டிப்புடன் கடைப்பிடிக்க வேண்டும். (Technical provision concerning Criminal Procedure and Jurisdiction must be strictly observed) :

வழக்கு என்று வந்துவிட்டாலே, அங்கே பல வழக்கு நடைமுறைகள் உண்டு; அதுபோல் அவ்வழக்கு நடைமுறைகளை தகுந்த நீதிமன்றம் மேற்கொள்ள அதிகாரவரம்பும் உண்டு. அத்தகு நடைமுறைகள் மற்றும் அதிகாரவரம்பைக்

1. 1965 (2) All.E.R. 248

குறித்து, ஒரு சட்டத்தில் பல சட்டப்பிரிவுகள் குறிப்பிடுவதுண்டு. அவற்றில் சட்ட நுணுக்கங்கள் சார்ந்த, சட்டப் பிரிவுகளும் (வகைமுறைகளும்) சில இருப்பதுண்டு. எனவே, தண்டனை அளிப்பதற்கு முன் நடைமுறை மற்றும் அதிகாரவரம்பு குறித்த சட்ட நுணுக்கங்கள் சார்ந்த சட்டப் பிரிவுகள் சரிவர கடைப்பிடிக்கப்பட்டுள்ளனவா, என்பதை நீதிமன்றம் ஆய்ந்தறிதல் வேண்டும். அவ்வாறு கடைப்பிடிப்பதில் ஏதேனும் குளறுபடிகள் ஏற்பட்டிருந்தாலோ அல்லது அவ்வாறு கடைப்பிடிக்காத பொழுதோ, அதன் பலனை குற்றஞ்சாட்டப்பட்ட நபருக்குச் சாதகமாக்கி, அவரை அந்த சட்ட நுணுக்கத்தின் அடிப்படையில் (on technical ground of law) விடுதலை செய்வதைத் தவிர வேறு வழியில்லை.

சில வழக்குகள் :

Toleram v. State of Bombay[1]

இவ்வழக்கில், சிலருக்கு தண்டனை வழங்க வேண்டும் என்று சட்டமன்றம் கருதினால், அந்தக் கருத்தை அது, தனது சட்டத்தில் தெளிவான மற்றும் இரு பொருள் தராத மொழிநடையில், கூறியிருக்க வேண்டும், என்று உச்ச நீதிமன்றம் விளக்கமளித்தது.

Sarjoo Prasad v. State of Uttar Pradesh[2]

இவ்வழக்கில், சார்ஜோ பிரசாத் என்பவர் மேல்முறையீட்டாளர் ஆவார். அவர் ஒரு கடையில் பணி புரியும் பணியாளர். அவர், கலப்பட உணவுப் பொருட்களை விற்றதற்காக, 1954–ஆம் ஆண்டின் உணவு கலப்பட தடுப்புச் சட்டத்தின்படி, கீழ் நீதிமன்றத்தால் தண்டிக்கப்பட்டார். அதனை எதிர்த்து மேல் முறையீடு செய்யும் பொழுது, தன்னால் விற்கப்பட்ட உணவுப் பொருட்கள் கலப்பட-மானவை என்பது தமக்குத் தெரியாது என்றும், மேற்படி உணவுக் கலப்பட தடுப்புச் சட்டத்தின் 16–வது பிரிவின் கீழ் தம்மை தண்டிக்கக் கூடாது என்றும், ஏனெனில், அது ஒரு தண்டனைச் சட்டமென்றும், அதனால் அது கண்டிப்புடன் தனக்குச் சாதகமாகவே பொருள் கொள்ளப்பட வேண்டுமென்றும், எனவே தனது தண்டனையை இரத்து செய்ய வேண்டுமென்றும் வாதம் புரிந்தார். இங்கு, மேற்படி 16–வது பிரிவு, கலப்பட உணவுப் பொருளை விற்பது தண்டனைக்குரியது என்றும், 19–வது பிரிவு, கலப்பட உணவுப் பொருளை விற்பதில் 'குற்ற அறிவு' (guilty knowledge) இல்லை என்பதை ஒரு எதிர்வாதமாக கூற இயலாது, என்றும் கூறுகிறது. இச்சட்டப் பிரிவுகளுக்கு உச்ச நீதிமன்றம் பொருள் விளக்கமளிக்கும் பொழுது, அது பின்வருமாறு கூறியது. அதன்படி, தண்டனைச் சட்டத்தின் ஒரு பிரிவிற்கு, இரு நியாயமான பொருள் விளக்கங்கள் சாத்தியமாக இருப்பின், அவற்றில் குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு சாதகமாக இருப்பதைத்தான் கொள்ள

1. A.I.R. 1954 S.C. 496
2. A.I.R. 1961 S.C. 631

வேண்டும் என்றும், ஆனால் இவ்வழக்கிலோ மேற்கண்ட இரண்டு சட்டப் பிரிவுகளும் இரு பொருள் ஏதும் தரக்கூடிய விதத்தில் இல்லையென்றும், எனவே, அச்சட்டப் பிரிவுகளின் வரம்புகளுக்குள் மேல்முறையீட்டாளருக்கு எதிரான வழக்கு தெளிவாக வருகிறது என்றும், எனவே மேல்முறையீட்டாளருக்கு தண்டனை விதிக்கப் பட்டது சரிதான் என்றும் உச்ச நீதிமன்றம் பொருள் விளக்கமளித்து, அவரது மேல்முறையீட்டை தள்ளுபடி செய்தது. இங்கு அடிப்படையான விஷயம் யாதெனில், உணவுப் பொருள்களில் கலப்படம் செய்யப்பட்டுள்ளது என்ற விற்பவரின் அறிவானது, அவர் முதலாளியாக இருந்தாலும் சரி, அல்லது பணியாளராக இருந்தாலும் சரி – தண்டனை விதிப்பதற்கு சிறிதும் தொடர்புடையதாகாது, என மேற்படி இரண்டு சட்டப் பிரிவுகளும் தெளிவாக கூறுவதே ஆகும்.

M.V. Joshi v. M.U. Shimpi[1]

நாம் முன்கண்ட வழக்கைப் போலவே, இவ்வழக்கிலும் மேல் முறையீட்டாளர் கலப்பட **'வெண்ணெய்' (butter)** விற்றதற்காக, உணவுக் கலப்பட தடுப்புச் சட்டத்தின் கீழ் தண்டிக்கப்பட்டார். பின் வழக்கம் போல் மேல்முறையீடு. அதில் அவர், மேற்படி சட்டத்தின் கீழான விதிகளில், 'வெண்ணெய்' என்பது பாலிலிருந்து தயாரிக்கப்படும் வெண்ணெய் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றும், தான் தயிரிலிருந்து தயாரிக்கப்படும் வெண்ணையைத்தான் விற்றதாகவும், எனவே அந்த வெண்ணெய் மேற்படி விதிகளின் படியிலான 'வெண்ணெய்' ஆகாது என்றும், மேற்படி சட்டம் ஒரு தண்டனைச் சட்டம் என்பதால், தனக்குச் சாதகமாகவே பொருள் விளக்கம் கொள்ளப்பட்டு, தனது தண்டனையை இரத்து செய்ய வேண்டுமென்றும், வாதம் புரிந்தார். இந்த வாதத்தை ஏற்க மறுத்து, உச்ச நீதிமன்றம் பின்வருமாறு கூறியது. அதன்படி, கண்டிப்பான பொருள் விளக்கம் கொடுத்தல் என்பது, குற்றஞ்சாட்டப்பட்டவரின் தண்டனைக்கு வழிவகுத்த அவரது நடத்தையானது, தண்டனைச் சட்டத்தின் வாசகத்தின் சாதாரண வார்த்தைகளின் எல்லைக்குள் வர வேண்டும்; அதன் இயற்கையான பொருளுடன் இயைந்திருக்க வேண்டும். அவ்வாறு எப்பொழுது வரவில்லையோ அல்லது எப்பொழுது இரண்டு நியாயமான பொருள் விளக்கங்கள் சாத்தியமாக உள்ளதோ, அப்பொழுதுதான் குற்றஞ்சாட்டப் பட்டவருக்கு சாதகமாக பொருள் விளக்கமளிக்கவியலும். ஆனால், மேற்படி வழக்கிலோ, 'வெண்ணெய்' என்பதற்கு தெளிவான பொருள், சட்ட விதிகளில் மேற்கண்டவாறு தரப்பட்டுள்ளது. எனவே, இரு பொருள் நிலை ஏதுமில்லை. எனவே, குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு சாதகமாகப் பொருள் கொள்ளுதல் என்ற பேச்சுக்கே இடமில்லை. வெண்ணெய் என்பது பாலிலிருந்து தயாரிக்கப்பட்டாலும் சரி அல்லது தயிரிலிருந்து தயாரிக்கப்பட்டாலும் சரி, **'வெண்ணெய் வெண்ணெய்தான்'**, என உச்ச நீதிமன்றம் தெளிவாகக் கூறியது. தயிரிலிருந்து வெண்ணெய் தயாரிக்கப்பட்டது, என்ற மேல்முறையீட்டாளரின்

1. A.I.R. 1961 S.C. 1494

வாதம், மேற்படி விதிகளில் வரவில்லை. சட்டமன்றம், தான் என்ன சொல்ல வந்ததோ, அதை தெளிவான மொழிநடையில், அய்யப்பாட்டிற்கு இடமில்லாமல் கூறியுள்ளது. எனவே, வேறுவிதமான பொருள் விளக்கத்திற்கு இடமில்லை.

Sajan Singh v. State of Punjab[1]

இவ்வழக்கில், 1947–ஆம் ஆண்டின் ஊழல் தடுப்புச் சட்டத்தின் 5(3) வது பிரிவின் பொருள் விளக்கத்தில் சிக்கல் எழுந்தது. இச்சிக்கலை உச்ச நீதிமன்றம் தீர்க்கும்பொழுது, மேற்படி பிரிவு மெய்ப்பிக்கும் சுமை (burden of proof) குறித்த ஒரு சிறப்பு வகை பிரிவாகும். **எனவே, இரண்டு நியாயமான பொருள் விளக்கங்கள் சாத்தியமாக இருக்கும் பொழுது, குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு சாதகமாக உள்ள பொருள் விளக்கத்தையே எடுத்துக் கொள்ள வேண்டும்,** என்று கூறியது.

Ranjit v. State of Maharashtra[2]

இந்திய அரசாங்கத்தால் தடை செய்யப்பட்ட **Lady Chatterley's Lover** என்ற ஆபாசப் புத்தகத்தை விற்றதற்காக, ரஞ்சித் என்பவர் இந்திய தண்டனைச் சட்டப் பிரிவு 292–ன் கீழ் உயர் நீதிமன்றத்தில் தண்டிக்கப்பட்டார். இதை எதிர்த்து, ரஞ்சித் உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்தார். அங்கு குற்றவியல் சட்டத்தில், குற்றமொன்றிற்காக தண்டனை விதிக்கப்பட வேண்டுமெனில், குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு **'குற்ற மனம்' (mens rea)** இருந்தது என்பது மெய்ப்பிக்கப்பட வேண்டுமென்றும், தான் விற்ற புத்தகத்தில் ஆபாசமான விஷயங்கள் இருப்பதாக தமக்கு தெரியாது என்றும், எனவே, தனக்கு 'குற்ற மனம்' இருந்தது என்பதை அரசுத் தரப்பினர் மெய்ப்பிக்க தவறிவிட்டபடியால், தனது தண்டனையை இரத்து செய்ய வேண்டுமென, ரஞ்சித் வாதம் புரிந்தார். அவர் மேலும் வாதம் புரிகையில், இன்று புத்தகக் கடைகளில் பல புத்தகங்கள் விற்கப்படுகின்றன; அவை எல்லாவற்றையும் முதலில் கடைக்காரர் படித்து, அவற்றில் ஆபாசம் ஏதும் கலந்துள்ளதா என்று அறிந்து கொள்ள வேண்டும் என சட்டம் எதிர்ப்பார்ப்பது தவறு, என்று கூறினார். ஆனால் உச்ச நீதிமன்றமோ, அவரது வாதங்களை எல்லாம் நிராகரித்து விட்டு, பின்வருமாறு கூறியது. அதன்படி, மேற்படி பிரிவு 292–அய் சாதாரணமாக படிக்கும்பொழுதே, ஒருவரை தண்டிக்க, 'குற்றமனம்' இருந்தது என்பதை மெய்ப்பிக்க வேண்டிய அவசியமில்லை என்பது தெளிவாகத் தெரிகிறது என்றும், வெறுமனே ஆபாசப் புத்தகங்களை விற்கும் செயல் ஒன்று மட்டுமே சம்பந்தப்பட்டவரை தண்டனைக்குள்ளாக்கக் கூடியது என்றும், கூறியது. இரண்டு நியாயமான பொருள் விளக்கங்கள் இருக்கும் பொழுது மட்டுமே, அவற்றில் குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு சாதகமாக உள்ளவற்றை கொள்ள இயலும். ஆனால், இவ்வழக்கில், அவ்வாறான சாத்தியக்கூறுகள் ஏதுமில்லை. எனவே, மேற்படி சட்டப் பிரிவின் சாதாரண மொழிநடையின் கீழ்,

1. A.I.R. 1964 S.C. 464
2. A.I.R. 1965 S.C. 881

ரஞ்சித் குற்றம் செய்தவரே; எனவே அவர் தண்டிக்கப்படத்தக்கவரே என்று கூறி, அவரது மேல்முறையீட்டை உச்ச நீதிமன்றம் தள்ளுபடி செய்தது.

Assistant Collector of Customs v. Sitaram[1]

இவ்வழக்கில், கடத்தல் செய்யப்பட்ட சில பொருட்களை விற்றதற்காக, அவற்றை விற்றவரும், வாங்கியவரும் 1878-ஆம் ஆண்டின் கடல் சுங்க வரிச் சட்டத்தின் (Sea Customs Act, 1878) 167(8)-வது பிரிவின் கீழ் தண்டிக்கப்பட்டனர். மேல்முறையீட்டில், உயர்நீதி மன்றம் பின்வரும் அடிப்படையின் மீது அவர்களை விடுதலை செய்தது. அதாவது, மேற்படி பிரிவு 167(8) ஆனது சம்பந்தப்பட்ட பொருட்கள் 'கடத்தல் செய்யப்படும் பொழுது' (being smuggled) என்ற நிகழ்விற்கு மட்டுமே பொருந்துமேயொழிய, 'ஏற்கனவே கடத்தப்பட்ட' (already smuggled earlier) பொருட்களுக்குப் பொருந்தாது, என்று கூறுகிறது. இவ்வழக்கில், பொருட்கள் ஏற்கனவே கடத்தப்பட்டதாக உள்ளன; அவை விற்கப் பட்டும் – வாங்கப்பட்டும் உள்ளன. எனவே, இச்செயல் மேற்படி பிரிவின் வார்த்தை களுக்குள் வரவில்லை என்று உயர்நீதிமன்றம் கூறியது. திருவிளையாடலில், "நான் எழுதிய பாடலில் குற்றமா?" என்று சிவபெருமான் கேட்டதைப் போல, "நாம் பிடித்த வழக்கில் விடுதலையா?" என்று சுங்கவரி இலாகாவினர், மேற்படி விடுதலை உத்திரவை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்தனர். அங்கு, மேற்படி சட்டப் பிரிவின் வாசகங்களை சாதாரணமாகப் படிக்கும் பொழுது, 'ஏற்கனவே கடத்தப்பட்ட பொருட்களுக்கு' மேற்படி சட்டப் பிரிவு பொருந்தவில்லை என்பது தெளிவாக உள்ளது; எனவே, குற்றஞ் சாட்டப்பட்டவரின் நடத்தை, மேற்படி சட்டப் பிரிவின் வாசகத்திற்குள் வரவில்லை; எனவே, அதன் பலனை அவர்களுக்குச் சாதகமாகவே அளிக்க வேண்டுமெனக் கூறி, அவர்கள் குற்றமற்றவர்கள் என்று உச்ச நீதிமன்றமானது தீர்மானித்து, உயர் நீதிமன்றம் கூறிய விடுதலைத் தீர்ப்பை ஊர்ஜிதம் செய்தது.

Moli Bhai v. R. Prasad[2]

இவ்வழக்கில், ஒரு தண்டனைச் சட்டப் பிரிவின் எல்லையை, அப்பிரிவில் இல்லாத சொற்களைப் படிப்பதன் மூலம் விரித்துக் கொள்வது முறையல்ல, என உச்ச நீதிமன்றம் கூறி, அவ்வாறு அத்தண்டனைச் சட்டப் பிரிவின் பொருளை விரித்துப் படிக்க மறுத்து விட்டது.

இவ்வாறு **Nathulal v. State of Madhya Pradesh**[3], **Inder Sain v. State of Punjab**[4], **Mobarik Ali v. State of Bombay**[5] என

1. A.I.R. 1966 S.C. 955
2. (1970) I S.C. 3559
3. A.I.R. 1966 S.C. 43
4. (1973) 2 S.C.C. 372
5. A.I.R. 1957 S.C. 897

இன்னும் எத்தனையோ பல முக்கிய வழக்குகள் உள்ளன. அவற்றிலெல்லாம் தண்டனைச் சட்டத்தின் கடும் பொருள் விளக்கம் உச்ச நீதிமன்றத்தால் விளக்கப் பட்டது.

தற்காலத்திய போக்கு (Modern trend) :

முந்தய காலத்தில், தண்டனைகளின் தீவிரம் அதிகமாக இருந்தது. மரண தண்டனை, ஆயுள் சிறைவாசம், தனிமைச் சிறைவாசம் என்றெல்லாம் கடும் தண்டனைகள் இருந்தன. எனவே, தண்டனைச் சட்டங்களை கண்டிப்புடன் பொருள் கொள்ள வேண்டுமென்ற கட்டாயமும் இருந்தது. ஏனெனில், தண்டனைச் சட்ட வாசகத்தின் இயற்கையான பொருளில் வருபவர்களை மட்டுமே தண்டிக்க வேண்டும் என்ற கண்டிப்பான கொள்கை, பெரிதும் நிலவியது. இதனால் உண்மையில் குற்றம் செய்பவர்கள் கூட, சட்ட வாசகத்தின் எல்லைக்குள் தங்கள் செயல் வரவில்லை எனக் கூறி, தப்பித்துக் கொள்ளும் நிலை இருந்தது. ஆனால், தண்டனையைச் சட்டங்களின் தற்காலத்திய போக்கோ சிறிது சிறிதாக மாறி வருகிறது. தண்டனைகளில் கடுமை இல்லை. 'அரிதிலும் அரிதான வழக்குகளில்' (rarest of rare cases only) மட்டுமே மரண தண்டனை வழங்கப்பட வேண்டும், என்று உச்ச நீதிமன்றம் பல வழக்குகளில் வலியுறுத்தியுள்ளது. இது குறித்து, ஆளுநர் மற்றும் குடியரசுத் தலைவருக்கு கருணை மனு அனுப்புதலும் நடக்கிறது. நன்னடத்தை கண்காணிப்பு விடுதலை, இளஞ்சிறார் நீதிமன்றம் மற்றும் சீர்திருத்தப் பள்ளிகள் என எவ்வளவோ நெகிழ்வான போக்கு வந்துவிட்டன. சிறை சீர்திருத்தங்கள் பல கொண்டு வரப்பட்டுள்ளன. சிறைக் கல்வி மேம்பட்டு உள்ளது. 'தண்டிப்பது' என்பதைவிட 'சீர்திருத்துவது தான்' சிறந்தது என்ற குற்றவியல் தத்துவம் வேகமாக வளர்ந்து வருகிறது. சமீபத்தில்கூட உலகத்தை உலுக்கிய முன்னாள் பாரதப் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில், குற்றவாளிகளில் ஒருவரான நளினிக்கு விதிக்கப்பட்டிருந்த 'தூக்கு தண்டனை', கருணை மனுவின் அடிப்படையில் 'ஆயுள் தண்டனையாக' குறைக்கப்பட்டுள்ளது. எனவே, தண்டனைச் சட்டங்கள் மிகக் கடுமையான முறையில் தண்டனைகளை வழங்காத பொழுது, சட்ட வாசகத்தை (letter of law) மட்டும் பார்ப்பதை விட, 'குற்றங்களைத் தடுக்கத்தான் சட்டம் இயற்றப்பட்டுள்ளது' என்ற சட்டமன்றத்தின் கருத்தைக் (spirit of law) கண்டு அதற்கொப்ப பரந்த பொருள் விளக்கம் தரப்பட வேண்டும்; கண்டிப்பான பொருள் விளக்கத்தை அனைத்து நிகழ்வுகளிலும் பின்பற்றக் கூடாது என்ற கருத்து தற்பொழுது மேலோங்கி வருகிறது.

அறிஞர் மேக்ஸ்வெல் கூட, தற்காலத்திய தீர்ப்புகளின் ஒட்டு மொத்த போக்கானது, கண்டிப்பான மற்றும் நலன் தரும் (strict and beneficial) பொருள் விளக்கத்திற்கு இடையே உள்ள இடைவெளியை குறைக்கும் வண்ணம் உள்ளது என்றும், தண்டனைச் சட்டங்களைப் பொறுத்தவரை அவற்றை இயற்றிய சட்டமன்றத்தின் கருத்திற்கும் நோக்கத்திற்கும், முன்னைக் காட்டிலும் தற்பொழுது

அதிக முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது என்றும் கூறுகிறார். தண்டனைச் சட்ட வாசகத்திற்கு அடிச் சொல் வரலாற்றுப்படி விளக்கமளிப்பதைக் (etymological denotation) காட்டிலும், அவ்வாசகத்திற்கு மக்கள் பிரசித்தமாகவும் மற்றும் பேச்சு வழக்கியல்புடனும் (popularly and colloquially) பொருத்தி வரக்கூடிய பரந்த பொருளைக் கொடுப்பதே நன்று, எனப்பட்டது. ஏனெனில், அப்பொருள்தான், சட்டமன்றத்தின் கருத்தை சரியாக சுட்டிக் காட்டக் கூடிய ஒன்றாகும், என்றும் வலியுறுத்தப்பட்டது.

"ஆயிரம் குற்றவாளிகள் தப்பிவிடலாம்; ஆனால் ஒரு நிரபராதி தண்டிக்கப்பட்டு விடக்கூடாது" என்ற பழைய கோட்பாடு உண்மைதான் என்றாலும், சட்ட வாசகத்தின் சிறு குறையைக் காட்டி அல்லது சட்ட நுணுக்கத்தின் அடிப்படையில், உண்மைக் குற்றவாளி விடுதலையாகி விடக்கூடாது, என்பதில் அரசு அதிக முனைப்பு காட்டுகிறது என்பதே தற்காலத்திய போக்கு.

முடிவுரை :

ஒருபுறம், மேற்கண்ட காரணங்களையும், வழக்குகளையும் காணும் பொழுது, தண்டனைச் சட்டங்கள் கண்டிப்பான பொருள் விளக்கத்திற்கு உள்ளடங்கியே பொருள் கொள்ளப்பட வேண்டும், என்று தெரிகிறது. மறுபுறம், கண்டிப்பான பொருள் விளக்கத்தை அனைத்து நிகழ்வுகளுக்கும் பின்பற்றக் கூடாது; சட்ட வாசகத்தைப் பார்ப்பதைவிட, சட்டமன்றத்தின் கருத்தைக் கண்டு பொருள் விளக்கமளிக்கும் தற்காலத்திய போக்கே, குற்றங்களை பெருமளவில் தடுக்கக் கூடியது, என்பதும் புலனாகிறது.

(ஆ) குற்ற மனம்
[Mens Rea]

62. Mens Rea in Statutory Offences - Write Short notes. (செய் சட்டக் குற்றங்களில் குற்றவாளியின் மனநிலை – சிறு குறிப்பு எழுதுக.)

(அல்லது)

Is mens rea an essential ingredient of statutory offences? Discuss. (செய் சட்ட குற்றங்களில் குற்ற மனம் என்பது ஒரு முக்கியமான உட்கூறாகுமா ? விவாதிக்க.)

(அல்லது)

What is the place of Mens Rea in statutory offences ? Explain the development of law on the subject. (செய்சட்ட குற்றங்களில் குற்ற மனத்தின் இருக்கை என்ன? இத்தலைப்பின் கீழ் அடங்கிய சட்டத்தின் வளர்ச்சியை விளக்குக.)

இயற்றாச் சட்டத்தின் (Common Law) பொது நிலை :

ஒருவன் ஒரு குற்றத்தை செய்வதற்குப் பழிக்கப்படத்தக்க குற்ற மனம் கொண்டவனாக இருத்தல் வேண்டும். அதாவது குற்ற மனம் இல்லாத குற்றச் செயல் ஒரு குற்றமாவதில்லை. குற்றவாளிக்கு அக்குற்றச் செயலைச் செய்ய, அவன் குற்ற மனத்தினைக் கொண்டிருந்தானா, என நீதிமன்றம் ஆய்கின்றது. குற்ற மனம் இல்லாவிட்டால் அவன் விடுவிக்கப்படுகிறான். இது இயற்றாச் சட்டத்தின் பொது நிலை ஆகும்.

இயற்றப்பட்ட (செய்) சட்டத்தில் (Statutory Law) குற்ற மனதின் நிலை :

இதுவே இயற்றப்பட்ட சட்டத்தில் (அதாவது செய் சட்டங்களில்) குற்ற மனத்தினை கவனிக்க தேவையில்லை என்று கடும் பொறுப்பினைப் பற்றி (Strict Liability) கூறப்பட்டிருந்தால், அங்கு குற்ற மனத்தினை கவனிக்க வேண்டிய அவசியமில்லை. குற்றச் செயல் ஒன்றே போதும்.

ஆனால், "புதிது புதிதான சட்டங்களும், விதிகளும் குற்றங்களைப் பன்மடங்காக பெருக்கிக் கொண்டு வரும் இக்காலத்தில், சட்டத்திற்கு பணிந்த கண்ணியமான குடிமக்கள் கூடச் சட்டத்தை மீறாமல் இருப்பது கடினமாகி வருகிறது. எனவே, 'மனநிலை விதியைப் பிரயோகிப்பதன் அவசியம் முன் எப்போதைக் காட்டிலும் இப்போது அதிகமாக இருக்கிறது'" என **Harding v. Prince**[1] வழக்கில் **Lord Goodard** கூறியுள்ளார்.

குற்ற மனம் குறித்த வழக்குகள் :

I. குற்ற மனம் வேண்டுமென அனுமானம் கொள்ளப்பட்ட வழக்குகள் (Cases in which presumption as to mens rea has been applied) :

Lim Chin Aik v. R[2]

இவ்வழக்கில், சிங்கப்பூர் குடியேற்றச் சட்டத்தின் கீழ், சட்டத்திற்குப் புறம்பாக நாட்டில் இருப்பதாக ஒருவர் மேல் வழக்குத் தொடரப்பட்டது. ஆனால், அவருடைய இருப்பு சட்டத்திற்குப் புறம்பானது என்ற முன் எச்சரிக்கை எதுவும் கொடுக்கப்படவில்லை. தான், ஒரு தடை செய்யப்பட்ட நபராகச் சட்டத்தினால் ஆக்கப் பட்டிருப்பதைத் தெரிந்து கொள்ள அவருக்கு எந்த விதமான சந்தர்ப்பங்களும் இல்லை. அப்படித் தெரியாமல் இருக்கும்போது அவர் எவ்வாறு சட்டத்திற்கு ஒவ்வ நடந்து கொள்ள இயலும்? எனவே, குற்ற மனம் சம்பந்தமில்லாமல் அவர் மீது முழுப் பொறுப்பைச் சுமத்துவது தவறு, எனத் தீர்ப்பளிக்கப்பட்டது.

1. 1948
2. 1963 A.C. 160

R. v. Cugullere[1]

மேற்படி வழக்கில், ஒரு நபர் "பொது இடத்தில் தன்னுடன் அபாயகரமான ஆயுதத்தை வைத்திருந்ததாகக்" குற்றத் தடுப்புச் சட்டத்தில் மேற்கண்ட செயலைக் குற்றமாக்கும் பிரிவின் கீழ் வழக்கு தொடரப்பட்டார். மேற்கண்ட பிரிவுக்குக் குற்ற மனம் மிகவும் அவசியம் எனக் கருதப்பட்டது. "உதாரணமாக நிரபராதியான ஒரு நபரின் சட்டைப் பையில், கொலை செய்துவிட்டு தப்பித்து ஓடிக் கொண்டிருக்கும் ஒருவன் கொடுவாள் ஒன்றை வைத்துவிட்டுச் சென்றால், அந்த நிரபராதியை எவ்வாறு கொடுவாளை வைத்துக் கொண்டிருந்த குற்றத்திற்காகத் தண்டிக்க இயலும்?" என்று வினவிய நீதிபதி குற்ற மனத்தின் அவசியத்தை வலியுறுத்தினார்.

R. v. Spurse[2]

மேற்கண்ட வழக்கைப் போலவே, ஒருவர் ஓட்டிச் சென்று கொண்டிருக்கும் மோட்டார் வாகனத்தின் தொழில் நுட்பப் பழுதுகளைப் பற்றித் தெரியாமலிருக்கும் போதும், மேலும் அந்தப் பழுதுகள் சிறிது கவனம் செலுத்தப்பட்டிருந்தால் கண்டுபிடிக்கப்பட்டிருக்கலாம் என்ற தன்மை அற்றவையாக இருக்கும் போதும், அந்தப் பழுதுகளினால் திடீரென ஏற்படும் விபத்துக்கு அந்த நபரை முழுப் பொறுப்பாளியாக்கக் கூடாது, என்று தீர்ப்பளிக்கப்பட்டது.

Sherras v. De Rutzen[3]

இவ்வழக்கில், அரசு காவலர் ஒருவருக்குக் கடமை நேரத்தில் சாராயம் விற்பது குற்றம் என்ற சட்டப்பிரிவின் கீழ், அரசு காவலர் கடமையற்ற (off duty) நேரத்தில் இருக்கிறார் என்று நினைத்துக் கொண்டு அவருக்கு சாராயம் விற்ற ஒரு விற்பனையாளரைத் தண்டிக்க இயலாது என தீர்வு காணப்பட்டது.

Malbon v. Allon[4]

இவ்வழக்கில், அங்கீகரிக்கப்பட்ட ஒரு சூதாட்ட நிலையம் பதினெட்டு வயது நிரம்பாதவரை உள்ளே அனுமதிப்பதோ, வைத்திருப்பதோ சூதாட்டச் சட்டத்தின் கீழ், குற்றமாகும். ஆனால், இக்குற்றத்தை, அந்நிலையத்தினர் மீது சுமத்துவதற்கு, பதினெட்டு வயது நிரம்பாத ஒரு நபர் தங்களிடத்தில் இருக்கிறார் என்பதை அவர்கள் அறிந்திருப்பதற்கான சூழ்நிலைகள் இருந்திருக்க வேண்டும், எனத் தீர்ப்பு கூறப்பட்டது.

II. குற்ற மனம் வேண்டும் என்ற அனுமானம் மறுக்கப்பட்ட வழக்குகள் அல்லது செய் சட்டக் குற்றங்களில் குற்ற மனம் (Cases

1. 1961 (1) W.L.R. 858
2. 1961
3. (1895) (1) Q.B. 916
4. 1964

in which the presumption of mens rea rebutted or Mens rea in statutory offences) :

முன் கூறியபடி செய் சட்டக் குற்றங்களில் குற்றமனம் கவனிக்கத் தேவை இல்லை எனக் கடும் பொறுப்பு விதிக்கப் பட்டிருந்தால், அங்கு குற்றவாளியின் மனநிலையினைப் பற்றி சிந்திக்கத் தேவையில்லை.

அதாவது, காலப்போக்கில் "குற்றமனம்" இருக்கிறதா என்று பார்ப்பதன் அவசியம், நவீன சட்டங்களினால் குறைக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. செய் சட்டத்தின் (Statutory) முக்கிய நோக்கங்களை நிறைவேற்றுவதற்குக் குற்றம் புரிந்தோரின் 'குற்ற மனத்தினை' கவனியாமல், அவன் செய்த குற்றச் செயலுக்காகவே தண்டிக்கப்பட வேண்டிய அவசியம் ஏற்பட்டது.

Yeandel v. Fisher[1]

இவ்வழக்கில் 'போதைப் பொருள்களை புகைப்பதற்காக ஒரு இடத்தை நிர்வகிப்பது குற்றம், என அபாயகரமான மருந்துக்கள் சட்டம் கூறுகிறது. இங்கு அத்தகு குற்றம் புரிந்தோர்களின் குற்ற மனத்தினை கவனிக்க வேண்டிய அவசியமில்லை. தெரிந்தோ தெரியாமலோ அதில் ஈடுபட்டிருந்தாலும், அது குற்றமெனக் கொள்ளப்பட்டு தண்டனை விதிக்கப்படும். ஏனெனில் இச்சட்டத்தின் நோக்கம், இன்று பெரும் அபாயகரமாக கருதப்படும் போதைப் பொருளை ஒழிப்பதும், பொது நலத்தைக் காப்பதும் ஆகும். ஆகவே மேற்படி செய்சட்டக் குற்றத்தில் குற்ற மனத்தினை கவனிக்க வேண்டிய அவசியமில்லை, என இவ்வழக்கில் கூறப்பட்டது.

உணவு கலப்பட வழக்குகள் :

இந்தியாவிலும் சரி, இங்கிலாந்திலும் சரி, கலப்படமான உணவுகள் மற்றும் பானங்கள் விற்கப்படுகின்றன. இவ்வாறு விற்பது குற்றமென சட்டம் கடுமையாக கூறுகிறது. ஆகவே இம்மாதிரியான செய்சட்ட குற்றங்களில் 'குற்ற மனம்' இல்லாமல் பல குற்றவாளிகள் தண்டிக்கப்பட்டுள்ளார்கள். இவ்வாறு தண்டிக்கப் பட்டால்தான் பொது நலன் காக்கப்பட வேண்டும் என்ற அச்சட்டத்தின் நோக்கம் நிலை நிறுத்தப்படும்.

உதாரணமாக, சுகாதாரமில்லாத இறைச்சியை விற்கும் கசாப்புக் கடைக்காரரைத் தண்டிக்க அதிகாரிகள் ஒவ்வொரு தடவையும் 'குற்ற மனத்தை' நிரூபிக்க வேண்டும் என்றால் அது இயலாத காரியம். அவ்வாறு நிரூபித்தே ஆக வேண்டும் என்ற நிலை இருந்தால், அதனால் சமுதாயத்திற்கு ஏற்படும் தீங்கை எண்ணிப் பார்க்கக் கூட முடியாது.

1. (1895) (1) Q.B. 918

'குற்ற மனத்தின்' வேறு நிலைகள் :

தெரிந்தே (Knowingly) :

சட்ட மீறல்களைப் பற்றிக் கூறும் சட்டப் பிரிவுகளில் 'தெரிந்தே' என்ற பதம் உபயோகப்பட்டிருக்கும் பொழுது 'குற்ற மனம்' அவசியம் தேவை என்பது தெளிவாகிறது. ஆனால் ஒரு சட்டப்பிரிவு, 'குற்ற மனம்' அவசியம் தேவை என்று உணர்த்திவிட்டு 'தெரிந்தே' என்ற பதத்தை குறிப்பிடாமல் விட்டுவிட்டிருந்தால், அதைக் காரணமாகக் காட்டிக் 'குற்ற மனம்' தேவையில்லை என வாதிட முடியாது.

வன்மத்துடன் (Maliciously) :

'வன்மத்துடன்' ஒரு குற்றத்தைப் புரிதல் குற்ற மனத்தின் உச்ச நிலையாகும். இங்கு குற்றச்செயல் நன்கு திட்டமிடப்பட்டு செய்யப்படுகிறது. இது 'தெரிந்து செய்தலை' விட ஒரு படி உயர்ந்ததாகும்.

மோசடியாக (Fredulently) :

ஒருவர், ஒரு செயலை ஏமாற்றும் கருத்துடன் செய்தால், அவர் அதை மோசடியாக செய்ததாகச் சொல்லப்படுவார்.

வேண்டுமென்றே (Wantonly) :

மற்றவர்களுடைய உரிமைகள் மற்றும் பாதுகாப்புகளைப் பற்றி சிந்திக்காமல் செயல்படுதல், ஒருவருக்கு வேண்டுமென்றே ஏதேனும் செய்து நட்டம் உண்டாக்குதலை உதாரணமாகக் கூறலாம்.

மேற்கூறப்பட்டவைகள் எல்லாம் 'குற்ற மனத்தின்' வேறுபட்ட நிலைகள் ஆகும். ஆகவே இவைகளையும் குற்ற மனமாகவே கருதி, பொருள் விளக்கம் தந்து, தண்டனையளிக்க வேண்டும். இவை தவிர வேறு சில குற்ற மனங்களும் உள்ளன.

-o0o-

11

பல வகையான சட்டங்களுக்கு பல வகையான பொருள் விளக்க அணுகுமுறைகள் [Different Approaches of Interpretation to Different Kinds of Statutes]

63. Explain the different approaches to the different kinds of statutes in interpretation. (பல்வகை செய் சட்டங்களில் சட்டப் பொருள் காண்கையில் மேற்கொள்ள, வேண்டிய பல்வேறு அணுகு முறைகளை விளக்குக.)

முன்னுரை :

நாம் இந்நூலின் முதல் அத்தியாயத்தின் 'ஆ' பகுதியில் 'சட்டங்களின் வகைப்பாடுகள்' (Classification of Statutes) என்ற தலைப்பின் கீழ் பல வகையான சட்டங்களைக் கண்டோம். அவை, கால வரையறை, செயல்முறை, நோக்கம் மற்றும் அளாவுகையின் அடிப்படையில் வகைப்படுத்தப்பட்ட சட்டங்களாகும். இங்கு நோக்கத்தின் அடிப்படையில் வகைப்படுத்தப்பட்ட சட்டங்களின் பொருள் விளக்க அணுகுமுறை குறித்தும் பின்வருமாறு காண உள்ளோம்.

பல வகையான சட்டங்கள் :

1. *நிதியச் சட்டங்கள் அல்லது வரிச் சட்டங்கள்* (Fiscal laws or Taxing Statutes) :

வரிச் சட்டங்களுக்கு, கண்டிப்பான பொருள் விளக்க அணுகுமுறைதான் பின்பற்றப்பட வேண்டும். (முன்னரே விரிவாகக் கண்டுள்ளோம்). அதாவது அச்சட்ட வாசகங்கள் என்ன பொருளில் உள்ளனவோ, அப்பொருளைத் தவிர வேறு பொருள் எதையும் ஊகித்துணரவோ அல்லது சட்டமன்றக் கருத்து இதுதான் என்று கொள்வதோ கூடாது.

Canadian Eagle Oil Co., v. Attorney General[1] என்ற வழக்கில் **நீதிப்பெருமகனார் விஸ்கவுண்ட் சம்னர் (Lord Viscount Sumner)** வரிச் சட்டங்களுக்கு எவ்வாறு பொருள் விளக்கம் கொள்ள வேண்டுமென பின்வருமாறு கூறியுள்ளார். அதன்படி,

(1) சட்டமன்றக் கருத்து குறித்த விளக்கத்திற்கு இடமில்லை (There is no room for any intendment).

(2) ஒரு வரிக்கு, தகைமை நெறி விளக்கம் ஏதும் கிடையாது. (There is no equity about a tax).

(3) வரி குறித்து அனுமானம் ஏதும் கிடையாது. (There is no presumption as to a tax).

(4) வரிச் சட்டப் பிரிவை உள்ளர்த்தம் கொண்டு படிக்கக் கூடாது. (Nothing to be read in).

(5) வரிச் சட்டப் பிரிவிற்கு உட்கிடையான விளக்கம் ஏதும் உய்த்துணரக் கூடாது. (Nothing to be implied).

Cape Brandy Syndicate v. Commissioner of Inland Revenue[2] என்ற முந்திய வழக்கில், **ரவ்லட் நீதிப்பெருமகனார்** கூறிய கருத்துக்களே, மேலே கண்ட **Canadian Eagle Oil Co., v. Attorney General**[3] வழக்கிலும் மேற்கண்டவாறு கூறப்பட்டுள்ளது.

மேற்கண்ட கருத்துக்களை நமது உச்ச நீதிமன்றமும் **Income Tax Commissioner v. Shahzadanand**[4] என்ற வழக்கில் வலியுறுத்தி உள்ளது.

2. *தண்டனைச் சட்டங்கள்* (Penal Statutes) :

தண்டனைச் சட்டத்திற்கும் கண்டிப்பான பொருள் விளக்க அணுகு முறையே பின்பற்றப்பட வேண்டும். **(ஏற்கனவே விரிவாகக் கண்டுள்ளோம்).** ஏனெனில், தண்டனைச் சட்டம் என்பது, அதில் விதிக்கப்பட்ட கடமைகளில் தவறுபவர்களைத் தண்டனைக்கு உள்ளாக்குகிறது. அச்சட்டம் எவர்களைக் கருதி இயற்றப்பட்டதோ, அவர்களைத் தவிர பிறர் மீது தண்டனைப் பொறுப்பை ஏற்படுத்தி விடக்கூடாது. எனவே, அச்சட்டத்திற்குப் பொருள் காண்பது, முன்கண்டவாறு கண்டிப்பான வரையுறுதியுடன் (strict construction) இருத்தல் வேண்டும். அதாவது, தண்டனைச் சட்ட வாசகத்தை வளைத்தோ, நெகிழ்த்தோ பொருள் காண முயலாமல் நேரடியாகச் சட்ட வாசகம் எவர்களைக் குறிக்கிறதோ அல்லது எச்செயலைக் குற்றமெனக் குறிப்பிடுகிறதோ, முறையே அவர்களுக்கே மற்றும்

1. 1946
2. 1921 (1) K.B. 64
3. 1946
4. A.I.R. 1966 S.C. 1342

அச்செயலுக்கே அச்சட்ட வாசகம் பொருந்தும் வகையில் பொருள் விளக்கம் காண வேண்டும் என்பது விதியாகும்.

3. மக்கள் நலவாழ்வுச் சட்டங்கள் (Welfare Statutes) :

மக்கள் நலவாழ்விற்கென பல்வகைச் சட்டங்கள் இயற்றப் பெறுகின்றன. எனவே, அவை மக்களுக்கு பயனுறும் விதத்தில், தாராளமான முறையில் நெகிழ்வாக (liberal construction) பொருள் விளக்கம் கொள்ளப்பட வேண்டும்.

Manoharlal v. State of Punjab[1] என்ற வழக்கில், பஞ்சாப் வணிக பணியாட்கள் சட்டத்தின் 7–வது பிரிவானது, வாரத்தில் ஒருநாள் வணிக அமைப்புகள் மற்றும் கடைகள் மூடப்பட்டிருக்க வேண்டுமெனக் கூறுகிறது. இது, இந்திய அரசியலமைப்பின் சரத்து 19(1)(g)–படியிலான, வியாபாரிகள் வணிகம் செய்யும் அடிப்படை உரிமையை மீறுவதாக உள்ளது, என வணிகர்கள் வாதிட்டனர். ஆனால் உச்ச நீதிமன்றம் இவ்வாதத்தை ஏற்றுக் கொள்ளவில்லை. ஏனெனில், மேற்படி பஞ்சாப் சட்டத்தின் நோக்கமே, ஓடியாடி வேலை செய்யும் பணியாளர்களுக்கு வாரத்தில் ஒரு நாளாவது விடுமுறை கொடுக்கப்பட வேண்டுமென்பதே. இதற்கு அவர்கள் பணி புரியும் கடைகளுக்கு விடுமுறை விடப்பட வேண்டும். அப்பொழுது தான், அவர்கள் உடல்ரீதியாகவும், மனரீதியாகவும் ஓய்வு எடுத்துக் கொண்டு, மீண்டும் உற்சாகமாக வேலைக்குத் திரும்ப முடியும். இதே நிலைதான் கடைகளை நடத்தும் முதலாளிகள் மற்றும் அவர்களது குடும்ப உறுப்பினர்களுக்கும் பொருந்தும். இச்சட்டப் பிரிவில், பணிபுரியும் மற்றும் பணி வாங்கும் மக்களின் நலனே முக்கியமாக இருப்பதால், அவ்வாறு நலன் தரும் விதத்தில்தான் பொருள் கொள்ளப்பட வேண்டும், என மேற்படி வழக்கில் கூறப்பட்டது. எனவே, மேற்படி பிரிவு, சரத்து 19(1)(g)–யின் கீழான அடிப்படை உரிமையை மீறியதாகாது எனப்பட்டது.

Andhra University v. Regional Provident Fund Commissioner of Andhra Pradesh[2] என்ற வழக்கில், தொழிலாளர்கள் ஷேம நலநிதிச் சட்டமானது (Employee's Provident Fund Act) தொழிலாளர்களின் நலனை பாதுகாத்து, அவர்களை மேம்படுத்தும் ஒரு சமூக நலச் சட்டமாகும். எனவே, இந்நோக்கத்தை நிலைநிறுத்தும் வகையிலேயே தாராளமான முறையில் பொருள் கொள்ளப்பட வேண்டுமேயொழிய, குறுகிய பொருள் விளக்க அணுகுமுறை ஏதும் பின்பற்றப்படக் கூடாது, என உச்ச நீதிமன்றம் கூறியது.

4. தீர்வழி கொடுக்கும் சட்டங்கள் (Remedial Statutes) :

சட்டங்களின் ஏதேனும் ஒரு பகுதி பாதிக்கப்பட்டவர்களுக்கு தீர்வழி தரும் வகைமுறைகளை (provisions) கொண்டதாகவே இயற்றப்படுகிறது.

1. A.I.R. 1961 S.C. 418
2. A.I.R. 1986 S.C. 463; (1985) 4 S.C.C. 509

தீர்வழிகளைத் தருவதென்றே அல்லது முந்தய சட்டத்தில் விடுபட்டுப் போன அல்லது குறைபாடுடைய விஷயங்களை களைந்து, மேலும் நல்ல தீர்வழிகளைத் தருவதற்காக இயற்றப்படும் சட்டங்கள், 'தீர்வழி தரும் சட்டங்கள்' எனப்படும்.

உதாரணமாக, 1986–ல் இயற்றப்பட்ட நுகர்வோர் பாதுகாப்புச் சட்டத்தைக் (The Consumer Protection Act, 1986) குறிப்பிடலாம். இது முழுக்க முழுக்க நுகர்வோர்களுக்கு பல்வேறு வகையான தீர்வழிகளை வழங்குகிறது. இதற்கு முந்தய சட்டங்கள் தக்க தீர்வழிகளை வழங்கத் தவறி விட்டது. அவை தனித்தனியான சட்டங்களாக இருந்தன. இச்சட்டம் 'நுகர்வோர்கள்' என்பதின் கீழ் பொருள் மற்றும் சேவைகளை நுகரும் அனைத்து பொது மக்களுக்கும் சிறப்பாக தீர்வழி வழங்கி வருகிறது.

எனவே, இம்மாதிரியான தீர்வழி தரும் சட்டங்களுக்கு, எப்பிரிவினருக்கு அது தீர்வழிகள் கொடுக்கப்பட எண்ணம் கொண்டு இயற்றப்பட்டுள்ளதோ, அவர்களுக்கு சாதகமாக நலன் தரும் விதத்தில் பொருள் கொள்ளப்பட வேண்டும் (Beneficial Construction).

5. உரிமைகளை வழங்கும் சட்டம் (Statutes Conferring Rights) :

மக்களுக்கு பல உரிமைகள் சட்டங்களால் வழங்கப்பட்டுள்ளன. எனவே, அந்த உரிமைகளை நிலைநிறுத்தும் வகையிலேயே, அச்சட்டங்களுக்கு பொருள் விளக்கம் தர வேண்டும். கொடுத்த உரிமையை பறிக்கும் விதத்தில் பொருள் கொள்ளக் கூடாது.

6. புதிய கடப்பாட்டினை சுமத்தும் சட்டங்கள் (Statutes imposing new obligation) :

சில சட்டங்கள், மக்களுக்கு புதிய கடப்பாடுகளை விதிக்கலாம். அப்படிப்பட்ட கடப்பாடுகளில் தெளிவின்மை அல்லது இருபொருள் தரக்கூடியத் தன்மை ஏதேனும் இருப்பின், நீதிமன்றம் அப்படிப்பட்ட புதிய கடப்பாடுகள் எதையும் சட்டம் விதிக்கவில்லை என்றே பொருள் விளக்கம் தர வேண்டும். பழைய நிலையே தொடரும்.

7. தனிநபர் அல்லது பொது உரிமையை பறிக்கும் சட்டங்கள் (Statutes taking away public or private right) :

சில சட்டங்கள் தனிநபர் உரிமைக்கு வரம்பிடலாம் அல்லது பறித்தும் விடலாம். இதற்கான வாசகங்கள், சட்டப் பிரிவில் தெளிவாகக் குறிப்பிடப் பட்டிருந்தால்தான், அதற்கு செயலாக்கம் கொடுக்க முடியும். மாறாக, தெளிவின்மை இருப்பின், அவ்வரம்புகளுக்கோ அல்லது அவ்வாறு பறிக்கும் நிகழ்விற்கோ உயிர் கொடுக்கும் வண்ணம் பொருள் விளக்கமளித்தல் கூடாது. வரையறு பொருள் முறை (restrictive construction) பின்பற்றப்படுதல் வேண்டும்.

12

கட்டளையுறுத்தும் மற்றும் அறிவுறுத்தும் சட்டங்களின் பொருள் விளக்கம் [Interpretation to Mandatory (Imperative) and Directory Statutes]

64. What are mandatory and directory provisions of a statute? How are they construed ? (ஒரு சட்டத்தில் கட்டளையுறுத்தும் மற்றும் அறிவுறுத்தும் சட்டப் பிரிவுகள் யாவை? அவை எவ்வாறு பொருள் விளக்கம் கொள்ளப்படுகிறது ?)

(அல்லது)

Directory provisions in a statute - Write short notes. (செய் சட்டத்தில் வகைதுறை வழங்குகிற பிரிவுகள் – சிறு குறிப்பு எழுதுக.)

(அல்லது)

Interpretation of imperative statutes - Write short notes. (கட்டளையுறுத்தும் சட்டத்தைப் பொருள் விளக்கங் காணல் – சிறு குறிப்பு எழுதுக.)

(அல்லது)

Discuss about Mandatory and Directory provisions and its contruction. (கண்டிப்பான மற்றும் நேரான பிரிவுகளைப் பற்றியும் அதன் விளக்கங்களைப் பற்றியும் கூறுக.)

(அல்லது)

Distinguish between mandatory and directory statutes. (உரிமைக் கட்டளை தெரிவிக்கின்ற செய் சட்டத்தையும் வகைதுறை வழங்குகிற செய் சட்டத்தையும் வேறுபடுத்துக.)

(அல்லது)

Write short notes on Mandatory and Directory nature of statutes. (வலியுறுத்தும் மற்றும் பரிந்துரைக்கிற தன்மையுடைய சட்டங்கள் குறித்து சிறு குறிப்பு வரைக.)

(அல்லது)

Write a brief note on the Construction of Imperative and Directory enactments. State the general principles. (கட்டளையுறுத்தும் மற்றும் அறிவுறுத்தும் சட்டங்கள் குறித்து சுருக்கமான குறிப்பு ஒன்று வரைக. பொதுக் கோட்பாடுகளைக் குறிப்பிடுக.)

(அல்லது)

Write a short note on 'May' and 'Shall' with reference to their use in determining imperative and directory provisions. (கட்டளையிடும் மற்றும் அறிவுறுத்தும் சட்டப் பிரிவுகளை தீர்மானிக்க உதவக்கூடிய 'ஆகலாம்' மற்றும் 'ஆக வேண்டும்' என்பன குறித்து சிறு குறிப்பு எழுதுக.)

(அல்லது)

"The question whether a statute is mandatory or directory depends upon the intent of the legislature and not upon the language in which the intent is clothed" - Discuss. ("ஒரு செய் சட்டம் ஏவுரைச் சட்டமா அல்லது செயலுறுத்தும் சட்டமா என்பது சட்டமியற்றுதலின் நோக்கத்தையல்லாது அந்நோக்கத்தை சூழ்ந்துள்ள மொழியினை சார்ந்தது அல்ல" – விவாதிக்க.)

(அல்லது)

Explain the rules to be followed in interpreting directory and imperative statutes. (வழியுணர்த்தும், கட்டாயப்படுத்தும் இயற் சட்டங்களை பொருள் விளக்கம் கொள்வதில் கடைப்பிடிக்கப்பட வேண்டிய விதிகள் யாவை?)

பத விளக்கம் (Definition of Terms) :

(i) Mandatory or Imperative :

'Mandatory' என்ற ஆங்கிலப் பதத்திற்கு 'உரிமைக் கட்டளை

தெரிவிக்கின்ற' என்ற பொருள் ஆங்கிலத்–தமிழ் அகராதியில்[1] கொடுக்கப் பட்டுள்ளது. எனவே, இதனை 'கட்டளை விதிக்கும்', 'ஆணையிடும்' 'வலியுறுத்தும்' என்றும் கூறலாம். சுருங்கக்கூறின், **'கட்டளையிடுகின்ற'** என்று பொருள் கொள்ளலாம். இதனை ஆங்கிலத்தில் **'Imperative'** என்றும் கூறுவார்கள்.

(ii) Directory :

'Directory' என்ற ஆங்கிலப்பதத்திற்கு **'வகைதுறை அறிவுரை வழங்குகின்ற'** என்ற பொருள் ஆங்கிலத்–தமிழ் அகராதியில்[2] கொடுக்கப் பட்டுள்ளது. எனவே, இதனை 'தக்க அறிவுரை கூறுகின்ற', 'பரிந்துரைக்கின்ற' என்றும் கூறலாம். சுருங்கக்கூறின், **'அறிவுறுத்துகின்ற'** என்று பொருள் கொள்ளலாம்.

இனி சற்று விரிவாகச் செல்வோமா ?

கட்டளையுறுத்தும் சட்டங்கள் (Mandatory or Imperative Statutes) :

ஒரு சட்டமோ அல்லது சட்டப் பிரிவோ, ஒன்றைச் செய்யச் சொல்லியோ, அல்லது செய்யாமல் இருக்கக் கூறியோ ஆணையிட்டால், அது முறையே கட்டளையுறுத்தும் சட்டம் அல்லது சட்டப் பிரிவு எனப்படுகிறது. இவ்வாறு இடப்படும் ஆணைக்கு, கட்டாயம் கீழ்ப்படிந்து ஆக வேண்டும்; கடைப்பிடித்து ஆக வேண்டும். அவ்வாறு கடைப்பிடிக்காது போனால், அதற்குப் பின்னிட்ட செயற்பாடுகள் முழுவதும் இல்லாநிலையதாகிவிடும் (Void).

உதாரணமாக, உணவுப் பொருட்களில் கலப்படம் செய்வதைத் தடுப்பதற்கென்று, உணவுக் கலப்பட தடைச் சட்டம் இயற்றப்பட்டுள்ளது. இது உணவுப் பொருட்களில் கலப்படம் செய்தல் கூடாது என்று கட்டளையிடுகிறது. இந்தக் கட்டளையை ஒவ்வொருவரும் கடைப்பிடிக்க வேண்டும். மீறினால் தண்டனைதான்.

அதுபோல், ஊழல் தடுப்புச் சட்டம், வரதட்சணை தடுப்புச் சட்டம் போன்ற பல தடுப்புச் சட்டங்களையும் குறிப்பிடலாம்.

மற்றொரு உதாரணமாக, ஒருவர் அரசிற்கெதிராக உரிமையியல் வழக்கிட வேண்டுமெனில், அரசுக்கு இரண்டு மாத கால அவகாசம் கொடுத்து அறிவிப்பு (Notice) ஒன்றை அனுப்ப வேண்டுமென, உரிமையியல் நடைமுறைச் சட்டத்தின் 80–வது பிரிவு கட்டளையிடுகிறது. இவ்வாறு அறிவிப்பு கொடுக்கப்படாவிட்டால், சம்பந்தப்பட்ட உரிமையியல் வழக்கே, அதில் எவ்வளவு நியாயமான காரணங்கள் இருப்பினும் தள்ளுபடியாகிவிடும்.

---

1. ஆங்கில – தமிழ் அகராதி, முனைவர் ஏ. சிதம்பரநாத செட்டியார், சென்னைப் பல்கலைக்கழகம், பக்கம் 616.
2. ஆங்கில – தமிழ் அகராதி, முனைவர் ஏ. சிதம்பரநாத செட்டியார், சென்னைப் பல்கலைக்கழகம் பக்கம் 302.

அறிவுறுத்தும் சட்டங்கள் (Directory Statutes) :

முன்கண்டவாறு, அறிவுறுத்தும் சட்டங்கள் என்பவை ஒன்றைப் பரிந்துரைக்கும் தொனியில் (recommendary in nature) அமைந்தவை. அதாவது, ஒரு செயலைச் செய்யச் சொல்லியோ அல்லது செய்யாமல் இருக்குமாறோ அறிவுறுத்துகிறது. அதை மீறுவது, சம்பந்தப்பட்ட நடவடிக்கைகளை இல்லா நிலையதாக்காது. அல்லது அதைக் கடைப்பிடிக்காததால் தண்டனை ஏதும் வழங்கப்படாது.

உதாரணமாக, சிகரெட் அட்டை பெட்டிகளில், "புகைபிடிப்பது உடல் நலத்திற்கு தீங்கானது" என்ற எச்சரிக்கை உள்ளது. இது சட்டப்பூர்வமானதுதான். ஆனால், இது மக்களை அறிவுறுத்தும் விதத்தில்தான் அமைந்துள்ளது. இந்த எச்சரிக்கையை மீறி, புகை பிடிப்பவர்களை சட்டம், தண்டனைக்குள்ளாக்க முடியாது.

சட்டங்களில் கட்டளையுறுத்தும் மற்றும் அறிவுறுத்தும் பிரிவுகள் எப்பதங்களின் வாயிலாக விளக்கப்படுகின்றன ?

சட்டங்களில், கட்டளையுறுத்தும் பிரிவுகள், 'ஆக வேண்டும்' ('shall' and 'must') என்ற பதங்களினாலும், அறிவுறுத்தும் பிரிவுகள் 'ஆகலாம்' (May) என்ற பதத்தாலும் சட்டமன்றம் விளக்குகிறது.

நீதிமன்றங்களின் பொருள் விளக்கம் :

நீதிமன்றங்களும் மேற்கண்டவாறான பதங்கள், எந்தெந்த சட்டப் பிரிவுகளில் வருகின்றனவோ, அங்கெல்லாம் அதற்குத் தக்கவாறு கட்டளையுறுத்தும் சட்டப் பிரிவு என்றோ அல்லது அறிவுறுத்தும் சட்டப் பிரிவு என்றோ கொண்டு, பொருள் விளக்கம் தருகின்றன.

எனினும் பல சமயங்களில், சட்டமன்றம் 'ஆக வேண்டும்' (shall and Must) என்ற பதங்களைப் பயன்படுத்தி சட்டப் பிரிவுகளை கூறியிருக்கும் பொழுது, நீதிமன்றங்கள் அதை கட்டளையுறுத்தும் சட்டப் பிரிவாகக் கொள்ளாமல், அறிவுறுத்தும் சட்டப் பிரிவாகக் கூறியுள்ளது. அதுபோல் சட்டமன்றம் 'ஆகலாம்' (may) என்ற பதத்தை உபயோகப்படுத்திக் கூறியிருக்கும் சட்டப் பிரிவுகளை, அறிவுறுத்தும் சட்டப் பிரிவாகக் கொள்ளாமல், 'கட்டளையுறுத்தும்' சட்டப் பிரிவாகக் கூறியுமுள்ளது.

நீதிமன்றங்கள் 'இப்படியும்' கூறியுள்ளது; 'அப்படியும்' கூறியுள்ளது. எதுதான் சரி அல்லது சரியான பொருள் விளக்கம் தான் எது என்ற வினாக்கள் மனதில் எழுந்தால், அதில் துளியும் வியப்பில்லை.

சரியான பொருள் விளக்கம் எது ?

ஒரு சட்டம் கட்டளையுறுத்தக் கூடியதா அல்லது அறிவுறுத்தக் கூடியதா என்பது, அச்சட்டத்தின் நோக்கம் மற்றும் எல்லையைப் பொருத்ததாகும்.

பொதுவாக, ஒரு சட்டம் பொதுமக்களின் (Public) நலனை மேம்படுத்தும் நோக்கம் கொண்டு இயற்றப்பட்டால், அது, கட்டளையுறுத்தும் சட்டமாகிறது. அதே சமயத்தில், ஒரு சட்டம் தனி மனித (individual) நலனை மேம்படுத்தும் எண்ணத்துடன் இயற்றப்பட்டால், அது அறிவுறுத்தும் சட்டமாகிறது.

கட்டளையுறுத்தும் சட்டத்தில் கொடுக்கப்பட்ட பொதுக் கடமை (Public Duty) ஒன்று கடைப்பிடிக்கப்படாது போனால், அதனால் கஷ்டம் ஏற்படலாம். ஆனால் அது உண்மையில் எவ்வித அநீதிக்கும் வழிவகுக்காதபட்சத்தில், அச்சட்டத்தை ஒரு அறிவுறுத்தும் சட்டமாகவே நீதிமன்றங்கள் பொருள் விளக்கமளிக்கின்றன. அதுபோல் அறிவுறுத்தும் சட்டத்தால் தனி மனிதனுக்கு கூறப்பட்டுள்ள சட்ட அறிவுறுத்தல்களை, அவன் கடைப்பிடிக்காததால் ஏற்படும் விளைவுகள் பொதுமக்களை பாதிப்பதாக இருப்பின், அச்சட்டத்தை 'கட்டளையுறுத்தும் சட்டமாக' நீதிமன்றங்கள் கொள்கின்றன.

அறிஞர் சதர்லாண்டு (Sutherland) கூறுவதாவது :

அறிஞர் சதர்லாண்டு[1] அவர்கள், "கட்டளையுறுத்தும் மற்றும் அறிவுறுத்தும் சட்டங்களிடையிலான வேறுபாடு அவை ஏற்படுத்தும் விளைவைப் பொறுத்து மட்டுமே அமைகிறது; சட்டப்பூர்வமான அறிவுறுத்தல்களை மீறும் பொழுதோ அல்லது கடைப்பிடிக்காத பொழுதோ பாதிக்கப்படும் உரிமைகளை தீர்மானித்தலை உள்ளடக்கும் வழக்குகளில், பொதுவாகவே கட்டளையுறுத்துவதா அல்லது அறிவுறுத்துவதா என்ற வினா எழுகிறது. மேற்கண்ட மீறுதல் அல்லது கடைப் பிடிக்காதிருத்தலானது, அச்சட்டத்தை தொடர்ந்த செயல்களை அல்லது நடவடிக்கைகளை அல்லது அச்சட்டத்தின் கீழ் கோரப்படும் உரிமைகளை, அதிகாரங்களை, சிறப்புரிமைகளை அல்லது காப்புரிமைகளை செல்லாததாக்கு கிறதா அல்லது இல்லையா என்று முடிவெடுப்பதில், மேற்கண்ட தீர்மானித்தல் அடங்கியுள்ளது; அந்த மீறல் அல்லது கடைப்பிடிக்காதிருத்தல், அவற்றை செல்லாத தாக்கினால், அது கட்டளையுறுத்தும் சட்டமாகும். இல்லாது போனால், அது அறிவுறுத்துவதாகும்".

நடைமுறைச் சட்டத்தின் பிரிவுகள் (Procedural Provisions) :

நீதிமன்றத்தில் பின்பற்றப்பட வேண்டிய நடைமுறைகள் குறித்த சட்டமானது, கட்டளையுறுத்தக் கூடிய தன்மையதாக பொருள் கொள்ள வேண்டும். 1908–ஆம் ஆண்டின் உரிமையியல் நடைமுறைச் சட்டத்தின் பல வகைமுறைகள், கட்டளையுறுத்தக் கூடிய தன்மையுடையவையாகும். நடைமுறை தொடர்பான ஒரு விதியைக் கடைப்பிடிக்க வேண்டியது அத்தியாவசியமான ஒன்று என்று சட்ட மன்றமானது தெளிவான வார்த்தைகளின் கீழ் தனது கருத்தைக் கூறியிருப்பின், அவ்விதியை கட்டளையுறுத்தும் விதியாக பொருள் கொள்ள வேண்டும்.

1. Statutory Construction, 3rd Edn. Vol. III p. 77

Sungram Singh v. Election Tribunal[1] என்ற வழக்கில், உச்ச நீதிமன்றமானது, நடைமுறைச் சார்ந்த சட்டங்களை, கட்டளையிடும் சட்டப் பிரிவுகளாகவே பொருள் கொள்ள வேண்டும் என்று கூறியது. நடைமுறைச் சட்டங்களின் வழியாகத்தான் இரு தரப்பினரின் வழக்கு தீர்க்கப்படுகிறது. இரு தரப்பினரின் வழக்கையும் கேட்ட பிறகுதான், தீர்ப்பு வழங்க வேண்டும். ஒரு தரப்பினரின் வழக்கை மட்டும் கேட்டு விட்டு, மற்றொரு தரப்பினரின் உரிமையை பாதிக்கும் வண்ணம் தீர்ப்பு வழங்குதல் கூடாது. இந்த நடைமுறைகள் பின்பற்றப் படா விட்டால் அங்கே நீதி இல்லை. எனவே, நடைமுறைச் சட்டங்களில், விதி விலக்காக ஏதும் கூறப்படாத பொழுது, அவற்றை கட்டளையுறுத்தும் சட்டங்களாகவே பொருள் கொள்ள வேண்டுமென, உச்ச நீதிமன்றம் கூறியது.

அதிகாரவரம்பை செலுத்துவதற்குண்டான முன் நிபந்தனைகள் (Conditions precedent in the exercise of jurisdiction) :

அதிகாரவரம்பு என்பது, ஒரு நீதிவரம்பு அல்லது தீர்ப்பாயம், எந்த எல்லைக்குட்பட்ட வழக்குகளை தீர்மானிக்க வேண்டும், என்று அறுதியிட்டுக் கூறுவதாகும். அத்தகு அதிகாரவரம்பை செலுத்துவதில் சில முன் நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டும் எனச் சட்டம் விதித்தால், அத்தகு முன் நிபந்தனைகள் கண்டிப்பாக பூர்த்தி செய்யப்பட்டிருக்க வேண்டும். அதை தளர்த்த (dispensed with) முடியாது. எனவே அத்தகு சட்டப் பிரிவுகள், கட்டளையுறுத்தக் கூடிய முறையில் பொருள் கொள்ளப்பட வேண்டும்.

'ஆகலாம்' (may) மற்றும் 'ஆக வேண்டும்' (shall) ஆகிய பதங்களுக்கு பொருள் விளக்கம் தந்த வழக்குகள் :

நாம் முன்னரே கண்டபடி, ஒரு சட்டப் பிரிவில் 'ஆகலாம்' (may) அல்லது 'ஆக வேண்டும்' (shall) என்ற பதங்கள் இடம் பெற்றிருப்பதைக் கண்டு மட்டுமே, முறையே அவை 'அறிவுறுத்தும்' (Directory) மற்றும் 'கட்டளையுறுத்தும்' (Mandatory) சட்டப் பிரிவுகள் எனப் பொருள் கொள்ளக்கூடாது. சட்டமன்றத்தின் கருத்தை ஒட்டியே பொருள் விளக்கமளிக்க வேண்டும். அச்சமயத்தில் 'ஆகலாம்' என்பது கட்டளையுறுத்தக் கூடிய தன்மையதாகவும், 'ஆக வேண்டும்' என்பது 'அறிவுறுத்தும்' தன்மையதாகவும் மாறியும் வரலாம். இது குறித்து பின்வரும் சில வழக்குகளை கவனிப்போம்.

State of Uttar Pradesh v.'Jogendra Singh[2] என்ற வழக்கில், உத்திரப் பிரதேச நிர்வாக தீர்ப்பாயத்தின் ஒழுங்கு முறை நடவடிக்கையின் 4(2)வது விதியானது, அரசு ஊழியர் ஒருவர் தனக்கெதிரான ஊழல், ஒழுங்கின்மை போன்ற வழக்குகளை தீர்ப்பாயம்தான் விசாரிக்க வேண்டும், என ஆளுநரிடம் விண்ணப்பம்

1. A.I.R. 1955 S.C. 425
2. A.I.R. 1968 S.C. 1611

செய்தால், அவர் அத்தகு வழக்குகளை, தீர்ப்பாயத்திற்கு அனுப்பலாம் (may refer). இங்கு உச்ச நீதிமன்றமானது, 'அனுப்பலாம்' என்ற பதத்தை 'அனுப்ப வேண்டும்' என்று பொருள் விளக்கம் தந்தது. ஏனெனில், அரசு ஊழியர் மேற்கண்டவாறு விண்ணப்பித்தால், அவருக்கெதிரான வழக்கை தீர்ப்பாயத்திற்கு 'அனுப்பியே ஆக வேண்டும்' (shall).

State of Uttar Pradesh v. Mahbodhan Lal[1] என்ற வழக்கில், 'ஆக வேண்டும்' (shall) என்ற பதத்தை, பொதுவாக கட்டளையுறுத்தக் கூடிய தன்மையுடையதாக பொருள் கொள்ள வேண்டுமென்றாலும், அனைத்து வழக்குகளிலும் அவ்வாறே பின்பற்றியாக வேண்டுமென்ற எந்த கட்டாயமும் கிடையாது, என உச்ச நீதிமன்றம் கூறியது. ஆனால் இதற்கு மாறாக உள்ள பின்வரும் வழக்கொன்றை சற்று கவனிப்போம்.

Jyoti Prasad Mitter v. The Chief Justice[2] என்ற வழக்கில், அரசியலமைப்புச் சட்டத்தின் 217(3)–வது சரத்தின் பொருள் விளக்கம் கூறப்பட்டது. அச்சரத்தின்படி, உயர் நீதிமன்ற நீதிபதியின் வயது குறித்து வினா ஏதும் எழுந்தால், அவ்வினாவினை குடியரசுத் தலைவர், இந்திய தலைமை நீதியரசரிடம் கலந்தாலோசித்த பிறகு முடிவெடுக்க வேண்டும் (shall be decided) மற்றும் அவரது முடிவே இறுதியானதாகும் (shall be final). இங்கு, 'இந்தியத் தலைமை நீதியரசரிடம் கலந்தாலோசிக்க வேண்டும்', என்பது, கட்டளையுறுத்தக் கூடிய சட்டப்பிரிவாகும், எனப் பொருள் விளக்கமளித்தது. அதாவது, இங்கு 'ஆக வேண்டும்' என்று சட்டப் பிரிவு கூறியதையே, நீதிமன்றமும் 'ஆக வேண்டும்' என்றே பொருள் விளக்கம் அளித்தது.

எனவே, மேற்கண்ட வழக்குகளின் மூலம் சட்ட வார்த்தைகளைக் காண்பதைவிட, சட்டமன்றத்தின் கருத்தைக் கண்டு பொருள் விளக்கமளிப்பதே, கட்டளைவுறுத்தும் மற்றும் அறிவுறுத்தும் சட்டப் பிரிவுகளைப் பொறுத்தவரை உகந்தது, என்பது தெளிவாகிறது.

கட்டளையுறுத்தும் சட்டங்கள் மற்றும் அறிவுறுத்தும் சட்டங்கள் - வேறுபாடுகள்:

கட்டளையுறுத்தக் கூடிய சட்டப் பிரிவை கண்டிப்புடன் கடைப்பிடித்தே ஆக வேண்டும் மற்றும் அறிவுறுத்தக் கூடிய சட்டப்பிரிவை கணிசமான அளவு கடைப்பிடித்தாலே போதும். மேலும் கட்டளையுறுத்தும் சட்டப் பிரிவுகளை கடைப் பிடிக்காது போனால் அல்லது அவை விதிக்கும் நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்பட விட்டால், அப்பிரிவின் கீழான நடவடிக்கைகள் அனைத்தும் சட்ட முரணானதாகும்

1. A.I.R. 1957 S.C. 912
2. A.I.R. 1965 S.C. 961

(illegal); செல்லாது போகும். ஆனால் அறிவுறுத்தும் சட்டப் பிரிவுகளை கடைப் பிடிக்காது போனால், அது வெறும் ஒரு ஒழுங்கீனம் (irregularity) மட்டுமேயாகும்.

பொதுநலனை மேம்படுத்தும் சட்டங்கள், கட்டளையுறுத்தக் கூடியது; தனிநபர் நலனை மேம்படுத்துவது, அறிவுறுத்தக் கூடியது. சில சமயங்களில் பொதுக் கடமைகளைக் குறிப்பிடும் சட்டங்கள் அறிவுறுத்தக் கூடியதாகவும், தனிநபர் உரிமைகளைப் பற்றிக் கூறும் சட்டங்கள் கட்டளையுறுத்தக் கூடியதாகவும் பொருள் கொள்ளப்படுகின்றன.

'ஆகலாம்' (may) மற்றும் 'ஆக வேண்டும்' (shall) என்ற பதங்களின் பொருள் விளக்கமானது, **சட்டமன்றத்தின் கருத்தை ஒட்டித்தான் உள்ளதே தவிர, சட்ட வாசகத்தை ஒட்டி அல்ல.**

முடிவுரை :

ஒரு சட்டப்பிரிவு, கட்டளையுறுத்தக் கூடியதா அல்லது அறிவுறுத்தக் கூடியதா என்று நிர்ணயிப்பதற்கென்று நிலையான விதிகள் ஏதும் கிடையாது.

சட்டமன்றத்தின் நோக்கம் மற்றும் எல்லை ஆகியவற்றிலிருந்து அறிந்து கொள்ளப்பட்ட சட்டமன்றத்தின் கருத்து, அது பயன்படுத்தியுள்ள மொழிநடை, மற்றும் சம்பந்தப்பட்ட பிரிவுகளை கடைப்பிடிக்காததால் ஏற்படும் விளைவுகளைக் கொண்டே ஒரு பிரிவு கட்டளையுறுத்தக் கூடியதா அல்லது அறிவுறுத்தக் கூடியதா என்பதைக் கண்டறிய வேண்டும்.

-oOo-

13

அரசியலமைப்புச் சட்டத்தின் பொருள் விளக்கம் [Interpretation to Constitution]

(அ) அரசியலமைப்பு முறையும் அரசியலமைப்புத் தன்மையும் [Constitutionalism and Constitutionality]

65. Distinguish Constitutionalism and Constitutionality. How far Constitutional interpretation has paved the way for innovative jurisprudence? (சட்டத்தில் அரசமைப்பு முறையினையும், அரசமைப்பு சார்பையும் வேறுபடுத்துக. நவீனமய சட்ட பொருள் காணுதல் எத்தகு தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது ?[1])

முன்னுரை :

1940–ஆம் ஆண்டுகளின் இறுதிக் காலம் உலக வரலாற்றில் மிக முக்கியமான மாற்றங்களை மின்னல் வேகத்தில் நிகழ்த்திய காலமாகும். இரண்டாம் உலகப் போர் ஒரு முடிவை எட்டியது அப்போதுதான்; ஹிட்லரின் ஏகாதிபத்தியம் மண்ணோடு மண்ணாகச் சரிந்து சிதைந்ததும் அப்போதுதான்;

1. மேற்படி வினா, முனைவர் அம்பேத்கார் பல்கலைக்கழகத்தினால் வழங்கப்பட்ட மாதிரி வினாத்தாளில் 6–வது வினாவாக வந்துள்ளது. அதன் தமிழ் மொழி பெயர்ப்பு முற்றிலும் தவறாகும். ஆங்கிலத்தில் கொடுக்கப்பட்டுள்ள அவ்வினாவின் சரியான தமிழ் பெயர்ப்பு, இதோ .... "அரசியலமைப்பு பொருள் விளக்கம் எந்த அளவிற்கு புதின சட்டவியலுக்கு வழி வகுத்துள்ளது ?" என்று இருக்க வேண்டும். எனவே, மாணவர்கள் ஆங்கில வினாவிற்கு ஒப்பவே, பதிலை எழுத முயற்சித்தல் வேண்டும்.

ஆங்கிலேயரின் போரசு குலைந்து, சிதைந்து, சிதறி ஓடியதும், ஒடுங்கியதும் அப்போதுதான். அதுபோல் சீனாவில் நூற்றாண்டுப் புரட்சி தோன்றிப் புத்தெழுச்சியை ஊட்டியதும் அப்போதுதான். அதுவே பின்னர்ப் பெரும் இயக்கமாய் உருவெடுத்தது. போரின் கொடுமையிலிருந்து விடுபட்டுப் புதிய பொருளாதாரப் பாதையில் ஒளிமயமான எதிர்காலத்தை நோக்கி அய்ரோப்பா வீறு கொண்டு எழுந்ததும் அதுபோழ்துதான். இங்ஙனம் உலகெங்கும் கொந்தளிப்பு; உணர்ச்சி மயம்; புதிய உற்சாகம்; புரட்சி , எழுச்சி. இக்காலகட்டம் இந்தியாவையும் விட்டு வைக்கவில்லை. இனவெறி எங்கும் தலை விரித்தாடியது. கொலை, கொள்ளை, கற்பழிப்பு போன்ற வன்செயல்கள் குலை நடுங்க வைத்தன. முடிவு? நாடு பிரிவினைக் குள்ளாகியது. யாதும் ஊரே; யாவரும் கேளிர்; எல்லோரும் ஓர் குலம், ஓர் இனம் என்ற ஒற்றுமைக் கீதத்தை இசைக்க வேண்டியவர்கள் இனத்தின் பெயரால் நாடு இரண்டாகத் துண்டாடப்பட வழி தேடிக் கொண்டார்கள். இரவுக்குப் பின் பகல்; புயலுக்குப் பின் அமைதி என்றாற் போல், இதற்குப் பிறகுதான் இந்தியாவில் அமைதி நிலவி, இன்றைய இந்தியா பிறக்க வழி ஏற்பட்டது. இந்நிலையில், ஒரு நவீன சுதந்திர இந்தியாவை உருவாக்கவும், அதற்குத் தகுந்த அரசியலமைப்பு முறையையும், அரசியலமைப்புச் சட்டத்தையும் உருவாக்க முயற்சிக்கப்பட்டது. அந்த முயற்சியின் இன்விளைவே இன்றைய இந்தியாவின் அரசியலமைப்புச் சட்டமாகும். இது, 1950–ஆம் ஆண்டு, சனவரித் திங்கள் 26–ஆம் நாள் சுகப் பிரசவமானது. இனி அந்த அரசியலமைப்பு முறையையும், அரசியமைப்புச் சட்டத்தையும் மற்றும் அரசியலமைப்புத் தன்மை (சார்பையும்) சற்று விரிவாகக் காண்போமா ?

அரசியலமைப்பு முறை (Constitutionalism) :

அரசியலமைப்பு முறை என்பது, ஒரு நாடு ஆட்சி செலுத்துவதற்குண்டான வழிவகைகளைப் பற்றிக் கூறுவதாகும்; அதன் அரசியலமைப்பு எத்தகையது, என்று விளம்புவதாகும்.

"எக்கோட்பாடுகள் ஆட்சியின் அமைப்பைப் பற்றி வரையறுத்துக் கூறுகின்றனவோ, அவைதான் அரசியலமைப்பு" என **ஆஸ்டின் (Ausin)** கூறுகிறார்.

அதுபோல், "ஒரு நாட்டு அரசாங்கத்தின் முக்கிய அங்கங்களின் தலையாய பணிகளையும், அடிப்படைத் திட்டத்தையும் அறிவிக்கின்ற, சட்டத்தின் சிறப்பான உயர்நிலையை உடைய ஒரு சாசனம், அரசியலமைப்பு ஆகும்" என **Wade** மற்றும் **Philips** ஆகிய வல்லுநர்கள் கூறுகின்றனர்.

நம் உடலில் பல உறுப்புகள் உள்ளன. இவ்வுறுப்புகளின் இணைந்த இயக்கமே, நம் உடல் நலனுக்கு உறுதி அளிக்கின்றது. அதுபோல், அரசு என்ற அமைப்பிற்கும் பல உறுப்புகள் உள்ளன. பல்வேறு வகையில் அவை செயல் படுகின்றன. அவற்றின் இணைந்த இயக்கமே அரசியலமைப்பின் ஆதாரமாகின்றது.

இங்கு அரசின் உறுப்புகள் எவை? அவை ஒவ்வொன்றின் கடமை என்ன? அவை இயங்கும் முறை என்ன ? இவற்றின் விளக்கங்களின் அடிப்படையில்தான், ஒரு நாட்டின் 'அரசியலமைப்பு முறையும்' நிற்கிறது என்று கூறலாம்.

நாட்டிற்கு நாடு அரசியலமைப்பு முறை மாறுபடுகிறது. நமது இந்திய நாட்டு அரசியலமைப்பு முறை, கூட்டாட்சி (Federal) தத்துவத்தை அடிப்படையாகக் கொண்டது. இதனால் மத்திய–மாநில அரசுகளுக்கிடையே அதிகாரப்பகிர்வு (Distribution of Powers) செய்யப்பட்டுள்ளது. ஒரு நாட்டின் மூன்று முக்கிய அங்கங்களான (Organs) நிறைவேற்றல் (Executive), சட்டமியற்றல் (Legislative) மற்றும் நீதி நிறுத்தல் (Judiciary) ஆகியவற்றிற்கான அதிகாரம், அரசியலமைப்பால் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. அந்த அதிகாரங்கள் எவ்வழியில் செல்ல வேண்டும், என்பதற்குண்டான பாதையை அரசியலமைப்பு வகுக்கிறது. எனவே, அரசியலமைப்பு மேலாண்மை வாய்ந்ததாக (Supremacy of Constitution) உள்ளது. நாடானாலும் சரி, அல்லது அதன் குடிமக்களானாலும் சரி, யாவரும் நீதிமன்றத்தின் அதிகாரத்திற்கு (Authority of Court) கட்டுப்பட்டவர்களளென, அரசியலமைப்பு கூறுகிறது. அனைத்திற்கும் மேலாக, நமது அரசியலமைப்பு ஒரு எழுதப் பெற்ற அரசியலமைப்பு (Written Constitution) ஆகும். இதனால், இதனை எளிதில் நெகிழ்த்திப் (Rigidity) பொருள் கூற முடியாது. மேலும் மக்களுக்கு, பல இன்றியமையாத அடிப்படை உரிமைகளை (Fundamental Rights) வழங்கியுள்ளன. அதுபோல் அரசு நெறிமுறையுறுதலும் கொள்கைகளும் (Directive Priniciples of State Policy), நமது அரசியலமைப்பு முறையில் உள்ளன.

அரசியலமைப்பு சட்டம் (Constitutional Law) :

நாம் ஏற்கனவே கண்டது போல், அரசின் உறுப்புகள் எவை, அவை ஒவ்வொன்றின் கடமை என்ன, அவை இயங்கும் முறை என்ன, ஆகியவற்றிற்குண்டான நெறிமுறைகளைக் கூறும் விதிகளே 'அரசியலமைப்புச் சட்டம்' எனப்படுகிறது. சுருங்கக்கூறின், அரசின் அமைப்பையும், அரசியலமைப்பு முறையையும் கூறுவது 'அரசியலமைப்புச் சட்டம்' எனலாம்.

வேறுவிதமாகக் கூறுவதெனில், அரசாங்கத்தின் முக்கிய அங்கங்களின் அமைப்புகளையும், அது ஒன்றுடன் ஒன்று கொண்டுள்ள உறவுகளாலும் ஒழுங்குபடுத்துகின்ற மற்றும் அதன் முக்கிய பணிகளை நிர்ணயிக்கின்ற விதிகள்தாம், அரசியலமைப்புச் சட்டம் எனப்படுகிறது.

அறிஞர் ஹிப்பெர்ட் (Hibbert) அவர்கள், "அரசாண்மையருக்கும், குடிமக்களுக்கும், அரசாண்மை அமைப்பின் உறுப்புகளுக்கும் இடையேயுள்ள உறவு முறையினைச் கூறும் விதிகளைக் கொண்டது, அரசியலமைப்புச் சட்டம்" என்கிறார்.

'அரசியலமைப்பு' அல்லது 'அரசியலமைப்பு முறை' என்று ஒன்று தோன்றிய பிறகுதான், அதனை ஒழுங்குபடுத்தி சீரான வழியில் கொண்டு செல்ல 'அரசியலமைப்புச் சட்டம்' என்ற ஒன்று ஏற்பட்டது. 'அரசியலமைப்பு' முதலில் வந்ததா அல்லது 'அரசியலமைப்புச் சட்டம்' முதலில் வந்ததா என்ற வினாவிற்கு 'அரசியல் அமைப்புத்' தான் முதலில் வந்தது எனத் திட்டவட்டமாகக் கூறலாம். முதலில் மக்கள், பிறகு நாடு, அதன் பின் அரசியலமைப்பு, இறுதியாக அரசியல் அமைப்புச் சட்டம். இவ்வாறாகத்தான் இதன் படிநிலைகள் (stages) அமைகின்றன. முதலில் உயிர்; பிறகு உடல் வளர்ச்சி. 'அரசியலமைப்பு முறை' அஸ்திவாரம் என்றால் 'அரசியலமைப்புச் சட்டம்' அதன் மீது நிற்கும் மாளிகை ஆகும்.

அரசியலமைப்பு (சார்புத்) தன்மை அல்லது அரசியலமைப்புச் சட்டத் தன்மை (Constitutionality) :

நாம் ஏற்கனவே, 'அரசியலமைப்பு' என்பது மேலாண்மை வாய்ந்தது என்று கண்டோம். ஏனெனில், அது மக்களாட்சியின் அடிப்படையில் இயற்றப்பட்டதாகும். அரசியலமைப்புச் சட்டத்தின் வகைமுறைகளை மீறுதல், மக்களாட்சிக் கோட்பாடுகளை மீறுவது போலாகும். எனவே, எந்த ஒரு சட்டமும் அல்லது சட்டச் செயலும் அரசியலமைப்பிற்கு உட்பட்டதாகத்தான் இருக்க வேண்டும். இவ்வாறு உட்பட்டதாக இருக்கும் தன்மைதான், அரசியலமைப்பு (சார்புத்) தன்மை எனப்படுகிறது. இதை **'அரசியல் அமைப்புச் சட்டத் தன்மை'** என்றும், **'அரசியலமைப்புக்குட்பட்ட தன்மை'** என்றும் அழைக்கலாம்.

எங்கெல்லாம் எழுதப் பெற்ற அரசியலமைப்புச் சட்டம் உள்ளதோ, அங்கெல்லாம் சட்டமன்றம் இயற்றும் சட்டங்களானது, அந்த அரசியலமைப்புச் சட்டத்தின் வகைமுறைகளுக்கு ஒத்திருக்க வேண்டும். அப்பொழுதுதான் அச்சட்டம் அல்லது அச்சட்டச் செயல், செல்லத்தக்கதாகும். இதுவே அக்குறிப்பிட்ட சட்டத்தின், **அரசியலமைப்புரீதியான செல்லுடமை (Constitutional Validity of the Statute)** எனப்படுகிறது.

உதாரணமாக, ஒரு சட்டமானது, அரசியலமைப்பின் முகப்புரையை (Preamble) மீறுவதாகவோ, அல்லது அரசியலமைப்பு கூறும் அடிப்படை உரிமைகளை பறிப்பதாகவோ இருப்பின், அச்சட்டம் அரசியலமைப்பு தன்மையற்றது (Unconstitutional) எனப்படுகிறது.

அரசியலமைப்பு பொருள் விளக்கம் எந்த அளவிற்கு புதின சட்டவியலுக்கு வழி வகுத்துள்ளது ?

மக்களாட்சியின் மறுவடிவமே, அரசியலமைப்புச் சட்டமாகும். மக்களாட்சி மலர்ந்துள்ள நாடுகளிலெல்லாம், மக்களுக்கென்று அடிப்படை உரிமைகளும், சுதந்திரங்களும் அரசியலமைப்பால் கொடுக்கப்பட்டுள்ளன. அதேபோல், அவை மீறப்பட்டால், அதற்கு நீதிப் பேராணைகள் (Writs), மூலம் அரசியலமைப்பு தீர்வழி

தருகிறது. பிற சட்டங்களையெல்லாம் நெறிப்படுத்தும், தாய் சட்டமாக அரசியலமைப்புச் சட்டம் விளங்குகிறது. ஒரு சாதாரண சட்டத்திற்கு அளிக்கப்படும் பொருள் விளக்கத்தைக் காட்டிலும், அரசியலமைப்புச் சட்டத்தின் வகைமுறைகளுக்கு அளிக்கப்படும் பொருள் விளக்கம் மிகவும் நுட்பமானதாகும். ஏனெனில், அதற்கு மேற்கண்டவைதாம் காரணம்.

சாதாரண சட்டத்திற்கு பொதுவான பொருள் விளக்க விதிகள் உள்ளன. ஆனால், அரசியலமைப்புச் சட்டத்திற்கென பல சிறப்பான பொருள் விளக்கக் கோட்பாடுகளும், விதிகளும் உள்ளன. அவை,

1. உள்ளதாகக் கருதப்படுகிற அதிகாரங்கள்
   (Doctrine of Implied Powers)
2. உப அல்லது துணை அதிகாரங்களின் கோட்பாடு
   (Doctrine of Incidental or Ancilliary Powers)
3. உட்கிடைத் தடைக் கோட்பாடு
   (Doctrine of Implied Prohibition)
4. ஆக்ரமித்துக் கொள்ளும் கோட்பாடு
   (Doctrine of Occupied Field)
5. பெரும்பான்மை விதி
   (Doctrine of Pith and Substance)
6. சட்டத்தின் பொய்மைத் தோற்ற விதி
   (Doctrine of Colourable Legislation)
7. ஆளுகைத் தொடர்புக் கோட்பாடு
   (Doctrine of Territorial Nexus)
8. கூட்டுப்பிரியக்கூடிய தத்துவம்
   (Doctrine of Severability)
9. வரு நிகழ்வு ஒதுக்கித் தள்ளும் கோட்பாடு
   (Doctrine of Prospective Overruling)
10. மறைதல் கோட்பாடு
    (Doctrine of Eclipse)
11. வரம்புமீறல் கோட்பாடு
    (Doctrine of Ultra Virus)
12. தளர்த்தீடு கோட்பாடு
    (Doctrine of Waiver)

இவ்வாறு, பல கோட்பாடுகளின்[1] வழியாக பொருள் விளக்கம் பகரப் படுகின்றது. இத்தனை கோட்பாடுகளா, என்று புருவங்களை உயர்த்தினால், அதில் வியப்பொன்றுமில்லை. அத்தனையும் எதற்கு? மக்களாட்சியில் மக்களின் நலனைக் காப்பதற்கு; அடிப்படை உரிமைகளுக்கும், சுதந்திரங்களுக்கும் அரணாய் நிற்பதற்கு.

'சட்டவியல்' (Jurisprudence) என்பது என்ன ? 'சட்டம் பற்றிய ஞானமே' (Juris Prudentia), 'சட்டவியல்' ஆகும். அரசியலமைப்பினை பொருள் விளக்கம் கொள்வதற்கு, மேற்கண்ட கோட்பாடுகளும், விதிகளும், பலப்பல வழக்குகளில் எடுத்தாளப்பட்டுள்ளது. ஒன்றா ? இரண்டா ? எண்ணிக்கை தெரியாத குற்றமல்ல. எண்ண வேண்டும் என்ற எண்ணத்தை தராத அளவிற்கு அதிக எண்ணிக்கை யிலான வழக்குகள். இவையெல்லாம் சட்டம் பற்றிய புதிய ஞானத்தை, அனுதினமும் ஏற்படுத்திய வண்ணம் உள்ளது. எனவே, **எந்த அளவிற்கு அரசியலமைப்பு பொருள் விளக்கம், புதின சட்டவியலுக்கு வழி வகுத்துள்ளது என்று கேட்டால், அதற்கு வானம் தான் அளவு, என்று கூறுவதைத் தவிர வேறு வழியில்லை.**

(ஆ) ஒரு சட்டத்தின் அரசியலமைப்புக்குட்பட்ட தன்மைக்கு சாதகமான அனுமானங்கள் [Presumptions in favour of Constitutionality of Legislation]

66. What are the presumptions in favour of Constitutionality of a statute? What are the effects of Unconstitutionality? (ஒரு சட்டத்தின் அரசியலமைப்புக்குட்பட்ட தன்மைக்கு சாதகமான அனுமானங்கள் யாவை ? அரசியலமைப்பற்ற தன்மையின் விளைவுகள் யாவை ?)

ஒரு சட்டத்தின் அரசியலமைப்புக்குட்பட்ட தன்மை (Constitutionality of a Statute) :

நமது அரசியலமைப்பு மேலாண்மை (Supreme) வாய்ந்தது. ஏனெனில், அது மக்களாட்சியின் அடிப்படையில் இயற்றப்பட்டதாகும். அரசியலமைப்புச் சட்டத்தின் வகைமுறைகளை மீறுதல், மக்களாட்சிக் கோட்பாடுகளை மீறுவது போலாகும். எனவே, எந்த ஒரு சட்டமும் அல்லது சட்டச் செயலும் அரசியலமைப்புச் சட்டத்திற்கு, உட்பட்டதாகத்தான் இருக்க வேண்டும். இதுவே, **'ஒரு சட்டத்தின் அரசியலமைப் புக்குட்பட்ட தன்மை'** அல்லது **'அரசியலமைப்புப்படி செல்லத்தக்க தன்மை'** **(Constitutional Validity)** எனப்படுகிறது. இதற்குச் சாதகமாக சில அனுமானங்களை செய்து கொள்ளச் சட்டம் அனுமதியளிக்கிறது. விரிவாக வருமாறு.

1. விரிவாக பின்னர் காண உள்ளோம்.

அரசியலமைப்புக்குட்பட்ட தன்மைக்கு சாதகமான அனுமானம் (Presumption in favour of Constitutionality) :

பொதுவாக, ஒரு சட்டத்தின் அரசியலமைப்புக்குட்பட்ட தன்மைக்குச் சாதகமாக, ஒரு அனுமானம் உண்டு. சட்டம் ஒவ்வொன்றும் மக்களின் தேவைகளுக்கும், விருப்பங்களுக்கும் முறையான மதிப்பளிக்கப்பட்டு, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளால் இயற்றப்படுகின்றது என்ற அடிப்படையில், நீதிமன்றங்கள் அனுமானம் கொள்கிறது.

மேலும், **Vrajlal Manilal v. State of M.P.**[1] என்ற வழக்கில், உச்ச நீதிமன்றம் கூறியிருப்பதைப் போல, ஒரு உரிமைக்கு அரசியலமைப்பு பாதுகாப்பு அளித்திருப்பதை, சட்டமன்றமானது திட்டமிட்டு அவமதிக்கும் வண்ணம் அல்லது ஏளனம் செய்யும் வண்ணம், சட்டமியற்றவில்லை, என்ற அனுமானமும் உண்டு.

ஆனால் அதே சமயத்தில் மேற்கண்ட அனுமானத்திற்கும் சில வரம்புகள் உள்ளன. அவை வருமாறு.

முதலாவதாக, ஒரு சட்டமானது அரசியலமைப்பினுள் ஊடுருவிச் செல்லும் ஒரு உணர்வினை எதிர்க்கும் வண்ணம் உள்ளது என்ற அனுமானத்தின் கீழ், அச்சட்டத்தை இல்லா நிலையது என்று அறிவிக்க முடியாது. ஆனால், இது எப்பொழுது எழுகிறது என்றால், அந்த எதிர்ப்பு, அச்சட்டத்தில், எழுத்து வடிவில் வெளிப்படுத்தப்படாத பொழுதுதான். அதாவது, உட்கிடையாக எதிர்க்கிறது, என்ற அனுமானத்தின் பேரில், சம்பந்தப்பட்ட சட்டத்தை இல்லைநிலையென அறிவிக்க முடியாது. ஆனால், அதே சமயத்தில், அந்த எதிர்ப்பு, அச்சட்டத்தில் எழுத்து வடிவில் வெளிப்படுத்தப்பட்டிருப்பின், அதனை இல்லாநிலையாதென அறிவிப்பதில் தடையேதுமில்லை.

இரண்டாவதாக, ஒரு சட்டத்தை இயற்றுவதில் சட்டமன்றத்தின் உட்கருத்தை (motive) நீதிமன்றங்கள் கவனிக்கவோ அல்லது அதனடிப்படையில் அச்சட்டத்தை காரண–காரியமற்றது மற்றும் நியாயமற்றது என அறிவிக்கவோ கூடாது. சட்டமன்றத்தின் உட்கருத்து, நன்றா, தீதா என்பதையோ அல்லது அக் குறிப்பிட்ட சட்டத்தை இயற்றுவதில் சட்டமன்றம் மிகுந்த அறிவாற்றலுடன் செயல்பட்டுள்ளது, என்பதையோ குறித்து, நீதிமன்றங்கள் எவ்வித கவனத்தையும் செலுத்தக் கூடாது. நீதிமன்றங்கள் பின் என்னதான் செய்ய வேண்டும் ? அவை, பின்வருவனவற்றை ஆராய வேண்டும்.

[i] சட்டமன்றத்தின் உட்கருத்து, சட்டமியற்றுதலுக்குண்டான தகுதி எதையேனும் மீறுகிறதா ?

[ii] அவ்வுட்கருத்து, அரசியலமைப்புச் சட்டத்தின் வகை முறைகள் எதையாவது பாதிக்கிறதா, என்று ஆராய வேண்டும். மேற்கண்டவற்றிக்கு விடை

1. A.I.R. 1970 S.C. 129

'ஆம்' எனில் அச்சட்டத்தை இல்லா நிலையதென அறிவிக்க, நீதிமன்றங்களுக்கு தடையேதுமில்லை. சுருங்கக்கூறின், ஒரு சட்டத்தை காரண–காரிமற்றது என அறிவிக்க, நீதிமன்றங்கள் தங்கள் சுய அனுமானங்களைக் கொள்ளக் கூடாது.

ஒரு சட்டம் அரசியலமைப்பற்றது என்றால், அதற்குப் பின்னிட்ட நடைமுறை :

அரசியலமைப்புச் சட்டத்தின் ஒரு சரத்தை, சட்டமொன்று மீறுகிறது என்பது கண்டறியப்பட்டால், நீதிமன்றங்கள் முதல் வேலையாக அம்மீறல் ஒரு தற்செயலான மீறலா (incidental infringement) என்பதை ஆராய வேண்டும். அது, அவ்வாறு ஒரு தற்செயலான மீறல்தான் எனும்பட்சத்தில், அதன் அடிப்படையில் மட்டுமே அச்சட்டத்தை 'வரம்பு மீறியது' (ultra virus) என அறிவித்தல் கூடாது. இங்கு அரசியலமைப்பு பொருள் விளக்கத்திற்கு உண்டான பெரும்பான்மைக் கோட்பாடு (Doctrine of Pith and Substance) உதவிக்கு வருகிறது. தடுக்கப் பட்ட சட்டமியற்றுப் பகுதியில் தற்செயலாக நுழைந்த அச்சட்டத்திற்கு, மேற்படி கோட்பாட்டின் பலனை அளிக்கும் வண்ணம் பொருள் விளக்கம் தருதல் வேண்டும். இங்கிலாந்தின் உச்ச நீதிமன்றமான பிரிவி கவுன்சில், கீழ் நீதிமன்றங்களால் சில சட்டங்கள் செல்லாதது என அறிவிக்கப்படுவதிலிருந்து காப்பதற்காக மேற்படி கோட்பாட்டை கடந்த காலகட்டங்களில் பயன்படுத்தியது. ஆனால் இந்தக் கோட்பாட்டை ஒரு எல்லைக்கு மேல் பயன்படுத்த இயலாது.

Hamdurd Dowa Khana's Case[1] – இவ்வழக்கில், உச்ச நீதிமன்றம், அடிப்படை உரிமைகள் தொடர்பாக, ஒரு சட்டத்தின் செல்லு தன்மையை தீர்மானிப்பதற்கு மேற்படி கோட்பாடு உதவுமா, என்ற அய்யப்பாட்டை கிளப்பியது.

அடிப்படை உரிமைகளை ஒரு சட்டம் பாதிக்கும் பொழுது, எப்படி அனுமானிப்பது என்பதற்கான சோதனைகள் :

அடிப்படை உரிமைகளைத் தொடும் ஒரு சட்டத்தின் அரசியலமைப்புக்குட் பட்ட தன்மையை தீர்மானிப்பதற்கு உச்ச நீதிமன்றமானது பல சோதனைகளை (tests) எடுத்துக் கூறியுள்ளது. அவை,

(1) முதல் சோதனை: அடிப்படை உரிமைகள் தொடர்பான சரத்துக்களில் எவற்றிற்காவது உட்பட்ட விஷயத்தை, சம்பந்தப்பட்ட சட்டமானது நேரடியாகப் பாதிக்கிறதா ? நேரடியாகப் பாதித்தால்தான், அச்சட்டத்தை இல்லா நிலையதெனக் கூறமுடியும். **A.K. Gopalan v. State of Madras**[2] என்ற வழக்கில், சம்பந்தப் பட்ட சட்டமானது, நேரடியாக அரசியலமைப்பு கூறும் அடிப்படை உரிமையை பாதிக்கவில்லை. எனவே, அச்சட்டத்தை இல்லாநிலையதென அறிவிக்க இயலாது, செல்லத்தக்கதே என உச்ச நீதிமன்றம் கூறியது.

1. A.I.R. 1965 S.C. 1167
2. A.I.R. 1950 S.C. 27

(2) இரண்டாவது சோதனை : சம்பந்தப்பட்ட சட்டமானது காரண–காரியத்தன்மை கொண்டிருந்தால், சட்டத்தால் அளிக்கப்பட்ட அதிகாரம் முறையற்ற விதத்தில் பயன்படுத்தப் பட்டுள்ளது என்ற சாத்தியக் கூறை, அச்சட்டத்தை செல்லாததது என்று அறிவிப்பதற்குண்டான அடிப்படையாக கருத முடியாது.

(3) மூன்றாவது சோதனை : அடிப்படை உரிமைகள் மீது, சம்பந்தப் பட்ட சட்டமானது ஏற்படுத்தும் உண்மை விளைவு மற்றும் தாக்கத்தை அறிதல் வேண்டும். அத்தாக்கம், அடிப்படை உரிமைகளுக்கு புத்தாக்கம் கொடுக்கிறதா அல்லது போட்டுப் புதைக்கிறதா, என்பதில்தான், அச்சட்டத்தை செல்லாதது என்று அறிவிப்பது அடங்கியுள்ளது.

ஒரு சட்டத்தின் அரசியலமைப்புக்குட்படாத தன்மையின் விளைவுகள் (Effects of Unconstitutionality of a Statute) :

எங்கெல்லாம் எழுதப் பெற்ற அரசியலமைப்புச் சட்டம் உள்ளதோ, அங்கெல்லாம் பாராளுமன்றம் மற்றும் சட்டமன்றம் இயற்றும் சட்டங்களானது, அந்த அரசியலமைப்புச் சட்டத்தின் வகைமுறைகளுக்கு ஒத்திருக்க வேண்டும். அப்பொழுதுதான் அச்சட்டம், செல்லத்தக்கதாகும். இதுவே அக்குறிப்பிட்ட சட்டத்தின், அரசியலமைப்பு ரீதியான செல்லுடமை (Constitutional Validity of the Statute) எனப்படுகிறது.

உதாரணமாக, ஒரு சட்டமானது, அரசியலமைப்பின் முகப்புரையை (Preamble) மீறுவதாகவோ, அல்லது அரசியலமைப்பு கூறும் அடிப்படை உரிமைகளை பறிப்பதாகவோ இருப்பின், அச்சட்டம், அரசியலமைப்பு தன்மையற்றது (Unconstitutional) எனப்படுகிறது. இதனால் பின்வரும் விளைவுகள் ஏற்படுகின்றன.

அரசியலமைப்புக்குட்படாத ஒரு சட்டம், ஆரம்பம் முதலே, இல்லா நிலைய தாகும் (void ab initio). மேலும் அதன் கீழ் செய்யப்பட்ட எந்த ஒரு செயலும், சட்ட முரணானதாகும் (illegal). எனவே, அரசியலமைப்பு தன்மையற்ற ஒரு சட்டத்தின் கீழ் பிறப்பிக்கப்பட்ட எந்த ஒரு உத்திரவும் தண்டனையும் இரத்து செய்யப்படத்தக்கதாகும்.

இதையொட்டி **Keshavan v. State of Bombay**[1] என்ற வழக்கில், உச்ச நீதிமன்றம் கூறியதைப்போல், அரசியலமைப்பிற்குட்படாத சட்டத்தின் கீழ் செய்யப்பட்ட எந்த ஒரு செயலும், அது முடிந்ததாகவோ அல்லது முற்றுப் பெற்றதாகவோ இருப்பினும் கூட, முழுமையாக சட்ட முரணானதாகும். மற்றும் அப்படிப்பட்ட அரசியலமைக்குட்படாத ஒரு சட்டத்தால் பாதிக்கப்பட்ட ஒரு நபருக்கு ஏதேனும் ஒரு விதத்தில் தீர்வழி கொடுத்தே ஆக வேண்டும்.

1. A.I.R. 1951 S.C. 128

(இ) சாதாரண சட்டத்தின் பொருள் விளக்கமும் அரசியலமைப்புச் சட்டத்தின் பொருள் விளக்கமும் [Construction of Ordinary Statute and Constitutional Law]

67. Is there any difference in construing an ordinary statute and Constitution of a Country? Explain. (ஒரு சாதாரண சட்டத்திற்கும் ஒரு நாட்டின் அரசியல் சட்டத்திற்கும் இடையே பொருள் விளக்கமளிப்பதில் ஏதேனும் வேறுபாடுகள் உள்ளதா ? விளக்குக.)

(அல்லது)

What are the rules of construction of constitution? Are the rules in any way different from statutory interpretations? (அரசமைப்புச் சட்டத்தினை பொருள் விளக்கம் காண்பதற்கான விதிகள் யாவை? அவைகள் எவ்விதத்திலேனும் இயற்சட்ட பொருள் விளக்க விதிகளினின்று மாறுபடுகின்றதா?)

முன்னுரை :

ஒரு நாட்டின் அரசியலமைப்புச் சட்டத்திற்கு அளிக்கப்படும் பொருள் விளக்கமானது, ஒரு சாதாரண சட்டத்திற்கு அளிக்கப்படும் பொருள் விளக்கத்திலிருந்து பெரிதும் மாறுபட்டதாகும்.

ஏனெனில், சாதாரண சட்டங்களை இயற்றிய சட்டமன்றத்தின் கருத்தானது, அச்சட்டத்தின் தனிப்பட்ட நோக்கம் ஒன்றை மட்டுமே மையமாகக் கொண்டிருக்கும். எனவே, அச்சட்டத்திற்கு, அதன் நோக்கத்திற்கேற்ப, சட்டப் பொருள் விளக்கத்திற்கு உதவும் பொதுவான விதிகளைக் கொண்டு பொருள் விளக்கமளித்துவிடலாம். ஆனால், ஒரு நாட்டின் அரசியலமைப்புச் சட்டம் அவ்வாறல்ல. அதன் பொருள் விளக்கத்திற்கென பல தனியான மற்றும் சிறப்பான கோட்பாடுகளும் விதிகளும் உள்ளன. (சென்ற வினாவில் இறுதியில் 12 தலைப்புகளில் கண்டோம். மேலும் அடுத்த வினாவின் விடையில் அவற்றை விளக்கமாக காணவும் உள்ளோம்). இவ்வாறு தனிப்பட்ட சில கோட்பாடுகளைப் பயன்படுத்தி, பொருள் விளக்கம் அளிப்பதற்கு காரணம் என்ன? இதற்கான விடை, அடுத்து வரும் பத்தியில் விரிவாக உள்ளது.

அரசியலமைப்புச் சட்டத்தை, ஒரு சாதாரண சட்டத்தை விட சிறப்பாக பொருள் கொள்ள வேண்டும் ?

பாராளு (சட்ட) மன்றம், பல சட்டங்களை இயற்றியுள்ளது. அவற்றிற்கு எல்லாம், தேவையான சமயங்களில், பொருத்தமான பொருள் விளக்கத்தை

நீதிமன்றங்கள் பகர்ந்துள்ளன. ஆனால் ஒரு நாட்டின் அரசியலமைப்புச் சட்டத்திற்கு பொருள் விளக்கம் அளிக்கும் பணிதான், பெரும் சிக்கலாக உள்ளது. ஏனெனில், அரசியலமைப்புச் சட்டம் இயற்றப்படுவதற்கான நோக்கம், அது ஆற்றிட இருக்கும் பணி, அது அடைய நினைக்கும் எல்லைகள் ஆகியவை முற்றிலும் வேறுபட்டவை யாகும். எனவே, அதை அணுகுவதற்குண்டான பொருள் விளக்க முறையும் மாற்றம் கொண்டதாகவே இருக்க வேண்டியுள்ளது.

உடல் இயக்கத்திற்கு உயிர் தேவை. அதுபோல் 'நாடு' எனும் உடலின் இயக்கத்திற்கு, 'அரசியலமைப்புச் சட்டம்' எனும் உயிர் தேவை. ஒரு நாடு நலம் பெற நன்மக்கள் கொண்ட சமுதாயம் வேண்டும். நல்ல சமுதாயம் அமைய, நல்லாட்சி அமைய வேண்டும். நல்லாட்சி அமைய, ஒரு நல்ல அரசியலமைப்பு வேண்டும். இங்கு ஒரு நல்ல அரசியலமைப்பைத் தருவது, அரசியலமைப்புச் சட்டமேயாகும். எனவே, ஒரு நாட்டு மக்களின் வாழ்வில், ஒரு நாட்டின் மேம்பாட்டில் மிகுந்த கவனம் கொண்டு செயல்படுவதற்கு உற்ற வகையில், அச்சட்டத்தின் நோக்கங்களை அமைக்க வேண்டிய பெரும் பொறுப்பு, அரசியலமைப்புச் சட்டத்தின் கைகளில்தாம் உள்ளது.

ஏனெனில், மக்கள் பேச நினைக்கிறார்கள்; எழுத நினைக்கிறார்கள்; நாடெங்கும் சென்று வர எண்ணுகிறார்கள்; எண்ணிய இடத்தில் எண்ணியபடி தொழில் புரிந்து வாழ ஆசைப்படுகிறார்கள்; உடைமைக்கு உரிமை தேடுகிறார்கள்; உயிருக்கு பாதுகாப்பு நாடுகிறார்கள். அவர்களது எண்ணங்களே அலாதியானவை. முடிவாகச் சொல்லப் போனால், இங்ஙனம் தங்கள் நலனை முதன்மையாகக் கருதுகின்றனர். தங்கள் எண்ணங்களுக்கு முழு வடிவம் தந்திட வல்ல நல்ல அரசை எதிர்ப்பார்க்கிறார்கள். இவற்றையெல்லாம் பிரதிபலித்து, நாட்டின் உயிரோட்டமாக, உணர்வோட்டமாக, மக்களின் மன எழுச்சியாக மாண்புடன் திகழ்வது எது ? ஒரு நாட்டின் அரசியலமைப்புச் சட்டம்தானே ?

ஒரு நாடு பிறக்கும் போது அரசியலமைப்புச் சட்டமும் பிறக்கிறது. நாட்டின் வீழ்ச்சியே, அதன் வீழ்ச்சியாய் முடிகிறது. நாடு வாழும்போது, அதன் உயிரோட்டமாக, மக்களின் உணர்வுகளைப் பிரதிபலித்து நிற்கிறது. ஒரு நாட்டின் பலமே அதன் அரசியலமைப்புதான். ஒரு நாட்டின் முக்கிய மூன்று அங்கங்களான நிர்வாகத் துறை, சட்டத்துறை மற்றும் நீதித்துறை ஆகியவை அதன் படைப்பே. அதை முறையான வழியில் கொண்டு செல்வதும், அதுவே. கடந்த காலத்தை தன்னுள் அடக்கி, நிகழ்கால வழிகாட்டியாய் நின்று, ஒளிமயமான ஒரு எதிர்காலத்திற்கு அழைத்துச் செல்லும் கலங்கரை விளக்கமாகும், அது. அரசியலமைப்புச் சட்டம் வெறும் வார்த்தைக் கோர்வை அன்று. வாழ்ந்து கொண்டிருக்கும் சமுதாயத்தைச் சுட்டி, வரவிருக்கும் சமுதாயத்தையும் எட்டிடச் செய்யும் ஒரு தொலைநோக்கி. அது, பல கோடி மக்களின் பேராணையைத் தாங்கி மக்கள் பிரதிநிதிகளுக்கு ஆளும் உரிமையை அளித்திடும் உரிமைச் சாசனம்.

சுருங்கக்கூறின், ஒரு அரசியலமைப்பின் சரித்திரம் ஒரு நாட்டின் வரலாறு; அந்த நாட்டு மக்களின் வரலாறு; அது அவர்களின் உரிமை கீதம்; உயிர்நாடி; உணர்வோட்டம்.

இப்படிப்பட்ட பெரும் பெருமைகளெல்லாம் வாய்ந்த ஒரு புனித சாசனமாகிய அரசியலமைப்புச் சட்டம், நீதிமன்றங்களின் பொருள் விளக்கத்திற்கு ஆளாகும் பொழுது, மிகுந்த கவனத்துடனும் எச்சரிக்கையுடனும் நீதிமன்றங்கள் செயல்பட வேண்டும். தான்தோன்றித்தனமாக, மனம் போன போக்கில் செயல்பட்டு, பொருள் விளக்கமளிக்க இயலாது. ஏனென்றால், முன் கூறியது போல் ஒரு நாட்டின் தலைவிதியே அதனால் நிர்ணயிக்கப்படுகிறது. ஒரு நாட்டின் எதிர்காலமே அதில் அடங்கியிருக்கிறது.

முடிவுரை :

எனவே, ஒரு சாதாரண சட்டத்திற்கும், அரசியலமைப்புச் சட்டத்திற்கும் பல வேறுபாடுகள் பரந்த அளவில் உள்ளன. இதனால், அவற்றிற்குண்டான பொருள் விளக்க விதிகளும் மாறுபடுகின்றன. சுமார் 12 கோட்பாடுகள், அரசியலமைப்பு சட்டத்திற்கு பொருள் விளக்கமளிக்கையில் பயனாகின்றன. அக்கோட்பாடுகளை விரிவாக அடுத்த பகுதியில் காண உள்ளோம். (அடுத்து வரும் வினாவின் விடையையும் சுருக்கமாக சுட்டிக்காட்டுதல் வேண்டும் – ஆசிரியர்.)

68. "To some extent the Indian Constitution itself incorporates the principles of Statutory Construction" - Discuss. ("சட்டப் பொருள் விளக்கக் கொள்கைகளை ஒரு குறிப்பிட்ட அளவிற்கு இந்திய அரசியலமைப்புச் சட்டமே உள்கொண்டுள்ளது" – விவாதிக்க.)

முன்னுரை :

சாதாரண சட்டங்களுக்கு அளிக்கப்படும் பொருள் விளக்கம் என்பது ஆங்கிலத்தில் **'Statutory Construction'** எனப்படுகிறது. இச்சாதாரண சட்டங்களுக்கான பொருள் விளக்க விதிகளும், அரசியலமைப்புச் சட்டத்திற்கான பொருள் விளக்க விதிகளும், கோட்பாடுகளும் ஒன்றுக்கொன்று மாறுபட்டவை என்பதை நாம் சென்ற வினாவின் விடையில் கண்டோம். இங்கு ஒன்றை நாம் மிக முக்கியமான கவனத்தில் கொள்ள வேண்டும். அதாவது, சாதாரண சட்டங்களுக்கு பொருள் விளக்கம் அளிப்பதற்கான விதிகள், அரசியலமைப்புச் சட்டத்திற்குப் பொருள் விளக்கம் அளிப்பதற்குப் பயனாகும். ஆனால் அரசியலமைப்புச் சட்டத்திற்கு பொருள் விளக்கம் அளிப்பதற்கான விதிகள், சாதாரண சட்டங்களுக்கு பொருள் விளக்கம் அளிப்பதற்கு பயனாகாது. இவ்வாறு சாதாரண சட்டங்களுக்கு பொருள் விளக்கம் அளிப்பதற்கான விதிகளை ஒரு குறிப்பிட்ட அளவிற்கு அரசியலமைப்புச் சட்டமே தன்னுள் அடங்கியுள்ளது எனில் அது மிகையன்று. அது எவ்வாறு என்பதை அடுத்த பத்தி விளக்குகிறது.

சாதாரண சட்டங்களுக்கு பொருள் விளக்கம் அளிப்பதற்கான விதிகளை, எந்த அளவிற்கு அரசியலமைப்புச் சட்டம் உள் கொண்டுள்ளது? :

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் **சரத்து 367(1)** பின்வருமாறு கூறுகிறது. அதன்படி, பொருள் வேறுவிதமாக தேவைப்பட்டாலன்றி, சரத்து 372-ன் கீழ் செய்யப்படலாமெனக் கூடிய மாற்றங்கள் மற்றும் திருத்தங்கள் எதற்கும் உட்பட்டு, 1897-ஆம் ஆண்டின் பொதுச் சொல் விளக்கச் சட்டமானது (The General Clauses Act, 1897) இந்திய அரசின் சட்டமன்றங்களால் இயற்றப் படும் சட்டமொன்றின் பொருள் விளக்கத்திற்கு பொருந்துவதைப் போலவே, இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் பொருள் விளக்கத்திற்கும் பொருந்தும்.

மேற்கண்ட சரத்திற்கு **In Re Keshavan Madhav Menon**[1] - எனும் வழக்கில் பம்பாய் உயர் நீதிமன்றம் பொருள் விளக்கம் அளிக்கும் பொழுது, 1897-ஆம் ஆண்டின் பொதுச் சொல் விளக்கச் சட்டத்தில் கூறப்பட்டிருக்கும் பொதுவான வரையறைகள் (general definitions) மட்டுமல்லாது, பொருள் விளக்கமளித்தல் தொடர்பாக அதில் கொடுக்கப்பட்டுள்ள பொது விதிகளும் (general rules of construction) இந்திய அரசியலமைப்பின் பொருள் விளக்கத்திற்குப் பொருந்தும் என்று கூறியது.

அந்த வகையில் **State of Madras v. Gannon Dunkerley**[2] எனும் வழக்கில் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் வரும் **'சரக்கு விற்பனை' (sale of goods)** எனும் பதத்திற்கு 1930-ஆம் ஆண்டின் சரக்கு விற்பனைச் சட்டத்தில் (Sale of Goods Act, 1930) கொடுக்கப்பட்டுள்ள அதே வரையறையே பொருந்தும் என்று உச்ச நீதிமன்றம் கூறியது.

மேலும் **Jawala Ram v. State of Pepsu**[3] எனும் வழக்கில் இந்திய அரசியலமைப்பின் 20-வது சரத்தில் வரும் 'குற்றம்' (offence) எனும் பதத்திற்கு 1897-ஆம் ஆண்டின் பொதுச் சொல் விளக்கச் சட்டத்தின் 3(38)-வது பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள அதே பொருளே பொருந்தும் என்று உச்ச நீதிமன்றம் பகர்ந்தது.

அதுபோல **Bijoy Ranjan v. B.C.Dasgupta**[4] எனும் வழக்கில் இந்திய அரசியலமைப்பின் 226-வது சரத்தில் வரும் 'நபர்' (person) எனும் பதத்திற்கு 1897-ஆம் ஆண்டின் பொதுச் சொல் விளக்கச் சட்டத்தின் 3(42)-வது பிரிவில் கூறப்பட்டுள்ள அதே பொருளே பொருந்தும் என்று கல்கத்தா உயர் நீதிமன்றம் கூறியது.

1. A.I.R. 1951 Bom. 188
2. A.I.R. 1958 S.C. 560
3. A.I.R. 1962 S.C. 1246
4. A.I.R. 1953 Cal. 289

இவை மட்டுமல்லாது **Kouchuni v. State of Madras**[1], **Ananda Nambiar v. Chief Secretary of Government of Kerala**[2], **Hamdard Dawakhana v. Union of India**[3] ஆகிய வழக்குகளில் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் மூன்றாம் பகுதியில் கொடுக்கப்பட்டிருக்கும் அடிப்படை உரிமைகளுக்கு குடிமக்களுக்கு சாதகமாக பரந்த நோக்கிலும் தாராளமாகவும் (interpreted broadly and liberally) பொருள் விளக்கமளிக்க வேண்டும் என்று உச்ச நீதிமன்றம் விதித்துள்ளது. அவ்வாறே **Assistant Commissioner, Urban Land Tax v. Buckingham and Carnatic Company Ltd.,**[4], **State of Madras v. Gannon Dunkerley**[5], **Union of India v. Dhillon**[6], **Jagannath Baksh Singh v. State of U.P.**[7] மத்திய, மாநில மற்றும் இணைப்புப் பட்டியலில் காணப்படும் பல்வேறு துறைகளுக்கும் (Legislative entries mentioned in the Union, State and Concurrent Lists) பரந்த நோக்கிலும் தாராளமாகவும் பொருள் விளக்கமளிக்க வேண்டும் என்று உச்ச நீதிமன்றம் கூறியது.

ஆனால் **A.K.Gopalan v. State of Madras**[8] – எனும் பிரபலமான வழக்கில், "சாதாரண சட்டங்களை எந்த பொருள் விளக்கக் கோட்பாடுகளைக் கொண்டு நாம் பொருள் விளக்கமளிக்கிறோமோ, அக்கோட்பாடுகளைக் கொண்டே அரசியலமைப்புச் சட்டத்தின் சொற்களுக்கும் பொருள் விளக்கமளிக்க வேண்டியுள்ளது என்றாலும், அக்கோட்பாடுகள் நாம் பொருள் விளக்கமளிக்கும் சட்டத்தின், அதாவது அச்சட்டம் அரசியலமைப்புச் சட்டம் என்பதை நமக்கு நினைவூட்டி அதன் தன்மை மற்றும் அளாவுகையை கருத்தில் கொள்ள வேண்டுமென்பதையும் நமக்கு வலியுறுத்துகிறது. ஏனெனில் அரசியலமைப்புச் சட்டமென்பது மற்றெல்லா சட்டங்களுக்கும் அடிப்படையானதாகும்; அது ஒரு சட்டமென்பது எவ்வாறிருக்க வேண்டுமென்று விளம்பக் கூடிய ஒரு சாதாரண சட்டமல்ல"[9] என்று உச்ச நீதிமன்றம் கூறியது.

1. (1960) 3 SCR 887
2. A.I.R. 1966 S.C. 657
3. (1960) 2 SCR 671
4. (1970) 1 SCR 268
5. (1959) SCR 379
6. (1972) 2 SCR 33
7. A.I.R. 1962 S.C. 1563
8. A.I.R. 1950 S.C. 27
9. "Although we are ti interpret words of the Constitution on the same principles of interpretation as we apply to any ordinary law, these very principles of interpretation compel us to take into account the nature and scope of the Act we are interpreting - to remember that it is a Constitution, a mechanism under which laws are to be made and not a mere Act which declares what the law is to be "

எனவேதான் அரசியலமைப்புச் சட்டத்திற்கு பொருள் விளக்கமளிப்பதற் காக வேறு சில தனிக் கோட்பாடுகளும் விதிகளும் இருக்க வேண்டியது அவசியம் என்று உணரப்பட்டது. அந்த வகையில் இதுகாறும் நமது உச்ச நீதிமன்றமும் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் வரும் சொற்களுக்கு பொருள் விளக்கமளிப் பதற்காக அடுத்து வினாவின் விடையில் வரும் பல்வேறு கோட்பாடுகளை (சுமார் 12 கோட்பாடுகள்) உருவாக்கிக் கொடுத்துள்ளது, எனில் அது மிகையன்று.

முடிவுரை :

மேற்கண்டவற்றிலிருந்து சாதாரண சட்டத்திற்கான பொருள் விளக்க விதிகள், அரசியலமைப்புச் சட்டத்தின் பொருள் விளக்கத்திற்கு ஓரளவிற்கு மட்டுமே பயனாகிறதே தவிர, ஒட்டு மொத்தமாக பயனாவதில்லை என்பதை நாம் அறிய முடிகிறது. சாதாரண சட்டப் பொருள் விளக்க விதிகள், அரசியலமைப்புச் சட்டத்தின் பொருள் விளக்கத்திற்குப் பயனாகும்; ஆனால் அரசியலமைப்புச் சட்ட பொருள் விளக்க விதிகள், சாதாரண சட்டங்களுக்கு பயனாகாது. ஏனெனில் அரசியலமைப்புச் சட்டமென்பது, இதர சட்டங்களைப் பெற்றெடுத்த தாய். அத்தாயின் உணர்வோட்டத்திற்கு பொருள் விளக்கம் காண தனிச் சிறப்புக் கோட்பாடுகள் தேவை என்பது தவிர்க்க முடியாது.

(ஈ) அரசியலமைப்புச் சட்டத்தினை பொருள் கொள்வதற்கான சிறப்பு விதிகள் மற்றும் கோட்பாடுகள் [Special Rules and Principles of Constitutional Construction]

69. Examine briefly the special rules of constitutional construction. (அரசியலமைப்புக்குத் தகுந்த பொருள் விளக்கத்தின் தனிச் சிறப்பு விதிகளை சுருக்கமாக கூர்ந்து ஆராய்க.)

(அல்லது)

Discuss the special rules followed in the interpretation of Constitution and the doctrines used for the same. (ஒரு அரசியல் சட்டத்தினை பொருள் விளக்கம் கொள்வதில் பின்பற்றப்படுகின்ற சிறப்பு விதிகளை கூர்ந்து ஆராய்க. அதன் கோட்பாடுகளையும் விளக்கி எழுதுக.)

(அல்லது)

Analyse the rules followed in the interpretation of Constitution and applicable doctrines. (அரசமைப்புச் சட்டத்தின் பொருள் விளக்கம்

கொள்வதில் பின்பற்றப்படும் விதிகளையும், தொடர்புடைய கோட்பாடுகளையும் கூர்ந்து ஆராய்க.)

(அல்லது)

Discuss the interpretation of the constitution. (அரசியலமைப்புச் சட்டத்தின் பொருள் விளக்கு முறையை விவாதிக்க.)

(அல்லது)

Enumerate the various principles applied by Judiciary while interpreting constitution. (அரசியல் அமைப்பு சட்டத்தினை பொருள் விளக்கம் செய்வதில் நீதிமன்றங்கள் பயன்படுத்தும் பல்வேறு விதிகளை கூறுக.)

(அல்லது)

What are the principles discussed by courts while interpreting the constitution? (அரசமைப்பு சட்டத்தினில் சட்டப் பொருள் விளக்கம் அளிக்கும் வேளைகளில் நீதிமன்றங்கள் எவ்வகையான கோட்பாடுகளை விவாதிக்கின்றன?)

(அல்லது)

Discuss the principles used by the courts in interpreting the constitution. (அரசியல் அமைப்பு சட்டத்தில் சட்டப் பொருள் விளக்கம் அளிக்கும் வேளைகளில் நீதிமன்றங்கள் பயன்படுத்தும் கோட்பாடுகளை விவாதிக்கவும்.)

(அல்லது)

Examine the basic principles of interpretation of the constitution. (அரசமைப்பு சட்டப் பொருள் விளக்கத்தின் அடிப்படை விதிகளை ஆய்க.)

(அல்லது)

Explain the general principles of Interpretation of the Constitution. (அரசமைப்பு சட்டப் பொருள் விளக்கத்தினுடைய பொதுக் கோட்பாடுகளை விளக்குக.)

முன்னுரை :

ஒரு சாதாரண சட்டத்தை விட, அரசியலமைப்புச் சட்டம் பலவிதங்களில் மாறுபட்டது; சிறப்புகளை உடையது என்றும், எனவே, அதற்கே உரித்த, பல தனிச் சிறப்பு பொருள் விளக்கக் கோட்பாடுகளும் உள்ளன, என்று முன்னர் கண்டோம். அதைக் குறித்து விரிவாகக் காண்பதற்கு முன், அரசியலமைப்புச் சட்டம் தோன்றிய விதம் குறித்து நமது நினைவை சற்று இங்கு மீண்டும் புதுப்பித்துக் கொள்வோம்.

இந்திய அரசியலமைப்புச் சட்டம் - தோன்றிய வரலாறு :

1947–ஆம் ஆண்டில் இந்தியா ஆங்கில ஆதிக்கலிருந்து விடுபட்டு சுதந்திர நாடாகியது. ஆனால் அதன் பின்னர் இந்தியாவிற்குள்ளேயே குழப்பங்களும் பூசல்களும் இனவெறியின் வடிவில் தலைவிரித்தாடின. நாடு இரண்டுபட்டது. இதனைத் தவிர்த்து இந்தியாவில் அமைதியைக் கொண்டுவர இந்திய அரசியல் நிருணய சபை (Constituent Assembly) கூடியது. இது இந்தியாவிற்கு உகந்த அரசியலமைப்புச் சட்டத்தினை உருவாக்க முனைந்தது. அதில் மகத்தான வெற்றியும் கண்டது. அந்த வெற்றியின் விளைவுதான் இன்றைய இந்தியாவின் அரசியலமைப்புச் சட்டமாகும்.

அந்த அரசியலமைப்புச் சட்டத்தின் பொருள் விளக்க விதிகள் பின்வரும் இரண்டு நிலைகளின் கீழ் பிரிக்கப்பட்டுள்ளது.

I. இந்திய அரசியலமைப்புச் சட்டமும், சட்டப் பொருள் விளக்க விதிகளும் - முதல் நிலை (Interpretation of the Constitution - I):

அரசியலமைப்புச் சட்டமும் ஒரு சட்டத்தின் தன்மையைக் கொண்டிருப்ப தால் சட்டப் பொருள் விளக்க விதிகள் அனைத்தும் அதற்கும் பொருந்தும். சொல்லப் போனால், பொருள் விளக்கத்திற்கென தனிச்சிறப்பு விதிகளும், கோட்பாடுகளும் பல உள்ளன. அரசியலமைப்புச் சட்டத்தினை நிருமாணித்தவர்களின் நோக்கத்தைக் கண்டறிவதே, அரசியலமைப்புச் சட்டத்திற்கு பொருள் விளக்கமளித்தலின் அடிப் படைக் கோட்பாடாகும். சுருங்கக்கூறின், அவர்கள் நோக்கத்தைச் செயல் படுத்துவதாகவே சட்டப் பொருள் விளக்கம் அமையவேண்டும். மேலும் அதில் பயன்படுத்தப்பட்டுள்ள மொழி நடையை ஒட்டியே அரசியலமைப்புச் சட்டத்திற்கு பொருள் விளக்கம் தர வேண்டும். இது குறித்து சில அடிப்படை விதிகள் பின்வருமாறு:

சில அடிப்படை விதிகள் :

1. பிற அரசியலமைப்புச் சட்டங்களை ஒப்பு நோக்கி அறிதல் (Anologistic provisions of their constitutions) :

ஒரு நாட்டின் அரசியலமைப்புச் சட்டம் அந்நாட்டின் உயிர் நாடியாகக் கருதப்பட்டாலும் பிற நாட்டு அரசியலமைப்புச் சட்டங்களில் காணப்படுகிற ஒற்றுமைகளை ஒப்பு நோக்கி ஆராய நீதிமன்றங்கள் தயங்குவதில்லை. இந்திய உச்ச நீதிமன்றம் வழங்கிய பொருள் விளக்கங்கள் பலவும் அமெரிக்க அரசியலமைப்பு சட்டத்தினை பெரும்பாலும் சார்ந்துள்ளது. ஆனால் நாட்டிற்கு நாடு மக்களும் கலாச்சாரமும் மாறுபடும் பொழுது சட்டமும் மாறித்தானே இருக்கும்! ஆகவே இங்ஙனம் ஒரு நாட்டு அரசியலமைப்பினைப் பின்பற்றுவது, நீதியின் நீடித்த வாழ்விற்கு உகந்ததா என்ற வினா எழுந்தது. எது எவ்வாறு இருப்பினும், நமது உச்ச நீதிமன்றம் பிறநாட்டு அரசியலமைப்புச் சட்டங்களை ஒப்பு நோக்கியதோடு

மட்டுமல்லாமல் அதனையெல்லாம் சார்ந்தும் நின்றிருக்கிறது. **கோலக்நாத், கேசவானந்த பாரதி, ஏ.கே. கோபாலன், மேனகா காந்தி** போன்ற பல புகழ்பெற்ற வழக்குகளை இதற்கு சான்றாகக் கூறலாம்.

2. அரசியலமைப்புச் சட்டம் முழுவதையும் கருத்தில் கொள்ள வேண்டும் (Constitution to be considered as a whole) :

அரசியலமைப்புச் சட்டத்தின் ஒரு சரத்தினை புரிந்து கொள்வதற்கு அச்சட்டம் முழுவதையுமே கருத்தில் கொள்ள வேண்டும். எந்த ஒரு சரத்தையும் பிரித்து தனிமைப்படுத்தக் கூடாது. அப்பொழுதுதான் அதன் முழுமையான நோக்கம் புலனாகும். மேலும் அதன் உண்மையான பணியும் செவ்வனே நிறைவேறும். பொருள் விளக்கம் அளிக்கும் பொழுது அரசியலமைப்பு சட்டத்தின் ஒவ்வொரு வார்த்தைக்கும் சொல்லுக்கும், சொற்றொடருக்கும், உயிரோட்டம் அளிக்க வேண்டும். அதனால் **கேசவானந்த பாரதி வழக்கில்** அரசியல் அமைப்பு சட்டத்தின் முகப்புரை கூட (preamble) அதன் ஒரு பகுதி என்றும், ஏதாவது ஒரு சரத்து தெளிவற்றிருந்தால் அல்லது பொருள் விளங்காமலிருந்தால் அதனை புரிந்து கொள்வதற்குப் பேருதவியாய் இருப்பது அம்முகப்புரையே ஆகும், என்றும் தீர்ப்பளிக்கப்பட்டது.

3. அரசியலமைப்புச் சட்டம் தோன்றிய சந்தர்ப்பங்களின் அடிப்படையில் அது பொருள் கொள்ளப்பட வேண்டும் (To be construed in the light of circumstances in which constitution was made) :

அரசியலமைப்பு தோன்றுவதற்கு முன்பிருந்த சூழ்நிலைகள் தோன்றுவதற்குக் காரணமாக இருந்த சூழல்கள், தோன்றிய பின் ஏற்பட்ட மாற்றங்கள், அத்தோடு அப்போது இருந்த மரபுவழிச் சட்டங்களின் தன்மை இவற்றையெல்லாம் கருத்தில் கொண்டு அரசியல் அமைப்புச் சட்டம் பொருள் கொள்ளப்பட வேண்டும். இதனை நீதித்துறை அடிக்கடி வலியுறுத்துகிறது.

II. இந்திய அரசியலமைப்புச் சட்டமும், பொருள் விளக்கக் கோட்பாடுகளும் - இரண்டாவது நிலை (Interpretation of the Constitution - II) :

அரசியலமைப்பு சட்டம் என்பது நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து வருகின்ற ஒன்று. அதில் அனுதினமும் பலமாற்றங்கள் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றது. ஆகவே அரசியல் அமைப்புச் சட்டத்திற்கு பொருள் விளக்கம் கொடுக்கும் பொழுது சற்று சுதந்திரமாகவே செயல்பட வேண்டும். **"சொற்கள் அனைத்தும் பளிங்கின் தூய்மையை கொண்டவை அல்ல"** என்று நீதிபதி **Oliver** அவர்கள் கூறுகிறார். எனவே அரசியலமைப்பு சட்டத்திற்கு இலக்கணரீதியாக (literal) பொருள் கொடுப்பது என்பது பெரும் சோதனையாக

முடியும். மேலும் அது உண்மையான நோக்கத்தை அழிக்கவும் கூடும். ஆகவே எவரும் அர்த்தமற்ற நுட்பங்களை உபயோகப்படுத்தக் கூடாது. நாட்டு மக்களின் உயிர்தான் அரசியலமைப்பின் உயிர் ஆகும். அவர்களின் உணர்வே அதன் உணர்வாகும். எனவே அதனை வெளிக் கொணரும் முயற்சியாகவே சட்டப் பொருள் விளக்கம் அமைய வேண்டும்.

சட்டமியற்றுப் பட்டியல்கள் (The Legislative lists) :

இந்தியா ஒரு கூட்டாட்சி நாடாகும். அதாவது இங்கு மத்திய அரசும் மாநில அரசுகளும் கைகோர்த்து செல்லுகின்றது. மத்திய அரசு தனக்குரிய விஷயங்களில் சட்டம் இயற்றிக் கொள்ள **மத்திய பட்டியல் (Union list)** என்று ஒன்று உள்ளது. அதில் குறிப்பிடப்பட்டுள்ள துறைகளில் மேற்படி மத்திய அரசு சட்டம் இயற்றிக் கொள்ளலாம். இது போன்று மாநிலங்களுக்கென **மாநில பட்டியல் (State list)** என்று ஒன்று உள்ளது. அதில் குறிப்பிடப்பட்டுள்ள துறைகளில் மாநில அரசுகள் சட்டம் இயற்றிக் கொள்ளலாம். இங்ஙனம் சட்டம் இயற்றும் அதிகாரமானது மேற்படி பட்டியல்களின் வாயிலாக பிரித்தளிக்கப்பட்டுள்ளது.

அதிகாரச் சுமை ஒரே இடத்தில் குவிந்திருந்தால் அது நல்ல நிருவாகத்திற்கு வழி வகுக்காது. அதிகாரம் பரவலாக்கப்பட்டு மத்தியில் கூட்டாட்சியும், மாநிலத்தில் சுயாட்சியும் ஆன மேற்கண்ட கூட்டாட்சி அமைப்பு இந்தியா போன்ற மக்களாட்சியில் மிகவும் இன்றியமையாததாகும். இதனை செயலாக்கவே முன்கண்ட பட்டியல்களின் வாயிலாக சட்டம் இயற்றும் அதிகாரமானது முறைப்படி பிரித்து தரப்பட்டுள்ளது. எனவே சட்டமியற்றுப் பட்டியலை விளக்கும் பொழுது சுதந்திரமான போக்கு வேண்டும். தானே ஒரு கட்டுப்பாட்டை ஏற்படுத்திக் கொண்டு அந்த கட்டுப்பாட்டிற்குள் இயங்கக் கூடாது. வார்த்தைகளுக்கு அவற்றின் சாதாரண பொருளே தர வேண்டும்.

சில கோட்பாடுகள் (Doctrines) :

1. உள்ளதாக கருதப்படுகின்ற அதிகாரங்கள் கோட்பாடு (Doctrine of Implied Powers) :

அதிகாரம் இல்லை எனும்போது ஒரு சட்டத்தின் மிக முக்கியமான பிரிவு செயலற்றுப் போகலாம். அதனால் அச்சட்டம் முழுமையுமே நடைமுறைப்படுத்த இயலாமல் போகலாம். இவற்றைத் தவிர்த்திடவே உள்ளதாக கருதப்பட்டால் என்ற கோட்பாடு பயன்படுத்தப்படுகிறது. இதனால் அதிகாரம் இல்லை என்றாலும்கூட உள்ளதாகவே கருதப்பட்டு அந்தச் சட்டம் செயலாக்கப்படுகிறது. சுருங்கக்கூறின் ஒரு விஷயம் தேசிய முக்கியத்துவம் வாய்ந்தது என்றால் அதனை மேற்கொள்ளும் அதிகாரம் மத்திய அரசாங்கத்திற்கு வழங்கப்பட வேண்டும். அரசியலமைப்புச் சட்டம் இதுபற்றி ஏதும் குறிப்பிடாமலிருக்கலாம்; அல்லது மௌனம் சாதிக்கலாம்; ஆனால் அதற்காக அரசாங்கம் செயலற்று நின்றுவிடக் கூடாது. இதுபோன்ற சமயங்களில் நீதிமன்றம் அரசிற்கு உதவி செய்ய விரைய வேண்டும் என்பதே,

கருத்தாகும். அதிகாரம் இல்லை என்றாலும்கூட அது பெற்றிருப்பதாகவே கருதிச் செயல்பட அரசாங்கத்திற்கு உறுதுணையாய் நீதிமன்றம் அமையும்.

2. உப அல்லது துணை அதிகாரங்கள் கோட்பாடு (Doctrine of Incidental or Ancillary Powers) :

சில அரசியலமைப்புச் சட்டங்கள் அதிகாரத்தை அளிப்பதோடு, அது சம்மந்தமாக எழுகின்ற சிறு சிறு துணை அதிகாரங்களையும் அரசிற்கு அளிக்கிறது. இவ்வாறு வெளிப்படையாக அளிக்கப்படாவிட்டாலும் கூட, அத்தகைய அதிகாரங்களை அரசாங்கம் இயல்பாகவே கொண்டிருப்பதாகக் கொள்ள வேண்டும். இது ஒரு அரசின் ஆட்சி நிர்வாகத்தில் தவிர்க்க இயலாத ஒன்றாகும்.

உதாரணமாக, மாநிலங்களுக்கிடையில் வாணிபம் நடத்திட அதிகாரம் உண்டென்றால் அத்தகைய வாணிபம் சம்மந்தப்பட்ட ஒப்பந்தங்களை கட்டுப் படுத்தவும் அதிகாரம் உண்டு என்றே பொருளாகும். அதுபோல், தொழில் தகராறுகளை தீர்க்க அதிகாரம் உண்டென்றால், வேலை நிறுத்தத்தைத் தடை செய்ய சட்டமியற்றவும் அதிகாரம் உண்டு, என்றே பொருள்.

3. உட்கிடைத் தடைக் கோட்பாடு (Doctrine of Implied Prohibition):

'ஒன்றை வெளிப்படையாகக் கூறியிருப்பது, மற்றவைகளை விலக்கும் என்பது உட்கிடை[1]' (expressio unius est exclusio alterius) என்ற பொருள் விளக்க விதியின்படி, மேற்படி உட்கிடைத் தடைக் கோட்பாடு அமைந்துள்ளது. இக்கோட்பாடு, நாம் மேலே கண்ட 'உள்ளதாகக் கருதப்படுகின்ற அதிகாரங்கள்' கோட்பாட்டிற்கு எதிர்மறையானதாகும்.

ஆஸ்திரேலியா, அமெரிக்கா போன்ற நாடுகளில் மத்தியப் பாராளுமன்றம் எந்தெந்த துறைகளில் சட்டமியற்றலாம், என்று பட்டியலிடப்பட்டு கூறியுள்ளதோ அந்தந்த துறைகளில் சட்டமியற்றலாம். அதில் விடுபட்டுப்போன துறைகளைக் குறித்து மாநில சட்டமன்றங்கள் சட்டமியற்றலாம். இங்கு மத்திய பாராளுமன்றம் அப்பட்டியலில் விடுபட்டுப்போன துறைகள் குறித்து சட்டமியற்றுவது உட்கிடையாகத் தடை செய்யப்பட்டுள்ளது. விடுபட்டுப்போன துறைகள் குறித்து, மாநிலச் சட்டமன்றங்கள் மட்டுமே சட்டமியற்ற இயலும். அதாவது, மாநிலத்தின் எஞ்சிய அதிகாரங்களில் மத்திய அரசு தலையிட இயலாது.

இந்தியா, கனடா போன்ற நாடுகளில், மத்திய பாராளுமன்றம் சட்டமியற்று வதற்கென்று சில துறைகளும் (Central list), மாநில சட்டமன்றங்கள் சட்டமியற்று வதற்கென்று சில துறைகளும் (State list) தனித்தனியாக பட்டியலிடப்பட்டுக் கூறப்பட்டுள்ளன. இரண்டும் சேர்ந்து சட்டமியற்றக் கூடிய துறைகள் இணைப்புப் பட்டியலில் (Concurrent list) கொடுக்கப்பட்டுள்ளன. எனவே, இங்கு உட்கிடைத்

1. இந்நூலில் வினா எண். 29–ல் விரிவாகக் கண்டுள்ளோம். பார்க்க பக்கம் எண். 98

தடைக் கோட்பாடு என்ற பேச்சுக்கே இடமில்லை. ஏனென்றால், வெளிப்படையாக, வெட்ட வெளிச்சமாக கூறப்பட்டிருக்கும் பொழுது, உட்கிடையாக எதற்கு அனுமானிக்க வேண்டும்.

4. ஆக்கிரத்துக் கொள்ளல் விதி (Doctrine of Occupied Field) :

இவ்விதிப்படி, மத்திய அரசு ஏதாவது ஒன்று பற்றிச் சட்டம் இயற்றினால் அது அதனால் எடுத்துக் கொள்ளப்பட்டதாகப் பொருள்படும். எனவே மாநில அரசாங்கம் அதில் தலையிட இயலாது. எப்போது ஒரு சட்டம் ஒன்றில் தலையிட முனைகிறதோ அப்பொழுதே அது அதன் சொந்தம் ஆகிவிடுகிறது. எனவே, அதே நோக்கத்தோடு மற்றொரு சட்டம் தேவையற்றதாகி விடுகிறது என்பதோடு தலையிடவும் முடியாமல் போய்விடுகிறது என்கிறார், **ஐசக்ஸ் நீதிப்பெருமகனார்.** ஆனால் இது இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 254–வது சரத்திற்குத்தான் பொருந்தும். 254–வது சரத்து மத்திய அரசு, மாநில அரசு இரண்டிற்கும் இணைப்புப் பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள துறைகளில் சட்டமியற்ற அதிகாரம் தருகிறது. இரண்டிற்கும் அதிகாரம் அளிக்கப்பட்டிருக்கும்போது ஒன்று பற்றி மத்திய அரசு சட்டமியற்றினால் அதே போன்று மாநில அரசு சட்டமியற்றுவதை அது தடை செய்யாது.

ஆனால் மத்திய அரசு இயற்றிய சட்டத்திற்கும் மாநில அரசு இயற்றிய சட்டத்திற்கும் இடையே முரண்பாடு இருப்பின், மத்திய அரசு இயற்றிய சட்டமே மேலோங்கியிருப்பதாக பொருள் கொள்ள வேண்டும்.

5. பெரும்பான்மை விதி (Doctrine of Pith and Substance) :

மத்திய மற்றும் மாநில சட்டமன்றங்கள் தங்கள் தங்களுடைய அதிகார வரம்பு பகுதிகளில் உயர்ந்தவையாக கருதப்படுகின்றன. ஒன்று, மற்றொன்றின் அதிகாரவரம்பில் (சட்டமியற்றக்கூடிய பகுதி) தலையிடக்கூடாது. அப்படியும் மீறி ஒரு சட்டமானது மற்றொன்றின் அதிகாரவரம்பில் உள்ள ஒரு துறையினுள் தலையிடுமாறு இயற்றப்பட்டு விட்டால் சம்மந்தப்பட்ட சட்டமன்றமானது அப்படி சட்டமியற்ற தகுதி படைத்ததா, என்பதைத் தீர்மானிக்க நீதிமன்றமானது இப் பெரும்பான்மை விதியின் பயனைக் கொள்ளும். ஒரு சட்டத்தினை இயற்றிய சட்ட மன்றத்தின் தகுதி குறித்த உண்மையான நோக்கம் அச்சட்டம் சட்டமன்றத்தால், சட்டமியற்றப்பட தகுதியற்ற அதிகாரவரம்பில் இயற்றப்பட்டிருப்பினும், அச் சட்டமன்றத்தின் அதிகாரவரம்பிற்குள்ளாகத்தான் (Intravires) தீர்மானிக்கப்பட வேண்டும். அதாவது ஒரு சட்டம், மாநிலத்தின் அதிகாரவரம்பிற்குட்பட்டிருக்கும் பொழுது, அது தற்செயலாக மத்திய அரசின் அதிகாரவரம்பிலும் தலையிடுகிறது என்றால், அச்சட்டத்தினை தவறானது எனக்கூற முடியாது. ஏனெனில், பொதுவாக நோக்கும்பொழுது, அச்சட்டம் பெரும்பான்மையில் மாநில அரசின் அதிகார வரம்பிற்குட்பட்டே இருக்கிறது. மிகக்குறைந்த அளவில்தான் அதுவும்

தற்செயலாகத்தான் மத்திய அரசின் அதிகாரவரம்பை பாதிக்கிறது. இப்படிப்பட்ட நிலையில் அச்சட்டத்தினை தவறு என ஒதுக்கிவிட முடியாது. ஏனெனில் அது முறையானதாகவே கருதப்படுகிறது.

Profalla Kumar Mukerjee v. Bank of Khulna[1] – மேற்படி விதி, இவ்வழக்கில் பிரிவி கவுன்சிலால் பின்பற்றப்பட்டது. இவ்வழக்கின்படி, 1946-ஆம் ஆண்டின் வங்காளத்தின் பணம் கடனீவோர் சட்டமானது (The Bangal Money Lender's Act, 1946) வங்காள சட்டமன்றத்தின் அதிகாரவரம்பிற்கு அப்பாற் பட்டது. ஏனெனில், அச்சட்டத்தில் உள்ள 'கடனுறுதிச் சீட்டுக்கள்' (Promissory Note) எனும் தலைப்பு, மத்திய அரசின் அதிகாரவரம்பிற்குட்பட்ட துறை ஆகும். வங்காள சட்டமன்றம் தன் அதிகாரவரம்பை மீறி அதில் சட்டமியற்றியதால் அது செல்லாது, என அறிவிக்கும்படி பிரிவி கவுன்சிலை வங்காளத்தின் கடனீவோர்கள் கேட்டுக் கொண்டனர். ஆனால் பிரிவி கவுன்சில் மேற்படி பெரும்பான்மை விதியைப் பின்பற்றி, மத்திய அரசின் ஒரு துறையான 'கடனுறுதிச் சீட்டு' என்பதில் வங்காள அரசின் பணம் கடனீவோர் சட்டம் தலையிட்டாலும், அது மாநில துறையில் வரும் பணம் கடனீதல் மற்றும் பணம் கடனீவோர் பற்றிய விபரங்களை உள்ளடக்கி இருப்பதால், அச்சட்டம் செல்லுபடியாகக் கூடியதே என்று தீர்ப்புரைத்தது.

State of Bombay v. F.N. Balsara[2] எனும் வழக்கில் மாநிலத்தில் மதுபானங்கள் விற்பதையோ, வைத்திருப்பதையோ தடை செய்யும் பம்பாய்த் தடைச் சட்டமானது (Bombay Prohibition Act) மத்திய அரசின் துறையான சுங்க இலாகாவின் வழியாக மதுபானங்கள் ஏற்றுமதி, இறக்குமதி செய்யப்படும் அதிகாரவரம்பை ஆக்கிர மிப்பதாக உள்ளது என பம்பாய்த் தடைச் சட்டத்தின் செல்லுதன்மை குறித்து வினா எழுப்பப்பட்டது. மதுபானத்தை தடுப்பது அதன் இறக்குமதியை பாதிப்பதாக உள்ளது எனவும் கூறப்பட்டது. ஆனால், நீதிமன்றம், மேற்படி சட்டம் மத்திய சட்டமியற்றும் அதிகாரத்தில் தலையிடுவதாக இருந்தாலும், பெரும்பான்மை விதிப்படி அச்சட்டம் மாநில பட்டியலின் கீழ் வருகிறதே தவிர மத்திய பட்டியலின் கீழ் வரவில்லை என்று கூறி அச்சட்டம் செல்லும் எனத் தீர்ப்பளித்தது.

6. சட்டத்தின் பொய்மைத் தோற்றக் கோட்பாடு (Doctrine of Colourable Legislation) :

சில சமயம் ஒரு சட்டம் தோற்றத்தில் தன் அதிகாரவரம்பிற்கு உட்பட்டிருக்க லாம். ஆனால் அதே சமயத்தில், அத்தோற்றம் வெறும் பொய்மையாக இருக்கலாம். ஏனென்றால் உண்மையில் அது தன் அதிகாரவரம்பிற்கு அப்பாற்பட்ட நிலையில் செயல்படும். இது தன் அதிகாரவரம்பை மீறிய செயலாகும். அரசியலமைப்புச் சட்டத்தின் அடிப்படையில் கூறுவதெனில், மத்திய அரசும் மாநில அரசுகளும் தத்தம்

1. A.I.R. 1947 S.C. 60
2. A.I.R. 1951 S.C. 318

பட்டியலில் உள்ள துறைகளின் மீதுதான் சட்டமியற்ற வேண்டும் என்பது அரசியலமைப்பு கூறும் பொது விதியாகும். சில சந்தர்ப்பங்களில், மாநில சட்ட மன்றம், தனது அதிகாரவரம்பை மீறி சட்டமியற்றும் சூழல் நேர்ந்துவிடுவதுண்டு. அப்படி மீறியிருப்பது தோற்றத்திலேயே வெளிப்படையாகத் தெரியும். ஆனால் சில நேர்வுகளில், அந்த மீறுகை அதன் தோற்றத்தில் தெரியாமல் மறைவாகவும் இருப்பதுண்டு. அவ்வாறு மறைவாகவும், உட்கிடையாகவும் இருப்பது, சட்டத்தின் பொய்மைத் தோற்றமெனப்படுகிறது. இதனை அரசியலமைப்புச் சட்டம் அனுமதிப்பதில்லை. ஒன்றைப் பற்றி சட்டமியற்ற அதிகாரம் இல்லாதபோது வெறும் தோற்றத்தினைக் கருவியாக்கி அதிகாரம் பெற்றிட இயலாது. இந்தப் பொய்மை என்னும் திரையை விலக்கி உண்மையைக் கண்டறிய வேண்டும். ஏனென்றால் ஒன்றை நேரடியாகச் செய்ய முடியாது என்றால், அதனை மறைமுகமாக மட்டும் எப்படிச் செய்ய முடியும்? எனவே, சட்டத்தில் ஏற்படும் இத்தகைய பொய்மைத் தோற்றத்தை அரசியல் அமைப்புச் சட்டம் அனுமதிப்பது இல்லை.

State of Bihar v. Sir Kameshwar Singh[1] எனும் வழக்கில் பீகார் நிலச் சீர்திருத்த சட்டமானது **(Bihar Land Reforms Act, 1950)** இல்லாத நிலையதென அறிவிக்கப்பட்டது. காரணம், அச்சட்டம் நிலமிழந்தோரின் இழப்பீட்டு தொகையை நிர்ணயம் செய்வது போல் ஒரு பொய்மைத் தோற்றத்தை உண்டு செய்தது. ஆனால் உண்மையில் அவ்வாறு எவ்வித ஏற்பாட்டையும் மேற்படி சட்டம் செய்திருக்கவில்லை. மேலும் அது மனுதாரரின் இழப்பீடு பெறும் உரிமையை மறைமுகமாக பறிப்பதாக உள்ளது. ஆகவே அச்சட்டம் பொய்மைத் தோற்ற விதிப்படி செல்லுபடியாகாது எனத் தீர்ப்பளிக்கப்பட்டது.

K.T.Moopil Nair v. State of Kerala[2] எனும் வழக்கில், திருவாங்கூர் கொச்சின் நில வரிச் சட்டமானது, செல்லத்தக்கதல்ல என்று மேற்படி விதியின்படி உச்ச நீதிமன்றத்தால் கூறப்பட்டது. ஏனெனில், மேற்படி சட்டம் தோற்றத்தில் ஒரு வரி விதிக்கும் சட்டமாகத் தெரிந்தாலும், உண்மையில் அது அவ்வாறு வரி விதிக்கும் சட்டமல்ல; மாறாக நிலத்தைப் பறிமுதல் செய்யும் தன்மை கொண்டதாகும்.

மேற்கண்ட விதியின் பொருள் மற்றும் பரவெல்லையை உச்ச நீதிமன்றம் **K.C.G.Narayan Dev v. State of Orissa**[3] எனும் வழக்கில் விளக்கியது.

அரசியலமைப்பில் தடை செய்யப்பட்டுள்ளவற்றை சட்டமன்றம் மறைமுகமான வழிகளைப் பின்பற்றுவதன் மூலம் மீற முடியாது என **R.D.Joshi v. Ajit Mills**[4] எனும் வழக்கில் உச்ச நீதிமன்றம் மேற்படி விதியின்படி கூறியது.

1. A.I.R. 1952 S.C. 252
2. A.I.R. 1961 S.C. 252
3. A.I.R. 1953 S.C. 375
4. A.I.R. 1977 S.C. 2279

7. ஆளுகைத் தொடர்புக் கோட்பாடு (Doctrine of Territorial Nexus) :

இதனை 'நிலப்பகுதி அதிகாரவரம்புக் கோட்பாடு' (Doctrine of Extra Territoriability) என்றும் கூறுவார்கள். இது, இரண்டு மாநிலங்களுக்கு இடையே உள்ள சட்டங்களின் தொடர்பு குறித்து கூறுகிறது. சாதாரணமாக, ஒரு நாட்டின் சட்டம் அந்த நாட்டின் நிலப்பகுதி வரை மட்டுமே, ஆளுகை கொண்டிருக்கும். அதேபோல, மாநிலங்கள் சட்டம் அந்த மாநிலத்தில் மட்டுமே ஆளுகை கொண்டிருக்கும். மத்திய அரசின் சட்டங்கள், நாடு முழுவதும் பொருந்தும். மத்திய அரசின் சட்டம், வேற்று நாட்டில் இருக்கும் தனது நாட்டு குடிமகனுக்கும் பொருந்தும். இச்சிறப்பு மத்திய சட்டத்திற்கு மட்டுமே பொருந்தும். மாநிலங்களின் சட்டம் அந்த மாநிலத்தில் மட்டுமே செயல்படும். ஆனால் வரிச் சட்டங்களைப் பொறுத்தவரை மாநிலங்களுக்கிடையிலும் செயல்படும். இதைத்தான் மாநிலங் களுக்கிடையிலான ஆளுகைத் தொடர்பு, என்கிறோம்.

எனவே, மத்திய சட்டங்களை பொருள் கொள்ளும் பொழுது, அது நாட்டின் நிலப்பகுதியைக் கடந்தும் ஆளுகை செய்யும் என்றும், மாநில சட்டங்களில், வரிச் சட்டங்களைத் தவிர, மற்ற சட்டங்கள் ஆளுகை செய்யாது என்றும் பொருள் கொள்ள வேண்டும்.

8. கூட்டுப்பிரித்தல் தத்துவம் அல்லது பிரியக்கூடிய தத்துவம் (Doctrine of Severability or Separability) :

இயற்றப்பட்ட சட்டத்தின் ஒரு வகைமுறையானது அரசியலமைப்பற்றது என்று அறிவிக்கப்படும் பொழுது, அந்த இயற்றப்பட்ட சட்டம் முழுவதும் இல்லா நிலையதா அல்லது அரசியலமைப்பற்றது என்று அறிவிக்கப்பட்ட அந்த வகைமுறை மட்டும் இல்லா நிலையதா என்ற வினா இங்கு எழுகிறது. இதற்கு விடையளிக்க உச்ச நீதிமன்றம் பிரித்தெடுக்கும் கோட்பாட்டை (Doctrine of Severability) அறிமுகப்படுத்தியது.

அரசியலமைப்பின்படி உள்ள ஒரு சட்டத்திலிருந்து, கேடுடைய (குறையுடைய) ஒரு குறிப்பிட்ட வகைமுறையை மட்டும் பிரித்தெடுக்க முடியுமென்றால், அந்த வகைமுறையை மட்டும் இல்லாநிலையதாக அறிவிக்க முடியும், என்பதே மேற்படி கோட்பாடு விளக்குவதாகும். எனவே, இங்கு அச்சட்டம் முழுவதையும் (whole Act) இல்லாநிலையதாக அறிவிக்க வேண்டியதில்லை. சரத்து 13 (1)–ஆனது, "எந்த அளவிற்கு முரணாக உள்ளதோ அந்த அளவிற்கு இல்லாநிலையதாகும்" என்று கூறுகிறது. அதாவது, ஒரு சட்டத்தின் சில வகைமுறைகள், அரசியலமைப்பற்றதானால், அவற்றை மட்டும் இல்லாநிலையதாக நீதிமன்றம் கவனத்தில் கொள்ளும் என்று, **Motor General Traders v. State of A.P.**[1] எனும் வழக்கில் உச்ச நீதிமன்றம் கூறியது.

1. (1984) 1 SCC 222

A.K. Gopalan v. State of Madras[1] என்ற வழக்கில், உச்ச நீதிமன்றம் 1950–ம் ஆண்டு தடுப்புக் காவல் சட்டத்தின் 14–வது பிரிவை வரம்பு மீறியதெனக் கூறி, சட்டத்தின் ஒரு பிரிவை நீக்கியது அச்சட்டம் முழுவதையும் நீக்கியதாகாது என்றும், எனவே மேற்படி சட்டத்தின் 14–வது பிரிவு மட்டும் வரம்பு மீறியது (ultra vires) என்றும், இப்பிரிவினை தவிர்த்த அச்சட்டம் முழுவதும் செல்லுதன்மை உடையதாகும் என்றும் கூறியது.

இம்முடிவு **State of Bombay v. F.N. Balsara**[2] எனும் வழக்கிலும் பின்பற்றப்பட்டு, 'இல்லாநிலையது என்று அறிவிக்கப்பட்ட ஒரு சட்டத்தின் வகைமுறைகள், அச்சட்டம் முழுவதையும் பாதிக்காது' என்று கூறப்பட்டது.

பிரித்தெடுக்கும் கோட்பாட்டிற்கு விதிவிலக்கு (Exception): இக்கோட்பாடு ஒரு விதிவிலக்கிற்கு உட்பட்டு செயலுறுகின்றது. அதாவது, ஒரு சட்டத்தின் அரசியலமைப்பற்ற வகைமுறையானது அச்சட்டத்தின் அரசியலமைப் பிற்குட்பட்ட பிற வகைமுறைகளுடன் நெருங்கிய விதத்தில் கலந்தும் பிணைந்தும் ஒன்றிலிருந்து மற்றொன்றை பிரித்தெடுக்க முடியாதபடி இருப்பின், அச்சட்டம் முழுவதையுமே இல்லாநிலையதாக நீதிமன்றங்கள் கருதும். அவ்வாறு கலந்து இருக்கும் சட்டத்தின் வகைமுறையை பிரித்தெடுக்க இயலாதெனில், அச்சட்டம் முழுவதுமே நீக்கப்படும் என **Ramesh Thapper v. State of Madras**[3] எனும் வழக்கில் கூறப்பட்டது. இக்கோட்பாடானது **R.M.D.C. v. Union of India**[4] வழக்கில் மேலும் விரிவாக்கப்பட்டது.

9. வருநிகழ்வு ஒதுக்கித் தள்ளும் கோட்பாடு (Doctrine of Prospective Overruling) :

நீதிமன்றத்தின் ஏதாவதொரு முந்தய தீர்ப்பு ஒதுக்கித் தள்ளப்படும் பொழுது, இக்கோட்பாடு பயன்படுத்தப்படுகிறது. இங்ஙனம் ஒதுக்கித் தள்ளும் பொழுது, நீதிமன்றமானது தனது புதிய தீர்ப்பை எதிர்காலத்தில் எழும் வழக்குகளில் மட்டுமே பொருத்தும். அவ்வாறு ஒதுக்கித் தள்ளப்பட்டதின் விளைவு, பின்னோக்கிச் செல்லாது. அதாவது அந்த ஒதுக்கித் தள்ளலுக்கு முன் எழுந்த வழக்குகளுக்குப் பொருந்தாது.

மேற்கண்ட கோட்பாட்டினை உச்ச நீதிமன்றம் முதன்முதலாக **கோலக் நாத் வழக்கில்** பின்பற்றியது. அதன்படி, அவ்வழக்கில் கூறப்பட்ட தீர்ப்பானது, வருநிகழ்வு விளைவினை மட்டுமே கொண்டுள்ளது என்றும், அது அடிப்படை உரிமைகளை மீறுமாறு அல்லது பறிக்குமாறு பாராளுமன்றத்தால் அவ்வழக்கிற்கு

1. A.I.R. 1950 S.C. 27
2. A.I.R. 1951 S.C. 318
3. A.I.R. 1950 S.C. 124
4. A.I.R. 1957 S.C. 628

முன்னர் கொண்டு வரப்பட்ட திருத்தச் சட்டங்களைப் பாதிக்காது என்றும் கூறப் பட்டது. மேற்படி வழக்கின் தீர்ப்பானது, 1967–ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 17–ஆம் தேதி வெளியிடப்பட்டது. ஆகவே அந்த தேதியிலிருந்துதான் அதன் செயல் விளைவு (effect) ஏற்படுமே தவிர, அதற்கு முன்னர் ஏற்பட்ட சட்ட திருத்தங்களை பாதிக்காது எனப்பட்டது. ஆக, இதனடிப்படையில், அடிப்படை உரிமைகளை மீறுமாறு கொண்டு வரப்பட்ட முதலாவது, நான்காவது மற்றும் பதினேழாவது சட்டத் திருத்தங்கள் செல்லுதன்மை உடையதாகவே விளங்கும், என்று கூறப்பட்டது.

இக்கோட்பாடு, அரசியலமைப்பு தொடர்பான விஷயங்களுக்கு மட்டுமே பயன்படுத்த வேண்டும் என்றும், அதையும் உச்ச நீதிமன்றம்தான் செய்ய வேண்டும் என்றும் **நீதியரசர் சுப்பாராவ்** மேற்கண்ட வழக்கின்போது கூறினார்.

10. மறைதல் கோட்பாடு (Doctrine of Eclipse) :

மறைதல் கோட்பாடு என்பது, "அடிப்படை உரிமைகளுக்கு முரணாக உள்ள சட்டங்கள் செல்லாததோ அல்லது தொடக்கத்திலிருந்து இல்லாநிலையதோ அல்ல. மாறாக, அவை செயலாற்றல் அற்றவை (Unenforceable) ஆகும்". இக் கொள்கையினை அடிப்படையாகக் கொண்டு மறைதல் கோட்பாடு இயங்குகிறது. அதாவது அடிப்படை உரிமைகளால் இச்சட்டங்கள் மறைக்கப்படுகின்றனவேயொழிய. இறந்து போவதில்லை. மேற்படி கோட்பாடு சரத்து 13(1)–ன் கீழ் இயங்குகிறது. இக்கோட்பாட்டை 'ஒளிமறைப்பு கோட்பாடு' என்றும் அழைப்பர்.

அரசியலமைப்புச் சட்டம் தொங்குவதற்கு முன்பு இயற்றப்பட்ட சட்டத்திற்கு (Pre-constitutional Law) மேற்படி ஒளிமறைப்பு கோட்பாடு பொருந்துகிறது. ஒரு சட்டம் அது இயற்றப்பட்ட ஆரம்ப காலத்தில் செல்லக் கூடியதாக இருந்து, அரசியலமைப்புச் சட்டம் தொடங்கிய பின்னர், அது அடிப்படை உரிமைகளுடன் முரண்பாடாக உள்ளது என்ற காரணத்தால் செல்லாததாக ஆனால், அது செயலாற்றலற்ற தாக (unenforceable) உள்ளதே தவிர, இறந்து விடவில்லை (not dead). எனவே, அச்சட்டத்தில் உள்ள அம்முரண்பாட்டை, பின்னர் ஒரு அரசியலமைப்பு திருத்தச் சட்டத்தின் வாயிலாக நீக்கிவிடலாம். இதனால் மேற்படி குறைபாடுள்ள அச்சட்டம் அக்குறை நீக்கி செயலாற்றல் உடையதாக ஆகிவிடுகிறது. இத்தத்துவம் தான் **மறைதல் கோட்பாடு அல்லது ஒளிமறைப்புக் கோட்பாடு (Doctrine of Eclipse)** எனப்படுகிறது.

இக்கோட்பாட்டிற்கு ஏன் இந்தப் பெயர் வந்ததென்றால், ஆரம்பத்தில் செல்லக் கூடியதாக உள்ள ஒரு சட்டம், அரசியலமைப்புச் சட்டம் தொடங்கிய பின்னர், அடிப்படை உரிமைகளுக்கு முரண்பாடானால், அச்சட்டத்தின் மீது 'அடிப்படை உரிமைகளுடன் முரண்பாடு' எனும் நிழல் (கிரஹணம்) படிந்து, அதன் ஒளி மறைந்து செயலாற்றலற்றதாகிவிடுகிறது. பின்னர் பாராளுமன்றம் ஒரு அரசியலமைப்புத் திருத்தச் சட்டத்தை கொண்டு வருவதின் வாயிலாக, அச்சட்டத்தில் உள்ள அம்முரண்பாடு எனும் நிழலை நீக்கிவிட்டால், அது மீண்டும் தனக்குரிய ஒளியை

பெற்று செயலாற்றலுடையதாகிவிடுகிறது. அதாவது அச்சட்டத்திற்கு அடிப்படை உரிமைகளுடன் முரண்பாடு எனும் கிரஹணம் பிடித்து, பின்னர் அரசியலமைப்பு திருத்தச் சட்டத்தால் நீங்குகிறது. எனவேதான், இக்கோட்பாடு **'கிரஹணக் கோட்பாடு'** என்றொரு மறு பெயராலும் அழைக்கப்படுகிறது.

இக்கோட்பாடு **Bhikaji v. State of M.P.**[1] எனும் வழக்கில் உச்ச நீதிமன்றத்தால் வகுக்கப்பட்டதாகும். இவ்வழக்கின் பொருண்மைகளின்படி, அரசியலமைப்பு சட்டம் தொடங்குவதற்கு முன்பு, 1947–ஆம் ஆண்டில் ஒரு சட்டம் இயற்றப்பட்டது. அச்சட்டத்தின் பிரிவு ஒன்று, மாநிலத்தின் மோட்டார் போக்கு வரத்து வாணிகத்தை முற்றிலும் மாநில அரசே எடுத்துக் கொள்ள மாநில அரசுக்கு அதிகாரம் அளித்தது. அச்சட்டம் இயற்றப்படும் காலத்தில், அது செல்லத்தக்க தாகவே இருந்தது. ஆனால் 1950–ல் இந்திய அரசியலமைப்புச் சட்டம் இயற்றப்பட்ட பிறகு, அவ்வகை முறை, சரத்து 19(1)(g)–ன் கீழ் குடிமக்களுக்கு வழங்கப்பட்ட அடிப்படை உரிமையான எந்தத் தொழிலை செய்யவும், அல்லது எந்த வேலையை, வியாபாரத்தை அல்லது வாணிகத்தை செய்யவும் உள்ள உரிமையை மீறுவதாக உள்ளது என்று குறை கூறப்பட்டது. ஆனால், சரத்து 19(6)–ஆனது, 1951–ல் கொண்டு வரப்பட்ட முதல் அரசியலமைப்பு திருத்தச் சட்டத்தின் வாயிலாக, **"எந்த வாணிகத்தையும் ஏகபோகமாக செய்வதற்கு அரசுக்கு அதிகாரமளிக்கப்படுகிறது"** என்று திருத்தப்பட்டது. இதனால், குறை கூறப்பட்ட மேற்படி சட்டத்தின் மீதிருந்த நிழலை மேற்படி திருத்தச் சட்டம் அகற்றி, அதனை அனைத்து விதமான குறைகள் மற்றும் ஊனங்களிலிருந்தும் விடுவிக்கிறது, என உச்ச நீதிமன்றம் கூறியது. எனவே, அச்சட்டம் குடிமக்கள் மற்றும் குடிமக்கள் அல்லாதவர்கள் அனைவருக்கும் எதிராக செயல்படக் கூடியதாகிறது. அச்சட்டம் அடிப்படை உரிமைகளுடன் முரண்பாடு என்பதால் சில காலம் மறைக்கப்பட்டிருந்தது; அந்த ஒளிமறைப்பு நீக்கப்பட்டவுடன், அவ்வாறு நீக்கப்பட்ட தினத்திலிருந்து மேற்படி சட்டம் செயல்படத் துவங்குகிறது, என்றும் உச்ச நீதிமன்றம் கூறியது.

11. வரம்பு மீறல் கோட்பாடு (Doctrine of Ultra Vires) :

அரசியலமைப்புச் சட்டத்தினால் பாராளுமன்றத்திற்கும் சட்டமன்றத்திற்கும் சட்டமியற்றம் அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. அவை தங்களுக்கு அளிக்கப்பட்ட அதிகாரத்தினை மீறி சட்டத்தினை இயற்றும்பொழுது, அதாவது அச்சட்டத்தினை இயற்ற அதிகாரமளித்த சட்டத்தினையே மீறிச் செயல்படும் பொழுது அச்சட்டங்கள் வரம்பு மீறல் கோட்பாட்டின்படி, நீதிமன்றத்தால் அரசியலமைப்புச் சட்டத்தினை மீறியவை என அறிவிக்கப்படும். உயர் நீதிமன்றங்களுக்கும், உச்ச நீதிமன்றத்திற்கும் ஒரு சட்டத்தினை அரசியலமைப்பற்றது என்று கூறும் அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

12. தளர்த்தீடு கோட்பாடு (Doctrine of Waiver) :

தளர்த்தீடு என்றால் விட்டுக் கொடுப்பது என்பதாகும். இங்கு ஒரு குடிமகன்

1. A.I.R. 1955 S.C. 781

தனது அடிப்படை உரிமைகளை விட்டுக் கொடுப்பதுதான், தளர்த்தீடாகிறது. ஆனால், இது சாத்தியமாகாது என பின்வரும் வழக்கொன்றில் உச்ச நீதிமன்றத்தால் கூறப் பட்டது.

Bashesher Nath v. Income Tax Commissioner[1] எனும் வழக்கில் வருமான வரிச் சட்டம் பிரிவு 5(1)–ன் கீழ் **Bashesher Nath** என்பவர், தன் வருமானத்தின் அதிகபட்ச தொகையை மறைத்ததாக கூறப்பட்டார். அதன்பின், 1954–ல் அவர், ரூபாய் மூன்று இலட்சம் அபராதத்துடன் வருமான வரி பாக்கியை மாதத் தவணைகளில் செலுத்துவதாக வருமான வரி ஆணையருடன் ஒரு உடன்படிக்கை செய்து கொண்டார். ஆனால், 1955–ஆம் ஆண்டு **Muthiah v. Income Tax Commissioner** எனும் வழக்கில் மேற்படி பிரிவு 5(1)–ஆனது, அரசியலமைப்புச் சட்டத்தின் 14–வது சரத்தின் வரம்பை மீறுவதாக உள்ளது என்று உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்தது. உடனே, **Bashesher Nath** மேற்படி பிரிவு 5(1)–ஆனது செல்லாது என்று அறிவிக்கப்பட்டுவிட்டதால், தனக்கும் வருமான வரி ஆணையருக்கும் இடையே ஏற்பட்ட உடன்படிக்கையும் செல்லாது என்று வாதிட்டார். பிரிவு 5(1) செல்லாததாக ஆனாலும், எப்பொழுது வரி பாக்கியை செலுத்தி விடுகிறேன் என்று ஒரு உடன்படிக்கை செய்து கொள்ளப்பட்டதோ, அப்பொழுதே மேற்படி **Bashesher Nath** சரத்து 14–ன் கீழான தனது அடிப்படை உரிமையை தளர்த்தீடு செய்து விட்டதாக அல்லது விட்டுக் கொடுத்து விட்டதாக பொருள்படும் என்று வருமான வரி ஆணையரால் கூறப்பட்டது.

ஆனால், அரசியலமைப்பின் III-வது பகுதியின் வாயிலாக அளிக்கப் பட்டுள்ள எந்த அடிப்படை உரிமைகளையும் தளர்த்தீடு செயய ஒரு குடிமகனால் ஆகாது என்றும், இவ்வுரிமைகள் தனிப்பட்ட நபரின் ஆதாயத்திற்காக மட்டும் அளிக்கப்படவில்லை. மாறாக, இது பொதுக் கொள்கையின் அடிப்படையிலும் பொது மக்களின் நலனுக்காகவும், அரசியலமைப்பால் அரசின் மீது சுமத்தப்பட்டுள்ள ஒரு கடப்பாடு என்றும், எந்த நபரும் அரசின் அக்கடப்பாட்டினை விடுவிக்க முடியாது என்றும், ஏனெனில் நாட்டின் பெருபகுதி மக்கள் கல்வி வளமை, அறிவு போன்றவற்றில் பின்தங்கியும், அரசியல்ரீதியாக தங்களுக்கு அளிக்கப்பட்டுள்ள உரிமைகள் குறித்து எதனையும் அறியாமலும் உள்ளனர் என்றும், உச்ச நீதிமன்றம் கூறியது. மேலும், இச் சூழ்நிலைகளில் அவர்களுக்கு எதிராக அடிப்படை உரிமைகளை காப்பது இந்நீதிமன்றத்தின் கடமையாகும் என்றும் உச்ச நீதிமன்றம் கூறியது. எனவே, **Bashesher Nath** தனது அடிப்படை உரிமைகளை தளர்த்தீடு செய்தவராகக் கூற முடியாது என்று கூறப்பட்டது.

இதனால், மேற்படி கோட்பாடு அரசியலமைப்பின் அடிப்படை உரிமைகள் குறித்த III-வது பகுதியின் மீது எவ்வித தாக்கத்தையும் செயல்பாட்டையும் கொண்டிருக்கவில்லை என்று கூறுவதுதான் சரியாகும்.

1. A.I.R. 1959 S.C. 340

70. How is the Doctrine of Waiver used as a tool to Interpret the Indian Constitution? (இந்திய அரசமைப்புச் சட்டத்தினை பொருள் விளக்கம் காணும் கருவியாக 'பிரித்தல் கோட்பாடு' எவ்வாறு பயன்படுத்தப்பட்டுள்ளது?)

(அல்லது)

Examine how the Doctrine of Eclipse is used as a tool to interpret the Indian Constitution. (இந்திய அரசமைப்புச் சட்டத்தினை பொருள் விளக்கம் காணும் கருவியாக "தற்கால ஆற்றுதல் மறைதல் கோட்பாடு" எவ்வாறு பயன்படுத்தப்பட்டுள்ளது என்பதை ஆராய்க.)

(அல்லது)

Doctrine of Pith and Substance - Write short notes. (மையக் கருப் பொருள் கோட்பாடு – சிறு குறிப்பு எழுதுக.)

(அல்லது)

Doctrine of Severability - Write short notes. (இணைப்பகற்றும் கோட்பாடு – சிறு குறிப்பு எழுதுக.)

(அல்லது)

Doctrine of Prospective overruling - Write short notes. (முன்மேவு மறுத்தளித்தல் கோட்பாடு – சிறு குறிப்பு எழுதுக.)

(அல்லது)

Doctrine of colourable legislation - Write short notes. (முறையது போலமை இயற்றுச் சட்டக் கோட்பாடு – சிறு குறிப்பு எழுதுக.)

(அல்லது)

Doctrine of repugnancy - Write short notes. (முரண்பாடு என்ற கோட்பாடு – சிறு குறிப்பு எழுதுக.)

(அல்லது)

Territorial Nexes - Write short notes. (எல்லைத் தொடர்பு – சிறு குறிப்பு எழுதுக.)

(அல்லது)

Waiver - Write short notes. (நிராகரிப்பு – சிறு குறிப்பு எழுதுக.)

(முந்தைய வினாவின் விடையில் பொருத்தமான இடங்களில் காண்க.)

(உ) சட்டப் பொருள் விளக்கத்திற்கு உதவும் ஒரு கருவியாக அரசியலமைப்பின் முகப்புரை அல்லது முகப்புரைக்கு அளிக்கப்படும் பொருள் விளக்கம் [Preamble as a tool for Interpretation or Interpretation to Preamble of the Constitution]

71. State whether the Preamble of the Indian Constitution is a part of the Constitution. Cite Case Laws. (இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் முகப்புரை அரசியல் அமைப்புச் சட்டத்தின் ஒரு பகுதியா என்பதை வழக்குகளின் மூலம் விளக்குக.)

(அல்லது)

Describe the object and scope of the Preamble in the Constitution of India. Discuss the extent to which it can be used in interpreting the provisions of the Constitution. (இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் முகப்புரையின் நோக்கத்தையும், நோக்க எல்லையையும் விவரித்துக் கூறுக. அரசியலமைப்பு பிரிவுகளின் பொருள் விளக்கத்தில் அதை எவ்விதத்தில் பயன்படுத்த இயலும் என்பதை ஆராய்க.)

(அல்லது)

Preamble - Write Short Notes. (முகப்புரை – சிறு குறிப்பு எழுதுக.)

(அல்லது)

Preamble as aid to construction of statute- Write Short Notes. (சட்டப் பொருள் விளக்கத்தில் முகப்புரையின் பயன்பாடு – சிறு குறிப்பு எழுதுக.)

(அல்லது)

Interpretation of Preamble to the Indian Constitution - Write Short notes. (இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் முகப்புரை பற்றிய பொருள் விளக்கம் – சிறு குறிப்பு எழுதுக.)

(அல்லது)

Discuss the extent to which "preamble" can be considered as a legitimate aid in construction of statutes. (சட்டங்களைப்

பொருள் விளக்கம் கொள்வதில் முகப்புரை எவ்வாறு முறையான கருவியாக கருதப்படுகிறது என்பதை விவரிக்க.)

முகப்புரையின் பொருள் :

முகப்புரை (Preamble) எனப்படுவது, இயற்றப்பட்ட சட்டத்தை அறிமுகம் செய்து வைக்கும் பகுதியாகும். மேலும் அச்சட்டத்தின் கொள்கைகளை புரிந்து கொள்ளவும், சட்டமன்றத்தின் கருத்தை அறிந்து கொள்ளவும், சட்டத்தின் முகப்புரை பெரிதும் உதவுகிறது.

ஒரு சட்டத்திற்கு பொருள் விளக்கமளிப்பதில் முகப்புரையின் முக்கியத்துவம் :

சட்டத்தை இயற்றியவர்கள் அச்சட்டத்தை எந்நோக்கிற்காக இயற்றினார்கள், அதன் மூலம் சமூகத்தில் எவ்விதமான சூழ்நிலைகளையும் மாறுதல்களையும் உண்டாக்கக் கருதினார்கள் என்று முகப்புரையில் கூறப்படுகிறது. ஒரு சட்டத்தின் முகப்புரையில் அச்சட்டம் இயற்றப்படுவதற்கு எவையெல்லாம் காரணங்களாக (reasons for the Act) இருந்தன என்பது சுட்டிக்காட்டப்பட்டிருக்கும். ஒரு சட்டத்தை புரிந்து கொள்ள உதவும் ஒரு கருவி என்று முகப்புரையைக் கூறலாம். எனவே அச்சட்ட வாசகம் குழப்பமாக இருந்தாலோ அல்லது இரு பொருள் தரக் கூடியதாக இருந்தாலோ அச்சட்டத்தின் முகப்புரையை ஆராய்ந்து உரிய பொருள் விளக்கத்தைக் கொடுக்கலாம். மேலும் அய்யப்பாடுகள் எழும் சமயத்தில் ஒரு சட்டத்தை அதன் உண்மையான எல்லைக்குள் நிலை நிறுத்த வழிகாட்டுவது, அச்சட்டத்தின் முகப்புரையே எனில் அது மிகையன்று. எனவே ஒரு சட்டத்திற்கு பொருள் விளக்கமளிக்க, அதன் முகப்புரையை ஆராய்ந்தறிதல் என்பது சட்ட முறைப்படி ஏற்றுக் கொள்ளப்பட்ட (legitimately accepted) பொருள் விளக்க முறையாக காலம் காலமாக பின்பற்றப்பட்டு வருகிறது.

ஒரு சட்டத்தின் வகைமுறைகளுக்கு பொருள் விளக்கமளிக்க இவ்வாறு முகப்புரையை ஒரு கருவியாக பயன்படுத்த வேண்டுமெனில், அதற்கென சில விதிகள் உள்ளன. அவை வருமாறு:–

1. சம்பந்தப்பட்ட சட்டத்தின் வகைமுறைகளுக்கு பொருள் விளக்கமளிக்க முகப்புரை முழுவதையும் கருத்தில் கொள்ள வேண்டும். அதாவது முகப்புரையின் ஒட்டு மொத்த விளைவை கருத்தில் கொண்டு அதற்கொப்ப பொருள் விளக்கமளிக்க வேண்டும்.

2. ஒரு சட்டத்தின் மொழிநடையும், அதன் நோக்கமும், பரவெல்லையும் அய்யத்திற்கிடமில்லாமல் இருக்கும் பொழுது, முகப்புரையின் வாயிலாக அச்சட்டத்தின் வகைமுறைகளை குறுக்கும் அல்லது நீட்டிக்கும் விதத்தில் பொருள் கொள்ளக் கூடாது.

3. முகப்புரையின் உதவியில்லாவிட்டால், சம்பந்தப்பட்ட சட்டத்தின் வகை முறைகளின் அளாவுகையை வரையறுத்துக் கூற முடியாது எனும் பொழுது மட்டுமே, பொருள் விளக்கமளிக்க முகப்புரையை ஒரு கருவியாக பயன்படுத்த வேண்டும்.

4. ஒரு சட்டத்தின் நோக்கம் அல்லது அதன் வகைமுறைகளின் பொருள் தெளிவாக இல்லாத பொழுது, முகப்புரையை பொருள் விளக்கமளிக்க பயன் படுத்தலாம்.

5. ஒரு சட்டத்தின் பொதுவான மொழிநடையிலிருந்து, அச்சட்டத்தின் வகைமுறைகள் ஒரு குறிப்பிட்ட பயன்பாட்டிற்கு மட்டுமே பொருந்த (limited application) வேண்டும் என்று சட்டமன்றம் கருதியிருப்பது தெளிவானால், அக்குறிப்பிட்ட பயன்பாடு என்னவென்பதை முகப்புரையைக் கொண்டு விளக்கலாம்.

6. ஒரு சட்டத்தின் உள்ள வகைமுறைகளின் மொழிநடை தெளிவாக உள்ள பொழுது. அதற்கு முரணாக முகப்புரையில் யாது கூறப்பட்டிருப்பினும், அவ்வகை முறைகளில் கூறப்பட்டுள்ளவற்றை அப்படியே நீதிமன்றங்கள் எடுத்துக் கொள்ள வேண்டும். மாறாக, முகப்புரைக்கு ஏற்றவாறு அவ்வகைமுறைகளை பொருள் கொள்ளக் கூடாது.

7. அதுபோல் ஒரு சட்டத்தின் வகைமுறைகளுக்கு இரண்டு பொருள் விளக்கங்கள் தரக் கூடிய சாத்தியமிருப்பின், எந்த பொருள் விளக்கம் முகப்புரையில் கூறப்பட்டுள்ளவற்றிற்கு ஒத்ததாக உள்ளதோ, அப்பொருள் விளக்கத்தையே கருத்தில் கொள்ள வேண்டும்.

8. ஒரு சட்டத்தின் வகைமுறைகள், அதன் முகப்புரைக்கு முரணாக இருப்பின், அவ்வகைமுறைகளை செல்லாத ஒன்றென நீதிமன்றங்கள் விளம்புதல் கூடாது.

9. ஒரு சட்டத்திற்கும், அதன் வகைமுறைகளுக்கும் பொருள் விளக்க மளிக்க பயன்படும் கருவிகளில் ஒன்றே முகப்புரையாகும். எனவே அதனையே முடிவான ஒன்றாகக் கொண்டு, அச்சட்டத்திற்கு பொருள் விளக்கமளிக்கக் கூடாது. பொருள் விளக்கமளிக்க உதவும் பிற கருவிகளையும் நீதிமன்றங்கள் தங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ள வேண்டும். ஏனெனில் முகப்புரையில் கொடுக்கப் பட்டிருப்பது, அச்சட்டத்தின் சுருக்கமான ஒரு சாரமே ஆகும். அதன் விளக்கம் அச்சட்ட வகைமுறைகளில்தாம் பொதிந்துள்ளது.

இனி இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் முகப்புரையைக் காண்போம்.

இந்திய அரசியலமைப்பின் முகப்புரை:

நமது இந்திய அரசியலமைப்புச் சட்டம் எந்நோக்கத்திற்காக இயற்றப் பட்டது என்பதும் அதன் மூலம் ஏற்படுத்தப்பட வேண்டிய மாறுதல்களும், அச் சட்டத்தின் 'முகப்புரையை' கண்டாலே தெளிவாகிவிடும். அது வருமாறு.

முகப்புரை

இந்திய மக்களாகிய நாம்,

இந்தியாவை ஒரு **[இறைமை வாய்ந்த, சமநலமை நெறி சார்ந்த, சமயச் சார்பற்ற, மக்களாட்சிக் குடியரசாக]**[1] அமைக்கவும், அதன் குடிமக்கள் அனைவருக்கும்,

சமுதாய, பொருளாதார மற்றும் அரசியல் **நீதியும்,**

சிந்தனையில், சிந்தனை வெளிப்பாட்டில், நம்பிக்கையில், பற்றார்வத்தில் மற்றும் வழிபாட்டில் **சுதந்திரமும்,**

தகுநிலையில் மற்றும் வாய்ப்பில் **சமத்துவமும்,**

உறுதியாகக் கிடைக்கச் செய்யவும்

தனி ஒருவரின் மாண்புக்கும், **[நாட்டின் ஒற்றுமைக்கும், ஒருமைப்பாட்டுக்கும்]**[2] உறுதி யளிக்கும் **உடன்பிறப்புணர்வை** அவர்கள் அனைவரிடையே வளர்க்கவும்,

விழுமிய முறைமையுடன் உறுதி பூண்டு,

1949, நவம்பர் இருபத்து ஆறாம் நாளாகிய இன்று **நம்முடைய அரசியலமைப்பு பேரவையில், ஈங்கிதனால், இந்த அரசியலமைப்பை ஏற்று, சட்டமாக இயற்றி, நமக்கு நாமே வழங்கிக் கொள்கிறோம்.**

1. 1976–ஆம் ஆண்டின் அரசியலமைப்பு சட்டத் திருத்தத்தால் 'இறைமை வாய்ந்த மக்களாட்சிக் குடியரசு' என்பதற்கு பதிலாக புகுத்தப்பட்டது.
2. மேற்படி சட்ட திருத்தத்தால் 'நாட்டின் ஒற்றுமை' என்பதற்கு பதிலாக.

இந்திய அரசியலமைப்பின் முகப்புரை - நோக்கங்கள் :

பின்வருவன முகப்புரையில் கூறப்பட்டுள்ள நோக்கங்களாகும்.

1. சமுதாய நீதி, பொருளாதார நீதி மற்றும் அரசியல் நீதி (Justice) வழங்குவது;

2. சிந்தனையில், சிந்தனை வெளிப்பாட்டில், நம்பிக்கையில் மற்றும் வழிபாட்டில் சுதந்திரம் (Liberty) அளிப்பது;

3. தகுநிலை (Status) மற்றும் வாய்ப்பில் சமத்துவத்தை (Equality) அளிப்பது;

4. தனியொருவரின் மாண்புக்கும் (Dignity of the Individual), நாட்டின் ஒற்றுமைக்கும், ஒருமைப்பாட்டிற்கும் உறுதியளிக்கும் உடன்பிறப்புணர்வை (Fatarnity) குடிமக்கள் அனைவரிடையே வளர்த்தல்;

இவற்றை இந்தியக் குடிமக்கள் அனைவருக்கும் அளித்து, பாதுகாக்கிறது.

இந்திய அரசியலமைப்பின் முகப்புரையை எவ்வாறு பொருள் கொள்ள வேண்டும் என்று கருத்து தெரிவித்த வழக்குகள் :

In Re Berubari Union and Exchange of Enclaves Case (or) In Re Berubari Case[1]

இந்திய அரசியலமைப்பின் சரத்து 3(c)–ஆனது, ஒரு மாநிலத்தின் எந்த நிலப் பகுதியையும் அதிகப்படுத்துவதற்கோ அல்லது குறைப்பதற்கோ, பாராளு மன்றம் சட்டமியற்றலாம் என்று கூறுகிறது. ஆனால் மேற்படி வழக்கில், எழுந்த பிரச்சனை என்னவென்றால், இந்திய நாட்டினுடைய அல்லது இந்தியாவின் ஒரு மாநிலத்தினுடைய நிலப்பகுதியை குறைத்து, அதை ஒரு வெளிநாட்டுக்கு அளிக்கலாமா, என்பதுதான்.

இது பொது நலன் முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சனை என்பதால், உச்ச நீதிமன்றத்தின் ஆலோசனையை (Advisory Jurisdiction of Supreme Court), இந்தியக் குடியரசுத் தலைவர் சரத்து 143–ன் கீழ் நாடினார்.

இங்கு மேற்படி வழக்கின் பொருண்மைகளை சற்று சுருக்கமாக காண்பது அவசியம். அதன்படி, எல்லைத் தகராறுகளைத் தீர்த்துக் கொள்வதற்காக, 1958 ஆம் ஆண்டில் இந்திய–பாகிஸ்தான் உடன்படிக்கை (Indo - Pakisthan Agreement) ஏற்பட்டது.

அவ்வுடன்படிக்கையின்படி, (i) இந்தியாவின் ஆட்சிக்குட்பட்ட பெருபாரி என்ற நிலப்பகுதியின் ஒரு பாதியை பாகிஸ்தானுக்கு இந்தியா மாற்றியளிக்க

1. A.I.R. 1960 S.C. 845

வேண்டியது. மற்றும் (ii) பழைய கூச் – பீகார் நிலப்பரப்பை (exchange of old Cooch - Bihar enclaves) பரிமாற்றம் செய்து கொள்ள வேண்டியது. பெருபாரி பகுதியானது, மேற்கு வங்காளத்தில் சுமார் 12,000 மக்களை உள்ளடக்கி, 9 சதுர மைல் பரப்பளவு கொண்டதாக இருந்தது. மேற்படி மாற்றியளிக்கும் உடன்படிக்கையை மத்திய அரசு செயல்படுத்த முனைந்த பொழுது, அதனை எதிர்த்து மாபெரும் அரசியல் கிளர்ச்சி உருவானது. அதன் அடிப்படையில் அப்பிரச்சனையில் முடிவெடுக்க, முன்சொன்னவாறு இந்தியக் குடியரசுத் தலைவர், உச்ச நீதிமன்றத்தின் ஆலோசனை கூறும் அதிகாரவரம்பை நாடினார்.

அப்பொழுது உச்ச நீதிமன்றத்திடம் சமர்ப்பிக்கப்பட்ட வினாக்கள் என்னவென்றால், (i) பெருபாரி பகுதியை மாற்றியளிப்பது தொடர்பான உடன்படிக்கைகளை செயற்படுத்துவதற்கு, சட்டமியற்றல் நடவடிக்கை ஏதும் தேவையா ? மற்றும் (ii) அப்படி சட்டமியற்றுவது தேவையானால், மேற்படி சரத்து 3–ன் கீழான பாராளுமன்றச் சட்டம் போதுமா அல்லது சரத்து 368–ன்படி அரசியலமைப்பை திருத்த வேண்டியது தேவையா அல்லது மேற்கண்ட இரண்டுமே தேவையா என்பதுதான்.

இங்கு மத்திய அரசின் பல சால்ஜாப்பான வாதங்களை உச்ச நீதிமன்றம் நிராகரித்தது. சரத்து 3(c)-ஆனது, இந்திய மாநிலத்தின் ஒரு பகுதியை குறைத்து, அதை மற்றொரு மாநிலத்திற்கு மாற்றுவது குறித்து கூறுகிறதோயொழிய, இந்திய நாட்டின் நிலப்பரப்பை மற்றொரு வெளிநாட்டிற்கு அளிப்பது குறித்து கூறவில்லை. எனவே சரத்து 3(c)-யின் மூலம், அவ்வாறு வெளிநாட்டிற்கு மாற்றியளிப்பதற்காக, பாராளுமன்றம், சட்டம் எதையும் இயற்ற இயலாது, என்று உச்ச நீதிமன்றம் கூறியது. எனவே வெறுமனே சரத்து 3(c)-யின் கீழ் சட்டமியற்றி, நிலப்பகுதியை வெளி நாட்டிற்கு தாரை வார்க்க முடியாது, என்பதை முதற்கண் உச்ச நீதிமன்றம் தெளிவு படுத்தியது. அதே சமயத்தில் மேற்கண்டவாறு மாற்றியளிக்க வேண்டுமெனில், அரசியலமைப்பையே சரத்து 368–ன் கீழ் திருத்தம் செய்ய வேண்டியது, அவசிய மாகும் என்று மற்றொரு வினாவிற்கும் உச்ச நீதிமன்றம் விடையளித்தது.

எனினும், இது, ஒரு நாட்டிற்கு மற்றொரு நாட்டின் நிலப்பரப்பை அடையவோ அல்லது விட்டுக் கொடுக்கவோ அதிகாரம் இல்லை என்ற பொருளில் குறிப்பிடவில்லை. ஏனெனில், அச்செயல்கள், ஒரு நாட்டின் பேரரசாண்மையின் கீழ் வருவதாகும். முகப்புரையின்படி, இந்தியா ஒரு பேரரசாண்மையுடைய (இறைமையுடைய) நாடு (Soverign State). எனவே, அது நாட்டிடைச் சட்டத்தின் கீழும், முகப்புரையின்படியும் (Preamble) மற்றொரு நாட்டின் நிலப்பரப்பை அடையவும், விட்டுக் கொடுக்கவும், அதிகாரம் படைத்தது, எனப்பட்டது.

உச்ச நீதிமன்றத்தின் மேற்கண்ட ஆலோசனையின்படி, மேற்கண்ட உடன்படிக்கையின் கீழ் இந்திய நிலப்பரப்பான பெருபாரியின் ஒரு பாதியை பாகிஸ்தானுக்கு மாற்றியளிக்க, 1960–ஆம் ஆண்டில் இந்திய அரசியலமைப்பில்

9–வது சட்டத் திருத்தம் கொணரப்பட்டது. அதன்படி, மேற்படி பகுதியும் கைமாறிச் சென்று விட்டது.

இவ்வழக்கின் பொழுது, இந்திய அரசியலமைப்பின் முகப்புரை குறித்து பல பொருள் விளக்கங்கள் கூறப்பட்டன. முதலில் **முகப்புரை என்பது, இந்திய அரசியலமைப்பின் ஒரு பகுதி அல்ல என்றும்,** எனவே, எந்த நிலைமுறை அதிகாரங்களுக்கும் அடிப்படையாக (source of any substantive power) முகப்புரையைக் கருதக்கூடாது என்றும், அத்தகு அதிகாரங்கள் இந்திய அரசியலமைப்பிலேயே வெளிப்படையாக வழங்கப்பட்டுள்ளது, என்றும் கூறப்பட்டது. மேலும், அதிகாரங்களைக் குறித்து எது உண்மையாக உள்ளதோ, அதே, அந்த அதிகாரங்களின் மீதான தடை குறித்தும் உண்மையாக உள்ளன, எனப்பட்டது. முகப்புரையானது, அரசியலமைப்புச் சட்டத்தின் நோக்கங்களைக் குறித்து கூறுகிறதே தவிர, அதே சட்டமல்ல அல்லது சட்ட வலிமையும் பெற்றதல்ல. அரசியலமைப்பில் பயன்படுத்தப்பட்டுள்ள பதங்கள் குழப்பக் கூடியதாகவோ அல்லது இரு பொருள் தரக்கூடியதாகவோ இருப்பின், முகப்புரையில் கூறப்பட்டுள்ள அரசியலமைப்பின் நோக்கங்களின் உதவியை நாடலாம். அதற்குப் பொருந்துமாறு உள்ள பொருள் விளக்கத்தை எடுத்துக் கொள்ளலாம், எனப்பட்டது. இந்த அளவிற்கு மட்டுமே முகப்புரையை பொருள் காணுவதில் பயன்படுத்த இயலும் என மேற்படி வழக்கில் கூறப்பட்டது.

மேலும் ஆட்சிப்பரப்பை வெளிநாட்டிற்கு மாற்றியளிக்க அதிகாரம் கொடுக்கும் வண்ணம் முகப்புரையை சரத்து 368–ன் கீழ் திருத்த முடியாது; ஏனெனில் முகப்புரையானது, அரசியலமைப்பின் ஒரு பகுதியே அல்ல, எனப்பட்டது.

Kesavanand Bharathi v. State of Kerala[1]

பெருபாரி வழக்கில் கூறப்பட்ட மேற்படி கருத்தை உச்ச நீதிமன்றம் இவ்வழக்கில் நிராகரித்து, **முகப்புரையானது அரசியலமைப்பின் ஒரு பகுதியே** என்று குறிப்பிட்டது. சாதாரண சட்டங்களின் முகப்புரைக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்காது போனாலும், ஒரு அரசியலமைப்புச் சட்டத்தின் முகப்புரைக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்க வேண்டும், எனப்பட்டது.

மேற்படி வழக்கின் பொழுது, **தலைமை நீதியரசர் சிக்ரி (Sikri C.J.) அவர்கள்** பின்வருமாறு கூறுகிறார்கள். அவரது கூற்றுப்படி, "அதிகாரங்கள் குறித்து **எது உண்மையாக** உள்ளதோ, அதே, அந்த அதிகாரத்தின் மீதான தடைகள் மற்றும் **வரம்புகளைக்** குறித்தும் உண்மையாக உள்ளது, என்ற உரையை மெய்ப்பிப்பதற்கு **எவ்வித** ஆதாரமும் நம்முன் சமர்ப்பிக்கப்படவில்லை ..... நமது அரசியலமைப்பின் **முகப்புரையானது** அதிமுக்கியத்துவம் வாய்ந்தது என்றும், அரசியலமைப்பானது, **முகப்புரையில்** கூறப்பட்டுள்ள மாபெரும் நோக்கங்களையொட்டி உயர்ந்த

1. A.I.R. 1973 S.C. 1461

கண்ணோட்டத்தின் அடிப்படையில்தான் படிக்கப்பட வேண்டும் மற்றும் பொருள் கொள்ளப்பட வேண்டும் என்று எனக்கு தோன்றுகிறது" என்று குறிப்பிடுகிறார். உண்மையில், சரத்து 368–ன் கீழான, அரசியலமைப்பை திருத்தும் பாராளுமன்ற அதிகாரத்தின் மீது உட்கிடை வரம்புகளை விதிக்க, முகப்புரையை சார்ந்திருக்க வேண்டும் எனப்பட்டது. மேலும் முகப்புரையானது, அரசியலமைப்பின் ஒரு பகுதி என்பதால், அரசியலமைப்பின் சரத்துக்களை எவ்விதம் சரத்து 368–ன் கீழ் திருத்துகிறோமோ, அதே போன்று முகப்புரையையும் திருத்தலாம் எனப்பட்டது. ஆனால் அச்சமயத்திலும், முகப்புரையில் கூறப்பட்டுள்ள, அரசியலமைப்பின் 'அடிப்படை அம்சங்களை' (basic elements) சரத்து 368–ன் கீழ் திருத்தியமைக்க முடியாது, என்றும் கூறப்பட்டது.

இவ்வழக்கில், அரசியலமைப்புச் சட்டத்திற்கு பொருள் விளக்கமளிப்பதற்கு, முகப்புரையை கவனிக்க வேண்டியது முக்கியமான ஒன்று என முகப்புரையின் முக்கியத்துவம் நிலை நிறுத்தப்பட்டது. அதாவது, முகப்புரைக்கும், சட்டத்தன்மை உண்டு என்றும், சட்ட வலிமை உண்டு என்றும் வலியுறுத்தப்பட்டது.

முடிவுரை :

I.C. Golak Nath v. State of Punjab[1] என்ற வழக்கில், "சட்ட மன்றம் அடைவதற்கு எண்ணம் கொண்டுள்ள முக்கிய நோக்கங்களைக் கூறுவது தான் ஒரு செய்சட்டத்தின், முகப்புரை எனப்படுகிறது" என உச்ச நீதிமன்றம் கூறியது. இதற்கு முந்தய வழக்கான **In Re Berubari**[2] வழக்கில், முகப்புரை குறித்து மாறுபட்ட கருத்துக்கள் கூறப்பட்டிருப்பினும், **"சட்டத்தினை உண்டாக்கு பவர்களின் மனதை திறக்கக்கூடிய சாவிதான், முகப்புரை" (key to open the mind of the makers),** என உச்ச நீதிமன்றம் கூறியுள்ளது. இதிலிருந்து முகப்புரை, **அரசியலமைப்புச் சட்டப் பொருள் விளக்கத்திற்கு உதவும் ஒரு கருவி (tool) என்பதும் புலனாகும்.**

முகப்புரையின் முக்கியத்துவத்தை நமது தேசப்பிதா அவர்கள் குறிப்பிடுகையில், "சமுதாயங்கள் அனைத்தும் இயைந்து வாழ வேண்டிய இந்தியா போன்ற நாட்டில், ஏழைகளின் ஒங்கிய குரலாக முகப்புரை செயல்படுகிறது[1]" (The India of My Dreams) என்று கூறுகிறார்.

எனவே, இவற்றையெல்லாம் காணும் பொழுது, முகப்புரை என்பது அரசியலமைப்பு எனும் மாளிகை நிற்க அடிப்படையாக விளங்கும் அஸ்திவாரம் என்பதும், முகப்புரையை ஒட்டியே பொருள் விளக்கம் காண வேண்டுமென்றும் மிகத் தெளிவாகத் தெரியக்கூடிய ஒன்று.

1. A.I.R. 1967 S.C. 1643
2. A.I.R. 1960 S.C. 845
3. M.K.Gandhi - India of My Dreams, pp 9-10

14

அடிப்படை உரிமைகளின் பொருள் விளக்கம் [Interpretation of Fundamental Rights]

(அ) அடிப்படை உரிமைகளின் பொருள் விளக்கமும் முக்கிய வழக்குகளும் [Interpretation of Fundamental Rights and Important Case-laws]

72. Explain the interpretation of Fundamental Rights, guaranteed under the Constitution of India. Cite important Case laws.
(இந்திய அரசியலமைப்பால் உத்திரவாதமளிக்கப்பட்டுள்ள அடிப்படை உரிமைகளின் பொருள் விளக்கத்தை விளக்குக. முக்கியமான வழக்குவழிச் சட்டங்களை சுட்டிக் காட்டுக.)

(அல்லது)

Interpretation of Fundamental Rights - Write short notes.
(அடிப்படை உரிமைகளுக்கு பொருள் விளக்கம் காணல் – சிறு குறிப்பு எழுதுக.)

முன்னுரை :

ஒவ்வொரு நாட்டு அரசியல் அமைப்புச் சட்டத்திலும் தனி மனிதனுக்கென சில அடிப்படை உரிமைகள் தரப்பட்டுள்ளன. அப்போதுதான் அவன் நியாயமான வற்றிற்காக சுதந்திரமாகச் செயல்பட முடியும். இது எழுதப்பட்ட அரசியலமைப்பின் முக்கியமான அடிப்படை நன்மையாகும். அரசின் ஏதேச்சதிகாரப் போக்கிலிருந்து மக்களைப் பாதுகாக்க இவ்வுரிமைகள் அவசியம் தேவை.

அடிப்படை உரிமைகளின் வகைப்பாடு (Classification of Fundamental Rights) :

அடிப்படை உரிமைகளை பின்வருமாறு வகைப்படுத்தலாம்.

1. சமத்துவ உரிமை
   (Right to Equality) **(சரத்துக்கள் 14–18)**
2. சுதந்திர உரிமை
   (Right to Freedom) **(சரத்துக்கள் 19–22)**
3. சுரண்டலுக்கெதிரான உரிமை
   (Right against Exploitation) **(சரத்துக்கள் 23–24)**
4. சமய சுதந்திர உரிமை
   (Right to freedom of Religion) **(சரத்துக்கள் 25–28)**
5. கலாச்சார மற்றும் கல்வியியல் உரிமைகள்
   (Cultural and Educational rights) **(சரத்துக்கள் 29–30)**
6. அரசியலமைப்பு தீர்வழிகள் பெற உரிமை
   (Right to Constitutional Remedies) **(சரத்துக்கள் 32–25)**

இந்த ஆறுவகையான உரிமைகளும் இந்திய அரசியலமைப்பின் மூன்றாவது பகுதியின் **(Part III)** கீழ் கொடுக்கப்பட்டுள்ளன. இந்த உரிமைகள், ஒரு மனிதனுக்கு நிச்சயமாக வேண்டியவையாகும். அரசியலமைப்பு சட்ட முகப்புரையில் கூறப்பட்டுள்ள நோக்கங்களை நிறைவேற்றும் வகையில், இவை அமைந்துள்ளன. இவை முன்பு, இயற்கை உரிமைகளாக (Natural Rights) இருந்தன. தற்போது, அரசியலமைப்புச் சட்டத்தின் வழியாக அடிப்படை உரிமைகளாக்கப்பட்டுள்ளன. இவ்வுரிமைகளின்படி, ஒரு தனிநபர், தான் நினைத்த வழியில், அஃது நியாயமாக இருக்கும்பட்சத்தில் செல்லலாம். இவை, சிறுபான்மையினருக்கு சில கூடுதல் உரிமைகளை அளிக்கிறது. பாராளுமன்றம், அடிப்படை உரிமைகளை திருத்த எண்ணினால், அது கடுமையான நடைமுறைகளைப் பின்பற்ற வேண்டியிருக்கும். மேற்படி அடிப்படை உரிமைகளில் சொத்துரிமை (Right to Property) சட்டத் திருத்தத்தால் நீக்கப்பட்டுள்ளது.

அடிப்படை உரிமைகளின் நோக்கம் (Object of Fundemental Rights) :

இந்திய குடிமக்களிடையே சமத்துவம், சகோதரத்துவம், பாதுகாப்பு மற்றும் ஒற்றுமையை ஏற்படுத்த வேண்டும். ஒருவரின் நடத்தை மற்றும் செயற்பாடு எப்படி செயல்பட வேண்டும், எல்லாச் சமூகத்திற்கும் சம வாய்ப்பு தரல் எங்ஙனம், என்று விளக்குவது, **அடிப்படை உரிமைகளின் நோக்கமாகும்.** இவ்வுரிமைகளின்

அஸ்திவாரக் கருத்து செர்மன் குடியரசு ஆகும். நிர்வாக மற்றும் ஆட்சித் துறைகள் நம் உரிமைகளை மீறும்போது நாம் அடிப்படை உரிமைகளைக் கோரலாம். சட்டமன்றம், நிர்வாகத் துறை மற்றும் நீதித்துறையின் அதிகாரவரம்புகளை நிர்ணயிப்பதோடு அவை வரம்பு மீறின், அச்செயல்கள் செல்லாது என நீதி மன்றத்தில் முறையீடு செய்வதும் ஒரு அடிப்படை உரிமையாக, **சரத்து 32–ல்** கூறப் பட்டுள்ளது. அடிப்படை உரிமைகள் மீறப்படும் பொழுது, மேற்கண்ட சரத்து 32–ன் வழியாக உச்ச நீதிமன்றத்தை அணுகியும் அல்லது சரத்து 226–ன் வழியாக உயர் நீதிமன்றத்தை அணுகியும், தகுந்த **நீதிப்பேராணைகள் (Writs)** பிறப்பிக்க வேண்டி, மனுச் செய்யலாம். அரசின் தலையீட்டிற்கும், தனி மனித சுதந்திரத்துக்கு மிடையே சமத்துவம் நிலவ உதவுவதே (to strike a balance between individual liberty and social control), அடிப்படை உரிமைகளின் முக்கிய நோக்கமாகும்.

இத்தகு பெருமையும் முக்கியத்துவமும் வாய்ந்த அடிப்படை உரிமைகளுக்கு, உச்ச நீதிமன்றமானது பல வழக்குகளில் தக்க பொருள் விளக்கம் கொடுத்து மேலும் மெருகூட்டிய வண்ணம் உள்ளது. சற்று விரிவாக வருமாறு.

அடிப்படை உரிமைகளின் பொருள் விளக்கமும், அவை குறித்த வழக்குகளும் (Interpretation of Fundamental Rights and Case Laws) :

அடிப்படை உரிமைகள் பல சுதந்திரங்களின் வாயிலாக மக்களுக்கு அளிக்கப்பட்டுள்ளது என மேலே கண்டோம். இவ்வாறு சுதந்திரங்கள் அளிக்கப் பட்டுள்ளதை முன்னிட்டு, தனி நபர் எப்படி வேண்டுமானாலும் வாழலாம்; கேள்வி கேட்பார் யாருமில்லை; என்று எண்ணிவிடுதல் கூடாது. அடிப்படை உரிமைகளை வழங்கும் அதே அரசியலமைப்பு, அதன் பயன்பாட்டு மீது, பொது நலன் கருதி சில நியாயமான தடைகளையும் (Reasonable Restrictions) விதித்துள்ளது. அதற்கு உட்பட்டுதான், அடிப்படை உரிமைகளை அனுபவிக்க இயலும். மேலும், அடிப்படை உரிமைகளை அளிக்கும், அதே அரசியலமைப்புதான் சரத்து 51A-யின் வாயிலாக மக்களுக்கு சில அடிப்படை கடமைகளையும் (Fundamental Duties) விதிக்கிறது. அவற்றை ஒவ்வொரு குடிமகனும் கடைப்பிடித்தே ஆக வேண்டும்.

மேலும் ஒரு சட்டம் அடிப்படை உரிமைகளை மீறுவதாக இருப்பின், அச்சட்டம் அரசியலமைப்பற்றதென அறிவிக்கப்படுகிறது. இதனால் அச்சட்டம் இல்லாநிலையதாகவும் ஆகிறது.

எது எப்படியிருப்பினும், அடிப்படை உரிமைகளின் கை ஓங்கியிருந்தால் தான், அரசியலமைப்புச் சட்டம் எந்நோக்கத்திற்காக இயற்றப்பட்டதோ அதை அடைய முடிகிறது. எனவே, அடிப்படை உரிமைகளை நிலை நிறுத்தும் வகையிலேயே பொருள் விளக்கமும் அமைய வேண்டும், என்பதே தற்பொழுது நிலவும் புதிய **நீதிமுறைப் போக்காகும் (New Judicial trend).**

எனவே, அடிப்படை உரிமைகளை எடுத்துக் கூறும் அரசியலமைப்பின் மூன்றாவது பகுதியின் (Part III) கீழான சட்ட வகைமுறைகளுக்கு பரந்த மற்றும் **சாத்தியமுடைய பொருள் விளக்கமளிக்கப்பட (widest possible interpretation)** வேண்டுமென உச்ச நீதிமன்றம் பல வழக்குகளில் எடுத்துக் கூறியுள்ளது. அவற்றில் சில முக்கியமான வழக்குகளை பின்வருமாறு காண்போம்.

பொருள் விளக்கம் தரப்பட்ட பல முக்கிய வழக்குகளில் சில :

Golaknath v. State of Punjab[1]

இவ்வழக்கினை சற்று விரிவாகக் காண்பதற்கு முன், பின்வரும் சில அடிப்படையான விஷயங்களை முதலில் காண்பது நலம். இந்தியா ஒரு மக்களாட்சி நாடு. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் மக்களுக்காக ஆட்சி செய்கிறார்கள். மக்களாட்சியின் பிரதிபலிப்புதான், பாராளுமன்றமாகும். எனவே, பாராளுமன்றமே உயர்ந்தது (Parliament is Supreme). அதாவது, மக்கள் குரலே மகேசன் குரல் !

அத்தகு பாராளுமன்றம் தனது மக்கள் நலனுக்காக, அரசியலமைப்பின் எந்தப் பகுதியையும் சரத்து 368–ன் கீழ் திருத்தி அமைக்கலாம். இதற்கும் ஒரு படி மேலே சென்று உச்ச நீதிமன்றமானது **Sankari Prasad v. Union of India[2]** என்ற வழக்கில், பாராளுமன்றம், அடிப்படை உரிமைகளில் (Fundamental Rights) உள்ள எப்பகுதியை வேண்டுமானாலும் திருத்தி அமைக்கலாம், என்றும் கூறியது. இந்த ஒன்றிலிருந்தே பாராளுமன்றம் எத்தகு உயர்நிலையில் உள்ளது என்பதை, நன்கு புலப்படுத்தக் கூடியதாகும்.

இந்நிலையில் மேற்படி **கோலக்நாத் வழக்கில்,** பாராளுமன்றத்தின் உயர்நிலைக்கு மரண அடி கிடைத்தது. தலைமை **நீதியரசர் சுப்பாராவ்** அவர்களும் மற்ற அய்ந்து நீதியரசர்களும் சேர்ந்து மேற்படி **சங்கரி பிரசாத்** மற்றும் அதற்குப் பின்னிட்ட **Sajjan Singh v. State of Rajasthan[3]** ஆகிய வழக்குகளில் கூறப்பட்ட முடிவுகளை ஒதுக்கித் தள்ளி (overruled), **அடிப்படை உரிமைகளில் திருத்தம் செய்வதற்கு பாராளுமன்றத்திற்கு அதிகாரம் இல்லை,** என்று கூறினார்கள். மேலும் அவர்கள், தங்களுடைய தீர்ப்புக்குச் சார்பாக பின்வரும் காரணங்களை எடுத்துக் கூறினர்.

1. பாராளுமன்றம் என்பது தன்னுரிமை (Sovereign) பெற்ற ஓர் அமைப்பு அல்ல. அது, அரசியலமைப்பின் சட்ட திட்டங்களுக்கு உட்பட்டதாகும்.

2. சட்டத் திருத்தம் என்பது ஒரு அரசியல் பிரச்சனை அல்ல. அது நீதிமுறை மறு சீராய்வுக்கு (Judicial Review) உட்பட்டதாகும்.

1. A.I.R. 1967 S.C. 1643
2. A.I.R. 1951 S.C. 455
3. A.I.R. 1965 S.C. 845

3. சரத்து 368, அரசியலமைப்பினை திருத்தும் நடைமுறையினைப் பற்றி மட்டுமே கூறுகிறது. மேலும் சரத்து 245 மட்டுமே, பாராளுமன்றத்திற்கு திருத்தும் அதிகாரத்தினை வழங்குகின்றது.

4. சரத்து 13(2)–ன் கீழ் கூறப்பட்டுள்ள **'சட்டம்'** எனும் பதம் ஒரு சட்டத் திருத்தத்தினையும், உள்ளடக்கியதாகும். ஆகவே, ஏதேனும் ஒரு சட்டத் திருத்தம், அடிப்படை உரிமைகளை மீறினால், அது இல்லாநிலையதாகி விடும்.

5. பாராளுமன்றம், சரத்து 368–ன் கீழ் அடிப்படை உரிமைகளைத் திருத்த முடியாது. இவை பாராளுமன்றத்தின் பார்வையிலிருந்து வெகு தூரத்தில் பத்திரமாக உள்ளன.

மேற்படி வழக்கின் தீர்ப்பு, இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் வரலாற்றிலேயே மிகப்பெரும் ஒரு திருப்பத்தை உண்டாக்கியது என்று பலரும் கூறுவார்கள். அதே நேரத்தில் இத் தீர்ப்பினைக் குறை கூறுபவர்களும் உண்டு. அடிப்படை உரிமைகள் என்பன அவ்வளவு அடிப்படையானவையா; அவை மாற்றப் படவே கூடாதனவா என்ற வினாக்களெல்லாம் எழுந்தன. சுருங்கக்கூறின், இவ் வழக்கின் தீர்ப்பு, அரசியலமைப்பு இயங்குவதில் சில இடர்பாடுகளை ஏற்படுத்தியது. அது 24–வது சட்டத் திருத்தத்தால் களையப்பட்டது. இதை உள்ளடக்கிய மற்றுமொரு முக்கிய வழக்கை பின்வருமாறு கவனிப்போம்.

Keshawanand Bharathi v. State of Kerala[1] (or) Fundamental Rights Case

அடிப்படை உரிமைகள் குறித்த மிகமிகப் பிரபலமான வழக்கு என்பதால், மேற்கண்ட வழக்கிற்கு, **'அடிப்படை உரிமைகள் வழக்கு'** என்ற பெயரே நிலைத்து விட்டது.

நாம் முன்கண்ட **கோலக்நாத் வழக்கில்,** உச்ச நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு சில இடர்பாடுகளை ஏற்படுத்தியதால், அவற்றைக் களைவதற்காக, இந்திய அரசியலமைப்பில் 1971–ஆம் ஆண்டில் 24–வது சட்டத் திருத்தமானது (24th Amendment, 1971) கொண்டு வரப்பட்டது.

மேற்படி சட்டத் திருத்தமானது, திருத்தத்திற்கான நடைமுறை மட்டுமல்லாது, அதற்கான அதிகாரத்தை சரத்து 368 பெற்றுள்ளது என்றும், மேலும் கோலக்நாத் வழக்கில், அரசியலமைப்பை திருத்துவதற்கு விதிக்கப்பட்டிருந்த வரம்புகள் நீக்கப்பட்டதோடு மட்டுமல்லாமல், அரசியலமைப்பின் எந்த வகை முறையையும் சேர்த்தல், மாறுபடுத்தல் அல்லது நீக்குதல் மூலம் பாராளுமன்றம் திருத்தலாம், என்றும் கூறியது. இதனால் பாராளுமன்றத்தின் உயர்நிலை (Supremacy) மீண்டும் நிலை நிறுத்தப்பட்டது.

1. A.I.R. 1973 S.C. 1461

இந்நிலையில், மேற்படி சட்டத் திருத்தத்தின் செல்லுடமை குறித்து, மேற்படி வழக்கின் கீழ் கேசாவனந்த பாரதி வினா எழுப்பினார். அதாவது, **சரத்து 368–ன் கீழ் அரசியல் அமைப் பினைத் திருத்துவதற்கு, எந்த அளவிற்கு பாராளுமன்றத்திற்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது,** என்பதே அவ்வினாவாகும். இதற்கு பொருள் விளக்கம் தரும் வகையில் பின்வரும் தீர்ப்பினை, பெரும் பான்மையான நீதியரசர்கள் கூறினார்கள். அதன்படி, பாராளுமன்றத்திற்கு அடிப்படை உரிமைகளைக் கூடத் திருத்தும் அதிகாரம் உள்ளது. ஆனால் அத்தகு திருத்தும் அதிகாரமானது, அரசியலமைப்பின் **அடிப்படை அம்சங்களை அல்லது அடிப்படை கட்டமைப்பை (Basic Features or Structure of the Constitution)** அழிக்கும் வகையில் பயன்படுத்தப் படக் கூடாது என்றும், சரத்து 368–ன் கீழ் அரசியலமைப்பை திருத்த கட்டுவரம்பற்ற அதிகாரத்தை பாராளுமன்றம் பெற்றிருக்கவில்லை என்றும் மேற்படி வழக்கில் உறுதியாக விளம்பப்பட்டது. இங்கு அடிப்படை அம்சங்கள் என்பது, 1. அரசியலமைப்பின் உயர்தன்மை, 2. குடியரசு மற்றும் மக்களாட்சி அமைப்புடைய அரசாங்கம், 3. அரசியலமைப்பின் மதச் சார்பற்ற தன்மை, 4. அதிகாரப்பிரிவு, 5. கூட்டாட்சி தன்மை, 6. பல்வேறுபட்ட சுதந்திரங்கள் மற்றும் அடிப்படை உரிமைகளால் பாதுகாக்கப்படும் தனிமனித மாண்பு, 7. நாட்டின் ஒற்றுமை மற்றும் ஒருமைப்பாடு, என பல வழக்குகளில் கூறப்பட் டுள்ளது. எனவே, இவற்றை பாதிக்காவண்ணம் அடிப்படை உரிமைகளில்கூட பாராளுமன்றம் திருத்தங்களை கொண்டு வரலாம், என உச்ச நீதிமன்றம் கோலக்நாத் வழக்கிலிருந்து மாறுபட்ட தீர்ப்பைக் கூறியது.

E.P. Royappa v. State of Tamil Nadu[1]

இப்பிரபலமான வழக்கில், அடிப்படை உரிமைகளில் மிக முக்கியமான சமத்துவ உரிமையை கூறும் சரத்து 14–க்கு பொருள் விளக்கமளிக்கப்பட்டது. **சரத்து 14,** "இந்திய எல்லைக்குள் எந்த ஒரு நபரின், சட்டத்தின் முன்பான சமத்துவத்தையோ அல்லது சட்டங்களின் சம பாதுகாப்பையோ அரசு மறுக்கக் கூடாது", என்று கூறுகிறது.

மேற்படி சரத்தின் கீழான "சட்டங்களின் சம பாதுகாப்பு" என்பது, எல்லாச் சட்டங்களும் பொதுவான தன்மை கொண்டு விளங்க வேண்டும் என்றோ அல்லது எல்லாச் சூழ்நிலைகளிலும், எல்லா நபர்களுக்கும் ஒரே மாதிரியான சட்டமே பின்பற்றப்பட வேண்டும் என்றோ வலியுறுத்தவில்லை. பல்வேறு பிரிவிலுள்ளோர் களின் பல்வேறான தேவைகளைப் பூர்த்தி செய்ய அவர்கள் தனித்தனியே **'நியாயமான பாகுபாட்டின்' (Reasonable Classification)** வழியாக கவனிக்கப் பட வேண்டும், என்று கூறுகிறது. அதாவது, பல்வேறு பிரிவிலுள்ளோர்களை அவர்களுக்கேற்றவாறு 'நியாயமான பாகுபாடு' செய்து கவனிக்க, சட்டமியற்ற, சரத்து 14 அனுமதிக்கிறது. ஆனால் ஒரு பிரிவினரில் உள்ளோர்களை (சம நிலையில்

1. A.I.R. 1974 S.C. 555

இருப்பவர்களை) பாகுபடுத்தி, அவர்களுக்கென தனித்தனியாக சட்டமியற்றலை (Class Legislation), மேற்படி சரத்து 14 அனுமதிப்பதில்லை. அந்த நியாயமான பாகுபாட்டை, எந்த அடிப்படையில் செய்ய வேண்டுமென்பதற்குண்டான பொருள் விளக்கத்தை **Ramakrishna Dalmia v. Justice Tendulkar**[1], **State of Bombay v. F.N. Balsara**[2], **Chiranjitlal v. Union of India**[3], **R.C. Cooper v. Union of India (Bank Nationalisation Case)**[4] ஆகிய வழக்குகளில் உச்ச நீதிமன்றம் தெளிவுபடக் கூறியுள்ளது.

அந்த வகையில் மேற்படி **E.P. Royappa** வழக்கு சற்று முக்கியத்துவம் வாய்ந்தது. ஏனெனில், இவ்வழக்கில் உச்ச நீதிமன்றமானது, 'நியாயமான பாகுபாடு' என்பதின் அடிப்படையில் தொன்றுதொட்டு வரும் சமத்துவக் கோட்பாட்டிற்கு (Traditional Concept of Equality) சவால் விட்டு, **சமத்துவம் குறித்த புதிய கருத்தை (New Concept of Equality)** எடுத்துக் கூறியது.

மேற்படி வழக்கில், நீதியரசர்கள் சந்திரசூட் மற்றும் கிருஷ்ணா அய்யர் ஆகியோர்கள் சார்பிலும், தனது சார்பிலும் **நீதியரசர் பகவதி** அவர்கள் பின்வரும் புதிய சமத்துவக் கோட்பாட்டை வெளிப்படுத்தினார். **அஃதாவது,** "சமத்துவம் என்பது பல கோணங்களிலும் விஷயங்களிலும் ஆற்றல் மிக்கதொரு கருத்தாகும். எனினும் அதை தொன்றுதொட்டு வருதல் எனும் ஒரு வட்டத்திற்குள் கட்டுப் படுத்தக் கூடாது. சமத்துவம், ஏதேச்சதிகாரப் போக்கிற்கு விரோதமானது. சமத்துவமும் ஏதேச்சதிகாரமும் பரம வைரிகள். சமத்துவம், மக்களாட்சி நாட்டின் ஒரு விதியாகும். ஏதேச்சதிகாரம், சர்வாதிகாரத்தின் கண்மூடித்தனமான மற்றும் ஏறுமாறான செயலின் கீழானதாகும். எங்கு ஒரு செயல் ஏதேச்சதிகாரமானதாக உள்ளதோ, அங்கு அரசியல் தருக்கவியல் (Political logic), அரசியலமைப்பு சட்டம் ஆகிய இரண்டிலும் அச்செயல் சமமின்மையாக உள்ளது என்பது உட்கிடை யாகும். எனவே, சரத்து 14–அய் மீறுவதாகும்," என்று சரத்து 14–ன் பயன்பாட்டிற்கு புதிய பொருள் விளக்கம் அளிக்கப்பட்டது. இது பின்வரும் **மேனகா காந்தி வழக்கிலும்** எடுத்துரைக்கப்பட்டது.

Menaka Gandhi v. Union of India[5]

மிக மிகப் பிரபலமான இந்த வழக்கில், **'வாழ்க்கை உரிமை' (Right to live)** மற்றும் **'தனிநபர் சுதந்திரம்' (Personal Liberty)** ஆகிய பதங்களின் பொருள் விளக்கம் குறித்து உச்ச நீதிமன்றத்தால் விவாதிக்கப்பட்டது. இவ்வழக்கில் உச்ச நீதிமன்றம் 'தனிநபர் சுதந்திரம்' என்ற சொற்களுக்கு பரந்த

1. A.I.R. 1958 S.C. 538
2. A.I.R. 1951 S.C. 327
3. A.I.R. 1951 S.C. 41
4. A.I.R. 1970 S.C. 564
5. A.I.R. 1978 S.C. 597

மற்றும் சாத்தியமாகக் கூடிய (widest possible interpretation) பொருள் விளக்கத்தை கொடுத்தது.

வழக்கின் பொருண்மைகள் வருமாறு :

இவ்வழக்கில் மனுதாரர், மேனகா காந்தியின் பாஸ்போர்ட்டை (கடவுச் சீட்டு) (Passport), 1967–ஆம் ஆண்டின் பாஸ்போர்ட் சட்டத்தின் 10(3)(c) என்ற பிரிவின் கீழ் மத்திய அரசு பறிக்க உத்திரவிட்டது (impounded). 'பொது மக்களின் நலனைக்' (in the interest of general public) கருதி மேற்கண்டவாறு ஒருவருடைய பாஸ்போர்ட்டை பறிமுதல் செய்யலாம், என மேற்படி சட்டம் மத்திய அரசுக்கு அதிகாரம் அளித்துள்ளது. ஆனால் மத்திய அரசு தனது, மேற்படி உத்திரவிற்குண்டான காரணங்களை, அதே பொதுமக்களின் நலனைக் கருதி, வெளியிட மறுத்துவிட்டது.

இவ்வாறு தன்னுடைய பாஸ்போர்ட்டை பறித்ததற்காக, மேற்படி பிரிவு 10(3)(c)–யானது, அரசியலமைப்பிற்குட்படாதது, செல்லாதது என்று பின்வரும் அடிப்படைகளின் கீழ் மேனகா காந்தி உச்ச நீதிமன்றத்தில் மனுச் செய்தார்.

1. ஒரு நபரின் பாஸ்போர்ட்டை பறிப்பதற்கு முன், அவருக்கு, அவருடைய வாதத்தினை எடுத்துச் சொல்ல ஒரு சந்தர்ப்பம் அளிக்கப்பட வேண்டும். ஆனால் அவ்வாறு அளிக்காமல், மேற்படி பிரிவு 10(3)(c)–யானது, ஏதேச்சதிகாரப் போக்குடன் செயல்படுவதால், அது அரசியல மைப்புச் சட்டம் சரத்து 14–அய் மீறுவதாக உள்ளது. **(சரத்து 14–சட்டத்தின் முன் அனைவரும் சமம் மற்றும் சட்டத்தின் சம பாதுகாப்பு)**

2. ஒரு நபரின் பாஸ்போர்ட்டை பறிப்பது, அவர் சுதந்திரமாக வேறு எங்கும் செல்லும் (வெளிநாடு) அடிப்படை உரிமையை பறிப்பதாகும். **சரத்து 21, சட்டத்தால் உண்டாக்கப்பட்ட நடைமுறைகளில் தவிர, எந்த நபரின் வாழ்க்கையையும் அல்லது தனி நபர் சுதந்திரத்தையும் பறித்தல் கூடாது,** என்று கூறுகிறது. ஆனால் மேற்படி பிரிவு 10(3)(c) ஆனது, அவ்வாறு தனிநபர் ஒருவரின், பாஸ்போர்ட்டை பறிப்பதற்கு 'சட்டத்தால் உண்டாக்கப்பட்ட நடைமுறைகள்' (procedures established by law) குறித்து எதையும் கூறவில்லை. எனவே மேற்படி பிரிவு 10(3)(c), சரத்து 21–யும் மீறுவதாக உள்ளது.

3. மேலும், மேற்படி பிரிவு 10(3)(c)–ஆனது, சரத்துக்கள் 19(1)(a) மற்றும் 19(1)(g)-யை மீறுவதாக உள்ளது. மேற்படி சரத்து 19(1)(a), பேச்சு மற்றும் கருத்து வெளியீட்டு சுதந்திரத்தைக் கூறுகிறது. அதுபோல் சரத்து 19(1)(g), ஒருவர் எந்தத் தொழில், பணி மற்றும் வணிகம் அல்லது வியாபாரத்தைச் செய்யும் சுதந்திரத்தைக் குறிப்பிடுகிறது. சரத்து 19(1)(a)–யின் மீதான நியாயமான தடைகளை சரத்து 19(2)–ம், சரத்து 19(1)(g)–யின் மீதான நியாயமான தடைகளை சரத்து 19(6)–ம் விதிக்கிறது. ஆனால் பிரிவு 10(3)(c)–யில் மேற்படி சரத்து 19(2) அல்லது 19(6)–ல்

கூறப்பட்டுள்ள நியாயமான தடைகளைத் தவிர, வேறு சில தடைகளும் உள்ளது. இவை அரசியலமைப்பால் அனுமதிக்கப்படாத தடைகள். எனவே, பிரிவு 10(3)(c)-யானது, சரத்துக்கள் 19(1)(a) மற்றும் 19(1)(g) ஆகியவற்றை மீறுவதாக உள்ளது.

முன்கண்டவாறு, மேனகா காந்தியின் பாஸ்போர்ட்டை பறித்து உத்திர விட்டதற்கு, மத்திய அரசு சரியான காரணம் காட்டவில்லை. எனினும், வழக்கு நடவடிக்கைகளின் பொழுது, மத்திய அரசு சார்பாக ஒரு பிரமாணப் பத்திரிக்கை (Affidavit) தாக்கல் செய்யப்பட்டது. அதில், 'ஒரு விசாரணைக் கமிஷனின் முன்னிலையில் நடைபெறும் விசாரணையில், மேனகா காந்தி ஆஜராவது அவசியமாக இருப்பதால், அவரது பாஸ்போர்ட் பறிக்கப்பட்டதாக' காரணம் காட்டப்பட்டிருந்தது. மேலும், மேனகா காந்தி தனது தரப்பு வாதத்தை எடுத்துச் சொல்வதற்கான வாய்ப்பு குறித்து, அரசின் தலைமை வழக்குரைஞர் (Attorney - General) பதிலுரை (Statement) ஒன்றையும் தாக்கல் செய்தார். அதில், மேனகா காந்தி, பாஸ்போர்ட் பறிக்கப்பட்டது தொடர்பாக தனது தரப்பு வாதங்களை எடுத்துச் சொல்லலாம் என்றும், அவ்வாதங்கள் சட்டப்படியான முறையில் விரைவாக கேட்கப்படும், என்றும் குறிப்பிட்டிருந்தார்.

இங்குதான் பொருள் விளக்கத்தின் பணி ஆரம்பமானது. மேனகா காந்தியிடமிருந்து பாஸ்போர்ட் பறிக்கப்பட்டதற்குண்டான காரணங்களை, அவரிடம் முன்னதாகவே கூறாமல் நிறுத்தி வைத்தது, அரசின் நியாயமற்ற செயலாகும், என உச்ச நீதிமன்றம் கூறியது. இதற்காக, சரத்து 21-ன்படி, சட்டத்தால் உண்டாக்கப்பட்ட நியாயமான நடைமுறை ஏதும் கடைப்பிடிக்கப்படவில்லை. இதனால், சரத்து 14-ன் கீழான, ஒருவருக்கு 'சட்டத்தின் முன் சமம்; சட்டத்தின் சம பாதுகாப்பு' என்பது மறுக்கப்படுகிறது.

அதாவது, ஒருவர் வெளிநாடு செல்லும் உரிமையை, அது குறித்து அவரது வாதத்தை கூறுவதற்கென சந்தர்ப்பம் ஏதும் அளிக்காமலேயே, பறிக்கும் நடைமுறை, சட்டத்தால் உண்டாக்கப்பட்ட நடைமுறை ஆகாது; மேலும் அது நியாயமற்றதாகும், எனப்பட்டது. காரணங்கள் ஏதும் காட்டாமலேயே பாஸ்போர்ட்டை பறிமுதல் செய்யப் பிறப்பிக்கப்பட்ட உத்திரவு, சட்ட வகைமுறைகளை (பாஸ்போர்ட் சட்டம்) மீறுவதோடு மட்டுமல்லாமல், 'எவரது வாதமும் கேட்கப்படாமல் விட்டு விடப்படக் கூடாது' (audi alterm partem -no one shall be left unheared) என்ற இயற்கை நீதியையும் (Natural Justice) மீறுவதாக உள்ளது. எனவே, பாஸ்போர்ட் சட்டத்தில், ஒருவரது வாதத்தை கேட்ட பின்னரே முடிவெடுக்க வேண்டும், என்பதற்குண்டான வாசகங்கள் ஏதும் இல்லையென்றாலும், அங்கே 'இயற்றாச் சட்டம்' (Common Law) கூறும் இயற்கை நீதியினைப் பின்பற்ற வேண்டும். சட்டமன்றம் சொல்லாமல் விட்டுவிட்டதை இயற்றாச் சட்டம், இயற்கை நீதியின் வாயிலாக நிரப்பக் கூடியது. ஏனெனில், பாஸ்போர்ட்டை பறிக்க வகை செய்யும் பிரிவு 10(3)(c)-யின் கீழான அதிகாரம், நீதிப்போல்வு அதிகாரமாகும்

(quasi-judicial power). எனவே, அதற்கு இயற்கை நீதிக் கொள்கைகள் நன்கு பொருந்தி வரும். ஒரு செயல் நியாயமானது என்று சொல்லப்பட வேண்டுமெனில், பாதிக்கப்பட்ட நபருக்கு, அவரது வாதத்தினை கூற ஒரு வாய்ப்பளிக்கப்பட வேண்டும்; கேட்காமல் விட்டுவிடக் கூடாது. எனவே, மேற்படி பாஸ்போர்ட் சட்டத்தில், அவ்வாறு கேட்பதற்குண்டான அதிகாரம் உட்கிடையாக உள்ளது, என்றே கருத வேண்டும். மேற்கண்ட நடைமுறைகள் குறித்த சட்ட வகைமுறைகள், தேவையான உட் குறிப்பின் மூலம் (necessary implication) மேற்படி பாஸ்போர்ட் சட்டத்தில் சேர்க்கப்பட்டிருந்தால், ஒரு பாஸ்போர்ட்டை பறிப்பதற்காக உண்டாக்கப்பட்ட நடைமுறையானது, சரியானதாகவும், நியாயமானதாகவும் ஆகிவிடும். மேலும் ஏதேச்சதிகாரப் போக்கு மற்றும் நியாயமற்ற தன்மை போன்றவைகளை முன்னிறுத்தி எவ்வித வினாவையும் எழுப்ப முடியாது, என **விரிவான பொருள் விளக்கம் கொடுக்கப்பட்டது.**

இறுதியாக, இந்தியத் தலைமை வழக்குரைஞர் சமர்ப்பித்த பதிலுரையின் படி, மேனகா காந்தியின் வாதத்தைக் கேட்பதற்கு மத்திய அரசு ஒப்புக் கொண்டது. இதனால், மேற்படி 10(3)(c)–யின் கீழான உத்திரவில் இருந்த குறைபாடு நீக்கப்பட்டு விட்டது என்றும், அவ்வுத்திரவு, தற்பொழுது சட்டத்தால் உண்டாக்கப்பட்ட நடைமுறைகளின்படி உள்ளதென்றும், உச்ச நீதிமன்றத்தின் பெரும்பான்மை நீதியரசர்கள் தீர்ப்பு கூறினர்.

மேற்படி வழக்கு விறுவிறுப்பாக ஆரம்பித்தது. சுறுசுறுப்பாக நடந்தது. பரபரப்பான பொருள் விளக்கங்கள் அளிக்கப்பட்டன. ஆனால் இறுதியில் பொசுக்கென்று முடிந்தது. ஏனெனில், **"எனது வாதம் கேட்கப்படவில்லை ! எனது வாதம் கேட்கப்படவில்லை !!"** என மேனகா காந்தி திரும்பத் திரும்பக் கூறியதை அடுத்து, மத்திய அரசு அவரது வாதத்தை கேட்க முன்வந்ததுதான். இதனால், சட்டத்தால் உண்டாக்கப்பட்ட நடைமுறை, சரத்து 21–ன்படி ஏற்பட்டு விடுகிறது; இவ்வாறு ஏற்பட்டு விடுவதால், சரத்து 14–ன் கீழான சட்டத்தின் சம பாதுகாப்பும் கிட்டி விடுகிறது; இவற்றின் காரணமாக, சரத்து 19(1)(a) மற்றும் சரத்து 19(1)(g) மீது, முறையே சரத்து 19(2) மற்றும் ஷரத்து 19(6) விதிக்கும் தடைகள் குறித்து பேச்சு எழுவதில்லை. எனவே, இவற்றின் அடிப்படையில், குறை நீக்கப்பட்ட பிரிவு 10(3)(c)–யின் கீழான மேற்படி பாஸ்போர்ட் பறிமுதலுக்குண்டான உத்திரவு, மேற்கண்ட சரத்துக்கள் எவற்றையும் மீறுவதாக இல்லை என்று தீர்ப்பு கூறப்பட்டது.

எனினும் இவ்வழக்கில்தான், 'வாழ்வுரிமை' (right to live) வெறுமனே உடல்ரீதியாக மட்டுமல்ல; அது மனித மாண்புடனும், மரியாதையுடன் (human dignity) வாழ்வதையும் உள்ளடக்கும், என 'வாழ்வுரிமைக்கு' புதிய வடிவத்தை உச்ச நீதிமன்றம் கொடுத்தது.[1]

1. விரிவான வழக்குதான். என்ன செய்வது? சுருக்கினால் சரிவர புரியாமல் போய்விடும். குழப்பம்தான் எஞ்சும்.

Francis Coralie v. Union Territory of Delhi[1]

இவ்வழக்கில், 'வாழ்வுரிமை' என்பது உடலளவு உயிர் வாழ்வது மட்டுமல்ல, மனித மாண்புடனும் வாழ்வது, என்ற மேற்படி மேனகா காந்தியின் வழக்கில் கூறப்பட்டே கருத்தே வலியுறுத்தப்பட்டது.

Olga Tellis v. Bombay Municipal Corporation[2]

இப்பிரபலமான வழக்கு **'நடைபாதை வசிப்பாளர்கள் வழக்கு' (Pavement Dwellers' Case)** எனப்படுகிறது.

இதில், சரத்து 21–ல் கூறப் பட்டுள்ள வாழ்வு (live) என்பதில் 'வாழ்க்கைத் தொழில்' (livlihood- பிழைப்பு) செய்யும் உரிமையும் உள்ளடங்கும், என உச்ச நீதிமன்றம் பொருள் விளக்கம் கொடுத்தது.

Kharak Singh v. State of Madhya Pradesh[3]

இவ்வழக்கில், கஹரக்சிங் என்பவர் கூட்டுக் கொள்ளையில் ஈடுபட்டார் என கைது செய்யப்பட்டபின், போதிய சான்றுகள் இல்லை என்ற அடிப்படையில் நீதிமன்றம் அவரை விடுதலை செய்தது.

ஆனால், தினமும் இரவு நேரங்களில், அவர், வீட்டில் இருக்கின்றாரா என காவல் துறையினர், அவர் வீட்டை ரகசியமாக கண்காணித்தது மற்றும் கதவைத் தட்டி அவரின் தூக்கத்தை கலைத்தது போன்றவை அடிப்படை உரிமையான தனிநபர் சுதந்திரத்தை (personal liberty) மீறிய செயல் என உச்ச நீதிமன்றம் பொருள் விளக்கமளித்தது.

முடிவுரை :

அரசியலமைப்பிற்கு, அதுவும் அடிப்படை உரிமைகளுக்கு பல வழக்குகளில் உச்ச நீதிமன்றம் பொருள் விளக்கமளித்துள்ளது. ஏனென்றால், சமுதாயம் அனுதினமும் மாறிக் கொண்டு வருகிறது. நாளை என்ன நடக்கும் என்பது யாருக்கும் தெரியாது. வருவது அறிந்தும் முன்கூட்டியே சட்டங்களை இயற்றி வைத்துக் கொள்ளவோ, அல்லது உள்ள சட்டங்களில் உடன் திருத்தங்களை செய்து வைத்துக் கொள்ளவோ முடியாது.

இன்று, ஒன்று 'சரி' என்பது நாளை 'தவறாக' ஆகி விடுகிறது. எனவே, தக்க தருணங்களில் கை கொடுக்க, சட்டப் பொருள் விளக்கம்தான் உதவிக்கு வருகிறது.

1. A.I.R. 1978 S.C. 597
2. A.I.R. 1986 S.C. 180
3. A.I.R. 1967 S.C. 1836

(ஆ) அடிப்படை உரிமைகளும் அரசு நெறிமுறையுறுத்தும் கொள்கைகளும் - இசைவமைந்த பொருள் விளக்கம் [Fundamental Rights and Directive Principles of State Policy - A Harmonious Construction]

73. How can the fundamental rights and the directive principles of State Policy of Constitution be construed harmoniously? Explain. (அரசியலமைப்பின் அடிப்படை உரிமைகள் மற்றும் அரசு நெறி முறையுறுத்தும் கொள்கைகள் எவ்வாறு இசைவாகப் பொருள் கொள்ளப் படுகின்றன ? விளக்குக.)

(அல்லது)

When repugnancy arises between the Fundamental Rights and Directive principles of State Policy which will prevail? Which rule of interpretation must be followed? (அடிப்படை உரிமைகளுக்கும், அரசின் நெறிமுறைவுறுத்தும் கொள்கைகளுக்குமிடையே முரண் பாடு தோன்றும் பொழுது, எது மேலோங்கி நிற்கும் ? எப்பொருள் விளக்க விதி கையாளப்பட வேண்டும் ?)

இசை-வமைந்த பொருள் விளக்கம் (Harmonious Construction):

சட்டமொன்றில், இரண்டு முரண்பட்ட சட்டப் பிரிவுகள் இருப்பின், அவை இரண்டும் ஒன்றிணைக்கப்பட்டு, அவற்றிற்கு இசைவான பொருள் விளக்கம் காணலே, இசைவமைந்த பொருள் விளக்கம் என்கிறோம்[1]. இங்கு எதற்காக 'இசைவமைந்த பொருள் விளக்கம்' மூக்கை நுழைக்கிறது என்றால், அரசியலமைப்பு சட்டம் கூறும் அடிப்படை உரிமைகளும், அதே அரசியலமைப்புச் சட்டம் கூறும் அரசு நெறி முறையுறுத்து கொள்கைகளும் முரண்பாடானவை ஆகும். அவற்றினை, ஒன்றிற்கொன்று இயைந்த முறையில் பொருள் விளக்கமளிக்க, இசைவமைந்த பொருள் விளக்க விதி பயனாகிறது.

அடிப்படை உரிமைகள் மற்றும் அரசு நெறிமுறையுறுத்துக் கொள்கைகள் - ஒரு சிறு விளக்கம் :

எந்நாட்டில், மக்களுக்கென்று சில சுதந்திரங்களும், அடிப்படை உரிமைகளும் கொடுக்கப்பட்டுள்ளனவோ, அந்நாடு மக்களாட்சி நாடு எனப்படுகிறது. இந்தியா

1. இது குறித்து நாம் ஏற்கனவே இந்நூலின் பக்கம் எண். 77-ல் கண்டுள்ளோம்.

ஒரு மக்களாட்சி நாடு. எனவே, இந்திய அரசியலமைப்புச் சட்டமானது, தனது பகுதி III–ன் வாயிலாக, அதன் குடிமக்களுக்கு சில அடிப்படை உரிமைகளை வழங்கியுள்ளது. இவற்றையெல்லாம் நாம் சென்ற பகுதிகளில் விரிவாகக் கண்டோம்.

அதே சமயத்தில், ஒரு நாட்டிற்கு அரசியல் சுதந்திரம் மட்டும் போதாது. அடிப்படை உரிமைகளும், சுதந்திரங்களும் மட்டும், மக்களின் வளமாக வாழ்வதற்கு வழி சேர்த்து விடுமா ? எனவே, சமூகப் பொருளாதார நிலையில் மக்கள் சுதந்திரம் பெற்றாக வேண்டும். இல்லையென்றால் மக்களாட்சியின் கொள்கைகள், நோக்கங்கள் நிறைவேறாமல் போய், அரசியல் சுதந்திரம் கூடப் பொய்த்துப் போகும். மக்கள் பசிக்கும் பட்டினிக்கும் போராடினால், அவர்களுக்கு, தங்கள் அடிப்படை உரிமைகள் மீது ஆர்வம் இருக்குமா? எனவே, ஒரு அரசு எந்த சமூகப் பொருளாதார நெறியில் நின்று, மக்களுக்கு உபயோகமாக செயல்பட வேண்டும் என்று விளம்பும் கொள்கைகளே, **'அரசு நெறி முறையுறுத்தும் கொள்கைகளாகும்'**. அக்கொள்கைகளை, நமது இந்திய அரசியலமைப்புச் சட்டமானது தனது **IV-வது பகுதியின்** வாயிலாக அரசுக்கு வழங்கியுள்ளது. அவற்றின் வழியில் நின்று, அரசு தனது மக்களுக்கு நல்லாட்சி வழங்க வேண்டும். உதாரணமாக, குழந்தைகளுக்கு இலவச மற்றும் கட்டாயக் கல்வி முறையினை ஏற்படுத்த வேண்டுமென, **சரத்து 45** அரசை நெறிமுறையுறுத்துகிறது. இதுவும் ஒரு அரசு நெறி முறையுறுத்தும் கொள்கையே. இவ்வாறு 38–வது சரத்திலிருந்து 51–வது சரத்து வரை உள்ளன.

மேற்கண்ட இரண்டும் வேறுபடும் விதம் :

அடிப்படை உரிமைகளுக்கும், அரசின் நெறிமுறையுறுத்தும் கொள்கைகளுக்கும் இடையே உள்ள முக்கிய வேறுபாடு யாதெனில், அடிப்படை உரிமைகள், நீதிமன்ற விசாரணைக்குட்பட்டதாகும் (Justifiable). ஆனால் அரசின் நெறிமுறையுறுத்தும் கொள்கைகள், நீதிமன்ற விசாரணைக்குட்பட்டதல்ல (Non-Justifiable). ஏனெனில், அரசுக் கொள்கைகள் அறநெறிகளாக கருதப்படுகின்றன. (Moral Principles). சட்ட நெறிகளாக கருதப்பட முடியாது.

அடிப்படை உரிமைகளுக்கு முரணாக இயற்றப்படும் சட்டங்களை இல்லா நிலையதென அறிவிக்கக் கோரி நீதிமன்றத்தைக் கேட்டுக் கொள்ளலாம். அதன்படி நீதிமன்றம் முரணான அச்சட்டத்தை இல்லா நிலையதென அறிவிக்கும் [சரத்து 13(2)]. ஆனால், அரசு நெறிமுறையுறுத்தும் கொள்கைகளுக்கு முரணாக இயற்றப்படும் சட்டத்தினை இல்லா நிலையதென அறிவிக்கக் கோரி நீதிமன்றத்தை கேட்டுக் கொள்ள இயலாது (சரத்து 27). சுருங்கக்கூறின், அடிப்படை உரிமைகளானது நீதிமன்றத்தால் வலியுறுத்திச் செயல்படுத்தப்படலாம். ஆனால், அரசு நெறிக் கொள்கைகளை நீதிமன்றத்தால் வலியுறுத்திச் செயல்படுத்த முடியாது. உதாரணமாக, ஒருவன் சட்ட முரணாக தடுப்புக் காவலில் வைக்கப்பட்டான் என்றால், அவன் ஆட்கொணர்விக்கும் நீதிப்பேராணையின் வாயிலாக தன் அடிப்படை உரிமையினை நிலைநாட்டிக் கொள்ளலாம். ஆனால் அரசாங்கம் இலவச

மற்றும் கட்டாயக் கல்வி முறையினை அமல்படுத்தவில்லை என்ற காரணத்திற்காக, பாதிக்கப்பட்ட நபர், அரசு தனது நெறிமுறையுறுத்தும் கொள்கையினை பின்பற்றவில்லையெனக் கூறி நிவாரணம் கோரவியலாது.

அடிப்படை உரிமைகளா? அரசு நெறிமுறையுறுத்தும் கொள்கைகளா? - இசைவமைந்த பொருள் விளக்கம் :

மேற்கண்ட இரண்டிற்குமிடையே முரண்பாடு தோன்றினால், எது மேலோங்கி நிற்கும், என்ற வினாவின் விடை, தொடர்ந்து ஏற்பட்ட பல வழக்குகளில் கூறப்பட்ட பொருள் விளக்கத்தின்படி, படிப்படியான மாற்றத்தினை அடைந்தது.

State of Madras v. Champakam Dorairajan[1]

இவ்வழக்கில், அடிப்படை உரிமைகளுக்கும், அரசின் நெறி முறையுறுத்தும் கொள்கைகளுக்கும் இடையே முரண்பாடு தோன்றினால், அடிப்படை உரிமைகள்தாம் மேலோங்கி நிற்கும்; அரசு நெறி முறையுறுத்தும் கொள்கைகள் வலுவிழந்து செல்லுபடியாகாமல் போய்விடும், என உச்ச நீதிமன்றம் பொருள் விளக்கமளித்தது.

State of Bihar v. Kameshwar Singh[2]

இவ்வழக்கில், மேற்படி செண்பகம் துரைராஜன் வழக்கில் கூறப்பட்ட முடிவானது கணிசமான அளவில் மாற்றப்பட்டது. மேற்படி வழக்கில், சரத்து 31–ன் (சொத்துரிமை) பொருளுக்கு உட்பட்டு, பொது நலனிற்காக இயற்றப்பட்ட ஜமீன்தாரி ஒழிப்புச் சட்டம், அடிப்படை உரிமைகளுக்கு முரண்பட்டதாக அமைந்தாலும், 39–வது சரத்தில் உள்ள அரசு நெறிமுறையுறுத்தும் கொள்கைகளின்படி, பொது நல முன்னேற நோக்கங்களுக்காக மேற்படி சட்டம் இயற்றப்பட்டிருப்பதால், அச்சட்டம் செல்லுபடியாகும் என்று தீர்ப்பளிக்கப்பட்டது. இவ்வழக்கில் அடிப்படை உரிமையானது, அரசின் நெறிமுறையுறுத்தும் கொள்கையை சார்ந்து செயல்பட வேண்டும், என்பது இலைமறை காயாக பொருள் விளக்கமளிக்கப்பட்டது. இவ்வழக்கின் மேற்படி தீர்ப்பு, அரசு நெறிமுறையுறுத்தும் கொள்கைகளுக்கு ஒரு சிறப்பிடம் ஏற்பட வழி வகுத்துக் கொடுத்தது.

In Re Kerala Education Bill[3]

இவ்வழக்கில்தான், அடிப்படை உரிமைகளுக்கும், அரசு நெறிமுறையுறுத்தும் கொள்கைகளுக்கும் இடையில், **ஒரு இணக்கமான, இசைவமைந்த பொருள் விளக்கம் தரப்பட வேண்டும்,** என்ற கருத்து தோன்றியது. இவ்வழக்கில், **அரசு** நெறிமுறையுறுத்தும் கொள்கைகளுக்கும், அடிப்படை உரிமைகளுடன் **சம**

1. A.I.R. 1951 S.C. 228
2. A.I.R. 1952 S.C. 352
3. A.I.R. 1957 S.C. 956

அந்துஸ்தை உச்ச நீதிமன்றம் வழங்கி, பின்வருமாறு கூறியது. அதன்படி, அரசு நெறிமுறையுறுத்தும் கொள்கைகள், அடிப்படை உரிமைகளை மீற முடியாதென்றும், அடிப்படை உரிமைகளின் நோக்கம் மற்றும் எல்லையினைத் தீர்மானிக்கும் போது, அரசு நெறிமுறையுறுத்தும் கொள்கைகள் அறவே புறக்கணிக்கப்படக் கூடாது என்றும், மாறாக, அந்த இரண்டினையும் இணைக்கும் , இசைவமைந்த பொருள் விளக்க விதியினைப் பின்பற்றி, இயன்ற அளவு இரண்டிற்கும், அதற்குண்டான விளைவைக் கொடுக்க நீதிமன்றம் முயல வேண்டும், என்றும் உச்ச நீதிமன்றம் கூறியது.

Minarva Mills v. Union of India[1]

இவ்வழக்கில், அரசு நெறிமுறையுறுத்தும் கொள்கைகளுக்கும், அடிப்படை உரிமைகளுக்கும் இடையே உள்ள சமநிலையை (balance) அடிப்படையாகக் கொண்டுதான் நமது அரசியலமைப்பே அமைந்திருக்கிறதென்றும், அவற்றில் ஒன்றுக்கு மட்டும் முழுமையான மேலாதிக்கம் (absolute primacy) கொடுப்பது, அச்சமநிலையைக் குலைப்பதாகும் என்றும், உச்ச நீதிமன்றம் தெள்ளத் தெளிவான பொருள் விளக்கத்தைக் கொடுத்தது.

முடிவுரை :

மேற்கண்டவற்றை காணுறும் பொழுது, அரசியலமைப்பு எனும் உடலுக்கு அடிப்படை உரிமைகள் என்பதும் அரசு நெறிமுறையுறுத்தும் கொள்கைகள் என்பதும், இரு கண்கள் போன்றது, என்பது தெளிவாகிறது. இரண்டும் நன்றாக இருந்தால்தான், காட்சியும் தெளிவாகத் தெரியும். எனவே, முரண்பாடு என்று எழுந்தால், அங்கு மேற்கண்ட இரண்டினையும் இயைந்து இருக்கச் செய்யும் இசைவமைந்த பொருள் விளக்கவிதிதான் பின்பற்றப்பட வேண்டும்.

(இ) மனித உரிமைகளும் அடிப்படை உரிமைகளும் [Human Rights and Fundamental Rights]

74. Human Rights and Fundamental Rights - Write short notes.
(மனித உரிமை மற்றும் அடிப்படை உரிமைகள் – சிறு குறிப்பு எழுதுக.)

முன்னுரை :

அய்க்கிய நாடுகள் சபையின் பொதுச் சபையால், 1948–ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 10–ஆம் நாள் அனைத்துலக மனித உரிமைகளின் பிரகடனம் (The Universal Declaration of Human Rights) வெளியிடப்பட்டது. அதில் பிரகடனப்

1. A.I.R. 1980 S.C. 1789

படுத்தப்பட்டுள்ள மனித உரிமைகளை இந்திய நாடும், தனது அரசியலமைப்பில், பகுதி III-ன் கீழ் அடிப்படை உரிமைகளாக ஏற்றுக் கொண்டது.

மனித உரிமைகள் - விளக்கம் :

தனிமனித சுதந்திரம் மற்றும் சமத்துவம் ஆகியவையே, மனித உரிமைகளின் அடிப்படைத் தத்துவங்களாகும். இத்தத்துவங்கள், நமது இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் அடிப்படை உரிமைகளாக அழகு மிளிர பொலிவுடன் உள்ளது. எனினும் மனித உரிமைகள் பாதிக்கப்பட்டவருக்கு சிறப்பாகவும், வேகமாகவும் தீர்வழி கொடுக்கவும், மனித உரிமைகள் மீறலை விசாரிக்க 'மனித உரிமைகள் நீதிமன்றத்தை' மாவட்டந்தோறும் ஏற்படுத்தவும், இந்திய அரசானது 1993ஆம் ஆண்டில் 'மனித உரிமைகள் பாதுகாப்புச் சட்டத்தை' (The Protection of Human Rights Act, 1993) இயற்றியது.

மனித உரிமைகளும் அடிப்படை உரிமைகளும் :

மேற்படி மனித உரிமைகள் பாதுகாப்புச் சட்டத்தின் 2(1)(d) பிரிவானது **'மனித உரிமைகள்'** என்ற பதத்திற்கு பின்வருமாறு வரையறை தருகிறது. அதன்படி, 'மனித உரிமைகள்' என்பது இந்திய அரசியலமைப்புச் சட்டத்தால் (Constitutional Law of India) உத்திரவாதம் அளிக்கப்பட்டுள்ள அல்லது சர்வதேச நாடுகளின் ஒப்பந்தங்களில் (International Covenants) சேர்க்கப் பட்டுள்ள மற்றும் இந்தியாவில், நீதிமன்றங்களால் அமலாக்கப்படக் கூடிய ஒவ்வொரு மனிதனின் வாழ்க்கை (life), சுதந்திரம் (liberty), சமத்துவம் (equalilty) மற்றும் மனித மாண்பு (dignity) ஆகியவைகள் தொடர்பானவையாகும்.

எனவே, இந்திய அரசியலமைப்பில் அடிப்படை உரிமைகளாக கொடுக்கப் பட்டுள்ள மனித வாழ்க்கை, சுதந்திரம், சமத்துவம், மனித மாண்பு ஆகியவை குறித்த அடிப்படை உரிமைகளே, 'மனித உரிமைகளாக' உயர்த்தி வைக்கப்பட்டுள்ளன.

மனித உரிமைகளின் பொருள் விளக்கம் :

இவ்வாறு உயர்த்தி வைக்கப்பட்டதின் காரணமே, 'அடிப்படை உரிமைகளுக்கு' உச்ச நீதிமன்றம், மனிதனின் மேம்பாட்டைக் கருத்தில் கொண்டு பல வழக்குகளின் தீர்ப்பின் பொழுது வழங்கிய பொருள் விளக்கங்கள்தாம், எனில் அது மிகையன்று. எனவே, அடிப்படை உரிமைகளின் பொருள் விளக்கத்திற்கு பொருந்தக் கூடிய அனைத்து விஷயங்களும், மனித உரிமைகளுக்கும் பொருந்தக் கூடியதாகும். மேலும், மனித உரிமைகள் பிரகடனத்தின் சரத்துக்களின் உதவியையும் நாடலாம்.

மேனகா காந்தியின் வழக்கில், உச்ச நீதிமன்றம் கூறிய பொருள் விளக்கமானது 'மனித உரிமைகள் பாதுகாப்பின் விளக்கத்திற்கு வித்திட்டது' என்று கூறலாம்.

மனித உரிமைகள் மீறல் - முக்கிய வழக்குகள் :

மனித உரிமைகள் மீறல், இன்று பல விதங்களில் நடக்கிறது. அவற்றில் சிறைக் கற்பழிப்பு, சிறை மரணம், காவலதிகாரிகளின் சித்ரவதை போன்ற மனித உரிமை மீறல்கள் முதன்மை இடம் வகிக்கிறது. அவ்வாறு மீறப்படும் பொழுதெல்லாம், மனித உரிமைகளை நிலைநிறுத்தும் வண்ணம் உச்ச நீதிமன்றம் பல வழக்குகளில் பொருள் விளக்கமளித்துள்ளது.

Nandhini Satpathi v. P.L. Dhani[1]

இவ்வழக்கில், உச்ச நீதிமன்றம், காவல்துறையினர் விசாரிக்கும்பொழுது, குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு தன்விருப்பப்படி, ஒரு வழக்கறிஞரின் சேவையைப் பெறும் உரிமை உள்ளதென்று தீர்ப்பளித்தது.

Sunil Butra's (First) Case[2]

இவ்வழக்கில், கைதிகளுக்கு கை விலங்கிட்டது, மனித உரிமைகள் பிரகடனத்தின் கீழ் நிருணயிக்கப்பட்ட சரத்து 5-ன்படி, ஒரு வகைச் சித்ரவதை, கொடுமை அல்லது இழிவான நடைமுறையாகக் கருதப்பட்டது.

Sunil Butra's (Second) Case[3]

இவ்வழக்கில், கைதிகளைத் தனிமையில் சிறை வைத்தல் தவிர்க்கப்பட வேண்டுமென்றும், அது மனிதர்களால் மனிதர்களுக்கு செய்யப்படும் கொடுமை என்றும் உச்ச நீதிமன்றம் கூறியது. மேலும் **நீதிபதி கிருஷ்ண அய்யர்** அவர்கள், தனது தீர்ப்பில், **"இன்று, இந்தியாவில் மனித உரிமைகளின் சட்ட ஞானம், அரசியலமைப்புக்குட்பட்ட அந்தஸ்தைப் பெற்றுள்ளது[4]"** எனச் சிறப்பாகச் சுட்டிக் காட்டுகிறார்.

Gowri Shankar Sharma v. State of Uttar Pradesh[5]

இவ்வழக்கில், குற்றம் புரிந்ததாகச் சந்தேகிக்கப்பட்டவரிடம் ஒப்புதல் வாக்குமூலம் பெறுவதற்காக, அவரை மிகக் கடுமையாக அடித்ததற்கும், இலஞ்சம் தர மறுத்ததற்கென வேண்டுமென்றே சித்ரவதை செய்து, காவலிருப்பு சாவில் முடிந்ததற்காகவும், இரண்டு காவலர்கள் உச்ச நீதிமன்றத்தால் தண்டிக்கப் பட்டனர்.

---

1. A.I.R. 1978 S.C. 1025 : 1978 Cri. L.J. 968
2. A.I.R. 1979 S.C. 1675 : 1978 Cri. L.J. 1741
3. A.I.R. 1980 S.C. 1579 : 1980 Cri. L.J. 1099
4. "Today, human rights jurisprudence in India has Constitutional Status" - Krishna Iyer, J.
5. A.I.R. 1990 S.C. 709

இந்நிலையில் மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கென்றே மத்திய அரசு 1993–ஆம் ஆண்டில் 'மனித உரிமைகள் பாதுகாப்புச் சட்டத்தை' கொண்டு வந்த பிறகு, உச்ச நீதிமன்றத் தீர்ப்புகளில் மனித உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும்; அதற்கு, உகந்த வகையில் பொருள் அளிக்கப்பட வேண்டும் என்ற வலுவான கருத்து தெரிந்தது.

Smt. Neelapathi Pohera v. State of Orissa[1] என்ற வழக்கில், உச்ச நீதிமன்றம் மனுதாரரின் 22 வயதான மகன் காவலிருப்பில் மரணமடைந்த போது, மனுதாரருக்கு ரூ. 1.5 இலட்சம் இழப்பீட்டுத் தொகையாக மாநில அரசு வழங்க வேண்டுமென உத்திரவு பிறப்பித்தது. மேலும், அரசியலமைப்பால் உத்திரவாதமளிக்கப்பட்டுள்ள மனித உரிமைகள் மற்றும் அடிப்படை சுதந்திரத்தை மீறியதற்காக இழப்பீட்டுத் தொகை வழங்கப்படுவதுதான், இத்தகைய உரிமைகளை அமுலாக்கம் செய்யவும், பாதுகாக்கவும், ஏற்றுக் கொள்ளப்பட்ட பரிகாரம் ஆகும், என்றும் உச்ச நீதிமன்றம் தெளிவாகக் கூறியது.

Kodath Mazdoor Setna Sangh v. State of Madhya Pradesh[2] என்ற வழக்கில், உச்ச நீதிமன்றம், அப்பாவி பழங்குடி மக்களைச் சித்ரவதை செய்து, கை விலங்கிட்ட, அதிகாரிகள் எவ்வளவு உயர்ந்ததாகவோ அல்லது தாழ்ந்ததாகவோ இருப்பினும், அதை பாரபட்சமின்றி புலனாய்வு செய்து தண்டனை அளிக்க வேண்டுமென மத்திய புலனாய்வு துறைக்கு (CBI), அறிவுறுத்தியுள்ளது.

மேலும், **Dilip K. Basu v. State of West Bengal**[3] என்ற மிக முக்கியமான வழக்கில், ஒரு நபரை கைது செய்யும் பொழுதோ, அல்லது காவலில் வைக்கும் பொழுதோ, காவல்துறையினர் சம்பந்தப்பட்டவர்களின் மனித உரிமைகளை துளியும் மீறக் கூடாது என்பதற்காக, அவர்களுக்கு 11 கட்டளைகளை உச்ச நீதிமன்றம், விதித்தது.

பிறவகை மனித உரிமை மீறல்கள் :

மேலே கண்ட காவல்துறையினரின் மனித உரிமைகள் மீறல் மட்டுமல்லாது, பணி செய்யும் இடங்களில் பாலியல் உணர்வைத் தூண்டக்கூடிய விஷமங்கள் (Sexual harassment), கொத்தடிமைகளாக்கல், தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினருக்கு எதிரான வன்கொடுமைகள், சுற்றுப்புற சூழலை மாசுபடுத்தல் என பல வகைகளில், இன்று மனித உரிமை மீறல்கள் நடக்கின்றன. அவற்றையெல்லாம் தடுக்குமளவிற்கு தக்க பொருள் விளக்கம் கொடுத்து, உச்ச நீதிமன்றம் செயல்படுகிறது.

1. A.I.R. 1993 S.C. 1960 : 1993 Cri. L.J. 1099
2. A.I.R. 1995 S.C. 31 : 1995 Cri. L.J. 508
3. A.I.R. 1997 S.C. 3017

முடிவுரை :

இன்னின்னவை மனித உரிமைகள் என மனித உரிமைகள் பாதுகாப்புச் சட்டம் கூறுகிறது, என மேலே கண்டோம். ஆனால் அது ஒரு நிகழ்ச்சி எப்பொழுது மனித உரிமைகள் மீறலாகிறது என்று கூறவில்லை. அதாவது ஒரு செயல், சுதந்திரத்தை மீறுகிறதா, என்பதை அறிவதற்கு உண்டான நிகழ்வுளைப் பற்றி மேற்படி சட்டம் மௌனம் சாதிக்கிறது. எனவே, மனித உரிமைகளின் தாயான, அடிப்படை உரிமைகள் தொடர்பான வழக்குகளில் அளிக்கப்பட்ட பொருள் விளக்கமும், அனைத்துலக மனித உரிமைகளின் பிரகடன விதிகளும், மனித உரிமைகளின் பொருள் விளக்கத்திற்கு வழி காட்டுகிறது, என்பதை நாம், மேற்கண்ட சில வழக்குகள் மூலம் தெரிந்து கொண்டோம். எனவே, மனித உரிமைகளின் பொருள் விளக்கம், அடிப்படை உரிமைகளின் பொருள் விளக்கத்தை சார்ந்து நிற்கிறது, எனலாம்.

-o0o-

15

சட்டமியற்றும் அதிகார ஒப்படைவின் விளைவாக செய்யப்பட்ட விதியாக்கத்தின் மீதான பொருள் விளக்கம் [Interpretation of Delegated Legislation]

75. Delegated legislation - Write short notes. (விதியாக்கம் – சிறு குறிப்பு எழுதுக.)

(அல்லது)

Subordinate legislation - Write short notes. (கீழ்நிலை சட்டமியற்றல் – சிறு குறிப்பு எழுதுக.)

சட்டமியற்றும் அதிகார ஒப்படைப்பு (Delegation of Legislative Power) – விளக்கம்:

அரசின் தலையாய அங்கங்கள் மூன்று. அவற்றின் அதிகாரங்கள் முறையே சட்டமியற்றுதல் (Legislative), ஆட்சி நிருவாகம் செய்தல் (Executive), நீதி நிறுத்தல் (Judiciary). அந்த வகையில் சட்டமியற்றும் அதிகாரம் சட்டமன்றத்திடம் தான் (பாராளுமன்றத்திடம்) உள்ளது என்றாலும், நடைமுறையில் ஆட்சி நிருவாகத் துறை அங்கம், சட்டமியற்றும் பணியை மேற்கொள்ள வேண்டிய நிர்ப்பந்த நிலை ஏற்பட்டது. சட்டமியற்றும் அதிகாரத்தை சட்டமன்றம், தன்னால் இயற்றப்பட்ட சட்டத்தின் வாயிலாக ஆட்சி நிருவாக அங்கத்திற்கும் (Executive organ of the State) மற்றும் நிருவாகத்துறை முகவர் நிலைகளுக்கும் (Administrative Agencies) வழங்குகின்றது. அதாவது ஒப்படைக்கிறது. இவ்வாறு சட்டமியற்றும் அதிகாரத்தை சட்டமன்றம், நிருவாகத்துறைக்கு ஒப்படைப்பதே, **சட்டமியற்றும் அதிகார ஒப்படைப்பு [Delegation of Legislative Power (or) Delegation of Power]** எனப்படுகிறது. இதனை **"விதியாக்கம்" (Delegated Legisla-**

tion) என்றும், "சார்பு சட்ட ஆக்கம்" அல்லது "துணைமை சட்ட ஆக்கம்" அல்லது "கீழ்நிலை சட்டமியற்றல்" (Subordinate Legislation) என்றும் கூறுவர்.

சட்டமியற்றும் அதிகார ஒப்படைப்பு (Delegation of Legislative Power) - வரையறை:

ஒப்படைப்பு என்றால் அதிகாரத்தை ஒருவர் மற்றொருவரிடம் ஒப்படைப்பதாகும். சட்டமியற்றும் அதிகார ஒப்படைப்பு என்றால், சட்டமன்றம் தனது சட்டமியற்றும் அதிகாரத்தை, நிருவாகத் துறையிடம் ஒப்படைப்பதாகும்.

சட்டமியற்றும் அதிகாரத்தை ஒப்படைத்தல் எனும் பதத்திற்கு **அமைச்சர்களின் அதிகாரங்கள் குறித்த டுநோக்மோர் குழு (The Donoughmore Committee on Ministers' Powers)** பின்வரும் இரண்டு பொருள்களைக் கூறுகிறது. அவை (1) பாராளுமன்றத்தினால் ஒப்படைக்கப்பட்ட அதிகாரத்தின் கீழ் நிருவாகத் துறையானது சட்டமியற்றும் பணியை ஆற்றுதல்; (2) இந்தப் பணியை ஆற்றும் பொழுது, நிருவாகத் துறை செய்யும் விதிகள், ஒழுங்குமுறைகள், உபவிதிகள், ஆணைகள் ஆகியவையும் சட்டமியற்றும் அதிகாரத்தை ஒப்படைத்தல் என்ற பெயரிலேயே அழைக்கப்படுகிறது. இந்த இரண்டாவது பொருளை **'விதியாக்கம்'** என்று அழைப்பதே சரியானதாகும். ஏனெனில் ஒப்படைக்கப்பட்ட அதிகாரத்தைக் கொண்டு நிருவாகத்துறை மேற்கண்டவாறு விதிகள், ஒழுங்குமுறைகள், உபவிதிகள், ஆணைகள் ஆகியவற்றைச் செய்கிறது. மேலே கண்ட இரண்டு பொருள்களில் முதற் பொருளே மிகவும் முக்கியமானது.

எந்தச் சட்டத்தின் மூலம் சட்டமியற்றும் அதிகாரமானது சட்டமன்றத்தால் நிருவாகத்துறையிடம் ஒப்படைக்கப்படுகிறதோ, அச்சட்டம் **'தோற்றுவாய் சட்டம்' (Parent Act)** என்று அழைக்கப்படுகிறது.

விதியாக்கத்தின் பல்வேறு வடிவங்கள் (Different forms of Delegated Legislation):

பின்வரும் ஆறு முக்கியமான வடிவங்களில் சட்டமியற்றுத் துறையானது நிருவாகத்துறைக்கு சட்டமியற்றும் அதிகாரத்தை ஒப்படைக்கிறது அவை,

1. மத்திய சட்டமானது சட்டமியற்றும் அதிகாரத்தை மத்திய அரசிடம் ஒப்படைக்கலாம். எடுத்துக்காட்டாக, (i) 1962–ஆம் ஆண்டின் இந்திய பாதுகாப்புச் சட்டத்தின் 3–வது பிரிவு. (ii) 1951–ஆம் ஆண்டின் அனைத்திந்திய பணிகள் சட்டத்தின் 3–வது பிரிவு.

2. மத்திய சட்டமானது சட்டமியற்றும் அதிகாரத்தை மாநில அரசிடம் ஒப்படைக்கலாம். எடுத்துக்காட்டாக, (i) 1878–ஆம் ஆண்டின் அபினி (Opium) சட்டத்தின் 8–வது பிரிவு. (ii) 1923–ஆம் ஆண்டின் இசுலாமியர்கள் வக்ஃப் சட்டத்தின் 2–வது பிரிவு.

3. மத்திய சட்டமானது சட்டமியற்றும் அதிகாரத்தை மத்திய மற்றும் மாநில அரசுகளிடம் ஒப்படைக்கலாம். எடுத்துக்காட்டாக, (i) 1957–ஆம் ஆண்டின் சுரங்கங்கள் மற்றும் தாதுப் பொருட்கள் சட்டத்தின் 13–வது பிரிவானது மத்திய அரசிற்கும், அதே சட்டத்தின் 15–வது பிரிவு மாநில அரசிற்கும் விதிகள் இயற்றும் அதிகாரத்தை ஒப்படைக்கிறது. (ii) 1985–ஆம் ஆண்டின் நிருவாகமுறைத் தீர்ப்பாயங்கள் சட்டத்தின் 35–வது பிரிவி மத்திய அரசிற்கும், 36–வது பிரிவு மாநில அரசிற்கும் விதிகள் இயற்றும் அதிகாரத்தை ஒப்படைக்கிறது.

4. மத்திய சட்டமானது சட்டமியற்றும் அதிகாரத்தை சட்டப் படியான அமைப்புகளிடம் (Statutory bodies) ஒப்படைக்கலாம். எடுத்துக்காட்டாக, (i) 1961–ஆம் ஆண்டின் வழக்கறிஞர்கள் சட்டத்தின் 49–வது பிரிவு இந்திய வழக்கறிஞர்கள் குழுமத்திற்கு (Bar Council of India) மேற்படி சட்டத்தின் கீழ் விதிகள் இயற்றும் அதிகாரத்தை ஒப்படைக் கிறது.

5. மாநில சட்டமானது சட்டமியற்றும் அதிகாரத்தை மாநில அரசிடம் ஒப்படைக்கலாம். எடுத்துக்காட்டாக, 1959–ஆம் ஆண்டின் ஆந்திர பிரதேச பஞ்சாயத்து சமிதிகள் சட்டத்தின் 69–வது பிரிவு மேற்படி சட்டத்தின் நோக்கத்தை நிறைவேற்றும் பொருட்டு விதிகள் இயற்றும் அதிகாரத்தை ஆந்திர பிரதேச மாநிலத்திடம் ஒப்படைக்கிறது.

6. மாநில சட்டமானது சட்டமியற்றும் அதிகாரத்தை சட்டப் படியான அமைப்புகளிடம் (Statutory bodies) ஒப்படைக்கலாம். எடுத்துக்காட்டாக, தமிழ்நாடு மின்சார சட்டமானது, தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு (Tamil Nadu Electricity Board) மேற்படி சட்டத்தின் கீழ் விதிகள் இயற்றும் அதிகாரத்தை ஒப்படைக்கிறது.

விதியாக்கத்தின் மீதான பல்வேறு வரம்புகள் (அல்லது) விதியாக்கத்திற்கு நீதிமன்றங்கள் வழங்கியுள்ள பல்வேறு பொருள் விளக்கக் கொள்கைகள் [Limitations on Delegated Legislation (or) Interpretation of Delegated Legislation]:

இந்திய நாட்டைப் பொறுத்த அளவில், சட்டமியற்றும் பணியை நிருவாகத் துறையிடம் ஒப்படைக்கும் அதிகாரத்தின் மீதான வரம்புகளானது இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் அடங்கியுள்ளது. இந்தியச் சட்டமன்றங்கள் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் மூலமாகத் தங்களுடைய சட்டமியற்றும் அதிகாரங்களைப் பெற்றுள்ளன. எனவே, இந்தியச் சட்டமன்றங்கள், இந்திய அரசியலமைப்பிற்கு உட்பட்டுச் செயலாற்றுதல் வேண்டும். இவ்வாறு, இந்தியச் சட்டமன்றங்கள், இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் கீழ் இயங்குவதால் ஒரு வரம்பிற்குட்பட்டே நிருவாகத்துறையிடம் சட்டமியற்றும் அதிகார ஒப்படைவு செய்ய இயலும். எனவே, இந்தியச் சட்டமன்றங்கள் தங்கள் விருப்பப்படி எல்லா

அதிகாரங்களையும் அதிகார ஒப்படைவு செய்ய இயலாது. அதன் மீது இந்திய அரசியலமைப்புச் சட்டம் உட்கிடையாகவும் வெளிப்படையாகவும் விதித்துள்ள பல்வேறு வரம்புகளை பல்வேறு வழக்குகளில் நீதிமன்றம் எடுத்துக் கூறியுள்ளது. இதுவே விதியாக்கத்தின் மீது நீதிமன்றங்கள் வழங்கியுள்ள பொருள் விளக்கக் கொள்கைகளாக உள்ளன. அவற்றின் தொகுப்பை பின்வருமாறு காண்போமா?

விதியாக்கத்தின் மீதான வரம்புகள் (அல்லது) பொருள் விளக்கக் கொள்கைகள்:

1. அடிப்படை வரம்பாக, சட்டமன்றம் மட்டுமே செய்ய வேண்டிய இன்றியாமையா சட்டமியற்றும் பணியை (Essential Legislative Function), அது நிருவாகத்துறையிடம் ஒப்படைக்க இயலாது. அவ்வாறு செய்தால் அது இந்திய அரசியலமைப்பு சட்டத்திற்கு முரண்பட்டதாகும் என்று **In Re Delhi Laws Act Case**[1] முக்கிய வழக்கில் உச்ச நீதிமன்றம் கூறியது.

2. இன்றியமையாத சட்டமியற்றும் அதிகாரங்களைத் தவிர, மற்ற சட்டமியற்றும் அதிகாரங்களை (Non-essential legislative powers) நிருவாகத்துறை முகவர் நிலைகளுக்கு அதிகார ஒப்படைவு செய்யலாம். அவ்வாறு செய்கையில், நிருவாகத்துறை முகவர் நிலைகள் அச்சட்டத்தின் கீழ் எவ்வாறு முறையாக செயல்பட்டு விதிகளை இயற்றலாம் என்பதற்குண்டான கொள்கைகளை (Policies) தோற்றுவாய் சட்டத்தில் (Parent Act) விளக்கப்பட்டிருக்க வேண்டும்; வழிகாட்டும் நெறிகளும் (Guidelines), தரநிலைகளும் (Standards) கூறப் பட்டிருக்க வேண்டும். இவை இல்லாமல் சட்டமியற்றும் அதிகாரமானது, நிருவாகத் துறை முகவர் நிலைகளிடம் ஒப்படைவு செய்யப்பட்டிருப்பின், அது அரசியலமைப்பு சட்டத்திற்கு முரண்பட்டதாகும் என **In Re Delhi Laws Act Case**[2], **Harishankar Bagla v. State of M.P.**[3] **& Gwalior Rayon Mills v. Asstt. Commissioner of Sales Tax**[4] ஆகிய வழக்குகளில் கூறப்பட்டன.

3. ஓரிடத்தில் நிலவி வரும் சட்டத்தைத் தேர்ந்தெடுக்கும் அதிகாரத்தையும், அதை மற்றோர் இடத்திற்கு இடத்திற்கேற்ப மாறுபாடுகளுடனோ (modifications) அல்லது கட்டுவரம்புகளுடனோ (restrictions) விஸ்தரிக்கும் அதிகாரத்தை நிருவாகத்துறை முகவர் நிலைகளுக்குச் சட்டமன்றம் வழங்கலாம். ஆனால் சட்டத்தைத் தேர்ந் தெடுத்து மற்றோர் இடத்திற்கு விரிவுபடுத்துகையில் அதன் இன்றியமை யாத தனிச் சிறப்பியல்புகளை (essential features) மாறுபடுத்துதல் கூடாது. இவ்வாறு செய்தல், அரசியலமைப்புச் சட்டத்திற்கு முரண்பட்டதாகும் என்று **In Re Delhi Laws Act Case**[5] வழக்கில் கூறப்பட்டது.

1. A.I.R. 1951 S.C. 332
2. Ibid
3. A.I.R. 1954 S.C. 465
4. A.I.R. 1974 S.C. 1660
5. Supra foot note 1

4. தோற்றுவாய்ச் சட்டத்தைத் (Parent Act) திருத்தும் அதிகாரத்தையோ, நீக்கம் செய்யும் அதிகாரத்தையோ சட்டமன்றம் நிருவாகத்துறை முகவர் நிலைகளுக்கு வழங்குதல் கூடாது என **In Re Delhi Laws Act Case**[1], **Makhan Singh v. State of Punjab**[2] வழக்குகளில் கூறப்பட்டது.

5. சட்டமன்றம் ஒப்படைத்த சட்டமியற்றும் அதிகாரங்களைக் கொண்டு நிருவாகத்துறையானது **வருமேவு விளைவு (Prospective Effect)** கொண்ட சட்டங்களைத்தான் செய்ய வேண்டுமே தவிர, **முன்மேவு விளைவு (Retrospective Effect)** அளிக்கும் வண்ணம் சட்டங்களைச் செய்தல் கூடாது. அதாவது நிருவாகத்துறை இயற்றிய விதிகளானது, அது இயற்றப்பட்ட தேதிக்கும் முன்னதான ஒரு தேதியிலிருந்து அமலுக்கு வரத்தக்கதாக இருக்கக் கூடாது; அது இயற்றப்பட்டுள்ள தேதியிலிருந்து அமலுக்கு வரத்தக்கதாகத்தான் இருத்தல் வேண்டும் என **M.L.Bagga v. Murhar Rao**[3] வழக்கில் கூறப்பட்டது.

6. வரி விதிக்கும் அதிகாரம் சட்டமன்றத்திற்கே உரித்த பணியாகும். அதை நிருவாகத்துறையிடம் ஒப்படைக்கக் கூடாது. ஒரு சட்டமன்றம் இயற்றும் சட்டங்கள் மூலமாகத்தான் வரி விதிக்கப்பட வேண்டும். (எனினும், சில பொருட்களை வரி விதிப்பிலிருந்து விலக்கு அளிக்கவும், மேலும் சில பொருட்களை வரி விதிப்பின் வரம்பிற்குள் கொண்டு வரவும், வரி வீதத்தின் அளவை நிர்ணயிக்கவும் அரசிற்கு (அதாவது நிருவாகத்துறைக்கு) அதிகாரம் அளிக்கலாம். இக்கருத்துக்கள் **Orient Weaving Mills v. Union of India**[4], **Banarasidas v. State of M.P.**[5], **Banglore W.C.Mills v. Banglore Corporation & Devidas v. State of Punjab**[6] ஆகிய வழக்குகளில் கூறப்பட்டன.

7. ஒரு செயலைக் குற்றமெனக் கூறி, அதற்கு தண்டனை விதிக்கும் சட்டங்களை இயற்றுவது, சட்டமன்றத்திற்கு மட்டுமுள்ள அதிகார மாகும். அதனை அதிகார ஒப்படைவு மூலம் நிருவாகத்துறையிடம் அளிக்க முடியாது. அதாவது நிருவாகத்துறையானது, தண்டனை விதிக்கும் சட்ட விதிகளை இயற்ற முடியாது. எடுத்துக்காட்டாக, இந்திய தண்டனைச் சட்டத்தை குறிப்பிடலாம். இச்சட்டத்தின் கீழ் விதிகள் இயற்றும் அதிகாரத்தை நிருவாகத்துறையிடம் ஒப்படைக்க முடியாது.

1. A.I.R. 1951 S.C. 332
2. A.I.R. 1964 S.C. 381
3. A.I.R.1956 Hyd. 35
4. A.I.R. 1963 S.C. 98.
5. A.I.R. 1958 S.C. 909.
6. A.I.R. 1967 S.C. 1895.

8. நீதிமன்றங்களின் அதிகாரவரம்பை விலக்கும் வண்ணம் விதிகள் எதையும் சட்டமியற்றும் அதிகார ஒப்படைவின் மூலம் நிருவாகத்துறை செய்ய முடியாது. ஏனெனில் இது முழுக்க முழுக்க சட்டமன்றத்திற்கே உரிய இன்றியமையாத சட்டமியற்றும் அதிகாரமாகும்.

9. சட்டமியற்றும் அதிகார ஒப்படைவின் மூலம் நீதிமுறை மறு ஆய்வின் (Judicial Review) எல்லையை விலக்க அல்லது கட்டுப்படுத்த நிருவாகத் துறையால் முடியாது.

10. நிருவாகத்துறையானது, பிற மாநிலங்களில் நிலவும் சட்டங்களை ஏற்றுக் கொள்ளவும், அவற்றை தமக்கு பொருந்துமாறு செய்து கொள்ளவும் சட்டமன்றத்தால் அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. ஆனால், எதிர்காலத்தில் இயற்றப்பட உள்ள சட்டங்களை ஏற்றுக் கொள்ள நிருவாகத்துறைக்கு அதிகாரம் அளிக்கப்படவில்லை. ஏனெனில், எதிர்காலச் சட்டங்களை ஏற்றுக் கொள்வது, சட்டமன்றத்திற்கே உரிய இன்றியமையாத சட்டமியற்றும் அதிகாரமாகும்.

11. அரசால் ஒருவரது நிலம் கையகப்படுத்தப்பட்டதற்காக அவருக்கு வழங்கப்பட வேண்டிய இழப்பீட்டை நிர்ணயம் (Determination of compensation for land acquisition) செய்யும் அதிகாரம் சட்டமன்றத்தின் கைகளில்தான் உள்ளது. இந்த அதிகாரத்தை நிருவாகத் துறையிடம் சட்டமன்றம் ஒப்படைக்கக் கூடாது.

12. ஒரு சட்டத்தின் செயல்பாட்டிலிருந்து ஒரு சில தனிப்பட்ட நபர்களை, வகுப்பினரை, நிலப்பரப்பை, பொருள்களை விலக்கி வைத்தல், விதிவிலக்களித்தல் (Exemption from the operation of law) எனப்படும். இதுவும் ஒரு இன்றியமையாத சட்டமியற்றும் அதிகாரமாகும். சட்டமன்றம் இந்த அதிகாரத்தை நிருவாகத்துறையிடம் ஒப்படைக்கக் கூடாது. எனினும் இவ்வாறு ஒப்படைக்க வேண்டுமெனில், அதற்குரிய வழிகாட்டு நெறிகளை அச்சட்டத்தில் சட்டமன்றம் வகுத்திருக்க வேண்டும்.

நிபந்தனைக்குட்பட்டு சட்டமியற்றல் (Conditional Legislation):

நிபந்தனைக்குட்பட்டு சட்டமியற்றல் என்பது உண்மையில் சட்டமியற்றலை குறிக்கும் பதமல்ல. இங்கு சட்டமெதுவும் இயற்றப்படுவதில்லை. நிபந்தனைக்குட்பட்டு சட்டமியற்றலில் சட்டமன்றத்தால் செய்யப்பட்ட தோற்றுவாய்ச் சட்டம், சட்டமன்றத்தை விட்டு வெளிவருகையிலேயே முழுமை பெற்று வருகின்றது. இதனால் விதிகள் செய்யும் அதிகாரம் நிருவாகத்துறை முகவர்நிலைகளிடம் ஒப்படைக்க வேண்டிய அவசியம் ஏதும் ஏற்படுவதில்லை.

நிபந்தனைக்குட்பட்டு சட்டமியற்றலில் நிருவாகத்துறை முகவர் நிலைகளுக்கு அளிக்கப்படும் அதிகாரம் என்னவென்றால், தோற்றுவாய் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஒரு குறிப்பிட்ட சூழ்நிலை உருவாகுமேயானால், அப்பொழுது

அச்சட்டத்தை அமல் செய்யும் அதிகாரம் அல்லது அமல் செய்யாமல் இருக்கும் அதிகாரம் நிருவாகத்துறை முகவர் நிலைகளுக்கு அளிக்கப்படுகிறது. நிருவாகத்துறை முகவர் நிலைகள் தோற்றுவாய் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகள் பூர்த்தியாகிவிட்டனவா என்பதை மட்டும் முடிவு செய்ய வேண்டும். நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்படுமானால், தோற்றுவாய்ச் சட்டத்தில் கண்டுள்ள விதிகளுக்கேற்ப அச்சட்டத்தை அமல் செய்ய வேண்டும். அல்லது செய்யாமல் இருத்தல் வேண்டும்.

கீழ்ப்படையான அதிகார ஒப்படைவு (Sub delegation of Powres):

சட்டமியற்றுத்துறை, தனது சட்டமியற்றும் (விதிகள் செய்யும் அதிகாரத்தை) அதிகாரத்தை தான் இயற்றிய தோற்றுவாய் சட்டங்களின் வாயிலாக நிருவாகத் துறையிடம் ஒப்படைப்பது, சட்டமியற்றும் அதிகார ஒப்படைப்பு (Delegation of Legislative Power) எனப்படும். இவ்வாறு தன்னிடம் ஒப்படைக்கப்பட்ட அதிகாரத்தை நிருவாகத்துறையானது, மீண்டும் தனக்கு கீழ் அமைந்துள்ள நிருவாகத்துறை அதிகார அமைப்புகளிடம் (Administrative Authorities) அல்லது நிருவாகத் துறை முகவர் நிலைகளிடம் (Administrative Agencies) ஒப்படைத்தால், அது **கீழ்ப்படையான அதிகார ஒப்படைப்பு (Sub Delegation of Power)** எனப்படுகிறது. இது படிப்படியாக நடைபெறுகிறது.

எடுத்துக்காட்டாக, 1955–ஆம் ஆண்டின் இன்றியமையாப் பண்டங்கள் சட்டமானது தனது 3–வது பிரிவின் வாயிலாக, மத்திய அரசுக்கு விதிகள் செய்யும் அதிகாரத்தை அளிக்கிறது. இது முதற்கண் சட்டமியற்றும் அதிகார ஒப்படைவாகிறது (Delegation of Legislative Power). அதே சமயத்தில் இச்சட்டத்தின் 5–வது பிரிவானது, மத்திய அரசாங்கத்திற்கு அதனிடம் அளிக்கப்பட்ட அதிகாரத்தை அதன் கீழ்ப் பணி புரியும் அலுவலர்களிடமும், மாநில அரசிடமும், அதன் கீழ்ப் பணி புரியும் அலுவலர் களிடமும் அதிகார ஒப்படைவு செய்ய அனுமதி வழங்குகிறது. இவ்வாறு மத்திய அரசின் அலுவலர்களுக்கும், மாநில அரசுக்கும், அதன் அலுவலர் களுக்கும் அதிகாரமானது மத்திய அரசின் மூலமாக அளித்திருப்பது, இரண்டாவது படிநிலை (second stage) அதிகார ஒப்படைவாகும். மேற்கண்டவாறு அதிகாரம் பெற்ற மாநில அரசும், அதன் அலுவலர்களும் அதிகாரத்தை மேலும் கீழ்ப்படியாக அளிப்பார்களானால், அது மூன்றாவது படிநிலை (third stage) அதிகார ஒப்படைவாகும். இங்கு இரண்டாவது படிநிலையின்படியும், மூன்றாவது படிநிலையின்படியும் அதிகாரம் ஒப்படைக்கப்பட்டிருப்பதற்குத்தான், கீழ்ப்படையான **அதிகார ஒப்படைவு (Sub Delegation of Power)** என்று பெயர்.

முடிவுரை:

நிருவாகத்துறையினரின் விதியாக்க அதிகாரத்தின் மீது நீதிமன்றங்கள் போதுமான கட்டுப்பாட்டை வைத்துள்ளன. உரிய பொருள் விளக்கங்கள் அளித்து, நிருவாகத்துறையினர் தங்கள் அதிகாரவரம்பு மீறா வண்ணம் காக்கின்றன.

16

பொதுச் சொல் விளக்கச் சட்டம், 1897 [The General Clauses Act, 1897]

76. What are the objects of the General Clauses Act ? Explain the general rules of construction as envisaged in the Act.
(பொதுச் சொல் விளக்கச் சட்டத்தின் நோக்கங்கள் என்ன ? இச்சட்டத்தில் கூறப்பட்டுள்ள சட்டப் பொருள் கொள்ளலின் பொது விதிகளை விளக்குக.)

(அல்லது)

Analyse the salient features of General Clauses Act of 1897.
(பொதுவியல் சட்டக் கூறுகள் சட்டம் 1897ன் சிறப்பம்சங்களை ஆராய்க.)

(அல்லது)

What are the provisions relating to orders, rules etc. under the General Clauses Act, 1897 ? (பொது வகையச் சட்டம் 1897ன் கீழ் கட்டளைகள் மற்றும் விதிகள் தொடர்பான வகைமுறைகள் யாவை?)

(அல்லது)

What are the procedural requirments for subordinate legislation in India under the General Clauses Act, 1897?
(பொதுவியல் சட்டக் கூறுகள் சட்டம் 1897ன் கீழ் சார்புச் சட்டம் ஒன்றினை ஆக்கும் போது தேவைப்படும் நெறிமுறைகள் யாவை?)

(அல்லது)

What are the general rules of construction available under section 5, 9, 10 and 11 of the General Clauses Act, 1897?
(பொதுச் சொல் விளக்கச் சட்டம், 1897, பிரிவுகள் 5, 9, 10 மற்றும் 11 ஆகியவைகளில் கட்டுமானத்திற்குரிய பொது விதிகள் எவைகள் உள்ளன?)

(அல்லது)

Describe the provision of law under Section 25 and 26 of the General Clauses Act, 1897. (பொதுச் சொல் விளக்கச் சட்டம், 1897, பிரிவுகள் 25 மற்றும் 26 ஆகியவற்றில் உள்ள சட்ட வகைமுறைகளை விளக்குக.)

(அல்லது)

What are the general rules of construction available under sections 25, 26 and 27 of the General Clauses Act, 1897. (பொது வகையச் சட்டம், 1897, பிரிவுகள் 25, 26 மற்றும் 27ல் கொடுக்கப்பட்டுள்ள பொருள் கோள் பொது விதிகள் எவை?)

(அல்லது)

General Clauses Act - Write short notes. (பொது விதிகள் சட்டம் – சிறு குறிப்பு எழுதுக.)

பொதுச் சொல் விளக்கச் சட்டம் - தோற்றம் :

சட்டங்களுக்கு பொருள் விளக்கம் கூறுவதற்கு பல்வேறு பொது விதிகள் நடைமுறையில் இருந்து வந்தன. இவ்விதிகளை ஒன்று சேர்க்கும் முயற்சியாக 1889–ஆம் ஆண்டில் இங்கிலாந்தில் "சட்டப் பொருள் விளக்கச் சட்டம்" (The Interpretation of Statutes Act, 1889) என்றொரு சட்டம் இயற்றப்பட்டது. இந்த முறை இந்தியாவிலும் பின்பற்றப்பட்டு, 1897–ஆம் ஆண்டில் 'பொதுச் சொல் விளக்கச் சட்டம்' (The General Clauses Act, 1897) முறையாக இயற்றப் பட்டது.

பொதுச் சொல் விளக்கச் சட்டம் - நோக்கம் :

இந்தச் சட்டம் இயற்றப்பட்டதன் முதன்மையான நோக்கம், பாராளுமன்றச் சட்டங்களில் கையாளப்பட்டுள்ள மொழிநடையைக் குறுக்கியும் சுருக்கியும் அமைப்பதாகும். சுருங்கக்கூறின், சட்டத்தின் மொழியைக் குறுக்கிச் சுருக்கத்தைக் கையாள்வதும், சட்டம் அனுமதிக்கும் இடங்களில் ஒரு பொதுவான பொருளைப் பல சட்டங்களில் கையாளப்படும் ஒரு சொல்லிற்கு தர முயல்வதும், இதன் நோக்கங்களாகும்.

பொதுச் சொல் விளக்கச் சட்டம் - சிறப்பியல்புகள் :

ஒரே பொருளை மீண்டும் மீண்டும் பல சட்டங்களில் புகுத்தும் மெத்தனத்தைத் தடுப்பதும், பல சட்டங்களுக்குப் பொதுவான கோட்பாடுகளை அந்தந்தச் சட்டங்களில் புகுத்துவதைக் காட்டிலும் ஒரே சட்டத்தில் அவைகளை

வரையறுப்பதும் இதன் சிறப்பியல்புகள் ஆகும். இது மத்திய அரசால் இயற்றப்பட்ட சட்டமாகும். இதே போல் பல மாநிலங்களும் தங்கள் தேவைக்கென இது மாதிரியான மாநில பொதுச் சொல் விளக்கச் சட்டங்களை இயற்றியுள்ளது.

பொதுச் சொல் விளக்கச் சட்டம் - அமைப்பு :

இச்சட்டத்தில் மொத்தம் 30 பிரிவுகள் உள்ளன. இவை அய்ந்து பாகங்களாக பிரிக்கப்பட்டுள்ளன.

முதல் 4 பிரிவுகளைக் கொண்டது முதல் பாகமாகும். இது பெரும்பாலும் பல சட்டங்களில் உள்ள வார்த்தைகளுக்கு பொதுவான வரையறை, பொருள் (General Definitions) முதலியவற்றை தருகிறது. இரண்டாவது பாகம் சட்டத்தின் இயக்கம், நீக்கம், புதுப்பித்தல் ஆகியவற்றின் பொருள் விளக்கத்திற்கான பொது விதிகளைக் (General Rules of Construction) கூறுகிறது. மூன்றாவது பாகத்தில் அதிகாரங்களைப் பயன்படுத்தும் விதம், அவற்றைச் செயல்படுத்தும் அதிகாரிகள் (Powers and Functionaries) பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது. அய்ந்தாம் பாகத்தில் இயற்சட்டங்களின் கீழ் செய்யப்பட்ட கட்டளைகள், விதிகள் போன்றவை குறித்த வகைமுறைகளைப் (Provisions as to Orders, Rules etc. made under enactments) பற்றி கூறுகிறது. இறுதியாக வரும் அய்ந்தாவது பாகத்தில் பல்வகைப்பட்ட விஷயங்கள் (Miscellaneous) கூறப்பட்டுள்ளன. இப்பாகங்களை சற்று விரிவாக பின்வருமாறு காண்போமா?

பொதுவான வரையறைகள் (General Definitions) - முதல் பாகம்:

இச்சட்டத்தின் முதல் பாகத்தில் வரும் 3–வது பிரிவின் கீழ் மொத்தம் 66 வார்த்தைகளுக்கு வரையறை கொடுக்கப்பட்டுள்ளன. ஆனால் இவ்வரையறைகள் முழுவதும், மத்திய அரசு இயற்றும் சட்டம் பற்றியதாகும். ஆகவே மாநில சட்ட மன்றங்களால் இயற்றப்படும் சட்டங்களுக்குப் பொருந்தாது.

பொருள் விளக்கத்திற்கான பொது விதிகள் (General Rules of Construction) - இரண்டாம் பாகம்:

பிரிவு – 5 : பொதுச் சொல் விளக்கச் சட்டத்தின் அய்ந்தாம் பிரிவு சட்டத்தின் இயக்கம் (operation) பற்றி பேசுகிறது. ஒரு சட்டம் எப்பொழுது அமலுக்கு வருகிறது என்பது பற்றி மௌனம் சாதிக்குமானால், அது எப்பொழுது குடியரசு தலைவரின் ஒப்புதலைப் பெறுகிறதோ, அந்நாளில் இருந்து அச்சட்டம் நடைமுறைக்கு வருவதாக கொள்ள வேண்டும். பாராளுமன்றத்தால் இயற்றப்பட்ட மத்திய அரசின் சட்டங்களுக்கு மட்டுமே இவ்விதி பொருந்துவது ஆகும். முரண்பாடாக ஏதும் கூறப்படாவிட்டால், மத்திய சட்டம் அல்லது ஒழுங்குமுறைச் சட்டம் ஒன்று, அது தொடங்குவதற்கு உடனடி முந்தைய நாள் முடிவுற்றவுடன், அமலுக்கு வருவதாகப் பொருள் கொள்ள வேண்டும்.

பிரிவு – 6 : இந்தச் சட்டத்தின் ஆறாவது பிரிவு சட்டத்தை நீக்கி விடுதலால் ஏற்படும் **விளைவுகளைப் (Effect of Repeal)** பற்றி கூறுகிறது. ஒரு சட்டத்தை நீக்கி விடுதல் எனும் பொழுது அச்சட்டம் ஒரு போதும் இயற்றப்பட்டுச் சட்டத் தொகுப்பில் இடம் பெறவில்லை என்பதற்குச் சமமாகும். அப்படிப்பட்ட ஒரு சட்டம் எப்போதும் இருந்ததில்லை என்றே பொருள் கொள்ள வேண்டும். ஆனால் இந்த ஆறாம் பிரிவு, விதிவிலக்கு ஒன்றை, வரையறுத்து அதன்கீழ் பின்வரும் 5 கோட்பாடுகளை விதிக்கிறது.

(அ) ஒரு சட்ட நீக்கம் செயலுக்கு வரும் காலத்தில், அது அமலுக்கு வராத அல்லது இல்லாத ஒன்றை புதுப்பித்தல் கூடாது.

(ஆ) நடைமுறையில் இருக்கின்ற உரிமைகளைப் பாதிக்கின்ற சட்ட நீக்கம், நிகழ்காலம் பற்றிய ஒன்றே. தெளிவாக எதுவும் சொல்லப்படாதவரை இறந்த காலத்திற்கு அதனைப் பயன்படுத்தக் கூடாது. அதாவது ஏற்கனவே நீக்கம் செய்யப்பட்டுள்ள சட்டத்தின் முந்தைய இயக்கத்தை அல்லது அதன் கீழ் முறையாக செய்யப்பட்ட செயல் அல்லது அதனால் இடர்பாட்டிற்குள்ளான எதையும் ஒரு சட்ட நீக்கம் பாதித்தல் கூடாது.

(இ) நீக்கம் செய்யப்பட்ட சட்டத்தின் கீழ் பெற்ற உரிமை, சிறப்புரிமை, கடப்பாடு அல்லது பொறுப்படைவு எதையும் ஒரு சட்ட நீக்கம் எந்த விதத்திலும் பாதித்தல் கூடாது.

(ஈ) நீக்கம் செய்யப்பட்ட சட்டத்திற்கு எதிராக செய்யப்பட்ட குற்றத்திற் காக விதிக்கப்பட்ட அபராதம், பறிமுதல் அல்லது தண்டனை எதையும் ஒரு சட்ட நீக்கம் பாதித்தல் கூடாது.

(உ) மேற்கண்ட உரிமை, சிறப்புரிமை, கடப்பாடு, பொறுப்படைவு, அபராதம், பறிமுதல் அல்லது தண்டனை ஆகியவை தொடர்பான புலனாய்வு, சட்ட நடவடிக்கை அல்து தீர்வழி எதையும் ஒரு சட்ட நீக்கம் பாதித்தல் கூடாது.

பிரிவு – 7 : இது **நீக்கம் செய்யப்பட்ட சட்டங்களின் புதுப்பிப்பு (Revival of repealed enactments)** பற்றி விளக்குகிறது. அதாவது, முழுமையாக அல்லது பகுதியாக நீக்கம் செய்யப்பட்ட சட்டத்தினை அவ்வாறு முழுமையாக அல்லது பகுதியாக புதுப்பிக்கப்பட வேண்டுமெனில், அது பற்றி வெளிப்படையாகக் குறிப்பிட வேண்டும்.

பிரிவு – 8 : ஒரு சட்டம் நீக்கப்பட்டு, மீண்டும் இயற்றப்பட்டால், மற்ற சட்டங்கள் அவ்வாறு நீக்கப்பட்ட ஒரு சட்டம் பற்றி குறிப்பிடும் பொழுது, அதனை மீண்டும் இயற்றப்பட்ட ஒரு சட்டமாகவே பொருள் கொள்ள வேண்டும்.

பிரிவு – 9 : இப்பிரிவு **காலத்தின் துவக்கம் மற்றும் முடிவுறுகை (Commencement and termination of time)** குறித்து கூறுகிறது. அதன்படி ஒரு

சட்டத்தில் காலத்தின் துவக்கத்தைக் குறிப்பிட 'முதல்' (from) என்றும், அதன் முடிவுறுகையை குறிப்பிட 'வரை' (to) எனும் சொற்களை பயன்படுத்தினால் அதுவே போதுமானது. இவ்வாறு 'முதல்' என்று குறிப்பிடும் பொழுது, சம்பந்தப்பட்ட நாளையும் உள்ளடக்கியதாகவும், 'வரை' என்று குறிப்பிடும் பொழுது, சம்பந்தப்பட்ட நாள் வரை உள்ளடக்கியதாகவும் பொருள் கொள்ள வேண்டும்.

பிரிவு – 10 : இப்பிரிவு காலத்தை கணக்கிடுதல் (Computation of time) குறித்து கூறுகிறது. ஒரு செயல் அல்லது நடவடிக்கை எதுவும் ஒரு குறிப்பிட்ட தினத்தில் நீதிமன்றம் அல்லது அலுவலகம் எதிலும் செய்வதற்காக அல்லது எடுப்பதற்காக ஒரு சட்டத்தால் ஏவுரைக்கப்பட்டிருக்குமிடத்து அல்லது அனுமதிக்கப்பட்டிருக்குமிடத்து, அக்குறிப்பிட்ட தினத்தில் அல்லது அவ்வாறு வரையறுக்கப்பட்ட காலத்தின் இறுதி தினத்தில் அந்நீதிமன்றம் அல்லது அந்த அலுவலகம் மூடப்பட்டிருப்பின், அந்த செயல் அல்லது நடவடிக்கையானது, அந்நீதிமன்றம் அல்லது அலுவலகம் திறந்திருக்கும் அடுத்த தினத்தில் செய்யப்பட்டிருப்பின் அல்லது எடுக்கப்பட்டிருப்பின், அது உரிய காலத்திற்குள் செய்யப்பட்டதாக அல்லது எடுக்கப்பட்டதாகவே கருத வேண்டும்.

பிரிவு – 11 : இப்பிரிவு தூரங்களை அளத்தல் (Measurement of distances) குறித்து விளக்கமளிக்கிறது. அதன்படி, சட்டத்தில் மாறுபட்ட கருத்து ஏதும் இல்லையெனில், இரண்டு இடங்களுக்கிடையிலான தூரத்தை அளப்பதில், அதனை குறுக்குவாட்டத்தில் ஒரு நேர்கோடாக அளந்திருப்பதாக கொள்ள வேண்டும்.

பிரிவு – 12 : இப்பிரிவு இயற்சட்டங்களில் உள்ளவற்றை சரிசம வீதத்தில் எடுத்துக் கொள்ளும் கடமை (Duty to be taken pro rata in enactments) குறித்து விளக்குகிறது. அமலில் உள்ள சட்டம் எதன் கீழும் சரக்குகள் அல்லது வணிகப் பொருட்களின் மதிப்பு, அளவு, எடை அல்லது கொள்ளளவு ஆகியவற்றின் மீது விதிக்கப்படக் கூடிய சுங்கத் தீர்வை அல்லது ஆயத் தீர்வை எதனையும், அதே வீதத்தில்தான் அச்சரக்குகள் அல்லது வணிகப் பொருட்களின் அதிக அல்லது குறைவான கொள்ளளவின் மீதும் விதிக்கப்படுதல் வேண்டும்.

பிரிவு – 13 : இப்பிரிவு பாலினம் மற்றும் எண்ணிக்கை (Gender and number) குறித்து விளக்குகிறது. சட்டத்தில் பயன்படுத்தப்பட்டுள்ள ஆண்பாற் சொற்கள் பெண் பாலரையும் குறிப்பதாகக் கொள்ள வேண்டும். அது போன்றே ஒருமை பற்றிய சொற்கள் பன்மையையும், பன்மைப் பற்றிய சொற்கள் ஒருமையையும் குறிப்பதாக கொள்ள வேண்டும்.

அதிகாரங்கள் மற்றும் அவற்றைச் செயல்படுத்தும் அதிகாரிகள் (Powers and Functionaries) - மூன்றாம் பாகம்:

பிரிவு – 14 : இப்பிரிவு அவ்வப்போது செயல்படுத்தக் கூடிய வகையில் வழங்கப்பட்ட அதிகாரங்கள் (Powers conferred to be exercisable from

time to time) பற்றிக் கூறுகிறது. அதன்படி, ஒரு சட்டம் அதிகாரத்தை வழங்குமேயானால், அதனை அவ்வப்போது தேவைக்கேற்ப பயன்படுத்த வேண்டும்.

பிரிவு – 15 : இப்பிரிவு பதவிவழி நியமனம் உள்ளிட்ட நியமன அதிகாரம் (Power to appoint to include power to appoint ex officio) குறித்து கூறுகிறது. அதன்படி, ஒரு சட்டம் ஒருவரை நியமிக்கவோ, ஒரு பதவியை நிரப்பவோ ஒரு பணியை நிறைவேற்றவோ அதிகாரம் வழங்குமேயானால் அத்தகைய அதிகாரம் பெயர் மூலமாகவோ அல்லது பதவி மூலமாகவோ நிறைவேற்றப்பட வேண்டும்.

பிரிவு – 16 : இப்பிரிவு பதவியிலிருந்து இடை நிறுத்தம் அல்லது நீக்கம் செய்யும் அதிகாரத்தை உள்ளிட்ட நியமன அதிகாரம் (Power to appoint to include power to suspend or dismiss) குறித்து கூறுகிறது. ஒருவரை நியமிக்க ஒரு சட்டம் மற்றொருவருக்கு அதிகாரம் அளிக்குமேயானால் அது அவரை நியமிக்க மட்டுமல்லாது இடைநிறுத்தம் அல்லது நீக்கம் செய்வதற்கும் அதிகாரம் அளிப்பதாகவே கொள்ள வேண்டும்.

பிரிவு – 17 : அதிகாரிகளுக்கு பதிலானவற்றைக் (Substitution of Functionaries) குறித்து இப்பிரிவு விளக்குகிறது. அதன்படி, சட்டம் எதிலும், அலுவலகமொன்றின் பணிகளை தற்காலிகமாக நிறைவேற்றும் ஒவ்வொரு நபருக்கும் பொருந்தும் ஒரு சட்டத்தைக் குறிப்பிடும் நோக்கத்திற்காக, அப்பணியை தற்பொழுது நிறைவேற்றும் அலுவலரின் பதவிப் பெயரை அல்லது அப்பணிகள் பொதுவாக எந்த அலுவலரால் நிறைவேற்றப்படுமோ அந்த அலுவலரின் பெயரைச் சுட்டிக் காட்டினால் போதுமானது.

பிரிவு – 18 : தொடர்ந்து பதவியேற்கும் அதிகாரிகள் (Successors) பற்றி இப்பிரிவு விளக்கமளிக்கிறது. அதன்படி, சட்டம் எதிலும், துறைகள் அல்லது நீடித்த வாழ்வு பெற்ற கழகங்களில் ஒரு அதிகாரியைத் தொடர்ந்து அடுத்ததாக பதவியேற்கும் அதிகாரிகள் தொடர்பான ஒரு சட்டத்தைக் குறிப்பிடும் நோக்கத்திற் காக, அத்துறைகள் அல்லது கழகங்களுடன் அதன் தொடர்பை வெளிப்படுத்தினால் போதுமானது.

பிரிவு – 19 : தலைமை மற்றும் கீழமை அதிகாரிகள் (Official chiefs and subordinates) குறித்து இப்பிரிவு விளக்குகிறது. அதன்படி சட்டம் எதிலும், ஒரு அலுவலகத்தின் தலைமை அல்லது உயரதிகாரிக்கு தொடர்பான ஒரு சட்டம், அந்த உயரதிகாரியின் இடத்தில் அந்த அலுவலகத்தின் பணிகளை சட்டப்படி நிறைவேற்றும் கீழமை மற்றும் துணை நிலை அதிகாரிகளுக்கு பொருந்துதல் வேண்டும் என்பதை குறிப்பிடும் நோக்கத்திற்காக, அந்த உயரதிகாரியின் கடமைகளை வகுத்துரைத்தால் போதுமானது.

இயற்சட்டங்களின் கீழ் செய்யப்படும் கட்டளைகள், விதிகள் ஆகியவை குறித்த வகைமுறைகள் (Provisions as to Orders, Rules, etc. made under Enactments) - நான்காம் பாகம்:

பிரிவு – 20 : இப்பிரிவு இயற்சட்டங்களின் கீழ் பிறப்பிக்கப்பட்ட கட்டளை, விதி ஆகியவற்றை பொருள் கொள்ளும் முறையை **(Construction of orders, etc. issued under enactments)** விளக்குகிறது. அதன்படி, ஒரு சட்டத்தின் வாயிலாக அறிக்கை, கட்டளை, திட்டம், விதி, படிவம் அல்லது உப விதி பிறப்பிக்கும் அதிகாரம் வழங்கப்பட்டிருக்குமிடத்து, அவற்றில் பயன்படுத்தப்பட்டுள்ள சொற்றொடர்கள், அதன் பொருள் மற்றும் விளக்கத்தில் முரண்பாடாக ஏதும் இல்லாத பொழுது, அச்சட்டத்தில் காணப்படும் சம்பந்தப்பட்ட அதே பொருளையே உடையதாகும்.

பிரிவு – 21: ஒரு சட்டத்தின் வாயிலாக அறிக்கை, கட்டளைகள், விதிகள் அல்லது துணை விதிகள் பிறப்பிக்கும் அதிகாரம் வழங்கப்பட்டிருக்குமிடத்து, அது அவற்றில் சேர்த்தல், நீக்குதல், மாற்றுதல் போன்ற திருத்தங்களைச் செய்வதற்கும் அதிகாரம் அளித்திருப்பதாகவே கொள்ள வேண்டும்.

பிரிவு – 22 : இயற்சட்டமொன்றின் நிறைவேற்றம் மற்றும் தொடங்குகைக்கு இடையே விதிகள் அல்லது துணை விதிகள் செய்தல் மற்றும் கட்டளைகள் பிறப்பித்தல் (Making of rules or bye-laws and issuing of orders between passing and commencement of enactment) பற்றி இப்பிரிவு கூறுகிறது. அதன்படி ஒரு சட்டம் நிறைவேற்றப்பட்டு, அது தொடங்கும் காலம் உடனடியாக அமலுக்கு வராத பொழுது, அச்சட்டத்தின் கீழ் செய்யப்படும் விதிகள் அல்லது உப விதிகள் மற்றும் பிறப்பிக்கப்பட்ட கட்டளைகள் ஆகியவை அச்சட்டம் அமலுக்கு வரும் வரை செயலுக்கு வராது.

பிரிவு – 23 : முன்னதாக வெளியீடு செய்யப்பட்ட பின் செய்யப்படும் விதிகள் மற்றும் துணை விதிகளுக்கு பொருந்தும் வகைமுறைகள் (Provisions applicable to making of rules or bye-laws after previous publication) குறித்து இப்பிரிவு விளக்குகிறது. அந்த வகையில் பின்வரும் அய்ந்து விதிமுறைகள் இப்பிரிவின் கீழ் கொடுக்கப்பட்டுள்ளன. அவை வருமாறு:

(1) விதிகள் அல்லது உப விதிகள் செய்ய அதிகாரம் பெற்ற ஒரு அமைப்பு, அவற்றைச் செய்வதற்கு முன்பாக அவ்விதிகள் அல்லது துணை விதிகளால் அநேகமாக பாதிக்கப்படக் கூடியவர்களாக உள்ளவர்களுக்கு தகவல் அளிப்பதற்காக அவற்றின் வரைவு ஒன்றை வெளியிட வேண்டும்.

(2) அவ்வெளியிடுகை அந்த அதிகார அமைப்பு போதுமானது என்று கருதும் முறையில் அல்லது அரசு வகுத்துரைக்கும் முறையில் வெளியிடப்பட வேண்டும்.

(3) அந்த வரைவு எந்த தேதியில் அல்லது எந்த தேதிக்குப் பின்னர் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும் என்பதற்கான அறிவிப்பு ஒன்றையும் அந்த வரைவுடன் வெளியிட வேண்டும்.

(4) மற்றொரு அதிகார அமைப்பின் அனுமதி, ஒப்புதல் அல்லது இசைவுடன் அவ்விதிகள் அல்லது துணை விதிகள் செய்யப்பட வேண்டியிருப்பின், அவற்றின் வரைவிற்கு கிடைக்கப் பெற்ற ஆட்சேபனைகள் அல்லது ஆலோசனைகளை அந்த மற்றொரு அதிகார அமைப்பும் பரிசீலித்தல் வேண்டும்.

(5) அவ்விதிகள் அல்லது உப விதிகள் அரசிதழில் வெளியிடப்பட்ட பின், அவை உரிய முறையில் செய்யப்பட்டுள்ளன என்பதற்கு அதுவே அறுதியான சான்றுறுதியாகும் (conclusive proof).

பிரிவு – 24 : இப்பிரிவு, நீக்கம் செய்யப்பட்ட மற்றும் மீண்டும் இயற்றப்பட்ட சட்டங்களின் கீழ் பிறப்பிக்கப்பட்ட கட்டளைகள் போன்றவற்றின் தொடர்ச்சி (Continuation of orders, etc., issued under enactments repealed and re-enacted) குறித்து கூறுகிறது. ஒரு சட்டம், நீக்கம் செய்யப்பட்டு, பின்னர் மாற்றத்துடன் அல்லது மாற்றம் ஏதுமின்றி மீண்டும் இயற்றப்பட்டிருக்குமிடத்து, அவ்வாறு நீக்கப்பட்ட சட்டத்தின் கீழ் செய்யப்பட்ட அல்லது பிறப்பிக்கப்பட்ட நியமனம், அறிக்கை, கட்டளை, திட்டம், விதி, படிவம் அல்லது உப விதி எதுவும், அவ்வாறு மீண்டும் இயற்றப்பட்ட சட்டத்தின் கீழ் செய்யப்பட்டவையாக அல்லது பிறப்பிக்கப் பட்டவையாகவே கருதப்பட்டு, தொடர்ந்து அமலில் இருத்தல் வேண்டும்.

பல்வகைப்பட்டவை (Miscellaneous) – அய்ந்தாம் பாகம்:

பிரிவு – 25 : அபராதம் வசூலித்தல் (Recovery of fines) பற்றி இப்பிரிவு கூறுகிறது. அதன்படி, அபராதம் விதித்தலுக்கான பிடியாணையை பிறப்பித்தல் மற்றும் நிறைவேற்றுதல் தொடர்பாக இந்திய தண்டனைச் சட்டத்தின் 63 முதல் 70 வரையுள்ள பிரிவுகள் மற்றும் அப்போது அமலில் உள்ள குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் வகைமுறைகள் ஆகியன, சட்டம், ஒழுங்குமுறை, விதி அல்லது உப விதிகள் எதன் கீழும் விதிக்கப்படும் அபராதம் அனைத்திற்கும் பொருந்துவதாகவே கருத வேண்டும். ஆனால் இதற்கு மாறான வகைமுறை எதுவும் வெளிப்படையாக அவற்றில் இருத்தல் கூடாது.

பிரிவு – 26 : இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட சட்டங்களின் கீழ் தண்டிக்கப்படத்தக்க குற்றங்கள் குறித்த வகைமுறை (Provision as to offences punishable under two or more enactments) பற்றி இப்பிரிவு கூறுகிறது. அதன்படி இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட சட்டங்களின் கீழ் ஒரு செயல் அல்லது செயல் தவிர்க்கை குற்றமொன்றை உருவாக்குவதாக இருக்குமிடத்து, அக்குற்றவாளியை அவ்விரண்டில் ஒன்றின் கீழ் அல்லது அச்சட்டங்களில் எதன் கீழும் விசாரித்து தண்டிக்கலாம். ஆனால் ஒரே குற்றத்திற்காக இரண்டு முறை தண்டித்தல் கூடாது.

பிரிவு – 27 : இப்பிரிவு **அஞ்சல் வழியிலான சார்பின் பொருள் (Meaning of service by post)** குறித்து விளக்குகிறது. அதன்படி, ஆவணம் எதையும் அஞ்சல் வாயிலாக சார்பு செய்ய வேண்டுமென ஒரு சட்டம் கோரினால், அவ்வாறு சார்பு செய்ய அதிகாரமளித்தால், அந்த ஆவணத்தை உள்ளடக்கிய கடிதம் உரிய முகவரியிடப்பட்டு, அஞ்சல்தலை ஒட்டப்பட்டு, பதிவு அஞ்சலில் அனுப்பப்பட்டதன் மூலம் செயலாக்கப்பட்டது என்று கருத வேண்டும். அதுபோல் அஞ்சல் முறையின் இயல்பான போக்கிலான நேரத்தில் அக்கடிதம் சேர்க்கப்பட்டதாகவும் கருத வேண்டும்.

பிரிவு – 28 : இப்பிரிவு **இயற்சட்டங்களை சுட்டிக்காட்டுகை (Citation of enactments)** குறித்து விளக்குகிறது. அதன்படி, ஒரு சட்டம் மற்றும் அச்சட்டத்தின் கீழ் செய்யப்பட்ட உப விதி, முறையாவணம் அல்லது ஆவணம் எதிலும், இயற்சட்டமொன்றை அதன் தலைப்பு அல்லது குறுந்தலைப்பு அல்லது அதன் எண் மற்றும ஆண்டு ஆகியவற்றைக் குறிப்பிடுவதன் மூலம் சுட்டிக்காட்டலாம். மேலும் அவ்வியற் சட்டத்தின் வகைமுறை எதையும், அவ்வகைமுறை உள்ளடங்கியுள்ள அதன் பிரிவு அல்லது உட்பிரிவு ஆகியவற்றைக் குறிப்பிடுவதன் மூலம் சுட்டிக்காட்டலாம்.

பிரிவு – 29 : முந்தைய இயற்சட்டங்கள், விதிகள் மற்றும் துணை விதிகளுக்கான விதிவிலக்கு (Saving for previous enactments, rules and bye-laws) குறித்து இப்பிரிவு விளக்குகிறது. அதன்படி, இச்சட்டம் (பொதுச் சொல் விளக்கச் சட்டம்) அமலுக்கு வந்த பிறகு செய்யப்பட்ட சட்டங்கள், ஒழுங்கு முறைகள், விதிகள் அல்லது உப விதிகளின் பொருள் விளக்கம் குறித்த இச் சட்டத்தின் (பொதுச் சொல் விளக்கச் சட்டம்) வகைமுறைகள், இச்சட்டம் அமலுக்கு வருவதற்கு முன்பாக செய்யப்பட்ட சட்டம், ஒழுங்குமுறை, விதி அல்லது உப விதி எதன் பொருள் விளக்கத்தையும் பாதித்தல் கூடாது.

பிரிவு – 30 : ஒரு சட்டமானது அவசர சட்டங்களுக்கு எந்த அளவிற்கு பொருந்தி (Application of Act to Ordinances) வருகிறது என்பதைப் பற்றி இந்தச் சட்டத்தில் எங்கெல்லாம் 'மத்திய சட்டம்' (Central Act)[1] எனும் சொற்றொடர்கள் வருகின்றனவோ (சில விலக்குகள் நீங்கலாக), அங்கெல்லாம் அது தலைமை ஆளுநரால் செய்யப்பட்டு பிரகடனப்படுத்தப்பட்ட அவசரச் சட்டங்களையும் உள்ளடக்கியதாகவே கருத வேண்டும். அதுபோல் இந்திய அரசியலமைப்பின் 123–வது சரத்தின் கீழ் குடியரசுத் தலைவர் பிரகடனப்படுத்தும் ஒரு அவசரச் சட்டத்தையும் அச்சொற்றொடர்கள் உள்ளடக்கியதாகும்.

முடிவுரை :

ஒரு சட்டத்திற்கு பொருள் விளக்கம் கொடுக்கும் பொழுது, பொதுச் சொல் விளக்கச் சட்டத்தில் உள்ள வரையறைகளையும், விதிகளையும் கருத்தில் கொள்ள வேண்டியது இன்றியமையாததாகும்.

1. இந்த அத்தியாயத்தில் நாம் இதுகாறும் கண்ட 'சட்டம்' எனும் பதம் 'மத்திய சட்டம்' அல்லது 'ஒழுங்குமுறை' எதனையும் உள்ளடக்கியதாக பொருள் கொள்க.

77. Bye laws - Write short notes. (உப விதிகள் – சிறு குறிப்பு எழுதுக.)

'உப விதி' எனப்படுவது 'துணை விதி' என்றும் அழைக்கப்படுகிறது. பகுதியளவு அரசாங்க கட்டுப்பாடு உள்ள அதிகார அமைப்புகளால் (semi-governmental authorities) செய்யப்படுபவை 'உப விதிகள்' (bye laws) எனப்படும். பொதுவாக சொத்துடைமை அல்லது அமைப்பு ஒன்றை திட்டப்படுத்துவதற்கும், பரிபாலிப்பதற்கும், நிருவகிப்பதற்கும் சட்டமன்றம் அளிக்கும் அதிகாரத்தின் கீழ், ஒரு அமைப்பால் வகுக்கப்படும் விதியே, 'உப விதி' எனப்படுகிறது.

எடுத்துக்காட்டாக, கூட்டுறவு சங்கங்கள், தங்கள் உறுப்பினர்களின் நடத்தையை ஒழுங்கு படுத்த ஏற்படுத்திக் கொள்ளும் விதிகள், உப விதிகள் ஆகும். மேலும் நகராட்சி மன்றங்களின் விதிகளும், உப விதிகள் ஆகும். இவ்விதிகளுக்கு ஒரு சட்டத்திற்குண்டான முழு வலிமையும், செயல்திறனும் உண்டு.

வேறு விதத்தில் கூறுவதெனில், உப விதி என்பது ஒரு தோற்றுவாய் சட்டத்தின் (Parent Act) கீழ் பகுதியளவு அரசாங்க கட்டுப்பாடு உள்ள அதிகார அமைப்புகள் எனப்படும் வட்டார அல்லது சுயாட்சி அமைப்புகளால் (Local or Self-governing authorities) செய்யப்படும் சட்டப்படியான விதிகளாகும்.

இயற்றப்பட்ட ஒரு சட்டத்திற்கு பொருள் விளக்கம் அளிப்பதற்காக பயனுறும் விதிகளே, உப விதிகளுக்கு அளிக்கப்படும் பொருள் விளக்கத்திற்கும் பயனாகிறது. எனினும் உப விதியானது, எந்த தோற்றுவாய் சட்டத்தின் கீழ் செய்யப் பட்டதோ, அச்சட்டத்தின் நோக்கத்திற்கு முரண்பட்டதாக இருப்பின், அந்த முரண்பாட்டளவிற்கு இல்லா நிலையானதாகும். அதுபோல் உப விதி ஒன்றும், அதன் தோற்றுவாய் சட்டத்தின் வகைமுறை ஒன்றிற்கும் இடையே முரண்பாடு இருப்பின், அத்தோற்றுவாய் சட்டத்தின் வகைமுறையே மேலோங்கி நிற்கும். உப விதி செல்லாததாக ஆகும்.

நிருவாகமுறைச் சட்டத்தின் கீழ் சட்டமியற்றும் அதிகார ஒப்படைவினால் செய்யப்படும் விதியாக்க விதிகளுக்கு (Rules of delegated legislation), உப விதிகள் கட்டுப்பட்டதாகும். ஏனெனில், உப விதிகள் என்பதே அதிகார ஒப்படைவினால் செய்யப்படும் விதியாக்கத்தின் ஒரு பகுதியாகும்.

78. Regulations - Write short notes. (ஒழுங்குமுறை விதிகள் – சிறு குறிப்பு எழுதுக.)

சட்டமன்றம் அளித்துள்ள சட்டமியற்று அதிகார ஒப்படைவின் கீழ் (delegated legislation), நிருவாகத்துறையினர் (government departments) வகுக்கும் துணைநிலைச் சட்டமே (subordinate legislation), 'ஒழுங்கு முறை விதி' ஆகும்.

மேலும் சட்டப்படியான அமைப்புகள், சட்டத்திற்குட்பட்டு தங்களுக்காக செய்து கொள்வதும் ஒழுங்குமுறை விதிகளே.

எடுத்துக்காட்டாக, நிறுவனச் சட்டப்படி பதிவு செய்யப்பட்ட நிறுவனம் ஒன்று, தனது மேலாண்மைக்காக இயற்றிக் கொள்ளும் விதிகள், ஒழுங்குமுறை விதிகளாகின்றன.

இந்திய அரசியலமைப்பின்படி எவையெல்லாம் 'ஒழுங்குமுறை' எனப் படுகிறது என்று விளக்கமளிக்கும் பொருட்டு அப்பதத்திற்கு 1897–ஆம் ஆண்டின் பொதுச் சொல் விளக்கச் சட்டத்தின் **பிரிவு 3(50)** வரையறை தருகிறது. அதன்படி, பின்வருவனவெல்லாம் ஒழுங்குமுறை எனப்படும்.

(1) இந்திய அரசியலமைப்பின் 240, 243 ஆகிய சரத்துகளின் கீழ் குடியரசுத் தலைவர் செய்யும் ஒரு ஒழுங்குமுறை;

(2) 1870, 1915 அல்லது 1935–ஆம் ஆண்டுகளின் இந்திய அரசாங்கச் சட்டத்தின் (Government of India Act, 1870, 1915 and 1935) கீழ் மத்திய அரசு செய்யும் ஒரு ஒழுங்குமுறை;

79. Order - Write short notes. (கட்டளை – சிறு குறிப்பு எழுதுக.)

'கட்டளை' என்பது ஏற்கனவே ஏற்படுத்தப்பட்ட ஒரு விதியை செயல் படுத்துவதற்காக அல்லது அமலாக்குவதற்காக பிறப்பிக்கப்படுவதாகும். இது ஒரு குறிப்பிட்ட வகைக்காக, ஒரு குறிப்பிட்ட செயல்பாட்டிற்கு உட்பட்டு மட்டுமே பிறப்பிக்கப்படுகிறது.

அந்த வகையில் **Vasudeo v. State of Mysore**[1] எனும் வழக்கில் ஒரு அரசு நிருவாக அதிகாரியால் நிருவாகம் குறித்து இடப்படுவது 'கட்டளைகள்' ஆகுமென்றும், அக்கட்டளை சட்டத்தின் வலிமையை உடையது என்றும் தீர்ப்புரைக்கப்பட்டது.

எனவே, ஒரு கட்டளை சட்டமியற்றுத் துறை, நிருவாகத் துறை அல்லது நீதித்துறை சார்ந்ததாக இருக்கலாம். **எடுத்துக்காட்டாக,** பண்டங்களின் விலைவாசியை குறைப்பதற்காக இடப்படும் கட்டளை, சட்டமியற்றுத்துறை கட்டளையாகும் (Legislative Order). பொதுநலன் கருதி, ஒரு வீட்டிலிருந்து ஒருவரை வெளியேற்ற இடப்படும் கட்டளை அல்லது ஒரு நபரை குண்டர் தடுப்புச் சட்டத்தின் கீழ் சிறையிலிட பிறப்பிக்கப்படும் கட்டளை, நிருவாகத்துறை கட்டளையாகும் (Executive Order). அதுபோல், ஒரு நபரை ஜாமீனில் வெளியிடுவதற்காக பிறப்பிக்கப்படும் கட்டளை, நீதித்துறை கட்டளையாகும் (Judicial Order).

இவ்வித கட்டளைகளுக்கு பொருள் விளக்கம் அளிக்கும் அதிகாரம் உச்ச மற்றும் உயர் நீதிமன்றங்களின் கைகளில் உள்ளது. அத்துறைகள் தங்கள் அதிகார வரம்பை மீறி, அவ்வித கட்டளைகள் பிறப்பித்தால், அவை இல்லாநிலையன ஆகும். எனவே பொருள் விளக்க விதிகள், கட்டளைகளுக்கும் பொருந்தும்.

1. A.I.R. 1966 Mys. 92

80. Laches - Write short notes. (கால தாமதம் – சிறு குறிப்பு எழுதுக.)

ஒருவர் தனது சட்டப்படியான உரிமைகளைச் சுட்டிக்காட்டி, நீதிமன்றம் வாயிலாக நிவாரணம் பெற உரிய காலத்திற்குள் நீதிமன்றத்தை அணுகாமல், வேண்டுமென்றே (அதாவது விருப்பப்பூர்வமாக) தாமதித்தல், 'கால தாமதம்' எனப்படுகிறது. அப்படிப்பட்ட விருப்பப்பூர்வமான கால தாமதம் (wilful delay) இருப்பதாக, நீதிமன்றம் அறிந்து கொண்டால், அவருக்கு எவ்விதத் தீர்வழியையும் அது வழங்காது.

ஒருவர் தனது உரிமைகளை குறித்த வகையில் நிறைவேற்றக் கோரி வழக்கிடுதல் (Suit for specific performance), உறுத்துக்கட்டளை கோரி வழக்கிடல் (Suit for injunction) ஆகியவற்றில் அவர் கால தாமதத்துடன் நீதிமன்றத்தை அணுகினால், அவருக்கு அவ்வழக்கிற்குரிய நிவாரணம் எதுவும் கிடைக்காது. மேலும் நீதிப்பேராணைகள் (Writs) பெற வேண்டி உச்ச அல்லது உயர் நீதிமன்றங்களுக்கு மனுச் செய்யும் பொழுது, மனுதாரர் வேண்டுமென்றே கால தாமதத்துடன் வந்துள்ளார் என்று அந்நீதிமன்றங்கள் கருதினால், அவருக்கு ஆதரவாக நீதிப்பேராணைகளை பிறப்பிக்காது.

பொதுவாக எது கால தாமதம் என்பதை நிருணயிக்க கால வரையறை ஏதுமில்லை. அது வழக்கின் சூழ்நிலைக்கேற்ப தீர்மானிக்கப்படும். அதாவது வழக்கின் சூழலுக்கேற்ப இயல்பான காலத்திற்குள் ஒருவர் தனது உரிமையை நிலைநாட்ட வழக்கிடவில்லையெனில், அங்கு கால தாமதம் செய்யப்பட்டிருப்பதாக நீதிமன்றம் அனுமானிக்கலாம். இது நேர்மை, நீதி மற்றும் நன்மனச்சான்றின் அடிப்படையில் அமைந்ததாகும். எனவே ஒரு வழக்கின் இரு தரப்பினர்களும், கால தாமதம் என்பதை ஒரு எதிர் வாதமாக சுட்டிக்காட்டலாம்.

மேற்கண்ட விருப்பப்பூர்வமான காலதாமதத்தை நிருணயிக்கும் அதிகாரம், நீதிமன்றத்தின் தன்விருப்புரிமைக்கு (discreationary power) உட்பட்டதாகும்.

விருப்பப்பூர்வமான கால தாமதத்துடன் தாக்கல் செய்யப்படும் வழக்குகளையும், நீதிப்பேராணை மனுக்களையும் நீதிமன்றங்கள் நிராகரிக்கவே செய்கின்றன. இதற்கு அடிப்படை காரணங்கள் பல உண்டு. அவை, (1) கால தாமதத்துடன் தாக்கல் செய்யப்படும் வழக்குகளை (வழக்குக் கோரிக்கைகளை) நீதிமன்றங்கள் ஊக்குவதிப்பதில்லை. குறிப்பாக அரசிற்கெதிரான கோரிக்கைகளை நீதிமன்றங்கள் நிச்சயம் நிராகரிக்கின்றன; (2) அவ்வழக்குகள் ஏற்கனவே முடிந்து போன பிரச்சனைகளை மீண்டும் கிளருவதாக அமையக் கூடிய வாய்ப்பு உள்ளது; (3) கால தாமதத்திற்கிடையில் சம்பந்தப்பட்ட வழக்குப் பிரச்சனையில் வேறு மூன்றாவது நபர்களுக்கு உரிமை ஏதும் தோன்றியிருக்கக் கூடும்; (4) கால தாமதம் ஏற்பட்டதற்கு நியாயமான காரணம் ஏதுமிருக்காது.

81. Morality - Write short notes. (நல்லொழுக்கம் – சிறு குறிப்பு எழுதுக)

ஒருவர் எவ்வாறு வாழ வேண்டும் என்று கூறும் விதிகளே, 'நன்னெறிகள்', 'அறநெறிகள்' எனப்படுகின்றன. இதனையே 'நல்லொழுக்கம்' என்றும் 'ஒழுக்க நெறிகள்' என்றும் அழைக்கிறோம்.

மக்களின் இன்ப வாழ்வைக் குறிக்கோளாகக் கொண்டு நல்லொழுக்க நெறியும் சட்டமும் செயற்படுகின்றன. எனவே இரண்டிற்கும் இடையே நெருங்கிய தொடர்புண்டு. பெரும்பாலான சட்ட விதிகள், நல்லொழுக்க நெறிகளின் அடிப்படையில் எழுந்தவையே. எனினும் நல்லொழுக்க நெறிகள் அனைத்தும் சட்ட விதிகளாகிவிடுவதில்லை. ஈதலும், ஒழுக்கமும், ஒப்புரவும் நல்லொழுக்க நெறிக் கொள்கைகள்; அவை சட்ட விதிகளல்ல. இதுபோன்றே நல்லொழுக்க நெறியோடு தொடர்பில்லாத சட்ட விதிகள் பலவுண்டு. வரிச் சட்டங்கள், போக்குவரத்து விதிகளைக் கூறும் சட்டங்கள் ஆகியவை நல்லொழுக்க நெறியோடு தொடர்பில்லாதவை.

'திருடுவது பாவம்' என்று நல்லொழுக்க நெறி கூறுகிறது. ஆனால் சட்டமோ, **'திருடினால் தண்டனையுண்டு'** என்று கூறுகிறது. இவ்வாறு நல்லொழுக்க நெறி என்பது கடமை தவறாமை, செய்நன்றி மறவாமை, இரக்கம் கொள்ளல் போன்ற பல செயல்களை உள்ளடக்கியதாகும். ஒருவர் செய்நன்றி மறந்துவிட்டார் என்றால், அவரை நல்லொழுக்க நெறி தவறியவர் என்று கூற முடியுமே தவிர, அதையே காரணமாகக் காண்பித்து அவரைத் தண்டித்தல் இயலாது.

எனவே இன்றைய சட்டங்களுக்கு அடிப்படை, நல்லொழுக்க நெறிகள். எனவே சட்டங்களுக்கு கொடுக்கப்படும் பொருள் விளக்கங்களின் விளைவுகளும், நல்லொழுக்க நெறிகளை நிலைநிறுத்தும் வகையில் அமைய நீதிமன்றங்கள் பார்த்துக் கொள்ள வேண்டும்.

நல்லொழுக்க நெறி இயல்பாக எழுவதாகும். அதாவது, ஒருவரது மனச் சாட்சி விடுக்கும் குரலையே நல்லொழுக்க நெறியாகக் கொள்ளலாம். ஒருவரது செயற்பாடுகளை ஒழுங்குமுறைப்படுத்த, அவருக்குள்ளேயே இருக்கும் ஒரு கருவியாக நல்லொழுக்க நெறிகளைக் குறிப்பிடலாம். அவரை வெளியிலிருந்து கட்டுப்படுத்த உதவும் ஒரு கருவியாக சட்டத்தைக் குறிப்பிடலாம்.

இவ்வாறாக மக்களின் இன்பத்தை நாடியே நல்லொழுக்க நெறியும், சட்டமும் இயங்கினாலும், அவை வெவ்வேறு வழிகளைப் பின்பற்றுகின்றன. ஒழுக்க நெறி, மனிதனை அவனது செயலுக்குண்டான காரணம் காட்டி நல்வழிப் படுத்து கிறது; சட்டமோ, மனிதனின் செயலைக் கட்டுப்படுத்தி நல்வழிப்படுத்துகிறது. நல்லொழுக்க நெறி அறிவுறுத்துகிறது; சட்டமோ அச்சுறுத்துகிறது. நன்மைகளை வளர்க்கிறது நல்லொழுக்க நெறி; தீமைகளைத் தடுக்கிறது சட்டம். நல்லொழுக்க நெறி மாறாத் தன்மையுடையது; சட்டம் மாறக் கூடியது.

பொதுச்
சொல் விளக்கச் சட்டம்

அல்லது

பொது வகையங்கள்
விளக்கச் சட்டம்

(சுட்டப்பிரிவுகள்)

[General Clauses Act]

பொது
வகையங்கள் விளக்கச் சட்டம், 1897

சென்னை
பொது வகையங்கள் விளக்கச் சட்டம், 1867

சென்னை
பொது வகையங்கள் விளக்கச் சட்டம், 1891

உள்ளே நுழைவதற்கு முன் ஒரு சிறு விளக்கம்

பல்வேறு சட்டங்களில் வரும் பொதுவான சொற்களுக்கு பொருள் விளக்கம் கூறுவதற்கு ஆதியிலிருந்தே நீதிமன்றங்கள் பல்வேறு விதிகளை பின்பற்றி வந்தன. முறையாக தொகுக்கப் பட்டு சட்டமாக இயற்றப்படாமல் இருந்த இவ்விதிகளையெல் லாம் ஒன்று சேர்த்து, பொதுவான சட்டச் சொற்களுக்கு ஒரே மாதிரியான பொருள் விளக்கத்தை தரும் முயற்சியாக 1889-ஆம் ஆண்டில் இங்கிலாந்தில் "சட்டப் பொருள் விளக்கச் சட்டம்" (The Interpretation of Statutes Act, 1889) என்றொரு சட்டம் இயற்றப்பட்டது. இந்த முறை இந்தியாவிலும் பின்பற்றப்பட்டு, பொருள் விளக்கத்திற்கான முந்தைய சட்டங்கள் தொகுக்கப்பட்டு, 1897-ஆம் ஆண்டில் ஒரு சட்டம் இயற்றப்பட்டது. அதுதான் 'பொதுச் சொல் விளக்கச் சட்டம்'என்று அழைக்கப்படக்கூடிய 'பொது வகையங்கள் விளக்கச் சட்டம்' (The General Clauses Act, 1897) ஆகும்.

இந்தச் சட்டம் இயற்றப்பட்டதன் முதன்மையான நோக் கம் (Object of the Act), நாடாளுமன்றம் இயற்றும் சட்டங்களில் கையாளப்பட்டுள்ள மொழிநடையைக் குறுக்கியும் சுருக்கியும் அமைப்பதாகும். வேறு விதத்தில் கூறுவதெனில், சட்டத்தின் மொழி யைக் குறுக்கிச் சுருக்கத்தைக் கையாள்வதும், பல சட்டங்களில் கையாளப்படும் ஒரு சொல்லிற்கு, சட்டம் அனுமதிக்கும் இடங் களில் ஒரு பொதுவான பொருள் வரையறையைத் தர முயல்வதும் ஆகும்.

ஒரு பொதுவான சொல்லிற்கான பொருளை மீண்டும் மீண்டும் பல சட்டங்களில் புகுத்தும் மெத்தனத்தைத் தடுப்பதும், பல சட்டங்களுக்கான பொதுவான பொருள் விளக்கக் கோட்பாடுகளை அந்தந்தச் சட்டங்களில் புகுத்துவதைக் காட்டிலும் ஒரே சட்டத்தில் அவற்றை வரையறுப்பதும் இச்சட்டத்தின் சிறப்பியல்புகள் (Salient features of the Act) ஆகும்.

இச்சட்டத்தின் கட்டமைப்பை (Structure of the Act) எடுத்துக் கொண்டால், இதில் மொத்தம் 30 சட்டப்பிரிவுகள் உள்ளன. இவை அய்ந்து பாகங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன.

முதல் 4 பிரிவுகளைக் கொண்டது, முதல் பாகமாகும். இதில் பெரும்பாலும் பல்வேறு சட்டங்களில் அடிக்கடி இடம் பெறும் சொற்களுக்கு பொதுவான பொருள் வரையறைகள் (General Definitions) கொடுக்கப்பட்டுள்ளன. இவ்வாறாக 66 சொற்களுக்கு பொருள் வரையறைகள் கொடுக்கப்பட்டுள்ளன. இரண்டாம் பாகமானது, செய்சட்டத்தின் செயற்பாடு, நீக்கறவு, புதுப்பிப்பு ஆகியவற்றின் பொருள் விளக்கத்திற்கான பொது விதிகளைக் (General Rules of Construction) கூறுகிறது. மூன்றாம் பாகத்தில் அதிகாரங்களைப் பயன்படுத்தும் விதமும், அவற்றைச் செயல்படுத்தும் அதிகாரிகள் (Powers and Functionaries) பற்றியும் குறிப்பிடப் பட்டுள்ளன. நான்காம் பாகத்தில் செய்சட்டங்களின் கீழ் செய்யப் பட்ட ஆணைகள், விதிகள் முதலியவை குறித்த வகையங்கள் (Provisions as to Orders, Rules etc. made under enactments) பற்றி விளக்கப்பட்டுள்ளன. அய்ந்தாம் பாகத்தில் பல்வகையான விஷயங் கள் (Miscellaneous) கூறப்பட்டுள்ளன.

இச்சட்டம் குறித்து நாம் ஏற்கனவே இந்நூலின் இறுதிப் பகுதியான அத்தியாயம் 16-இல் சுருக்கமாகக் கண்டிருந்தாலும், பல்வேறு சட்டங்களில் இடம் பெற்றுள்ள பொதுவான சொற்களுக்கெல்லாம் அகராதியாக விளங்கும் இந்த 'பொது வகையங்கள் விளக்கச் சட்டத்தை' (பொதுச் சொல் விளக்கச் சட்டம்) பிரிவுவாரியாக அறிந்து கொள்ள வேண்டியது விரைவில் வழக்குரைஞர்களாகவிருக்கும் உங்களுக்கு உங்கள் தொழில் வாழ்வில் மிகவும் பயன்தரக் கூடியதாகும். ஒப்புமைப்படுத்தி வாசிப் பதற்கு எளிதாக இச்சட்டத்தின் ஆங்கில வடிவத்தையும் இந்நூலில் கொடுத்துள்ளேன்.

"சட்டப் பொருள் விளக்கம்" (Interpretation of Statutes) எனும் பாடத்திற்கான தேர்வில் பெரும்பாலும் தேர்வுதோறும் மேற்படி சட்டத்திலிருந்து நெடு வினா ஒன்றும் மற்றும் குறுகிய விடை எழுதுக வினாக்களும் கேட்கப்படுகின்றன என்பதை கருத்தில் கொள்ளும்படி அன்புடன் வேண்டுகிறேன். அந்த வினாக்களையும் பக்கம் எண். 412-ல் பட்டியலிட்டு சுட்டிக்காட்டியுள்ளேன்.

வாழ்த்துக்களுடன்!

- பி.ஆர்.ஜெ.

பொது வகையங்கள் விளக்கச் சட்டம், 1897

(சட்ட எண். 10/1897)

[The General Clauses Act, 1897]

(Act No. 10 of 1897)

(1897, மார்ச்சு 11)

பொது வகையங்கள் விளக்கச் சட்டங்கள், 1868, 1887 ஆகியவற்றை ஒருங்கிணைத்து அளாவும்படிச் செய்வதற்கான ஒரு சட்டம்.

பொது வகையங்கள் விளக்கச் சட்டங்கள் 1868, 1887 ஆகியவற்றை ஒருங்கிணைப்பதும், அளாவும்படிச் செய்வதும் உகந்ததாக இருப்பதால், ஈங்கிதனால் பின்வருமாறு சட்டமியற்றப்படுகிறது.–

An Act to consolidate and extend the General Clauses Acts, 1868 and 1887

WHEREAS it is expedient to consolidate and extend the General Clauses Acts, 1868 (1 of 1868) and 1887 (1 of 1887), it is hereby enacted as follows:-

முன்னுரை
[Preliminary]

பிரிவு 1 குறுந்தலைப்பு (Short title).- (1) இந்தச் சட்டம், பொது வகையங்கள் விளக்கச் சட்டம், 1897 என்று வழங்கப்பெறும்.

(2) (நீக்கறவு செய்யப்பட்டது)

பிரிவு 2: (நீக்கறவு செய்யப்பட்டது)

பொதுப்பொருள் வரையறைகள்
[General Definitions]

பிரிவு 3 - பொருள் வரையறைகள் (Definitions).- இந்தச் சட்டத்திலும், இந்தச் சட்டத்தின் தொடக்க நிலைக்குப் பின்பு செய்யப்பட்ட மையச் சட்டங்கள் மற்றும் ஒழுங்குறுத்தும் விதிகள் அனைத்திலும், பொருளிலோ அல்லது சூழ்நிலையிலோ முரணானது எதுவும் இருந்தாலன்றி,–

(1) "உடந்தையாயிரு" (Abet) என்பது, அதனுடைய இலக்கண வேறுபாடுகளுடனும் அதன் குடும்பத்தைச் சேர்ந்த சொற்றொடர்களுடனும், இந்தியத் தண்டனைத் தொகுப்புச் சட்டத்திலுள்ளதைப் போன்ற அதே பொருளை உடையதாகும்;

PRELIMINARY

1. Short title.- (1) This Act may be called the General Clauses Act,1897;

(2)(Repealed)

2. [Repealed by the Repealing and Amending Act, 1903 (1 of 1903)]

GENERAL DEFINITIONS

3. Definitions.- In this Act, and in all Central Acts and regulations made after the commencement of this Act, unless there is anything repugnant in the subject or context-

(1) "abet", with its grammatical variations and cognate expressions, shall have the same meaning as in the Indian Penal Code (45 of 1860);

(2) ஒரு குற்றச் செயல் அல்லது ஓர் உரிமைத் தீங்கு குறித்து பயன்படுத்தப்பட்ட "செயல்" (act) என்பது, தொடர்ச்சியான செயல்களை உள்ளடக்கும், மற்றும் செய்யப்பட்ட செயல்களைச் சுட்டும் சொற்கள் சட்ட முரணான விடுகைகளையும் கூட அளாவி நிற்கும்;

(3) "ஆணையுறுதி ஆவணம்" (affidavit) என்பது, ஆணைமொழிதலுக்குப் பதிலாக, உறுதிமொழி செய்யவோ விளம்புகை செய்யவோ சட்டத்தினால் அனுமதிக்கப்படும் நபர்களாக இருக்கும் நேர்வில் உறுதி மொழியையும் விளம்புகையையும் உள்ளடக்கும்;

(4) "பாரிஸ்டர்" (barrister) என்பது, இங்கிலாந்து அல்லது அயர்லாந்துப் பாரிஸ்டர் ஒருவர் அல்லது ஸ்காட்லாந்திலுள்ள வழக்குரைஞர்கள் குழுவின் ஓர் உறுப்பினர் என்று பொருள்படும்;

(5) "பிரிட்டிஷ் இந்தியா" (British India) என்பது, இந்திய அரசாங்கச் சட்டம், 1935–இன் பகுதி III–இன் தொடக்கநிலைக்கு முந்திய கால அளவு குறித்து மாட்சிமை தங்கிய அரசரால், இந்தியாவின் ஆளுநர்–தலைவர் மூலமாக அல்லது இந்தியாவின் ஆளுநர்–தலைவருக்குக் கீழ் நிலையிலுள்ள ஆளுநர் அல்லது அலுவலர் எவர் மூலமாகவும் அப்போதைக்கு ஆளப்பட்ட மாட்சிமை தங்கிய அரசரின் தன்னாட்சியங்களிலுள்ள அனைத்து ஆட்சி நிலவரைகளும், இடங்களும் என்று பொருள்படும்; மேலும், அந்தத் தேதிக்குப் பின்பும், இந்தியத் தன்னாட்சியம் நிறுவப்பட்டதற்கு முன்புமான கால அளவு எதையும் பொறுத்து, அப்போதைக்கு ஆளுநர்களின் மாகாணங்களிலும்

---

(2) "act", used with reference to an offence or a civil wrong, shall include a series of acts, and words which refer to acts done, extend also to illegal omissions;

(3) "affidavit" shall include affirmation and declaration in the case of persons by law allowed to affirm or declare instead of swearing;

(4) "barrister" shall mean, a barrister of England or Ireland, or a member of the Faculty of Advocates in Scotland;

(5) "British India" shall mean, as respects the period before the commencement of Part III of Government of India Act, 1935, all territories and places within His Majesty's dominions which were for the time being governed by His Majesty through the Governor-General of India or through any Governor or Officer subordinate to the Governor-General of India, and as respects any period after that date and before the date of establishment of the Dominion of India means all

தலைமை ஆணையாளரின் மாகாணங்களிலும் அடங்கியுள்ள அனைத்து ஆட்சி நிலவரைகளும் என்று பொருள்படும்; இந்திய அரசாங்கச் சட்டம், 1935-இன் பகுதி III-இன் தொடக்கநிலைக்கு முன்பு நிறைவேற்றப்பட்ட அல்லது செய்யப் பட்ட ஓர் இந்தியச் சட்டத்தில் பிரிட்டிஷ் இந்தியாவைப் பற்றிய கட்டுகையானது, "பிரார்" (Beror) என்பதற்கான கட்டுகையை உள்ளடக்காது என்பது தவிர;

(6) "பிரிட்டிஷ் ஆட்சியின் கீழமைந்த நிலப்பரப்பு" **(British Possession)** என்பது, அய்க்கியக் கூட்டரசு (United Kingdom) நீங்கலான மாட்சிமை தங்கிய அரசியாரின் தன்னாட்சியங்களின் பகுதி எதுவும் என்று பொருள்படும்; மேலும், அந்தத் தன்னாட்சியங்களின் பகுதிகள் ஒரு மையச் சட்டமன்றம் மற்றும் ஒரு வட்டாரச் சட்டமன்றம் ஆகிய இரண்டின் கீழும் இருக்கு மிடத்து, இந்தப் பொருள்வரையறையின் நோக்கங்களுக்காக, மையச் சட்ட மன்றத்தின் கீழுள்ள அனைத்துப் பகுதிகளும் பிரிட்டிஷ் ஆட்சியின் கீழமைந்த ஒரே நிலப்பரப்பாகவே கொள்ளப்படும்;

(7) "மையச் சட்டம்" **(Central Act)** என்பது, நாடாளு மன்றச் சட்டம் ஒன்று என்று பொருள்படும், மேலும்-

(அ) அரசமைப்பின் தொடக்கநிலைக்கு முன்பு நிறைவேற்றப்பட்ட தன்னாட்சியச் சட்டமன்றத்தின் அல்லது இந்தியச் சட்டமன்றத்தின் சட்டம் ஒன்றையும், மற்றும்

---

territories for the time being comprised within the Governors' Provinces and the Chief Commissioners' Provinces, except that a reference to British India in an Indian law passed or made before the commencement of Part III of the Government of India Act, 1935, shall not include a reference to Berar;

(6) "British possession" shall mean any part of Her Majesty's dominions exclusive of the United Kingdom, and where parts of those dominions are under both a Central and a Local Legislature, all parts under the Central Legislature shall, for the purposes of this definition, be deemed to be one British possession;

(7) "Central Act" shall mean an Act of Parliament, and shall include-

(a) an Act of the Dominion Legislature or of the Indian Legislature passed before the commencement of the Constitution, and

(ஆ) அத்தகைய தொடக்கநிலைக்கு முன்பு சட்டம் இயற்றும் திறத்துடன் செயலுறும் மன்றத்தமர் ஆளுநர்–தலைவரால் அல்லது ஆளுநர்–தலைவரால் செய்யப்பட்ட சட்டம் ஒன்றையும்

உள்ளடக்கும்;

(8) "மைய அரசாங்கம்" (Central Government) என்பது

(அ) அரசமைப்பின் தொடக்கநிலைக்கு முன்பு செய்யப் பட்ட எதன் தொடர்பாகவும் ஆளுநர்–தலைவர் அல்லது, நேர்வுக்கேற்ப, மன்றத்தமர் ஆளுநர்–தலைவர் என்று பொருள்படும்; மேலும்

(i) இந்திய அரசாங்கச் சட்டம், 1935–இன் பிரிவு 124–இன் உட்பிரிவு (1)–இன்படி ஒரு மாகாண அரசாங்கத்திடம் ஒப்படைக்கப்பட்ட செயற் பணிகள் தொடர்பாக, அந்த உட்பிரிவின்படி அதற்கு அளிக்கப்பட்ட அதிகார வீச்சுக்குள் செயலுறும் மாகாண அரசாங்கத்தையும்,

(ii) தலைமை ஆணையரின் மாகாண நிருவாகம் தொடர்பாக, சொல்லப்பட்ட சட்டத்தின் பிரிவு 94–இன் உட்பிரிவு (3)–இன்படி அவருக்கு

(b)an Act made before such commencement by the Governor-General in Council or the Governor-General, acting in a legislative capacity;

(8) "Central Government" shall-

(a) in relation to anything done before the commencement of the Constitution, means the Governor-General or the Governor General in Council,as the case may be; and shall include-

(i) in relation to functions entrusted under sub-section (1) of section 124 of the Government of India Act, 1935, to the Government of a Province, the Provincial Government acting within the scope of the authority given to it under that sub-section; and

(ii) in relation to the administration of a Chief Commissioner's Province, the Chief Com-

அளிக்கப்பட்ட அதிகார வீச்சுக்குள் செயலுறும் தலைமை–ஆணையரையும்,

உள்ளடக்கும்; மற்றும்,

(ஆ) அரசமைப்பின் தொடக்கநிலைக்குப் பின்பு செய்யப்பட்ட அல்லது செய்யப்படவேண்டிய எது தொடர்பாகவும் குடியரசுத் தலைவர் என்று பொருள்படும்; மேலும்

(i) அரசமைப்பின் உறுப்பு 258–இன் கூறு (1)–இன் படி ஒரு மாநிலத்தின் அரசாங்கத்திடம் ஒப்படைக்கப்பட்ட செயற்பணிகள் தொடர்பாக, அந்தக் கூறின்படி அதற்கு அளிக்கப்பட்ட அதிகார வீச்சுக்குள் செயலுறும் மாநில அரசாங்கத்தையும்,

(ii) அரசமைப்பு (ஏழாம் திருத்தம்) சட்டம், 1956–இன் தொடக்க நிலைக்கு முன்பு பகுதி "இ" மாநிலத்தின் நிருவாகம் தொடர்பாக, அரசமைப்பின் உறுப்பு 239 அல்லது, நேர்வுக் கேற்ப, உறுப்பு 243–இன்படி, அவருக்கு அல்லது அதற்கு அளிக்கப்பட்ட அதிகார வீச்சுக்குள் செயலுறும் தலைமை ஆணையர் அல்லது

---

missioner acting within the scope of the authority given to him under sub-section (3) of section 94 of the said Act; and

(b) in relation to anything done or to be done after the commencement of the Constitution, means the President; and shall include-

(i) in relation to functions entrusted under clause (1) of article 258 of the Constitution, to the Government of a State, the State Government acting within the scope of the authority given to it under that clause;

(ii) in relation to the administration of a Part C State [before the commencement of the Constitution (Seventh Amendment) Act, 1956], the Chief Commissioner or the Lieutenant -Governor or the Government of a neighbouring State or other authority acting

துணை நிலை ஆளுநரையும் அல்லது அண்டை மாநிலத்தின் அரசாங்கம் அல்லது பிற அதிகார அமைப்பையும், மற்றும்

(iii) ஒன்றியத்து ஆட்சி நிலவரையின் நிருவாகம் தொடர்பாக, அரசமைப்பின் உறுப்பு 239-இன்படி அவருக்கு அளிக்கப்பட்ட அதிகார வீச்சுக்குள் செயலுறும் அதன் ஆளுகையரையும்

உள்ளடக்கும்;

(9) "அத்தியாயம்" **(Chapter)** என்பது, எந்தச் சட்டத்தில் அல்லது ஒழுங்குறுத்தும் விதியில் அந்தச் சொல் வருகிறதோ அந்தச் சட்டத்தின் அல்லது ஒழுங்குறுத்தும் விதியின் ஓர் அத்தியாயம் என்று பொருள்படும்;

(10) "வருவாய்த்துறைக் கட்டுப்பாட்டுத் தலைமை அதிகார அமைப்பு" **(Chief Controlling Revenue Authority)** அல்லது "வருவாய்த் துறை தலைமை அதிகார அமைப்பு" என்பது **(Chief Revenue Authority)** –

(அ) ஒரு மாநிலத்தில், ஒரு வருவாய் வாரியம் இருக்குமிடத்து, அந்த வாரியம்,

(ஆ) ஒரு மாநிலத்தில் ஒரு வருவாய்த்துறை ஆணையர் இருக்குமிடத்து, அந்த ஆணையர்,

---

within the scope of the authority given to him or it under article 239 or article 243 of the Constitution, as the case may be; and

(iii) in relation to the administration of a Union Territory, the administrator thereof acting within the scope of the authority given to him under article 239 of the Constitution;

(9) "Chapter" shall mean a Chapter of the Act or regulation in which the word occurs;

(10) "Chief Controlling Revenue Authority" or "Chief Revenue Authority" shall mean-

(a) in a State where there is a Board of Revenue, that Board;

(b) in a State where there is a Revenue Commissioner, that Commissioner;

(இ) பஞ்சாபில், நிதி ஆணையர்; மற்றும்

(ஈ) வேறெங்கிலும், அரசமைப்பின் ஏழாம் இணைப்புப் பட்டியலில் உள்ள பட்டியல் I –இல் விவரிக்கப் பட்ட பொருட்பாடுகள் தொடர்பாக மைய அரசாங்கம் மற்றும் பிற பொருட்பாடுகள் தொடர்பாக மாநில அரசாங்கம், அதிகாரமுறை அரசிதழில் அறிவிக்கை வாயிலாக அமர்த்தலாகும் அதிகார அமைப்பு என்று பொருள்படும்;

(11) "ஆட்சியர்" (Collector) என்பது, மகாகாணத் தலைநகரைப் பொறுத்து, நேர்வுக்கேற்ப, கல்கத்தா, சென்னை அல்லது பம்பாய் ஆட்சியர் என்றும், வேறெங்கிலும், ஒரு மாவட்டத்தின் வருவாய்த்துறை நிருவாகத்தைப் பொறுப்பில் கொண்டுள்ள தலைமை அலுவலர் என்றும் பொருள்படும்;

(12) "குடியேற்ற நாடு" (Colony) என்பது –

(அ) இந்திய அரசாங்கச் சட்டம், 1935–இன் பகுதி III–இன் தொடக்கநிலைக்குப் பின்பு பிறப்பிக்கப்பட்ட மையச் சட்டம் எதிலும், பிரிட்டிஷ் தீவுகள் நீங்கலாக, மாட்சிமை தங்கிய அரசரின் தன்னாட்சியங்களின் பகுதி எதுவும், இந்தியா மற்றும் பாகிஸ்தானின்

(c) in Punjab, the Financial Commissioner; and

(d) else where, such authority as, in relation to matters enumerated in List I in the Seventh Schedule to the Constitution, the Central Government, and in relation to other matters, the State Government, may by notification in the Official Gazette, appoint;

(11) "Collector" shall mean, in a Presidency-town, the Collector of Calcutta, Madras or Bombay, as the case may be, and elsewhere the chief officer-in-charge of the revenue-administration of a district;

(12) "Colony"-

(a) in any Central Act passed after the commencement of Part III of the Government of India Act, 1935, shall mean any part of His Majesty's dominions exclusive of the British Islands, the Dominions of India and Pakistan (and before the establishment of

தன்னாட்சியங்கள் (மற்றும் அந்தத் தன்னாட்சியங்கள் நிறுவப்படுவதற்கு முன்பு பிரிட்டிஷ் இந்தியா) வெஸ்ட் மினிஸ்டர் சட்டம், 1931–இல் பொருள் வரையறை செய்யப்பட்டுள்ளவாறான தன்னாட்சியம் எதுவும், சொல்லப்பட்ட தன்னாட்சியங்களில் எவற்றின் பகுதியாகவும் அமைகிற ஏதேனும் மாகாணம் அல்லது மாநிலம், மற்றும் பிரிட்டிஷ் பர்மா என்று பொருள்படும், மற்றும்

(ஆ) சொல்லப்பட்ட சட்டத்தின் பகுதி III–இன் தொடக்க நிலைக்கு முன்பு பிறப்பிக்கப்பட்ட மையச் சட்டம் எதிலும், பிரிட்டிஷ் தீவுகள் மற்றும் பிரிட்டிஷ் இந்தியா நீங்கலாக, மாட்சிமை தங்கிய அரசின் தன்னாட்சியங்களின் பகுதி எதுவும் என்று பொருள்படும்.

மேலும், நோ்வுகள் இரண்டில் ஏதொன்றிலும், மைய மற்றும் மாநிலச் சட்டமன்றம் இரண்டின் கீழும் அந்தத் தன்னாட்சியங்களின் பகுதிகள் இருக்குமிடத்து, மையச் சட்டமன்றத்தின் கீழுள்ள பகுதிகள் அனைத்தும், இந்தப் பொருள்வரையறையின் நோக்கங்களைப் பொறுத்தவரை, ஒரே குடியேற்ற நாடாகக் கொள்ளப்படுதல் வேண்டும்;

(13) ஒரு சட்டம் அல்லது ஒழுங்குறுத்தும் விதி தொடர்பாகப் பயன்படுத்தப்படும் "தொடக்கநிலை" **(Commencement)** என்பது, அந்தச் சட்டம் அல்லது ஒழுங்குறுத்தும் விதி செல்லாற்றலுக்கு வரும் நாள் என்று பொருள்படும்;

---

those Dominions, British India), any Dominions as defined in the Statute of Westminster, 1931, any Province or State forming part of any of the said Dominions, and British Burma; and

(b) in any Central Act passed before the commencement of Part III of the said Act, means any part of His Majesty's dominions exclusive of the British Islands and of British India;

and in the either case where parts of those dominions are under both a Central and Local Legislature, all parts under the Central Legislature shall, for the purposes of this definition, be deemed to be one colony.

(13) "Commencement" used with reference to an Act or regulation, shall mean the day on which the Act or regulation comes into force;

(14) "ஆணையர்" (Commissioner) என்பது, கோட்டமொன்றில் வருவாய்த்துறை நிருவாகத்தைப் பொறுப்பில் கொண்டுள்ள தலைமை அலுவலர் என்று பொருள்படும்;

(15) "அரசமைப்பு" (Constitution) என்பது, இந்தியாவின் அரசமைப்பு என்று பொருள்படும்;

(16) "துணைத் தூதரக அலுவலர்" (Consular Officer) என்பது, தலைமைத் துணைத் தூதர், துணைத் தூதர், உதவித் துணைத் தூதர், துணைத் தூதரக முகவர், இணைத் துணைத் தூதர் ஆகியோரையும், தலைமைத் துணைத் தூதர், துணைத் தூதர், உதவித் துணைத் தூதர் அல்லது துணைத் தூதரக முகவர் ஆகியோரின் கடமைகளைப் புரிவதற்கு அப்போதைக்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ள நபர் எவரையும் உள்ளடக்கும்;

(17) "மாவட்ட நீதிபதி" (District Judge) என்பது, முதலேற்பு அதிகாரவரம்புடைய தலைமை உரிமையில் நீதிமன்றத்தின் நீதிபதி என்று பொருள்படும், ஆனால், அதன் இயல்பான அல்லது இயல்விகந்த முதலேற்பு உரிமையியல் அதிகாரவரம்பைச் செலுத்துகையில், ஓர் உயர் நீதிமன்றத்தை உள்ளடக்காது;

(18) "ஆவணம்" (document) என்பது, பொருட்பாடு எதையும் பதிவு செய்யும் நோக்கத்துக்காகப் பயன்படுத்தக் கருதப்படும் அல்லது பயன்படுத்தப்படலாகும் எழுத்துக்கள், எண்கள் அல்லது குறிகள் வாயிலாகவோ அந்த வழிகளில் ஒன்றுக்கு மேற்பட்டவற்றின் வாயிலாகவோ, பொருள் எதன்மீதும்

---

(14) "Commissioner" shall mean the chief officer-in-charge of the revenue administration of a division;

(15) "Constitution" shall mean the Constitution of India;

(16) "Consular officer" shall include consul-general, consul, vice-consul, consular agent, pro-consul and any person for the time being authorised to perform the duties of consul-general, consul, vice-consul or consular agent;

(17) "District Judge" shall mean the Judge of a principal civil court of original jurisdiction, but shall not include a High Court in the exercise of its ordinary or extraordinary original civil jurisdiction;

(18) "document" shall include any matter Written, expressed or described upon any substance by means of letters, figures or marks, or by more than one of those means which

எழுதப்பட்ட, வெளிப்படுத்தப்பட்ட அல்லது விவரிக்கப்பட்ட அந்தப் பொருட்பாட்டை உள்ளடக்கும்;

(19) "செய்சட்டம்" (enactment) என்பது, (இதில் இதற்குப் பின்பு பொருள்வரையறை செய்யப்பட்டவாறான) ஓர் ஒழுங்குமுறுத்தும் விதியையும், வங்காளம், சென்னை அல்லது பம்பாய் தொகுப்புச்சட்டத்தின் ஒழுங்குமுறுத்தும் விதி எதனையும் உள்ளடக்கும், மற்றும் சட்டம் எதிலும் அல்லது மேற்சொன்ன விதி எதிலும் அடங்கியுள்ள வகையம் எதையும்கூட உள்ளடக்கும்;

(20) "தந்தை" (father) என்பது, எவரொருவரின் இனமுறைச் சட்டம், மகவேற்பை அனுமதிக்கிறதோ, அவராக இருக்கும் நேர்வில், மகவேற்கும் தந்தையை உள்ளடக்கும்;

(21) "நிதியாண்டு" (financial year) என்பது ஏப்ரல் முதல் நாளிலிருந்து தொடங்குகிற ஆண்டு என்று பொருள்படும்;

(22) ஒரு காரியம் கவனமின்றி செய்யப்பட்டிருந்தாலும் இல்லை விட்டாலும் உண்மையில் அது நேர்மையாகச் செய்யப்பட்டிருக்குமிடத்து, அது "நல்லெண்ணத்தில்" (good faith) செய்யப்பட்டது என்று கொள்ளப்படுதல் வேண்டும்;

(23) "அரசாங்கம்" (Government) அல்லது "அந்த அரசாங்கம்" (the Government) என்பது, மைய அரசாங்கம், ஏதேனும் மாநில அரசாங்கம் ஆகிய இரண்டையும் உள்ளடக்கும்;

---

is intended to be used, or which may be used, for the purpose of recording that matter;

(19) "enactment" shall include a regulation (as hereinafter defined) and any regulation of the Bengal, Madras or Bombay Code, and shall also include any provision contained in any Act or in any such regulation as aforesaid;

(20) "father", in the case of any one whose personal law permits adoption, shall include an adoptive father;

(21) "financial year" shall mean the year commencing on the first day of April;

(22) a thing shall be deemed to be done in "good faith" where it is in fact done honestly, whether it is done negligently or not;

(23) "Government" or "the Government" shall include both the Central Government and any State Government;

(24) "அரசாங்கக் கடனீட்டு ஆவணங்கள்" (**Government securities**) என்பது, மைய அரசாங்கத்தின் அல்லது ஏதேனும் மாநில அரசாங்கத்தின் கடனீட்டு ஆவணங்கள் என்று பொருள்படும், ஆனால் அரசமைப்பின் தொடக்க நிலைக்கு முன்பு செய்யப்பட்ட சட்டம் அல்லது ஒழுங்குறுத்தும் விதி எதிலும், ஏதேனும் பகுதி "ஆ" மாநில அரசாங்கத்தின் கடனீட்டு ஆவணங்களை உள்ளடக்காது;

(25)உரிமையியல் நடவடிக்கைகள் தொடர்பாகப் பயன் படுத்தப்படும் "உயர் நீதிமன்றம்" (**High Court**) என்பது, அந்தச் சொற்றொடர் அடங்கிய சட்டம் அல்லது ஒழுங்குறுத்தும்விதி இந்தியாவின் எந்தப் பகுதியில் செயல்படுகிறதோ அந்தப் பகுதியிலுள்ள (உச்ச நீதிமன்றத்தை உள்ளடக்காத) மிக உயர்ந்த உரிமையியல் மேல்முறையீட்டு நீதிமன்றம் என்று பொருள்படும்;

(26)"நிலையியல் சொத்து" (**immovable property**) என்பது, நிலம், நிலத்திலிருந்து எழும் பயன்கள், மற்றும் பூமியுடன் சேர்ந்துள்ள, அல்லது பூமியுடன் சேர்ந்துள்ள எப்பொருளுடனும் நிலையாகப் பிணைக்கப் பட்டுள்ள, பொருள்களை உள்ளடக்கும்;

(27) "சிறைத்தண்டனை" (**imprisonment**) என்பது, இந்தியத் தண்டனைத் தொகுப்புச் சட்டத்தில் பொருள்வரையறை செய்யப்பட்ட வாறான இரண்டு விவரிப்புகளில் ஏதேனுமொன்று என்று பொருள்படும்;

(28)"இந்தியா" (**India**) என்பது –

---

(24) "Government securities" shall mean securities of the Central Government or of any State Government, but in any Act or regulation made before the commencement of the Constitution shall not include securities of the government of any Part B State;

(25) "High Court", used with reference to civil proceedings, shall mean the highest civil court of appeal (not including the Supreme Court) in the part of India in which the Act or regulation containing the expression operates;

(26) "immovable property" shall include land, benefits to arise out of land, and things attached to the earth, or permanently fastened to anything attached to the earth;

(27) "imprisonment" shall mean imprisonment of either description as defined in the Indian Penal Code;

(28) "India" shall mean-

(அ) இந்தியத் தன்னாட்சியம் நிறுவப்படுவதற்கு முன்பான காலஅளவு எதுவும் தொடர்பாக, மாட்சிமை தங்கிய அரசரின் மேலாட்சியின் கீழ் அப்போது இருந்த இந்திய அரசர்களின் அனைத்து ஆட்சி நிலவரைகளும், அத்தகைய ஓர் இந்திய அரசரின் மேலாட்சியின் கீழுள்ள அனைத்து ஆட்சி நிலவரைகளும், மற்றும் பழங்குடியினர் பகுதிகளும் சேர்ந்த பிரிட்டிஷ் இந்தியா,

(ஆ) இந்தியத் தன்னாட்சியம் நிறுவப்பட்டதற்குப் பின்பும் அரசமைப்பின் தொடக்க நிலைக்கு முன்புமான கால அளவு எது தொடர்பாகவும் அந்ததத் தன்னாட்சியத்தில் அப்போதைக்குச் சேர்க்கப்பட்டிருந்த ஆட்சிநிலவரைகள் அனைத்தும், மற்றும்

(இ) அரசமைப்பின் தொடக்கநிலைக்குப் பிந்தியதான கால அளவு எது தொடர்பாகவும் இந்திய ஆட்சி நிலவரையில் அப்போதைக்கு உள்ளடங்கியிருந்த ஆட்சிநிலவரைகள் அனைத்தும், என்று பொருள்படும்;

(29) "இந்தியச் சட்டம்" **(Indian Law)** என்பது, அரசமைப்பின் தொடக்கநிலைக்கு முன்பு இந்திய மாகாணம் எதிலும் அல்லது அதனுடைய பகுதி

(a) as respects any period before the establishment of the Dominion of India, British India together with all territories of Indian Rulers then under the suzerainty of His Majesty, all territories under the suzerainty of such an Indian Ruler, and the tribal areas;

(b) as respects any period after the establishment of the Dominion of India and before the commencement of the Constitution, all territories for the time being included in that Dominion; and

(c) as respects any period after the commencement of the Constitution, all territories for the time being comprised in the territory of India;

(29) "Indian law" shall mean any Act, ordinance, regulation, rule, order, bye-law or other instrument which before

எதிலும் சட்ட ஆற்றல் கொண்டிருந்ததாக அல்லது அதற்குப் பின்பு பகுதி 'அ' மாநிலம், அல்லது பகுதி 'இ' மாநிலம் அல்லது அவற்றின் பகுதி எதிலும் சட்ட ஆற்றல் கொண்டிருக்கிறதான சட்டம், அவசரச் சட்டம், ஒழுங்குறுத்தும்விதி, ஆணை, துணைவிதி அல்லது பிற முறையாவணம் எதுவும் என்றுபொருள்படும்; ஆனால் அப்க்கியக் கூட்டரசின் நாடாளுமன்றச் சட்டம் எதையும் அல்லது மன்றம் பிறப்பித்த ஆணை (Order in Council) அத்தகைய சட்டத்தின்படி செய்யப்பட்ட விதி அல்லது பிற முறையாவணம் எதையும் உள்ளடக்காது;

(30)"இந்தியக் குறுநிலம்" **(Indian State)** என்பது, அரசமைப்பின் தொடக்கநிலைக்கு முன்பு, ஒரு குறுநிலமாக, ஓர் உரிமைநிலச் சொத்தாக, ஒரு ஜாகீராக, அல்லது பிறவாறாக விவரிக்கப்பட்டிருந்தாலும், மைய அரசாங்கத்தால் அத்தகைய ஒரு குறுநிலம் என்று ஏற்பளிக்கப்பட்ட நிலப்பரப்பு எதுவும் என்று பொருள்படும்;

(31) "வட்டார அதிகார அமைப்பு" **(local authority)** என்பது, ஒரு நகராட்சியின் அல்லது வட்டாரத்தின் நிதியைக் கட்டாள்கை (Control) அல்லது மேலாண்மை செய்ய சட்டப்படி உரிமைக் கொண்ட அல்லது அரசாங்கத்தால் அந்தக் கட்டாள்கை அல்லது மேலாண்மை ஒப்படைக்கப்பட்டுள்ள, ஒரு நகராட்சி குழு, மாவட்ட வாரியம், துறைமுக ஆணையர்களின் குழுமம் அல்லது பிற அதிகார அமைப்பு எதுவும் என்று பொருள்படும்;.

(32)"குற்றவியல் நடுவர்" **(Magistrate)** என்பது அப்போதைக்குச் செல்லாற்றலிலிருக்கும் குற்றவியல் நெறிமுறைத் தொகுப்புச்

---

the commencement of the Constitution had the force of law in any Province of India or part thereof, or thereafter has the force of law in any Part A State or Part C State or Part thereof, but does not include any Act of Parliament of the United Kingdom or any Order in Council, rule or other instrument made under such Act;

(30) "Indian State" shall mean any territory which the Central Government recognised as such a State before the commencement of the Constitution, whether described as a State, an Estate, a Jagir or otherwise;

(31) "local authority" shall mean a municipal committee, district board, body of port commissioners or other authority legally entitled to, or entrusted by the government with the control or management of a municipal or local fund;

(32) "Magistrate" shall include every person exercising all or any of the powers of a Magistrate under the Code of

சட்டத்தின்படி ஒரு குற்றவியல் நடுவரின் அதிகாரம் அனைத்தையுமோ அல்லது அவற்றில் எவற்றையுமோ செலுத்துகிற நபர் ஒவ்வொருவரையும் உள்ளடக்கும்;

(33) கப்பல் ஒன்று தொடர்பாகப் பயன்படுத்தப்படும் "**தலைவர்**" **(master)** என்பது, அப்போதைக்கு கப்பலைத் தம் கட்டாள்கையில் அல்லது பொறுப்பில் கொண்டுள்ள (மாலுமி அல்லது துறைமுகத் தலைவர் தவிர) நபர் எவரும் என்று பொருள்படும்;

(34)"**இணைக்கப்பட்ட ஆட்சி நிலவரைகள்**" **(merged territories)** என்பது, இந்திய அரசாங்க சட்டம், 1935–இன் பிரிவு 290 'அ'–இன்படி பிறப்பிக்கப்பட்ட ஓர் ஆணையின் பயன்திறனால், அரசமைப்பின் தொடக்க நிலையை ஒட்டி முன்பு, ஓர் ஆளுநரின் மாகாணத்தின் ஒரு பகுதியாக அமைந் திருந்தாற் போன்று அல்லது ஒரு தலைமை மாகாணத்தின் ஒரு பகுதியாக அமைந் திருந்தாற்போன்று அல்து ஒரு தலைமை ஆணையரின் மாகாணமாக இருந்தாற் போன்று, எந்த ஆட்சி நிலவரைகள் நிருவகிக்கப்பட்டு வந்தனவோ அந்த ஆட்சி நிலவரைகள் என்று பொருள்படும்;

(35) "மாதம்" **(month)** என்பது, பிரிட்டிஷ் நாள்காட்டியின்படி கணக்கிடப்படும் ஒரு மாதம் என்று பொருள்படும்;

(36) "அசைவியல் சொத்து" **(movable property)** என்பது, நிலையியல் சொத்து அல்லாத ஒவ்வொரு விவரிப்பையுமுடைய சொத்து என்று பொருள்படும்;

Criminal Procedure for the time being in force;

(33) "master", used with reference to a ship, shall mean, any person (except a pilot or harbour-master) having for the time being control or charge of the ship;

(34) "merged territories" shall mean the territories which by virtue of an order made under section 290A of the Government of India Act, 1935, were immediately before the commencement of the Constitution being administered as if they formed part of a Governor's Province or as if they were a Chief Commissioner's Province;

(35) "month" shall mean a month reckoned according to the British calendar;

(36) "movable property" shall mean property of every description, except immovable property;

(37) "ஆணையுறுதி" (oath) என்பது, ஆணைமொழிதலுக்குப் பதிலாக, உறுதிமொழி செய்யவோ விளம்புகை செய்யவோ சட்டத்தினால் அனுமதிக்கப்படும் நபர்களாக இருக்கும் நேர்வில், உறுதிமொழியையும், விளம்புகையையும் உள்ளடக்கும்;

(38) "குற்றச்செயல்" (offence) என்பது அப்போதைக்குச் செல்லாற்றிலிலிருக்கும் சட்டம் எதனாலும் தண்டிக்கத்தக்கதாக ஆக்கப்பட்ட செயல் அல்லது விடுகை எதுவும் என்று பொருள்படும்;

(39) "அதிகாரமுறை அரசிதழ்" (Official Gazette) அல்லது "அரசிதழ்" (Gazette) என்பது, இந்திய அரசிதழ் அல்லது ஒரு மாநிலத்தின் அதிகாரமுறை அரசிதழ் என்று பொருள்படும்;

(40) "பகுதி" (Part) என்பது, எந்தச் சட்டம், அல்லது ஒழுங்குறுத்தும் விதியில், அந்தச் சொல் வருகிறதோ அந்தச் சட்டத்தின் அல்லது ஒழுங்குறுத்தும் விதியின் ஒரு பகுதி என்று பொருள்படும்;

(41) "பகுதி 'அ' மாநிலம்" (Part A State) என்பது அரசமைப்பு (ஏழாம் திருத்தம்) சட்டம், 1956-க்கு முன்பு செல்லாற்றலில் இருந்த அரசமைப்பின் முதலாம் இணைப்புப்பட்டியலின் பகுதி 'அ'-இல் அப்போதைக்குக் குறித்துரைக்கப்பட்ட ஒரு மாநிலம் என்று பொருள்படும். "பகுதி 'ஆ' மாநிலம்" என்பது, அந்த இணைப்புப் பட்டியலின் பகுதி 'ஆ'-இல் அப்போதைக்குக் குறித்துரைக்கப்பட்ட ஒரு மாநிலம் என்று பொருள்படும்; "பகுதி 'இ' மாநிலம்" என்பது, அந்த இணைப்புப் பட்டியலின் பகுதி 'இ'-இல் அப்போதைக்குக் குறித்துரைக்கப்பட்ட ஒரு மாநிலம்

---

(37) "oath" shall include affirmation and declaration in the case of persons by law allowed to affirm or declare instead of swearing;

(38) "offence" shall mean any act or omission made punishable by any law for the time being in force;

(39) "Official Gazette" or "Gazette" shall mean the Gazette of India or the Official Gazette of a State;

(40) "Part" shall mean a part of the Act or regulation in which the word occurs;

(41) "Part A State" shall mean a State for the time being specified in Part A of Schedule I to the Constitution, as in force before the Constitution (Seventh Amendment) Act, 1956, "Part B State" shall mean a State for the time being specified in Part B of that Schedule and "Part C State" shall mean a State for the time being specified in Part C of that

அல்லது அரசமைப்பின் உறுப்பு 243–இன் வகையங்களின்படி குடியரசுத் தலைவரால் அப்போதைக்கு நிருவகிக்கப்படும் ஓர் ஆட்சிநிலவரை என்று பொருள்படும்;

(42) "நபர்" **(person)** என்பது, நிறுமம் அல்லது கழகம் அல்லது தனி நபர்களின் குழுமம் எதையும், அது கூட்டுருமமாகப் பதிவு செய்யப் பட்டிருந்தாலும் இல்லையென்றாலும், உள்ளடக்கும்;

(43) "அரசியல் முகவர்" **(Political Agent)** என்பது, –

(அ) இந்தியாவுக்கு வெளியேயுள்ள ஆட்சிநிலவரை எது தொடர்பாகவுவம் அத்தகைய ஆட்சிநிலவரையில் மைய அரசாங்கத்தைச் சார்பாற்றம் செய்கிற தலைமை அலுவலர் எந்தப் பெயரால் அழைக்கப் பட்டாலும், அவர் என்றும்,

(ஆ) இந்தியாவினுள் இருக்கிற எந்த ஆட்சிநிலவரை தொடர்பாக அந்தச் சொற்றொடரைக் கொண்டுள்ள சட்டம் அல்லது ஒழுங்குறுத்துமிதி அளாவவில்லையோ அந்த ஆட்சி நிலவரை எது தொடர்பாகவும், அந்தச் சட்டம் அல்லது ஒழுங்குறுத்தும் விதியின் படி ஓர் அரசியல் முகவரின் அதிகாரங்கள் அனைத்தையுமோ அவற்றுள் எதையுமே செலுத்து வதற்காக மைய அரசாங்கத்தால் அமர்த்தப்பட்ட அலுவலர் எவரும், என்றும் பொருள்படும்;

Schedule or a territory for the time being administered by the President under the provisions of article 243 of the Constitution;

(42) "person" shall include any company or association or body of individuals, whether incorporated or not;

(43) "Political Agent" shall mean,-

(a) in relation to any territory outside India, the Principal Officer, by whatever name called, representing the Central Government in such territory; and

(b) in relation to any territory within India to which the Act or regulation containing the expression does not extend, any officer appointed by the Central Government to exercise all or any of the powers of a Political Agent under that Act or regulation;

(44) "மாகாணத் தலைநகர்" **(Presidency-town)** என்பது, நேர்வுக்கேற்ப, கல்கத்தா, சென்னை அல்லது பம்பாயில் இருக்கிற நீதித் துறையாட்சி உயர் நீதிமன்றத்தின் இயல்பான முதலேற்பு உரிமையியல் அதிகாரவரம்பில் அப்போதைக்கு இருக்கிற வட்டார எல்லைக்குள் உள்ளது என்று பொருள்படும்;

(45) "மாகாணம்" **(Province)** என்பது, ஒரு ராஜதானி, ஓர் ஆளுநரின் மாகாணம், ஒரு துணைநிலை ஆளுநரின் மாகாணம் அல்லது ஒரு தலைமை ஆளுநரின் மாகாணம் என்று பொருள்படும்;

(46) "மாகாணச் சட்டம்" **(Provincial Act)** என்பது, இந்தியச் சட்டமன்றங்களின் சட்டங்களில் ஏதேனுமொன்று அல்லது இந்திய அரசாங்கச் சட்டம், 1915–இன் படி ஒரு மாகாணத்தின் மன்றத்தமர் ஆளுநரால், மன்றத்தமர் துணை நிலை ஆளுநரால் அல்லது மன்றத்தமர் தலைமை ஆணையரால் செய்யப்பட்ட சட்டம் என்றும் அல்லது இந்திய அரசாங்கச் சட்டத்தின்படி வட்டாரச் சட்டமன்றத்தால் அல்லது மாகாண ஆளுநரால் செய்யப்பட்ட சட்டம் என்றும் அல்லது இந்திய அரசாங்கச் சட்டம், 1935–இன்படி மாகாண சட்டமன்றத்தாலோ ஒரு மாகாண ஆளுநராலோ, அல்லது குடகு நாட்டின் சட்டமன்ற மேலவையாலோ செய்யப்பட்ட ஒரு சட்டம் என்று பொருள்படும்;

(47) அரசமைப்பின் தொடக்கநிலைக்கு முன்பு செய்யப்பட்ட எது தொடர்பாகவும் "மாகாண அரசாங்கம்" **(Provincial Government)** என்பது, தொடர்புடைய தேதியில் பிரச்சினையிலுள்ள மாகாணத்திலுள்ள அரசாங்க ஆட்சித்

---

(44) "Presidency-town" shall mean the local limits for the time being of the ordinary original civil jurisdiction of the High Court of Judicature at Calcutta, Madras or Bombay, as the case may be;

(45) "Province" shall mean a Presidency, a Governor's Province, a Lieutenant Governor's Province or a Chief Commissioner's Province;

(46) "Provincial Act" shall mean an Act made by the Governor in Council, Lieutenant Governor in Council or Chief Commissioner in Council of a Province under any of the Indian Councils Acts or the Government of India Act, 1915, or an Act made by the Local Legislature or the Governor of a Province under the Government of India Act, or an Act made by the Provincial Legislature or Governor of a Province or the Coorg Legislative Council under the Government of India Act, 1935;

(47) "Provincial Government" shall mean, as respects anything done before the commencement of the Constitution,

துறையை நிருவகிப்பதற்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ள அதிகார அமைப்பு அல்லது நபர் என்று பொருள்படும்;

(48) "பொதுத் தொல்லை" (public nuisance) என்பது, இந்தியத் தண்டனைத் தொகுப்புச் சட்டத்தில் பொருள்வரையறை செய்யப்பட்ட வாறான பொதுத் தொல்லை என்று பொருள்படும்;

(49) ஆவணம் ஒன்று தொடர்பாகப் பயன்படுத்தப்படும் "பதிவு செய்யப்பட்ட" (registered) என்பது, ஆவணங்களைப் பதிவு செய்வதற்காக அப்போதைக்குச் செல்லாற்றலிலுள்ள சட்டத்தின்படி இந்தியாவில் பதிவு செய்யப் பட்ட என்று பொருள்படும்;

(50) "ஒழுங்குறுத்தும்விதி" (Regulation) என்பது, அரசமைப்பின் உறுப்பு 240–இன்படி குடியரசுத் தலைவரால் செய்யப்பட்ட ஒழுங் குறுத்தும்விதி என்று பொருள்படும், மற்றும் அதன் உறுப்பு 243–இன்படி குடியரசுத் தலைவரால் செய்யப்பட்ட ஒழுங்குறுத்தும்விதியையும் இந்திய அரசாங் கத் சட்டம், 1870 அல்லது இந்திய அரசாங்கச் சட்டம், 1915, அல்லது இந்திய அரசாங் கச் சட்டம், 1935–இன் படி மைய அரசாங்கத்தால் செய்யப்பட்ட ஓர் ஒழுங்குறுத் தும் விதியையும் உள்ளடக்கும்.

(51) "விதி" (rule) என்பது, செய் சட்டம் எதனாலும் வழங்கப் பட்ட அதிகாரம் ஒன்றைச் செலுத்திச் செய்யப்பட்ட விதி என்று பொருள்படும்; மற்றும் ஏதேனும் செய்சட்டத்தின்படியான ஒரு விதியைப்போன்று செய்யப்பட்ட ஓர் ஒழுங்குறுத்தும்விதியையும் உள்ளடக்கும்;

---

the authority or person authorised at the relevant date to administer executive government in the Province in question;

(48) "public nuisance" shall mean a public nuisance as defined in the Indian Penal Code;

(49) "registered", used with reference to a document, shall mean registered in India under the law for the time being in force for the registration of documents;

(50) "Regulation" shall mean a Regulation made by the President under article 240 of the Constitution and shall include a Regulation made by the President under article 243 thereof and a regulation made by the Central Government under the Government of India Act, 1870, or the Government of India Act, 1915, or the Government of India Act, 1935;

(51) "rule" shall mean a rule made in exercise of a power conferred by any enactment, and shall include a Regulation made as a rule under any enactment;

(52) "இணைப்புப்பட்டியல்" (schedule) என்பது, எந்தச் சட்டம் அல்லது ஒழுங்குறுத்தும் விதியின் இணைப்புப்பட்டியலில் அந்தச் சொல் வருகிறதோ அந்தச் சட்டத்தின் அல்லது ஒழுங்குறுத்தும்விதியின் ஓர் இணைப்புப் பட்டியல் என்று பொருள்படும்;

(53)"பட்டியலில் கண்ட மாவட்டம்" (Scheduled District) என்பது, பட்டியலில் கண்ட மாவட்டங்கள் சட்டம், 1874-இல் பொருள்வரையறை செய்யப்பட்டவாறான "பட்டியலில் கண்ட மாவட்டங்கள்" என்று பொருள்படும்;

(54) "பிரிவு" (Section) என்பது, எந்தச் சட்டம் அல்லது ஒழுங்குறுத்தும்விதியில் அந்தச் சொல் வருகிறதோ அந்தச் சட்டத்தின் அல்லது ஒழுங்குறுத்தும் விதியின் பிரிவு என்று பொருள்படும்;

(55) "கப்பல்" (ship) என்பது, துடுப்புக்களினால் மட்டுமே முன் செலுத்தப்படாமல் கடற்பயணத்தில் பயன்படுத்தப்படும் கலத்தின் ஒவ்வொரு விவரிப்பையும் உள்ளடக்கும்;

(56) தம்முடைய பெயரை எழுத இயலாத ஒரு நபர் தொடர்பாக "கையொப்பம்" (sign) என்பது, அதன் இலக்கண வேறுபாடுகளுடனும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த சொற்றொடர்களுடனும், "கைநாட்டுக்குறியை" (mark) அதன் இலக்கண வேறுபாடுகளுடனும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த சொற்றொடர் களுடனும் உள்ளடக்கும்;

(57) "மகன்" (son) என்பது எவரொருவரின் இனமுறைச் சட்டம் மகவேற்பை அனுமதிக்கிறதோ அவராக இருக்கும் நேர்வில், ஏற்பு மகனை உள்ளடக்கும்;

---

(52) "schedule" shall mean a schedule to the Act or Regulation in which the word occurs;

(53) "Scheduled District" shall mean a "Scheduled District" as defined in the Scheduled District Act, 1874;

(54) "section" shall mean a section of the Act or Regulation in which the word occurs;

(55) "ship" shall include every description of vessel used in navigation not exclusively propelled by oars;

(56) "sign", with its grammatical variations and cognate expressions, shall, with reference to a person who is unable to write his name, include "mark", with its grammatical variations and cognate expressions;

(57) "son" in the case of any one whose personal law permits adoption, shall include an adopted son;

(58) "மாநிலம்" (State) என்பது,-

(அ) அரசமைப்பு (ஏழாம் திருத்தம்) சட்டம், 1956-இன் தொடக்கநிலைக்கு முந்திய காலஅளவு எதுவும் தொடர்பாக பகுதி 'அ' மாநிலம், பகுதி 'ஆ' மாநிலம் அல்லது பகுதி 'இ' மாநிலம் என்று பொருள்படும்; மற்றும்

(ஆ) அத்தகைய தொடக்கநிலைக்குப் பிந்திய கால அளவு எதுவும் தொடர்பாக அரசமைப்பின் முதலாம் இணைப்புப்பட்டியலில் குறித்துரைக்கப்பட்ட ஒரு மாநிலம் என்று பொருள்படும், மேலும், ஓர் ஒன்றியத்து ஆட்சி நிலவரையையும் உள்ளடக்கும்;

(59) "மாநில சட்டம்" (State Act) என்பது, அரசமைப்பி னால் நிறுவப்பட்ட அல்லது தொடர்ந்திருக்கும் ஒரு மாநிலச் சட்டமன்றத்தினால் நிறைவேற்றப்பட்ட ஒரு சட்டம் என்று பொருள்படும்;

(60) "மாநில அரசாங்கம்" (State Government) என்பது,-

(அ) அரசமைப்பின் தொடக்க நிலைக்கு முன்பு செய்யப் பட்ட எது தொடர்பாகவும் பகுதி 'அ' மாநிலத்தில் நேரிணையான மாகாணத்தின் மாகாண அரசாங்கம்

---

(58) "State"-

(a) as respects any period before the commencement of the Constitution (Seventh Amendment) Act, 1956, shall mean a Part A State, a Part B State or a Part C State; and

(b) as respects any period after such commencement, shall mean a State specified in Schedule I to the Constitution and shall include a Union Territory;]

(59) "State Act" shall mean an Act passed by the Legislature of a State established or continued by the Constitution;

(60) "State Government"-

(a) as respects anything done before the commencement of the Constitution, shall mean, in a Part A State, the Provincial Govern-

என்றும், பகுதி 'ஆ' மாநிலத்தில், தொடர்புடைய தேதியில், நேரிணையான இணைந்த மாநிலத்தில் அரசாங்க ஆட்சித்துறையை நடத்துவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட அதிகார அமைப்பு அல்லது நபர் என்றும், பகுதி 'இ' மாநிலத்தில் மைய அரசாங்கம் என்றும் பொருள்படும்;

(ஆ) அரசமைப்பின் தொடக்க நிலைக்குப் பின்பும் அரசமைப்பின் (ஏழாவது திருத்தம்) சட்டம், 1956–இன் தொடக்கநிலைக்கு முன்பும் செய்யப்பட்ட எதன் தொடர்பாகவும், பகுதி 'அ' மாநிலத்தில் ஆளுநர் என்றும், பகுதி 'ஆ' மாநிலத்தில் இராசப்பிரமுக என்றும், பகுதி 'இ' மாநிலத்தில் மைய அரசாங்கம் என்றும் பொருள்படும்,

(இ) அரசமைப்பு (ஏழாம் திருத்தம்) சட்டம், 1956–இன் தொடக்க நிலைக்குப் பின்பு செய்யப்பட்ட அல்லது செய்யப்பட வேண்டிய எது தொடர்பாகவும், ஒரு மாநிலத்தில் ஆளுநர் என்றும், ஓர் ஒன்றியத்து ஆட்சிநிலவரையில் மைய அரசாங்கம் என்றும், பொருள்படும்;

---

ment of the corresponding Province, in a Part B State, the authority or person authorised at the relevant date to exercise executive government in the corresponding Acceding State, and in a Part C State, the Central Government;

(b) as respects anything done after the commencement of the Constitution and before the commencement of the Constitution (Seventh Amendment) Act, 1956, shall mean, in a Part A State, the Governor in a Part B State, the Rajpramukh, and in a Part C State, the Central Government;

(c) as respects anything done or to be done after the commencement of the Constitution (Seventh Amendment) Act, 1956, shall mean, in a State, the Governor, and in a Union Territory, the Central Government;

மேலும், அரசமைப்பின் உறுப்பு 258அ-இன்படி அரசாங்கத்திடம் ஒப்படைக்கப்பட்ட செயற்பணிகள் தொடர்பாக அந்த உறுப்பின்படி அதற்கு அளிக்கப்பட்ட அதிகார வீச்சுக்குள் செயலுறுகின்ற மைய அரசாங்கத்தை உள்ளடக்கும்,

(61) "உட்பிரிவு" **(sub-section)** என்பது, எந்தப் பிரிவின் உட்பிரிவில் அந்தச் சொல் வருகிறதோ அந்தப் பிரிவின் உட்பிரிவு என்று பொருள்படும்;

(62) இலக்கண வேறுபாடுகளுடனும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த சொற்றொடர்களுடனும், "ஆணைமொழி" **(swear)** என்பது ஆணை மொழிதலுக்குப் பதிலாக உறுதிமொழி செய்ய, அல்லது விளம்புகை செய்ய, சட்டத்தினால் அனுமதிக்கப்பட்ட நபர்களாக இருக்கும் நேர்வில் உறுதி மொழியையும், விளம்புகையையும் உள்ளடக்கும்,

(62அ) "ஒன்றியத்து ஆட்சிநிலவரை" **(Union territory)** என்பது அரசமைப்பின் முதலாம் இணைப்புப்பட்டியலில் குறித்துரைக்கப்பட்டுள்ள ஒன்றியத்து ஆட்சிநிலவரை என்று பொருள்படும், மேலும் இந்திய ஆட்சி நிலவரையில் அடங்கியுள்ள, ஆனால் இணைப்புப்பட்டியலில் குறித்துரைக்கப்படாத பிற ஆட்சிநிலவரை எதனையும் உள்ளடக்கும்;

(63) "கலம்" **(vessel)** என்பது, கடற்பயணத்தில் பயன்படுத்தப்படும் கப்பல், அல்லது படகு அல்லது பிற விவரிப்புடைய கலம் எதனையும் உள்ளடக்கும்;

---

and shall, in relation to functions entrusted under article 258A of the Constitution to the Government of India, include the Central Government acting within the scope of the authority given to it under that article;

(61) "sub-section" shall mean a sub-section of the section in which the word occurs;

(62) "swear", with its grammatical variations and cognate expressions, shall include affirming and declaring in the case of persons by law allowed to affirm or declare instead of swearing;

(62A) "Union Territory" shall mean any Union Territory specified in Schedule I to the Constitution and shall include any other territory comprised within the territory of India but not specified in that Schedule;

(63) "vessel" shall include any ship or boat or any other description of vessel used in navigation;

(64) "உயில்" (Will) என்பது ஓர் உயிலின் பிற்சேர்க்கையையும், இறந்த பின்பு நிகழவேண்டுமென தம் விருப்பாகச் சொத்து ஏற்பாட்டைச் செய்யும் எழுத்திலான ஒவ்வொன்றையும் உள்ளடக்கும்

(65) "எழுதுதல்" (writing) என்பதைச் சுட்டும் சொற் றொடர்கள், அச்சு, கல்லச்சு, ஒளிப்படம் மற்றும் காணக்கூடிய ஒரு வடிவத்தில், சொற்களை எடுத்துக்காட்டுகிற அல்லது சொற்களுக்கு மறுஉருவளிக்கிற பிற முறைகளையும் உள்ளடக்குவதாகப் பொருள்கொள்ளப்படுதல் வேண்டும்; மற்றும்

(66) "ஆண்டு" (year) என்பது பிரிட்டிஷ் நாள்காட்டியின் படி கணக்கிடப்பட்ட ஓர் ஆண்டு என்று பொருள்படும்.

பிரிவு 4 - முந்திய செய்சட்டங்களுக்கு முன்சென்ற பொருள் வரையறைகள் பொருந்துதல் (Application of foregoing definitions in previous enactments).- (1) பிரிவு 3–லுள்ள பின்வரும் சொற்கள் மற்றும் சொற்றொடர்களுக்கு, அதாவது, "ஆணையுறுதி ஆவணம்", "பாரிஸ்டர்", "மாவட்ட நீதிபதி", "தந்தை", "நிலையியல் சொத்து", "சிறைத் தண்டனை", "குற்றவியல் நடுவர்", "மாதம்", "அசைவியல் சொத்து", "ஆணை யுறுதி", "நபர்", "பிரிவு", "மகன்", "ஆணைமொழி", "உயில்", மற்றும் "ஆண்டு" என்பனவற்றிற்கான பொருள்வரையறைகளானவை, பொருளாலோ அல்லது சூழ்நிலையிலோ முரணானது எதுவும் இருந்தாலன்றி, 1868, சனவரி மூன்றாம் நாளுக்குப் பின்பு செய்யப்பட்ட மையச் சட்டங்கள் அனைத்திற்கும், மற்றும் 1887,

---

(64) "will" shall include a codicil and every writing making a voluntary posthumous disposition of property;

(65) expression referring to "writing" shall be construed as including references to printing, lithography, photography and other modes of representing or reproducing words in a visible form; and

(66) "year" shall mean a year reckoned according to the British calendar.

4. Application of foregoing definitions to previous enactment.- (1) The definitions in section 3 of the following words and expressions, that is to say, "affidavit", "barrister", "District Judge", "father", "immovable property", "imprisonment", "Magistrate", "month", "movable property", "oath", "person", "section", "son", "swear", "will", and "year" apply also, unless there is anything repugnant in the subject or context, to all Central Acts made after the third day of January, 1868,

சனவரி பதினான்காம் நாளன்று அல்லது அதற்குப் பின்பு செய்யப்பட்ட அனைத்து ஒழுங்குறுத்தும் விதிகளுக்கும் கூடப் பொருந்தும்.

(2) மேற்சொல்லப்பட்ட பிரிவில் உள்ள பின்வரும் சொற்கள் மற்றும் சொற்றொடர்களுக்கான, அதாவது, "உடந்தையாயிரு", "அத்தியாயம்", "தொடக்கநிலை", "நிதியாண்டு", "வட்டார அதிகார அமைப்பு", "தலைவர்", "குற்றச் செயல்", "பகுதி", "பொதுத் தொல்லை", "பதிவு செய்யப்பட்ட", "இணைப்புப் பட்டியல்", "கப்பல்", "கையொப்பம்", "உட்பிரிவு", "எழுதுதல்", என்பனவற்றிற்கான பொருள்வரையறைகளானவை, பொருளிலோ அல்லது சூழ்நிலையிலோ முரணானது எதுவும் இருந்தாலன்றி, 1887, சனவரி பதினான்காம் நாளில் அல்லது அதற்குப் பின்பு செய்யப்பட்ட மையச் சட்டங்கள் மற்றும் அனைத்து ஒழுங்குறுத்தும்விதிகளுக்கும் கூடப் பொருந்தும்.

பிரிவு 4அ - இந்தியச் சட்டங்களுக்குக் குறித்த சில பொருள் வரையறைகள் பொருந்துதல் (Application of certain definitions to Indian Laws.- (1) பிரிவு 3-லுள்ள, "பிரிட்டிஷ் இந்தியா", "மையச் சட்டம்", "மைய அரசாங்கம்", "வருவாய்துறைக் கட்டுப்பாட்டுத் தலைமை அதிகார அமைப்பு", "வருவாய்த்துறைத் தலைமை அதிகார அமைப்பு", "அரசமைப்பு", "அரசிதழ்", "அரசாங்கம்", "அரசாங்கக் கடனீட்டு ஆவணங்கள்", "உயர் நீதிமன்றம்", "இந்தியா", "இந்தியச் சட்டம்", "இந்தியக் குறுநிலம்", "இணைக்கப் பட்ட ஆட்சி நிலவரைகள்", "அதிகாரமுறை அரசிதழ்", "பகுதி 'அ' மாநிலம்", "பகுதி 'ஆ'

and to all regulations made on or after the fourteenth day of January, 1887.

(2) The definitions in the said section of the following words and expressions, that is to say, "abet", "chapter", "commencement", "financial year", "local authority", "master", "offence", "part", "public nuisance", "registered", "schedule", "ship", "sign", "sub-section" and "writing" apply also, unless there is anything repugnant in the subject or context, to all Central Acts and Regulations made on or after the fourteenth day of January, 1887.

4A. Application of certain definitions to Indian laws.- (1) The definitions in section 3 of the expressions "British India", "Central Act", "Central Government", "Chief Controlling Revenue Authority", "Chief Revenue Authority", "Constitution", "Gazette", "Government", "Government securities", "High Court", "India", "Indian law", "Indian State", "merged territories", "Official Gazette", "Part A State", "Part B State", "Part C State", "Provincial Government", "State", and "State

மாநிலம்", "பகுதி 'இ' மாநிலம்", "மாகாண அரசாங்கம்", "மாநிலம்", மற்றும் "மாநில அரசாங்கம்" என்ற சொற்றொடர்களின் பொருள்வரையறைகளானவை, பொருளிலோ அல்லது சூழ்நிலையிலோ முரணானது எதுவும் இருந்தாலன்றி இந்தியச் சட்டங்கள் அனைத்திற்கும் பொருந்தும்.

(2) இந்தியச் சட்டம் எதிலுமுள்ள, சொற்களின் வடிவம் எவ்வாறிருப்பினும், மைய அரசாங்கத்தின் அல்லது மாநில அரசாங்கத்தின் வருவாய்கள் குறித்த சுட்டுகைகளானவை, 1950, ஏப்ரல் முதல் தேதியன்றும் அது முதற்கொண்டும் இந்தியத் திரள் நிதியம் அல்லது, நேர்வுக்கேற்ப, மாநிலத் திரள் நிதியம் குறித்த சுட்டுகைகளாகக் பொருள் கொள்ளப்படுதல் வேண்டும்.

பொருள்கொள்ளல் பற்றிய பொது விதிகள்
[General Rules of Construction]

பிரிவு 5 - செய்சட்டங்கள் செயற்பாட்டுக்கு வருதல் (Coming into operation of enactments).- (1) மையச் சட்டமெதுவும், ஒரு குறிப்பிட்ட நாளன்று செயற்பாட்டுக்கு வருமென்று வெளிப்படுத்தப்படாதவிடத்து, அது-

(அ) அரசமைப்பின் தொடக்க நிலைக்கு முன்பு செய்யப்பட்ட ஒரு மையச் சட்டமாக இருக்கும் நேர்வில், ஆளுநர் தலைவரின் மற்றும்

Government" shall apply, unless there is anything repugnant in the subject or context, to all Indian laws.

(2)In any Indian law, references, by whatever form of words, to revenues of the Central Government or to any State Government shall, on and from the first day of April, 1950, be construed as references to the Consolidated Fund of India or the Consolidated Fund of the State, as the case may be.

GENERAL RULES OF CONSTRUCTION

5. Coming into operation of enactment.- (1) Where any Central Act is not expressed to come into operation on particular day, then it shall come into operation on the day on which it receives the assent-

(a) in the case of a Central Act made before the comencement of the Constitution, of the Governor-General, and

(ஆ) நாடாளுமன்றத்தின் ஒரு சட்டமாக இருக்கும் நேர்வில், குடியரசுத் தலைவரின்

ஏற்பிசைவை எந்த நாளன்று பெறுகிறதோ அந்த நாளன்று செயற்பாட்டுக்கு வரும்.

(2) (நீக்கறவு செய்யப்பட்டது)

(3) மாறானது வெளிப்படுத்தப்பட்டாலன்றி, ஒரு மையச் சட்டம் அல்லது ஒழுங்குறுத்தும்விதியானது, அதன் தொடக்கத்துக்கு முந்திய நாள் முடிந்த உடனே செயற்பாட்டுக்கு வருவதாகப் பொருள்கொள்ளப்படுதல் வேண்டும்.

(5அ) (நீக்கறவு செய்யப்பட்டது)

பிரிவு 6 - நீக்கறவு செய்வதன் விளைவு (Effect of Repeal).- இந்தச் சட்டம் அல்லது இந்தச் சட்டத்தின் தொடக்கநிலைக்குப் பின்பு செய்யப்பட்ட மையச் சட்டம் அல்லது ஒழுங்குறுத்தும்விதி எதுவும், இதுவரை செய்யப்பட்ட அல்லது இதற்குப் பின்பு செய்யப்படவிருக்கிற செல் சட்டம் எதனையும் நீக்கறவு செய்யுமிடத்து, மாறுபட்ட கருத்து தோன்றினாலன்றி, அந்த நீக்கறவானது-

(அ) அந்த நீக்கறவு எந்த நேரத்தில் செல்திறம் பெறுகிறதோ அந்த நேரத்தில் செல்லாற்றலில் இராத அல்லது இருந்திராத எதற்கும் புத்துயிரளித்தலாகாது; அல்லது

(b) in the case of an Act of Parliament, of the President.

(2) (Repealed)

(3) Unless the contrary is expressed, a Central Act or Regulation shall be construed as coming into operation immediately on the expiration of the day preceding its commencement.

5A. Coming into operation of Governor-General's Act .- *[Repealed by the AO, 1947]*

6. Effect of repeal.- Where this Act, or any Central Act or Regulation made after the commencement of this Act, repeals any enactment hitherto made or hereafter to be made, then, unless a different intention appears, the repeal shall not-

(a) revive anything not in force or existing at the time at which the repeal takes effect; or

(ஆ) அவ்வாறு நீக்கறவு செய்யப்பட்ட ஏதேனும் செய்சட்டத்தின் முந்திய செயற்பாட்டினை அல்லது அதன்படி முறையாகச் செய்யப்பட்ட அல்லது இசைவளிக்கப்பட்ட எதனையும் பாதித்தலாகாது; அல்லது

(இ) அவ்வாறு நீக்கறவு செய்யப்பட்ட செய்சட்டம் எதன்படியும் பெறப்பட்ட, வந்தடைந்த அல்லது மேற்கொள்ளப்பட்ட உரிமை, சிறப்புரிமை, கடப்பாடு அல்லது பொறுப்பு எதனையும் பாதித்தலாகாது; அல்லது

(ஈ) அவ்வாறு நீக்கறவு செய்யப்பட்ட செய்சட்டம் எதற்கும் எதிராகச் செய்யப்பட்ட குற்றச்செயல் எதைப் பொறுத்தும் உள்ளாகியிருக்கிற தண்டம், தண்ட இழப்பு அல்லது தண்டனை எதனையும் பாதித்தலாகாது; அல்லது

(உ) மேற்சொன்ன உரிமை, சிறப்புரிமை, கடப்பாடு, பொறுப்பு தண்டம், தண்ட இழப்பு அல்லது தண்டனை எதனையும் பொறுத்த புலனாய்வு, சட்ட நடவடிக்கை அல்லது தீருதவி எதனையும் பாதித்தலாகாது

மற்றும், நீக்கறவு செய்யும் சட்டம் அல்லது ஒழுங்குறுத்தும்விதி இயற்றப்படாதிருந் தாற் போன்றே அத்தகைய புலனாய்வு, சட்ட நடவடிக்கை அல்லது தீருதவி எதுவும் தொடரப்படலாம், தொடர்ந்து நடத்தப்படலாம் அல்லது செயலுறுத்தப்படலாம், மற்றும் அத்தகைய தண்டம், தண்ட இழப்பு அல்லது தண்டனை எதுவும் விதிக்கப்படலாம்

(b) affect the previous operation of any enactment so repealed or anything duly done or suffered thereunder; or

(c) affect any right, privilege, obligation or liability acquired, accrued or incurred under any enactment so repealed; or

(d) affect any penalty, forfeiture or punishment incurred in respect of any offence committed against any enactment so repealed;or

(e) affect any investigation, legal proceeding or remedy in respect of any such right, privilege, obligation, liability, penalty, for feiture or punishment as aforesaid;

and any such investigation, legal proceeding or remedy may be instituted, continued or enforced, and any such penalty, forfeiture or punishment may be imposed as if the repealing Act or Regulation had not been passed.

பிரிவு 6அ - சட்டம் அல்லது ஒழுங்குறுத்தும் விதியின் வாசகத்தைத் திருத்தம் செய்யும் சட்டத்தை நீக்கறவு செய்தல் (Repeal of Act making textual amendments in Act of or Regulation).- எந்தச் செய்சட்டத்தினால் பொருட்பாடு எதையும் வெளிப்படையாக விடுத்தோ, புகுத்தியோ, அல்லது மாற்றமைவு செய்தோ ஏதேனும் மையச் சட்டம் அல்லது ஒழுங்குறுத்தும் விதியின் வாசகம் திருத்தம் செய்யப்பட்டதோ அந்த செய் சட்டத்தை, இந்தச் சட்டத்தின் தொடக்கநிலைக்குப் பின்பு செய்யப்பட்ட மையச் சட்டம் அல்லது ஒழுங்குறுத்தும்விதி எதுவும் நீக்கறவு செய்யுமிடத்து, மாறுபட்ட கருத்து தோன்றினாலன்றி, அந்த நீக்கறவானது, அவ்வாறு நீக்கறவு செய்யப் பட்ட செய்சட்டத்தின் மூலம் செய்யப்பட்டதும், அத்தகைய நீக்கறவு செய்யப்பட்ட காலத்தில் செயற்பாட்டில் இருந்ததுமான திருத்தம் எதுவும் தொடர்ந்திருப்பதைப் பாதிக்கலாகாது.

பிரிவு 7 - நீக்கறவு செய்யப்பட்ட செய்சட்டங்களுக்குப் புத்துயிர் அளித்தல் (Revival of repealed enactments).- (1) இந்தச் சட்டத்தின் தொடக்கநிலைக்குப் பின்பு செய்யப்பட்ட மையச் சட்டம் அல்லது ஒழுங்குறுத்தும்விதி எதிலும், முழுமையாகவோ பகுதியாகவோ நீக்கறவு செய்யப் பட்ட செய்சட்டம் எதற்கும் முழுமையாகவோ பகுதியாகவோ புத்துயிர் அளிக்கும் நோக்கத்திற்காக, அந்த நோக்கத்தை வெளிப்படையாக உரைத்தல் தேவையாகும்.

(2) இந்தப் பிரிவு, 1868, சனவரி மூன்றாம் நாளுக்குப் பின்பு செய்யப் பட்ட அனைத்து மையச் சட்டங்களுக்கும், 1887, சனவரி பதினான்காம் நாளன்று அல்லது அதற்குப் பிறகு செய்யப்பட்ட அனைத்து ஒழுங்குறுத்தும் விதிகளுக்கும் கூடப் பொருந்தும்.

6A. Repeal of Act making textual amendment in Act or Regulation.-Where any Central Act or Regulation made after the commencement of this Act repeals any enactment by which the text of any Central Act or Regulation was amended by the express omission, insertion or substitution of any matter, then, unless a different intention appears, the repeal shall not affect the continuance of any such amendment made by the enactment so repealed and in operation at the time of such repeal.

7. Revival of repealed enactment.- (1) In any Central Act or Regulation made after the commencement of this Act, it shall be necessary, for the purpose of reviving, either wholly or partially, any enactment wholly or partially repealed, expressly to state that purpose.

(2) This section applies also to all Central Acts made after the third day of January, 1868, and to all Regulations made on or after the fourteenth day of January, 1887.

பிரிவு 8 - நீக்கறவு செய்யப்பட்ட செய்சட்டங்களைப் பற்றிய சுட்டுகைகளைப் பொருள்கொள்ளுதல் (Construction of references to repealed enactments).- (1) இந்தச் சட்டம் அல்லது சட்டத்தின் தொடக்கநிலைக்குப் பின்பு செய்யப்பட்ட மையச் சட்டம் அல்லது ஒழுங் குறுத்தும் விதி எதுவும், முந்திய ஒரு செய்சட்டத்தின் வகையம் எதனையும் நீக்கறவு செய்து மாற்றமைவுகளுடனோ, இல்லாமலோ மறுபடியும் இயற்றுமிடத்து, அவ்வாறு நீக்கறவு செய்யப்பட்ட வகையங்களைப் பொறுத்து பிற செய் சட்டம் எதிலும் அல்லது முறையாவணம் எதிலும் உள்ள சுட்டுகைகள், மாறுபட்ட கருத்து தோன்றிலான்றி, அவ்வாறு மறுபடியும் இயற்றப்பட்ட வகையத்தைப் பொறுத்த சுட்டுகைகளாகப் பொருள் கொள்ளப்படுதல் வேண்டும்.

(2) 1947, ஆகஸ்ட் பதினைந்தாம் நாளுக்கு முன்பு, அய்க்கியக் கூட்டரசின் நாடாளுமன்றச் சட்டம் எதுவும், முந்திய செய்சட்டமொன்றின் வகையம் எதையும் நீக்கறவு செய்து, மாற்றமைவுகளுடனோ இல்லாமலோ மீண்டும் இயற்றுமிடத்து, அவ்வாறு நீக்கறவு செய்யப்பட்ட வகையத்தைப் பொறுத்து மையச் சட்டம் எதிலும் அல்லது ஒழுங்குறுத்தும்விதி அல்லது முறையாவணம் எதிலும் உள்ள சுட்டுகைகள், மாறுபட்ட கருத்து தோன்றிலான்றி அவ்வாறு மறுபடியும் இயற்றப்பட்ட வகையத்தைப் பொறுத்த சுட்டுகைகளாகப் பொருள் கொள்ளப்படுதல் வேண்டும்.

பிரிவு 9 - காலம் தொடங்குதலும் முடிவுறுதலும் (Commencement and termination of time).- (1) இந்தச் சட்டத்தின் தொடக்க

---

8. Construction of references to repealed enactments.- (1) Where this Act, or any Central Act or Regulation made after the commencement of this Act, repeals and re-enacts, with or without modification, any provision of a former enactment, then references in any other enactment or in any instrument to the provision so repealed shall, unless a different intention appears, be construed as references to the provision so re-enacted.

(2) Where before the fifteenth day of August, 1947, any Act of Parliament of the United Kingdom repealed and re-enacted, with or without modification, any provision of a former enactment, then references in any Central Act or in any Regulation or instrument to the provision so repealed shall, unless a different intention appears, be construed as references to the provision so re-enacted

9. Commencement and termination of time.- (1) In any Central Act or Regulation made after the commence

நிலைக்குப் பின்பு செய்யப்பட்ட மையச் சட்டம் அல்லது ஒழுங்குறுத்தும்விதி, எதிலும், நாட்களின் ஒரு தொடர் அல்லது பிற காலஅளவு எதிலும் முதல்நாளை நீக்கும் நோக்கத்திற்காக "இருந்து" (from) என்ற சொல்லைப் பயன்படுத்துவதும், மற்றும் நாட்களின் ஒரு தொடர் அல்லது பிற காலஅளவு எதிலும் கடைசி நாளைச் சேர்க்கும் நோக்கத்திற்காக "வரை" (to) என்ற சொல்லைப் பயன்படுத்துவதும் போதுமானதாகும்.

(2) இந்தப் பிரிவு, 1868, சனவரி மூன்றாம் நாளுக்குப் பின்பு செய்யப்பட்ட மையச் சட்டங்கள் அனைத்திற்கும், 1887, சனவரி பதினான்காம் நாளன்று அல்லது அதற்குப் பின்பு செய்யப்பட்ட ஒழுங்குறுத்தும்விதிகள் அனைத்திற்கும் கூடப் பொருந்தும்.

பிரிவு 10 - காலத்தைக் கணக்கிடுதல் (Computation of time).- (1) இந்தச் சட்டத்தின் தொடக்க நிலைக்குப் பின்பு செய்யப்பட்ட மையச் சட்டம் அல்லது ஒழுங்குறுத்தும்விதி எதனாலும், குறித்ததொரு நாளில் அல்லது வகுத்துரைக்கப்பட்ட ஒரு கால அளவுக்குள், நீதிமன்றம் அல்லது அலுவலகம் எதிலும், செயல் எதுவும் செய்யப்படவேண்டுமென்று பணிக்கப்பட்டிருக்குமிடத்து அல்லது நடவடிக்கை எதுவும் எடுக்கப்படுவதற்கு அனுமதிக்கப்பட்டிருக்குமிடத்து அந்த நாளன்று அல்லது வகுத்துரைக்கப்பட்ட கால அளவில் கடைசி நாளன்று, அந்த நீதிமன்றம் அல்லது அலுவலகம் மூடப்பட்டிருக்குமாயின், அந்தச் செயல் அல்லது நடவடிக்கை, அந்த நீதிமன்றம் அல்லது அலுவலகம் திறக்கப்பட்டதற்குப் பின்பு அடுத்த நாளன்று செய்யப்பட்டிருக்குமாயின், அல்லது எடுக்கப்பட்டிருக்குமாயின், அது உரிய காலத்தில் செய்யப்பட்டிருப்பதாக அல்லது எடுக்கப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்:

---

ment of this Act, it shall be sufficient, for the purpose of excluding the first in a series of days or any other period of time to use the word "from", and, for the purpose of including the last in a series of days or any other period of time, to use the word "to".

(2) This section applies also to all Central Acts made after the third day of January, 1868, and to all Regulations made on or after the fourteenth day of January, 1887.

10. Computation of time.- (1) Where, by any Central Act or Regulation made after the commencement of this Act, any act or proceeding is directed or allowed to be done or taken in any Court or office on a certain day or within a prescribed period, then, if the Court or office is closed on that day or the last day of the prescribed period, the act or proceedings shall be considered as done or taken in due time if it is done or taken on the next day afterwards on which the Court or office is open:

வரம்புரையாக : எந்தச் செயல் அல்லது நடவடிக்கைக்கு இந்தியக் காலவரம்புச் சட்டம் 1887 பொருந்துகிறதோ அந்தச் செயல் அல்லது நடவடிக்கை எதற்கும் இந்தப் பிரிவிலுள்ள எதுவும் பொருந்தாது.

(2) இந்தப் பிரிவு, 1868, சனவரி மூன்றாம் நாளுக்குப் பின்பு செய்யப் பட்ட மையச் சட்டங்கள் அனைத்திற்கும், 1887, சனவரி பதினான்காம் நாளன்று அல்லது அதற்குப் பின்பு செய்யப்பட்ட ஒழுங்குறுத்தும்விதிகள் அனைத்திற்கும் கூடப் பொருந்தும்.

பிரிவு 11 - தொலைவுகளை அளத்தல் (Measurement of distances).- இந்தச் சட்டத்தின் தொடக்கநிலைக்குப் பின்பு செய்யப்பட்ட மையச் சட்டம் அல்லது ஒழுங்குறுத்தும்விதி எதனின் நோக்கங்களையும் பொறுத்தவரை, தூரம் எதையும் அளக்கையில், மாறுபட்ட கருத்துத் தோன்றினா லன்றி, அந்தத் தூரம் கிடைமட்டப் பரப்பின் மீதுள்ள ஒரு நேர்கோட்டில் அளக்கப் படுதல் வேண்டும்.

பிரிவு 12 - செய்சட்டங்களில் சொல்லப்பட்டுள்ள தீர்வையானது விகிதப்படி தண்டல் செய்யப்படும் (Duty to be taken prorata in enactments).- இப்போது செல்லாற்றலிலிருக்கிற அல்லது இதன் பின்பு செல்லாற்றலுக்கு வரவிருக்கிற செய்சட்டம் எதனாலும் சுங்கத் தீர்வைகள் அல்லது ஆயத்தீர்வை அல்லது அவற்றின் தன்மையதான எதுவும், சரக்குகளின் அல்லது வணிகச் சரக்கின் எடை அல்லது அளவை அல்லது மதிப்பின் பேரில் கொடுக்கப்பட்ட அளவு எதன் மீதும் விதிக்கத்தக்கதாகுமிடத்து, அதைவிட அதிக

PROVIDED that nothing in this section shall apply to any act or proceeding to which the Indian Limitation Act, 1877 (15 of 1877), applies.

(2) This section applies also to all Central Acts or Regulations made on or after the fourteenth day of January, 1887.

11. Measurement of distances.- In the measurement of any distance, for the purpose of any Central Act or Regulation. made after the commencement of this Act, that distance shall, unless a different intention appears, be measured in a straight line on a horizontal plane.

12. Duty to be taken pro rata in enactments.- Where, by any enactment now in force or hereafter to be in force, any duty of customs or excise, or excise, or in the nature thereof, is leviable on any given quantity, by weight, measure or value of any goods or merchandise, then a like duty is

அல்லது குறைந்த அளவிலான எதன் மீதும் அதே போன்ற தீர்வையானது அதே வீதத்தில் தண்டல் செய்யத்தக்கதாகும்.

பிரிவு 13 - பாலினம் மற்றும் எண். (Gender and number).- மையச் சட்டங்கள் மற்றும் ஒழுங்குறுத்தும்விதிகள் அனைத்திலும் பொருளிலோ, சூழ்நிலையிலோ முரணானது எதுவும் இருந்தாலன்றி,–

(1) ஆண் பாலினத்தை உணர்த்தும் சொற்கள், பெண் பாலினத்தையும் உள்ளடக்குவதாக எடுத்துக் கொள்ளப்படுதல் வேண்டும், மற்றும்

(2) ஒருமையிலுள்ள சொற்கள் பன்மையை உள்ளடக்கும் மற்றும் அதேபோன்று நிலைமை எதிர்மாறாகவும் ஆகும்.

பிரிவு 13அ - (நீக்கறவு செய்யப்பட்டது).

அதிகாரங்களும் அதிகாரிகளும்
[Powers and Functionaries]

பிரிவு 14 - அவ்வப்போது செலுத்தத்தக்கதாக வழங்கப்பட்ட அதிகாரங்கள் (Powers conferred to be exercisable from time to time).- (1) இந்தச் சட்டத்தின் தொடக்கநிலைக்குப் பின்பு செய்யப்பட்ட மையச் சட்டம் அல்லது ஒழுங்குறுத்தும்விதி எதனாலும் அதிகாரம் எதுவும் வழங்கப்

---

leviable according to the same rate on any greater or less quantity.

13. Gender and number.- In all Central Acts or Regulations, unless there is anything repugnant in the subject or context-

(1) words importing the masculine gender shall be taken to include females; and

(2) words in the singular shall include the plural, and vice versa.

13A. References to the Sovereign.- Rep. by the AO, 1950

POWERS AND FUNCTIONARIES

14. Powers conferred to be exercisable from time to time.- (1) Where, by any Central Act or Regulation made af

பட்டிருக்குமிடத்து, மாறுபட்ட கருத்து தோன்றினாலன்றி, அந்த அதிகாரம் நிகழ்வு வேண்டுறுத்துகிறவாறு, அவ்வப்போது செலுத்தப்படலாம்.

(2) இந்தப் பிரிவு, 1887 சனவரி பதினான்காம் நாளில் அல்லது அதன் பின்பு செய்யப்பட்ட அனைத்து மையச் சட்டங்கள் மற்றும் ஒழுங்குறுத்தும் விதிகளுக்கும்கூடப் பொருந்தும்.

பிரிவு 15 - பதவியமர்த்துகைக்கான அதிகாரம் பதவிவழி அமர்த்துகைக்கான அதிகாரத்தையும் உள்ளடக்கும் (Power to appoint to include power to appoint *ex officio*).- பதவி எதையும் நிரப்பவும் அல்லது வழங்கப்பட்ட பதவிப்பணி எதையும் நிறைவேற்றவும் நபர் எவரையும் பதவியமர்த்தும் அதிகாரம், மையச் சட்டம் அல்லது ஒழுங்குறுத்தும்விதி எதனாலும் வழங்கப்பட்டிருக்குமிடத்து, பிறவாறாக வெளிப்படையாக வகை செய்யப்பட்டிருந் தாலன்றி, அத்தகைய பதவியமர்த்துகை எதுவும் இந்தச் சட்டத்தின் தொடக்க நிலைக்குப் பின்பு செய்யப்படுமாயின், பெயர் குறிப்பிடுவதன் மூலமாகவோ, அல்லது பதவியின் பயன்திறனாலோ செய்யப்படலாம்.

பிரிவு 16 - பதவியமர்த்துகைக்கான அதிகாரமானது தற்காலிகமாக நிறுத்தி வைக்கும் அல்லது பணி நீக்கம் செய்யும் அதிகாரத்தையும் உள்ளடக்கும் (Power to appoint to include power to suspend or dismiss).- பதவியமர்த்துகை எதையும் செய்யும் அதிகாரமானது, மையச் சட்டம் அல்லது ஒழுங்குறுத்தும்விதி எதனாலும் வழங்கப் பட்டிருக்குமிடத்து, மாறுபட்ட கருத்துத் தோன்றினாலன்றி, பதவியமர்த்துகை

---

unless a different intention appears that power may be exercised from time to time as occasion requires.

(2) This section applies also to all Central Acts and Regulations made on or after the fourteenth day of January, 1887.

15. Power to appoint to include power to appoint ex officio.- Where, by any Central Act or Regulation, a power to appoint any person to fill any office or execute any function is conferred, then, unless it is otherwise expressly provided, any such appointment, if it is made after the commencement of this Act, may be made either by name or by virtue of office.

16. Power to appoint to include power to suspend or dismiss.- Where, by any Central Act or Regulation, a power to make any appointment is conferred, then, unless a different intention appears, the authority having for the time being power to make the appointment shall also have power to suspend or

செய்ய அப்போதைக்கு அதிகாரமுடைய அதிகார அமைப்பானது, அந்த அதிகாரத்தைச் செலுத்தி, அதனாலோ பிற அதிகார அமைப்பு எதனாலுமோ பதவியமர்த்தப் பட்டிருக்கும் நபர் எவரையும் தற்காலிகமாக நிறுத்திவைப்பதற்கோ பணி நீக்குவதற்கோ கூட அதிகாரம் உடையதாகும்.

பிரிவு 17 - அதிகாரிகளை மாற்றமைவு செய்தல் (Substitution of functionaries).- (1) இந்தச் சட்டத்தின் தொடக்கநிலைக்குப் பின்பு செய்யப்பட்ட மையச் சட்டம் அல்லது ஒழுங்குறுத்தும்விதி எதிலும், ஒரு பதவியின் பணிகளை அப்போதைக்கு நிறைவேற்றுகிற நபர் ஒவ்வொருவருக்கும் அல்லது பல நபர்களுக்கு ஒரு சட்டம் பொருந்துவதைச் சுட்டிக் காட்டும் நோக்கத்திற்காக, தற்போது பதவிப் பணிகளை நிறைவேற்றுகிற அலுவலரின் அல்லது அந்தப் பதவிப் பணிகள் பொதுவாக எந்த அலுவலரால் நிறைவேற்றப்படுகிறதோ அந்த அலுவலரின் பதவிப் பெயரைக் குறிப்பிடுவது பொதுவானதாகும்.

(2) இந்தப் பிரிவு, 1868, சனவரி மூன்றாம் நாளுக்குப் பின்பு செய்யப்பட்ட அனைத்து மையச் சட்டங்களுக்கும், 1887, சனவரி பதினான்காம் நாளன்று அல்லது அதன் பின்பு செய்யப்பட்ட அனைத்து ஒழுங்குறுத்தும் விதிகளுக்கும் கூடப் பொருந்தும்.

பிரிவு 18 - அடுத்து வருபவர்கள் (Successors).- (1) இந்தச் சட்டத்தின் தொடக்கநிலைக்குப் பின்பு செய்யப்பட்ட மையச் சட்டம் அல்லது ஒழுங்குறுத்தும்விதி எதிலும், எவரேனும் அதிகாரிகளின் அல்லது தொடர்ந்த நிலைப்பாட்டைப் பெற்றுள்ள எவையேனும் கூட்டுருமங்களின் பதவியில் அடுத்து

---

dismiss any person appointed whether by itself or any other authority in exercise of that power.

17. Substitution of functionaries.- (1) In any Central Act or Regulation, made after the commencement of this Act, it shall be sufficient, for the purpose of indicating the application of a law to every person or number of persons for the time being executing the function of an office, to mention the official title of the officer at present executing the functions, or that of the officer by whom the functions are commonly executed.

(2) This section applies also to all Central Acts made after the third day of January, 1868, and to all Regulations made on or after the fourteenth day of January, 1887.

18. Successors.- (1) In any Central Act or Regulation made after the commencement of this Act, it shall be sufficient, for the purpose of indicating the relation of a law to the

வருபவர்களுக்குள்ள சட்டத் தொடர்பைச் சுட்டிக்காட்டும் நோக்கத்திற்காக, அந்த அதிகாரிகள் அல்லது கூட்டுருமங்களுடன் உள்ள தொடர்பை வெளிப்படுத்துவது போதுமானதாகும்.

(2) இந்தப் பிரிவு, 1868, சனவரி மூன்றாம் நாளுக்குப் பின்பு செய்யப்பட்ட அனைத்து மையச் சட்டங்களுக்கும், 1887, சனவரி பதினான்காம் நாளன்று அல்லது அதன் பின்பு செய்யப்பட்ட அனைத்து ஒழுங்குறுத்தும் விதிகளுக்கும் கூடப் பொருந்தும்.

பிரிவு 19 - தலைமை அலுவலர்களும் கீழமைந்தவர்களும் (Official chiefs and subordinates).- (1) இந்தச் சட்டத்தின் தொடக்க நிலைக்குப் பின்பு செய்யப்பட்ட மையச் சட்டம் அல்லது ஒழுங்குறுத்தும்விதி எதிலும், ஓர் அலுவலகத்தின் தலைமை அல்லது மேல்நிலை அலுவலருடன் தொடர்புடைய ஒரு சட்டம் அவர்களுடைய மேல்நிலை அலுவலர்களின் இடத்தில் அந்தப் பதவிக் கடமைகளைச் சட்டப்படி புரிகிற பகர உரிமை அலுவலர்களுக்கு அல்லது கீழமைந்த அலுவலர்களுக்குப் பொருந்தும் என்று வெளிப்படுத்தும் நோக்கத்திற் காக, மேல்நிலை அலுவலரின் கடமையை வகுத்துரைப்பது போதுமானதாகும்.

(2) இந்தப் பிரிவு, 1868, சனவரி மூன்றாம் நாளுக்குப் பின்பு செய் யப்பட்ட அனைத்து மையச் சட்டங்களுக்கும், 1887, சனவரி பதினான்காம் நாளன்று அல்லது அதன் பின்பு செய்யப்பட்ட அனைத்து ஒழுங்குறுத்தும் விதிகளுக்கும் கூடப் பொருந்தும்.

---

successors of any functionaries or of corporations having perpetual succession, to express its relation to the functionaries or corporations.

(2) This section applies also to all Central Acts made after the third day of January, 1868,.and to all Regulations made on or after the fourteenth day of January, 1887.

19. Officials chiefs and sub-ordinates.- (1) In any Central Act or Regulation made after the commencement of this Act, it shall be sufficient, for the purpose of expressing that a law relative to the chief or superior of an office shall apply to the deputies or subordinates lawfully performing the duties of that office in the place of their superior, to prescribe the duty of the superior.

(2) This section applies also to all Central Acts made after the third day of January, 1868, and to all Regulations made on or after the fourteenth day of January, 1887.

செய்சட்டங்களின்படி செய்யப்பட்ட ஆணைகள், விதிகள் முதலியவை குறித்த வகையங்கள்
[Provisions as to Orders, Rules etc. made under enactments]

பிரிவு 20 - செய்சட்டங்களின்படி பிறப்பிக்கப்பட்ட அறிவிக்கைகள் முதலியவற்றின் பொருள்கோள் (**Construction of notifications, etc., issued under enactments**).- மையச் சட்டம் அல்லது ஒழுங்குறுத்தும்விதி எதனாலும் அறிவிக்கை, ஆணை, திட்டம், விதி, படிவம், துணை விதி எதையும் பிறப்பிப்பதற்கு அதிகாரம் அளிக்கப்பட்டிருக்குமிடத்து, அந்த அறிவிக்கை, ஆணை திட்டம், விதி, படிவம், அல்லது துணைவிதி, இந்தச் சட்டத்தின் தொடக்கநிலைக்குப பின்பு செய்யப்பட்டிருப்பின், அதில் பயன்படுத்தப்பட்டிருக்கும் சொற்றொடர்கள், பொருளிலோ அல்லது சூழ்நிலையிலோ முரணானது எதுவும் இருந்தாலன்றி, அதிகாரமளிக்கும் சட்டத்தில் அல்லது ஒழுங்குறுத்தும்விதியில் அவற்றிற்காக முறையே கொண்டுள்ள அதே பொருளினை உடையனவாகும்.

பிரிவு 21 - அறிவிக்கைகள், ஆணைகள், விதிகள் அல்லது துணைவிதிகளைப் பிறப்பிப்பதற்கான அதிகாரமானது அவற்றுடன் சேர்ப்பதற்கு, அவற்றை திருத்தம் செய்வதற்கு, மாறுதல் செய்வதற்கு அல்லது இறுத்தறவு செய்வதற்கான அதிகாரத்தையும் உள்ளடக்கும் (**Power to issue, to include power to add to, amend, vary or**

PROVISIONS AS TO ORDERS, RULES, ETC. MADE UNDER ENACTMENTS

20. Construction of notifications, etc., issued under enactments.- Where, by any Central Act or Regulation, a power to issue any notification, order, scheme, rule, form, or bye-law is conferred, then expressions used in the notification, order, scheme, rule, form or bye-law, if it is made after the commencement of this Act, shall, unless there is anything repugnant in the subject or context, have the same respective meanings as in the Act or Regulation conferring the power.

21. Power to issue, to include power to add to, amend, vary or rescind notifications, orders, rules or bye-laws .- Where, by any Central Act or Regulation, a power to

rescind, notifications, orders, rules or bye-laws).- மையச் சட்டம் அல்லது ஒழுங்குறுத்தும்விதி எதனாலும் அறிவிக்கைகள், ஆணைகள், விதிகள் அல்லது துணைவிதிகளைப் பிறப்பிப்பதற்கான அதிகாரம் வழங்கப்பட்டிருக்கு மிடத்து, அந்த அதிகாரமானது அவ்வாறு பிறப்பிக்கப்பட்ட அறிவிக்கைகள், ஆணைகள், விதிகள் அல்லது துணைவிதிகள் எவற்றுடனும் சேர்க்கவோ, அவற்றைத் திருத்தம் செய்யவோ, மாற்றவோ, இறுத்தறவு செய்யவோ அதே முறையிலும் அதே ஒப்பளிப்பு மற்றும் வரைக்கட்டுகள் (எவையேனுமிருப்பின்) அவற்றிற்கு உட்பட்டும் செலுத்தத்தக்க அதிகாரத்தையும் உள்ளடக்கும்.

பிரிவு 22 - செய்சட்டம் இயற்றப்படுவதற்கும் அதன் தொடக்க நிலைக்கும் இடையே விதிகள் அல்லது துணைவிதிகள் செய்வதும் ஆணைகளைப் பிறப்பிப்பதும் (Making of rules or bye-laws and issuing of orders between passing and commencement of enactment).- பிறப்பிக்கப்பட்ட உடனேயே செல்திறம் பெறாத மையச் சட்டம் அல்லது ஒழுங்குறுத்தும்விதி எதனாலும், இந்தச் சட்டம் அல்லது ஒழுங்குறுத்தும்விதியின் பொருந்துகை பொறுத்து ஆணைகள் பிறப்பிக்க அல்லது நீதிமன்றம் அல்லது அலுவலகம் எதையும் நிறுவுவது அல்லது நீதிபதி அல்லது அலுவலர் எவரையும் அதன்படி அமர்த்துவது பொறுத்து அல்லது இந்தச் சட்டத்தின்படி அல்லது ஒழுங் குறுத்தும்விதியின்படி எந்த நபரால் அல்லது எந்தக் காலத்தில் அல்லது எந்த இடத்தில் அல்லது எந்த முறையில் அல்லது எவ்வளவு கட்டணம் செலுத்தப்பட வேண்டுமோ, அந்த நபர், காலம், இடம், முறை, கட்டணங்கள் பொறுத்து, விதிகள் அல்லது துணைவிதிகளைச் செய்ய அல்லது ஆணைகள் பிறப்பிக்க அதிகாரம்

---

issue notifications],orders, rules or bye-laws is conferred, then that power includes a power, exercisable in the like manner and subject to the like sanction and conditions (if any), to add to, amend, vary or rescind any notifications, orders, rules or bye-laws so issued.

22. Making of rules or bye-laws and issuing of orders between passing and commencement of enactment.- Where, by any Central Act or Regulation which is not to come into force immediately, on the passing thereof, a power is conferred to make rules or bye-laws, or to issue orders with respect to the application of the Act or Regulation, or with respect to the establishment of any court or office or the appointment of any Judge or officer thereunder, or with respect to the person by whom, or the time when, or the place where, or the manner in which, or the fees for which, anything is to be done under the Act or Regulation, then that power may be

அளிக்கப்படுமிடத்து, அந்த அதிகாரமானது, இந்தச் சட்டம் அல்லது ஒழுங்குறுத்தும்விதி பிறப்பிக்கப்பட்ட பின்பு, எந்த நேரத்திலும் செலுத்தப்படலாம்; ஆனால், அவ்வாறு செய்யப்பட்ட அல்லது பிறப்பிக்கப்பட்ட விதிகள், துணை விதிகள் அல்லது ஆணைகள், அந்தச் சட்டம் அல்லது ஒழுங்குறுத்தும்விதி தொடங்கும் வரையில் செல்திறம் பெறுதல் ஆகாது.

பிரிவு 23 - முந்திய வெளியீட்டிற்குப் பின்பு விதிகள் அல்லது துணைவிதிகள் செய்வதற்குப் பொருந்தத்தக்க வகையங்கள் (Provisions applicable to making of rules or bye-laws after previous publication).- மையச் சட்டம் அல்லது ஒழுங்குறுத்தும்விதி எதனாலும் விதிகள் அல்லது துணைவிதிகள் செய்வதற்கான அதிகாரமானது, அந்த விதிகள் அல்லது துணைவிதிகள் முன்னதாக வெளியிடப்பட்ட பின்னரே செய்யப்படுதல் வேண்டுமென்ற வரைக்கட்டுக்கு உட்பட்டுக் கொடுக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டிருக்கிறவிடத்து, பின்வரும் வகையங்கள் பொருந்தும், அவையாவன:-

(1) அந்த விதிகளை அல்லது துணைவிதிகளைச் செய்வதற்கு அதிகாரம் பெற்றிருக்கிற அதிகார அமைப்பானது, அவற்றைச் செய்வதற்கு முன்பு, அதனால் பெரும்பாலும் பாதிக்கப்படக்கூடிய நபர்களுக்குத் தகவலளிப்பதாக கருதப்பட்ட விதிகள் அல்லது துணைவிதிகளின் வரைவு ஒன்றை வெளியிடுதல் வேண்டும்;

(2) அந்த அதிகார அமைப்பு போதுமானதெனக் கொள்ளும் முறையிலோ, அல்லது முந்திய வெளியீடு பொறுத்த வரைக்கட்டு அவ்வாறு

---

exercised at any time after the passing of the Act or Regulation; but rules, bye-laws or orders so made or issued shall not take effect till the commencement of the Act or Regulation.

23. Provisions applicable to making of rules or bye-laws after previous publication.- Where, by any Central Act or Regulation, a power to make rules or bye-laws is expressed to be given subject to the condition of the rules or bye-laws being made after previous publication, then the following provisions shall apply, namely,-

(1) the authority having power to make the rules or bye-laws shall, before making them, publish a draft of the proposed rules or bye-laws for the information of persons likely to be affected thereby;

(2) the publication shall be made in such manner as that authority deems to be sufficient, or, if the condition with respect to previous publication so requires, in such

வேண்டுறுத்தப்படுமாயின், தொடர்புடைய அரசாங்கம் விதிக்கிற முறையிலோ வெளியிடப்படுதல் வேண்டும்;

(3) அந்த வரைவுடன், அந்த வரைவு எந்தத் தேதியில் அல்லது எந்தத் தேதிக்குப் பின்பு பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும் என்பதைக் குறித்துரைக்கும் அறிவிப்பு ஒன்றும் வெளியிடப்படுதல் வேண்டும்;

(4) விதிகள் அல்லது துணை விதிகள் செய்வதற்கு அதிகாரம் பெற்றிருக்கிற அதிகாரஅமைப்பும், அந்த விதிகள் அல்லது துணை விதிகள் பிறிதோர் அதிகாரஅமைப்பின் ஒப்பளிப்புடன், ஒப்பேற்புடன் அல்லது ஒருங்கிசைவுடன் செய்யப்படவிருக்குமிடத்து அந்த அதிகாரஅமைப்பும்கூட அந்த வரைவு பொறுத்து, அந்த விதிகள் அல்லது துணைவிதிகள் செய்வதற்கு, அதிகாரம் பெற் றிருக்கிற அதிகாரஅமைப்பால் அவ்வாறு குறித்துரைக்கப்பட்ட தேதிக்கு முன்பே நபர் எவரிடமிருந்தும் பெறப்படலாகும் மறுப்புரை அல்லது தூண்டுரை எதையும் பரிசீலனை செய்தல் வேண்டும்;

(5) முந்திய வெளியீட்டுக்குப் பின்பு, விதிகள் அல்லது துணை விதிகளைச் செய்யும் ஓர் அதிகாரத்தைச் செலுத்திச் செய்யப்பட்டிருப்பதாகப் புலப் படுகிற விதி அல்லது துணைவிதி, அதிகாரமுறை அரசிதழில் வெளியிடப்பட்டிருப் பதானது, அந்த விதி அல்லது துணைவிதி உரியவாறு செய்யப்பட்டிருப்பதற்கான அறுதியான மெய்ப்பிப்பாகும்.

---

manner as the government concerned prescribes;

(3) there shall be published with the draft a notice specifying a date on or after which the draft will be taken into consideration;

(4) the authority having power to make the rules or bye-laws, and, where the rules, or bye- laws are to be made with the sanction, approval or concurrence of another authority, that authority also, shall consider any objection or suggestion which may be received by the authority having power to make the rules or bye-laws from any person with respect to the draft before the date so specified;

(5) the publication in the Official Gazette of a rule or bye-law purporting to have been made in exercise of a power to make rules or bye-laws after previous publication shall be conclusive proof that the rule or bye-law has been duly made.

24. Continuation of orders, etc. issued under en

பிரிவு 24 - நீக்கறவு செய்யப்பட்டு மீண்டும் இயற்றப்பட்ட செய்சட்டங்களின்படி பிறப்பிக்கப்பட்ட ஆணைகள் முதலியவை தொடர்ந்திருத்தல் (Continuation of orders, etc., issued under enactments repealed and re-enacted).- மையச் சட்டம் அல்லது ஒழுங்குறுத்தும்விதி எதுவும், அந்தச் சட்டத்தின் தொடக்கநிலைக்குப் பின்பு நீக்கறவு செய்யப்பட்டு மற்றும் மாற்றமைவுடனோ இல்லாமலோ மீண்டும் இயற்றப் படுமிடத்து, பிறவாறு வெளிப்படையாக வகை செய்யப்பட்டிருந்தாலன்றி, நீக்கறவு செய்யப்பட்ட செய்யப்பட்ட சட்டம் அல்லது ஒழுங்குறுத்தும்விதிகளின்படி செய்யப்பட்ட அல்லது பிறப்பிக்கப்பட்ட பதவியமர்த்துகை, அறிவிக்கை, ஆணை, திட்டம், விதி, படிவம் அல்லது துணை விதி எதுவும் மீண்டும் இயற்றப்பட்ட வகையங்களுடன் எந்த அளவுக்கு அது ஒவ்வாததாக இல்லாதிருக்கிறதோ அந்த அளவுக்குத் தொடர்ந்து செல்லாற்றலில் இருக்கும்; மேலும் அவ்வாறு மீண்டும் இயற்றப்பட்ட வகையங்களின்படி செய்யப்பட்ட அல்லது பிறப்பிக்கப்பட்ட பதவியமர்த்துகை, அறிவிக்கை, ஆணை, திட்டம், விதி, படிவம் அல்லது துணை விதி எதனாலும் தள்ளறவு செய்யப்பட்டாலன்றியும், செய்யப்படும் வரையிலும் அவ்வாறு மீண்டும் இயற்றப்பட்ட வகையங்களின்படி செய்யப்பட்டிருப்பதாக அல்லது பிறப்பிக்கப்பட்டிருப்பதாக கொள்ளப்படுதல் வேண்டும். மேலும் மையச் சட்டம் அல்லது ஒழுங்குறுத்தும்விதி எதுவும் பட்டியலில் கண்ட மாவட்டங்கள் சட்டம், 1874–இன் பிரிவு 5 அல்லது 5அ–இன்படியோ அல்லது அதைப் போன்று சட்டம் எதன்படியுமோ ஓர் அறிவிக்கை வாயிலாக வட்டாரப் பரப்பிடம் எதற்கும் அளாவும்படிச் செய்யப்பட்டிருந்து, பிந்திய அறிவிக்கை ஒன்றினால் அதிலிருந்து நீக்கப்பட்டு, அந்தப் பரப்பு அல்லது அதன் பகுதி எதற்கும் மீண்டும் அளாவும்படிச்

---

actments repealed and re-enacted.- Where any Central Act or Regulation, is, after the commencement of this Act, repealed and re-enacted with or without modification, then, unless it is otherwise expressly provided any appointment, notification, order, scheme, rule, form or bye-law, made or issued under the repealed Act or Regulation, shall, so far as it is not inconsistent with the provisions re-enacted, continue in force, and be deemed to have been made or issued under the provisions so re-enacted, unless and until it is superseded by any appointment, notification, order, scheme, rule, form or bye-law, made or issued under the provisions so re-enacted and when any Central Act or Regulation, which, by a notification under section 5 or 5A of the Scheduled Districts Act, 1874, (14 of 1874) or any like law, has been extended to any local area, has, by a subsequent notification, been withdrawn from and re-extended to such area or any part thereof, the provisions of

செய்யப்படும்போது, அத்தகைய சட்டம் அல்லது ஒழுங்குறுத்தும்விதியின் வகையங்கள் அத்தகைய பரப்பிடம் அல்லது பகுதியில், இந்தப் பிரிவின் பொருளின்படி நீக்கறவு செய்யப்பட்டு மீண்டும் இயற்றப்பட்டிருப்பதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

பல்வகைப்பட்டவை
[Miscellaneous]

பிரிவு 25 - அபராதங்களை வசூல் செய்தல் (Recovery of fines).- இந்தியத் தண்டனைச் சட்டத்தின் பிரிவுகள் 63 முதல் 70 வரையுள்ளவையும், அபராதங்களை வசூல் செய்வதற்காக ஆணை பிறப்பித்தல் மற்றும் அதனை நிறைவேற்றுதல் தொடர்பாக, அப்போதைக்குச் செல்லாற்றலிலுள்ள குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் வகையங்களும், சட்டம், ஒழுங்குறுத்தும் விதி அல்லது துணைவிதி எதன்படியும் விதிக்கப்பட்ட அனைத்து அபராதங்களும், அந்தச் சட்டம், ஒழுங்குறுத்தும்விதி, விதி அல்லது துணைவிதி, அதற்கு முரணாக ஒரு வெளிப்படையான வகையத்தைக் கொண்டிருந்தாலன்றி, பொருந்தும்.

பிரிவு 26 - இரண்டு அல்லது அவற்றிற்கு மேற்பட்ட செய் சட்டங்களின்படி தண்டிக்கப்படத்தக்க குற்றச் செயல்கள் குறித்த வகையம் (Provisions to offences punishable under two or more enactments).- ஒரு செய்கை அல்லது விடுகையானது, இரண்டு அல்லது அவற்றிற்கு மேற்பட்ட செய்சட்டங்களின்படி ஒரு குற்றச் செயலாக அமையுமிடத்து, அந்தக் குற்றவாளி அந்தச் செய்சட்டங்கள் இரண்டில் ஏதொன்றின்படியும்

---

sions of such Act or Regulation shall be deemed to have been repealed and re-enacted in such area or part within the meaning of this section.

MISCELLANEOUS

25. Recovery of fines.- Sections 63 to 70 of the Indian Penal Code (45 of 1860) and the provisions of the [33][Code of Criminal Procedure (5 of 1898)] for the time being in force in relation to the issue and the execution of warrants for the levy of fines shall apply to all fines imposed under any Act, Regulation, rule or bye-law, unless the Act, Regulation, rule or bye-law contains and express provision to the contrary.

26. Provision as to offences punishable under two or more enactments.- Where an act or omission constitutes an offence under two or more enactments, then the offender shall be liable to be prosecuted and punished under either or

அல்லது அவற்றுள் எதன்படியும், வழக்குத் தொடரப்படுவதற்கும் தண்டிக்கப் படுவதற்கும் உள்ளாவார். ஆனால், ஒரே குற்றச் செயலுக்காக இரண்டு முறை தண்டிக்கப்படுவதற்கு உள்ளாகமாட்டார்.

பிரிவு 27 - அஞ்சல்வழி சார்வு செய்தலின் பொருள் (Meaning of service by post).- இந்தச் சட்டத்தின் தொடக்கநிலைக்குப் பின்பு செய்யப்பட்ட மையச் சட்டம் அல்லது ஒழுங்குறுத்தும்விதி எதுவும், அஞ்சல் வழி ஆவணம் எதுவும் சார்வு செய்யப்படுவதற்கு அதிகாரமளிக்கிறவிடத்து அல்லது அதனை வேண்டுறுத்துகிறவிடத்து, "சார்வு செய்" என்னும் சொற்றொடரோ அல்லது "கொடு" அல்லது "அனுப்பு" என்ற சொற்றொடர்களின் இரண்டில் ஒன்றோ, அல்லது பிற சொற்றொடர் எதுவுமோ பயன்படுத்தப்பட்டிருந்தாலும் மாறுபட்ட கருத்து தோன்றினாலன்றி, அந்த ஆவணத்தைக் கொண்டுள்ள கடிதமானது முறையாக முகவரியிடப்பட்டு, முன்னதாகப் பணம் செலுத்தப்பட்டு, மேலும் பதிவு அஞ்சல் வழி அனுப்பப்படுவதனால் சார்வு செய்யப்பட்டதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்; மேலும் அதற்கு மாறானது மெய்ப்பிக்கப்பட்டாலன்றி, அந்தக் கடிதம் வழக்கமான அஞ்சல் போக்கில் எந்த நேரத்தில் கொடுக்கப்படுமோ, அந்த நேரத்தில் சார்வு செய்யப்பட்டதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

பிரிவு 28 - செய்சட்டங்களைச் சுட்டிக் குறிப்பிடுதல் (Citation of enactments).- (1) மையச் சட்டம் அல்லது ஒழுங்குறுத்தும்விதி எதிலும், மற்றும் அத்தகைய சட்டம் அல்லது ஒழுங்குறுத்தும்விதி எதன்படியும் அல்லது அது குறித்துச் செய்யப்பட்ட விதி, துணைவிதி, முறையாவணம் அல்லது

---

any of those enactments, but shall not be liable to be punished twice for the same offence.

27. Meaning of service by post.- Where any Central Act or Regulation made after the commencement of this Act authorises or requires any document to be served by post, where the expression "serve" or either of the expressions "give" or "send" or any other expression is used, then, unless a different intention appears, the service shall be deemed to be effected by properly addressing, pre-paying and posting by registered post, a letter containing the document, and, unless the contrary is proved, to have been effected at the time at which the letter would be delivered in the ordinary course of post.

28. Citation of enactments.- (1) In any Central Act or Regulation, and in any rule, bye-law, instrument or document, made under, or with reference to any such Act or Regulation, any enactment may be cited by reference to the title or short title (if any) conferred thereon or by reference to the

ஆவணம் எதிலும், செய்சட்டம் எதுவும், அதற்களிக்கப்பட்ட தலைப்பு அல்லது குறுந்தலைப்பு (ஏதேனுமிருப்பின்) அதைச் சுட்டுவதன் வாயிலாக அல்லது அதன் எண் மற்றும் ஆண்டைச் சுட்டுவதன் வாயிலாகச் சுட்டிக் குறிப்பிடப்படலாம், மேலும் செய்சட்டம் ஒன்றிலுள்ள வகையம் எதுவும், அந்த வகையம் எந்தச் செய் சட்டத்தின் பிரிவு அல்லது உட்பிரிவில் அடங்கியுள்ளதோ, அந்தச் செய்சட்டத்தின் பிரிவு அல்லது உட்பிரிவினைச் சுட்டுவதன் வாயிலாகக் குறிப்பிடப்படலாம்.

(2) இந்தச் சட்டத்திலும் இந்தச் சட்டத்தின் தொடக்கநிலைக்குப் பின்பு செய்யப்பட்ட மையச் சட்டம் அல்லது ஒழுங்குறுத்தும்விதி எதிலும், பிறி தொரு செய்சட்டத்தின் பகுதி ஒன்றின் விவரிப்பு அல்லது குறிப்பிடுகையானது, மாறுபட்ட கருத்து தோன்றினாலன்றி, அந்த விவரிப்பு அல்லது குறிப்பிடுகையில் அடங்கியுள்ள பகுதி தொடக்கமாக அமைவதாகவும் முடிவாக அமைவதாகவும் குறிப்பிடப்படுகிற அல்லது சுட்டப்படுகிற சொல், பிரிவு அல்லது பிற பகுதியை உள்ளடக்குவதாகப் பொருள் கொள்ளப்படுதல் வேண்டும்.

பிரிவு 29 - முந்திய செய்சட்டங்கள், விதிகள் மற்றும் துணை விதிகளுக்கான காப்பு (Saving for previous enactments, rules and bye-laws).- இந்தச் சட்டத்தின் தொடக்கநிலைக்குப் பின்பு செய்யப்பட்ட சட்டங்கள், ஒழுங்குறுத்தும்விதிகள், அல்லது துணைவிதிகளைப் பொருள் கொள்வது தொடர்பான இச்சட்டத்தின் வகையங்கள், இச்சட்டத்தின் தொடக்க நிலைக்கு முன்பு செய்யப்பட்ட சட்டம், ஒழுங்குறுத்தும்விதி, விதி, துணைவிதி எதையும் பொருள்கொள்ளுவதை அந்தச் சட்டம், ஒழுங்குறுத்தும் விதி, விதி அல்லது துணைவிதியானது, இந்தச் சட்டத்தின் தொடக்கநிலைக்குப்

---

number and year thereof, and any provision in an enactment may be cited by reference to the section or sub-section of the enactment in which the provision is contained.

(2) In this Act and in any Central Act or Regulation made after the commencement of this Act, a description or citation of a portion of another enactment shall, unless a different intention appears, be construed as including the word, section or other part mentioned or referred to as forming the beginning and as forming the end of the portion comprised in the description or citation.

29. Saving for previous enactments, rules and bye-laws.- The provisions of this Act respecting the construction of Acts, Regulations, rules or bye-laws made after the commencement of this Act shall not affect the construction of any Act, Regulation, rule or bye-law made before the commencement of this Act, although the Act, Regulation, rule or bye-law

பின்பு செய்யப்பட்ட ஒரு விதியானது, இந்தச் சட்டத்தின் தொடக்கநிலைக்குப் பின்பு செய்யப்பட்ட ஒரு சட்டம், ஒழுங்குறுத்தும்விதி, விதி அல்லது துணை விதியினால் தொடர்ந்திருக்கும்படி செய்யப்பட்டு அல்லது திருத்தம் செய்யப்பட்டு இருந்த போதிலும் பாதித்தல் ஆகாது.

பிரிவு 30 - அவசரச் சட்டங்களுக்கு இச்சட்டம் பொருந்துதல் (Application of Act to ordinances).- இந்தச் சட்டத்தின் பிரிவு 5-இல் தவிர "மையச் சட்டம்" என்ற சொற்றொடர் எங்கெங்கு வருகிறதோ அங்கெல்லாம் மற்றும் பிரிவு 3-இன் கூறுகள் (9), (13), (25), (40), (43), (52), (54) ஆகியவற்றிலும் பிரிவு 25-லும் உள்ள "சட்டம்" என்ற சொல், இந்திய ஆட்சியவைகள் சட்டம், 1861-இன் பிரிவு 23 அல்லது இந்திய அரசாங்கச் சட்டம், 1915-இன் பிரிவு 72 அல்லது இந்திய அரசாங்கச் சட்டம், 1935-இன் பிரிவு 42-இன்படி ஆளுநர் தலைவரால் செய்யப்பட்டு, மற்றும் சாற்றம் செய்யப்பட்ட ஓர் அவசரச் சட்டத்தையும், மற்றும் அரசமைப்பின் உறுப்பு 123-இன்படி குடியரசுத் தலைவரால் சாற்றம் செய்யப்பட்ட ஓர் அவசரச் சட்டத்தையும் உள்ளடக்குவதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

பிரிவு 30அ - (நீக்கறவு செய்யப்பட்டது).

பிரிவு 31 - (நீக்கறவு செய்யப்பட்டது).

இணைப்புப் பட்டியல்.- (நீக்கறவு செய்யப்பட்டது).

---

is continued or amended by an Act, Regulation, rule or bye-law made after the commencement of this Act.

30. Application of Act to Ordinances.- In this Act the expression Central Act, wherever it occurs, except in section 5 and the word "Act" in clauses (9), (13), (25), (40), (43), (52) and (54) of section 3 and in section 25 shall be deemed to include an Ordinance made and promulgated by the Governor General under section 23 of the Indian Councils Act, 1861 (24 and 25 Vict., c. 67) or section 72 of the Government of India Act 1915,] or section 42 of the Government of India Act, 1935 and an Ordinance promulgated by the President under article 123 of the Constitution.

30A. Application of Act to Acts made by the Governor -General.- *[Rep. by the AO, 1937.]*

31. Construction of references to Local Government of a Province.- *[Rep. by the AO, 1937.]*

THE SCHEDULE - Enactments repealed. *[Rep. by the Repealing and Amending Act, 1903 (1 of 1903) s. 4 and Sch. III].*

செய்சட்டங்களின் தொடக்கநிலை, நீக்கறவு மற்றும் புதுப்பிப்பு தொடர்பான கருத்துரைகள்
[Commentaries on Commencement, Repeal and Revival of Enactments]

செய்சட்டங்களின் தொடக்கநிலை அல்லது தொடக்கம்
[Commencement of Enactments]

சட்டங்களின் தொடக்கநிலை அல்லது தொடக்கம் - விளக்கம் :

ஒரு சட்டம் எந்த தேதியிலிருந்து அமலுக்கு வருகிறதோ, அதுவே அச்சட்டத்தின் தொடக்கமாகும். இது ஒரு மேலோட்டமான விளக்கமே. ஆனால் ஒரு சட்டம் எப்பொழுது தொடங்குகிறது, எப்பொழுது செயல்பாட்டுக்கு வருகிறது என்பன குறித்து, 1897-ஆம் ஆண்டின் பொது வகையங்கள் விளக்கச் சட்டம் (The General Clause Act, 1897) தனது சட்டப் பிரிவுகளின் வாயிலாக சற்று நுணுக்கமாக பின்வருமாறு கூறுகிறது.

1897-இன் பொது வகையங்கள் விளக்கச் சட்டம் கூறுவதாவது:

பொது வகையங்கள் விளக்கச் சட்டத்தின் பிரிவு 3(13) ஆனது, 'தொடக்கநிலை' (Commencement) என்பதற்கு வரையறை தருகிறது. அதன்படி, ஒரு சட்டம் அல்லது ஒழுங்குறுத்தும்விதி குறித்த 'தொடக்கநிலை' என்பது, அச்சட்டம் அல்லது ஒழுங்குறுத்தும் விதி அமலுக்கு (செல்லாற்றலுக்கு) வரும் தேதியாகும்.

அதே சமயத்தில் மேற்படி சட்டத்தின் 5(1)-வது பிரிவானது, ஒரு சட்டம் எப்பொழுது செயல்பாட்டிற்கு (Operation) வருகிறது என்பது குறித்து விளக்கம் தருகிறது. அதன்படி, ஒரு மையச் சட்டம் எந்நாளில் இருந்து செயல்பாட்டிற்கு வருகிறது என்பது பற்றி மௌனம் சாதிக்குமானால், அச்சட்டம் எந்நாளில் குடியரசுத் தலைவரின் ஒப்புதலை பெற்றதோ, அந்நாளில் இருந்து செயல்பாட்டிற்கு வந்ததாகக் கொள்ள வேண்டும். ஆனால் அதே சமயத்தில், பிரிவு 5(3) ஆனது பின்வருமாறு கூறுகிறது. அதன்படி, முரண்பாடான கருத்து ஏதும் இல்லாதபட்சத்தில், அம்மையச் சட்டம் அல்லது ஒழுங்குறுத்தும் விதியானது, அதன் தொடக்கத்துக்கு முந்திய நாள் முடிந்தவுடன் செயல்பாட்டுக்கு வருவதாகப் பொருள் கொள்ள வேண்டும்.

எடுத்துக்காட்டு :

மையச் சட்டம் ஒன்றிற்கு குடியரசுத் தலைவர் சனவரி 26-ஆம் தேதி காலை 11 மணிக்கு ஒப்புதல் அளிப்பதாகக் கொள்வோம். மேற்படி பிரிவு 5(1)-இன்படி, ஒரு மையச் சட்டம் எந்நாளில் இருந்து அது செயல்பாட்டிற்கு வருகிறது

என்பதைக் கூறவில்லையானால், அதற்கு குடியரசுத் தலைவர் ஒப்புதல் அளித்த தேதியான சனவரி 26–ஆம் தேதியிலிருந்து செயல்பாட்டிற்கு வருவதாகக் கொள்ள வேண்டும். அதாவது காலை 11 மணியிலிருந்து செயல்பாட்டிற்கு வருகிறது. அதே சமயத்தில் **பிரிவு 5(3)–இன்படி,** ஒரு சட்டம் அதன் குறிப்பிட்ட தினத்திலிருந்து செயல்பாட்டிற்கு வருகிறது என்பதற்கு முரண்பாடான கருத்து ஏதும் கூறப்படாத பொழுது, அச்சட்டம் தொடங்கியதற்கு முந்தின நாள் முடிந்தவுடன் செயல் பாட்டிற்கு வருவதாகப் பொருள் கொள்ள வேண்டும். அதாவது சனவரி 25–க்கும், 26–க்கும் இடையிலான நள்ளிரவிலிருந்து அதாவது பூஜ்யம் நேரத்திலிருந்து (00.00 hrs.) செயல்பாட்டிற்கு வருகிறது.

பிரிவு 3(13)–இன்படி, குடியரசுத் தலைவர் எப்பொழுது ஒரு சட்டத்திற்கு ஒப்புதல் அளித்து கையொப்பம் இடுகிறாரோ, மாறுபாடான கருத்து ஏதும் இல்லாத வரை, அப்பொழுதே அச்சட்டம் அமலுக்கு வந்து விடுகிறது. இவ்வாறு அமலுக்கு வருவதால், அச்சட்டம் தொடங்கி விட்டதாகப் பொருளாகும். மேற்படி எடுத்துக் காட்டில், ஜனவரி 26–ம் தேதியே, அச்சட்டத்தின் தொடக்கமாகும்.

Harla v. State of Rajasthan[1]

மேற்கண்ட பொது வகையங்கள் விளக்கச் சட்டமானது, ஒரு சட்டம் அரசிதழில் (Official Gazette) அறிக்கை மூலம் வெளியிட்ட பின்னரே தொடங்கப்பட வேண்டும் என்றோ, செயல்பாட்டுக்கு வரவேண்டுமென்றோ கட்டாயப்படுத்திக் கூறவில்லை. ஆனால் அவ்வாறு செய்தால் அது மக்களுக்கு மிக்க நலன் பயக்கும், என மேற்படி வழக்கில் உச்ச நீதிமன்றம் கருத்து தெரிவித்தது.

மேற்படி வழக்கில், ஒரு சட்டம் எந்நாளில் தொடங்குகிறது என்பதற்கான தேதி, அதில் குறிக்கப்படாது விடப்பட்டிருப்பின், அது குடியரசுத் தலைவரின் அல்லது மாநில ஆளுநரின் ஒப்புதலை எந்நாளில் பெற்றதோ, அந்நாளே அதன் தொடக்கமாகும் என்ற விதி பொது மக்களுக்கு குழப்பத்தையும் கஷ்டத்தையும் ஏற்படுத்தலாம். பொதுவாக, ஒப்புதல் பெறப்பட்ட சட்டங்களை அரசிதழில் வெளிட அரசு அதிக காலம் எடுத்துக் கொள்வதில்லை. இந்நிலையில் ஒப்புதல் பெறப்பட்ட நாளிலிருந்து தொடங்குகிறது எனும் மேற்படி விதியினால் ஏற்படும் குழப்பத்தை, அரசிதழில் வெளியிடப்படும் நாளிலிருந்து தொடங்குகிறது என்று அனுமானம் செய்து கொள்வதின் வாயிலாகக் குறைக்கலாம் என உச்ச நீதிமன்றம் கூறியது.

சட்டம் தொடங்குதல் குறித்த முறைகள் (Modes) :

ஒரு சட்டம் பின்வரும் முறைகளில் தொடங்குகிறது :

1. சட்டம் உடனே அமலுக்கு வருதல் (This Act shall come into force at once).

1. A.I.R. 1951 S.C. 467

2. அரசிதழில் வெளிடப்பட்ட பின்னர் அமலுக்கு வருதல். (This Act shall come into force, when it is published in the Official Gazette).

3. பின்னர் அறிவிக்கப்படவுள்ள ஒரு குறிப்பிட்ட தேதியிலிருந்து அமலுக்கு வருதல் (This Act shall come into force from a date, will be given).

4. சட்டத்தின் தொடக்கம் அரசிதழில் அறிக்கை செய்யப்படும் நாளில் ஏற்படுதல் (The commencement shall be notified in the Official Gazette).

5. சட்டத்தின் பல்வேறு பிரிவுகள் அரசிதழில் அறிக்கை செய்யப் படவுள்ளவாறு பல்வேறு தேதிகளில் அமலுக்கு வருதல் (Different sections of this Act shall come into force on different dates as shall be notified in the Official Gazette).

முடிவாக, ஒரு சட்டத்திற்கு பொருள் விளக்கமளிக்கும் டொழுது அச்சட்டம் எப்பொழுது பிறந்தது, அமலுக்கு வந்தது, செயல்படத் துவங்கியது என்ற விவரங்களை எல்லாம் அறிந்து கொள்ள வேண்டியது மிகவும் இன்றியமையாத தாகும். ஏனென்றால் ஒரு சொல், அது குறித்த சட்டம் தொடங்கப்படுவதற்கு முன்பு வரை ஒரு நிலைப்பாடுடனும், சட்டம் தொடங்கிய பிறகு பிறிதொரு நிலைப் பாடுடனும் இருக்க வாய்ப்புண்டு. எனவே அவற்றிற்கேற்ப பொருள் விளக்கமளிக்க, சட்டம் எந்த நாளில் தொடங்கியது என்பதை தெளிவாக அறிதல் அவசியம். ஒரு சட்டத்தை, பொது மக்கள் அனைவரும் அறிந்து கொள்ளும் வண்ணம் அரசிதழில் வெளிடப்பட்ட தேதியிலிருந்து தொடங்குகிறது என அறிவிப்பதே, சட்டங்களின் தொடக்கம் குறித்த சிறந்த முறையாகும்.

செய்சட்டங்களின் நீக்கறவு [அல்லது] நீக்கம்
[Repeal of Enactments]

செய்சட்டங்களின் நீக்கறவு - விளக்கம் (Repeal of Statutes) :

'செய்சட்டத்தை நீக்கறவு செய்தல்' என்றால், அச்சட்டத்தை நீக்குதல், இரத்து செய்தல், பிரித்து விடல், தள்ளுபடி செய்தல் என்று பொருள்படும். அதாவது, அக்குறிப்பிட்ட சட்டமானது அமலில் இல்லாத, இறந்துபட்ட ஒன்றாகிவிடுகிறது.

நீக்குதல் சட்டத்தின் நோக்கம் (Object of Repeal) :

ஒரு சட்டத்தை நீக்கறவு செய்வதற்காக இயற்றப்படும் 'நீக்கறவு செய் சட்டத்தின்' (Repealing enactment) முக்கிய நோக்கம் யாதெனில், அச்சட்டத்தில் முரண்பாடாகவும், தெளிவற்றும் உள்ள சட்டப் பிரிவுகளை நீக்குதலாகும்.

நீக்குதலின் விளைவு (Effect of Repeal) :

ஒரு சட்டம் நீக்கறவு செய்யப்பட்டுவிட்டால், அச்சட்டமானது, கடந்த கால மற்றும் முடிவாகிப்போன விஷயங்கள் மற்றும் செயல்பாடுகள் தவிர, பிறவற்றைப்

பொறுத்து எப்பொழுதுமே இல்லாததாகவே கருதப்படும். ஒரு சட்டம் நீக்கப்பட்டு விட்டது என்றால், அது பின்வரும் விளைவை ஏற்படுத்துவதாகும். அதாவது, பாராளுமன்றம் அச்சட்டத்தை எப்பொழுதுமே இயற்றவில்லை என்ற அளவிற்கு, பாராளுமன்றத்தின் சட்டப் பதிவேடுகளிலிருந்து அதனை முற்றிலுமாக நீக்கிவிட்டதாகக் கருதப்படும். சுருங்கக்கூறின், அமலில் இருந்த பொழுது, அதன் தொடக்கம், அதன் அடிப்படையில் எழுந்த வழக்கு நடவடிக்கைகள் மற்றும் முடிவு பெறல் ஆகிய குறிப்பிட்ட வரம்பிற்குட்பட்ட விஷயங்களைத் தவிர, பிறவற்றைப் பொறுத்து அது எப்பொழுதுமே இயற்றப்படவில்லை என்றே நீக்கப்பட்ட சட்டத்தைக் கருத வேண்டும். வேறு விதத்தில் கூறுவதானால், நீக்கப்பட்ட சட்டங்களானது நீதிமன்றங்களால் எடுத்துக் கொள்ளப்படாது. ஆனால் நீக்கப்படுவதற்கு முன்னர் நிகழ்ந்த அனைத்து விஷயங்களைப் பொறுத்தும் அது செல்லத்தக்கதாவே இருக்கும்.

நீக்குதல் சட்டம் குறித்து 1897-ஆம் ஆண்டின் பொது வகையங்கள் விளக்கச் சட்டம் (The General Clauses Act, 1897) கூறுவதாவது:

மேற்படி சட்டத்தின் ஆறாவது பிரிவானது, சட்டத்தை நீக்கி விடுதலால் (Repeal) ஏற்படும் விளைவுகளைப் பற்றி கூறுகிறது. ஒரு சட்டத்தை நீக்கி விடுதல் எனும் பொழுது அச்சட்டம் ஒரு போதும் இயற்றப்பட்டுச் சட்டத் தொகுப்பில் இடம் பெறவில்லை என்பதற்குச் சமமாகும். அப்படிப்பட்ட ஒரு சட்டம் எப்போதும் இருந்ததில்லை என்றே பொருள் கொள்ள வேண்டும். ஆனால் இந்த ஆறாம் பிரிவு, விதிவிலக்கு ஒன்றை, வரையறுத்து அதன்கீழ் பின்வரும் 5 கோட்பாடுகளை விதிக்கிறது.

(அ) ஒரு சட்ட நீக்கறவானது, சட்ட நீக்கத்தைச் செய்யும்போது இல்லாத ஒன்றைப் புதுப்பித்ததாகவோ (Revive), இருக்கின்ற ஒன்றை உயிர்ப்பித்ததாகவோ கொள்ளக்கூடாது.

(ஆ) நடைமுறையில் இருக்கின்ற உரிமைகளைப் பாதிக்கின்ற சட்ட நீக்கறவு நிகழ்காலம் பற்றிய ஒன்றே. தெளிவாக எதுவும் சொல்லப்படாதவரை இறந்த காலத்திற்கு அதனைப் பயன்படுத்தக் கூடாது.

(இ) பெற்ற ஒரு உரிமை அல்லது ஒரு பொறுப்பினை ஒரு சட்ட நீக்கறவு எந்த விதத்திலும் பாதிக்காது.

(ஈ) சட்டத்திற்கு எதிராக செய்யப்பட்ட குற்றத்திற்காக விதிக்கப்பட்ட அபராதத்தையோ அல்லது தண்டனையையோ சட்ட நீக்கறவு பாதிக்காது.

(உ) உரிமை, பொறுப்பு, தண்டனை போன்றவை தொடர்பாக எழும் புலன்விசாரணை மற்றும் சட்ட நடவடிக்கைகளை சட்ட நீக்கறவு பாதிக்காது.

சட்டத்தை நீக்கறவு செய்வதற்கான முறைகள் :

ஒரு சட்டத்தை இரண்டு விதங்களில் நீக்கலாம். அவை, (1) வெளிப்படையான நீக்கறவு; (2) அனுமான (அல்லது) உட்கிடையான நீக்கறவு.

(1) வெளிப்படையான நீக்கறவு (Repeal by Expression) :

இந்த விதத்தில் பின்னர் இயற்றப்பட்ட ஒரு சட்டமானது, முன்னர் இயற்றப்பட்ட சட்டமொன்றை நீக்குகிறது. உதாரணமாக, பின்னர் இயற்றப்பட்ட சட்டத்தில், 'இந்தச் சட்டத்திற்கு முரண்பாடாக உள்ள பிற சட்டத்தின் வகைமுறைகள் நீக்கப்படுகிறது' என்று இருந்தால், அச்சட்டத்திற்கு முன்பிருந்த சட்டங்களில் அதற்கு முரணாக உள்ள வகைமுறைகள் நீக்கப்பட்டு விட்டதாக கருத வேண்டும். முந்தய சட்டங்களில் எச்சட்ட வகைமுறைகள், பிந்தய சட்ட வகைமுறைகளுக்கு முரணாக உள்ளது, என்பதை ஆய்ந்தறிய வேண்டியது நீதிமன்றத்தின் பணியாகும்.

(2) அனுமான (உட்கிடையான) நீக்கறவு (Repeal by Implication):

சில சமயங்களில் பின்னர் இயற்றப்பட்ட ஒரு சட்டம் முன்னர் இயற்றப் பட்ட ஒன்றை மறைமுகமாக அதாவது உட்கிடையாக நீக்குவதாக இருக்கலாம். இவ்வாறு நீக்கப்பட்டிருத்தல் குறித்து நீதிமன்றங்கள் அனுமானம் செய்வதின் வாயிலாகவே அறிய முடியுமென்பதால், இதனை 'அனுமான நீக்கறவு' என்று குறிப்பிடுவதே உகந்ததாகும்.

இதன்படி பின்னர் இயற்றப்பட்ட ஒரு சட்டம் முன்னர் இயற்றப்பட்ட சட்டத்துடன் முரண்பட்டு இருந்தால், இது குறித்து தக்க முடிவெடுப்பதற்கு முன், இரண்டு சட்டங்களும் ஒத்துப் போகின்ற ஒரு சுமுகமான பொருள் விளக் கத்தையே நீதிமன்றம் கையாளும். ஆனால், இரண்டும் முரண்பட்டு இணைந்து செயல்பட இயலாமல் போய்விட்டால், பின்னர் இயற்றப்பட்ட சட்டம் முன்னர் இயற்றப்பட்ட சட்டத்தை நீக்கிவிட்டதாகவே கொள்ள வேண்டும்.

உதாரணமாக, ஒரு சட்டம் சிலவகையான மதுபானங்களுக்கு அனுமதி சான்றிதழ் பெறுவதிலிருந்து விதிவிலக்கு அளித்திருந்தது. ஆனால், அதைத் தொடந்து பின்னர் வந்த சட்டம் அனுமதிச் சான்றிதழ் இல்லாமல் எந்தவிதமான மதுவகைகளும் விற்கக் கூடாது என்ற தடை விதித்தது. இந்த உதாரணத்தில் இரண்டு சட்டங்களும் ஒன்றிற்கொன்று முரண்பாடானவை என்பதோடு ஒன்றாக இணைந்து செயல்பட இயலாத நிலையில் உள்ளன. எனவே, பின்னர் வந்த சட்டம், முன்னர் வந்த சட்டத்தை நீக்கி விட்டதாகக் கொள்ள வேண்டும். குறிப்பிட்ட பல தனிப்பட்ட சூழல்களைக் குறிக்கும் சட்டம், பொதுவாக கொண்டு வரப்பட்ட ஒரு சட்ட நீக்கத்தால் நீக்கறவு செய்யப்பட்டதாகக் கொள்ளக் கூடாது.

பழைய ஒரு சட்டம் குறித்து புதிதாக ஒரு சட்டம் இயற்றப்பட்டு, அது பழைய சட்டத்தில் கூறப்பட்டுள்ள குற்றங்குறைகளையும், தண்டனைகளையும் மாற்றி அமைத்தால் அப்புதிய சட்டம், பழைய சட்டத்தை மறைமுகமாக நீக்கம் செய்து அமைத்திருப்பதாக பொருள் கொள்ள வேண்டும். ஒரு விஷயம் குறித்து முரண் பட்டுள்ள இரண்டு சட்டங்களையும் ஒன்றாக வழக்கு நடக்கையில் நீதிமன்றம்

கருத்தில் கொள்ளாது.

அனுமான நீக்கறவின் அடிப்படைக் கோட்பாடு :

பின்னர் இயற்றப்பட்ட சட்டத்தில், முன்னர் இயற்றப்பட்ட சட்டம் 'நீக்கறவு செய்யப்பட்டது' (repealed) என குறிப்பான வார்த்தைகளால் உணர்த்த வேண்டிய அவசியமில்லை. ஆனால் முன்னர் இயற்றப்பட்ட சட்டத்தை நீக்க வேண்டும் என்பது சட்டமன்றத்தின் உள்ளக்கிடக்கையாக இருக்கும்பட்சத்தில், அது பின்னர் இயற்றப்பட்ட சட்டத்தில் "பழைய (முன்னர்) சட்டம் இதனால் நீக்கறவு செய்யப்படுகிறது" எனக் குறிப்பிட வேண்டும். இவ்வாறு இல்லாத சமயத்தில் முன் கூறியபடி அனுமானித்துக் கொள்ள வேண்டும். சுருங்கக் கூறின், சட்டமன்றமானது, தான் இயற்றிய ஒரு புதிய சட்டத்தினால், எவ்வித குழப்பங்களையோ அல்லது முரண்பாட்டையோ தோற்றுவிக்க விரும்பவில்லை என்று அனுமானித்துக் கொள்ள வேண்டும்.

அனுமான நீக்கறவிற்கு எதிரான அனுமானம் (Presumption against repeal by implication) :

இவ்வளவு இருந்தும், இந்த அனுமான நீக்கத்தை சட்டம் ஆதரிப்ப தில்லை. எவ்வித வழிகளும் தென்படவில்லையென்றால்தான், இதனை ஒரு கடைசி முயற்சியாக எடுத்துக்கொள்ள வேண்டும். ஏனென்றால் சட்டமன்றமானது முழு அறிவுடனே சட்டத்தை இயற்றுகின்றது. ஆகவே, அது ஒரு சட்டத்தில், அதற்கு முன்னர் இயற்றப்பட்ட சட்டம், 'நீக்கம் செய்யப்பட்டது' எனத் தெளிவாக குறிப்பிடா விட்டால், பழைய சட்டம் நீக்கப்பட்டுவிட்டதாக அனுமானிக்கக் கூடாது. அசாதாரண தருணங்களிலேயே அனுமான சட்ட நீக்கத்தை அனுமானிக்க வேண்டும்.

Ratan Lal Adukia v. Union of India[1]

மேற்படி வழக்கில், 'பழையன கழிதலும், புதியன புகுதலும்' என்பது, "புதியன புகுவதே பழையன கழிவதற்காகத்தான்" எனப்பட்டது. அதாவது, பழைய சட்டம் முரண்பாடான விடயங்களைக் கொண்டிருக்கிறது. அதற்காக புதிய சட்டம் கொண்டு வரப்படுகிறது. பழைய காலத்தில் என்ன இருந்தது என்பதையும், புதிய சட்டத்தின் விளைவுகள் என்ன என்பதையும் அறிந்து கொண்டுதான் சட்டமன்றம் புதிய சட்டத்தை இயற்றுகிறது. எனவே புதிய சட்டமானது பழைய சட்டத்தை உட்கிடையாக நீக்கி விடுகிறது எனப் பொருள் கொள்ள வேண்டுமென உச்ச நீதிமன்றம் மேற்படி வழக்கில் கூறியது.

சட்டத் திருத்தம் (Amendment of Statute) :

சட்டத் திருத்தம் என்பது ஒரு சட்டத்தில் அதன் நோக்கத்தை மேம்படுத்தும் பொருட்டு, எப்பிரிவையாவது சேர்க்கவோ அல்லது எப்பிரிவையாவது மாற்றவோ

1. A.I.R. 1990 S.C. 104

சட்டமன்றத்தால் செய்யப்படுவதாகும். சட்டத் திருத்தமானது புதிதாக சட்டம் இயற்றப் படுவதைப் போலவே செய்யப்படுகிறது. இது "திருத்தச்சட்டம்" (Amending Act) எனப்படுகிறது. இத்திருத்தச் சட்டத்தில், மூல சட்டத்தில் திருத்தப்பட்ட சட்டப் பிரிவுகள் எப்பொழுதிலிருந்து அமலுக்கு வரும் என்பதும், அதிலேயே கொடுக்கப் பட்டிருக்கும். இத்திருத்தச் சட்டம், எச்சட்டத்தில் திருத்தத்தை கொண்டு வர விழைகிறதோ அம்மூலச் சட்டத்தின் நோக்கத்திற்குட்பட்டே செயல்படும்.

செய்சட்டங்களின் புதுப்பிப்பு
[Revival of Enactments]

செய்சட்டங்களின் புதுப்பிப்பு (Revival of Enactments) :

'புதுப்பிப்பு' என்றாலே முடிந்து போன விஷயத்திற்கு மீண்டும் உயிர் கொடுத்தலாகும். அதாவது, 'மீட்டுயிர்', 'புத்துயிர்' தருதலாகும். அதுபோல், சட்டத் தில், நீக்கப்பட்ட ஒரு சட்டத்திற்கு மீண்டும் செயல்பட அதிகாரம் அளித்தால், அது 'சட்டத்தின் புதுப்பிப்பு' எனப்படுகிறது. அதாவது இறந்து போன ஒரு சட்டம், மீண்டும் உயிர்ப்பிக்கப்படுகிறது.

எவ்வாறு புதுப்பித்தல் நடக்கிறது ?

ஒரு சட்டம், மற்றொரு சட்டத்தால் நீக்கப்பட்டு விடுகிறது (Repealed). பிறகு அம்மற்றொரு சட்டமும் பிறிதொரு சட்டத்தால் நீக்கப்பட்டு விடுகிறது. இந்த இரண்டாவது நீக்கல், முதலாவதாக நீக்கப்பட்ட சட்டத்திற்கு மீண்டும் உயிர் தந்து புதுப்பிக்கிறது. ஆனால், அவ்வாறு புதுப்பிக்கப்படுவதற்கு முரணான கருத்து ஏதும் இரண்டாவது சட்டத்தை நீக்கும் சட்டத்தால் கூறப்பட்டிருக்கக் கூடாது.

பொது வகையங்கள் விளக்கச் சட்டம் கூறுவதாவது:

1897–ஆம் ஆண்டின் பொது வகையங்கள் விளக்கச் சட்டத்தின் (The General Clauses Act, 1897) 7–வது பிரிவு பின்வருமாறு கூறுகிறது. அதன்படி, மேற்படி 7–வது பிரிவின் முதல் உட்பிரிவானது, மேற்படி பொது வகையங்கள் விளக்கச் சட்டம் தொடங்கிய பிறகு இயற்றப்பட்ட மைபச் சட்டமோ, ஒழுங்குறுத்தும்விதியோ, புதுப்பிப்பு தொடர்பாக, அது முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ இருப்பினும் கூட, அச்சட்டம் முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ புதுப்பிக்கப்பட்டுள்ளது என்பதை வெளிப்படையாகக் குறிப்பிட வேண்டியது அவசியம், என்று கூறுகிறது. அதாவது, மேற்படி 7–வது பிரிவின் சாரம்சம் என்னவென்றால், ஒரு சட்டம் புதுப்பிக்கப்பட்டது என்றால், அது குறித்து தெளிவாகக் குறிப்பிடப்பட வேண்டும், என்பதுதான்.

-oOo-

சென்னை
பொது வகையங்கள் விளக்கச் சட்டம், 1867

(சட்ட எண். I/1867)

[The Madras General Clauses Act, 1867]

(Act No. I of 1867)

(1867, பிப்ரவரி 15 மற்றும் 1867, மார்ச் 21)

புனித சார்ஜ் கோட்டையின் செயலுறும் மன்றத்தமர் ஆளுநரின் சட்டங்களில் பயன்படுத்தப்பட்டுள்ள மொழியை சுருக்குவதற்கான மற்றும் அதன் தொடர்பாக சில வகையங்களைச் செய்வதற்கான ஒரு சட்டம்.

முகப்புரை: புனித சார்ஜ் கோட்டையின் செயலுறும் மன்றத்தமர் ஆளுநரின் சட்டங்களில் வழக்கமாக ஈடுபடுத்தப்பட்டுள்ள பதங்களுக்கு முடிவான சில வரையறையை இயற்றுவதும் மற்றும் அத்தகு சட்டங்கள் குறித்த இதர வகையங்கள் சிலவற்றைச் செய்வதும் உகந்ததாக இருப்பதால், ஈங்கிதனால் பின்வருமாறு சட்டமியற்றப்படுகிறது.–

பிரிவு 1 - தண்டனை மற்றும் குற்றவியல் நடைமுறை

தொகுப்புச் சட்டங்களில் வரையறுக்கப்பட்டுள்ள சொற்களுக்கு பொருள் (Meaning of words defined in Penal and Criminal Procedure Codes).- சென்னை மாகாண அரசாங்கத்தின் எதிர்கால சட்டம் எதிலும், எப்பொழுதேனும் ஈடுபடுத்தப்பட வேண்டியதும், இந்தியத் தண்டனை தொகுப்புச் சட்டத்தின் II–ஆம் அத்தியாயத்தில் அல்லது குற்றவியல் நடைமுறைச் தொகுப்புச் சட்டத்தின் I–ஆம் அத்தியாயத்தில் வரையறுக்கப்பட்டுள்ளதுமான சொல் அல்லது சொற்றொடர் எதுவும், அந்த சொல் அல்லது சொற்றொடரானது அந்த அத்தியாயங்களில் அதற்கு கொடுக்கப்பட்டுள்ள பொருளை கொண்டதாக எடுத்துக் கொள்ளப்படுதல் வேண்டும், அந்த சட்டத்தில் அதற்கு வேறுவிதமாக வகை செய்யப்பட்டிருந்தாலன்றி, அல்லது அத்தகு பொருள் விளக்கத்திற்கு முரண்பாடாக ஒன்று அதன் பொருளமைப்பில் அல்லது தறுவாயில் ஏதும் அங்கு இருந்தாலன்றி.

பிரிவு 2 - காவலர் குற்றவியல் நடுவர் (Magistrate of Police).- *முதலாவதாக.–* "காவலர் குற்றவியல் நடுவர்" எனும் சொற்கள் சென்னை நீதித் துறையாட்சி உயர் நீதிமன்றத்தின் இயல்பான முதலேற்பு உரிமையியல் அதிகாரவரம்பின் வட்டார எல்லைக்குள் அப்போதைக்கு இருக்கிற காவலர் குற்றவியல் நடுவரின் அதிகாரங்களை செயற்படுத்தும் ஆள் எவரையும் குறிக்கும்.

இரண்டாவதாக.– "சென்னை நகரம்".– "சென்னை நகரம்" எனும் சொற்கள் சென்னை நீதித் துறையாட்சி உயர் நீதிமன்றத்தின் இயல்பான முதலேற்பு உரிமையியல் அதிகாரவரம்பின் வட்டார எல்லைக்குள் அப்போதைக்கு இருக்கிற அத்தகு இடங்களை குறிக்கும்.

பிரிவு 3 - சட்ட நீக்கம், அதனால் நீக்கப்பட்ட சட்டங்களை உயிர்ப்பித்தல் ஆகாது (Repeal of Act not to revive laws repealed thereby).- முந்தய இயற்சட்டம் எதையும் முழுவதுமாகவோ பகுதியாகவோ நீக்கும் சட்டமே நீக்கப்படுமிடத்து, அத்தகு இறுதி நீக்கமானது, நீக்கத்திற்கு முன்னதான அந்த இயற்சட்டத்தை, அல்லது அதனுடைய வகையங்கள் எதையும், அத்தகு இயற்சட்டம் அல்லது வகையங்களை உயிப்பிக்கும் சொற்கள் சேர்க்கப் பட்டிருந்தாலன்றி, உயிர்ப்பித்தல் ஆகாது.

பிரிவு 4 - நீக்கத்திற்கு முந்தய விடயங்கள் பாதிக்கப் படாது (Matters prior to repeal unaffected).- சட்டம் அல்லது ஒழுங்குறுத்தும் விதி எதனின் நீக்கமானது, அச்சட்ட நீக்கம் செல்லாற்றலுக்கு வருவதற்கு முன்பு செய்யப்பட்டுள்ள செயல் எதையும், அல்லது புரியப்பட்டுள்ள குற்றம் எதையும், அல்லது விதிக்கப்பட்டுள்ள அபராதம் அல்லது தண்டம்

எதையும், அல்லது நடவடிக்கைகள் எதையும் பாதிக்காது.

பிரிவு 5 - எதிர்கால சட்டங்களின் தொடக்கநிலை (Matters prior to repeal unaffected).- சென்னை மாகாண அரசாங்கத்தின் எதிர்கால சட்டம் எதிலும் அது செல்லாற்றலுக்கு வரக்கூடிய காலம் எதுவும் குறிப்பிடப் படாதவிடத்து, மாகாண அரசாங்கம் அதிகாரமுறை அரசிதழில் வெளியிடுகை மூலம் அறிக்கை செய்யலாகும் அத்தகு நாளில் இருந்து அச்சட்டம் செல்லாற்றலுக்கு வரும்.

பிரிவு 6 மற்றும் 7 - சென்னை சட்டங்கள் குறித்த நீதிமுறை கவனம் : பொதுச் சங்கதியின் வாசகங்களே அதன் உண்மைக்கு முதற்தோற்ற சான்றாகும் (Judicial notice of Madras Acts : recital of public fact to be *prima facie* evidence of its truth).- (நீக்கம் மற்றும் திருத்தச் சட்டம், 1874–ஆல் நீக்கப்பட்டது.)

பிரிவு 8 - குறுந்தலைப்பு (Short title).- இச்சட்டம் எல்லா நோக்கங்களுக்காகவும் சென்னை பொது வகையங்கள் விளக்கச் சட்டம், 1867 என்று குறிப்பிடப்படலாம்.

-o0o-

சென்னை
பொது வகையங்கள் விளக்கச் சட்டம், 1891

(சட்ட எண். I/1891)

[The Madras General Clauses Act, 1891]

(Act No. I of 1891)

(1891, ஏப்ரல் 3 ; 1891, மே 14)

சென்னை சட்டங்களில் பயன்படுத்தப்பட்டுள்ள மொழியை மேலும் சுருக்குவதற்கான மற்றும் வேறு நோக்கங்களுக்கான ஒரு சட்டம்.

சென்னை சட்டங்களில் பயன்படுத்தப்பட்டுள்ள மொழியை மேலும் சுருக்குவதும் மற்றும் அந்த சட்டங்கள் தொடர்பாக மேலுமான வகையங்கள் சிலவற்றைச் செய்வதும் உகந்ததாக இருப்பதால், ஈங்கிதனால் பின்வருமாறு சட்டமியற்றப்படுகிறது.–

பிரிவு 1 - குறுந்தலைப்பு மற்றும் தொடக்கநிலை (Short title and commencement).- (அ) இந்தச் சட்டம், சென்னை பொது வகையங்கள் விளக்கச் சட்டம், 1891 என்று வழங்கப் பெறும்.

(ஆ) இது 1892-ஆம் ஆண்டு ஜனவரி முதல் நாளிலிருந்து செல்லாற்றலுக்கு வரும்.

பிரிவு 2 - விதிவிலக்கு வகையம் (Saving clause).- சென்னை பொது வகையங்கள் விளக்கச் சட்டம், 1867-ல் யாது கூறப்பட்டிருப்பினும், அச் சட்டத்தின் வகையங்கள் இந்தச் சட்டத்திற்கு அல்லது இந்தச் சட்டத்தின் தொடக்க நிலைக்கு பின்பு இயற்றப்படலாகும் சென்னை சட்டங்கள் எதற்கும் பொருந்தாது.

அத்தியாயம் I

வரையறைகள் [Definitions]

பிரிவு 3 - பொருள் வரையறைகள் (Definitions).- இந்தச் சட்டத்திலும் மற்றும் இந்தச் சட்டத்தின் தொடக்க நிலைக்குப் பின்பு செய்யப்பட்ட சென்னை சட்டம் ஒவ்வொன்றிலும், பொருளிலோ அல்லது சூழ்நிலையிலோ முரணானது எதுவும் இருந்தாலன்றி,-

(1) "உடந்தையாயிரு" **(Abet)** என்பது, அதனுடைய இலக்கண வேறுபாடுகளுடனும் அதன் குடும்பத்தைச் சேர்ந்த சொற்றொடர் களுடனும், 1860-இன் இந்தியத் தண்டனைத் தொகுப்புச் சட்டத்திலுள்ளதைப் போன்ற அதே பொருளை உடையதாகும்;

(2) "பாரிஸ்டர்" **(barrister)** என்பது, இங்கிலாந்து அல்லது அயர்லாந்துப் பாரிஸ்டர் ஒருவர் அல்லது ஸ்காட்லாந்திலுள்ள வழக்குரைஞர்கள் குழுவின் ஓர் உறுப்பினர் என்று பொருள்படும்;

(3) *(விடப்பட்டுவிட்டது.)*

(4) "அத்தியாயம்" **(Chapter)**,"பகுதி" **(part)**, "பிரிவு" **(section)**, "இணைப்புப்பட்டியல்" **(Schedule)** என்பன, எந்தச் சட்டத்தில் அந்தச் சொல் வருகிறதோ முறையே அந்தச் சட்டத்தினுடைய ஒரு "அத்தியாயம்", "பகுதி", "பிரிவு", "இணைப்புப்பட்டியல்" என்று பொருள்படும்.

(5) "சென்னை மாநகரம்" **(City of Madras)** என்பது, அத்தகு மாநகரத்தின் நகராட்சி விவகாரம் தொடர்பாக அப்போதைக்கு செல்லாற் றலில் இருக்கும் சட்டம் எதன் கீழாகவும் சென்னை மாநகரம் என்று அப்போதைக் கப்போது விளம்பப்படும் அத்தகு வட்டாரப் பகுதி எதுவும் என்று பொருள்படும்.

(6) "ஆட்சியர்" **(Collector)** என்பது, ஒரு ஆட்சியருக்கான அதிகாரங்களை செயற்படுத்த அப்போதைக்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ள

அலுவலர் ஒவ்வொருவரையும் உள்ளடக்கும்;

(7) ஒரு சட்டம் தொடர்பாக பயன்படுத்தப்படும் "தொடக்க நிலை" **(Commencement)** என்பது, அந்தச் சட்டம் செல்லாற்றலுக்கு வரும் நேரம் என்று பொருள்படும்;

(8) "மாவட்ட ஆட்சியர்" **(District Collector)** என்பது, ஒரு மாவட்டத்தின் வருவாய்த்துறை நிருவாகத்தைப் பொறுப்பில் கொண்டுள்ள தலைமை வட்டார அலுவலர் என்று பொருள்படும்;

(9) "ஆவணம்" **(Document)** என்பது, பொருட்பாடு எதையும் பதிவு செய்யும் நோக்கத்துக்காகப் பயன்படுத்தக் கருதப்படும் அல்லது பயன்படுத்தப்பட்டலாகும் எழுத்துக்கள், எண்கள் அல்லது குறிகள் வாயிலாகவோ அந்த வழிகளில் ஒன்றுக்கு மேற்பட்டவற்றின் வாயிலாகவோ, பொருள் எதன் மீதும் எழுதப்பட்ட, வெளிப்படுத்தப்பட்ட அல்லது விவரிக்கப்பட்ட அந்தப் பொருட் பாட்டை உள்ளடக்கும்;

(10) "நிதியாண்டு" **(financial year)** என்பது ஏப்ரல் முதல் நாளிலிருந்து தொடங்குகிற ஆண்டு என்று பொருள்படும்;

(11) உரிய அக்கறை மற்றும் கவனமின்றி செய்யப்பட்டது அல்லது நம்பப்பட்டது எதுவும் "நல்லெண்ணத்தில்" **(good faith)** செய்யப்பட்டது அல்லது நம்பப்பட்டது என்று சொல்லப்படுதல் ஆகாது;

(12) *(விடப்பட்டுவிட்டது.)*

(13) *(விடப்பட்டுவிட்டது.)*

(14) "நிலையியல் சொத்து" **(immovable property)** என்பது, நிலம், நிலத்திலிருந்து எழும் பயன்கள், மற்றும் பூமியுடன் சேர்ந்துள்ள, அல்லது பூமியுடன் சேர்ந்துள்ள எப்பொருளுடனும் நிலையாகப் பிணைக்கப் பட்டுள்ள, பொருள்களை உள்ளடக்கும்;

(15) "சிறைத்தண்டனை" **(imprisonment)** என்பது, 1860-இன் இந்தியத் தண்டனைத் தொகுப்புச் சட்டத்தில் பொருள்வரையறை செய்யப் பட்டவாறான இரண்டு விவரிப்புகளில் ஏதேனுமொன்று என்று பொருள்படும்;

(15-அ) *(விடப்பட்டுவிட்டது.)*

(16) "நீதிமுறை நடவடிக்கைகள்" **(judicial proceedings)** என்பது, எந்த நடவடிக்கையின் பொழுது சட்டப்படியாக சாட்சியம் எடுக்கப்படு கிறதோ அல்லது எடுக்கப்படலாகுமோ அந்த நடவடிக்கை எதுவும் என்று பொருள்படும்;

(17) "வட்டார அதிகார அமைப்பு" (local authority) என்பது, ஒரு நகராட்சியின் அல்லது வட்டாரத்தின் நிதியைக் கட்டாள்கை (Control) அல்லது மேலாண்மை செய்ய சட்டப்படி உரிமைக் கொண்ட அல்லது அரசாங்கத்தால் அந்தக் கட்டாள்கை அல்லது மேலாண்மை ஒப்படைக்கப்பட்டுள்ள, ஒரு நகராட்சி குழு, மாவட்ட வாரியம், துறைமுக ஆணையர்களின் குழுமம் அல்லது பிற அதிகாரஅமைப்பு எதுவும் என்று பொருள்படும்;

(17–அ) "சென்னை சட்டம்" (Madras Act) என்பது 1861 முதல் 1909 வரையிலான இந்திய மன்றங்கள் சட்டங்கள் அல்லது அச்சட்டங்கள் எதனின், அல்லது 1915–இன் இந்திய அரசாங்கச் சட்டத்தின் கீழ் புனித சார்ஜ் கோட்டையின் செயலுறும் மன்றத்தமர் ஆளுநரால், அல்லது வட்டார சட்ட மன்றத்தால் அல்லது இந்திய அரசாங்கச் சட்டத்தின் கீழ் சென்னை இராஜதானி ஆளுநரால் அல்லது 1935–இன் இந்திய அரசாங்கச் சட்டத்தின் கீழ் சென்னை மாகாண சட்டமன்றத்தால், அல்லது அரசமைப்பின் கீழ் சென்னை மாநில சட்டமன்றத்தால் செய்யப்பட்ட ஒரு சட்டம் என்று பொருள்படும்.

(18) "குற்றவியல் நடுவர்" (Magistrate) என்பது 1882–இன் குற்றவியல் நடைமுறைத் தொகுப்புச் சட்டத்தின்படி ஒரு குற்றவியல் நடுவரின் அதிகாரம் அனைத்தையுமோ அல்லது அவற்றில் எவற்றையுமோ செலுத்துகிற நபர் எவரும் என்று பொருள்படும்;

(19) "அசைவியல் சொத்து" (movable property) என்பது, நிலையியல் சொத்து அல்லாத ஒவ்வொரு விவரிப்பையுமுடைய சொத்து என்று பொருள்படும்;

(19–அ) "அறிக்கை" (Notification) என்பது, அதிகாரமுறை அரசிதழில் வெளியிடப்பட்ட ஒரு அறிக்கை என்று பொருள்படும்;

(20) "ஆணையுறுதி" (oath), "ஆணைமொழி" (swear) மற்றும் "ஆணையுறுதி ஆவணம்" (affidavit) என்பது, ஆணைமொழிதலுக்குப் பதிலாக, உறுதிமொழி செய்யவோ விளம்புகை செய்யவோ சட்டத்தினால் அனுமதிக்கப்படும் நபர்களாக இருக்கும் நேர்வில், உறுதிமொழியையும், விளம்புகையையும் உள்ளடக்கும்;

(21) "குற்றச்செயல்" (offence) என்பது அப்போதைக்குச் செல்லாற்றிலிலிருக்கும் சட்டம் எதனாலும் தண்டிக்கத்தக்கதாக ஆக்கப்பட்ட செயல் அல்லது விடுகை எதுவும் என்று பொருள்படும்;

(22) "ஆள்" (person) என்பது, நிறுமம் அல்லது கழகம் அல்லது தனி நபர்களின் குழுமம் எதையும், அது கூட்டுருமமாகப் பதிவு செய்யப்பட்டிருந்தாலும் இல்லையென்றாலும், உள்ளடக்கும்;

(23) "இடம்" (place) என்பது, ஒரு வீடு, கட்டிடம், கூடாரம் அல்லது கலத்தையும் கூட உள்ளடக்கும்;

(25) "மாகாணத் தலைநகர்" (Presidency-town) என்பது, சென்னை நீதித் துறையாட்சி உயர் நீதிமன்றத்தின் இயல்பான முதலேற்பு உரிமையியல் அதிகாரவரம்பில் அப்போதைக்கு இருக்கிற வட்டார எல்லைக்குள் உள்ளது என்று பொருள்படும்;

(26) "பொது மக்கள்" (Public) என்பது, பொதுமக்களின் வகுப்பினர் எவரையும் அல்லது சமூகம் எதையும் உள்ளடக்கும்;

(27) "பொதுத் தொல்லை" (public nuisance) என்பது, 1860-இன் இந்தியத் தண்டனைத் தொகுப்புச் சட்டத்தின் 268-ஆவது பிரிவில் அந்த சொற்றொடருக்கு அளிக்கப்பட்டுள்ள அதே பொருளைக் கொண்டிருக்கும்;

(28) ஆவணம் ஒன்று தொடர்பாகப் பயன்படுத்தப்படும் "பதிவு செய்யப்பட்ட" (registered) என்பது, ஆவணங்களைப் பதிவு செய்வதற்காக அப்போதைக்குச் செல்லாற்றலிலுள்ள சட்டத்தின்படி பகுதி 'அ' மாநிலத்தில் அல்லது பகுதி 'இ' மாநிலத்தில் பதிவு செய்யப்பட்ட என்று பொருள்படும்;

(29) தம்முடைய பெயரை எழுத இயலாத ஒரு நபர் தொடர்பாக "கையொப்பம்" (sign) என்பது, அதன் இலக்கண வேறுபாடுகளுடனும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த சொற்றொடர்களுடனும், "கைநாட்டுக்குறியை" (mark) அதன் இலக்கண வேறுபாடுகளுடனும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த சொற்றொடர்களுடனும் உள்ளடக்கும்;

(30) எவரது இனமுறைச் சட்டம் மகவேற்பை அனுமதிக்கிறதோ அவராக இருக்கும் நேர்வில், "மகன்" (son) என்பது ஏற்பு மகன் ஒருவரையும், மற்றும் "தந்தை" (father) என்பது மகவேற்கும் தந்தை ஒருவரையும் உள்ளடக்கும்;

(31) "உட்பிரிவு" (sub-section) என்பது, எந்தப் பிரிவின் உட்பிரிவில் அந்தச் சொல் வருகிறதோ அந்தப் பிரிவின் உட்பிரிவு என்று பொருள்படும்;

(32) உரிமை வழக்கு ஒன்று தொடர்பாக பயன்படுத்தப்பட்ட "மதிப்பு" (value) என்பது, அதிகாரவரம்பு நோக்கங்களுக்காக உரிமை வழக்குகளின் மதிப்பிடுகையை ஒழுங்குறுத்த அப்போதைக்கு செல்லாற்றலிலுள்ள சட்டத்தின்படி கணக்கிடப்பட்ட, அந்த உரிமை வழக்கு உட்கிடைப் பொருளின் (subject matter) தொகை அல்லது மதிப்பு என்று பொருள்படும்;

(33) "உயில்" (Will) என்பது ஓர் உயிலின் பிற்சேர்க்கையையும், இறந்த பின்பு நிகழவேண்டுமென தம் விருப்பாகச் சொத்து ஏற்பாட்டைச் செய்யும் எழுத்திலான ஒவ்வொன்றையும் உள்ளடக்கும்;

(34) ஆண் பாலினத்தை உணர்த்தும் சொற்கள், பெண் பாலினத்தையும் உள்ளடக்குவதாக எடுத்துக் கொள்ளப்படுதல் வேண்டும்;

(35) ஒருமையிலுள்ள சொற்கள் பன்மையை உள்ளடக்கும் மற்றும் பன்மையிலுள்ள சொற்கள் ஒருமையை உள்ளடக்கும்;

(36) செய்யப்பட்ட செயல்களைக் குறிக்கும் சொற்கள் சட்டமுரணான விடுகைகளுக்கும் கூட நீளும்.

(37) "எழுதுதல்" (writing) என்பது அதன் இலக்கண வேறுபாடுகளுடனும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த சொற்றொடர்களுடனும், அச்சு, கல்லச்சு, ஒளிப்படம் மற்றும் காணக்கூடிய ஒரு வடிவத்தில் அதன் இலக்கண வேறுபாடுகளுடனும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த சொற்றொடர்களுடனும், மற்றும் சொற்களை எடுத்துக்காட்டுகிற அல்லது சொற்களுக்கு மறுஉருவளிக்கிற பிற முறைகளையும் உள்ளடக்கும்;

(38) "ஆண்டு" (year) மற்றும் "மாதம்" (month) என்பது முறையே பிரிட்டிஷ் நாள்காட்டியின்படி கணக்கிடப்பட்ட ஓர் ஆண்டு மற்றும் மாதம் என்று பொருள்படும்.

அத்தியாயம் II
எதிர்கால சட்டங்களுக்கு பொருந்தக்கூடிய பொது வகையங்கள்
[General Provisions Applicable to Future Acts]

பிரிவு 4 - எல்லா எதிர்காலச் சட்டங்களுக்கும் அத்தியாயம் II-இன் பொருந்துதல் (Application of Chapter II to all future Acts).- இந்தச் சட்டத்தின் தொடக்கநிலைக்குப் பின்னர் செய்யப்பட்ட சென்னை சட்டங்கள் எல்லாவற்றிற்கும் அத்தகு சட்டங்களில் முரண்பட்டதொரு கருத்து தோன்றினாலன்றி, இந்த அத்தியாயம் பொருந்துதல் வேண்டும்.

பிரிவு 5 - எதிர்கால சட்டங்களின் தொடக்கநிலை (Commencement of future Acts).- (1) இந்த அத்தியாயம் பொருந்தும் சட்டம் எதுவும், குறிப்பிட்டதொரு நாளில் செல்லாற்றலுக்கு வரும் என்பதைச் சொல்லாதிருக்குமிடத்து, நேர்விற்கு தேவைப்படலாமெனக்கூடியவாறு அதற்கு ஆளுநர், தலைமை ஆளுநர் அல்லது குடியரசுத் தலைவரின் இசைவு எந்த நாளில் அதிகார முறை அரசிதழில் முதலில் வெளியிடப்பட்டதோ, அந்த நாளில் அது செல்லாற்றலுக்கு வருதல் வேண்டும்;

(2) அத்தகு சட்டம் ஒவ்வொன்றிலும், மேற்சொன்னவாறான அத்தகு வெளியீட்டிற்கான தேதியானது ஒன்று அச்சட்டத்தின் தலைப்பிற்கு மேலோ அல்லது கீழோ அச்சடிக்கப்பட்டு, அது அச்சட்டத்தின் ஒரு அங்கமாக வேண்டும்.

பிரிவு 6 - சட்டத்தை இயற்றுவதற்கும் அதன் தொடக்க நிலைக்கும் இடையே விதிகளைச் செய்தலும், ஆணைகளைப் பிறப்பித்தலும் (Making of rules and issue of orders between passing and commencement of Act).- இந்த அத்தியாயம் பொருந்தக் கூடிய மற்றும் இயற்றப்பட்டவுடன் செல்லாற்றலுக்கு வராத சட்டம் ஒன்றினால், அச்சட்டத்தின் பொருந்துகை தொடர்பாக, அல்லது அதன் கீழ் அலுவலர் எவரையும் நியமித்தல் தொடர்பாக, விதிகளைச் செய்யவும், அல்லது ஆணைகளைப் பிறப்பிக்கவும் அரசாங்கத்திற்கு அல்லது பிற அதிகார அமைப்பிற்கு அதிகாரமொன்று அளிக்கப்பட்டிருக்குமிடத்து, அத்தகு அதிகாரம் அச்சட்டம் நிறைவேற்றப்பட்ட பிறகு எந்த நேரத்திலும் செயற்படுத்தப்படலாம், ஆனால் அவ்வாறு செய்யப்பட்ட அல்லது பிறப்பிக்கப்பட்ட விதிகள் அல்லது ஆணைகளானவை அச்சட்டம் தொடக்கநிலைக்கு வரும் வரை செயல்பயனுறத் தொடங்குதலாகாது (shall not take effect).

பிரிவு 7 - முன்னதான வெளியீட்டிற்குப் பிறகு விதிகள் செய்தலை ஒழுங்குறுத்தும் வகையங்கள் (Provisions regulating the making of rules after previous publication).- இந்த அத்தியாயம் பொருந்தக் கூடிய சட்டம் ஒன்றினால், விதிகள் செய்யும் அதிகாரமொன்று கொடுக்கப்படவிருப்பதாக வெளிப்படுத்தப்படுமிடத்து, முன்னதான வெளியீட்டிற்குப் பிறகு செய்யப்படுகிற அவ்விதிகளின் நிபந்தனைகளுக்குட்பட்டு, பின்வரும் வகையங்கள் பொருந்தும், அவை,-

பிரிவு 7-அ (a) - வரைவு விதிகளை வெளியிடல் (Publication of draft rules).- விதிகள் செய்ய அதிகாரம் கொண்டுள்ள அதிகார அமைப்பானது, அவற்றைச் செய்யும் முன்னர், அந்த உத்தேச விதிகளின் வரைவு ஒன்றை வெளியிடல் வேண்டும்;

(b) வெளியிடும் முறை (Manner of Publication).- அந்த அதிகார அமைப்பு போதுமானது என்று கருதக் கூடிய, அல்லது, முன்னதான வெளியீடு தொடர்பான நிபந்தனை அவ்வாறு வேண்டுறுத்தினால் அத்தகு முறையில், அல்லது மைய அரசாங்கம் அல்லது நேர்விற்கேற்றவாறு மாநில அரசாங்கம் வகுத்துரைக்கும் அத்தகு முறையில் வெளியிடுகை செய்யப்படுதல் வேண்டும்;

(c) வரைவு விதிகளுடன் சேர்ந்திருக்க

வேண்டிய அறிக்கை (Notice to accompany draft rules).- அந்த வரைவு எத்தேதியில் அல்லது எத்தேதிக்குப் பின்னர் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும் என்பதைக் குறிப்பிடும் அறிக்கை ஒன்று அந்த வரைவுடன் வெளியிடப்படுதல் வேண்டும்;

(d) வரைவு விதிகள் குறித்த யோசனையை பரிசீலித்தல் (Consideration of suggestion in regard to draft rules).- விதிகள் செய்யும் அதிகாரம் கொண்ட அதிகார அமைப்பானது, மற்றும், மற்றொரு அதிகாரஅமைப்பின் அனுமதி, ஒப்புதல் அல்லது இசைவுடன் விதிகள் செய்யப்பட வேண்டியவிடத்து, அவ்வாறு குறிப்பிடப்பட்ட தேதிக்கு முன்னர், அந்த வரைவு தொடர்பான ஆள் எவரிடமிருந்தும் விதிகள் செய்ய அதிகாரம் கொண்டுள்ள அதிகாரஅமைப்பினால் பெறப்பட்ட ஆட்சேபணை அல்லது யோசனை எதையும் அந்த அதிகாரஅமைப்பு பரிசீலித்தல் வேண்டும்;

(e) விதிகள் உரியவாறு செய்யப்பட்டமைக்கு வெளியிடுகையே சான்றுறுதியாகும் (Publication to be proof of due making of rules).- முன்னதான வெளியிடுகைக்குப் பின்னர் விதிகள் செய்வதற்கான அதிகார மொன்றினை செயற்படுத்தியதில் செய்யப்பட்டிருப்பதாக கருதப்படும் விதியொன்றினை அதிகாரமுறை அரசிதழில் வெளியிடுவதே, அந்த விதிகள் உரியவாறு செய்யப்பட்டுள்ளன என்பதற்கு அறுதியான சான்றுறுதியாகுதல் வேண்டும்.

பிரிவு 8 - ஒரு சட்டத்தை நீக்கறவு செய்வதன் விளைவு (Effect of Repealing an Act).- இந்த அத்தியாயம் பொருந்தும் சட்டம் எதுவும், பிற செய்சட்டம் எதனையும் நீக்கறவு செய்யுமிடத்து, அந்த நீக்கறவானது–

(அ) அந்த நீக்கறவு சட்டத்தின் தொடக்கநிலைக்கு முன்னர் செய்யப்பட்டது எதனையும் அல்லது செய்யப்பட்ட குற்றச் செயல் எதனையும், அல்லது உள்ளாகியிருக்கிற தண்டம் அல்லது தண்ட இழப்பு எதனையும் அல்லது தொடங்கிய நடவடிக்கைகள் எதனையும் பாதித்தலாகாது; அல்லது

(ஆ) அந்த நீக்கறவு எந்த நேரத்தில் செல்திறம் பெறுகிறதோ அந்த நேரத்தில் செல்லாற்றலில் இராத அல்லது இருந்திராத எதற்கும் புத்துயிரளித்தலாகாது; அல்லது

(இ) அவ்வாறு நீக்கறவு செய்யப்பட்ட ஏதேனும் செய்சட்டத்தின்

முந்திய செயற்பாட்டினை அல்லது அவ்வாறு நீக்கறவு செய்யப்பட்ட செய்சட்டம் எதன் கீழும் முறையாகச் செய்யப்பட்ட அல்லது பாதிப்பிற்குள்ளான எதனையும் பாதித்தலாகாது; அல்லது

(ஈ) அவ்வாறு நீக்கறவு செய்யப்பட்ட செய்சட்டம் எதன்படியும் பெறப்பட்ட, வந்தடைந்த அல்லது மேற்கொள்ளப்பட்ட உரிமை, சிறப்புரிமை, கடப்பாடு அல்லது பொறுப்பு எதனையும் பாதித்தலாகாது; அல்லது

(உ) அவ்வாறு நீக்கறவு செய்யப்பட்ட செய்சட்டம் எதற்கும் எதிராகச் செய்யப்பட்ட குற்றச்செயல் எதைப் பொறுத்தும் உள்ளாகியிருக்கிற தண்டம், தண்ட இழப்பு அல்லது தண்டனை எதனையும் பாதித்தலாகாது; அல்லது

(ஊ) மேற்சொன்ன உரிமை, சிறப்புரிமை, கடப்பாடு, பொறுப்பு, தண்டம், தண்ட இழப்பு அல்லது தண்டனை எதனையும் பொறுத்த புலனாய்வு, சட்ட நடவடிக்கை அல்லது தீருதவி எதனையும் பாதித்தலாகாது; மற்றும், நீக்கறவு செய்யும் சட்டம் அல்லது ஒழுங்குறுத்தும்விதி இயற்றப்படாதிருந்தாற் போன்றே அத்தகைய புலனாய்வு, சட்ட நடவடிக்கை அல்லது தீருதவி எதுவும் தொடரப்படலாம், தொடர்ந்து நடத்தப்படலாம் அல்லது செயலுறுத்தப்படலாம், மற்றும் அத்தகைய தண்டம், தண்ட இழப்பு அல்லது தண்டனை எதுவும் விதிக்கப்படலாம்.

பிரிவு 8அ - முந்தய சட்டத்தின் வாசகத்தை திருத்தம் செய்யும் சட்டத்தை நீக்கறவு செய்வதன் விளைவு (Effect of repeal of Act making textual amendment in previous Act).- எந்த செய்சட்டத்தினால் பொருட்பாடு எதையும் வெளிப்படையாக விடுத்தோ, புகுத்தியோ, அல்லது மாற்றமைவு செய்தோ ஏதேனும் முந்தய செய்சட்டத்தின் வாசகம் திருத்தப்பட்டதோ அந்த செய்சட்டத்தை, இந்த அத்தியாயம் பொருந்தக் கூடிய சட்டம் எதுவும் நீக்கறவு செய்யுமிடத்து, மாறுபட்ட கருத்து தோன்றினாலன்றி, அந்த நீக்கறவானது, அவ்வாறு நீக்கறவு செய்யப்பட்ட செய்சட்டத்தின் மூலம் செய்யப்பட்டதும், அத்தகைய நீக்கறவு செய்யப்பட்ட காலத்தில் செயற்பாட்டில் இருந்ததுமான திருத்தம் எதுவும் தொடர்ந்திருப்பதைப் பாதிக்கலாகாது.

பிரிவு 9 - நீக்கறவு செய்யப்பட்ட செய்சட்டங்களுக்குப் புத்துயிர் அளித்தல் (Revival of repealed enactments).- (1) இந்த அத்தியாயம் பொருந்தக் கூடிய சட்டம் எதிலும்–

(அ) முழுமையாகவோ பகுதியாகவோ நீக்கறவு செய்யப்பட்ட

சட்டம் அல்லது ஒழுங்குறுத்தும்விதி ஒன்றிற்கு முழுமையாகவோ பகுதியாகவோ புத்துயிர் அளிக்கும் நோக்கத்திற்காக, அந்த நோக்கத்தை வெளிப்படையாக உரைத்தல் தேவையாகும்.

(ஆ) *காலத்தின் தொடக்கநிலை*, நாட்களின் ஒரு தொடர் ஒரு தொடர் அல்லது பிற கால அளவு எதிலும் முதல் நாளை நீக்கும் நோக்கத்திற்காக, "இருந்து" எனும் சொல்லை பயன்படுத்துவது போதுமானதாகும்.

(இ) *காலத்தின் முடிவுநிலை*, நாட்களின் ஒரு தொடர் ஒரு தொடர் அல்லது பிற கால அளவு எதிலும் கடைசி நாளைச் சேர்க்கும் நோக்கத்திற்காக, "வரை" எனும் சொல்லை பயன்படுத்துவது போதுமானதாகும்.

(ஈ) *கீழமைந்த அலுவலர்களுக்கு அல்லது மேல்நிலை அலுவலர்களுக்கு தொடர்புடைய சட்டத்தின் பொருந்துகை*, ஓர் அலுவலகத்தின் தலைமை அல்லது மேல்நிலை அலுவலருடன் தொடர்புடைய ஒரு சட்டம் அவர்களுடைய மேல்நிலை அலுவலர்களின் இடத்தில் அந்தப் பதவிக் கடமைகளைச் சட்டப்படி புரிகிற பகர உரிமை அலுவலர்களுக்கு அல்லது கீழமைந்த அலுவலர்களுக்குப் பொருந்தும் என்று வெளிப்படுத்தும் நோக்கத்திற்காக, மேல்நிலை அலுவலரின் கடமையை வகுத்துரைப்பது போதுமானதாகும்.

(உ) *அதிகாரிகளுக்கு அடுத்து வருபவர்கள் மற்றும் கூட்டுருமங்களுக்கு சட்டத்தின் பொருந்துகை*, எவரேனும் அதிகாரிகளின் அல்லது தொடர்ந்த நிலைப்பாட்டைப் பெற்றுள்ள எவையேனும் கூட்டுருமங்களின் பதவியில் அடுத்து வருபவர்களுக்குள்ள சட்டத் தொடர்பைச் சுட்டிக்காட்டும் நோக்கத்திற்காக, அந்த அதிகாரிகள் அல்லது கூட்டுருமங்களுடன் உள்ள தொடர்பை வெளிப்படுத்துவது போதுமானதாகும்.

(ஊ) *ஒரு பதவியை அப்போதைக்கு நிரப்பியிருக்கும் ஆட்களுக்கு சட்டத்தின் பொருந்துகை*, ஒரு பதவியின் பணிகளை அப்போதைக்கு நிறைவேற்றுகிற ஆள் ஒவ்வொருவருக்கும் அல்லது பல ஆட்களுக்கு ஒரு சட்டம் பொருந்துவதைச் சுட்டிக் காட்டும் நோக்கத்திற்காக, தற்போது பதவிப் பணிகளை நிறைவேற்றுகிற அலுவலரின் அல்லது அந்தப் பதவிப் பணிகள் பொதுவாக எந்த அலுவலரால் நிறைவேற்றப்படுகிறதோ அந்த அலுவலரின் பதவிப் பெயரைக் குறிப்பிடுவது போதுமானதாகும்.

பிரிவு 10 - விதிகள், துணை விதிகள் மற்றும் ஆணைகளில் பயன்படுத்தப்பட்ட சொற்றொடர் எந்த சட்டத்தின் கீழ் அவை செய்யப்படுகிறதோ பிறப்பிக்கப்படுகிறதோ அந்தச் சட்டத்திலுள்ள அதே பொருளைக் கொண்டிருத்தல் (Expression used in rules, bye-laws and orders to have same meaning as in Act under which they are made or issued).- இந்த அத்தியாயம் பொருந்தக்

கூடிய சட்டம் ஒன்று விதிகள் அல்லது துணை விதிகள் செய்ய, அல்லது அறிக்கைகள் அல்லது ஆணைகள் பிறப்பிப்பதற்கு அதிகாரம் அளித்திருக்கு மிடத்து, அத்தகு விதிகள், துணை விதிகள், அறிக்கைகள், அல்லது ஆணைகளில் பயன்படுத்தப்பட்டிருக்கும் சொற்றொடர்கள், அதிகாரமளிக்கும் சட்டத்தில் அவற்றிற்காக முறையே கொண்டுள்ள அதே பொருளினை உடையனவாகும்.

பிரிவு 11 - வகுத்துரைக்கப்பட்ட காலங்களின் தேவையான நீட்டிப்பு (Necessary extension of prescribed periods).- இந்த அத்தியாயம் பொருந்தக் கூடிய சட்டம் ஒன்றினால், குறித்ததொரு நாளில் அல்லது வகுத்துரைக்கப்பட்ட ஒரு கால அளவுக்குள், நீதிமன்றம் அல்லது அலுவலகம் எதிலும், செயல் எதுவும் செய்யப்படவேண்டுமென்று பணிக்கப்பட்டிருக்குமிடத்து அல்லது நடவடிக்கை எதுவும் எடுக்கப்படுவதற்கு அனுமதிக்கப்பட்டிருக்குமிடத்து அந்த நாளன்று அல்லது வகுத்துரைக்கப்பட்ட கால அளவில் கடைசி நாளன்று, அந்த நீதிமன்றம் அல்லது அலுவலகம் மூடப்பட்டிருக்குமாயின், அந்தச் செயல் அல்லது நடவடிக்கை, அந்த நீதிமன்றம் அல்லது அலுவலகம் திறக்கப்பட்ட தற்குப் பின்பு அடுத்த நாளன்று செய்யப்பட்டிருக்குமாயின், அல்லது எடுக்கப்பட்டிருக்கு மாயின், அது உரிய காலத்தில் செய்யப்பட்டிருப்பதாக அல்லது எடுக்கப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

எந்தச் செயல் அல்லது நடவடிக்கைக்கு இந்தியக் காலவரம்புச் சட்டம் 1887 பொருந்துகிறதோ அந்தச் செயல் அல்லது நடவடிக்கை எதற்கும் இந்தப் பிரிவு பொருந்தாது.

அத்தியாயம் III
எல்லாச் சட்டங்களுக்கும் பொருந்தக்கூடிய பொது வகையங்கள்
[General Provisions Applicable to All Acts]

பிரிவு 12 - எல்லா சட்டங்களுக்கும் அத்தியாயம் III-இன் பொருந்துதல் (Application of Chapter II to all future Acts).- சென்னை சட்டங்கள் எல்லாவற்றிற்கும், அத்தகு சட்டம் எதிலும் முரண்பட்ட தொரு கருத்து தோன்றினாலன்றி, இந்த அத்தியாயம் பொருந்துதல் வேண்டும், ஆனால் அது தற்பொழுது செல்லாற்றலில் உள்ள செய்சட்டம் எதன் கீழும் இந்தச் சட்டத்தின் தொடக்கநிலைக்கு முன்னதாக செய்யப்பட்ட அல்லது தொடங்கப்பட்ட எதனையும் பாதித்தலாகாது.

பிரிவு 13 - அதிகாரங்களும் கடமைகளும் எப்பொழுது செலுத்தப்பட மற்றும் நிறைவேற்றப்பட வேண்டும் என்பது

(When powers and duties to be exercised and performed).- சட்டமொன்று அதிகாரம் ஒன்றை வழங்குகிறவிடத்து அல்லது கடமை ஒன்றை விதிக்கிறவிடத்து, நிகழ்வு வேண்டுறுத்துகிறவாறு, அவ்வப்போது அந்த அதிகாரம் செலுத்தப்படலாம் மற்றும் அந்தக் கடமை நிறைவேற்றப்படலாம்.

பிரிவு 14 - பதவியை தற்காலிகமாக வைத்திருப்பவரால் அதிகாரம் செலுத்தப்படுதல் மற்றும் கடமை நிறைவேற்றப்படல் (Exercise of power and performances of duty by temporary holder of office).- சட்டமொன்று பதவி ஒன்றை வைத்திருப்பவருக்கு அதிகாரம் ஒன்றை வழங்குகிறவிடத்து அல்லது அவர் மீது கடமை ஒன்றை விதிக்கிறவிடத்து, அப் பதவியை அப்போதைக்கு வைத்திருப்பவரால் அவ்வாறே அந்த அதிகாரம் செலுத்தப்படலாம் மற்றும் அந்தக் கடமை நிறைவேற்றப்படுதல் வேண்டும்.

பிரிவு 15 - விதிகள், துணை விதிகள் மற்றும் ஆணைகளை நீக்கறவு மற்றும் மாற்றமைவு (Revocation and alteration of rules, bye-laws and orders).- விதிகள் அல்லது துணை விதிகள் எதையும் செய்ய, அல்லது அறிக்கைகள் அல்லது ஆணைகளைப் பிறப்பிப்பதற்கு சட்ட மொன்று அதிகாரமொன்றை வழங்குகிறவிடத்து, அந்த அதிகாரமானது அந்த விதிகள், துணை விதிகள் மற்றும் அறிக்கைகள் அல்லது ஆணைகளை இறுத் தறவு செய்யவோ, நீக்கவோ, திருத்தவோ, மாற்றவோ அதே முறையிலும் அதே ஒப்பளிப்பு மற்றும் வரைக்கட்டுகள், எவையேனுமிருப்பின், அவற்றிற்கு உட்பட்டும் செலுத்தத்தக்க அதிகாரம் ஒன்றையும் உள்ளடக்குவதாக பொருள் கொள்ளப்பட வேண்டும்.

பிரிவு 16 - தீர்வையானது விகிதப்படி விதிக்கத்தக்கதாகும் (Duty leviable *prorata*).- சட்டமொன்றினால் சுங்கத் தீர்வைகள் அல்லது ஆயத் தீர்வை அல்லது அவற்றின் தன்மையதான எதுவும், சரக்குகளின் அல்லது வணிகச் சரக்கின் எடை அல்லது அளவை அல்லது மதிப்பின் பேரில் கொடுக்கப் பட்ட அளவு எதன் மீதும் விதிக்கப்படும்பொழுதெல்லாம், அதைவிட அதிக அல்லது குறைந்த அளவிலான எதன் மீதும் அதே போன்ற தீர்வையானது அதே வீதத்தில் விதிக்கத்தக்கதாகுதல் வேண்டும்.

பிரிவு 17 - அதிகாரங்களை வழங்கும் மற்றும் கடமைகளை விதிக்கும் முறை (Mode of conferring powers and imposing duties).- சட்டமொன்றினால் அதிகாரங்களை வழங்கவும் அல்லது கடமைகளை விதிக்கவும் அதிகாரம் வழங்கப்படும்பொழுதெல்லாம், அதிகாரிகளின் பெயரால் அல்லது பதவியால் அல்லது அவர்களது பதவிப் பட்டங்களால் பொதுவாக அதிகாரிகளின் வகையினர் பேரில் அத்தகு அதிகாரங்கள் வழங்கப்படலாம் அல்லது கடமைகள் விதிக்கப்படலாம்.

பிரிவு 18 - நீக்கறவு செய்யப்பட்டு மறுபடியும் இயற்றப்

பட்ட சட்டத்திலுள்ள வகையங்களின் சுட்டுகைகள் (References to provisions in Act repealed and re-enacted).- (1) சட்டமொன்று முந்திய ஒரு செய்சட்டத்தின் வகையங்கள் எதனையும் அல்லது எல்லாவற்றையும் நீக்கறவு செய்து மாற்றமைவுகளுடனோ, இல்லாமலோ மறுபடியும் இயற்று மிடத்து, அவ்வாறு நீக்கறவு செய்யப்பட்ட வகையங்களைப் பொறுத்து பிற சட்டம் எதிலும் உள்ள சுட்டுகைகள், அவ்வாறு மறுபடியும் இயற்றப்பட்ட வகையங்களைப் பொறுத்த சுட்டுகைகளாகப் பொருள் கொள்ளப்படுதல் வேண்டும், மற்றும் அவ்வாறு நீக்கறவு செய்யப்பட்ட வகையங்களின் கீழ் அறிக்கைகள் வெளியிடப் பட்டிருந்தால், பிரகடனங்கள் அல்லது சான்றிதழ்கள் பிறப்பிக்கப்பட்டிருந்தால், அதிகாரங்கள் வழங்கப்பட்டிருந்தால், படிவங்கள் வகுத்துரைக்கப்பட்டிருந்தால், வட்டார எல்லைகள் வரையறுக்கப்பட்டிருந்தால், அலுவலங்கள் அமைக்கப்பட்டிருந் தால், ஆணைகள், விதிகள் மற்றும் நியமனங்கள் செய்யப்பட்டிருந்தால், உடன்பாடுகள் செய்து கொள்ளப்பட்டிருந்தால், உரிமங்கள் அல்லது அனுமதிகள் வழங்கப்பட்டிருந்தால், மற்றும் உரிய முறையில் வேறு செயல்கள் செய்யப்பட்டிருந் தால், அவை அவ்வாறு மறுபடியும் இயற்றப்பட்ட வகையங்களுடன் ஒத்துப்போகிற வரையில், அவ்வாறு மறுபடியும் இயற்றப்பட்ட வகையங்களின் கீழ் அவை முறையே வெளியிடப்பட்ட, பிறப்பிக்கப்பட்ட, அளிக்கப்பட்ட, வகுத்துரைக்கப்பட்ட, வரையறுக்கப்பட்ட, அமைக்கப்பட்ட, செய்யப்பட்ட, செய்து கொள்ளப்பட்ட, வழங்கப்பட்ட, அல்லது செய்யப்பட்டவையாகக் கருதப்படுதல் வேண்டும்.

பிரிவு 19 - அபராதங்களை வசூல் செய்தல் (Recovery of fines).- 1860–இன் இந்தியத் தண்டனைத் தொகுப்புச் சட்டத்தின் பிரிவுகள் 63, 68, 69, 70 ஆகியன சட்டம் எதனின் அதிகாரத்தின் கீழும் விதிக்கப்பட்ட அனைத்து அபராதங்களுக்கும் பொருந்தும்.

பிரிவு 20 - ஒன்றிற்கு மேற்பட்ட செய்சட்டத்தின் கீழான குற்றச்செயல்களுக்கான தண்டனை (Punishment for offences under more than one enactment).- ஒரு செய்கை அல்லது விடுகையானது, இரண்டு அல்லது அவற்றிற்கு மேற்பட்ட செய்சட்டங்களின்படி ஒரு குற்றச் செயலாக அமையுமிடத்து, அந்தக் குற்றவாளி அந்தச் செய்சட்டங்கள் இரண்டில் ஏதொன்றின் படியும் அல்லது அவற்றுள் எதன்படியும், வழக்குத் தொடரப்படுவதற்கும் தண்டிக்கப் படுவதற்கும் உள்ளாவார். ஆனால், அதே செய்கைக்காக அல்லது விடுகைக்காக இரண்டு முறை தண்டிக்கப்படுவதற்கு உள்ளாகமாட்டார்.

பிரிவு 21 - ஆணைகள் மற்றும் அறிக்கைகளை அதிகார முறை அரசிதழில் வெளியிடுதல் (Publication of orders and notifications in the Official Gazette).- சட்டம் எதிலும், அல்லது இந்தச் சட்டத்தின் கீழ் இயற்றப்பட்ட விதி எதிலும், ஆணை, அறிக்கை அல்லது பிற பொருட்பாடு எதுவும் அறிக்கையாக்கப்பட அல்லது வெளியிடப்பட வேண்டும் என்று

ஏவுரைக்கப்பட்டிருக்குமிடத்து, அந்தச் சட்டம் வேறு விதத்தில் வகை செய்திருந் தாலன்றி, அத்தகு அறிக்கை அல்லது வெளியிடுதலானது அதிகாரமுறை அரசிதழில் வெளியிடப்பட்டால், அது உரியவாறு செய்யப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

பிரிவு 22 - சில இடங்களுக்கு அரசாங்கத்தால் நீட்டிக் கப்படும் அல்லது பொருந்தப்படும் சட்டங்கள் அல்லது சட்டங் களின் வகையங்கள் எந்தக் காலங்களில் செல்லாற்றலுக்கு வரத்தக்கதோ அந்தக் காலங்களை தீர்மானித்தல் (Determination of the times at which Acts or provisions of the Act extended or applied by Government to certain places shall come into force).- சட்டமொன்றினால், இடம் எதிலும், அல்லது மாநிலத்தின் பகுதி எதற்கும் ஒரு சட்டத்தை, அல்லது ஒரு சட்டத்தின் வகையத்தை நீட்டிக்க அல்லது பொருத்த அரசாங்கம் எதுவும் அதிகார்மளிக்கப்பட்டிருக்கும் பொழுது, அத்தகு சட்டத்தை அல்லது வகையத்தை நீட்டவும், பொருத்தவுமான ஆணை எதிலும் அல்லது பிந்திய ஆணை ஒன்றில், அவ்வாறு நீட்டிக்கப்பட்ட அல்லது பொருத்தப் பட்ட இடத்தில் அல்லது மாநிலத்தின் பகுதியில் அது எந்தக் காலத்தில் செல்லாற் றலுக்கு வரத்தக்கதோ, அந்தக் காலத்தை அறிக்கைப்படுத்த வேண்டும்; மற்றும் அந்த சட்டத்தில் வேறுவிதமாக வகை செய்யப்பட்டிருந்தாலன்றி, அரசாங்கமானது அதிகாரமுறை அரசிதழில் செய்யும் அறிக்கையால், அத்தகு இடம் அல்லது மாநிலத்தின் பகுதியில் அச்சட்டம் அல்லது வகையம் செல்லாற்றலுக்கு வரத்தக்க காலத்தை அப்போதைக்கப்போது தள்ளிப்போடலாம் அல்லது அத்தகு இடம் அல்லது மாநிலத்தின் பகுதிக்கு அது நீட்டிக்கப்படுவதற்கான அல்லது பொருத்தப் படுவதற்கான ஆணையை இரத்து செய்யலாம்:

வரம்புரையாக – எந்தக் காலத்தில் சட்டம் அல்லது வகையம் ஒன்று செல்லாற்றலுக்கு வரத்தக்கதோ அந்த காலத்தை தள்ளிப்போடுவதற்கான, அல்லது அது நீட்டிக்கப்படுவதற்கான அல்லது பொருத்தப்படுவதற்கான ஆணை ஒன்றை இரத்து செய்வதற்கான ஆணை எதுவும் அத்தகு ஆணை தொடர்புடைய இடத்தில் அல்லது மாநிலத்தின் பகுதியில் அச்சட்டம் அல்லது வகையம் உண்மையில் செல்லாற்றலுக்கு வந்த பிறகு செய்யப்படுதல் ஆகாது.

பிரிவு 22அ - சட்டங்கள் முதலானவற்றில் அமைச்சருக் கான சுட்டுகைகளின் கட்டமைப்பு (Constitution of references to Minister in Acts, etc.).- சட்டம் எதிலும் அல்லது அத்தகு சட்டத்தின் கீழ் செய்யப்பட்ட அல்லது பிறப்பிக்கப்பட்ட விதி, அறிக்கை, ஆணை, ஒழுங்குறுத் தும்விதி, துணை விதிகள் அல்லது வேறு முறையாவணம் எதிலும் அமைச்சர் (முதலமைச்சர் உள்ளிட்ட) எவரையும் குறித்த சுட்டுகை எதுவும், தமிழ்நாடு மாநிலம் தொடர்பாக அரசமைப்பின் 356–ஆவது உறுப்பின் கீழ் குடியரசுத்

தலைவரால் பிறப்பிக்கப்பட்ட பிரகடனம் ஒன்று செல்திறத்தில் இருக்கும் காலத்தின் பொழுது, ஆளுநர் அல்லது ஆளுநரின் அத்தகு ஆலோசகர் அல்லது இதன் பொருட்டு ஆளுநர் அறிக்கையின் வாயிலாகக் குறிப்பிடலாகும் அத்தகு பிற அலுவலருக்குரிய ஒரு சுட்டுகையாக பொருள் கொள்ளப்படுதல் வேண்டும், மற்றும் வேறுபட்ட சட்டங்கள் தொடர்பாக வேறுபட்ட அறிக்கைகள் பிறப்பிக்கப் படலாம் மற்றும் அதன்கீழ் முறையாவணங்கள் செய்யப்படலாம் அல்லது பிறப்பிக்கப்படலாம்.

அத்தியாயம் IV
அவசரச் சட்டங்கள் மற்றும் ஒழுங்குறுத்தும் விதிகளுக்கு பொருந்துதல்
[Application to Ordinances and Regulations]

பிரிவு 23 - ஒழுங்குறுத்தும் விதிகள் மற்றும் அவசரச் சட்டங்களுக்கு இச்சட்டம் பொருந்துதல் (Application of Act to Regulations and Ordinances).- இந்தச் சட்டத்தின் வகையங்கள்–

(அ) மாகாண சட்டமன்றத்தால் செய்யப்பட்ட சென்னை சட்டங்கள் தொடர்பாக எந்த முறையில் பொருந்துமோ அதே முறையில் அவை 1935–இன் இந்திய அரசாங்கச் சட்டத்தின் 92–ஆவது பிரிவின் கீழ் ஆளுநரால் செய்யப்பட்ட ஒழுங்குறுத்தும் விதி எதன் தொடர்பாகவும் பொருந்தும்; மற்றும்

(ஆ) மாநில சட்டமன்றத்தால் செய்யப்பட்ட சென்னை சட்டங்கள் தொடர்பாக எந்த முறையில் பொருந்துமோ அதே முறையில் அவை அரசமைப்பின் 213–ஆவது உறுப்பின் கீழ் ஆளுநரால் பிரகடனப்படுத்தப்பட்ட அவசரச் சட்டம் எதன் தொடர்பாகவும் அல்லது அரசமைப்பின் அய்ந்தாவது இணைப்புப்பட்டியலின் 5–ஆவது பத்தியில் அவரால் செய்யப்பட்ட ஒழுங்குறுத்தும் விதி எதன் தொடர் பாகவும் பொருந்தும்:

வரம்புரையாக – இந்தச் சட்டத்தின் 5–ஆவது பிரிவின் (1)–ஆவது உட் பிரிவானது, உட்கூறு (ஆ)–இல் சுட்டிக்காட்டப்பட்ட அவசரச் சட்டம் எதற்கும், அந்த உட்பிரிவில் அதிகாரமுறை அரசிதழில் சட்டமொன்றிற்கு அளிக்கப்பட்ட இசைவின் முதல் வெளியிடுகை நாளுக்கான சுட்டுகையானது, அந்த அரசிதழில் அவசரச் சட்டத்தின் முதல் வெளியிடுகை நாளுக்குப் பதிலான ஒரு சுட்டுகையாக இருந்திருப்பதைப் போன்று பொருந்தும்.

-o0o-

பிரச்சனைகளும் தீர்வுகளும்

[Problems and Solutions]

பிரச்சனைகளும் தீர்வுகளும்
[Problems and Solutions]

பிரச்சனை 1:

'X', a tenant, was living with his mother and brother in the house of 'Y'. 'X' left India to settle permanently in Canada, leaving his mother and brother in the house itself, 'Y' the landlord filed an application of ejectment on the ground of non-residence of tenant under the Delhi Rent Control Act 1958. Will he succeed? Discuss.

'X'என்ற வாடகைதாரர் தன்னுடைய தாயார் மற்றும் சகோதரனுடன் 'Y'னுடைய வீட்டில் வசித்து வந்தார். X நிரந்தரமாக கனடாவில் குடியேறுவ தற்காக இந்தியாவை விட்டுச்சென்றார். அவ்வாறு செல்லும் போது தன்னு டைய தாயையும், சகோதரனையும் அவ்வீட்டிலேயே விட்டுச் சென்றார். 'Y' என்ற உரிமையாளர் வாடகைதாரர் வசிக்கவில்லை என்ற காரணத்தைக்கூறி டெல்லி வாடகை கட்டுப்பாட்டுச் சட்டம் 1958ன் கீழ் வீட்டைக் காலி செய்யக் கோரி மனு செய்தார். அவரால் வெற்றி பெற இயலுமா? விவாதிக்க.

தீர்வு:

இப்பிரச்சனையில் 'Y' என்ற உரிமையாளர் முன் வைக்கும் முக்கிய வாதம் யாதெனில், தாம் வாடகைக்கு விட்ட வாடகைதாரரே ('X') அந்த வாடகை வீட்டில் வசிக்காமல் கனடாவிற்கு சென்றுவிட்டார். அப்படியிருக்க, அந்த வீட்டில் வசித்துக் கொண்டிருக்கும் அவரது தாயார் மற்றும் சகோதரர் தனது வாடகைதாரர் ஆகாமாட்டார்கள். எனவே அவர்கள் காலி செய்ய வேண்டும், என்பதாகும். அதாவது 'X' என்ற வாடகைதாரரின் தாயார் மற்றும் சகோதரரை, அவரது குடும்பத்தினராக பாவிக்க இயலாது, வாடகை வீட்டில் சம்பந்தப்பட்ட வாடகைதாரரும் வசிக்கவில்லை, எனவே அவரது தாயாரையும், சகோதரரையும் வெளியேற்ற வேண்டும் என்று 'Y' தனது மனுவில் கூறுகிறார்.

இந்தப் பிரச்சனை **Baldev Sahai Bangia vs R.C.Bhasin**[1] என்ற வழக்கின் சங்கதிகளை அப்படியே அடியொற்றி அமைந்ததாகும். இந்த வழக்கு

1. A.I.R. 1982 S.C. 1091; 1982 SCR (3) 670

இப்பிரச்சனையுடன் உச்ச நீதிமன்றத்திற்கு மேல்முறையீடாக சென்ற போது, அது "குடும்பம்" என்பதற்கு பரந்த பொருள் விளக்கம் அளிக்கப்பட வேண்டும் என்றும், "குடும்பம்" என்ற சொல் "குடும்பத் தலைவரை" மட்டும் உள்ளடக்காது; அதில், பொது மூதாதையர்களின் வழி வந்தவர்களும் அல்லது அக்குடும்பத் தலைவரின் கீழ் உண்மையில் வசித்து வரும் அனைத்து உறுப்பினர்களும் அடங்குவர் என்றும் கூறியது. உச்ச நீதிமன்றம் மேலும் கூறுகையில், டெல்லி வாடகை கட்டுப்பாட்டுச் சட்டமானது, வாடகையில் உள்ளோர்களின் நலனைப் பாதுகாப்பதற்காக இயற்றப் பட்டதொரு சட்டமாகும் என்றும், எனவே, அச்சட்டத்தின் நோக்கத்தை நிலை நிறுத்தும் வகையில் அல்லது மேம்படுத்தும் வகையில், அச்சட்டத்தின் வகை முறைகளுக்கு சரியான பொருள் விளக்கத்தை தர வேண்டும் என்றும், அப்பொழுது அச்சட்டத்தில் காணப்படும் விடுபாடுகள் மற்றும் குறைகளைச் சரி செய்ய நீதிமன்றத்திற்கு அதிகாரம் உண்டு என்றும் கூறியது. அதன்படி "குடும்பம்" என்ற பதமானது, அக்குடும்பத் தலைவரின் நெருங்கிய உறவினர்களையும் உள்ளடக்கிய தாகும், என்று பயன்மிகு பொருள் கொள் முறையைப் **(Beneficial Interpretation)** பயன்படுத்தி, சரியான பொருள் விளக்கத்தை உச்ச நீதிமன்றம் பகர்ந்தது.

எனவே இந்த தீர்ப்பின் அடிப்படையில் மேற்படி பிரச்சனையில் 'Y' என்ற உரிமையாளர் வெற்றி பெற முடியாது. அதாவது 'X' என்ற வாடகைதாரரின் தாயார் மற்றும் சகோதரரை காலி செய்யக் கோரும் 'Y'–ன் மனு தள்ளுபடி செய்யத்தக்க தாகும் என்பதே தீர்வு.

பிரச்சனை 2:

Bihar Government issued a notification exempting certain goods from the payment of sales tax, including green vegetables'. X who was a producer of sugercane was assessed to sales tax. X contended that 'sugarcane' was a 'green vegetable' and was exempted from tax and could not be assessed to sales tax. Decide.

"பச்சைக் காய்கறிகள்" உள்ளிட்ட சிலவற்றிற்கு விற்பனை வரி செலுத்துவதிலிருந்து விலக்கு அளித்து பீகார் மாநில அரசு ஒரு அறிவிக்கையை வெளியிட்டது. கரும்பு உற்பத்தி செய்ததற்காக 'X' என்பவருக்கு விற்பனை வரி விதிக்கப்பட்டது. "கரும்பு" என்பது ஒரு "பச்சைக் காய்கறி" ஆகும் என்றும், வரியிலிருந்து விலக்களிக்கப்பட்ட தாகும் என்றும், எனவே விற்பனை வரி விதிக்க முடியாது என்றும் வாதிட்டார். முடிவு செய்க.

அல்லது

Selling of betel leaves was subjected to sales tax under the Central Provisions and Berar Sales Tax Act 1947. 'X', a betel leaves seller, contended that no such tax could be levied as betel leaves were 'vegetables' and on the sale of which no tax could be imposed under the Act. Whether he will succeed or not ?

மத்திய மாகாணங்கள் மற்றும் பெரார் விற்பனை வரிச் சட்டம் 1974ன் கீழ் வெற்றிலைகளை விற்பனை செய்வதற்கு விற்பனை வரி உண்டு. இச் சட்டத்தில் வெற்றிலைகள் 'காய்கறிகள்' என்பதன் கீழ் வரும் எனவும், ஆகையால் அதன் மீது விற்பனை வரி விதிக்க முடியாது என்று வெற்றிலை வியாபாரியான 'X' என்பவர் வாதிட்டார். அவரால் வெற்றி பெற இயலுமா அல்லது இயலாதா ?

தீர்வு:

மேற்கண்ட இரண்டு பிரச்சனைகளிலும் பொருள் விளக்கத்திற்கு எழும் கேள்வி என்னவென்றால் "பச்சைக் காய்கறிகள்" என்பதில் "கரும்பு" அல்லது "வெற்றிலை" அடங்குமா என்பதுதான்.

இந்த இரண்டு பிரச்சனைகளிலும் மையமாக இருப்பது வரிச் சட்டங்கள் ஆகும். **வரிச்சட்டங்களை கண்டிப்பான முறையில் பொருள் கொள்ள வேண்டும் (Taxing statutes should be construed strictly)** என்பது சட்டப் பொருள் விளக்க விதியாகும். அதாவது வரிச்சட்டத்தில் உள்ள சொற்கள் என்ன சொல்லுகிறதோ, அதைத்தான் அவற்றின் பொருளாகக் கொள்ள வேண்டும். எதையும் ஊகித்தல் கூடாது. அதே நேரம் உட்கிடையாக உள்ளது என்றும் கூறக் கூடாது.

மேலும் **"Loguitur ut vulgus"** என்ற சட்ட முதுமொழியையும் இங்கு பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ள வேண்டும். இதன் பொருள், **பொதுவாகக் கருதப் படும் மற்றும் ஏற்றுக் கொள்ளப்படும் முறைப்படி சொற்களுக்கு பொருள் கொள்ள வேண்டும்,** என்பதாகும். இது ஆங்கிலத்தில் 'according to the common understanding and acceptation of the terms' என்று கூறப்படுகிறது.

தற்போது முதல் பிரச்சனையின்படி "பச்சைக் காய்கறிகள்" என்ற சொற்களில் கரும்பு அடங்குமா என்பதுதான். இதற்கான விடையை நமது உச்ச நீதிமன்றம் **Motipur Zamindary Company Private Limited vs. State of Bihar**[1] என்ற வழக்கில் ஆராய்கையில், பொது மக்கள் பிரபலமாக அல்லது அதிமாக பயன்படுத்தும் பொருளின்படி, "பச்சைக் காய்கறிகள்" என்பது வீட்டுத் தோட்டத்

1. A.I.R. 1962 S.C. 660; 1953 SCR 720

திலோ அல்லது பண்ணையிலோ வளரக் கூடியதும், சமையலுக்கு பயன்படுத்தப்படக் கூடியதும் ஆகும். ஆனால் கரும்பானது வீட்டுத் தோட்டத்திலோ அல்லது பண்ணையிலோ வளர்க்கக் கூடியதல்ல. அதற்கு பெருந்தோட்டம் வேண்டும். மேலும் அது சமையலுக்குப் பயன்படுத்தப்படுவதுமல்ல. எனவே "பச்சைக் காய்கறிகளில்" கரும்பு அடங்காது என்றும், அதற்கு வரி விலக்கு கிடையாது என்றும் கூறியது. எனவே முதல் பிரச்சனையில் "கரும்பு" என்பது ஒரு "பச்சைக் காய்கறி" என்றும், வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டதாகும் என்றும், எனவே விற்பனை வரி விதிக்க முடியாது என்றும் 'X' செய்யும் செய்யும் நிலைக்காது. அவர் கரும்பு உற்பத்திக்கு வரி செலுத்தியாக வேண்டும் என்பதே தீர்வாகும்.

இரண்டாவது பிரச்சனையையும் மேற்கண்டவாறே தீர்க்கலாம். அதாவது பொதுவாகக் கருதப்படும் சாதாரணமான பொருளின்படி வெற்றிலை என்பது 'காய்கறிகள்' என்பதன் கீழ் வராது, ஏனென்றால் வெற்றிலையை சமையலுக்கு பயன்படுத்த முடியாது. அதை வீட்டுத் தோட்டத்திலும் வளர்க்க முடியாது. எனவே அதன் மீது விற்பனை வரி விதிக்க முடியாது என்று 'X' என்ற வெற்றிலை வியாபாரி செய்யும் வாதம் நிலைக்கத்தக்கதல்ல. அவர் வழக்கில் வெற்றி பெற முடியாது. எனவே அவர் வெற்றிலை விற்பனைக்கு வரி செலுத்த வேண்டும்.

இத்தீர்வுக்கு ஆதாரமாக **Ramavathar vs. Assistant Sales Tax Officer**[1] என்ற வழக்கில் உச்ச நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பைச் சுட்டிக்காட்டலாம். அதில் வரிச் சட்டங்களில் இடம் பெறும் "காய்கறிகள்" என்ற சொல்லை பொதுவான பேச்சு வழக்கில் இருப்பதைப் போலவே புரிந்து கொள்ள வேண்டும், அதாவது வீட்டுத் தோட்டம் அல்லது பண்ணை ஒன்றில் வளரக் கூடியதும் சமையலுக்குப் பயன்படுத்தப் படக்கூடியதுமான காய்கறிகளைக் குறிப்பதாகவே எடுத்துக் கொள்ள வேண்டும் என்றும் (the word "vegetables" in taxing statutes is to be understood as in common parlance i.e. denoting class of vegetables which are grown in a kitchen garden or in a farm and are used for the table), எனவே வெற்றிலை என்பது வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டதல்ல (In our view, bete leaves are not exempt from taxation) என்றும் உச்ச நீதிமன்றம் கூறி மனுவை தள்ளுபடி செய்தது.

மேற்சென்றவற்றின் அடிப்படையில் இரண்டாவது பிரச்சனையில் வரும் 'X' என்ற வெற்றிலை வியாபாரி தனது வாதத்திலும், வழக்கிலும் வெற்றி பெற முடியாது என்பதே தீர்வு.

பிரச்சனை 3:

Ram was convicted under section 16 of the Preven-

1. A.I.R. 1961 S.C. 1325

tion of Food Adulteration Act 1954 for selling adulterated butter. He contended that it was not butter within the meaning of the rules made under the Act because butter means butter made from milk, whereas he had sold butter made from curd. Whether he will succeed? Discuss.

ராம் என்பவர் கலப்பட 'வெண்ணெய்' விற்றதற்காக பிரிவு 16 உணவு கலப்பட தடுப்புச் சட்டம் 1954ன் கீழ் தண்டிக்கப்பட்டார். இச்சட்டத்தின் கீழ் உள்ள விதிகளின் படி தான் தயாரித்தது வெண்ணெய் இல்லை எனவும், ஏனென்றால் வெண்ணெய் பாலில் இருந்து தயாரிக்கக் கூடியது எனவும், தான் தயிரிலிருந்து தயாரித்ததாகவும் வாதிட்டார். அவரால் வெற்றி பெற இயலுமா ? விவாதிக்க.

தீர்வு:

இப்பிரச்சனை தண்டனைச் சட்டங்களுக்கு பொருள் விளக்கம் தருவதற்குண்டான விதிகளை அடிப்படையாகக் கொண்டதாகும்.

இதே பிரச்சனை **M.V.Joshi vs. M.U.Shimpi**[1] என்ற வழக்கில் ஏற்கனவே எழுந்தது. அதன் சங்கதிகளையும், அதில் நீதிமன்றம் கூறிய பொருள் விளக்கம் மற்றும் தீர்ப்பையும் அறிந்தால், நாம் இப்பிரச்சனைக்கு எளிதில் தீர்வளிக்கலாம்.

அதாவது இவ்வழக்கில் மேல்முறையீட்டாளர் கலப்பட **"வெண்ணெய்" (butter)** விற்றதற்காக, உணவுக் கலப்பட தடுப்புச் சட்டத்தின் கீழ் தண்டிக்கப்பட்டார். இதை எதிர்த்து அவர் செய்த மேல்முறையீட்டில், அச்சட்டத்தின் கீழான விதிகளில், "வெண்ணெய்" என்பது பாலிலிருந்து தயாரிக்கப்படும் வெண்ணெய் எனறு குறிப்பிடப்பட்டுள்ளது என்றும், தான் தயிரிலிருந்து தயாரிக்கப்படும் வெண்ணையைத்தான் விற்றதாகவும், எனவே அந்த வெண்ணெய் மேற்படி விதிகளின்படியிலான "வெண்ணெய்" ஆகாது என்றும், மேற்படி சட்டம் ஒரு தண்டனைச் சட்டம் என்பதால், தனக்குச் சாதகமாகவே பொருள் விளக்கம் கொள்ளப்பட்டு, தனது தண்டனையை இரத்து செய்ய வேண்டும் என்றும் வாதம் புரிந்தார்.

ஆனால் இந்த வாதத்தை ஏற்க மறுத்து உச்ச நீதிமன்றம் கருத்துரைக்கையில், "கண்டிப்பான பொருள் விளக்கம் கொடுத்தல் என்பது, குற்றஞ்சாட்டப்பட்டவரின் தண்டனைக்கு வழிவகுத்த அவரது நடத்தையானது, தண்டனைச் சட்ட வாசகத்தின் சாதாரண வார்த்தைகளின் எல்லைக்குள் வர வேண்டும்; அதன் இயற்கையான பொருளுடன் இயைந்திருக்க வேண்டும். அவ்வாறு எப்பொழுது

1. A.I.R. 1961 S.C. 1494

வரவில்லையோ அல்லது எப்பொழுது இரண்டு நியாயமான பொருள் விளக்கங்கள் சாத்தியமாக உள்ளதோ, அப்பொழுதுதான் குற்றஞ்சாட்டப்பட்டருக்கு சாதகமாக பொருள் விளக்கமளிக்கவியலும். ஆனால் இவ்வழக்கிலோ, "வெண்ணெய்" என்பதற்கு தெளிவான பொருள், சட்ட விதிகளில் மேற்கண்டவாறு தரப்பட்டுள்ளது. எனவே, இரு பொருள் நிலை ஏதுமில்லை. எனவே, குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு சாதகமாகப் பொருள் கொள்ளுதல் என்ற பேச்சுக்கே இடமில்லை. "வெண்ணெய்" என்பது பாலிலிருந்து தயாரிக்கப்பட்டாலும் சரி அல்லது தயிரிலிருந்து தயாரிக்கப்பட்டாலும் சரி, **"வெண்ணெய் வெண்ணெய்தான்"** என்று தெளிவாகக் கூறியது.

"தயிரிலிருந்து வெண்ணெய் தயாரிக்கப்பட்டது" என்ற மேல்முறை யீட்டாளரின் வாதமானது மேற்படி விதிகளில் வரவில்லை. சட்டமன்றம், தான் என்ன சொல்ல வந்ததோ, அதை தெளிவான மொழிநடையில், அய்யப்பாட்டிற்கு இடமில் லாமல் கூறியுள்ளது. எனவே, வேறு விதமான பொருள் விளக்கத்திற்கு இடமில்லை என்பது தான் இங்கு உச்ச நீதிமன்றம் முடிவாக நிலைநிறுத்திய கருத்தாகும்.

எனவே இந்த வழக்கின் தீர்வை மேற்கோளாகக் கொண்டு மேற்கண்ட பிரச்சனையை பரிசீலனை செய்தால், ராம் என்பவர் உணவு கலப்பட தடைச் சட்டம் பிரிவு 16–இன் கீழ் தண்டிக்கப்பட்டது சரியே என்பது புலப்படும். எனவே இதை எதிர்த்து அவர் மேல்முறையீட்டில் மேற்கண்டவாறு செய்த வாதம் நிலைக்காது. முடிவாக அவர் வெற்றி பெற இயலாது என்பதே இங்கு தீர்வாகும்.

பிரச்சனை 4:

Gujarat State Legislature made a law restricting the use of sound amplifiers. The law was challenged on the ground that the subject falls under List I. The State contended that the law was within the legislative competence of List II. Decide.

ஒலி பெருக்கியை பயன்படுத்துவதில் கட்டுப்பாடுகள் விதித்து குஜராத் மாநில சட்டமன்றம் சட்டம் இயற்றியது. இச்சட்டம் மத்திய பட்டியலில் உள்ளதால் மாநில அரசுக்கு சட்டமியற்ற அதிகாரம் இல்லை என எதிர் வாதிடப்பட்டது. மத்திய அரசோ இது பட்டியல் II ல் வரும் என மறுப்புரை செய்தது. தீர்மானிக்க.

தீர்வு:

இப்பிரச்சனைக்கு தீர்வளிக்க சட்டப் பொருள் விளக்கமளிப்பதில் வழிகாட்டும் ஓர் முக்கிய விதியான **"பெரும்பான்மை விதி" (Doctrine of Pith**

and Substance)–யை அறிதல் வேண்டும். இதன்படி, மத்திய மற்றும் மாநில சட்டமன்றங்கள் தங்கள் தங்களுடைய அதிகாரவரம்பு பகுதிகளில் உயர்ந்தவையாக கருதப்படுகின்றன. ஒன்று, மற்றொன்றின் அதிகாரவரம்பில் (சட்டமியற்றக்கூடிய பகுதி) தலையிடக் கூடாது. அப்படியும் மீறி ஒரு சட்டமானது மற்றொன்றின் அதிகாரவரம்பில் உள்ள ஒரு துறையினுள் தலையிடுமாறு இயற்றப்பட்டுவிட்டால் சம்மந்தப்பட்ட சட்டமன்றமானது அப்படி சட்டமியற்ற தகுதி படைத்ததா என்பதைத் தீர்மானிக்க நீதிமன்றமானது இப்பெரும்பான்மை விதியின் பயனை கருத்தில் கொள்ளும்.

ஒரு சட்டம் அதனை இயற்றிய சட்டமன்றத்தின் அதிகாரவரம்பிற்கு அப்பாற் பட்டதா என்ற அய்யப்பாடு எழும் போது, அதற்கு விடையளிக்க அந்த சட்டமியற்ற லின் உண்மையான பண்பை நிச்சயித்தறிய வேண்டும். அந்த வகையில் அதற்கான பரிசீலனையின் முடிவில், அந்த சட்டமியற்றுதல் அல்லது சட்டமானது சட்டமன்றத் திற்கு ஒதுக்கப்பட்ட விடயமொன்றின் மீது பொருளார்ந்த ஒன்றாக (அதாவது அடிப் படையிலேயே சாரமுடையதாக) இருப்பின், அச்சட்டம் முழுவதையுமே செல்லத் தக்கவே தீர்மானிக்க வேண்டும். இங்கு அச்சட்டம், அதனை இயற்றிய சட்டமன்றத் தின் தகுதிக்கு அப்பாற்பட்ட விடயங்களின் மீது தற்செயலாக தலையிட்டாலும், அதை கருத்தில் எடுத்துக் கொள்ள வேண்டியதில்லை (When a law is impugned as ultra vires, what has to be ascertained is the true character of the Legislation. If on such examination it is found that the legislation is in substance one on a matter assigned to the Legislature, then it must held valid in its entirety, even though it might incidentally trench on matters which are beyond its competence).

இதனை சற்றே எளிமைப்படுத்திக் கூறினால், ஒரு சட்டம், மாநிலத்தின் அதிகார வரம்பிற்குட்பட்டிருக்கும் பொழுது, அது தற்செயலாக மத்திய அரசின் அதிகாரவரம்பி லும் தலையிடுகிறது என்றால், அச்சட்டத்தினை தவறானது எனக் கூறி முடியாது. ஏனெனில் பொதுவாக பார்க்கும்போது, அச்சட்டம் பெரும்பான்மையில் மாநில அரசின் அதிகாரவரம்பிற்குட்பட்டே இருக்கிறது. மிகக்குறைந்த அளவில்தான் அதுவும் தற்செயலாகத்தான் மத்திய அரசின் அதிகாரவரம்பை பாதிக்கிறது. இப்படிப் பட்ட நிலையில் அச்சட்டத்தினை தவறு என ஒதுக்கிவிட முடியாது. ஏனெனில் அது முறையானதாகவே கருதப்படுகிறது.

நமது பிரச்சனைக்கு மேற்சென்ற பொருள் விளக்க விதி நன்கு பொருந்தும். இதற்கு ஆதாரவாக **State of Rajasthan vs. G.Chawla**[1] என்ற அதே சங்கதிகளைக் கொண்ட வழக்கையும் இங்கு சுட்டிக்காட்டலாம்.

இந்த வழக்கில் ஒலிபெருக்கி பயன்பாட்டை தடை செய்து மாநில அரசு

1. A.I.R. 1959 S.C. 544: 1959 Supp (1) SCR 904

சட்டம் ஒன்றை இயற்றியது. இந்தச் சட்டத்தின் வகைமுறைகளை மீறிய எதிர் மனுதாரர் மீது குற்ற வழக்கிடப்பட்டது. முடிவில் அவருக்கு தண்டனை வழங்கப் பட்டது. இதை எதிர்த்து அவர் செய்த மேல்முறையீட்டில், மாநில அரசின் சட்டமே செல்லாது என்று தீர்ப்பளிக்கப்பட்டது. இதன் விளைவாக எதிர்மனுதாரரின் தண்டனை இரத்து செய்யப்பட்டது. இதை எதிர்த்து மாநில அரசு உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்தது. அங்கு அச்சட்டமானது பட்டியல் II-இல் (மாநில பட்டியல்) **"பொதுச் சுகாதாரம் மற்றும் துப்பரவு"** என்ற 6-வது பதிவின் கீழ் வருவதால், அது மாநில சட்டமன்றத்தின் சட்டமியற்று தகுதிக்குட்பட்டது என்று வாதிட்டது. ஆனால் எதிர்மனுதாரரோ பட்டியல் I-இல் (மத்திய பட்டியல்) **"அஞ்சல் மற்றும் தந்தி, தொலைப்பேசி, கம்பியில்லா தொடர்பு, ஒலிபரப்பு மற்றும் இவை போன்ற வேறு தகவல் தொடர்பு வடிவங்கள்"** என்ற 31-வது பதிவின் கீழ் வரும் என எதிர்வாதிட்டார்.

இந்த வாத பிரதிவாதங்களை கேட்டறிந்த உச்ச நீதிமன்றம், செல்லாதென குறை கூறப்படும் அச்சட்டம் பட்டியல் II-இல் "பொதுச் சுகாதாரம் மற்றும் துப்பரவு" என்ற 6-வது பதிவின் கீழ்தான் வரும் என்றும், பொதுச் சுகாதாரம் தொடர்பாக சட்ட மியற்றும் அதிகாரத்தில் பெரும் ஒலியை உண்டாக்கும் ஒலிபெருக்கியின் பயன் பாட்டை ஒழுங்குபடுத்தும் அதிகாரமும் உள்ளடங்கும் என்றும், ஒலி பெருக்கியால் மற்றவர்களுக்கு ஏற்படும் வசதிக்குறைவை கருத்தில் கொள்ளாமல் அதனை பயன் படுத்துவர்களுக்கு உரிமை அளிப்பது என்பது அவர்களுக்கு பகிரங்கமாக ஓர் தொல்லையை விளைவிப்பதற்கு ஒப்பாகும் என்றும், ஒலிபெருக்கி என்பது ஒலி பரப்புதல் மற்றும் தகவல்தொடர்புக்குரிய ஓர் சாதனமாக இருந்தாலுமே கூட அது மத்திய பட்டியலான I-இல் பதிவு 31-இன் கீழ் வராது என்றும் பொருள் விளக்க மளித்து, மாநில அரசின் சட்டம் செல்லத்தக்கதே என்று தீர்ப்பளித்தது.

இங்கு "பொதுச் சுகாதாரம் மற்றும் துப்பரவு" எனப்படும் ஓர் மாநில விடயத்தின் மீது பொருளார்ந்து பெரும்பான்மையில் உள்ள சட்டமியற்றலானது, தற்செயலாக மத்திய அரசின் "ஒலிபரப்பு மற்றும் தகவல் தொடர்பு" என்ற விடயத்தின் மீது தலை யிட்டாலுமே கூட செல்லாததாக ஆகாது (The legislation in pith and substance being on a State matter, it is not invalid even if it incidentally encroached upon the subject of broadcasting or communication) என்பதே இவ்வழக்கில் விளைந்த தீர்ப்பு நெறியாகும்.

எனவே மேற்கண்ட பெரும்பான்மை விதி மற்றும் வழக்கின் அடிப்படையில், இப்பிரச்சனையில் **ஒலிபெருக்கியை பயன்படுத்துவதில் கட்டுப்பாடுகள் விதித்து குஜராத் மாநில சட்டமன்றம் இயற்றிய சட்டம், அது மத்திய பட்டியலில் வந்தாலும், செல்லத்தக்கதே என்பதுதான் தீர்வு. இச்சட்டம் மத்திய பட்டியலில் உள்ளதால் மாநில அரசுக்கு சட்டமியற்ற அதிகாரம் இல்லை என்ற எதிர்வாதம் நிலைக்காது.**

பிரச்சனை 5:

X, a foreign national, was raped by a public official. In course of seeking relief under the constitutional remedies guaranteed under Part III, a question is asked before the court, whether a non-citizen is entitled for such a remedy - Decide.

பொது அலுவலதிகாரி வெளிநாட்டவரான X என்பவரை வன் புணர்ச்சிக்கு ஆட்படுத்துகிறார். இதில் நீதிமன்றத்தின் முன் எழும் கேள்வி யாதெனில் அரசமைப்பு பகுதி III–ல் உத்திரவாதம் அளிக்கப்பட்டுள்ள அரசமைப்பு தீர்வழிகள் வெளிநாட்டவருக்குப் பொருந்துமா – தீர்மானிக்க.

தீர்வு:

நமது இந்திய அரசியலமைப்புச் சட்டம் தனது III–வது பகுதியின் வாயிலாக 12 முதல் 35 வரையிலான சரத்துகளின் கீழ் இந்தியக் குடிமக்களுக்கு சில அடிப்படை உரிமைகளை கொடுத்துள்ளது. இந்த அடிப்படை உரிமைகளினால் தான், குடிமக்கள் நியாயமானவைகளுக்காக சுதந்திரமாகச் செயல்பட முடிகிறது. சுருங்கக் கூறின், அரசு தன்னிச்சைப்படி செயல்பட்டு மக்களின் சுதந்திரத்தை பறித்து விடக் கூடாது என்பதற்காக சில உரிமைகள் இந்திய அரசியலமைப்பால் அடிப்படை உரிமைகளாக விளம்பப்பட்டுள்ளன. இத்தகு அடிப்படை உரிமைகள் ஆறு வகைப்படும். அவை,

1. சமத்துவ உரிமை (Right to Equality) (சரத்துகள் 14 – 18)
2. சுதந்திர உரிமை (Right to Freedom) (சரத்துகள் 19 – 22)
3. சுரண்டலுக்கெதிரான உரிமை (Right against Exploitation) (சரத்துகள் 23 – 24)
4. சமய சுதந்திர உரிமை (Right to Freedom of Religion) (சரத்துகள் 25 – 28)
5. கலாச்சார மற்றும் கல்வியியல் உரிமைகள் (Cultural and Educational Rights) (சரத்துகள் 29 – 30)
6. அரசியலமைப்பு தீர்வழிகள் பெற உரிமை (Right to Constitutional Remedies) (சரத்துகள் 32 – 35)

இங்கு இந்த அடிப்படை உரிமைகள் யாருக்கு கிடைக்கும் என்பதைக்

கண்டறிந் தால் நமது பிரச்சனைக்கு தீர்வு பகர்வது எளிதாகும். அதாவது இந்திய அரசிய லமைப்பின்படி, சரத்துகள் 15, 16, 19, 29 மற்றும் 30–ல் கூறப்பட்டுள்ள அடிப்படை உரிமைகள், இந்தியக் குடிமக்களுக்கு மட்டுமே கிடைக்கும். பிற உரிமைகள் அதாவது சரத்து 14 மற்றும் 21–இன் கீழான அடிப்படை உரிமை இந்தியக் குடிமக்களுக்கும், அவ்வாறு குடிமக்களல்லாதவர்கட்கும் (எடுத்துக்காட்டாக வெளிநாட்டவர், நிறுவனம் அல்லது நிறுமம் போன்ற சட்ட நபர்கள்) கிடைக்கும்.

தற்போது நமது பிரச்சனையில் வரும் X–இன் சட்டத்தின் முன் சமம் மற்றும் சட்டங்களின் சம பாதுகாப்பு உரிமை (சரத்து 14) பாதிக்கப்பட்டிருந்தால் அல்லது வாழ்க்கை மற்றும் தனிப்பட்ட சுதந்திரத்திற்கான உரிமை (சரத்து 21) பாதிக்கப் பட்டிருந்தால், அவர் சரத்துகள் 32 முதல் 35 வரையுள்ள சரத்துக்களின் கீழ் அரசியலமைப்பு தீர்வழிகள் பெற உரிமை உடையவர். இங்கு அவர் வெளிநாட்டவராக இருந்தாலும் அவர் அந்த அரசமைப்பு தீர்வழிகள் பெற உரிமையுடையவர்.

அந்த வகையில் X என்பவர் தனக்கு சரத்து 14 அல்லது 21–இன் கீழ் இருக்கும் அடிப்படை உரிமையை வலியுறுத்தி சரத்து 32–இன் கீழ் அய்ந்து வகை யான நீதிப்பேராணைகளில் தனது வழக்கிற்குப் பொருத்தமான ஒன்றை தன்னை வன்புணர்ச்சிக்கு ஆளாக்கிய பொது அலுவலதிகாரிக்கு எதிராக அல்லது அரசுக்கு திராக பிறப்பிக்கக் கோரி உச்ச நீதிமன்றத்தை அணுகலாம் அல்லது நேர்விற்கேற்ப ரத்து 226–இன் கீழ் உயர் நீதிமன்றத்தையும் அணுகலாம். ஆக அத்தகு அடிப்படை உரிமையை ஒரு வெளிநாட்டவருக்கும் நமது இந்திய அரசியலமைப்பு தந்துள்ளது.

மேலும் நமது அரசியலமைப்போ, வேறு சிறப்புச் சட்டங்களோ வெளிநாட்டவருக்கு ஏதேனும் உரிமை வழங்கியிருந்தால், அது அரசு நிருவாகத்தால் மீறப்படும் பொழுது அதற்கு எதிராகவும் அரசியலமைப்பு தீர்வழிகள் பெற அவ்வெளிநாட்டவருக்கு உரிமை உண்டு.

ஆனால் இந்தியக் குடிமக்களுக்கு மட்டுமே உரித்ததாக இந்திய அரசிய லமைப்பால் உத்திரவாதமளிக்கப்பட்டுள்ள அடிப்படை உரிமைகள் வெளி நாட்டவருக்கு கிடைக்காது. எடுத்துக்காட்டாக இந்தியக் குடிமக்களுக்கு சரத்து 19–இன் கீழ் வழங்கப் பட்டுள்ள அடிப்படை சுதந்திர உரிமைகள். இவை மீறப்பட்டதாகக் கூறி ஒரு வெளி நாட்டவர் பகுதி III–ல் உத்திரவாதம் அளிக்கப்பட்டுள்ள அரசமைப்பு தீர்வழிகளைப் பெற சரத்து 32–இன் கீழ் உச்ச நீதிமன்றத்தை நாட முடியாது.

எனவே இந்திய அரசியலமைப்பின் பகுதி III–இல் உத்திரவாதம் அளிக்கப் பட்டுள்ள அரசியலமைப்பு தீர்வழிகள் சரத்து 14 மற்றும் சரத்து 21–இன் கீழான உரிமை மீறப்படும் போதும் மற்றும் மேற்சொன்ன அளவிலும் மட்டுமே வெளி நாட்டவருக்குப் பொருந்தும் என்பதே இங்கு தீர்வாகும்.

பிரச்சனை 6:

A was dismissed from service by way of disciplinary action after an enquiry on corruption charges. Subsequently, he was charged under Prevention of Corruption Act. A contends that the action under Prevention of Corruption Act is Violative of Art. 20(2) of the Constitution - Decide.

Aவின் மேலுள்ள ஊழல் குற்றச்சாட்டினால் அவர் விசாரணைக்குப் பின் ஒழுங்கு நடவடிக்கையின் மூலம் பணி நீக்கம் செய்யப்பட்டார். பின்னர், ஊழல் தடுப்பு சட்டத்தின் கீழ் குற்றம் சாட்டப்பட்டார். ஊழல் தடுப்பு சட்டத்தின் கீழ் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை அரசமைப்பு சட்டப்பிரிவு 20(2)ஐ மீறுவதாக வாதிடுகிறார். தீர்மானிக்கவும்.

அல்லது

A government servant was charged for misappropriation of funds in the department. An enquiry was conducted and punishment was imposed. He was also proceeded against under criminal law. The Government servant pleaded protection under 'double jeopardy . Decide.

ஒரு அரசுப் பணியாளர் துறைப் பணத்தை கையாடல் செய்ததாக குற்றம் சாட்டப்படுகிறார். துறைசார்ந்த விசாரணையின் மூலமாக அவருக்கு தண்டனை அளிக்கப்படுகிறது. அவர் மீது தண்டனைச் சட்ட மூலமாக வழக்கு தொடருகையில் அவர் ஒரே வழக்கிற்காக இருமுறை தண்டிக்க முனைவதாக நீதிமன்றத்தில் வாதிடுகிறார். இதனைத் தீர்க்க.

அல்லது

Raman was dismissed from Government service as a result of an inquiry under Public Service Enquiry Act 1969. On the same grounds later on he was prosecuted for having committed offences under the Indian Penal code and prevention of Corruption Act. Raman challenges his prosecution as violative of his fundamental right. - Decide.

இராமன் என்பவர், பொதுப் பணி விசாரணைச் சட்டம் 1960 கீழ்

நடத்தப்பட்ட விசாரணையின் விளைவாக அரசுப் பணியிலிருந்து நீக்கப் படுகிறார். பின்னர் அவர் மீது அதே காரணங்களுக்காக இந்திய தண்டனைச் சட்டம் மற்றும் ஊழல் தடுப்புச் சட்டத்தின் கீழ் குற்றம் புரிந்த தாக வழக்கு தொடரப்படுகிறது. இப்படி குற்ற வழக்கு தொடருவது தனது அடிப்படை உரிமையினை மீறுகிறதாக உள்ளது என இராமன் வாதிடு கிறார். தீர்மானிக்கவும்.

தீர்வு:

இந்திய அரசியலமைப்பின் சரத்து 20(2) "இரட்டை இடர்" (Double Jeopardy) குறித்து விளக்குகிறது. அதன்படி, "எந்த நபரும் ஒரே குற்றத்திற்கு ஒரு தடவைக்கு மேல் குற்ற வழக்கு இடப்பட்டு தண்டிக்கப்படக் கூடாது", என சரத்து 20(2) கூறுகிறது. அதாவது, ஒரே குற்றத்திற்காக ஒருவர் இரு முறை தண்டிக்கப் பட்டு விடக் கூடாது என்று கூறி அப்படி தண்டிக்கப்படுவதிலிருந்து சரத்து 20(2) பாதுகாப்பளிக்கிறது.

ஆனால் ஒரு குற்றத்திற்காக நீதிமன்றமோ, தீர்ப்பாயமோ விதிக்கும் தண்டனைகளுக்கு எதிராகத்தான் மேற்படி பாதுகாப்பு கிடைக்கும். நீதிமன்றமல் லாத பிற ஆயங்கள் அல்லது அதிகாரஅமைப்புகள் விதிக்கும் தண்டனை களிலிருந்து பாதுகாப்பு பெற இயலாது என **Magbhool Husain vs. State of Bombay**[1] என்ற வழக்கில் கூறப்பட்டது.

எனவே மேற்படி பிரச்சனையில் ஒழுங்கு நடவடிக்கை என்ற துறைசார் விசாரணைக்குப் பின் பணி நீக்கம் செய்யப்பட்ட A என்பவர் மீது ஊழல் தடுப்பு சட்டப்படி குற்ற வழக்கு தொடர்வதை மேற்படி சரத்து 20(2) தடுக்காது. அவருக்கு இரட்டை இடரிலிருந்து பாதுகாப்பு பெற வழியில்லை.

இப்பிரச்சனை **Venkataraman vs. Union of India**[2] எனும் வழக்கை அடியொற்றியதாகும். இதிலும் ஒழுங்கு நடவடிக்கையில் தண்டனையடைந்த அரசு ஊழியர் சரத்து 20(2)–இன் கீழ் குற்றவியல் வழக்கு நடவடிக்கையிலிருந்து எவ்வித பாதுகாப்பையும் பெறவியலாது, என்று கூறப்பட்டது. ஏனெனில் துறைசார் ஒழுங்கு நடவடிக்கை விசாரணை (Departmental Enquiry), நீதிமன்ற அல்லது தீர்ப்பாய விசாரணைக்கு ஒப்பாகாது.

மேற்சொல்லப்பட்ட வழக்குகளின் தீர்ப்பின் அடிப்படையில் A என்பவரின் வாதம் நிலைக்கத்தக்கதல்ல என்பதே இங்கு தீர்வாகும்.

1. A.I.R. 1953 S.C. 325
2. A.I.R. 1954 S.C. 375

பிரச்சனை 7 :

'B' was prosecuted for an offence without being punished. After some times 'B' was again charged for the same offence and prosecuted. 'B' challenges his prosecution for the second time as it is violative of his fundamental rights. Decide.

'B' மீது குற்றம் செய்ததாக வழக்கு தொடரப்பட்டது ஆனால் 'B' தண்டிக்கப்படவில்லை. சில காலம் கழித்து அந்த குற்றத்திற்காக 'B' மீது மீண்டும் வழக்கு தொடரப்பட்டு 'B' தண்டிக்கப்படுகிறார். 'B' தான் இரண்டாம் முறையாக அதே குற்றத்திற்கு வழக்கில் ஈடுபடுத்தப்படுவது தன் அடிப்படை உரிமைகளை பாதிப்பதாக இருக்கிறது என வாதிடுகிறார் – தீர்வு தருக.

தீர்வு :

இப்பிரச்சனையும், "இரட்டை இடருக்கு" தொடர்புடையதேயாகும். மேலும் இப்பிரச்சனை **A.A.Mulla vs. State of Maharashtra**[1] எனும் வழக்கின் அடிப்படையில் அமைந்ததாகும்.

இவ்வழக்கின்படி, மேல்முறையீட்டாளராகிய சுங்க அதிகாரி ஒருவர் தாம் 90 தங்கக் கட்டிகளை மட்டுமே சம்பந்தப்பட்டவர்களிடமிருந்து பறிமுதல் செய்ததாக பொய்யாக கணக்கு காண்பித்தற்காக அவர் மீது இந்திய தண்டனைச் சட்டத்தின் 409–வது பிரிவின்படியும், ஊழல் தடுப்புச் சட்டத்தின் 5–வது பிரிவின்படியும் குற்றஞ் சுமத்தப்பட்டது. உண்மையில் அவர் 99 தங்கக் கட்டிகளை பறிமுதல் செய்திருந்தார்; ஆனால் மேற்சொன்னபடி 90 தங்கக் கட்டிகளுக்கு மட்டுமே பொய்யாக கணக்கு காட்டியிருந்தார். எனவே மீதமுள்ள 9 தங்கக் கட்டிகளை தம்மிடமே இருத்தி வைத்துக் கொண்டதற்காக அவர் மீது குற்ற வழக்கு தொடரப்பட்டது. ஆனால் அவர் மீது குற்றம் நிரூபிக்கப்படாததால், அவர் விடுதலை செய்யப்பட்டார்.

எனினும் அவர் மீது சுங்கச் சட்டம் மற்றும் அன்னியச் செலாவணிச் சட்டத்தின் (FERA) கீழ் அரசு மீண்டும் குற்ற வழக்கு தொடர்ந்தது. இவ்வாறு ஒரே குற்றத்திற்காக இரண்டாவதாக வழக்கு தொடர்ந்தது சரத்து 20(2)–ன் அடிப்படையில் செல்லாது என்று அவர் வாதிட் டார். ஆனால் இதை உச்ச நீதிமன்றம் ஏற்றுக் கொள்ளவில்லை. ஏனெனில், இரண்டு குற்ற வழக்குகளுக்கும் தொடர்புடைய

1. A.I.R. 1997 S.C. 1441

குற்றங்களின் உட்கூறுகள் மாறுபட்டவை என்றும், அத்தோடு மட்டுமல்லாமல் இரண்டு குற்றங்களின் நிகழ்வுச் சூழ்நிலைகளும் (factual situations) வேறுபட்டவை என்றும், எனவே இரண்டாவது வழக்கு நிலைக்கத்தக்கதே என்றும் உச்ச நீதிமன்றம் சட்டப் பொருள் விளக்கமளித்து தீர்ப்புரைத்தது.

எனவே இவ்வழக்கின் அடிப்படையில், மேற்படி பிரச்சனையில் தாம் இரண்டாம் முறையாக அதே குற்றத்திற்காக வழக்கிடப்பட்டிருப்பது தன்னுடைய அடிப்படை உரிமைகளை பாதிப்பதாக உள்ளது என்று 'B' செய்யும் வாதம் செல்லாது என்பதே இங்கு தீர்வாகும்.

பிரச்சனை 8 :

The Collector of customs ordered the confiscation of unlicensed arms and ammunition and undeclared Indian and foreign curency and also imposed penalty on the Foreigners under the Sea Customs Act. Later they were prosecuted under the Indian Penal Code and Foreign Exchange Regulation Act. Examine the constitutional validity of the prosecution.

கடல் சுங்க வரிச் சட்டத்தின் கீழ் வெளிநாட்டவரிடமிருந்து உரிமம் பெறாத ஆயுதங்களையும், அறிவிக்கப்படாத இந்திய மற்றும் வெளிநாட்டு ரூபாய் நோட்களையும் சுங்கவரி ஆட்சியர் பறிமுதல் செய்தும் மற்றும் தண்ட தொகையையும் விதித்து உத்தரவிடுகிறார். பின்பு இந்திய தண்டனைச் சட்டத்தின் கீழ் மற்றும் அன்னிய செலாவணி ஒழுங்கு முறை சட்டத்தின் கீழும், குற்ற வழக்கு தொடரப்படுகிறது. இந்த குற்ற வழக்கு அரசமைப்பு சட்டப்படி செல்லத்தக்கதா என்பதை ஆராய்க.

தீர்வு :

முன் சென்ற பிரச்சனைகளில் கண்டவாறு, இப்பிரச்சனையும் "இரட்டை இடருக்கு" தொடர்புடைதேயாகும். சரத்து 20(2)–இன்படி, "எந்த நபரும் ஒரே குற்றத்திற்காக ஒரு தடவைக்கு மேல் குற்ற வழக்கிடப்பட்டு தண்டிக்கப்படக் கூடாது" என்று கூறுகிறது. அதாவது ஒருவருக்கு இரட்டை இடரை (Double Jeopardy) ஏற்படுத்தக் கூடாது.

இதையொட்டிய முக்கிய வழக்கான **Maqbool Hussain vs. State of Bombay**[1] என்பதன் சங்கதிகளின்படி மேல்முறையீட்டாளர் வெளிநாட்டிலிருந்து

1. A.I.R. 1953 S.C. 325

தங்கத்தை இந்தியாவிற்கு கொண்டு வந்தார். அவர் தன்னுடன் தங்கம் கொண்டு வந்துள்ள விடயத்தை விமான நிலையத்தில் உள்ள சுங்க வரி அதிகாரிகளிடம் தெரிவிக்கவில்லை. அந்த அதிகாரிகள் அந்த தங்கத்தை கடல் சுங்க வரிச் சட்டத்தின் (Sea Customs Act) கீழ் கைப்பற்றினர். அவர் மீது தங்கத்தை இறக்குமதி செய்வது தொடர்பான அரசுக் கட்டுபாட்டு அறிவிக்கையை மீறிய (for importing gold in contravention of Government Notification) குற்றத்திற்காக குற்ற வழக்கு தொடரப்பட்டு, முடிவில் அத்தங்கம் பறிமுதல் செய்யப்பட்டது. அவருக்கு தண்டத் தொகை விதித்து தண்டனை வழங்கப்பட்டது. இது இவ்வாறு இருக்க, அதே குற்றத்திற்காக பின்னிட்டு அன்னியச் செலாவணி ஒழுங்கு முறை சட்டத்தின் (Foreign Exchange Regulations Act) கீழ் அவர் மீது மற்றொரு குற்ற வழக்கு தொடரப்பட்டது. இவ்வாறு ஒரே குற்றத்திற்காக இரண்டாதாக தொடரப்பட்ட குற்ற வழக்கு, தனக்கு இரட்டை இடரை விளைவிப்பதாகவும், எனவே சரத்து 20(2) மீறப்பட்டுள்ளதாகவும், இதனால் இரண்டாவதாக தொடரப்பட்ட வழக்கை தடை செய்ய வேண்டும் என்றும் மேல்முறையீட்டாளர் வாதிட்டார்.

ஆனால் அவருக்கு முன்னதாக தண்டனை வழங்கிய கடல் சுங்க வரி அதிகார அமைப்பு (Sea Customs Authorities) என்பது ஒரு நீதிமன்றமோ அல்லது தீர்ப்பாயமோ அல்ல என்றும், அதன் தீர்மானிப்பு "இரட்டை இடர்" எனும் எதிர்வாதத்தை எடுப்பதற்கு வகை செய்யுமளவிற்கு ஒரு நீதிமன்றத்தின் தீர்ப்பு அல்ல என்றும், எனவே அன்னியச் செலாவணி ஒழுங்குமுறை சட்டத்தின் கீழ் தொடரப்பட்ட வழக்கை தடை செய்ய முடியாது என்றும் உச்ச நீதிமன்றம் தீர்ப்புரைத்தது.

இத்தீர்ப்பின் அடிப்படையில் மேற்படி பிரச்சனையில் வரும் அந்த வெளி நாட்டவர் மீது இந்திய தண்டனைச் சட்டத்தின் கீழும், அன்னிய செலாவணி ஒழுங்கு முறை சட்டத்தின் கீழும் பின்னிட்டு தொடரப்பட்டுள்ள குற்ற வழக்கு அரசமைப்பு சட்டப்படி செல்லத்தக்கதே என்பதுதான் இங்கு தீர்வாகும்.

பிரச்சனை 9 :

'A' who had been chargesheeted for committing offences against State was arrested. But he was released as there was no evidence against him proved in the court. But he was kept under police surveillance which included secret picketing of his house by the police, domiciliary visits at nights and verification of his movements. He was also disturbed during his deep sleep at night. 'A' contended the activities of the police in this regard violated his personal liberty. Decide.

தேசத்திற்கு எதிரான குற்றங்கள் புரிந்தார் என குற்ற அறிக்கை யின் கீழ் ஆ என்பவர் கைது செய்யப்பட்டார். போதிய சான்றுகள் இல்லை என பின்னர் அவரை நீதிமன்றம் விடுவித்தது. ஆனால் அவர் காவல் துறையின் கண்காணிப்பில் இருந்தார். அவர் வாழ்விடத்திற்கு ரகசியமாக காவல் துறையினர் இரவு நேரங்களில் சென்று அவரது நடவடிக்கைகளைக் கண்காணித்து வந்தனர். மேலும் ஆ என்பவரின் வீட்டுக் கதவை அடிக்கடி தட்டி அவரின் ஆழ்ந்த தூக்கத்தைக் கலைத்தது போன்றவை அவரது தனி நபர் சுதந்திரத்தை மீறிய செயல் என ஆ வாதிட்டார். தீர்வு செய்க.

தீர்வு :

மேற்படி பிரச்சனை **Kharak Singh vs. State of U.P.**[1] எனும் வழக் கின் பொருண்மைகளின் அடிப்படையில் அமைந்ததாகும். மேற்படி வழக்கில் கூறப் பட்டபடி மேற்கண்டவாறு காவல் துறையினர் செய்தது, 'A'–யின் தனி நபர் சுதந்திரத்தில் தலையிடுவதாகும். "எந்த நபரின் வாழ்வும் தனிப்பட்ட சுதந்திரமும் சட்டத்தால் அமைக்கப்பட்ட நடைமுறைகளில் தவிர, பிற வழிகளில் மீறப்படக் கூடாது," என்று சரத்து 21 கூறுகிறது. இங்கு 'வாழ்வு' (life) என்பது வெறுமனே உடல்ரீதியாக வாழ்ந்து கொண்டிருப்பது மட்டுமல்ல; அதற்கும் மேற்பட்டது. எனவே, எவ்வித அதிகாரமும் இல்லாமல், ஒருவரது வீட்டில் ஊடுறுவதோ அல்லது அவருக்கு தொல்லைகள் (தூக்கத்தைக் கலைத்தல்) கொடுப்பதோ, தனி நபர் சுதந்திரத்தை மீறிய செயலாகும், என்று உச்ச நீதிமன்றம் மேற்படி வழக்கில் கூறியது.

---

1. A.I.R. 1963 S.C. 1295